688

Tamil Nadu Leg. Assembly Debates

V. 20 No. 142. dt. 25.1.199[illegible]

C

வெளியீடு 25-7-1990 Issued 25-7-1990

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

வியாழக்கிழமை, ஜனவரி 25, 1990–தொகுதி 20–எண் 1
Thursday, the 25th January 1990–Volume 20–No. 1

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
**Legislative Assembly Secretariat, Fort St. George**
**Madras-600 009**

விலை ரூ. 3.00] [**Price Rs. 3.00**

1H3790

D

## உள்ளடக்கம்.

25-1-1990.


| | பக்கங்கள் : |
|---|---|
| தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும் Personnel of the Government of Tamil Nadu | iii—ix |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முக்கிய அலுவலர்கள் .. .. .. .. | xi—xiii |
| தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி) .. — | xv—xxvi |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் ... — — | 1—41 |
| **2. தகவல் கோரல்—** | |
| (அ) 23-1-1990 ஆம் நாளன்று உறுப்பினர் திரு. கே. அர்ஜுனன் அவையில் பேசிய ஒரு செய்தி குறித்து .. .. .. .. | 42—45 |
| (ஆ) சேலம் சௌடேசுவரி கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்நிர்வாகம் இழைக்கும் கொடுமைகள் குறித்து .. ... ... — | 45—46 |
| **3. கவன ஈர்ப்பு—** | |
| (அ) செங்கை-அண்ணா மாவட்டம் செய்யூர் வட்டத்தில் கடலூரில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளிலுள்ள ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வது குறித்து .. .. .. — | 46—49 |
| (ஆ) வடலூரில் சேஷஸாயி நிறுவனம் "லே-ஆப்" விட திட்டமிட்டிருப்பதால் தொழிலாளர்கள் பாதிப்பு .. .. .. .. .. | 50—54 |
| **4. அறிக்கை அளித்தல்—** | |
| பொதுக் கணக்குக் குழு — — — | 55 |


டி 2 ஏ 53-375—A

5. சட்டமுன் வடிவுகள் (அறிமுகம்)—

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990 .. .. .. 55—56

(ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1990 .. 124

6. அறிவிப்புகள்—

(அ) முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1989-90 (ஆ. இ.) .. .. .. .. .. 56

(ஆ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1990 (ஆ. இ.) 124

7. முதல் துணை நிதி நிலை அறிக்கை, 1989-90— விவாதமும் வாக்கெடுப்பும்— 56—124

பேராசிரியர் க. பொன்னுசாமி .. .. 59—66

திரு. அ. இரகுமான்கான் .. .. .. 66—71

திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் .. .. 71—78

திருமதி. எஸ். பி. சற்குணம் .. .. 78—81

திரு. சி. கோவிந்தசாமி .. .. .. 81—87

திரு. இரா. மோகன் .. .. .. 88—90, 93—95

திரு. பி. எச். பாண்டியன் .. .. .. 96—100

திரு. சோ. அழகர்சாமி .. .. .. 106—108

திரு. எம். முகமது சித்திக் .. .. .. 106—108

திரு. கோ. பூவராகன் .. .. .. .. 108—111

*திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்). .. .. .. 115—124

8 மொழிப் போர் தியாகிகளைப் போற்றி நினைவு கூர்தல் .. .. .. .. .. 125

9. பேரவைமுன் வைக்கப் பெற்ற ஏடுகள் — 125—126

## தமிழ்நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்.

**ஆளுநர்—திரு. பி. சி. அலெக்சாண்டர்.**

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. முதலமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பொது, பொது நிர்வாகம், இந்திய ஆட்சிப் பணியாளர்,: மாவட்ட வருவாய் அதிகாரிகள், காவல், நிதி, திட்டம், தொழில்கள், வணிக வரிகள், பிற்பட்டோர் நலம், இலஞ்ச ஒழிப்பு, மதுவிலக்கு (மது அருந்த அனுமதி வழங்கல் உள்பட) மற்றும் ஆயத்துறை.

2. கல்வி அமைச்சர் .. மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்; கல்வி (தொழில் நுட்பக் கல்வி உள்பட), ஆட்சி மொழி, சட்டமன்றம், தேர்தல்கள், மின்னணுவியல், அறிவியல் மற்றும் தொழில் நுட்பவியல், தமிழ் பண்பாடு, விளையாட்டு மற்றும் இளைஞர் அணி, முன்னாள் இராணுவத்தினர் மற்றும் தொல்பொருள் இயல்.

3. சட்ட அமைச்சர் .. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், எடைகள்-அளவைகள் பற்றி சட்டம் இயற்றுதல், கம்பெனிகள் பதிவு, கடன் நிவாரணம் (கடன் வழங்கல்), சீட்டு, நிதி இவை பற்றி சட்டம் இயற்றல் உள்பட) மற்றும் வக்ஃப்.

4. வருவாய்த்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. நாஞ்சில் இ. மனோகரன் :
வருவாய், மாவட்ட வருவாய்த் துறை பணியாளர்கள், மாவட்டத் துணை ஆட்சியாளர், ஆவணப் பதிவுத் துறை மற்றும் முத்திரைச் சட்டம்.

5. போக்குவரத்துத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :
போக்குவரத்து, அரசுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, இயக்கூர்திகள் சட்டம், துறைமுகங்கள் மற்றும் வீட்டு வசதி.

6. அறநிலையத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :
அறநிலையத்துறை, சுற்றுலா, சுற்றுலா வளர்ச்சிக் கழகம், வனங்கள் மற்றும் சின்கோனா.

7. ஊரக வளர்ச்சி—உள்ளாட்சித்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கோ. சி. மணி :
நகராட்சிகள், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மற்றும் கிராமப் புறக் கடன் சம்பந்தப்பட்டவை.

8. மின்துறை அமைச்சர் — மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :
மின்சாரம், பால் மற்றும் குடிசை மாற்று வாரியம்.

9. உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. பொன். முத்து ராமலிங்கம் :
உணவு, விலைவாசிக் கட்டுப்பாடு மற்றும் நுகர் பொருள் வழங்கல், கூட்டுறவு மற்றும் புள்ளி விவரங்கள்.

10. வேளாண்மைத்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் :
வேளாண்மை, வேளாண்மை மறு நிதி, வேளாண்மைப் பொறியியல் மற்றும் வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள் (ஒன்றிய, மாவட்ட பிரதம, கூட்டிணைப்பு அமைப்புகள் உள்பட) மற்றும் உணவு உற்பத்தி.





11. பொதுப்பணித்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. துரைமுருகன் :
பொதுப்பணிகள், சிறு பாசனம் (சிறப்பு சிறு பாசனம் உள்பட) திட்டப் பணிகள் மற்றும் நெடுஞ்சாலைகள்.

12. சமூக நலம்—ஊரகத் தொழிற்துறை அமைச்சர். — மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் :
சமூக நலம் (குழந்தைகள், மகளிர் நலம் உள்பட), பிச்சைக்காரர்கள் விடுதி, அனாதை விடுதிகள், சீர்திருத்த நிர்வாகம், சத்துணவு, ஊரகத் தொழில்கள் (கிராம, குடிசை, சிறு தொழில்கள் உள்பட), கதர் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்.

13. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் எ. இராம இருஷ்ணன் :
ஆதி திராவிடர் நலம், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் பிணைத் தொழிலாளர்.

14. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர். — மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :
மக்கள் நல்வாழ்வு, மருந்துகள், குடிநீர் வாரியம் மற்றும் சுற்றுச் சூழல் மாசு கட்டுபடுத்தல்.

15. செய்தி-தொழிலாளர் நலத்துறை அமைச்சர். — மாண்புமிகு திரு. கே. என். நேரு :
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், தொழிலாளர், மக்கள் தொகை கணக்கு, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, வெளிநாடு வாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், இரும்பு எஃகுக் கட்டுப்பாடு, அச்சுக் காகிதக் கட்டுப்பாடு, எழுதுபொருள் அச்சுத் துறை மற்றும் அரசு அச்சகம்.

| | |
|---|---|
| 16. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர். | மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : கால்நடை பராமரிப்பு, மீனளம் மற்றும் மீனள வளர்ச்சி கழகம். |
| 17. கைத்தறி-நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர். | மாண்புமிகு திரு. ச. தங்கவேலு : கைத்தறி, நெசவாலைகள், நகர அமைப்பு, நகர்ப்புற மேம்பாடு, மற்றும் இடவசதிக் கட்டுப்பாடு. |
| முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர். | திரு. எல். கணேசன். |



# PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

## GOVERNOR OF TAMIL NADU—Thiru P. C. ALEXANDER.

### MEMBERS OF THE COUNCIL OF MINISTERS.

| | |
|---|---|
| 1. Chief Minister .. | **The Hon. Dr. M. KARUNANIDHI :** Public, General Administration, Indian Administrative Service, District Revenue Officers, Police, Finance, Planning, Industries, Commercial Taxes, Backward Classes, Prevention of Corruption, Prohibition including grant of Liquor Permits and Excise. |
| 2. Minister for Education | **The Hon. Prof. K. ANBAZHAGAN :** Education including Technical Education, Official Language, Legislature, Elections, Electronics, Science and Technology, Tamil Culture, Sports and Youth Service Corps, Ex-Servicemen and Archaeology. |
| 3. Minister for Law .. | **The Hon. Thiru S. J. SADIQPASHA :** Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Registration of Companies, Debt Relief including Legislation on Money lending and Legislation on Chits and Wakf. |
| 4. Minister for Revenue | **The Hon.Thiru NANJIL K.MANOHARAN:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration and Stamp Act. |
| 5. Minister for Transport | **The Hon. Thiru M. KANNAPPAN :** Transport, Nationalised Transport, Motor Vehicles Act, Ports and Housing. |
| 6. Minister for Hindu Religious and Charitable Endowments. | **The Hon. Thiru K. P. KANDASAMY :** Hindu Religious and Charitable Endowments, Tourism, Tourism Development Corporation, Forest and Cinchona. |

| | |
|---|---|
| 7. Minister for Rural Development and Local Administration. | **The Hon. Thiru KO. SI. MANI :** Municipal Administration, Rural Development, Panchayats, Panchayat Unions and Rural indebtedness. |
| 8. Minister for Electricity | **The Hon. Thiru ARCOT N.VEERASAMY:** Electricity, Milk and Slum Clearance Board. |
| 9. Minister for Food and Co-operation. | **The Hon. Thiru Pon. MUTHURAMALINGAM :** Food. Price Control and Civil Supplies, Co-operation and Statistics. |
| 10. Minister for Agriculture | **The Hon. Thiru VEERAPANDI S. ARUMUGAM :** Agriculture, Agricultural Refinance, Agricultural Engineering and Service Co-operative Societies at the Block, District and Apex Level including the Federation and Food Production. |
| 11. Minister for Public Works. | **The Hon. Thiru DURAIMURUGAN :** Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works and Highways. |
| 12. Minister for Social Welfare and Rural Industries. | **The Hon. Thirumathi SUBBULAKSHMI JAGADISAN :** Social Welfare including Children and Women's Welfare, Beggars' Home, Orphanages, Correctional Administration, Nutritious Noon Meals, Rural Industries including Village, Cottage and Small Industries, Khadi Board, Bhoodan and Gramadan. |
| 13. Minister for Adi-Dravidar Welfare. | **The Hon. Dr. E. RAMAKRISHNAN :** Adi-Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour. |
| 14. Minister for Public Health. | **The Hon. Dr. K. PONMUDI** *alias* **DEIVASIGAMANI :** Public Health, Medicines, Water Board and Environmental Pollution Control. |



| | |
|---|---|
| 15. Minister for Information and Labour. | **The Hon. Thiru K. N. NEHRU :** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Labour, Census, Employment and Training, Indians Overseas, Refugees and Evacuees, Iron and Steel Control, Newsprint Control, Stationery and Printing and Government Press. |
| 16. Minister for Animal Husbandry. | **The Hon. Dr. K. CHANDRASEKARAN :** Animal Husbandry, Fisheries and Fisheries Development Corporation. |
| 17. Minister for Handlooms and Urban Development. | **The Hon. Thiru S. THANGAVELU :** Handlooms, Textiles, Town Planning, Urban Development and Accommodation Control |
| Parliamentary Secretary to Chief Minister. | **Thiru L. GANESAN.** |

4 2 T 53-375—B

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பேரவைத் தலைவர் :

மாண்புமிகு டாக்டர் மு. தமிழ்க்குடிமகன்

பேரவைத் துணைத் தலைவர் ;

வீ. பெ. துரைசாமி.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்

திரு. சா. கணேசன்
டாக்டர் க. காஞ்சனா
திரு. வே. தங்கபாண்டியன்
திரு. கே. அர்ஜுனன்
திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்
திரு. கோ. பூவராகன்

செயலாளர்

திரு. சி. கு. இராமசாமி.

## பேரவையின் முக்கிய அலுவலர்கள்

(அகர வரிசைப்படி).

| | |
|---|---|
| சீதாராமன், திரு. வெ., பி. காம்., பி.ஜி.எல். .. | இணைச் செயலாளர். |
| டில்லிதுரை, திரு. த. ப., பி.எஸ்ஸி., பி.எல்., | இணைச் செயலாளர். |
| இராசமாணிக்கம், திரு. பெ., பி.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர் (பதிப்பாளர்). |
| இராமச்சந்திரன், திரு. ஆர். கே., பி.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர். |
| கனகசபாபதி, திரு. பெ. ச., பி.ஏ., பி.எல். .. | துணைச் செயலாளர். |
| ரெஜினால்ட் ஜான், திரு. ஜே., பி.ஏ. | துணைச் செயலாளர். |
| ஜானகிராமன், திரு. செ. சு., பி. ஏ., பி. எல்., .. | துணைச் செயலாளர். |
| கோவிந்தராஜன், திரு. ஆர்., .. | குழு அழுவலர் |
| அப்துல் சத்தார், திரு. ஜெ., பி.ஏ., பி.எல்., .. | சார்புச் செயலாளர் |
| இராசாராமன், திரு. வி., பி.ஏ., பி.எல்., | சார்புச் செயலாளர். |
| பகசவராம், திரு. சு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சந்திரசேகரன், திரு. ஆர்., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| சாலமன் ஜெயபால், திரு. டி., பி.எஸ்ஸி, பி.எல். .. | சார்புச் செயலாளர். |
| சுந்தரராஜன், திரு. கா. செ., பி.ஏ., பி.ஜி.எல். .. | சார்புச் செயலாளர். |
| முனிர் உன்னிசா, திருமதி. பி.எஸ்ஸி., | சார்புச் செயலாளர். |
| ராஜேந்திரன், திரு. பி. சி., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜான், திரு. வ. சா., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| ஜேக்கப் ஆர்தர், திரு. தா., பி.ஏ., பி.எல். .. | சார்புச் செயலாளர். |
| ஜோசப், திரு. மா. கு., பி.ஏ. .. | சார்புச் செயலாளர். |
| வெங்கட்டராமன், திரு. கோ. .. | பேரவைத் தலைவரின் தனிச் செயலாளர். |
| சுவாமிநாதன், திரு. ச., எம்.ஏ. .. | தலைமை நிருபர் (குழுக்கள்). |
| ஜெயதேவ், திரு., பி.சி. .. | தலைமை நிருபர். |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

### உறுப்பினர்கள் பட்டியல் (அகர வரிசைப்படி:)

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். | | தொகுதியின் பெயர். |
|---|---|---|
| (1) | | (2) |
| **"அ"** | | |
| 1 அங்கமுத்து, திரு. கே. | .. | உளுந்தூர்பேட்டை (செ. வ.) |
| 2 அசேன், திரு. ஜெ. | .. | இராணிப்பேட்டை |
| 3 அண்ணாதுரை, திரு. கா. | .. | பட்டுக்கோட்டை |
| 4 அண்ணாதுரை, டாக்டர் கே. | .. | வரகூர் (செ.வ.) |
| 5 அண்ணாநம்பி, திரு. ஆர். | .. | அவிநாசி (செ.வ.) |
| 6 அண்ணாமலை, திரு. எம். | .. | அரூர் (செ.வ.) |
| 7 அதியமான், திரு. ஆ. | .. | சேடப்பட்டி |
| 8 அப்துல்சமத், திரு. பா. | .. | வாணியம்பாடி |
| 9 அப்துல் லத்தீப், திரு. எம். | .. | சேப்பாக்கம் |
| 10 அர்ஜுனன், திரு. கே. | .. | தாரமங்கலம் |
| 11 அழகர்சாமி, திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 12 அழகுவேலு, திரு. ச. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 13 அறிவழகன், திரு. ஆ. | .. | கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 14 அன்பழகன், பேராசிரியர், க. | .. | அண்ணாநகர் |
| 15 அன்பழகன், திரு. வ. | .. | செய்யாறு |
| 16 அன்பில் பொய்யாமொழி, திரு. | | திருச்சிராப்பள்ளி-2 |
| **"ஆ"** | | |
| 17 ஆசையன், திரு. பெ. | .. | ஆண்டிபட்டி |
| 18 ஆண்டி அம்பலம், திரு. மெ. | .. | நத்தம் |
| 19 ஆறுமுகம், திரு. த. | .. | அரியலூர் |
| 20 ஆறுமுகம், திரு. வீரபாண்டி சோ. | | சேலம்-2 |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ''இ'' | |
| 21 இரகுமான்கான், திரு. அ. .. | பூங்கா நகர் |
| 22 இராசமாணிக்கம், திரு. இரெ... | குத்தாலம் |
| 23 இராசமாணிக்கம், திரு. க. வெ. வீ. | மேலூர் |
| 24 இராசன், திரு. வி. பி. .. | ராஜபாளையம் (செ.வ.) |
| 25 இராசு, திரு. வி. கே. .. | அரக்கோணம் (செ.வ.) |
| 26 இராசு, திரு. வெ. .. | குளத்தூர் (செ.வ.) |
| 27 இராசேந்திரன், திரு. அ. .. | போளூர் |
| 28 இராதா, திரு. எஸ். ஆர். .. | மதுரை கிழக்கு |
| 29 இராதாகிருஷ்ணன், திரு. டி. .. | சோழவந்தான் |
| 30 இராமகிருஷ்ணன், டாக்டர் எ. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 31 இராமகிருஷ்ணன், திரு. நா. .. | கம்பம் |
| 32 இராமச்சந்திரன், திரு. எம். | திருவோணம் |
| 33 இராமச்சந்திரன், திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். | விளாத்திகுளம் |
| 34 இராமச்சந்திரன், திரு. ந. .. | செஞ்சி |
| 35 இராமசாமி, திரு. ஏ. எம். .. | ஆத்தூர் |
| 36 இராமசாமி, திரு. கே. வி. .. | கரூர் |
| 37 இராமசாமி, திரு. வி. .. | திருச்செங்கோடு |
| 38 இராமசாமி, திரு. கே. ஆர். .. | திருவாடானை |
| 39 இராமநாதன், திரு. மு. .. | கோவை மேற்கு |
| 40 இராமலிங்கம், திரு. செ. .. | திருவிடைமருதூர் |
| 41 இராஜேந்திரன், திரு. கே. ஆர். | பர்கூர் |
| 42 இராஜேந்திரன், திரு. பி. வி. .. | வேதாரண்யம் |
| 43 இளம்வழுதி, திரு. .. | எழும்பூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ''க'' — தொடர்ச்சி | |
| 63 கருப்பையா மூப்பனார், திரு. ஜி. | பாபநாசம் |
| 64 கன்னையன், திரு. க. .. | தொட்டியம் |
| 65 கஜபதி, திரு. பு. ஆர். .. | ஆற்காடு |
| 66 காஞ்சனா, டாக்டர் க. .. | கிருஷ்ணகிரி |
| 67 காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி, திரு. | முதுகுளத்தூர் |
| 68 காளியப்பன், திரு. பி. .. | ஒட்டன்சத்திரம் |
| 69 கிருஷ்ணமூர்த்தி, டாக்டர் து. | சிதம்பரம் |
| 70 கிருஷ்ணன், திரு. சி. .. | ஓமலூர் |
| 71 குணசேகரன், திரு. எஸ். .. | தலைவாசல் (செ.வ.) |
| 72 குமரி அனந்தன், திரு. .. | சாத்தான்குளம் |
| 73 குருநாதன், திரு. க. .. | பாளையங்கோட்டை |
| 74 குருமூர்த்தி, திரு. ஜி. ஜி. .. | பவானி |
| 75 கோதண்டம், திரு. ஏ. .. | ஸ்ரீபெரும்புதூர் (செ. வ.) |
| 76 கோபாலகிருஷ்ணன், திரு. வெ. | மேட்டுப்பாளையம் |
| 77 கோவிந்தசாமி, திரு. சி. .. | திருப்பூர் |
| 78 கோவிந்தசாமி, திரு. வி. சி. | காவேரிப்பட்டினம் |
| 79 கோவிந்தராஜன், திரு. சி. .. | நெல்லிக்குப்பம் |
| 80 கோவிந்தன், திரு. வெ. .. | பேரணாம்பட்டு (செ.வ.) |
| ''ச'' | |
| 81 சண்முகம், திரு. சி. .. | ஆலந்தூர் |
| 82 சந்திரசேகர், திரு. வி. பி. .. | பொள்ளாச்சி |
| 83 சந்திரசேகரன், டாக்டர் க. .. | ஆலங்குடி |
| 84 சம்சுதீன் என்கிற கதிரவன், திரு. | கடையநல்லூர் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| | "ஈ" | |
| 44 ஈஸ்வரன், திரு. ஆர். | .. | வாசுதேவநல்லூர் (செ.வ.) |
| | "உ" | |
| 45 உகம்சந்த், திரு. எஸ். டி. | .. | மதுராந்தகம் |
| 46 உதயசூரியன், திரு. தா. | .. | சின்னசேலம் |
| 47 உபயதுல்லா, திரு. எஸ். என். எம். | | தஞ்சாவூர் |
| | "ஏ" | |
| 48 ஏகாம்பர ரெட்டி, திரு. ஏ. | .. | பள்ளிபட்டு |
| | "க" | |
| 49 கண்ணப்பன், திரு. மு. | .. | பல்லடம் |
| 50 கண்ணன், திரு. எஸ். பி. | .. | அணைக்கட்டு |
| 51 கணபதி, திரு. என். | .. | மயிலாப்பூர் |
| 52 கணேசமூர்த்தி, திரு. என். | .. | குறிஞ்சிப்பாடி |
| 53 கணேசமூர்த்தி திரு. ஏ. | .. | மொடக்குறிச்சி |
| 54 கணேசன், திரு. எல். | .. | ஒரத்தநாடு |
| 55 கணேசன், திரு. க. சொ. | .. | ஜெயங்கொண்டம் |
| 56 கணேசன், திரு. சா. | .. | தியாகராய நகர் |
| 57 கணேசன், திரு. வே. | .. | மங்களூர் (செ.வ.) |
| 58 கந்தசாமி, திரு. கே. | .. | கிணத்துக்கடவு |
| 59 கந்தசாமி, திரு. கே. பி. | .. | திருச்செந்தூர் |
| 60 கரீம், திரு. எம். கே. | .. | கூடலூர் |
| 61 கருணாநிதி, டாக்டர் மு. | .. | துறைமுகம் |
| 62 கருப்பசாமி, திரு. எஸ்.எஸ். | .. | சாத்தூர் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர்: (2) |
|---|---|---|
| | "ச"—தொடர்ச்சி | |
| 85 சம்பத், திரு. எ. ஜி. | .. | முகையூர் |
| 86 சற்குணம், திருமதி எஸ். பி. | | இராதாகிருஷ்ணன் நகர் |
| 87 சாதிக்பாட்சா, திரு. எஸ். ஜே. | | உடுமலைப்பேட்டை |
| 88 சாந்தகுமாரி, டாக்டர் த. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 89 சாமிநாதன், திரு. ஆர். | .. | திருமங்கலம் |
| 90 சிங்காரம், திரு. ஆர். | .. | பேராவூரணி |
| 91 சிவசுப்பிரமணியன், திரு. சா. | | ஆண்டிமடம் |
| 92 சிவலிங்கம், திரு. எஸ். ஆர். | | பனைமரத்துப்பட்டி |
| 93 சின்னக்குழந்தை, திரு. மு. | .. | பெரணமல்லூர் |
| 94 சிவலோகம், திரு. எஸ். | .. | புவனகிரி |
| 95 சின்னசாமி, திரு. கே. | .. | சேந்தமங்கலம் (ஆ.வா.) |
| 96 சின்னசாமி, திரு. ரா. | .. | தர்மபுரி |
| 97 சின்னசாமி, திரு. வி. கே. | .. | பவானிசாகர் |
| 98 சிரங்கன், திரு. எம். | ... | மேட்டூர் |
| 99 சீனிவாசன், திரு. பெ. | .. | சிவகாசி |
| 100 சுந்தர், திரு. கே. | .. | உத்திரமேரூர் |
| 101 சுந்தரதாஸ், திரு. மா. | .. | விளவன்கோடு |
| 102 சுந்தரம், திரு. க. | .. | பொன்னேரி (செ.வ.) |
| 103 சுந்தரம், திரு. கே. ஆர். | .. | குடியாத்தம் |
| 104 சுந்தரம், திரு. ப. | .. | திருப்பத்தூர் |
| 105 சுந்தரராஜ், டாக்டர் எஸ். | .. | பரமக்குடி (செ.வ.) |
| 106 சுப்பிரமணிய பிள்ளை, திரு. கே. | | கன்னியாகுமரி |
| 107 சுப்பிரமணியம், திரு. தா. க. | | சத்தியமங்கலம் |
| 108 சுப்பிரமணியன், திரு. அ.லெ. | | திருநெல்வேலி |

டி. 2 ஏ 53-375—D

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ''ச''—தொடர்ச்சி | |
| 109 சுப்பிரமணியன், திரு. வே. நா. | பெருந்துறை |
| 110 சுப்பு, திரு. ஏ. .. | ராசிபுரம் |
| 111 சுப்புலட்சுமி செகதீசன், திருமதி | ஈரோடு |
| 112 சுப்பையா, திரு. ஆலவயல் .. | திருமயம் |
| 113 செங்குட்டுவன், திரு. ஏ. .. | மயிலாடுதுறை |
| 114 செங்கைசிவம், திரு. .. | பெரம்பூர் (செ.வ.) |
| 115 செங்கோட்டையன், திரு. கே. ஏ. | கோபிசெட்டிபாளையம் |
| 116 சேட்டு, திரு. எம். .. | செங்கம் (செ.வ.) |
| 117 சொக்கர், திரு. ரா. .. | விருதுநகர் |
| 118 சௌந்திரபாண்டியன், திரு .ந. | சமயநல்லூர் (செ.வ.) |
| ''ட'' | |
| 119 டேனியல்ராஜ், திரு. எஸ். .. | ஸ்ரீவைகுண்டம் |
| ''த'' | |
| 120 தங்கபாண்டியன், திரு. வே. .. | அருப்புக்கோட்டை |
| 121 தங்கம், திரு. அ. .. | ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 122 தங்கராஜன், திரு. எஸ். ஏ. .. | திண்டுக்கல் |
| 123 தங்கராஜு, திரு. ஏ. .. | காட்டுமன்னார்கோயில் (செ.வ.) |
| 124 தங்கவேல், திரு. எம். .. | முசிறி |
| 125 தங்கவேல், திரு. என். .. | குன்னூர் (செ.வ.) |
| 126 தங்கவேலு, திரு. ச. .. | சங்கரநாயனார்கோவில் (செ.வ.) |
| 127 தம்புசாமி, திரு. வி. .. | திருவாரூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| ''த''—தொடர்ச்சி | |
| 128 தமிழ்க்குடிமகன், டாக்டர் மு. | இளையான்குடி |
| 129 தமிழ்மணி, திரு. வீ. .. | செங்கல்பட்டு |
| 130 தயாளன், திரு. ஏ. சி. .. | ஆரணி |
| 131 தனபாலன், திரு. கே.ஆர்.ஜி. | சேலம்-1 |
| 132 தனராஜ், திரு. வி. .. | வந்தவாசி (செ.வ.) |
| 133 திருநாவுக்கரசு, திரு. எஸ். .. | அறந்தாங்கி |
| 134 திருமூர்த்தி, டாக்டர் து. .. | திருப்போரூர் (செ.வ.) |
| 135 திருவேங்கடம், திரு. பெ. சு. | கலசப்பாக்கம் |
| 136 துரை சந்திரசேகரன், திரு. .. | திருவையாறு |
| 137 துரைசாமி, திரு. வீ. பெ. .. | நாமக்கல் (செ.வ.) |
| 138 துரைபாண்டி, திரு. பெ. .. | மானாமதுரை (செ.வ.) |
| 139 துரைமுருகன், திரு. .. | காட்பாடி |
| 140 துரை ராமசாமி, திரு. .. | வெள்ளக்கோவில் |
| 141 தென்னரசு, திரு. எஸ். எஸ். | திருப்பத்தூர் |
| 142 தேவராஜ், திரு. வி. எம். ... | வேலூர் |
| ''ந'' | |
| 143 நஞ்சப்பன், திரு. ந. .. | பெண்ணாகரம் |
| 144 நடராசன், திரு. ஆ. .. | பேரூர் |
| 145 நடராசன், திரு. பொ. .. | திருத்தணி |
| 146 நடேசன், திரு. எகால் மு. .. | ரிஷிவந்தியம் |
| 147 நடேசன், திரு. ஆர். .. | திருவட்டாறு |
| 148 நந்தகோபாலகிருட்டிணன், டாக்டர் கோ. | பண்ருட்டி |
| 149 நாராயணன், திரு. ராம. .. | காரைக்குடி |
| 150 நூர்முகமது, திரு. செ. .. | பத்மநாபபுரம் |
| 151 நேரு, திரு. கே. என். .. | லால்குடி |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **"ப"** | |
| 152 பஞ்சாட்சரம், திரு. ஆர். .. | மேல்மலையனூர் |
| 153 பழனிச்சாமி, திரு. டி. கே. | திருவொற்றியூர் |
| 154 பழனிச்சாமி, திரு. ஜி. .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 155 பழனிசுவாமி, திரு. க. .. | எடப்பாடி |
| 156 பழனிவேல், திரு. என். .. | பழனி (செ.வ.) |
| 157 பன்னீர்செல்வம், திரு. மா. .. | சீர்காழி (செ.வ.) |
| 158 பாண்டியன், திரு. பி. எச். .. | சேரன்மாதேவி |
| 159 பாப்பா உமாநாத், திருமதி | திருவரம்பூர் |
| 160 பாப்பா சுந்தரம், திரு. அ. .. | குளித்தலை |
| 161 பால்ராஜ், திரு. சோ. .. | மதுரை-மத்திய |
| 162 பாலசுப்பிரமணியன், திரு. அ. வே. | திருநாவலூர் |
| 163 பாலசுப்பிரமணியம், திரு. எஸ். ஆர். | பொங்கலூர் |
| 164 பாலையா, திரு. ஆ. .. | கொளச்சல் |
| 165 பிச்சாண்டி, திரு. கே. .. | திருவண்ணாமலை |
| 166 பிச்சைமுத்து திரு. ரெ. .. | பெரம்பலூர் (செ.வ.) |
| 167 பீட்டர் ஆல்போன்ஸ், திரு. சா. | தென்காசி |
| 168 புகழேந்தி, திரு. இ. .. | கடலூர் |
| 169 பூவராகன், திரு. கோ. .. | விருத்தாசலம் |
| 170 பெரியசாமி, திரு. என். .. | தூத்துக்குடி |
| 171 பெரியசாமி, திரு. ஐ. .. | ஆத்தூர் |
| 172 பெரியசாமி, திரு. வே. .. | அந்தியூர் (செ.வ.) |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | தொகுதியின் பெயர். (2) |
|---|---|
| **"ப"—தொடர்ச்சி** | |
| 173 பெரியண்ணன், திரு. அ. .. | புதுக்கோட்டை |
| 174 பெருமாள், திரு. செ. .. | ஏற்காடு (ஆ.வா.) |
| 175 பொன்முடி, திரு. டி. .. | தண்டராம்பட்டு |
| 176 பொன்முடி என்கிற தெய்வசிகாமணி, டாக்டர் க. | விழுப்புரம் |
| 177 பொன். முத்துராமலிங்கம், திரு. | மதுரை மேற்கு |
| 178 பொன்னம்மாள், திருமதி ஏ. எஸ். | நிலக்கோட்டை (செ.வ.) |
| 179 பொன்னுசாமி, பேராசிரியர் க. | மருங்காபுரி |
| 180 பொன்னுபிள்ளை, திரு. ஜி. | தேனி |
| **"ம"** | |
| 181 மகேந்திரன், திரு. ஆர். .. | நாட்ராம்பள்ளி |
| 182 மணி, திரு. ஆச்சியூர் எம். .. | நாங்குநேரி |
| 183 மணி, திரு. கே. ஏ. .. | கபிலர்மலை |
| 184 மணி, திரு. கோ. சி. .. | கும்பகோணம் |
| 185 மணிமாறன், திரு. மா. .. | நன்னிலம் (செ.வ.) |
| 186 மதிவாணன், திரு. இரா. .. | ராயபுரம் |
| 187 மலர்மன்னன், திரு. அ. .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 188 மனோகரன், திரு. நாஞ்சில் கி. | திருவல்லிக்கேணி |
| 189 மனோகரன், திரு. பா. .. | சிவகங்கை |
| 190 மாசிலாமணி, டாக்டர் சி. ரா. | திண்டிவனம் |
| 191 மாசிலாமணி, திரு. தி. ரா. .. | பூந்தமல்லி |
| 192 மாதப்பன், திரு. கொ. .. | பாலக்கோடு |
| 193 மாரப்பன், திரு. பி. .. | காங்கேயம் |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **''ம''—தொடர்ச்சி** | | |
| 194 மாரிமுத்து, திரு. அ. | .. | வானூர் (செ.வ.) |
| 195 முகமது சித்திக், திரு. எம். | .. | பூம்புகார் |
| 196 முத்துசாமி, திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 197 முத்தையன், திரு. எம். | .. | சங்கராபுரம் |
| 198 முத்தையா, திரு. எம். | .. | ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 199 முருகேசன், திரு. பொ. | .. | காஞ்சிபுரம் |
| 200 முல்லைவேந்தன், திரு. வ. | .. | மொரப்பூர் |
| 201 முனிரத்தினம், திரு. ஆ. மு. | | சோளிங்கர் |
| 202 முனிரத்தினம், திரு. எஸ். ஆர். | | திருவள்ளூர் |
| 203 மூக்கன், திரு. ஆர். | .. | உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 204 மூக்கையா, திரு. எல். | .. | பெரியகுளம் |
| 205 மோகன், திரு. இரா. | .. | சிங்காநல்லூர் |
| 206 மோசஸ், திரு. எம். | .. | நாகர்கோவில் |
| **'ய'** | | |
| 207 யசோதா செல்லப்பா, திருமதி | | வலங்கைமான் (செ.வ.) |
| **'ர'** | | |
| 208 ரமணி, திரு. கே. | .. | கோவை (கிழக்கு) |
| 209 ரமணி நல்லதம்பி, திருமதி | .. | ராதாபுரம் |
| 210 ரவி அருணன், திரு. | .. | அம்பாசமுத்திரம் |
| 211 ராமச்சந்திர ரெட்டி, திரு. ந. | | ஓசூர் |
| 212 ராமச்சந்திரன், திரு. கே. | | மன்னார்குடி |
| 213 ராமச்சந்திரன், திரு. சி. | .. | திருப்பரங்குன்றம் |



| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும் (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| **''ர''—தொடர்ச்சி** | | |
| 214 ராமசாமி, திரு. மொஞ்சனூர், ப. | | அரவக்குறிச்சி |
| 215 ராமசுப்பு, திரு. எஸ். எஸ். | .. | ஆலங்குளம் |
| 216 ராஜு, திரு. எச். எம். | .. | உதகமண்டலம் |
| 217 ராஜேந்திரன், திரு. எம். எஸ். கே. | | இராமநாதபுரம் |
| **''ல''** | | |
| 218 லட்சுமி, திருமதி பி. | .. | வால்பாறை (செ.வ.) |
| **''வ''** | | |
| 219 வரதராஜன், திரு. ஆர். | .. | சங்கரி (செ.வ.) |
| 220 வரதராசன், திரு. உ. ரா. | .. | வில்லிவாக்கம் |
| 221 வல்லரசு, திரு. பி. என். | .. | உசிலம்பட்டி |
| 222 விஜயராகவன், திரு. பொன். | | கிள்ளியூர் |
| 223 விஜயேந்திரையா, திரு. டி. சி. | | தளி |
| 224 வீராசாமி, திரு. ஆற்காடு நா. | | புரசைவாக்கம் |
| 225 வீரையன், திரு. கோ. | .. | நாகப்பட்டினம் |
| 226 வெங்கடாசலம், திரு. பெ. | .. | வீரபாண்டி |
| 227 வெங்கடேஸ்வர தீட்சிதர், திரு. ஒய். | | ஸ்ரீரங்கம் |
| 228 வெள்ளிங்கிரி, திரு. யூ. கே. | .. | தொண்டாமுத்தூர் |
| 229 வேணு, திரு. கி. | .. | கும்மிடிப்பூண்டி |
| 230 வைத்தியலிங்கம், திரு. மீ. அ. | .. | தாம்பரம் |
| **''ஸ''** | | |
| **231 ஸ்டாலின், திரு. மு. க.** | ... | **ஆயிரம் விளக்கு** |

| தொடர் எண்ணும் உறுப்பினர்களின் பெயரும். (1) | | தொகுதியின் பெயர். (2) |
|---|---|---|
| ''ஜ'' | | |
| 232 ஜெயலலிதா, செல்வி ஜெ. | | போடிநாயக்கனூர் |
| ''ஹ'' | | |
| 233 ஹமீது இப்ராகிம், திரு. அ.மு. | | கடலாடி |
| ''ஸ்ரீ'' | | |
| 234 ஸ்ரீதர், திரு. ஆர். எஸ். | .. | சைதாப்பேட்டை |
| 235 ஆஸ்கார் சி. நிக்லி, திரு. | .. | நியமன உறுப்பினர் |

பேரவை நடவடிக்கைகளில் பங்கு கொள்ள உரிமை பெற்றவர்.

திரு. கு. அழகிரிசாமி .. தலைமை வழக்கறிஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 12, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 25, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் மு. தமிழ்க்குடிமகன் அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

''எரியால் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார்''.

தியால் சுடப்பட்டாலும் ஒருகால் உயிர்பிழைத்து வாழ லாம். ஆற்றல் மிகுந்த பெரியாரிடத்தில் தவறு செய்து நடப்பவர் தப்பிப் பிழைக்க முடியாது.

### 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

### தமிழ்மொழி பாதுகாப்பு தியாகிகளுக்கு உதவித்தொகை

*1060—திரு. வ. முல்லைவேந்தன் : திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழ்மொழி பாதுகாப்பு தியாகிகளுக்கு வழங்கி வந்த உதவித்தொகை நிறுத்தப்பட்டுவிட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) தொடர்ந்து உதவிப்பணம் வழங்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

[1990 சனவரி 25

திரு. வ. முல்லைவேந்தன் : பேரவைத் தலைவர் அவர்களே. தமிழ் மொழி காப்பதற்காகப் போராடி சிறைச்சாலைகளில் அடை பட்டும் அதே நேரத்தில் உயிர் நீத்த பலரது குடும்பங்கள் இருக் கின்றன. அதே போல மொழி காப்பதற்காக இந்திய அரசியல் சட்டத்தின் 17-வது நகலை எழுதிக் கொளுத்திய குற்றத்திற்காக மாண்புமிகு கல்வி அமைச்சர் உட்பட 10 சட்டப்பேரவை உறுப்பினர்கள் பதவி இழந்தார்கள். அதே போல பல ஆயிரக் கணக்கான பேர்கள் இரண்டு மாதம், 3 மாதம் சிறைச்சாலை யிலே அடைக்கப்பட்டார்கள். கலைஞர் அவர்கள்கூட கைதி கூடையிலே சிறைச்சாலையிலே அடைக்கப்பட்டிருந்தார். அப்ப டிப்பட்ட தியாகிக் குடும்பங்கள் எல்லாம் பாராட்டத்தக்க வகையிலும்........ (மணியடிக்கப்பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாதான் கேட்கவேண்டும்.

திரு. வ. முல்லைவேந்தன் : அப்படிப்பட்ட தியாகிக் குடும்பங் களின் பிள்ளைகளுக்குக் கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னு ரிமை அளிக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, இப்போது கேட்கப்பட்ட துணைக் கேள்வி சற்று விரி வானது. அதை அத்தனைக்கும் பதில் சொல்லக்கூடிய வாய்ப்பு இப்போது இல்லை. எந்தெந்தத் துறையில் அப்படி இட ஒதுக்கீடு செய்யக்கூடிய வாய்ப்பு இருந்து செய்யப்பட்டிருக்கிறதோ அவற் றிலே நான் வேலை கிடைக்குமே தவிர பொதுவான பதில் கோருவது நியாயம் அல்ல.

திரு. மு. இராமநாதன் ; பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்மொழிப் பாதுகாப்புத் தியாகிகள் தாங்கள் சிறையில் இருந்த காலத்தில் அதற்குண்டான சான்றிதழைப் பெற்று உதவித் தொகை பெறுவதற்கு அரசிடம் விண்ணப்பிக்க முடியாத நிலை யில் அவர்கள் சிறையில் இருந்த சான்றே அழிந்து போய்விட்டது அல்லது காணாமல் போய்விட்டது என்கின்ற ஒரு காரணத்தினால் இந்த உதவித் தொகை பெறமுடியாமல் மறுக்கப்பட்டிருக்கிறது. ஆகவே அந்த நேரத்தில் சிறையில் இருந்த தகுதி வாய்ந்த ஒருவர் கொடுக்கின்ற சான்றிதழை ஏற்று அவர்களுக்கு அந்த உதவித்தொகை கிடைப்பதற்கு அரசு உத்திரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, விண்ணப்பங்கள் முறைப்படி கருணையோடு பரிசீலிக்கப் படும்.



1990 சனவரி 25]

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, இந்தத் தமிழ்மொழிப் பாதுகாப்புத் தியாகிகள் என்ற வகையில் குமரி மாவட்டத்திலிருந்து இந்தப் போராட்டத்திற்காகப் பாடுபட்டவர்களுக்கு எல்லாம் ஒரு பட்டியல் மூலம் முத லிலே பணம் கொடுக்கப்பட்டது. மீண்டும் வேண்டுகோள் விடுத்த பிறகு இரண்டாவது பட்டியலும் கொடுக்கப்பட்டிருப்ப தாக அறிகிறேன். இன்னும் மனு கொடுத்தவர்களிலே யாராவது மீதி இருக்கிறார்களா, மனு கொடுத்தவர்களுடைய அனைத்துக் கோரிக்கைகளும் பரிசீலிக்கப்பட்டு கொடுக்கப்பட்டுள்ளதா ? மற்ற தியாகிகளுக்குக் கொடுக்கின்ற பஸ் போக்குவரத்து போன்ற சலுகைகள் அவர்களுக்கும் உண்டா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர் களே, அந்த விண்ணப்பங்கள் மறுபடியும் முறையாகப் பரிசீலிக்கப் பட்டு மாவட்ட ஆட்சித் தலைவருடைய சான்றோடு அவை பெரும் அளவுக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏதாவது குறை இருக்குமானால் தனிப்பட்ட விண்ணப்ப அடிப்படையில் சுட்டிக்காட்டினால் அதுபற்றி ஆய்வு செய்வோம். அதே நேரத் தில் பஸ் போக்குவரத்து பற்றி நேற்றைய தினம்தான் அறி விக்கப்பட்டது. அது அவர்களுக்கு இல்லையென்றால் விண்ணப் பிக்கலாம்.

திரு. அ. மலர்மன்னன் : தலைவர் அவர்களே, இந்த மொழிப் போரில் இன்றைய தினம் தாப்பலூர் சின்னச்சாமி, சிவலிங்கம், அரங்கநாதன், விராலிமலை சண்முகம், ஆசிரியர் வீரப்பன், சத்தியமங்கலம் முத்து, தொண்டாமுத்தூர் தண்டபாணி போன்றவர்கள் எல்லாம் தீயிட்டுக் கொளுத்திக்கொண்டு இந்தத் தமிழ்மொழியைக் காப்பதற்காகத் தங்கள் இன்னுயிரைத் தந்திருக் கிறார்கள். அவர்களுடைய குடும்பங்களுக்கு நிதி உதவி அளிக்கப்படுமா அல்லது வருங்காலத்திலாவது அந்தக் குடும்பங்க ளைக் காப்பாற்றுவதற்கு இந்த அரசு முயற்சிக்குமா ? அச்செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

9.05 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மொழிப் போர் தியாகிகளுக்கு, திராவிட முன்னேற்றக் கழகம், அதேபோல அவர்களிடத்திலே அனுதாபம் உள்ளவர்கள், அவர்களுடைய குடும்பங்களுக்குத் தகுந்த வகையில் உதவி செய்து இருக்கிறார்கள். அவர்களுக்கு நல்ல ஆதரவு வழங்கப்பட்டிருக்கிறது. அரசாங்கம், ஒரு கொள்கை என்ற முறையில் இவற்றைப் பரிசீலிப்பது என்பது அவ்வளவு எளிதல்ல. மாறாக அவர்கள் செய்த தியாகத்திற்கு ஈடாக எந்த விதமான விலையும் மதிப்பும் எளிதாக முடிவு செய்ய முடியாத ஒன்று. நம்முடைய உணர்வுகள், அந்த வீரத் தியாகிகளிடத்திலே உள்ள மதிப்பின் காரணமாக, நம்முடைய உணர்வுகள் மேம்படுமானால், அந்த உணர்வை மதித்துச் செயல் படுவோமேயானால் அதுதான் நாம் அவர்களுக்குச் செய்யக் கூடிய உண்மையான வீர வணக்கமாகும்.

[1990 சனவரி 25

## நோட்டுப் புத்தகங்கள் விநியோகம்.

*1627— திரு. கோ. பூவராகன் :
மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரசு வழங்கும் நோட்டு புத்தகங்கள் எப்படி வாங்கி என்ன முறையில் விநியோகிக்கப்படுகின்றது ?

(ஆ) அதனால் அரசுக்கு எவ்வளவு வருவாய் கிடைக்கின்றது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மத்திய அரசு வழங்கும் சலுகை விலைத் தாட்களைக் கொண்டு அங்கீகரிக்கப்பட்ட குறிப்பேடு தயாரிப்பாளர் மூலம் குறிப்பேடுகளைத் தயாரித்து ஆதிதிராவிடர் நலத்துறை மூலமாகவும் கூட்டுறவுச் சங்கம் மூலமாகவும் தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனம் விநியோகம் செய்கிறது.

(ஆ) தமிழ் நாட்டுப் பாடநூல் நிறுவனத்திற்கு இதனால் மொத்த இலாபம் ரூ. 38,25,016,16 கிடைக்கின்றது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் ஒவ்வொரு ஆண்டும் அச்சிடப்பட்டு வழங்குவதிலே, அவை உரிய காலத்திலே,வழங்கப்படாமல், காலதாமதமாக வழங்கப்படுகிறது என்ற புகார்கள் ஒவ்வொரு ஆண்டும் வருகின்றன. சென்ற ஆண்டு கூடபாடப் புத்தகங்கள் உரிய காலத்திலே கிடைக்காத நிலை இருந்தது. ஆகவே, வருகிற காலங்களில் அவை முன் கூட்டியே அச்சிடப்பட்டு, பள்ளிக்கூடங்களின் விடுமுறை காலம் முடிந்து பள்ளி தொடங்கப்படுகின்ற நேரத்திலே வழங்குவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வி, குறிப்புப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் பற்றியது. இது பெருமளவுக்கு உரிய காலத்திலேயே வழங்கத் தகுந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டு நிறைவேறி வருகிறது. பாடப் புத்தகங்களைப் பொறுத்தவரையில் பல்வேறு வகையான பாடப்புத்தகங்கள், அதுவும் புதிதாக எழுதப்படுகின்ற பாடப்புத்தகங்கள் ஆகியவற்றை அச்சிட வேண்டிய நிலைமை இருப்பது காரணமாகவும் நூற்றுக்கணக்கான அச்சுத் தொழிலகங்களில் அவை அச்சிடப்படு



1990 சனவரி 25]

வதன் காரணமாகவும் அவற்றுக்கான தாள்கள்கூட சில நேரங்களில், உரிய நேரத்தில் கிடைக்காததன் காரணமாகவும் பல்வேறு சிறுசிறு காரணங்களாலும் மொத்தத்தில் சில குறைகள் ஏற்படுகின்றன. அவற்றைச் சரிசெய்து முறைப்படுத்தி இந்த ஆண்டாவது விரைவாக காலத்தில் வழங்க ஏற்பாடுகள் செய்யப்படும். விநியோகத்திலேகூட காலதாமதம் ஏற்பட பல காரணங்கள் இருக்கின்றன. இந்தக் குறைகளைப் போக்க ஒவ்வொரு கட்டத்திலேயும் தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளும்படி அரசு நிறுவனத்துக்கு அறிவித்து இருக்கிறது.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நோட்டுப் புத்தகங்கள் விற்பனை செய்கின்ற இடங்களிலே அதிக விலைக்கு விற்கப்படுகிறது என்று ஏதாவது புகார் வந்திருக்கிறதா? தமிழ்நாடு அரசாங்கம் வெளியிடுகின்ற புத்தகங்களைத் தனிப்பட்ட முறையில் தனியாருக்குக் கொடுப்பதாலே, அவர்களுக்குப் போதுமான வசதியில்லை. தாள்களை வைத்துக்கொள்வது, அச்சடித்த புத்தகங்களை வைத்துக் கொள்வது, அச்சடிப்பது போன்ற பல சிரமங்கள் அவர்களுக்கு இருக்கின்றன. தனியார் நிறுவனங்களுக்குக் கொடுப்பதாலே காலாகாலத்திலே அவை பிரிண்ட் செய்யப்பட்டு உரிய காலத்திலேயே கொடுக்கப்பட முடியவில்லை என்பது அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறதா? இதுகுறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல அப்படி ஒரு பிரச்சினை எழுந்ததாக இதுவரை தெரியவில்லை. தனிப்பட்டவர்களால் அதிக விலைக்கு விற்பதாகச் சொல்லப்பட்டது. சில பாடப்புத்தகங்களைப் பொறுத்தவரையில் அப்படி அந்தத் துறையினருக்குத் தெரிய வந்து, கல்வி இலாகாவுக்குத் தெரிய வந்து, ஒரு சிலர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்தப் புத்தகங்கள் பறிமுதல் செய்யப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் குறைந்த விலையில் இந்தப் புத்தகங்கள் விற்கப்படுகிற காரணத்தாலும்,பெருமளவுக்கு இலவசமாக வழங்கப்படுகிற காரணத்தாலும், சில இடங்களில் சில தவறுகள் எந்தச் சந்தர்ப்பத்திலும் நடக்க வாய்ப்பு இருக்கிறது. அவை அவ்வப்போது அரசால் கண்காணிக்கப்படுவதன் மூலமாகத்தான் சரி செய்யப்பட முடியும்.

9.10 மணி

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோட்டுப் புத்தகங்கள் வழங்குவதில் காலதாமதங்கள் ஏற்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்களே ஒத்துக்கொண்டாலும், நான் தெரிவிப்பது, ஒவ்வொரு மாவட்டத்திலும் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாகக் கூட்டுறவு அச்சுக்கூடங்கள் நடைபெறுவதால், அங்கே வேலைப்பளுவும்

குறைவாக இருப்பதால், அந்த நோட்டுப் புத்தகங்கள், பாடப் புத்தகங்களை அத்தகைய அச்சுக் கூடங்களில் அச்சிடுவதன் மூலம், ஒரே இடத்தில் கொடுத்து காலதாமத மானதைத் தடுக்கும் முயற்சியில் அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாட நூல்கள், நோட்டுப் புத்தகங்கள் அச்சிடுவதற்கு டெண்டர் கேட்கப்படுகிற முறை இருக்கிறது. அந்த முறையில் கொடுக்க முன்வருபவர்களிடம் விண்ணப்பங்கள் கேட்டு, அத்தகைய அச்சகங்களின் சக்திக் கேற்ப, அவர்கள் ஆற்றிய பணிகளுக்கேற்ப, பாடநூல்கள் அச் சியேற்றும் பணி பிரித்து வழங்கப்படுகின்றது. அந்தவகையில் யாரும் விண்ணப்பிக்கலாம்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு வெளியிடுகிற நோட்டுப் புத்தகங்களின் பேப்பர்கள் தரமில்லாமல் இருக்கின்றன. ஆகவே அவற்றிற்குத் தரமான தாள்கள் உபயோகிக்கப் படுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தாளைப் பொறுத்தவரையில் மத்திய அரசு மலிவான விலைக்கு ஒதுக்குவதால், இந்தத் தாளில் தரக் குறைவு இருப்பதற்கு நியாயம் இல்லை. ஒரு வேளை வெளியில் தயாராகிற நோட்டுப் புத்தகங்கள் தரக் குறைவாக இருக்கலாம், இருக்கக்கூடும். அப்படியிருந்தால் அது வேறு பிரச்சினை.

மருதம்புத்தூர் இராம உயர்நிலைப்பள்ளி.

* 2056—திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகாவிலுள்ள மருதம்புத்தூர் கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியில் புதிய கட்டிடம் மற்றும் அறிவியல் விஞ்ஞான கூடம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?





மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உயர்நிலைப் பள்ளிக்கூடம் புதிதாக ஆரம் பிக்கப்பட்ட பள்ளிக்கூடம். இந்தப் பள்ளிக் கட்டிடத்திற்காக முதலில், மறைந்த முதல்வர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் 1.8 இலட்சம் ரூபாய் வழங்கி கட்டிடம் கட்டினார் கள். அது உயர்நிலைப் பள்ளியாக இருக்கிற காரணத்தால், விஞ்ஞானக் கூடம் அங்கே இல்லாமல் இருக்கக் கூடாது என்ற காரணத்தினால், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அதை உணர்ந்து, அங்கே விஞ்ஞானக் கூடம் அமைக்கும் செயற் குறிப்பை உருவாக்க முன்வருவாரா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் இந்தப் பள்ளிக் கட்டிடத்தைப் பற்றி ஆர்வத்தோடு கேட்டதன் அடிப் படையில், அதைக் கவனிக்கத் தயாராக இருக்கிறேன். ஆனால் இதேபோல, நூற்றுக்கணக்கான பள்ளிக்கூடங்கள் இருக் கின்றன. சபாநாயகராக இருந்து உறுப்பினராக இப்போது தன்னுடைய தொகுதியின் குறைகளைச் சொல்வதால் அந்தத் தேவை எவ்வளவு பெரியது என்பதை அவரே எடுத்துச் சொல்லக் கூடும். எனவே இப்படிப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு நம் முடைய முன்னாள் சபாநாயகர் போன்ற பெருமக்கள் அந் தந்தப் பள்ளிக்கூடங்களின் வளர்ச்சிக் குழுவின் தலைவர்களாக இருந்து உரிய நிதியைத் திரட்டித் தந்து பள்ளிகளின் வளர்ச்சிக்கு வழிகாண வேண்டுமென்று நான் பொது நல நோக்குடன் எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களையுமே கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதே போல, சேரன்மாதேவி, பொள்ளக்கால் பொதுக்குடி கள்ளிடைக்குறிச்சியிலும் உயர்நிலைப் பள்ளிகள் துவக்கப்பட்டு அங்கேயும் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. கள்ளிடைக்குறிச்சி உயர்நிலைப் பள்ளிக்கு புரட்சித் தலைவர் அவர்கள் வந்து 1.75 இலட்சம் ரூபாய் வழங்கினார்கள். அங்கும் விஞ்ஞானக் கூடம் இல்லை. நம்முடைய மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இது போன்ற பள்ளிகளின் வளர்ச்சிக்கு வளர்ச்சிக் குழுத் தலைவராக இருந்து நல்ல உள்ளம் கொண்டவர்களிடமிருந்து பணம் திரட்டி இது போன்ற நல்ல காரியங்களுக்கு உதவி செய்ய வேண்டுமென்று சொன்னார்கள். நான் என்னால் முடிந்த அளவுக்கு பத் தாண்டுக் காலத்தில் செய்திருக்கிறேன். சேரன்மாதேவி......

[1990 சனவரி 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு முன்னாள் பேரவைத் தலைவர் வினா தான் கேட்கிறாரா அல்லது விளக்க உரை ஆற்றுகிறாரா ?

திரு. பி. எச். பாண்டியன்; விளக்க உரையல்ல. சேரன் மாதேவி பள்ளியில் உட்கார பெஞ்ச் கூட இல்லை. என்னுடைய நண்பர்களிடம் சொல்லி ரூ. 75,000-க்கு பெஞ்சுகள் செய்து போட்டிருக்கிறேன். அதே மாதிரி எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களும் எல்லாப் பள்ளிக் கூடங்களுக்கும் செய்ய வேண்டுமென்ற ஆசை இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்காக ஒரு திட்டத்தை வகுப்பார்களா என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்னாள் சட்டமன்றத் தலைவர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையை வழங்கியிருக்கிறார்கள். பொதுவாகவே கல்வித் துறையினுடைய பணி சிறக்க வேண்டுமானால், மாணவர்களுக்குத் தகுந்த கல்வி கிடைக்க வேண்டுமானால், எந்தப் பள்ளிக் கூடமாக இருந்தாலும், பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தோடு, அந்தக்குழுவின் கண்காணிப்போடு, ஆதரவோடு நடைபெற வேண்டுமென்ற கருத்தை நான் பல இடங்களில் தெரிவித்திருக்கிறேன். ஒவ்வொரு தொகுதியிலும் இருக்கிற சட்டப் பேரவை உறுப்பினர்களும் கூட அந்தத் தொகுதியில் உள்ள பள்ளிக் கூடங்களினுடைய வளர்ச்சிக்காக, குழு அமைத்து, அதில் அவர்கள் இடம் பெற விரும்புவார்களேயானால், பெருமளவுக்குப் பலகுறைகளைப் போக்க முடியும். நேற்று மாலை கூட சைதையில் 136 ஆண்டுகளாக நடைபெற்று வருகின்ற 'மாதிரி உயர்நிலைப் பள்ளி'யில் மாணவர்களுக்கான பெஞ்சுகள் போதுமான அளவுக்கு இல்லாத காரணத்தால் ரூ. 1.25 இலட்சத்திற்கு பெஞ்சுகளும், நாற்காலிகளும் அந்தப் பள்ளியின் வளர்ச்சிக்காக, வளர்ச்சிக் குழு வழங்கிய ஒரு நிகழ்ச்சி நடந்தது. ஆசிரியர்களுக்குக் கூட 20 நாற்காலிகள் வழங்கினார்கள். தேவையினுடைய அளவுக்கு, அரசாங்கத்தின் நிதி ஈடு கொடுக்க முடியாத அளவுக்கு. இலவசக் கல்வி என்ற அடிப்படையில் தொடங்கி விரிவாக வளர்ந்துவிட்ட திட்டத்தை நாம் காப்பாற்ற வேண்டி இருக்கிறது. எனவே, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லா வகையிலும் ஒத்துழைத்து பள்ளிக் கல்வி வளர்ச்சிக்கு ஆதரவு அளிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1990 சனவரி 25]

## நாகையில் தீண்டாமை குற்றவியல் நீதிமன்றப் பிரிவு

*3417 திரு. கோ. வீரையன் :

மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) நாகையில் தீண்டாமை குற்றவியல் நீதிமன்றப் பிரிவு துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது துவங்கப்படும் ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா ; பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூரில் ஒரே ஒரு தீண்டாமை குற்றவியல் நீதிமன்றம் தான் இருக்கிறது. அந்த மாவட்டம் முழுவதிலுமிருந்து அந்த நீதிமன்றத்திற்குத்தான் வரவேண்டியிருப்பதால் அங்கே வருவதற்கு ஏற்படும் சிரமத்தோடு உடனுக்குடன் வழக்குகள் பைசல் ஆகாத சிரமங்களும் இருக்கின்றன. எனவே நாகையிலேயே ஒரு தீண்டாமை குற்றவியல் நீதிமன்றம் அமைக்க வேண்டுமென்று முன்பு பரிசீலனை செய்யப்பட்ட நிலைமையிலே இருந்தது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். எனவே இதையாவது—அதாவது நான் இப்போது கேட்டதையாவது ஒரு கோரிக்கையாக ஏற்று அதனைப் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு. திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா : பேரவைத் தலைவர் அவர்களே, குற்றவியல் சட்டப்படி தாழ்த்தப்பட்டவர்கள் மற்றும் பழங்குடியின மக்களின் வழக்குகளை விசாரிப்பதற்காக கும்பகோணம், திருநெல்வேலி, திருச்சி, மதுரை ஆகிய இடங்களில் 1982 ஆம் ஆண்டு முதல் வழக்கு மன்றங்கள் நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னது போல் நாகைப்பட்டினம், பண்ருட்டி,

கோயம்புத்தூர், செங்கற்பட்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டப்
படி வழக்குகளை விசாரிப்பதற்கான ஒரு செயற்குறிப்பு
ஆய்வு செய்யப்பட்டது. ஆனால் அதை நடத்துவதற்கு ஆண்டு
ஒன்றுக்கு 8.2 இலட்சம் ரூபாய் செலவாகும் என்று கணக்கிடப்
பட்டு, நிதிநிலை காரணமாக அது கைவிடப்பட்டு விட்டது.
1985 ஆம் ஆண்டில் தலைமைச் செயலாளரால் டெல்லியில்
கூட்டப்பட்ட கூட்டத்தில் Petty offences
சிறு குற்றங்களை விசாரிப்பதற்காக சில நீதிமன்றங்களை என்கின்ற
அமைக்கலாம் என்ற குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டது.
அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. அப்படி அது
offences நீதி மன்றங்கள் அமைக்கப்படுமானால் Petty
வழக்கு மன்றத்திலேயே இந்த பி.சி.ஆர். அந்த
விசாரிக்கலாம் என்ற ஒரு கருத்து இருக்கிறது. வழக்குகளையும்
ஏற்பட்டிருக்கிற நிலைமையில் எல்லா நீதிமன்றங்களும் இப்போது
Class Magistrate Court-களாக மாற்றப்பட்டு இருக்கின்றன. First
இந்த வழக்குகளையும் அந்த First Class Magistrate Court-லேயே எனவே
விசாரிக்கலாமா என்ற ஒரு குறிப்பும் ஆய்வில் இருந்து வருகிறது.
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுவது போல் பி.சி.ஆர்.
வழக்குகளையும் விரைவில் நடத்தி முடிக்க வேண்டும் என்று தான்
அரசாங்கமும் கருதுகிறது. எனவே தான் முன்னுரிமை அளித்து
அந்த First Class Magistrate Court-லேயே இந்த பி.சி.ஆர்.
வழக்குகளை விசாரித்து பைசல் செய்ய நடவடிக்கை எடுக்க
வேண்டும் என்ற குறிப்பு அரசின் ஆய்வில் இருக்கிறது. எனவே
மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தும் கவனத்தில்
கொள்ளப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத்
தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, தஞ்சை மாவட்டம் முழுவதற்கும் சேர்த்து
ஒரே ஒரு நீதிமன்றம் இருப்பதால் வழக்குகள் தேங்கிக் கிடக்
கின்றன. இதனால் ஏழைகள் தொடர்ந்து அல்லல்படுகிறார்
கள். அவர்கள் கஷ்டத்திற்கும் சேதத்திற்கும் ஆளாகிறார்
கள். போக்குவரத்துச் செலவு ஏற்படுகிற அதே நேரத்தில்
வேலை இழப்பினால் வருவாய் இழப்பும் ஏற்படுகிறது. அப்படிப்
பட்ட சிரமத்தில் இருக்கக்கூடிய அந்த ஏழைகளுக்கு உதவி
செய்யக் கூடிய முறையில் அரசின் நிதி நிலையினை மட்டும்
கவனத்தில் கொள்ளாமல் ஏழை எளிய மக்களின் சிரமங்களை
யும் கணக்கில் எடுத்துக் கொண்டு முன்னுரிமை கொடுத்து அதை
ஏற்படுத்துவதற்கு முயற்சிப்பார்களா என்று நான் அறிய விரும்பு
கிறேன்.

மாண்புமிகு திரு.எஸ். ஜே. சாதிக்பாட்சா ; மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்
கள் சொன்னது போல் மாவட்டத்தில் ஓரிடத்தில் இந்த நீதி
மன்றம் இருப்பதால் சிரமங்கள் ஏற்படுகின்றன என்பது உண்மை.





எனவேதான் இப்போது மாவட்டத்தில் அமைந்திருக்கின்ற
எல்லா வழக்கு மன்றங்களும் First Class Court-ஆக
அமைந்துவிட்டன. First Class என்ற அளவில்
அதிகாரம் அவற்றுக்குக் கொடுக்கப்படுகிறது. எனவே அந்த
வழக்குகளை ஓரிடத்தில் வைத்து விசாரிப்பதற்குப் பதிலாக
அந்தந்தப் பகுதி First Class Courtகளுக்கு அனுப்ப
லாமா என்ற நிலையும் பரிசீலனையில் இருக்கிறது. எனவே
ஏழை மக்களின் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்கான நடவடிக்கை
எடுக்கப்படும் என்பதை நான் தெரிவித்துக் கொளகிறேன்,

## கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி ரயில்பாதை அமைத்தல்

* 2208 திரு. செங்கைசிவம், திரு. எஸ். டி. உகம்சந்த் :
மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரூர், திண்டுக்கல், மதுரை, தூத்துக்குடி ரயில்
பாதை அமைக்க மத்திய அரசிடம் தமிழக அரசு வற்புறுத்தி
வருகிறதா?

(ஆ) 1982 முதல் இது பற்றி மத்திய அரசிடமிருந்து
ஏதேனும் குறிப்பைத் தமிழக அரசு பெற்றதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத் திட்டத்திற்கு வரும் ஆண்டுகளில் மேலும் அதிக
நிதி ஒதுக்கப்படும் என இரயில்வே அமைச்சகத்தால் கூறப்பட்
டுள்ளது.

9.20. மணி

திரு. செங்கைசிவம் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இத் திட்டத்திற்கு
நடப்பாண்டு அதிக நிதி உதவி ஒதுக்கப்படும் என்று மகிழ்ச்சியான
செய்தியைத் தெரிவித்தார்கள். ஆகவே இந்தத் திட்டம்—
1982-லே இருந்து தொடர்ந்து வற்புறுத்தப்பட்டு வருவதால்—
மிக அதிவேகமாக முடிவடைய வேண்டும். அந்த வகையிலே
மேலும் அதிக உதவி பெற வாய்ப்பு இருக்கிறதா என்று அறிய
விரும்புகிறேன்.

[1990 சனவரி 25

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, 1981 ஆகஸ்ட் திங்களில் ரெயில்வே அமைச்ச
கத்தினால் அனுமதிக்கப்பட்ட இந்தத் திட்டத்தின் அப்போதைய
மதிப்பு ரூ. 42.86 கோடி. தற்போதைய திட்ட மதிப்பீடு
ரூ. 139.29 கோடி ஆக உயர்ந்திருக்கிறது. இதிலே பல்வேறு
கட்டப் பணிகள் நிறைவேறி இருந்தாலும், வருகின்ற ஆண்டுகளில்
கூடுதலான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று மாநில அரசாங்
கம் மத்திய அரசாங்கத்தை ஏற்கனவே கேட்டிருக்கின்றது.
ஏனென்றால் கடந்த காலத்திலே மிகவும் குறைவான அளவு நிதி
ஒதுக்கப்பட்ட காரணத்தினாலேதான் இந்தத் திட்டம் நீண்ட
நாட்களாகச்செய்து முடிக்கப்படாமல் மெதுவாக நடந்து கொண்
டிருக்கிறது. இந்தத் திட்டத்தை நடப்பு ஆண்டிலாவது செய்து
முடிக்க, விரைவு படுத்துவதற்கு அதிகப்படி நிதி உதவி வருகின்ற
காலத்திலே கிடைக்கும் என்று மாநில அரசு எதிர்பார்க்கிறது.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற நேரத்
தில், இதற்கு முன்பாக இதற்காக நிதி வசதிகள் சரியான முறை
யில் வழங்கப்படவில்லை என்று சொல்லியிருக்கிறார்கள். எவ்
வளவு நிதி இதுவரையில் வழங்கப்பட்டு செலவு செய்யப்பட்டு
இருக்கின்றது என்ற குறிப்பைத் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்
கிறேன். அதோடு மட்டுமல்லாமல், இந்த ரெயில்வே பாதை
எப்போது முடிவு பெறும் என்ற விவரத்தையும் அறிவிக்கவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்திற்கு ஒவ்வொரு நிதி
ஆண்டிலும் 1981-82 முதல் 1987-88 வரை மொத்த ஒதுக்கீட்
டுத் தொகை ரூ. 29.03 கோடி. 1988-89 ஆம் ஆண்டில் ரூ. 5
கோடி ஒதுக்கப்பட்டது. 1989-90-வது ஆண்டுக்கு ரூபாய் 4
கோடி ஒதுக்கப்பட்டு உள்ளது. எனவேதான் வருகின்ற ஆண்டு
களில் கூடுதலான நிதி ஒதுக்கப்பட வேண்டும் என்று கடந்த
14—3—1989 தேதியிட்ட கடிதம் நம்முடைய முதல்வர் அவர்
களால் மத்திய ரெயில்வே அமைச்சருக்கு எழுதப்பட்டு இருக்
கின்றது. மத்திய ரெயில்வே அமைச்சர் அவர்கள் 19—4—1989
தேதியிட்ட தன்னுடைய பதில் கடிதத்திலே இதுவரையில்
ரூ. 56.38 கோடி செலவிடப்பட்டதாகவும், அந்தத் திட்டத்திலே
ஒரு பகுதியான கரூர்-திண்டுக்கல், மணியாச்சி-தாளையூத்து, மணி
யாச்சி—மீளவிட்டான், மீளவிட்டான்—தூத்துக்குடி துறை
முகம் ஆகிய ரெயில்வே பாதை அமைப்புப் பணிகள் பூர்த்தி
அடைந்து விட்டதாகவும் தெரிவித்துள்ளார்கள். இந்தத் திட்டத்
தினுடைய முக்கியப் பகுதியான திண்டுக்கல் மதுரை இருப்புப்
பாதை அமைப்புப் பணி மற்றும் பாலங்கள் அமைக்கின்ற பணி
நடைபெற்று வருகிறது. நடப்பு ஆண்டில் 4 கோடி ரூபாய்



1990 சனவரி 25]

போதுமானது என்பதைத் தெரிவித்திருக்கிறார்கள். இருந்
தாலும் இந்த வேலையை மேலும் விரைவுபடுத்தி முடிப்பதற்கு
அதிகப்படியான நிதியை வருகின்ற ஆண்டில் ஒதுக்க வேண்டும்
என்று மாநில அரசு கேட்டிருக்கிறது. நிதி ஒதுக்குவதைப்
பொறுத்து இந்தத் திட்டம் விரைவில் முடிவடையும்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை
வர் அவர்களே, திண்டுக்கல்—மதுரை அகல ரெயில்வே பாதை
யினுடைய பணியில் எர்த் வேலைதான் நடை பெற்றுக் கொண்டி
ருக்கிறது. இந்தப் பணியினுடைய திட்டத்தில் திண்டுக்கல்
ரெயில்வே நிலையத்திற்கு அருகே உள்ள மேம்பாலமும் சேர்த்து
இந்தப் பணி முடிவடையுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திண்டுக்கல்—மதுரை இருப்புப் பாதைக்
குட்பட்ட பகுதியாக இருந்தால் அந்த மேம்பாலமும் இதனுடைய
திட்டத்திலே சேர்க்கப்படும். ஆனால் மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் குறிப்பிடுகின்ற பாலத்தைப் பற்றி என்னிடத்திலே
விவரக் குறிப்பு இல்லை.

9-25 மணி

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த அகல ரெயில் பாதை என்பது கோவில்பட்
டிக்கு மட்டுமல்ல; இந்தக் கரூர்—திண்டுக்கல், மதுரை—தூத்
துக்குடி அகல ரயில் பாதை தமிழகத்தினுடைய தொழில் வளர்ச்
சிக்கும் வர்த்தக அபிவிருத்திக்கும் மிகமிக அவசியமானது என்
பதை சகலரும் வற்புறுத்தி வரக்கூடிய ஒரு திட்டமாகும். இது
10 ஆண்டுக்காலமாகவே கிடப்பிலே போடப்பட்டு வருகிறது.
இதற்குக் கடந்த ஆண்டுகளிலே மத்தியிலே உள்ள ஆட்சி ஏதோ
ஒரு பாரபட்சமான முறையிலே அதிகமான நிதி ஒதுக்காத
காரணமாக இது கிடப்பிலே இருப்பதால் நான் முதற்கொண்டு
எல்லா கட்சிகளும் போட்ட தீர்மானம் ஆகும்.

இப்போது சாதகமான எல்லா கட்சியையும் அனுசரித்து நடக்
கக்கூடிய, எல்லா மாநிலங்களுக்கும் சமமாக உரிமை அளிக்க
வேண்டுமென்று எண்ணக் கூடிய அரசு மத்தியில் வந்திருக்கிறது.
ஆகவே, இந்தத் திட்டத்தை தீவிரமாக வருடத்திற்கு ரூ. 5
கோடி, 10 கோடி என்று ஒதுக்குவதில் பிரயோசனம் இல்லை.
ரூ. 48 கோடி திட்டம் இப்போது ரூ. 132 கோடியில் வந்து
நிற்கிறது. சீக்கிரமாக, துரிதமாக நிறைவேற்ற வேண்டுமென்று
மத்திய அரசை வற்புறுத்தி 2,3 ஆண்டுகளுக்குள் இத் திட்டத்தை
நிறைவேற்ற அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா?

[1990 சனவரி 25

9-25 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதை போல 10 ஆண்டுகள் அல்ல. 18 ஆண்டுகளாக நத்தை வேகத் தில் ஊர்ந்து செல்லக் கூடிய திட்டம் இது. உறுப்பினர் குறிப் பிட்டதைபோல இன்றைக்கு மக்களுடைய தேவையை உணர்ந்து மத்திய அரசு விரைந்து நிச்சயமாக இதனை ஏற்றுக் கொள்ளும் என்று நம்புகிறேன்.

திரு. அ. லெ. சுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை, தூத்துக்குடியில் மணியாச்சியிலி ருந்து திருநெல்வேலிக்குத் தனியாக ரெயில் பாதை பிரிகிறது. அமைச்சர் அவர்கள் கூறுகின்றபோது கூட மணியாச்சி தாளை யூத்து அகல ரெயில் பாதை போடும் வேலை துவங்கியிருக்கிறது என்று சொன்னார்கள். ஆனால் சில இடங்களில் தண்டவாளங் கள் பதிக்கப்படவில்லை. அது கைவிடப்பட்டதாக கூட சிலர் சொல்கிறார்கள். எனவே சிமென்ட் ஆலை இருக்கின்ற தாளை யூத்தையும் மணியாச்சியையும் அகல ரெயில் பாதை மூலமாக இணைக்கின்ற திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரூர்—திண்டுக்கல், மணியாச்சி—தாளையூத்து, மணியாச்சி—மீளவிட்டான், மீளவிட்டான்—தூத்துக்குடி துறை முகம் ஆகிய ரெயில் பாதைகளின் அமைப்புப் பணிகள் பூர்த்தி யடைந்திருக்கின்றன என்கிற தகவல் என்னிடத்தில் தரப்பட் டிருக்கிறது. இடையிலே ஏதாவது சில பகுதிகளிலே இருப்புப் பாதை போடப்படக்கூடிய பணி தடைபட்டு நிற்குமானால்— அது நில ஆர்ஜிதம் இன்னும் அதைப்போன்று சிறிய தடங்கல் காரணமாக இருக்கலாம்—அதைப்பற்றி அரசினுடைய கவனத் திற்கு உறுப்பினர் கொண்டுவந்திருப்பாரானால் அது நிச்சய மாக பரிசீலிக்கப்படும்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, கரூர்,—திண்டுக்கல், மதுரை, மணியாச்சி,—தூத்துக்குடி அகல ரெயில் பாதை விரைவிலே வர வேண்டும் என்பதிலே அனைவருக்கும் அக்கறை இருப்பதை ஏற்றுக்கொண்டு அதற் கான முயற்சியை செய்வோம் என்று இங்கே சொல்லியிருக் கிறார்கள். இதிலே மணியாச்சி, மணியாச்சி என்று சொல்வதற் குப் பதிலாக இனிமேல் நாமாவது வீரவாஞ்சி மணியாச்சி என்று சொல்லக்கூடிய வகையிலே நம்முடைய குறிப்புகளை அமைக்க வேண்டுமென்று நான் பணிவாக கேட்டுக்கொண்டு இப்போது திருவனந்தபுரத்தில் இருப்பதை மதுரையோடு சேர்ப்பதற்கு இந்த அரசு முயற்சிக்குமா என்று அறிய விரும்பு கிறேன்.



1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் தெரிவித்த கருத்து மத்திய அரசுக்கு எடுத்துரைக்கப்பட்டு மாநில அரசின் சார்பில் நிச்சய மாக வலியுறுத்தப்படும்.

## கடலூரில் சிறு துறைமுக அபிவிருத்தித் திட்டம்

*3524—திரு. இ. புகழேந்தி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

கடலூரில் சிறு துறைமுக அபிவிருத்தித் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திரு. இ. புகழேந்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரில் அனல் மின் நிலையம் அமைப்பதற் கான நிலை இருப்பதாலும், கடலூர் சிப்காட் பகுதியில் சொன்னதை செய்யும் தமிழகத்தினுடைய தலைவர், எங்கள் அன்பு இனமானத் தலைவர் அவர்களுடைய பெருமுயற்சி யின் காரணமாக பல தொழிற்சாலைகள் தொடங்கப்பட் டுள்ள நிலை உள்ளதாலும், பயணிகள் போக்குவரத்து ( Ferry Service ) கடலூர் துறைமுகப் பகுதிக்கு வர இருக்கின்ற சாத்தியக்கூறுகள் இருக்கின்ற காரணத்தா லும் தமிழக அரசு மத்திய அரசிடத்தில் வற்புறுத்தி கூடுதல் நிதியுதவி பெற்று விரைவாக இந்தத் துறைமுகப் பணிகளைத் தொடங்க முன்வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் துறைமுகத்தினுடைய முன்னேற்ற பணிகளுக்காக 7வது திட்டக் காலத்தில் 109.5 லட்சம் ரூபாய் செலவில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதிலே சில பணிகள் முடிவுற்று சமீபத்தில்தான் கலங்கரை விளக்கமும் கூட புதிய வடிவிலே அமைக்கப்பட்டு, கலங்கரை விளக்கமும் அங்கே திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. கடலூருடைய எதிர் கால நிலைமையைக் கருதி தொழிற்கூடமாக இருந்தாலும் எதிர்காலத்திலே அமைக்கப்பட இருக்கின்ற மின்சார வாரியத் தினுடைய அனல் மின் நிலைய திட்டமாக இருந்தாலும் அல்லது அரசு உத்தேசித்துள்ள படகு போக்குவரத்து (Ferry Service) சம்பந்தமான அப்படிப்பட்ட வசதிகளுக்கு ஏற்றாற்போல கடலூர் துறைமுகத்தினுடைய வளர்ச்சிக்கு

[1990 சனவரி 25

எதிர்காலத்திலே என்னென்ன பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதைப் பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது. வருகின்ற ஆண்டுகளில் அத்தகைய நல்ல திட்டங்கள் கடலூர் துறைமுகத்தினுடைய அபிவிருத்திக்காக நிறைவேற்றப்படும்.

ஊராட்சித் தலைவர்களுக்குப் பயிற்சியளித்தல்

*2367—திரு. ஏ. செங்குட்டுவன் ;

மாண்புமிகு ஊரகவளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

ஊராட்சித் தலைவர்கள் நிர்வாக சம்மந்த விவரங்களை தெளிவாக தெரிந்துகொள்ளும் வகையில் ஒருவார காலத்திற்கு விளக்கப் பயிற்சியளிக்கும் புதிய திட்டத்தை அரசு கொண்டு வருமா?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 17–4–1989-ல் வெளியிட்ட ஊரக வளர்ச்சித் துறை அரசு ஆணை எண். 241-ன்படி, ஊராட்சித் தலைவர்களுக்கு ஊராட்சி நிர்வாக நடைமுறையை விளக்கி 2 நாள் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சி மாநிலம் முழுவதும் 3–6–1989 முதல் 13–7–1989 வரை நடத்தி முடிக்கப்பட்டது.

9-30 மணி

திரு. ஏ. செங்குட்டுவன் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிர்வாகம் சிறப்பாக நடைபெற, ஊராட்சி மற்றும் நகராட்சிகளினுடைய சட்ட திட்டப் புத்தகம், விதிமுறைப் புத்தகம், பல நகராட்சிகளில் இல்லை. தற்போது புதிதாகக் கொண்டுவரப்பட்டுள்ள திருத்தங்களும் இல்லாத நிலையில் இருக்கிறது. அவற்றை அரசு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சிட்டு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்குக் கொடுக்க முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு.கோ. சி. மணி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி நிர்வாக நடைமுறை விளக்கக் குறிப்புகள் புத்தக வடிவில் அச்சடிக்கப்பட்டு ஒவ்வொருவருக்கும் இலவசமாக வழங்கப்பட்டது. இதற்கு ஆங்கிலத்தில் தேவை இருந்தால் திரும்பவும் மொழிபெயர்த்துக் கொடுக்கலாம்.



1990 சனவரி 25]

திரு. ஏ. செங்குட்டுவன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஊராட்சி, நகராட்சி நிர்வாகத்தில் நகராட்சிகளினுடைய வரைபடங்கள் பல ஆண்டுக் காலங்களுக்கு முன்பு தயாரிக்கப்பட்டன. அவை எல்லாம் பாழ்பட்டு அடுக்கப்பட்டு இருக்கின்றன. அவற்றைப் புதிதாக நகராட்சிகளுக்கு வழங்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்வி ஊராட்சி மன்றத்தைப் பொறுத்தது: ஊராட்சி மன்றத் தலைவர்களைப் பொறுத்தது.

திரு. கே. சுந்தர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றங்களுக்குச் சேரவேண்டிய வரி, தொழில் வரி போன்றவற்றை தற்போதுள்ள கிராம நிர்வாக அலுவலர்கள் சரிவர வசூலிப்பது இல்லை என்ற ஒரு குறை இருக்கிறது. எனவே அவற்றை முன்பு போல ............ (மணி அடிக்கப் பெற்றது).

திரு. ரா. சொக்கர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கக்கூடிய பலர் உள்ளாட்சி மன்றங்களிலே தலைவர்களாக இருக்கக்கூடிய காரணத்தினால் அவர்களுக்கும் வருகின்ற பட்ஜெட் கூட்டத் தொடருக்கு முன்பாக பயிற்சி அளிக்கப் பட்டால் அது அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நன்மை பயக்கக்கூடிய அளவிலே இருக்கும் என்பதால் அவர்களுக்கும் விசேஷப் பயிற்சி உடனடியாக அளிக்கப்படுமா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அளிக்கப்பட்ட பயிற்சி ஊராட்சி, பேரூராட்சி மன்றத் தலைவர்கள் அத்தனை பேருக்கும் அளிக்கப்பட்டு இருக்கிறது. ஏறத்தாழ 7 ஆயிரத்துச் சொச்சம் பேர் அதில் கலந்து கொண்டிருக்கிறார்கள். அதிலே சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தாலும் அப்போது அதிலே கலந்து கொண்டு இருப்பார்கள். தனியாக அது தேவை இல்லை எனக் கருதுகிறேன்.

திரு. ப. முத்துசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத் தலைவரும் அந்தந்தப் பகுதியில் இருக்கிற நடைமுறை நிர்வாகங்கள் பலவற்றைத் தெரிந்துகொள்ள இயலாத நிலையில் இருப்பதால் பல அத்தியாவசியக் காரியங்களை—தெரு விளக்கு பராமரித்தல், குடிநீர் பராமரிப்பது போன்ற காரியங்களை—அவர்கள்

[1990 சனவரி 25

செம்மையாக உடனுக்குடன் செய்ய முடியாத நிலையில்
இருக்கிறார்கள். ஆகையால் ஒவ்வொரு மாவட்டத்திலும் நம்
முடைய அமைச்சர் அவர்கள் உள்ளாட்சி மன்றத் தலைவர்
களுடைய கூட்டத்தை கூட்டி அந்த விளக்கங்களை எடுத்துச்
சொல்வதற்கு முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஊராட்சி மன்றத் தலைவர்கள் தேர்ந்
தெடுக்கப்பட்டு 4 ஆண்டுக் காலம் ஆகிறது. அவர்களுடைய
பதவிக் காலம் இன்னும் ஓராண்டில் முடிவுபெற இருக்
கிறது. அவர்கள் நல்ல பயிற்சி பெற்று இருப்பார்கள் என்று
தான் நம்புகிறேன். எனவே அப்படி ஏதாவது தேவைப்படு
மாயின் பிறகு அதைப்பற்றிப் பரிசீலிக்கலாம்.

திரு. ஆர். சிங்காரம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, ஒவ்வொரு ஊராட்சி மன்றத்திற்கும் ஊராட்சி
மன்றக் கட்டிடம் கட்டுவதற்கான செயற் குறிப்பு அரசிடம்
இருக்கிறதா என அறிய விரும்புகிறேன் ...............
(மணியடிக்கப் பெற்றது).

## பேரூராட்சிகளில் ஆதி திராவிடர்களுக்கு வீடுகள் கட்டுதல்

*3327—திரு. க. சொ. கணேசன்:

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை
அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—:

கிராமங்களில் ஆதி திராவிட மக்களுக்கு அரசின்
உதவியால் வீடு கட்டிக் கொடுப்பதைப் போன்று பேரூராட்சி
களிலும் ஆதி திராவிடர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்கும் செயற்
குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 1989-90 ஆம் ஆண்டிற்கு இது குறித்து
அரசிடம் திட்டம் ஏதுமில்லை.

திரு. க. சொ. கணேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கிராமப் புறத்தில் ஆதி திராவிடர்களுக்கு வீடு
கட்டிக் கொடுப்பதுபோல், பேரூராட்சிகளில் உள்ள ஆதி
திராவிடர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்கின்ற திட்டம்
இல்லை என்று சொல்லி இருக்கிறார்கள். இது அவசியம்
செய்யப்பட வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
இதற்கு அரசு திரும்ப பரிசீலனை செய்யுமா என்று அறிய
விரும்புகிறேன்.



1990 சனவரி 25]

9-35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, 1989—90 ஆகிய
நடப்பாண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு
கான்க்ரீட் கூரையுடன் கூடிய 42,000 தொகுப்பு வீடுகள்
ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் கட்டி முடிப்பதற்
கான அனுமதி அளிக்கப்பட்டு, ஓரளவுக்கு அந்த வேலையும்
முடிவடையும் நிலையில் இருக்கிறது. அதனால் இதுவரை
மாண்புமிகு உறுப்பினர் விரும்பியதை நிறைவேற்றும் சூழ்
நிலை ஏற்படவில்லை. ஆனால் ஆகஸ்ட் திங்கள் 1989ஆம்
வருஷம் வெளியிடப்பட்ட மைய அரசின் விளக்கத்தின்படி
பரிசீலித்து, அடுத்த ஆண்டுக்கு அந்தத் திட்டத்தை விரிவு
படுத்தலாமா என்று ஆலோசிக்கப்பட்டு வருகிறது.

திரு. க. சொ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் திட்டத்தை அவசியம் அடுத்த ஆண்டு
செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ந. இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பெரும்பாலான பேரூராட்சிகள்
கிராமப்புற பேரூராட்சிகளாக இருக்கின்றன. அநேகமாக
எல்லா கிராமங்களிலும் உள்ள ஆதி திராவிடர்களும் இன்றைய
தினம் தனியாக ஒதுக்கப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறார்
கள். அப்படிப்பட்ட பேரூராட்சி பகுதிகளில் வசிக்கும்
ஆதி திராவிடர்களுக்கு தனியாக கான்கிரீட் வீடுகள் கட்டித்
தர வேண்டும் என்று கோரிக்கை எழுப்பி இருக்கிறார்கள்.
எனவே இந்த ஆண்டு நடப்பு திட்டத்திலேயே அதை
எடுத்துச் செய்வதற்கு அரசு நிதி ஒதுக்கீடு செய்யுமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : இந்த ஆண்டுக்குரிய
தொகை அனைத்தும் திட்டமிடப்பட்ட இந்தப் பணிக்காக
என்று ஒதுக்கப்பட்டு, பணிகளும் முடிவடையும் தருவாயில்
இருக்கிறபோது நிதியை டைவெர்ட் பண்ணுவதற்கான சாத்தியக்
கூறுகள் இல்லை.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, பேரூராட்சிகள் அர்பன் பேரூராட்சிகள் என்றும்
ரூரல் பேரூராட்சிகள் என்றும் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்
கின்றன. அர்பன் பேரூராட்சிகளுக்கு இலவசமாக வீடு
கட்டிக் கொடுக்கப்படுவதோ அல்லது மற்ற சலுகைகளோ ஏதும்
கொடுக்கப்படுவதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது,
எனவே அர்பன் பேரூராட்சிகளுக்கும் ரூரல் பேரூராட்சி

களுக்கும் வித்தியாசமில்லாமல்—இங்கேயும் மிகவும் பிற்படுத்தப்பட்ட தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கிற காரணத்தால் அவர்களுடைய நிலையையும் உணர்ந்து அவர்களுக்கும் வீடு கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த ஆண்டு பேரூராட்சிகளுக்கும் இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்ற நிலை வருமானால் நிச்சயமாக இரண்டு பேரூராட்சிகளுக்கும்—அவை இரண்டுமே ஒன்றாகக் கருதப்பட்டு—இந்தத் திட்டம் விஸ்தரிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. நூர்முகமது : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு அரசினுடைய உதவியினால் கடந்த காலத்தில் கட்டிக்கொடுக்கப்பட்ட பலவீடுகள் முடிவடையாமலேயே இருப்பதுடன் பல இடங்களில் குடிபுக முடியாத அளவுக்கு நீர் கெட்டிருப்பதால் மக்கள் பயன்படுத்த முடியாத சூழ்நிலை கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்பட்டிருப்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருக்கிறதா? அதை நிவர்த்தி செய்ய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, வேறு எந்த மாவட்டத்திலும்—கன்னியாகுமரி மாவட்டத்தில் சொல்லப்படுவதுபோல்—இது போன்ற தகவல் இல்லை. சில மாவட்டங்களில் கால தாமதமாக வீடுகள் கட்டும் பணிகள் நடைபெறுவதாக அறியப்பட்டு அந்தந்த மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அந்தப் பணியை துரிதப் படுத்துகிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறோம். அண்மையில் அவை முடிந்துவிடும் என்றும் அறிக்கை வந்திருக்கிறது.

### கரும்பின் விலை

*2119—திரு. பொ. முருகேசன் ;

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சில மாநிலங்களிலுள்ளது போல் கரும்பின் விலையை விவசாயிகளுக்குக் கொடுத்து விட்டு வெட்டுக் கூலி, லாரி வாடகை போன்ற ஏனைய செலவுகளை ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்ளும் முறையை அரசு அமுல்படுத்துமா ?



மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

கரும்புக்கு தற்போது கொடுக்கப்படும் விலை, கொடுக்கப்படும் போக்குவரத்து மான்யம் மற்றும் இதர மான்யங்களை கணக்கில் எடுத்துக்கொண்டால் இந்த கோரிக்கையை அமுல் படுத்துவதற்கான நிதி நிலை வாய்ப்பு தமிழ்நாட்டில் உள்ள ஆலைகளுக்கு இல்லை.

திரு. பொ. முருகேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கரும்பு விலையைப் பொறுத்த வரையிலே மற்ற மாநிலங்களைப் போலவே தமிழ்நாட்டில் கரும்பிலிருந்து கிடைக்கிற ரெக்கவரி 10.5 அளவுக்கும் கூடுதலாக இருந்தாலும்கூட, மற்ற மாநிலங்களிலே தரப்படும் விலையை விட கரும்புக்கு மிகக் குறைந்த விலையே கொடுக்கப்படுவதற்கு என்ன காரணம் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இதற்கும் சம்பந்தமில்லை என்றாலும் மத்திய அரசு கரும்புக்கு ரூ. 220 தான் விலையாக நிர்ணயித்திருக்கிறது. நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் டன்னுக்கு ரூ. 30 கூடுதலாக நாம் கொடுக்கிறோம்.

9.40 மணி

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, கரும்புக்கு டன்னுக்கு மத்திய அரசை விட மாநில அரசு 30 ரூபாய் அதிகமாகக் கொடுப்பதாக இங்கே அமைச்ச ரவர்கள் சொல்கிறார்கள். நான் தெரிந்து கொள்ள விரும்பு வது, ஒரு டன்னினுடைய கரும்பினுடைய உற்பத்திச் சர்க்கரை எவ்வளவு ஆகிறது? அதைக் கணக்கிட்டு விவசாயிகளுக்குக் கொடுக்கப்படுகிறதா? கொடுக்க அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவ ரவர்களே, கரும்புச் சத்து 8.5 சதவீதம் இருப்பதைக் கணக் கிட்டுத்தான் மத்திய சர்க்காரும், இதைப்போல விலையை நிர்ணயிக்கிறார்கள். ஆனால் நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரைக்கும் நம்முடைய முதலமைச்சரவர்கள் மத்திய சர்க்கார் ஏற்கனவே 200 ரூபாய் ஒரு டன்னுக்கு என்று இருந்த பொழுது 250 ஆகத் தந்தார்கள். பிறகு மத்திய சர்க்கார் இப்பொழுது 220 ரூபாயாக ஆக்கிய பிறகும்கூட நாம் 30 ரூபாய் கூடுதலாகவே கரும்பு உற்பத்தி செய்யக் கூடிய விவசாயிகளுக்குக் கொடுக்கின்றோம்.

[1990 சனவரி 25

திரு. ஜி. ஜி. குருமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, வெட்டுக்கூலி இல்லையென்றாலும், லாரி வாடகையாவது ஏற்றுக்கொள்வதற்கான பரிந்துரைகளை அரசாங்கம் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, மகாராஷ்டிரா மாநிலத்தில் சர்க்கரை ஆலை—கரும்பு வெட்டுச் செலவு, போக்குவரத்துச் செலவு ஆகியவற்றை ஆலைகளே ஏற்றுக்கொள்வதாகத் தெரிகிறது. தமிழகத்திலுள்ள அனைத்துக் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை ஆலைகளிலும் கரும்பு எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்துச் செலவை தூரத்தின் அடிப்படையில் கீழ்க்கண்டவாறு ஆலையே ஏற்கிறது. அதாவது வயலிலிருந்து ஆலைக்குள்ள நாற்பது கிலோ மீட்டருக்கு உட்பட்ட தூரத்திலிருந்து பெறக் கூடிய கரும்புக்கு மட்டும்தான் விவசாயிகளே வாகன வாடகையை ஏற்க வேண்டும். ஆலையிலிருந்து நாற்பது கிலோ மீட்டருக்கு அதிகம் உள்ள தூரத்திற்கு உண்டான போக்குவரத்துச் செலவினை ஆலையே தன் செலவில் மானியமாக ஏற்றுக் கொள்கிறது.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த லாரி வாடகையைப் பொறுத்தமட்டில், மராட்டியத்தில் பூரா வாடகையையுமே ஆலை நிர்வாகமே ஏற்றுக்கொள்கிறது. தமிழகத்தில் ஒரு குறிப்பிட்ட பகுதியை மட்டும் ஏற்றுக் கொள்கிறார்கள் ; ஒரு குறிப்பிட்ட பகுதிக்கு விவசாயிகளே கொடுக்க வேண்டியிருக்கிறது. எனவே, அவர்களுக்குக் கிடைக்கக் கூடிய இந்த 250 ரூபாயிலே லாரி வாடகையைக் கொடுப்பதினால் விவசாயிகளுக்கு அந்த விலை குறையக் கூடிய நிலைமை ஏற்படுகிறது. எனவே, மராட்டியம் போல தமிழகத்திலேயும் அந்த லாரி வாடகை முழுவதையுமே ஆலை நிர்வாகமே ஏற்றுக் கொள்வதற்கான முறையில் அரசு உரிய நடவடிக்கையை எடுத்து, விவசாயிகளுக்கு உதவி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவரவர்களே, நாற்பது கிலோ மீட்டர் வரை விவசாயிகளே ஏற்கிறார்கள். அதற்கு மேலே இருந்தால்——நாற்பது கிலோ மீட்டருக்கு மேல் உள்ள தூரத்திற்குப் போக்குவரத்துச் செலவை ஆலையே ஏற்றுக் கொள்கிறது.

தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புசாலை திட்டத்தின்கீழ் உள்ள சாலைகள்

* 3313——திரு. சி. கோவிந்தராஜன் :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்புசாலை திட்டத்தின் கீழ் உள்ள சாலைகள் எத்தனை?



[1990 சனவரி 25

திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினை கடலூர் மாவட்டக் கூட்டத்தில் வந்தபோது அங்கே வந்த ஆலோசனையில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றவர்களும் ஒன்றும் செய்ய முடியாத நிலைமையில் எல்லா சட்டமன்ற உறுப்பினர்களும் சேர்ந்து ஒரு குழுவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து பேசி, அதன்மூலமாக நடவடிக்கை எடுக்கலாம் என்று முடிவு செய்யப்பட்டது. அந்த முடிவு முடிவு அங்கேயிருந்து அரசுக்கு வந்திருக்கிறதா ? அப்படிப்பட்ட அங்கே எடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் நாங்கள் முதலமைச்சர் அவர்களைச் சந்திக்க இருக்கிறோம். அதற்கான நடவடிக்கையெடுத்து முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று தலைவர் அவர்களே, உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மர்ண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : தலைவர் அவர்களே, அதுபற்றிய விவரம் என்னிடம் இல்லை. தனியாகக் கேள்வி போடலாம். இருப்பினும் அந்தச் சாலைகளை, நம்முடைய தலைமைப் பொறியாளர், நெடுஞ்சாலை, கிழக்கு கடற்கரை சாலை மற்றும் கிராமச் சாலைகள் அவர்களே, இந்தப் பிரச்சினை தீர்க்கிறவரையில் பராமரிக்கலாம் என்ற குறிப்பை அரசுக்கு அனுப்பி இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் இந்தச் சாலைகள் பராமரிக்கப்பட நடவடிக்கையெடுக்கப்படும்.

பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டம்.

*870— திரு. வி. கே. சின்னசாமி :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ;

(அ) பரம்பிக்குளம், ஆளியாறு நீர்ப்பாசனத் திட்டத்தில் பெரியார் மாவட்டம் புஞ்சை புளியம்பட்டி மற்றும் நம்பியூர் வறட்சிப் பகுதிகளை சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

(ஆ) அவைகள் கடந்த பல ஆண்டுகளாக செப்பனிடப் படாமல் இருப்பது அரசின் கவனத்திற்கு கொண்டு வரப்பட் டுள்ளதா?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) தென்னாற்காடு மாவட்டத்தில் கரும்பு சாலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் உள்ள சாலைகள் 70.

(ஆ) இவற்றுள் 62 சாலைகள் தனியார் சர்க்கரை ஆலைப் பகுதியில் அமைந்துள்ளன. இவ்வாலைகள் அரசுக்குக் கரும்பு மேல்வரிப் பணம் செலுத்த மறுத்து அரசுக்கு எதிராக வழக்கு தொடுத்துள்ளதால் அரசின் ஆணையின்படி கடந்த 3 ஆண்டுகளாக இவ்வாலைப் பகுதியில் உள்ள சாலைகள் பராமரிக்கப்படவில்லை. மற்ற 8 சாலைகளும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. சி. கோவிந்தராஜன் : பேரவைத் தலைவரவர்களே, கரும்பு செஸ்ஸைக் கட்ட மறுத்து உயர்நீதிமன்றத்தில் ஆலை அதிபர்கள் தடை உத்தரவு பெற்றிருக்கிறார்கள். அது எந்த நேரத்தில் பெற்றது? கிட்டத்தட்ட பத்தாண்டுக் காலத்திற்கு முன்னால் பெற்ற அந்தத் தடை உத்தரவை நீக்க முந்தைய அரசும் நடவடிக்கையை எடுக்கவில்லை; இந்த அரசும் எடுக்க வில்லை. ஏராளமான சட்ட நிபுணர்கள், அட்வகேட்- ஜெனரல்களையெல்லாம் வைத்துக் கொண்டு, அந்தத் தடை உத்தரவை ரத்து செய்வதற்கான நடவடிக்கையை எடுப் பதற்கு அரசு ஏன் முன்வரவில்லை? அதனால் இந்த 62 சாலை களில் விவசாயிகள் வண்டியில் கரும்பை ஏற்றி வருவதற்கும் கஷ்டப்படுகிறார்கள். வெட்டிய கரும்பை எடுத்து வருவதற்கும் கஷ்டப்படுகிறார்கள். இச்சாலைகளில் பஸ் போக்குவரத்தும் நடந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்தச் சாலைகளை ரிப்பேர் செய்வதற்கு உடனே அந்தத் தடையை ரத்து செய்வதற்கு நட வடிக்கையை எடுக்கவும், அது முடியாவிட்டால் ஏதாவது வேறு நிதியிலிருந்தாவது இந்தச் சாலைகளைப் பராமரிக்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

9.45 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்பு மிகு தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் ஆலை அதிபர்களை அழைத்து இதுபற்றி பேசியிருக்கிறார்கள். மேலும் இந்த வழக்குகள் விரைவாக முடிக்கப்பட வேண்டு மென்று அரசு வழக்கறிஞர்களிடம் எடுத்துச் சொல்லப்பட்டு விரைவில் இந்த வழக்குகள் முடிவு பெறும் என்ற நம்பிக்கை யும் அரசுக்கு இருக்கிறது.



மாண்புமிகு பேரவைத் தலைவர் : தொடர்புடைய வினா வாகக் கேட்க வேண்டும்.

9–50 மணி

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, நதி களை எல்லாம் தேசியமயமாக்குகிற திட்டத்திற்கு மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் முன்னோடியாக நின்று மத்திய அரசை வற்புறுத்துவாரா என்று அறிய விரும்புகிறேன். அடுத்து நான் பணிவோடு தெரிவித்துக் கொள்வது, கடுமை யான வறட்சி அங்கே இருக்கிறது. லட்சக் கணக்கான விவ சாயிகள் குடிபெயர்ந்து வெளியே போகிற சூழ்நிலை அங்கே உருவாகிக் கொண்டிருக்கிறது. ஆகவே முதலமைச்சர் அவர்கள் இங்கே இருக்கின்ற காரணத்தால், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருவார்களானால், அந்த ஏரியாக்களுக்கு அவர்களை அழைத் துச் சென்று காட்டுவதற்கும், உடன் இருந்து பணியாற்று வதற்கும் நான் கடமைப்பட்டு இருக்கிறேன்....

9.50 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அமைச்சர் அவர்கள் வருவார்களா என்று கேட்கிறார்கள். சீக்கிரம் முடியுங் யுங்கள்.

திரு. வி. கே. சின்னசாமி : ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நேரடியாக வந்து ஆய்வு செய்யவேண்டும் என்று.....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகவே வருவதற்கு முயல்வார்களா என்று கேட்கிறார்கள். இன்றைக்கு, நேரத் திற்கு வறட்சி அதிகம் (சிரிப்பு).

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதிக்கு என்னை அழைத்தால், நான் நிச்சய மாக வருவேன்.

பாலம் கட்டுதல்.

*3142—திரு. செ. இராமலிங்கம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர் ஒன்றியம் திருபுவனம் பேரூராட்சி, திருவிசநல்லூர் ஊராட்சிகளை இணைத்து காவிரி, வீரசோழன் ஆறுகளில் பாலம் கட்டு பகுதி இரண்டு திட்டத்தில் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டி முடிக்கப்படும்?

1990 சனவரி 25]

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்று பதில் சொல்லியிருக்கிறார்கள். இன்றைக்கு பெரியார் மாவட்டத்தில் இந்தப் பரம்பிக்குளம்—ஆளியாறு திட்டத்தில் எத்தனை லட்சம் ஏக்கர் நிலங்கள் பயன்பெறுகின்றன ? அவை எந்தெந்த பகுதிகளில் இருக்கின்றன என்பதை நான் பணிவோடு தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அடுத்து, நம்பியூர், புஞ்சை புளியம்பட்டி என்பது இரண்டு தாலுக்காக்களை இணைக்கிற பகுதி. இங்கே கடுமையான வறட்சி காரணமாக விவசாயிகள் ஆடுமாடுகளைக் கூட வைத்துக்கொள்ள முடியாமல், கிணறுகளில் தண்ணீர் இல்லாமல், அந்தப் பகுதி வறட்சியின் பிடியில் சிக்கித் தவித்துக் கொண்டிருக்கின்றது. ஆகவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து மேற்கு நோக்கி ஓடி கடலில் வீணாகக் கலக்கிற நதிகளைத் திருப்பி விடுகிற முயற்சியிலே ஈடுபட்டு, அந்தப் பகுதிகளை இணைப்பதற்கான முயற்சியினை மேற்கொள்வாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, புஞ்சை புளியம்பட்டி, நம்பியூர் என்பவை பரம்பிக்குளம் ஆளியாறு பாசனத் திட்டத்திலிருந்து வெகு தொலைவில் இருக்கின்றன. சுமார் 30 மைல்களுக்கு அப்பால் இருக்கின்றன. Technically and geographically it is an impossible one. இரண்டாவது, ஏற்கனவே இருக்கிற ஆயக்கட்டுகளில் கிட்டத்தட்ட 2 லட்சத்து 50 ஆயிரத்து 656 ஏக்கர் நிலம் இன்றைக்குப் பாசனத்திலே இருக்கிறது. மேலும் ஒரு லட்சத்து 75 ஆயிரம் ஏக்கரை நான்காவது ஜோனில் சேர்க்க வேண்டியவர்களாக இருக்கிறோம். இருக்கும் மூன்றாவது ஜோனுக்கே தண்ணீர் கொடுப்பதில் தட்டுப்பாடு இருக்கிறது. நான்காவது ஜோனை எடுக்க வேண்டும். காரணம் கால்வாய்களை வெட்டி இருக்கிறோம். ஆகவே இதற்கு மேற்கொண்டு புஞ்சை புளியம்பட்டிக்கும், நம்பியூருக்கும் போவது இன்றைய நிலையில் இல்லை. வேண்டுமானால் மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல மேற்கு நோக்கி பாயும் ஆறுகள் எல்லாம் கிழக்கு நோக்கி ஓடிவந்து நம் ஊரில் தேங்கி நிற்கும் காலத்தில் நிச்சயமாக புஞ்சை புளியம்பட்டி, நம்பியூர் கவனிக்கப்படும் என்று நானும் பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வி. கே. சின்னசாமி : தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருப்பதை மனதில் கொண்டு, தேசிய முன்னணி அரசில் மத்தியில் அங்கம் வகிக்கிற நீங்கள.... '.....



1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இந்தச் சாலையினுடைய முக்கியத்துவத்தை உணர்ந்து அதை ஒரு வழிப் பாதையாக, ஒன் லைன் மட்டும், டபுள் லைனுக்கு வந்திருக்கிறது—ஒன் லைன் சாலையாகப் போடுவதற்கு அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. ஆய்வு அறிக்கை கிடைத்த பிறகு அது குறித்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தை ஒட்டியிருக்கின்ற அந்தப் பகுதிக்கு சுற்று வழிச் சாலை அமைக்கின்ற அந்தத் திட்டத்தில் இந்த வேலையும் இடம் பெற்றிருக்கிறது. தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகின்ற 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை வருகின்ற மகாமகம் திருவிழாவையொட்டி, இந்தச் சுற்றுச் சாலை அமைக்கப்பட இருக்கிறது. எனவே 1990—91 ஆம் நிதி ஆண்டுக்குள் இந்தப் பாலத்தைக் கட்ட அரசு ஆணையிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, முதலில் ஆய்வு அறிக்கை வரட்டும், பிறகு எந்த ஆண்டு எடுத்துக்கொள்வது என்பதைப் பற்றி அதனுடைய நிலைக்கு ஏற்ப அரசு பரிசீலிக்கும்.

திரு. செ. இராமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே இது பேருந்து வழித்தடமாக அமைய உள்ள பாலம். எனவே சிங்கில் லைன் என்பதை டபுள் லைனாக மாற்ற அமைச்சர் அவர்கள் ஆணையிடுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, அதுவும் ஆய்வு அறிக்கை வந்தபிறகு கவனிக்கப்படும்.

### மேட்டூர் இடது, வலது கரை கால்வாய் தண்ணீரை பாசனத்திற்கு விடுதல்

*3254 திரு. க. பழனிசுவாமி :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

மேட்டூர் இடது, வலது கரை கால்வாய் தண்ணீரை நிரந்தரமாக பாசனத்திற்கு விடுவதற்கு அரசு ஆவன செய்யுமா?

[1990 சனவரி 25

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,
மேட்டூர் இடது, வலது கரைக்கால்வாய்களுக்கு, மேட்டூர்
நீர்த் தேக்கத்தில் இருக்கும் நீர் இருப்பிற்கு ஏற்ப, பாசனத்
திற்காக நிரந்தரமாக தண்ணீர் விடப்பட்டு வருகிறது.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மேட்டூர் இடது, வலது கரைக் கால்வாய்ப் பாச
னத்திற்கு உட்பட்டு சேலம் மாவட்டத்தில் சுமார் 24 ஆயிரம்
ஏக்கர் நிலமும் பெரியார் மாவட்டத்தில் 18 ஆயிரம் ஏக்கர்
நிலமும் பாசனம் பெறுகிறது. ஒவ்வொரு ஆண்டும் முதலமைச்
சரிடத்திலும், பொதுப்பணித் துறை அமைச்சரிடத்திலும், மா
வட்ட ஆட்சித் தலைவரிடத்திலும் கோரிக்கை மனு அனுப்பப்
பட்ட பிறகுதான் பாசனத்திற்குத் தண்ணீர் விடுகிறார்கள்.
இந்தநிலையை மாற்றி, உரிய நேரத்தில் ஒவ்வொரு ஆண்டும்
பாசனத்திற்குத் தண்ணீர் திறக்க அரசு முன்வருமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,
காவிரியில் தண்ணீர் தட்டுப்பாடு இன்றி வந்த நேரத்தில்
தஞ்சை காவிரி டெல்டா பகுதிக்கு ஜூன் மாதம் 12 ஆம்
தேதி மேட்டூரிலிருந்து தண்ணீர் திறப்போம். ஜூன் மாதம்
12 ஆம் தேதி காவிரி டெல்டாவிற்குத் தண்ணீர் திறந்த
பிறகு, சுமார் 50 நாட்களுக்குப் பிறகு, இந்தக் கால்வாய்
களுக்குத் தண்ணீர் விடுவது வழக்கம். அதுதான் சட்டம்.
ஆனால் இப்போது காவிரிக்குத் தண்ணீர் வரத்துக் குறைந்து
போய் விட்டது, கர்நாடக அரசு பல அணைகளைக் கட்டிய
காரணத்தால். ஆணையிலே குறிப்பிட்டபடி ஜூன் மாதம்
12 ஆம் தேதி காவிரி டெல்டாவிற்கே தண்ணீரை திறக்க
முடியவில்லை. இதற்கே கொஞ்சநாள் கழித்துத்தான் திறக்
கிறோம். அப்படித் திறக்கிறபோது, இந்தக் கால்வாய்களுக்குத்
தண்ணீர் விடுவது கூட சில நேரங்களில் தள்ளிப் போய்விடு
கிறதே தவிர, தண்ணீர் விடாமல் இல்லை. 1975 ஆம் ஆண்டு
முதல் 1989–90 வரையில் பார்த்தால், நான்கே நான்கு ஆண்டு
களிலேதான் தண்ணீர் விட முடியாத சூழ்நிலை உருவாகி
யிருக்கிறது. அப்போது காவிரியிலே தண்ணீர் இல்லை.
மற்றபடி நிரந்தரப் பாசனத்திற்கு, கிட்டத்தட்ட பெரியார்
மற்றும் சேலம் மாவட்டங்களிலே 45 ஆயிரம் ஏக்கர் பாய்
கிற அளவிற்குத் தண்ணீரை விட்டுக்கொண்டு இருச்
கிறோம்.

திரு. க. பழனிசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, அணைகளில் தண்ணீர் இருந்தும்கூட, காவிரி
ஆற்றிலே தஞ்சைக்குத் தண்ணீர் விடுகிறார்கள். ஆனால்
சேலம் மாவட்டத்திலே அணையிருந்தும், சேலம் மாவட்டத்
திற்கு உட்பட்ட இடது, வலது கரைப் பகுதிகளில் தண்ணீர்



1990 சனவரி 25]

திறந்துவிடுவதில்லை. இதைக் கருத்தில் கொண்டு, வருகின்ற
நடப்பு ஆண்டிலேயாவது அங்கே உரிய காலத்திலே பயிர்
நடவு செய்வதற்கு தண்ணீர் திறந்து விடப்படுமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,
தண்ணீரை வைத்துக் கொண்டு யாரும் திறக்காமல் இருக்க
மாட்டார்கள். அதிலே சில சட்ட திட்டங்கள் உண்டு.
இருந்தாலும் விவசாயிகள் வாடுகிற அளவிற்கு இந்த அரசு
விட்டுவிடாது.

## பைத்தூர் இராமத்தில் ஏரி கட்டுதல்

*3536—திரு. ஏ. எம். இராமசாமி ;

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட
வினாவுக்கு விடையளிப்பாரா :

சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டத்தில் பைத்தூர்
கிராமத்தில் புதிய பெரிய ஏரி கட்டுவதற்கு 1976 ஆம் ஆண்டி
லிருந்தே ஆய்வில் இருந்து வந்த செயற்குறிப்பு எந்த நிலை
யில் உள்ளது?

(9–55 மணி)

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,
இத்திட்டம் குறித்த முதல் நிலை அறிக்கை தலைமைப் பொறி
யாளர் (ஆய்வு) அவர்களுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.
அந்த அறிக்கை வந்தபிறகு இது குறித்து நடவடிக்கை
எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் ஆத்தூர் வட்டத்
தில் பைத்தூர் கிராமத்தில் புதியதாக இந்த ஏரியைக்
கட்டுவதினால் கிட்டத்தட்ட ஆயிரக்கணக்கான ஏக்கருக்கு
விவசாயிகள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு நல்ல வசதியாக
இருக்கும். அதுமட்டுமல்லாமல் அப்பகுதியிலே உள்ள கிணற்றை
நம்பி வாழ்கின்ற விவசாயிகள் நிறைய இருக்கிறார்
கள். அவர்களுக்குக் கிணற்றுத் தண்ணீர் வருவதற்கும் வசதி
யாக இருக்கும். இதை மனதில்கொண்டு வருகின்ற நடப்
பாண்டில் இந்த ஏரியைக் கட்டிக் கொடுக்க வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் ; தலைவர் அவர்களே,
அதைத்தான் நான் சொன்னேன். ஒரு ஆய்வு அறிக்கை

அரசினுடைய பரிசீலனையில் இருக்கிறது. அது வந்ததற்குப் பிறகு இறுதி முடிவு எடுக்கப்படும்.

திரு. ஏ. எம். இராமசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருகின்ற நடப்பாண்டில் அதைக் கட்டித் தரவேண்டுமென்று மீண்டும் அவரை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன்.

(விடை இல்லை).

மறுவாழ்வு இல்லங்கள்.

*2651—திரு. வீ. தமிழ்மணி:—

மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ;

தமிழ்நாட்டில் உள்ள உடல் ஊனமுற்றவர், பார்வையற்றவர்கள், மனநோயாளிகளுக்குத் தனித்தனியாக மறுவாழ்வு இல்லங்கள் அமைத்து ஆதரவளிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே :

தற்போது அரசின் பரிசீலனையில் அப்படிப்பட்ட செயற்குறிப்பு எதுவும் இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊனமுற்றோர், பார்வையற்றோர், மனநோயாளிகளுக்கு ஆங்காங்கே இருக்கின்ற சத்துணவு மையங்களிலாவது மதிய உணவு வழங்கப்படுமா என நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக நிலையங்கள் உருவாக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை என்று நான் சொன்னேன். ஏற்கெனவே பார்வையற்றவர்கள், காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியவர்களைப் பராமரிக்கின்ற வகையில், அவர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்குகின்ற பயிற்சி நிலையங்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த நிலையங்களில் பார்வையற்ற பெண்கள், பார்வையற்ற ஆடவர்கள், உடல் ஊனமுற்ற ஆடவர்கள் போன்றவர்கள் 6 மாதம் முதல் ஓராண்டு வரை தங்கி சிறிய தொழில் பயிற்சியினைப் பெற்று அதன்மூலம் வேலை வாய்ப்பைப் பெறு



கிறார்கள். இது தவிர 5 இடங்களில் ஆதரவற்ற பெண்களைத் தொடர்ந்து பராமரிக்கக் கூடிய மகளிர் காப்பகங்களும் தமிழ்நாட்டில் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே அவர்களுக்கு எல்லாம் சத்துணவுக் கூடங்களில் ஆதரவு தரவேண்டிய அவசியம் தற்போது இல்லை.

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதியதாக ஆரம்பிக்கவில்லையானாலும் ஆங்காங்கே இருக்கின்ற இப்படிப்பட்டவர்களுக்கு எல்லாம் அரசு வழங்குகின்ற உதவித் தொகைக்கு சில விதிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. அந்த விதிகளையெல்லாம் தளர்த்தி அவர்களுக்கு வயது வரம்பு என்று பார்க்காமல் உதவித் தொகை வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : தலைவர் அவர்களே, சில விதிகளுக்கு உட்பட்டு அரசினுடைய உதவித் தொகை வழங்கப்படுமேயானால்தான் யாருக்கு அந்த உதவித் தொகை போய்ச் சேர வேண்டுமோ, அவர்களை அந்த உதவித் தொகை சென்று அடையும். விதிகளே இல்லாமல் வழங்குவது என்றால் முழுவதுமாக உடல் ஊனமுற்றவர்கள் அல்லாதவர்கள்கூட, சிறு ஊனமுற்றவர்கள்கூட, இந்த உதவித் தொகையைப் பெறுவதில் போட்டியிடுவதன் காரணமாக உண்மையிலேயே யாருக்கு அரசினுடைய உதவி தேவையோ, அவர்களைப் போய்ச் சேராது என்ற காரணத்தினால்தான், சில விதிகளை வகுத்து, அந்த விதிமுறைகளுக்கு உட்பட்டவர்களுக்கு அரசு உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவள்ளூர் தொகுதியில் தொழில் தொடங்குதல்

*3127—திரு. எஸ். ஆர். முனிரத்தினம் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவள்ளூர் தொகுதியில் கூட்டுறவுத் துறை மூலம் தொழில் தொடங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : : தலைவர் அவர்களே, ஆம். அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படி அரசின் பரிசீலனையில் உள்ள தொழில்

[1990 சனவரி 25

சாலையை அமைக்கக் கூடிய அந்தத் திட்டம் எத்தனை கோடி யில் அமைக்கப்பட இருக்கிறது என்பதை அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன் : தலைவர் அவர்களே, இது கோடிக் கணக்கில் அல்ல. திருவள்ளூர் தொகுதி கீழ்நாத்தூர் கிராமத்தில் செங்கல் சூளை அமைப் பதற்கான சாத்தியக் கூறு உண்டா என்பதைப் பற்றி ஆராய்ந்து அந்தப் பகுதியிலுள்ள மண் பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு— அங்கே ஒரு செங்கல் சேம்பர்—நவீன முறையில் செங்கற்களைத் தயாரிக்கின்ற ஒரு தொழிற்சாலை அமைப்பதற்கான வாய்ப்பு உள்ளது எனக் கருதி அதுபற்றிய ஒரு குறிப்பு அரசின் பரிசீலனை யில் உள்ளது. இது அரசின் சார்பாக ஆரம்பிக்கப்படாமல் அந்தப் பகுதியிலே உள்ள ஆதிதிராவிடர்கள் 100 பேர்களைக் கொண்ட ஒரு கூட்டுறவுச் சங்கமாக அமைத்து அந்த சங்கத்தின் மூலமாக அந்தத் தொழிற்சாலை இயங்குவதற்கான வாய்ப்புகள் ஏற்படுத்தித் தரப்படும்.

10.00 மணி

திரு. எஸ். ஆர். முனிரத்தினம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கல் சூளை அமைக்க நல்ல முறை யில் மண் பரிசோதனை செய்து, 100 பேருக்கு வாய்ப்பு அளிக் கக் கூடிய அந்த தொழிற் சாலையை அமைக்கக் கூடிய செயற் குறிப்பு அரசிடம் இருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி.....................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் ஒப்பு தலோடு வினா நேரம் நீட்டிக்கப்படுகிறது. திரு. முனிரத்தினம் அவர்கள் நன்றி தெரிவித்துவிட்டார்கள். அடுத்த வினா.

மந்தியூர் கிராமத்தில் ஆதிதிராவிட நலத்துறை மூலம் தொடக்கப்பள்ளி

*823—திரு. கே. ரவி அருணன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம் மந்தியூர் கிராமத்தில் ஆதி திராவிடர் நலத்துறையின் மூலம் தொடக்கப்பள்ளி துவங்க அரசு நட வடிக்கை எடுக்குமா?



1990 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

திருநெல்வேலி-கட்டபொம்மன் மாவட்டம், கடையம் ஊராட்சி ஒன்றியம் மந்தியூர் கிராமத்தில் ஆதிதிராவிடர் நலத் துறை மூலம் தொடக்கப்பள்ளி துவங்குவதற்கான செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பழங்குடி மக்களாக அறிவித்தல்.

*3546—திரு. ந. நஞ்சப்பன் :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர், கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

தருமபுரி மாவட்டத்தில் குரும்ப, குருப, குரும்மஸ், குரும்பன்கள், குரும்பர்கள் என்று பலவிதமாக அழைக்கப்படும் மக்களை பழங்குடி மக்களாக அரசு அறிவிப்பு செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,

தமிழகத்தில் உள்ள குருமா, குரும்பர், குரும்பன்கள், குரும்பார்கள், இனத்தவர்களை பழங்குடியினர் பட்டியலில் சேர்ப்பது மத்திய அரசின் ஆய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ந. நஞ்சப்பன் : பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரியில் உள்ள குரும்பன், குரும்பாஸ் என்ற மக்கள் ஓரே வகையைச் சேர்ந்தவர்கள், வட ஆற்காடு, பெரியார் போன்ற மாவட்டங்களில் பழங்குடிகளாக அங்கீகரிக்கப்பட்ட மக்கள், தர்மபுரி மாவட்டத்தில் மட்டும் இன்னும் அங்கீகரிக்கப்பட வில்லை. அதில் குரும்பர்கள, குரும்பாஸ் என்ற எழுத்தை தமி ழில் எழுதினால் பிற்பட்டவர்களாகவும் ஆங்கிலத்தில் குறித்தால் பழங்குடி மக்களாகவும் அங்கீகரிக்கப்படுகின்ற நிலையை மாற்றி, இரண்டு விதமாக எழுதினாலும் பழங்குடி மக்களாக அறிவிக்கப் படுகின்ற நிலையை அரசு கொண்டு வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனை செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆலங்குளம் அரசு மருத்துவ மனை

*2265—திரு. எஸ். எஸ். ராமசுப்பு :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) ஆலங்குளத்தில் உள்ள அரசு மருத்துவ மனையில் அறுவை சிகிச்சை செய்வதற்குரிய கருவிகளும், மருத்துவரும் இல்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், இந்நிலையை மாற்ற நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :

(அ) மேல்நிலைப்படுத்தப்பட்டுள்ள ஆலங்குளம் ஆரம்பச் சுகாதார நிலையத்தில் அறுவை சிகிச்சை செய்வதற்குரிய மருத்துவர்கள் உள்ளனர். மேலும் அறுவை சிகிச்சை செய்வதற்கான கருவிகளும் அங்கே இருக்கின்றன.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளம் மற்றும் அதன் அருகாமையில் உள்ள கிராம மக்கள் ஆலங்குளம் பொது மருத்துவ மனைக்கு வந்து சிகிச்சைப் பெறுகிறார்கள். அங்கே எக்ஸ்ரே போன்ற கருவிகள் இல்லை. நவீன அறுவை சிகிச்சை கருவிகளும் இல்லை. மருத்துவத்திற்கு வருகின்ற, பிரசவத்திற்கு வருகின்ற தாய்மார்களை கூட, அங்கே சிகிச்சை முறைகள் இல்லாத காரணத்தால் அவசர அவசரமாக பாளையங்கோட்டைக்கு எடுத்துச் செல்லுகின்ற ஒரு இக்கட்டான நிலை ஏற்படுகிறது, ஆதலால் அதைத் தவிர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கே அப்-கிரேடட் பிரைமரி ஹெல்த் சென்டர் என்ற அடிப்படையில் மேம்படுத்தப்பட்ட சுகாதார நிலையம் இருக்கிறது. அங்கே இருக்கிற அறுவை சிகிச்சை நிலையத்தில் 1989 ஆம் ஆண்டு ஆகஸ்டு வரை 62 அறுவை சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன. எக்ஸ்ரே போன்ற கருவிகள் அந்த இடத்திற்கு வேண்டுமென்று மக்கள் விரும்பினால், அது குறித்து அடுத்த நிதியாண்டில் பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல அரசு மருத்துவமனைகளில் உள்ள காஸ்ட்லி மெடிசன்களையெல்லாம் அங்குள்ள பொறுப்பு,





மருத்துவர்களால் எடுத்துச் செல்லப்பட்டு தனியாக மருத்துவத் தொழில் நடத்தி பணம் சம்பாதிப்பதும், அரசு திட்டங்களான குடும்பநலத் திட்டம், கருவுற்ற மகளிர்களுக்கு உதவி அளிப்பது போன்றவற்றில் முறைகேடுகள் நடப்பதும் அரசு அறியுமா ? அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா என்று கேட்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இதுபோன்ற குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் இருக்குமேயானால் நிச்சயம் இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திண்டுக்கல் நகராட்சிக்கு ஜெனரேட்டர்.

* 3207—திரு. எஸ். ஏ. தங்கராஜன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திண்டுக்கல் காமராஜ் நீர்த்தேக்கத்தில் வேண்டிய தண்ணீர் இருந்தும் மின்தட்டுப்பாட்டில் நீர் விநியோகம் செய்ய முடியாததால், ஜெனரேட்டர் ஒன்று நகராட்சி வாங்கிக் கொள்ள அரசைக் கேட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) காமராஜ் சாகர் தலைமை நீரேற்று நிலையத்தில் அடிக்கடி மின்சக்தி தடைபடுவதால் நீர்த்தேக்கத்தில் போதிய அளவு தண்ணீர் இருந்தும் நகரின் குடிநீர் விநியோகத்திற்கென பாதி அளவுகூட நீர் கொடுக்க முடியாத சூழ்நிலை அங்கே இருக்கிறது. 200 கே.வி. திறன் உள்ள ஒரு டீசல் ஜெனரேட்டரை வாங்கி அமைக்க, அதற்காக 3 லட்சம் ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எஸ். ஏ. தங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் அறிவிப்புக்கு நன்றி. மேலும் அந்த அணையில் போதிய நீர் பிடிப்பு ஏற்படாத அளவுக்கு ஷட்டருடைய கயிறு அறுந்து இருப்பதனால், ஷட்டர் மூடப்பட்டிருக்கிறது. ஸ்டீல் கயிறு அறுந்து இருப்பதால் அதை மராமத்து செய்து நீரைத் தேக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

[1990 சனவரி 25

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலிக்கும்.

குடிசைப் பகுதி மக்கட்கு வீடுகள் கட்ட பொதுப்பணித் துறையின் இடம் வழங்குதல்.

குறுகியகால வினா—*7960—திருமதி எஸ். பி. சற்குணம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில், திலகர் நகர் குடிசைப் பகுதி மக்கட்கு வீடுகள் கட்டும் திட்டத்திற்கு பொதுப்பணித்துறையின் இடம் வழங்கப்பட வேண்டுகோள் குடிசைப் பகுதி மாற்று வாரியம் மூலம் வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) மேற்படி நிலம் சர்வே எண். 3912/1 தமிழ்நாடு பொதுப்பணி பண்டகசாலை மற்றும் பட்டறையில் பணியாற்றும் ஊழியர்கள் குடியிருப்பை ஒட்டியுள்ளது. இந்நிலம் மேற்படி ஊழியர்களின் எதிர்கால குடியிருப்பு விரிவமைப்பிற்குத் தேவைப் படுகிறது. எனவே, குடிசைப்பகுதி மாற்று வாரியத்திற்கு இந்நிலத் தினை தருவதற்கு இயலாத நிலை உள்ளது.

10-05 மணி

திருமதி எஸ். பி. சற்குணம் : பேரவைத் தலைவர் அவர்களே, பல ஆண்டுக் காலமாக காலியாக பொதுப்பணித்துறைக்கு உரிய இரண்டு இடங்கள் அங்கு இருக்கின்றன. அதையொட்டிய திலகர் நகரப் பகுதியில் 300-க்கும் அதிகமான குடிசைவாழ் மக்கள் மிக நெருக்கடியான நிலையில் வாழ்ந்துகொண்டிருக் கிறார்கள். அவர்களுக்கு இரண்டு இடத்தில் ஒரு இடத்தையாவது பொதுப்பணித் துறை மூலமாக வழங்கினால் அவர்கள் மறு வாழ்வு பெறுவதற்கு இயலும். ஏற்கனவே, குடிசை மாற்று வாரிய அமைச்சராக இருக்கிற மாண்புமிகு தங்கவேலு அவர்கள் அந்தப் பகுதியைப் பார்வையிட்டு அவர்களுக்கு மறு இடம் தருவதாகக் கூறியிருக்கிறார்கள். எனவே, பொதுப்பணித் துறை அமைச்சர் தமிழக அரசின் மூலமாக ஒரு இடத்தையாவது வழங்குவதற்கு முன்வருவார்களா என்று கேட்க விரும்புகிறேன்.



1990 சனவரி 25]

மாண்புமிகு திரு. துரைமுருகன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வை நான் உணர்கிறேன். இந்த பண்டகசாலை, ஊழியர் குடியிருப்பு இவை இரண்டும் விரிவாக்குவதற்கு எவ்வளவு தேவைப்படும் என்பதை நான் விரை வில் அதிகாரிகளோடு கலந்து பேசி மீதி இருக்கிற இடத்தைத் தருவதற்கு முயற்சி எடுத்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். பி. சற்குணம் : தலைவர் அவர்களே, நன்றி.

சுவாமி ஸ்ரீசகஜானந்தா நூற்றாண்டு விழா.

குறுகியகால வினா—*7967—திரு. இளம்வழுதி :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நந்தனார் கல்விக் கழகங்களின் ஸ்தாபகரும், இறுதி வரை தாழ்த்தப்பட்ட மக்களுக்காக பாடுபட்டு மறைந்தவருமான சுவாமி ஸ்ரீசகஜானந்தா அவர்களின் நூற்றாண்டு விழாவை அரசு தரப்பில் நடத்துகின்ற ஏற்பாடு நடந்துகொண்டிருக்கிறதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினா எழ இடமில்லை.

திரு. இளம்வழுதி : தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட சமுதாயத்தின் காவல் தெய்வமாக விளங்கிக் கொண்டிருக்கின்ற நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே முதல மைச்சராக இருந்தபோது மறைந்த பெரியவர் பாபு ஜகஜீவன்ராம் அவர்களை அழைத்து வந்து சுவாமி சகஜானந்தா அவர்களுடைய சிலையைத் திறந்து வைத்தார்கள். அதை நன்றி யோடு நினைவுகூர்கின்ற நான் மற்றத் தலைவர்களுக்கு விழா எடுப்பதைப் போல இந்தத் தலைவருக்கும் அரசின் தரப்பில் விழா எடுக்க வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை வைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர் விடையை எதிர்பார்க்கவில்லை.

[1990 சனவரி 25

## நெல்லிக்குப்பம் ஈ. ஐ. டி. பாரி நிறுவன தொழிலாளர்களின் கோரிக்கை

குறுகியகால வினா *8017—திரு. சி. கோவிந்தராஜன் :

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நெல்லிக்குப்பம், ஈ.ஐ.டி. பாரி நிறுவனத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள், தொழிற்சங்க அங்கீகாரம், தொழிலாளர் ஆணையரின் பரிந்துரைகளை அமுல்படுத்துதல், ஊதிய உயர்வு மற்றும் கோரிக்கைகளை வலியுறுத்தி 21—1—1990 முதல் உண்ணாவிரதம் இருந்துவருவது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அவர்களுடைய கோரிக்கைகளை தீர்த்து உண்ணாவிரதத்தை முடிக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே,
(அ) மற்றும் (ஆ) : தொழிலாளர்களின் கோரிக்கைகள் குறித்து தொழிலாளர் அலுவலர் பேச்சு வார்த்தைகள் நடத்தி வருகிறார்.

திரு. சி. கோவிந்தராஜன் : தலைவர் அவர்களே, இந்த ஈ.ஐ.டி. பாரி தொழிற்சாலை பழைய தொழிற்சாலை. டி.ஐ. சைக்கிள் குரூப் நிறுவனம் அதை மேற்கொண்டதிலிருந்து அங்கு தொழில் உறவு சரியில்லை. இந்த அரசு ஏற்பட்டவுடன் கொள்கை குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. தொழி லாளர்கள் முதலாளிகளுக்குள் ஏற்படக்கூடிய ஒப்பந்தம், அவார்ட்ஸ், ஃபைண்டிங்ஸ் எதுவாக இருந்தாலும் கறாராக இந்த அரசு அமுல்படுத்தும் என்று கொள்கை குறிப்பிலேயே குறிப்பிடப் பட்டிருக்கிறது. உண்ணாவிரதம் 3 கோரிக்கைகளை வைத்து நடைபெறுகிறது. அவற்றில் ஒன்று ராஜா சுப்பிரமணியத்தி னுடைய அவார்டை நிறைவேற்ற வேண்டும் என்பது. அது ஒரு கோரிக்கை. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2, 3 நாட்களுக்கு முன்னால் சொன்னார். ஆட்சி மாறினாலும், அதிகாரம் மாறினாலும், சில அதிகாரிகளுடைய உணர்வுகள் மாறவில்லை என்று, அப்படிப்பட்ட ஒரு சில அதிகாரிகள் தொழி லாளர் நல டூலாகாவிலும் இருக்கிறார்கள். அதையும் கருத்தில் கொண்டு இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : தலைவர் அவர்களே, மேனேஜ்மெண்டுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையே கடந்த



1990 சனவரி 25]

4, 5 வருஷ காலமாக பல்வேறு வழக்குகள் போடப்பட்டு திரும்பி உச்ச நீதிமன்றத்தில் கமிஷன்ஸ் ஆஃப் லேபர் அவர்களே இதைப்பார்த்து தீர்த்துக்கொள்ள வேண்டுமென்று உத்திரவிடப் பட்டு அப்படி உத்தரவிடப்பட்டதன் காரணமாக கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் ஒரு ஆணையை பிறப்பித்தார்கள். ஆனால், அந்த மேனேஜ்மெண்ட், அந்த ஆணை எங்களுக்குச் சரியாக இல்லை, எங்களைச் சரியாக விசாரிக்கவில்லை என்று சொல்லி அதை ஏற்க மறுத்துக் கொண்டிருக்கிறது. ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் மூன்று கோரிக்கைகளையும் நிறைவேற்று வதற்கு, குறிப்பாக தொழிலாளர்களுடைய கோரிக்கைகள், அதே போல உங்களுடைய சங்கத்தை அங்கீகரிக்கச் செய்தல் போன்ற மூன்று கோரிக்கைகளை, நீங்கள் வைத்திருக்கிற கோரிக்கைகளை இப்போது விசாரித்துக் கொண்டிருக்கிறார்கள். இதற்கு முடிவு ஏற்படும். இந்த அரசு எப்போதுமே தொழிலாளர் பக்கம் இருக் கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

10–10 மணி

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஏற்கெனவே இருந்த லேபர் கமிஷனர் ஒரு தீர்ப்பை அளித்துவிட்ட பிறகு அந்தத் தீர்ப்பை அமல்படுத்த வேண்டியதுதான் அரசினுடைய பொறுப்பே தவிர, அந்தத் தீர்ப் புக்கு அவர்கள் பதில் கொடுப்பது என்று சொன்னால்,—சுப்ரீம் கோர்ட் தீர்ப்பினுடைய அடிப்படையிலே கொடுத்திருக்கக்கூடிய தீர்ப்பு அது—முதலில் அந்தத் தீர்ப்பை அமுல்படுத்த வேண்டும். அதை அமுல்படுத்தாமல் அதற்கு மேலும், நிர்வாகத் தரப் பிலிருந்து வருவதை விசாரிப்பதில் அர்த்தமே கிடையாது. தொழில் கோர்ட் தீர்ப்பு கொடுக்கிறது என்று சொன்னால், அதற்கு மேல் அப்பீலுக்கு வேறு எங்காவது செல்ல வேண்டுமே தவிர, இதில்தான் அதிகாரிகள் தவறு செய்கிறார்கள் என்று நான் சுட்டிக்காட்டினேன். அந்தக் கோரிக்கை உள்பட 12 ஆண்டுக் காலமாக அவர்களுக்கு எந்தவிதமான ஊதிய உயர்வும் அளிக்கப் படவில்லை. தொழிற்சங்க அங்கீகாரமும் இல்லை. அதற் காக அவர்கள் கடந்த 21ஆம் தேதியிலிருந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள்.

திரு. சி. கோவிந்தராஜன் : நேற்றைய தினம் கூட மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் உண்ணாவிரதம் இருப்பதற்கு இந்த அரசு இடமளிக்காது என்று கூறினார்கள். நான் அதை எப்படி புரிந்துகொள்கிறேன் என்று சொன்னால், எந்தப்பகுதி மக்களும் தொழிலாளர் உட்பட அவர்கள் உண்ணாவிரதம் மேற்கொள்ளக் கூடிய அளவுக்கு நிலைமை இந்த அரசில் இருக்காது என்றும்

[1990 சனவரி 25

அதையெல்லாம் நாங்கள் தீர்த்து வைப்போம்என்றுதான் அவர்கள் அப்படிக் கூறினார்கள் என்று நான் கருதுகிறேன். எனவே, கடந்த 5, 6 நாட்களாக உண்ணாவிரதம் இருந்து வரக்கூடிய அந்தத் தொழிலாளர்களுடைய கோரிக்கைகளைத் தீர்த்து வைத்து உண்ணாவிரதத்தை முடித்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூரைச் சேர்ந்த லேபர் ஆபீசர் அவர்கள், பேச்சுவார்த்தையின்போதுகூட, தொழிலாளர்களை, நீங்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டியதில்லை, நாங்கள் விரைவாக அதைப் பேசித் தீர்த்து விடுகிறோம் என்று சொல்லியும், இன்றைக்கு ஜாயின்ட் கமிஷனர் ஆப் லேபர் அவர்கள் அதை ஆய்வு செய்து வருகின்ற நேரத்திலே அந்தத் தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் தெரிவித்தார்கள். நேற்றைய தினம், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியது போலவே தொழிலாளர்கள் உண்ணாவிரதம் இருக்கக்கூடிய நிலைமையை இந்த அரசு உருவாக்காது, அதை விரைவாக முடித்துத் தருவதற்கு இந்த அரசு ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதையே ஒரு கோரிக்கையாக ஏற்று அங்கே உண்ணாவிரதம் இருக்கின்ற தொழிலாளர்கள் உண்ணாவிரதத்தை முடித்துக்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ரமணி மாண்புமிகு தலைவர் அவர்களே, அரசு: தவறு செய்ததனால், அந்த உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது, எனக்குத் தெரிந்த வரையில். சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பை மீறி இருப்பது யார்? அந்த நெல்லிக்குப்பம் ஈ.ஐ.டி. பாரி கம்பெனி, அது ஒரு பெரும் முதலாளி கம்பெனி. அவர்களுக்கு இருக்கும்படியான ஆணவம், சுப்ரீம் கோர்ட்டினுடைய தீர்ப்பை உடைத்து இருக்கிறது. லேபர் கமிஷனர், அவர்கள்தான் ஹையஸ்ட் அபீசியல், செக்கரட்டரிக்கு அடுத்தபடியாக இருக்கக்கூடியவர், லேபர் கமிஷனர். அவரே இந்தத் தீர்ப்பை அமல் ஆக்குவதற்காக, ஆலோசனை கொடுத்து எழுத்து மூலமாக ரிப்போர்ட் கொடுத்திருக்கிறார். அதையும் தூக்கி எறிகிறார்கள். நீண்ட நெடுங்காலமாக அங்கீகரிக்கப் பட்ட சங்கத்தை கிட்டே வரவிடாமல், எந்தவிதமான காரண மும் இல்லாமல், சங்க அங்கீகாரத்தை அவர்கள் நாசமாக்கு கிறார்கள். இப்படிப்பட்டவர்கள் மீது அரசு நேரடியாக, சுப்ரீம் கோர்ட் தீர்ப்பை நிறைவேற்றாததற்காக, என்ன சட்டத்தின் கீழ் ப்ராசிகியூட் பண்ண முடியும் என்பதையும் அதன்மூலம், அவர்களே வந்து முதலமைச்சர் அவர்களிடத்திலோ அல்லது தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் இடத்திலோ பேசி செட்



1990 சனவரி 25]

டில் பண்ண வேண்டும். அந்த முறையிலே நீங்கள் நடவடிக்கை எடுப்பதற்கு முயற்சி எடுக்க வேண்டும். உண்ணாவிரதம் இருக்க இஷ்டப்பட்டு, உடம்பிலே சக்தி இல்லாதவன் கொழுப்பைக் கரைக்க உண்ணாவிரதத்தில் உட்கார மாட்டான். அவர்கள் உண்ணாவிரதம் இருக்க வேண்டிய நிர்ப்பந்தம் இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, இது குறித்து நடவடிக்கை எடுப்பீர்களா ? நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று, கோரிக்கை மட்டுமல்ல, அந்தத் தொழிலாளர்களுக்கு ஏதாவது செய்வீர்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

10—15 மணி

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில மதிப்பீடு மற்றும் அமல்படுத்தும் குழு, மேற்படி சங்கத்திற்கு அங்கீகாரம் கொடுக்கப்படவேண்டுமென்று நிர்வாகத்திற்குப் பரிந்துரை செய்துள்ளது. ஆனால் குழுவின் பரிந்துரைப்படி நிர்வாகம் அங்கீகாரம் அளிக்க மறுத்து விட்டது. அந்தக் குழுவிற்கு சட்டப்படியான அங்கீகாரம் இல்லை என்பதாலும், பரிந்துரையை அமுல்படுத்தாத பட்சத்தில் அந்தக் காரணத்திற்காக நிர்வாகத்தின் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்க இயலாது என்ற காரணத்தாலும் அந்தச் சங்கத்தை அங்கீகரிக்க எந்தச் சட்டத்தாலும் நிர்வாகத்தை ஆணையிட இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். நேற்று முன்தினம் மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவிந்தராஜன் அவர்கள் சொன்னதை, உடனடியாக லேபர் கமிஷனருக்குத் தெரிவித்து மறுபடியும் அவர்களை அழைத்துப் பேசவேண்டுமென்று சொல்லியிருக்கிறேன். விரைவாக அழைத்துப்பேசி ஒரு நல்ல தீர்வு காண்போம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள் - விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப் பெற்றிருந்தால், அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[1990 சனவரி 25

## 2. தகவல் கோரல்

**(அ) 23.1-1990 ஆம் நாளன்று உறுப்பினர் திரு. கே. அர்ஜுனன் அவையில் பேசிய ஒரு செதிய் குறித்து.**

திரு. இரா. மோகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் விதி 219-ன் கீழ் இந்த அவையில் நடை பெற்ற ஒரு பேச்சிலேயிருந்து ஒரு குறிப்பை சுட்டிக்காட்டி, நியாயம் கேட்க விரும்புகிறேன். நேற்றைக்கு முன் தினம், கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தில் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. அர்ச்சுனன் அவர்கள் இந்த அவை யில் உறுப்பினராக இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சென்னையிலிருந்து காரிலேயே ஐதரா பாத்துக்குச் சென்றதாகவும், அந்தக் காரைத் தொடர்ந்து தமிழ் நாடு ரகசிய போலீசார் இரண்டு கார்களில் பின்தொடர்ந்து 500 மைல்கள் சென்று ஐதராபாத் சென்றதாகக் கூறியிருக் கிறார். அந்தக் கார் நம்பர்களையும் சொல்லியிருக்கிறார். அவர் குறிப்பிட்ட அந்த நம்பர்கள் டி.டி.ஓ. 3448, டி.யூ.எல். 149. அதற்கு தமிழக முதல்வர் அவர்களுடைய பொறுப்பில் இருக்கிற போலீஸ் அதிகாரிகள் தவறான முறையில் அதிகாரத் தைப் பயன்படுத்தி இருப்பதாக இந்த மன்றத்தில் இருக்கக்கூடிய மாண்புமிகு உறுப்பினருடைய சுதந்திரத்தைப் பறிக்கிறது என்று பகிரங்கமாகக் குற்றஞ்சாட்டினார். நேற்றையதினம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் கவர்னர் உரைக்கு நன்றி தெரிவிக்கிற போது, அந்தக் கார் நம்பர் டி.டி.ஓ. 3448, காருக்குரியதல்ல, அது ஒரு டிராக்டரின் நம்பர். அது தஞ்சையில் இருக்கிற ஒரு வருக்குச் சொந்தமானது. (குறுக்கீடுகள்)..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மோகன் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். இது தொடர்பாகத் தாங்கள் எழுதியனுப்பியிருந்தால் அதற்கு உடனே விடை தரப்பட் டிருக்கும். முறைப்படி எழுதி முன்அறிவிப்புக் கொடுத்திருக்க வேண்டும். (குறுக்கீடுகள்). 219ஆவது விதியின்படி இதுபற்றி நீங்கள் முறையான அறிவிப்புக் கொடுத்தால் அதற்கு ஆவன செய்யப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, 219-வது விதியில் உங்களுக்கு அனுமதிக்கப்பட்டிருக்கிறபடி, அவையின் உரிமையை மீறுகிற நிலையில் இருக்கிற விதி. இந்த விதிக்கு ஒரு உறுப்பினர் அனுமதி வாங்கவேண்டுமானால், முதலில் தலை வருக்கு எழுதிக் கொடுத்து..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்தான் சொல்லி விட்டேனே, எழுதிக் கொடுத்து அனுமதி வாங்க வேண்டுமென்று சொல்லிவிட்டேன்.



1990 சனவரி 25]

திரு. எஸ். ஆர். இராதா : நான் உள்ளபடியே பாராட்டு கிறேன். ஆனால், ஒரு அடிப்படையான உண்மை என்னவென் றால், அவர் சொல்ல வேண்டிய கருத்தைச் சொல்லிவிட்டார். அதற்கு மறுப்பும் என்னிடம் இருக்கிறது. அப்படி மறுத்தால் அதையும் பதிவு செய்ய வேண்டும். நேற்று வரையிலும் கள்ளக் கடத்தல்காரர்களும் மற்றவர்களும்தான் நம்பர் பிளேட்டை மாற்றுவார்கள் என்று கேள்விப்பட்டிருக்கிறேன். இப்போது, போலீஸ் இலாகாவும் நம்பர் பிளேட்டை மாற்றி, கண்காணிக்கிற வேலையில் இறங்கியிருக்கிறார்கள்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, போலீஸ் இலாக்கா பற்றிப்பேசி, கள்ளக்கடத்தல்காரர்களோடு ஒப்பிட்டுச் சொன்ன வார்த்தைகளை வாபஸ் வாங்க வேண்டும்.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, இது உணர்ச்சி பூர்வமான பிரச்சினையாக ஆனாலும் பரவாயில்லை என்று சொல்கிறேன். ஆனால் முதல்வர் அவர்கள் வார்த்தை களைப் பிடித்துக் கொண்டு அதிலேயே நிற்கவேண்டுமென்று விரும்புகிறார். அந்த உணர்வோடு நான் சொல்லவில்லை. கள்ளக் கடத்தல்காரர்கள் நம்பர் பிளேட்டை மாற்றுகிறார்கள். திருடர்கள் மாற்றுகிறார்கள். ஆனால் இன்றைக்கு வந்திருக்கிற நிலைமை பற்றி, நேற்று பொதுக் கூட்டத்தில் லட்சக்கணக்கான மக்கள் மத்தியில் எங்கள் பொதுச் செயலாளர் ஜெயலலிதா அவர்கள் பகிரங்கமாக அறிவித்திருக்கிறார்கள். என்னைக் கண் காணிக்கிறார்கள், என் தனிப்பட்ட விஷயத்தில் குறுக்கிடுகிறார் கள், என்னுடைய சொந்த விஷயங்களில் வருகிறார்கள், இது போலீஸ்......(மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு எதிர்கட்சித் தலைவர் அவர்கள் ஒன்றைக் கவனிக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. மோகன் அவர்கள் ஒரு பிரச்சினையை எழுப்பினார்கள். நான் அவருக்கு உடனே சொல்லி விட்டேன். 219-வது விதிப்படி முறைப்படி முன் அறிவிப்புக் கொடுத்தால் அதை எடுத்துக் கொள்கிறபோது தக்க விடைகள் கிடைக்கும் என்று சொல்லி விட்டேன். எனவே இந்தப் பிரச்சினையை இத்தோடு முடிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்னது மாதிரி, போலீஸ் துறையை கள்ளக் கடத்தல்காரர்களோடு ஒப்பிட்டுச் சொன்னதை, வாபஸ் வாங்கவேண்டும். அல்லது அவைக் குறிப்பில் இருக்கக் கூடாது. நாளைக்கு தங்களுடைய உரிமையை அவர்கள் நிலை நாட்ட முடியாது. பணியாற்ற முடியாது. கள்ளக் கடத்தல்காரர் களுக்கும் காவல்துறைக்கும் வித்தியாசம் இருக்கிறது.

[1990 சனவரி 25

10.20 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களுக்கு விளக்குவதற்காக நான் ஒன்றைச்சொல்ல விரும்புகிறேன். இந்த நம்பர் ப்ளேட்டை மாற்றிக் கண்காணிக் கிறார்கள் என்ற......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தத் தொடரை நீங்கள் திரும்பப் பெறுகிற நிலையில் இருக்கிறீர்களா ? ஏனென் றால் கள்ளக் கடத்தல்காரர்களும் மாற்றுகிறார்கள் ; போலீஸ் காரர்களும் மாற்றுகிறார்கள் என்று சொன்னால் அது அவமதிப் பதுபோல் இருக்கிறது. ஆகவே அவர்கள் கேட்பது, அந்தத் தொடர் போலீஸ்காரர்களை அவமதிப்பதாக இருக்கிறது, எனவே அதைத் திரும்பப் பெற முடியுமா என்பதுதான்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் திரும்பப் பெற முடியாது. கள்ளக் கடத்தல்காரர்களும், திருடர்களும் செய்கிற அந்தப் பணியை போலீஸ்காரர்களும், செய்கிறார்கள் என்று இப்போதும் நான் சொல்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, கள்ளக் கடத்தல் செய்ய யாராவது முற்பட்டால் அப்போது போலீஸ்காரர்கள் அதைத் தொடர்ந்திருப்பார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிக் கள்ளக் கடத்தல் செய்கின்ற அந்தப் பணியை, தொடர்ந்து அரசாங்கம் செய்யுமானால், அரசாங்கத்தில் இருக் கிற பல அமைச்சர்களே அந்தக் கள்ளக் கடத்தலிலே ஈடுபட்டு இருக்கிறார்கள் என்ற குற்றச் சாட்டு என்னிடத்தில் இருக்கிறது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தில் இருந்த அமைச்சர்கள் அப்படிச் செய்திருப்பார்கள். இருக்கிற அமைச்சர்கள் யாரும் அப்படிச் செய்திருக்க மாட்டார்கள்.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் தலைவர் அவர்களே, அது 1971ஆம் ஆண்டு இருக்கிறது; 1974-லேயும் இருக்கிறது. 1976 ஆம் ஆண்டும் வருகிறது. எந்த ஆண்டு வந்தாலும் யார் கள்ளக் கடத்தலில் ஈடுபட்டிருந்தாலும் அவர்கள் அத்தனை பேரும்..........

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, நமது எதிர்கட்சித் தலைவர் அவர்கள் லாவணி பாடுவதில் வல்லவர். ஏதாவது புழுதிவாரி இறைத்துவிட்டுப் போகலாம்



[டாக்டர் மு. கருணாநிதி] [1990 சனவரி 25

என்பதற்காகத்தான் இப்போது எதிர்கட்சித் தலைவராகவே ஆகி இருக்கிறார். நான் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. ஒரு விஷயத்தைச் சொல்லும்போது அதிலே உள்ள விவகாரத்தைப் பற்றிச் சொல்லவேண்டும். திரு. அர்ஜுனன் அவர்கள் குறிப் பிட்ட எண்கள் காருக்குரிய எண்கள் அல்ல. அது டிராக்ட ருக்கும், ஸ்கூட்டருக்கும் உள்ள எண்கள் என்று சொல்லப் பட்டது. அதைப்பற்றி திரு. மோகன் இன்னொரு பிரச்சினை எழுப்புகிறார். நானும் அதைச் செயலாளர் மூலமாக அவைத் தலைவராகிய தங்களுக்கும் சொல்லியிருக்கிறேன். தாங்களும் சொல்லிவிட்டீர்கள். அதுபற்றி எதுவும் எழுதிக் கொடுக்காமல் அந்தப் பிரச்சினையைக் கிளப்பக் கூடாது; உரிமைப் பிரச்சினை என்ற பெயரிலோ அல்லது வேறு இந்த அவையினுடைய விதி முறைகளுக்கு உட்பட்டு எழுதிக் கொடுத்து விட்டுத்தான் திரு.மோகனாக இருந்தாலும் யாராக இருந்தாலும் பேசவேண்டும். திரு. மோகன் அவர்கள் அதைக் கூட புரிந்து கொள்ளாமல் ஒரு பார்லிமெண்ட் உறுப்பினராக இருந்தவர்—இப்படி எழுந்து சொன்னது சரியல்ல என்பதை நானும் ஒப்புக் கொள்கிறேன். எனவே எழுதிக் கொடுத்துவிட்டுப் பேசினால் அதைத் தாங்கள் அனுமதிக்கலாம்.

(ஆ) சேலம் சௌடேசுவரி கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்நிர்வாகம் இழைக்கும் கொடுமைகள் குறிதது.

திரு. கே. ரமணி : மாண்புமிகு தலைவர் அவர்களே, சேலத்தில் இருக்கும்படியான கல்லூரி சௌடேசுவரி கல்லூரி. அந்த ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிற சட்ட விரோத மான நடவடிக்கைகளைப் பற்றி அரசாங்கத்தினுடைய கவனத் திற்குக் கொண்டுவர வேண்டிய நிலைமை இன்றைக்கு ஏற்பட் டிருக்கிறது.

ஆசிரியர்களைப் பழிவாங்குகின்ற கொடுமை எட்டாண்டுகளாக அங்கே நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அவர்கட்கு ஏற்பட்டுள்ள வருமான நஷ்டம் 9 கோடி ரூபாய் என்று அவர்கள் சொல்கிறார்கள். யு.ஜி.சி. ஸ்கேல் அவர்களுக்கு அமுலாக்கப்பட வில்லை. அதன் மூலமாகவும் அவர்களுக்கு 4 கோடி ரூபாய் நஷ்டம் வந்திருக்கிறது. அடக்கு முறை நடக்கிறது. சட்ட விரோதமான சஸ்பென்ட், துறை மாற்றம் போன்றவை நடக் கின்றன. துறைத்தலைவரையே பணியிலிருந்து நீக்குவதுபோன்ற சொல்லத்தகாத கொடுமைகள் அந்தக் கல்லூரியில் இருக்கின்ற ஆசிரியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கிறது. அரசாங்கத்தின் சட்ட திட்டங்களைப் பூராவும் அவர்கள் தூக்கி எறிகிறார்கள் இந்த மோசமான நிலைமையை உடனடியாக மாற்றுவதற்கு அரசு முன் வந்து நடவடிக்கை எடுக்கவேண்டிய காலம் மீறிவிட்டது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து. ஆகவேதான் அந்த ஏ.யு.டி. ஆசிரியர்கள் அந்தக் கொடுமைகளைப் பொறுக்க முடியாமல்

அவர்கள் வந்து உண்ணாவிரதம் இருக்கிறார்கள். அவர்களுக்கு நியாயம் வழங்கக் கூடிய முறையில் இந்தக் கல்லூரியின் மீது உடனடியாக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அரசை வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. ரமணி அவர்கள் சேலத்தில் இருக்கக்கூடிய சௌடேசுவரி கல்லூரி விவகாரங்கள் குறித்துஇங்கே எழுப்பினார்கள். அது முன்கூட்டியே எனக்குத் தெரிவிக்கப்பட வில்லை. இருந்தாலும் கூட, நீதிமன்றத்திலே ஒரு வழக்கு இருக்கிறது; அதிலே அரசாங்கத்தின் சார்பாகவும் எதிர்த்து வாதாடப்படுகிறது. நிர்வாகத்தின் சார்பாக வழக்கு தொடுத்து இருக்கிறார்கள். இப்படி வழக்கு இருக்கின்ற நேரத்தில் ஒரு தனி முடிவை அரசாங்கம் அவசரப்பட்டு எடுக்க முடியாத சூழ் நிலை இருக்கிறது. இரண்டு தரப்பைச் சேர்ந்தவர்களும் என்னிடத்தில் கேட்கிறபோது வழக்கை முடித்துக் கொள்ளுங்கள் அதற்குப் பின்னால் அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்கும் என்று நான் தெரிவித்திருக்கிறேன். இடை யிலே போராட்டம் எல்லாம் தேவையா என்பதை அதை நடத்து கிறவர்கள் யோசித்துக்கொள்ள வேண்டும்.

### 3. கவன ஈர்ப்பு.

**(அ)** செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டத்தில், கடலூரில் கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ள குடிசைப் பகுதிகளிலுள்ள ஆதி திராவிடர் குடும்பங்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வது குறித்து.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, '' செங்கை அண்ணா மாவட்டம், செய்யூர் வட்டம் கடலூரில் 500 ஆதி திராவிட குடும்பங்கள் வசிக்கும் குடிசைப் பகுதி, கடல் அரிப்பால் பாதிக்கப்பட்டுள்ளதால் அவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்வது குறித்த '' அவசரப் பொது முக்கியத் துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக்கொண்டு வருகிறேன்.

**10-25 மணி**

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவையின் முன் வைக்கப்பட்டு உள்ளது.





திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையைக் காணவில்லை. என்னுடைய இருக்கையிலே காணவில்லை. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் படித்துச் சொன்னாலும் போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இருக்கும். இருக்கையில் காணவில்லை என்றால் வாங்கிக்கொள்ளுங்கள். இருக்கையில் இல்லை என்றால் முதலிலேயே கேட்டிருந்தால் நானே தந்திருப் பேன்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : இல்லை. இருக்கையில் குறிப்பு இல்லை.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அறிக்கை சிறியதாகத்தான் இருக்கிறது. நானே படித்துவிடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உங்களுக்காக, சிறப் பாகப் படிக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

செங்கை—அண்ணா மாவட்டத்தில், செய்யூர் வட்டம், கடலூரில் பாலாறு கடலில் கூடும் இடத்தில் சின்ன குப்பம், பெரிய குப்பம், அலி குப்பம் என்று மூன்று குப்பங்களில் மீனவர் குடி யிருப்புகள் உள்ளன. சின்ன குப்பம் கடலிலிருந்து 20 மீட்டர் தூரத்தில் 2 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. பெரியகுப்பம் 25 மீட்டர் தூரத்தில் $1\frac{1}{2}$ மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது. அலி குப்பம் கடலிலிருந்து 20 மீட்டர் தூரத்தில் 2 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ளது.

மேற்கூறப்பட்ட மூன்று குப்பங்களிலும் சமீப காலத்தில் கடலரிப்பால் பாதிக்கப்பட்டதற்கான சான்றுகள் ஏதுமில்லை என்றும் நவம்பர் மாதத்தில் பெய்த பலத்த வடகிழக்கு பருவ மழையின்போது சின்னக் குப்பத்தில் சில குடிசைகளும், பெரிய குப்பத்தில் 20 குடிசைகளும், அலிகுப்பத்தில் 5 குடிசைகளும் சேதமடைந்ததாக அக்குப்பங்களில் வாழும் மக்கள் தெரிவித் துள்ளனர்.

மேலும் அக்குடியிருப்புகளில் வாழும் மக்கள் கடலரிப்பால் தங்கள் குடிசைகள் வருங்காலத்தில் பாதிக்கப்படலாம் எனக் கருதி பக்கிங்காம் கால்வாயின் மேற்குப்புறம் வீட்டு மனைகள் வழங்க அந்த தொகுதி சட்டப்பேரவை உறுப்பினருக்கு மனு கொடுத்திருப்பதாகவும் தலைமைப் பொறியாளர் தெரிவித் துள்ளார்.

மேலே கூறப்பட்ட மூன்று குப்பங்களும் கடலரிப்பால் சேதமாகாதிருக்க தலைமைப் பொறியாளர் (நிலநீர்) அவர்கள் கடலோர கற்குவியல் சுவர் அமைக்க ரூ. 40 லட்சம் மதிப்பீட் டில் கருத்துரு ஒன்றை இப்போது அரசுக்கு அனுப்பியுள்ளார். அதனை ஆராய்ந்து கடலரிப்பிலிருந்து அக்குப்பங்களை காப் பாற்ற மேற்கொண்டு தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்ட பகுதி யிலே மீனவர்கள் வசிக்கின்ற பகுதியைப் பற்றிய குறிப்பு வரு கிறது. ஆனால் நான் ஏற்கனவே கொடுத்திருக்கின்ற குறிப்பிலே ஆதி திராவிடர் வசிக்கின்ற பகுதி என்று சொல்லியிருக்கிறேன். மீனவர்களுடைய பகுதியை ஒட்டிதான் அந்த ஆதி திராவிடர் களுடைய பகுதியானது அமைந்திருக்கிறது. அந்தப் பகுதியை இந்த ஆண்டும் சரி, ஒவ்வொரு ஆண்டும்......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உகம்சந்த் அவர் களுக்குத் தெரியுமே. இதில் கேள்விதான் கேட்கவேண்டும்,

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கு ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். நான் கொடுத்தது ஆதி திராவிடர் மக்களுடைய குடியிருப்புப் பகுதி பற்றி. ஆனால் அமைச்சர் அவர்கள் சொல்கிற பதிலில் மீனவர் குடியிருப்பைப் பற்றியே சொல்லியிருக்கிறார். அந்த பதிலில் அதுதான் இருக்கிறது. அந்தத் தவறைச் சுட்டிக்காட்டு வதற்காகச் சொல்கிறேன். இந்தப் பதிலும் எனக்குத் தேவை தான். அதே நேரத்தில் அதையும் அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவரவேண்டுமென்ற முறையில்தான் நான் கொடுத்த அந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுக்குத்தான் கொடுத் திருந்தேன். ஆனால் பொதுப்பணித்துறை அமைச்சருக்கு என்று குறிப்பு வந்திருக்கிறது. ஆனாலும் இரண்டுமே எனக்குத் தேவை யான பதில்கள் வந்திருக்கின்றன. அந்த முறையில்தான் பதிலும் வந்திருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதற்கும் அறிக்கை தரு வார்களா என்று கேட்கிறீர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே, பெரிய குளறுபடியே இருக்கிறது. அவர்கள் எந்த அமைச்சருக்குக் கொடுத்தார்கள் என்பது பற்றிப் பரவாயில்லை. இருக்கட்டும். இருந்தாலும், அந்த மக்க ளுக்குச் சேர்த்துத்தான் கற்சுவர் எழுப்புவதற்காக நான் பதிலைச் சொல்லவா? 40 லட்சம் ரூபாயில் ஒரு எஸ்டிமேட் அரசின் பரி





சீலனையில் இருக்கிறது என்று சொன்னால், இது ஆதி திராவிட மக்களுக்கும் பொருந்தும், மீனவர் மக்களுக்கும் பொருந்தும். இந்த பதில் உங்கள் கேள்விகள் அத்தனைக்கும் பொருந்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. உகம்சந்த் அவர் களுடைய இரண்டாவது வினா.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்கு வேறு இடத்திலே குடி யிருப்பு வழங்குவதற்காக ஏற்கனவே 17 ஏக்கர் நிலம் கையகப் படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. நீதி மன் றத்திலே அதற்காகத் தடை உத்தரவுகள் பெறப்பட்டிருக்கின்றன. ஆனால் நீதி மன்ற தீர்ப்புகள் வந்துவிட்ட சூழ்நிலையில் புதிதாக அந்தக் குடியிருப்புக்களை வழங்குவதற்கு அரசாங்கம் எற்கனவே நடவடிக்கை எடுத்து வருகிறது. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 30, 40 வீடுகள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாவாகக் கேளுங்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : பேரவைத் தலைவர் அவர்களே, கடல் அரிப்பால் அந்த மக்கள் பாதிக்கப்படுகிறார்கள். அவர் களுக்கு மாற்று இடம் இதே போல் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. உகம்சந்த் அவர்கள் தவறான முகவரிக்குக் கடிதம் எழுதுவார்கள்போல் இருக்கிறது. இந்த ஆதி திராவிடப் பெருமக்களுக்கு வீட்டுமனை வழங்குகிற பொறுப்பு மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. இராமகிருஷ்ணன் அவர்களிடத்திலே இருக் கிறது. தனியாகக் கேள்வி போடுங்கள். விவரமான பதிலை அவர்கள் அறிவிப்பார்கள்.

திரு. எஸ். டி. உகம்சந்த் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் போட்ட கேள்வியே மாண்புமிகு ஆதி திரா விடர் நலத்துறை அமைச்சருக்குத்தான்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சரி பார்த்துச் சொல்கி றேன். துறையிலே என்ன என்று பார்த்துச் சொல்கிறேன்.

[1990 ஜனவரி 25

(ஆ) வடலூரில் சேஷசாயி நிறுவனம் 'லே—ஆப்' விட திட்டமிட்டிருப்பதால் தொழிலாளர்கள் பாதிப்பு.

* திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, "தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள சேஷ
சாயி நிறுவனம், லே-ஆப் விட திட்டமிட்டு இருப்பதும், அதனால்
600 தொழிலாளர்கள் பாதிக்கப்பட இருப்பதும் குறித்த" அவசரப்
பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு செய்தி
மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்
திற்குக் கொண்டு வருகிறேன்.

* மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்
பட்டுள்ளது.

அறிக்கை.

தென்னாற்காடு மாவட்டம், வடலூரிலுள்ள சேஷசாயி இண்
டஸ்ட்ரீஸ் லிமிடேட் என்ற தொழிற்சாலை நிர்வாகம், பின்வரும்
நிர்வாக காரணங்களால் தங்களிடமுள்ள தொழிலாளர்களில் 50
சதவீதம் தொழிலாளர்களைச் சுழற்சி முறையில் லே-ஆப் செய்ய
தங்களது 15-12-1989-ம் தேதி கடிதத்தில் அனுமதி கோரி
சென்னை தொழிலாளர் இணை ஆணையரை கேட்டுக் கொண்
டுள்ளது. அதன் காரணங்கள் பின்வருமாறு :—

(1) தங்கள் நிறுவனம் கடந்த இருபத்தி எட்டு ஆண்டு
களாகச் செயல்பட்டு வருவதாகவும், உயர்ந்த அளவு மின்சக்தி
கம்பிகளுக்கான பீங்கான் இன்சுலேட்டர்கள் மற்றும் அவற்றில்
பொருத்துவதற்கான உபகரணங்களைத் தயாரிப்பதாகவும்,
தொழில் நுட்டக் காரணங்களால் 1978 வரை சரியாக செயல்பட
இயலவில்லையென்றும், 1979 முதல் 1985 வரை மட்டுமே லாப
கரமாக நடந்ததென்றும் தெரிவித்துள்ளது.

(2) 1983-ல், 10 கோடி மூலதனத்துடன் எலக்ட்ரோ
போர்ஸ்லென் திட்டம் மார்க்கட் சர்வே அடிப்படையில் விரிவு
படுத்தப்பட்டதென்றும், ஒன்று 1985லும் மற்றொன்று 1987லும்
நிறைவேற்றப்பட்டன.

(3) 1985-86, 1986-87-ல் போதிய தேவை (dem nd)
இல்லாததால், விலை வீழ்ச்சியடைந்தது. இது 1981-82-ஐ
விடக் குறைவு. மின்சார இலாகாவால் தாமதப் பட்டுவாடா,
மார்க்கெட் இன்மை, குறைவான உற்பத்தி போன்ற பல காரணங்
களால் 31-3-89 வரை தொடர்ந்து ரூ. 5 கோடி நஷ்டம். நிர்
வாகம் 45 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை செயல்திறன்
அடிப்படையிலேயே இயங்கி வந்துள்ளது. 30—9—1989 வரை





மேலும் ரூ 225 லட்சம் நஷ்டம் என்றும், இது 31-1-90-ல்
ரூ. 3.50 கோடியாகும் என்றும் தெரிவித்துள்ளது. செயல்
மூலதனமும் (Working Capit l) பாதிக்கப்பட்டுள்ளது.

2. நிலைமை இவ்வாறு இருந்தபோதிலும் இந்நிறுவனம் நலிவுற்
றதாக ( Sick unit ) அறிவிக்கப்படாமல் இருந்து வந்துள்ளது.
எனினும் 1988-89 மற்றும் 1989-90 ஆண்டுகளில் ஏற்படும் நஷ்ட
அளவுக்கு காரணமாக நலிவுற்றதாக அறிவிக்கக்கூடியதாகத் தகுதி
பெறும். இவ்விவரம் மத்திய அரசின் (Industri l Finance and
Financial Rcconstr ct on Bo rd) கவனத்திற்குச் சென்றுள்ளது.

3. மோசமான பொருளாதார நஷ்டமும், செயல் மூலதன
பாதிப்பும் உள்ள நிலையில் நிர்வாகம் மேலும் நன்கு செயல்படா
நிலையும் நிதி ஆதாரங்களைப் பெற இயலா நிலையிலும்
உள்ளது என்றும் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

4. 40 சதவீதம் உற்பத்தியே நடப்பதாகவும், இதற்கு 50
சதவீதம் வேலையாட்களே போதும் என்றும், இந்நிலையில் தொழி
லாளர்கள் பிற்காலத்தில் கூடுதலாக உழைத்து உற்பத்தியை ஈடு
செய்வர் என்ற நம்பிக்கையில், தற்சமயம் வேலையாட்களுக்கு
வேலையில்லாத நிலையிலும் சம்பளம் வழங்கி வருவதாகவும்
தொடர்ச்சியாக இயங்கக்கூடிய 'பிளாண்டு' களிலும் வேலையை
நிறுத்தக்கூடிய நிலமை உள்ளதென்றும், இதனால் ஏற்பட்ட மனித
இழப்பு நாட்கள் ஏற்கனவே 24,000-ஐ கடந்து விட்டதென்றும்,
இந்தஏற்பாடு தொடர இயலாது என்பதையும் இழப்பு நாட்களை
யும் ஈடு செய்ய இயலாது என்பதையும், தொழிற் சங்கங்களுடன்
கூடிப் பேசியதின் விளைவாக 40 சதவிகிதம் முதல் 50 சதவிகிதம்
வரை 'லே-ஆப்' செய்வதைத் தவிர்க்க இயலாது என்பதையும்,
இருதரப்பினரும் உணர்ந்து கொண்டுள்ளதாகவும் தெரிவித்து
நிர்வாகம் 50 சதவிகிதம் தொழிலாளர்களைச் சுழற்சி முறையில்
லே-ஆப் செய்ய அனுமதி கோரியுள்ளது.

5. லே-ஆப் செய்யப்படும் தொழிலாளர்களுக்குத் தொழிற்
தகராறுகள் சட்டப்படி நிவாரணம் அளிக்கப்படும் என்றும் தெரி
வித்துள்ளனர். தற்சமயம் இத்தொழிற்சாலையிலுள்ள வேலை
யாட்கள் விவரம் வருமாறு :—

| | |
|---|---|
| வேலையாட்களின் எண்ணிக்கை .. .. | 1,331 |
| பணிக்குழு (S aff) .. .. .. .. | 280 |
| பயிற்சியாளர்கள் .. .. .. .. | 3 |

[திரு. கே. என். நேரு] [1990 சனவரி 25

இப்பிரச்சினை சம்பந்தமாக தொழிலாளர் இணை ஆணை
யர் (சென்னை) முன்னிலையில் நிர்வாகம் மற்றும் தொழிலாளர்
பிரதிநிதிகளுடன் 3-1-1990 மற்றும் 9-1-1990-ல் பேச்சு
வார்த்தைகள் நடைபெற்றன. பின்வரும் தொழிற் சங்கங்கள்
பங்குபெற்றன:—

(1) பொதுச் செயலாளர், எஸ்.ஐ.எல். எம்ப்ளாயீஸ்
யூனியன், 27, ஜே பண்ருட்டி சாலை, கடலூர்.

(2) எஸ்.ஐ.எல். ஸ்டாப் யூனியன், பிள்ளையார் கோவில்
தெரு, வடலூர்.

(3) எஸ்.ஐ.எல். ஒர்க்கர்ஸ் அண்டு ஸ்டாப் பிராகரசிவ்
யூனியன், 12/ஏ, பண்ருட்டிச் சாலை, கடலூர்.

(4) எஸ்.ஐ.எல். டெக்னிக்கல் ஸ்டாப் (அசோசியேஷன்)
கும்பகோணம் சாலை, வடலூர்.

(5) எஸ்.ஐ.எல். அண்ணா நேஷனல் ஒர்க்கர்ஸ் யூனி
யன், பண்ருட்டிச்சாலை, கடலூர் (அ.இ.அ.தி.மு.க.)

இந்த ஐந்து சங்கங்களும் கூட்டு நடவடிக்கைக்குழு என்ற
பெயரில் ஒன்று சேர்ந்து பேச்சு வார்த்தைகளில் கலந்து
கொண்டன.

பிறசங்கங்கள் பின்வருமாறு :—

(1) சேஷசாயி இன்சுலேட்டர் பாக்டரி எம்ப்ளாயீஸ்
யூனியன் (சி.ஐ.டி.யு.), வடலூர்.

(2) எஸ்.ஐ.எல். இந்திய தேசீய தொழிலாளர்கள்
ஊழியர்கள் காங்கிரஸ் சங்கம், 2, எப். சீனிவாசகம் பில்டிங்,
பண்ருட்டி (ஐஎன்டியுசி).

பேச்சு வார்த்தைகளின்போது இன்னும் மூன்று மாதங்
களில் புனரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்த உள்ளதால்
'லே-ஆப்' செய்ய அனுமதிக்க நிர்வாகம் கோரியது. நவம்
பர் 1989 மற்றும் டிசம்பர் 1989 மாதங்களுக்கான சம்பளம்
இன்னமும் தொழிலாளர்களுக்கு வழங்கப்படவில்லை என்றும்,
நிர்வாகம் விரிவுத் திட்டங்கள் எதையும் செயல்படுத்தவில்லை
என்றும், இந்நிலையில் 'லே-ஆப்' செய்ய அனுமதிக்கக்
கூடாது என்றும் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.
இப்பிரச்சினையின் மீதான விசாரணை முடிவுற்றுள்ளது.
இணை ஆணையர் (சென்னை) அவர்களால் விரைவில்
ஆணைகள் பிறப்பிக்கப்பட உள்ளன. தொழிற்சாலை மூடக்
கூடிய சூழ்நிலை தற்சமயம் எதுவும் உருவாகவில்லை.



1990 சனவரி 25]

10-30 மணி

திரு. ஏ. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்த நிறுவனம் 1960-ல் ஆரம்பிக்கப்பட்டது. High
Tension Electrical Porcelain Insulator உற்பத்தி செய்யக்கூடிய
முக்கியமான ஒருநிறுவனம் இது. இந்தியாவிலுள்ள எலெக்ட்ரிசிட்டி
போர்டுகளுக்கு எல்லாம் சாதனங்கள் வழங்கக்கூடிய நிறுவனம்
இது. ஆரம்பித்ததில் இதனுடைய மூலதனம் 1 கோடி ரூபாயாக
இருந்தாலும் 1 கோடி 33 லட்சம், 1 கோடி 48 லட்சம்,
1 கோடியே 60 லட்சம் என்று இவ்வாறு 1985 ஆம் ஆண்டு வரை
அளவு கடந்த லாபம் கிடைத்து வந்திருக்கிறது. இதற்
கிடையில் அவர்கள் அதை விஸ்தரிப்பதற்கு ரூ. 10 கோடி
மூலதனத்தை கடன் வாங்கி இன்வெஸ்ட் பண்ணிவிட்ட
காரணத்தால் தேய்மானம் மற்றும் வட்டி அதிகமாகிவிட்ட
படியால் லாபத்திலிருந்து இவைகளைக் கழித்தால் நஷ்டம்
வருகிறது. 1988-89 ஆம் ஆண்டில் கூட 1 கோடியே 37
லட்சத்து 91 ஆயிரத்து 898 ரூபாய் லாபம் வந்தாலும் அந்த
நிறுவனத்தின் அறிக்கை பிரகாரம் அதில் வட்டியாக, தேய்
மானமாக $3\frac{1}{2}$ கோடி கழிந்து விட்டது போக நஷ்டம்
என்று சொல்லுகிறார்கள். ஆகவே, அவர்கள் விவர அறிக்கை
யில் கூறியிருப்பதுபோல, பல நிதி நிறுவனங்களிடமிருந்து
உதவி பெறுவதற்காக விண்ணப்பித்திருக்கிறார்கள். கடந்த
அரசு இருக்கும்போதே, குறிப்பாக 'இண்டஸ்ட்ரியல்
பைனான்ஸ் அண்ட் பைனான்சியல் ரீகன்ஸ்ட்ரக்சன் போர்ட்'
என்ற நிதி அளிக்கும் அமைப்புகளிடம் நிதியுதவி பெறுவதற்
காக விண்ணப்பித்துள்ளனர். இதற்காக பொருளாதார பற்
றாக்குறை என்ற செயற்கையான நெருக்கடி போன்ற ஒரு
மாயையை தோற்றுவித்து இருக்கிறார்கள், உருவாக்கியிருக்
கிறார்கள். இதற்கு அவர்கள் தொழிலாளர்களைப் பகடைக்
காய்களாக பயன்படுத்துகிறார்கள். தொழிலாளர்களை
'லே-ஆப்' செய்வது 'ரிட்ரென்ச்' பண்ணுவது போன்ற
நிலைமைகளை உருவாக்குவது போன்றவை குறித்து இந்த
அரசின் நிலை என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு ; மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, இதைப்பற்றி குறிஞ்சிப்பாடியினுடைய
சட்டமன்ற உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்களும்
இந்த ஆலையில் பணிபுரிகின்ற தொழிலாளர்களை அழைத்து
வந்து ஏற்கெனவே என்னிடத்தில் பேசியிருக்கிறார். திரு.
கோவிந்தராஜன் அவர்களிடத்தில் கூட நான் சொன்னேன்.
நிர்வாகம் பல்வேறு காரணங்களால் எங்களுக்கு மிகவும் நஷ்
டம் ஏற்பட்டுவிட்டது என்று இங்கே 4, 5 காரணங்களைச்
சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் பி.ஏ.எப்.ஆர்.-ல் மனு
செய்து பி.ஏ.எப்.ஆர். அவர்களுக்கு யார் யார் நிதியுதவி
செய்கிறார்களோ அவர்களுக்கு எல்லாம் நிதியுதவி செய்யுங்
கள் என்று உத்தரவிடப்பட்டும் எந்த நிதி நிறுவனமும் அவர்

[திரு. கே. என். நேரு] [1990 சனவரி 25

களுக்கு நிதி வழங்கத் தயாராக இல்லை: ஒரேயொரு
நிதிநிறுவனம் மட்டும் 90 லட்சம் ரூபாய் அவர்களுக்கு நிதியுதவி
வழங்க, அது எங்களுக்குப் பற்றாது என்று நிர்வாகம்
சொல்லிக்கொண்டிருந்தாலும், 'லே—ஆப்' கொடுக்கப்பட்டு
இன்றைக்கு 600 தொழிலாளர்களைக் குறைக்க வேண்டு
மென்று சொன்னாலும் இன்றைய அளவில் அத்தனை தொழி
லாளர்களுக்கும் சம்பளம் அளிக்கப்பட்டு வருகிறது. இந்தத்
துறை ஆணையாளர் அவர்கள் இதைப்பற்றி பேசிக்கொண்
டிருக்கிறார்கள். மேலும் அந்தத் தொழிற்சாலை நல்லமுறை
யில் இயங்குவதற்கும், 'லே—ஆப்' விடாமல் அனைத்துத்
தொழிலாளர்களுக்கும் வேலை தரவும்தான் ஆணையாளர்
அவர்கள் இன்றைக்கு பேச்சுவார்த்தை நடத்திக்கொண்டிருக்
கிறார்கள் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்
கிறேன்.

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, நான் முன்னரே குறிப்பிட்டேன். இப்படிப்பட்ட
நிதி நிறுவனங்களை அணுகி நிதி பெறுவதற்காகத்தான்
செயற்கையான நெருக்கடிகளை தோற்றுவித்திருக்கிறார்கள்.
இந்த ஆண்டு கூட 7 கோடி ரூபாய்க்கு ஆர்டர் இருக்கிறது
என்று அவர்களுடைய இந்த ஆண்டு அறிக்கையில் கூட கூறப்
பட்டிருக்கிறது. மூலப்பொருள்களை வாங்குவதற்கு பணம்
இல்லையென்று கூறுகிறார்கள். அது ஒரு சொத்தையான
வாதம். இதை சொல்லி அவர்கள் விண்ணப்பித்திருக்கிறார்கள்
ஐ.டி.ஆக்ட் 25 எம்.படி. இந்த 'லே-ஆப்' பிற்கு ஜாயின்ட்கமிஷனர்
தான் அனுமதி வழங்கவேண்டும். ஆகவே அந்த அனுமதி
வழங்காத அளவுக்கு ஏற்பாட்டைச் செய்யவேண்டும்
இரண்டாவதாக 2 மாதமாக வேண்டுமென்றே தொழி
லாளர்களுக்கு சம்பளம் வழங்காமல் இருக்கிறார்கள். அதைக்
கொடுக்கச் செய்யவும், 'லே—ஆப்'-க்கு அனுமதி வழங்காமல்
இருப்பதற்கும் ஜே.எல்.சி-க்கு அரசு உத்தரவிடுமா என்று
அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, ஆணையாளர் அவர்கள் பேச்சுவார்த்தை
நடத்திக் கொண்டிருக்கிறார்கள். உறுப்பினருடைய கோரிக்
கையை நிச்சயமாக பரிசீலித்து தொழிலாளர்கள் பக்கம்தான்
இந்த அரசு இருக்குமே தவிர உறுப்பினர் சொல்வதுபோல
உடனடியாக 600 தொழிலாளர் குறைக்க இந்த அரசு ஒத்துக்
கொள்ளாது. அதுபோல ஸ்டேண்டர்டு மோட்டார்
தொழிற்சாலையை எடுத்துக்கொண்டாலும்கூட
மாண்புமிகு திரு. பொன்முத்து ராமலிங்கம் அமைச்சர்
பல்வேறு முறை எடுத்துக்கூறி இன்றைக்கு ஒரு நல்ல தீர்வு
கண்டிருப்பதுபோல இதிலும் நல்ல தீர்வுக்கு வருவோம்
என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.



1990 சனவரி 25]

10-35 மணி

4. அறிக்கை அளித்தல்.

பொதுக் கணக்குக் குழு ;

* திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் 1989—90 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் 23 முதல் 25 வரையிலான (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)

(அ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; மாண்புமிகு அமைச்சர் அவர்களின் தீர்மானம் (குறுக்கீடு) யாராவது ஒருவர் சுருக்கமாகச் சொல்லவும்.

திரு. மா. சுந்தரதாஸ் : தலைவர் அவர்களே, Introduction stage-ல் object பண்ணுகிறோம். (குறுக்கீடு) நாங்கள் அறிமுகம் செய்கிற நிலையிலேயே இச் சட்ட முன்வடிவை எதிர்க்கிறோம்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறேன் என்பது ஒரு சம்பிரதாயம். அதன்படி அவர்கள் விளக்கங்களைப் பின்னால் பேசிக்கொள்ளலாம்; ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும்பொழுது பேசிக்கொள்ளலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்று இருக்கிறது.

## 6. அறிவிப்புகள்

### (அ) முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1989–90.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு : 1989-90 ஆம் ஆண்டில் கூடுதல் மானியங்களுக்குரிய கோரிக்கைகள் பேரவையில் மொழிவது குறித்து ஆளுநர் அவர்களிடமிருந்து கீழ்க்கண்ட செய்தி வரப்பெற்றுள்ளது :

" In pursuance of Article 203 Clause (3) of the Constitution of India, I, P. C. Alexander, Governor of Tamil Nadu, hereby give my recommendation to the moving in the Tamil Nadu Legislative Assembly, of the Demand for Further Grants for the year 1989–90."

## 7. முதல் துணை நிதிநிலை அறிக்கை, 1989–90 — விவாதமும் வாக்கெடுப்பும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1989-90ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையின்மீது விவாதம். பேரவையின் விதிகளின்படி இன்று விவாதமும் அதற்கான பதிலுரையும் 1.00 மணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்புக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். முதலில் விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் பேராசிரியர் க. பொன்னுசாமி.

அதற்கு முன்னால் ஒரு சிறு அறிவிப்பு. இந்த விவாதத்தில் "A member can only say whether the Supplementary Demand is necessary or not." அது தொடர்பாக இன்னொன்றையும் படித்துவிடுகிறேன்.





"The debate on the suplementary demands for grants is confined to the items constituting the same and no discussion can be raised on the original grants nor on the policy underlying them save in so far as it is necessary to explain or illustrate the particular items under discussion. In respect of schemes which have already been sanctioned in the main Budget, no discussion on any question of principle or policy is allowed. As regards demands for which no sanction has been obtained, the question of policy has to be confined to the items on which the vote of the House is sought. General grievances cannot be ventilated on a supplementary grant. A member can only say whether the supplimentary demand is necessary or not.

திரு. பி. எச். பாண்டியன் : Point of order மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலை அறிக்கையானாலும், துணை மானியக் கோரிக்கையானாலும் இதுவரை நம்முடைய உறுப்பினர்கள் பொதுவான சில கருத்துக்களையும் பேசுவது உண்டு. தாங்கள் படித்தபடி பேசுவதானால் விவாதம் இல்லாமலேயே அதை எடுத்துக்கொள்ளலாம் என்பதுதான் என்னுடைய கருத்து.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே,...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது என்னுடைய சொந்தக் கருத்தல்ல. Practice and Procedure of Parliament by M.N. Kaul and S.L. Shakdher பக்கங்கள் 611—612

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இப்போது என்ன படித்தீர்கள் என்றே தெரியவில்லை. நீங்கள் என்ன படித்தீர்கள் என்று தெரியாமல் நான் என்ன சொல்வது. நீங்கள் தமிழில் சொன்னால் எனக்குப் புரியும்.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளக்கமாகச் சொல்லிவிடுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வீரையன் அவர்களுக்கு ஒரு சிறிய பதில். ஆங்கிலத்தில் படித்ததால் அது பலருக்குப் புரியவில்லை என்ற கோரிக்கையை அன்புடன் ஏற்றுக்கொண்டு மிக முக்கியமான, ஆணித்தரமான 2 பகுதிகளை மட்டும் மொழி பெயர்த்துச் சொல்கிறேன்.

10-40 மணி

இந்த விவாதத்தில் தங்களுடைய பொதுவான குறைபாடுகளை—முல்லைப்பெரியாறு அணையில் தண்ணீர் திறந்து விடுவது போன்ற செய்திகளை இதில் திணிக்க வேண்டாம்—பொதுவான

கோரிக்கைகளை இதிலே எடுத்து வைக்க வேண்டாம். இந்தத் துணை மானியக் கோரிக்கைகளில் தரப்பட்டிருக்கிற பகுதிகள் தேவையா இல்லையா என்பதை மட்டும் இங்கே ஆணித்தரமாக வாதிட வேண்டும் என்பதுதான் அந்தப் பகுதி.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதி நிலைபற்றிய கோரிக்கைகள் ஆனாலும், துணை மானியக் கோரிக்கைகளானாலும் இந்த நிதி தேவைதானா தேவையில்லையா என்று இதுவரை யாரும் வாதிட முடியாது. காரணம் இந்த நிதி இந்த அவையிலே வழங்கப்பட்டால்தான் அந்தத் துறையே செயல்பட முடியும். அப்படிப்பட்ட நிலையில் விவாதம் இல்லாமலேயே — வேறு ஒன்றுமே பேசமுடியாமலேயே —விவாதிக்கப்படுமானால், இங்கே பேசுவதற்கு வேறு பொருளே இருக்காது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேவையா தேவையில்லையா என்று இரண்டே வரியிலே பதில் சொல்லிவிட்டால் விவாதம் ருசிகரமாக இருக்காது. சொல்ல வேண்டியவற்றை உறுப்பினர்களாலே சொல்லவும் இயலாது. ருசிகரமான விவாதம் பட்ஜெட் உரையிலோ அல்லது கவர்னர் உரையிலோ மட்டும் இருந்தால் போதும் என்று தாங்கள் சொல்லக்கூடும். ஆனால் தேவை அல்லது தேவையில்லை என்று சொல்லும் போதும், ஏன் தேவையில்லை என்பதற்கான காரணங்களையும் சொல்ல வேண்டும். தேவை என்கிறபோதும் ஏன் தேவை என்பதற்கான காரணங்களையும் சொல்ல வேண்டும். ஆனால், தாங்கள் படித்த வாசகங்களின்படி காரணங்களைச் சொல்லுவதற்குக் கூட அனுமதி இல்லையோ என்கிற சந்தேகம் ஏற்படுகிறது. அதைத் தாங்கள் அவைக்கு விளக்கினால் போதுமானது.

**திரு. சோ. அழகர்சாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னாலே கூட துணை மானியக் கோரிக்கைகள் மீது பல விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கோரப்பட்டிருக்கிற துணை மானியக் கோரிக்கைகளில் சில இட்டங்களுக்கு நிதி கோரியிருக்கிறார்கள். அப்படிக் கோரும்போது அந்த நிதி அதிகமாக இருக்கலாம் அல்லது அதை நாங்கள் ஆதரிக்கலாம் அல்லது சிலவற்றிற்கு போதாது என்று சொல்லலாம். இன்னும் சிலவற்றில் புதிதாக கோரிக்கை வைத்து சில இட்டங்களுக்கு நிதி கோரியிருக்கிறீர்கள். அது அதிகம் என்று சொல்லலாம். ஆகவே, எதையும் சொல்லாமல் ஒரு ........



**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் இதை முற்றிலும் தவறாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள். நான் ஒரே தொடர் வினா விடையில் இதை அமைக்கச் சொல்லவில்லை. விவாதத்தைச் சுருக்கமாக வைத்துக்கொள்ள வேண்டும். அதே நேரத்தில் மானியக் கோரிக்கைகளில் உள்ளவைகளைப் பற்றி மட்டும் குறிப்பிட்ட நேரத்திற்குள்ளேயே தொடர்புடையதாகப் பேச வேண்டும் என்பதற்காகத் தான் குறிப்பிட்டேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. மேலும் 190-வது விதியிலே கூட துணை மானியக் கோரிக்கை ஒன்றின் அல்லது கூடுதல் மானியக் கோரிக்கை ஒன்றின் மீதான விவாதம், அதற்குள் அடங்கிய விவரத்திற்குள் மட்டுமே இருக்க வேண்டும் என்பதாகத்தான் குறிப்பிடப்பட்டிருக்கிறது, அதற்குப் பொருள் உறுப்பினர்கள் 10 மணித் துளிகளில் முடிக்க வேண்டும், நீங்களே அவை அறிந்து, கண்டிப்புடன் செயல் படுவீர்கள் என்று நம்புகிறேன்.

***பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டுப்பாடோடு கூடிய அனுமதி கொடுத்து, துணை மானியக் கோரிக்கைகள் மீது கருத்துக்களைச் சொல்ல.......

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இதற்கு முன்னால் பேசுகிற காலத்தில் கூட இந்த அவையில் கட்டுப்பாடுகள் உண்டு. (சிரிப்பு)

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** அனுமதித்ததற்கு நன்றி தெரிவித்து, ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். துணை மானியக் கோரிக்கைகள் அதிக அளவில் வருகிறபோது, பொதுவாகவே ஒரு கருத்து நிலவுகிறது. முதலில் நீங்கள் சரியாகத் திட்டமிடவில்லையோ என்ற கருத்து வருவதற்கு அங்கே வாய்ப்பு இருக்கிறது: ஒவ்வொரு மானியத்தின் மீதும் இவ்வளவு தொகை வேண்டும் அதிகப்படியாக வேண்டும் என்று சொல்லுவதன் காரணமாக — முன்பு போட்ட திட்டங்கள் சரிவர நிறைவு பெறவில்லை என்ற கருத்தையும் நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்கள் என்றே நான் கருதுகிறேன். அந்த வகையிலே பல்வேறு மானியங்களிலே இங்கே தொகை கோரப்பட்டுள்ளது. அதாவது ரூ. 2,48,24,48,000 அளவுக்கு தொகை கேட்டிருக்கிறீர்கள். ஆளுநர் உரையிலே கூட, திட்டங்கள் சரியாகப் போடப் படுகின்றன என்றும் நிதி குறைவாக இருந்தாலும், சரியாக ஒதுக்கப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள். சென்ற ஆண்டு திட்டச் செலவைக் குறைத்தீர்கள். அதற்குப் பின்னாலே

[பேராசிரியர் க. பொன்னுசாமி] [1990 சனவரி 25

ஓரளவுக்கு வந்திருக்கிறது என்று சொன்னீர்கள். இந்த
ஆண்டு அதற்குக் குறையாமல் வைத்துக் கொள்வோம் என்று
தான் சொல்லியிருக்கிறீர்கள்.

சென்ற ஆண்டுக்குக் குறையாமல் வைத்துக் கொள்வோம்
என்று சொல்லுவதன் மூலம் ஒன்றை நீங்கள் ஒப்புக்கொள்
கிறீர்கள் அதாவது சென்ற ஆண்டு இருந்த விலைவாசிப்படி,
சென்ற ஆண்டு இருந்த நிலைமைகளுக்கு ஏற்ப ஒதுக்கப்பட்ட
தொகையும், இந்த ஆண்டு அதற்குக் குறையாமல் ஒதுக்கப்
படுகிற தொகையும், நீங்கள் சென்ற ஆண்டு எட்டியதாகச்
சொல்லப்படுகிற டார்கெட்டைக் கூட எட்ட முடியாத
அளவுக்குத் தான் திட்டங்கள் இருக்கின்றன என்பதை நீங்கள்
ஒப்புக் கொள்கிறீர்கள். இப்போது அதிகப்படியான நிதியைக்
கேட்டிருக்கிறீர்களே தவிர எதற்காக என்பது தெளிவாக
சொல்லப்படவில்லை. ஒரு துறைக்கு இவ்வளவு என்று தான்
சொல்லி இருக்கிறீர்களே தவிர என்ன செய்யப் போகிறீர்கள்
என்று சொல்லவில்லை. அப்படிச் சொல்லியிருந்தால் தான்
அதற்குட்பட்டு இங்கே பேச முடியும். ஆகவே, மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்கள் அந்தக் கட்டுப்பாட்டைச் சற்றுத்
தளர்த்தி, காலம் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொண்டு,
பொதுவான ஒரு சில விஷயங்களை நான் இங்கே சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

10.45 மணி

மாண்புமிகு முதல்வரவர்கள் பாசனத் திட்டங்களுக்காக
இங்கே துணை மானியத்தைக் கேட்டிருக்கிறார்கள். பாசனத்
திட்டம் என்பதிலே எனக்குக் காவேரி நினைவுக்கு வருகிறது.
காவேரிப் பிரச்சினையைப் பற்றி நான் உள்ளே சென்று பேச
விரும்பவில்லை. நான் கேட்டுக் கொள்வதெல்லாம் மாண்புமிகு
முதல்வரவர்கள் Tribunal கேட்கும் பொழுது அதை Time bound
என்று கேட்கிறார்களா இல்லையா என்பதை இந்த அவையிலே
தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.
பஞ்சாபிலே நடந்ததைப் போல — அந்த ரவி பியாஸ்
நதியிலே அவர்கள் ஒரு தீர்மானத்திற்கு வந்தார்கள். Time
bound Tribunal என்ற காலவரையறைக்குட்பட்ட ட்ரிப்யூனல்
கேட்டார்கள். அதிலே அவர்கள் வெற்றி பெற்றார்கள். அதற்குப்
பின்னாலே அவர்கள் போராடுகிறார்கள் என்றால், கேட்டதைப்
பெற்றுக் கொண்டு மேலும் வேண்டுமென்று தான் போராடு
கிறார்கள். ஆகவே அந்த நிலையில் இங்கேயும் காவேரி பிரச்சி
னையைத் தீர்ப்பதற்காக Time bound Tribunal கேட்கப்படுமா
என்பதை இந்த அவையிலே மாண்புமிகு முதல்வரவர்கள்
தெளிவுபடுத்த வேண்டுமென்ற கோரிக்கையை நான் இங்கே
முன்வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1990 சனவரி 25] [பேராசிரியர் க. பொன்னுசாமி]

அடுத்து, தமிழகத்தின் முன்னேற்றத்திற்காக இங்கே
பல்வேறு மானியங்களிலே நீங்கள் நிதியைக் கேட்டிருக்கிறீர்
கள். அந்த நிதிகளின் அடிப்படையில், நெய்வேலி
சுரங்கத்தைப் பற்றியும், பம்பாயிலிருந்து இயற்கை எரி
வாயுவை இங்கே கொண்டு வருவதற்குத் தேவையானதைப்
பற்றியும், சேலம் உருக்காலைத் திட்டம் பற்றியும், கிழக்குக்
கடற்கரைச் சாலை வர வேண்டுமென்பதைப் பற்றியும்,
சேது சமுத்திரத் திட்டம் நிறைவேற வேண்டுமென்பதைப்
பற்றியும், ஏதாவது இந்த அவையிலே திட்டங்கள், தீர்
மானங்கள் கொண்டு வர இருக்கிறீர்களா என்பதையும் தயவு
செய்து நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். சென்னைப்
பெருநகர விரைவு இரயில் திட்டம் தூங்கிக் கொண்டிருக்கிறது
என்பதை. . .

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
பம்பாயிலிருந்து பைப் லைன் தமிழ் நாட்டிற்குக் கொண்டு
வர வேண்டுமென்ற திட்டத்தைப் பற்றி மத்தியிலே உள்ள
அமைச்சரிடத்திலே நானே நேரில் பேசி இருக்கிறேன்.
தொடர்ந்து கடிதமும் எழுதப்பட்டது. அதற்கு அந்தத் துறை
யினுடைய அமைச்சர் மாண்புமிகு குருபாதசாமி அவர்கள்
சாதகமான பதிலை — ஓரளவு சாதகமான பதிலை—எழுதி
யிருக்கிறார்கள். அந்தக் கடிதத்தை நேற்றைக்குக் கூட நான்
அவையிலே படித்துக் காட்டினேன். ஆனால் என்னுடைய
துரதிருஷ்டம் உறுப்பினர் இங்கே இல்லை.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு தலைவரவர்
களே, தகவலுக்கு நன்றி. இது வெறும் தகவலோடு நின்று
விடாமல் தொடர்ந்து விரைவிலே வர வேண்டுமென்ற
கோரிக்கையை இங்கே முன் வைக்கிறேன்.

இதைப் போல, பல்வேறு திட்டங்கள் — தமிழகத்திற்கு
வர வேண்டிய திட்டங்கள் அனைத்தும் தீர்மான வடிவிலே
இந்த அவையிலே கொண்டு வரப்பட்டு, மத்திய அரசை
வலியுறுத்தி அவைகளை வாங்குவதற்கு இந்த அரசு முயற்
சிக்குமா என்பதையும் இங்கே தெளிவுபடுத்த வேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

மத்தியிலே மிக நெருக்கமான உறவு இருக்கின்ற இந்த
நேரத்தில், மாண்புமிகு அமைச்சர் ஒருவர் அங்கே தமிழகத்தின்
சார்பாக இருக்கின்ற இந்த வேளையில், மாண்புமிகு தமிழக
முதல்வரவர்கள் நிச்சயமாக இதற்கான முயற்சிகளை மேற்
கொள்ள வேண்டும். அதுவும் இந்தச் சட்ட மன்றத்திலே
தீர்மான வடிவிலே போட்டு அது உடனடியாக நிறைவேறச்
செய்வதற்கான ஏற்பாடு செய்யப்பட வேண்டுமென்ற கோரிக்
கையை இங்கே நான் முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கல்வி மானியத்திலே ஒருசிலவற்றை
சொல்ல விரும்புகிறேன். கல்வி மேம்பாடு நான்
உரையிலே ஒன்றுமே இல்லை என்று சொன்னாலும் பற்றி கவர்னர்
மாக இந்த அரசு கல்வி மேம்பாட்டைப் கூட நிச்சய
கொள்ளும் என்ற நம்பிக்கை இருக்கிறது. பற்றி கருத்திலே
நிலைப் பள்ளிகளிலேயும், தொடக்கப் இருந்தாலும், உயர்
இருக்கின்ற மாணவர்களுக்கு மருத்துவ பள்ளிகளிலேயும்
அவர்களுக்குச் சர்ட்டிபிகேட் தர சோதனை செய்து,
பட்ஜெட்டிலே நான் வைத்தேன். வேண்டுமென்ற கோரிக்கையை
ரவர்கள் மிக்க அக்கறையோடு மாண்புமிகு கல்வியமைச்ச
கொண்டார்கள். ஆனால் அதிலே குறிப்பெடுத்துக்
முடிவும் வரவில்லை. இதுவரை அதற்கான ஒரு
நீங்கள் கவனித்து இப்படிப்பட்ட சூழ்நிலைகளையெல்லாம்
கேட்டுக் கொள்கிறேன். ஆவன செய்ய வேண்டுமென்று நான்

அடுத்து, எதிர்பாராச் செலவு நிதியத்திலிருந்து ஏராள
மான பணம் பல்வேறு மானியங்களுக்கு மாற்றப்பட்டிருப்ப
தாக இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது. நானும் அதையெல்லாம்
கணக்குப் போட்டுப் பார்த்தேன். ஏறத்தாழ 193½ கோடி
ரூபாய் அரசு அலுவலர் ஆசிரியர்களுக்குத் தரப்பட்டிருக்கிறது
என்று சொல்கிறார்கள். ஓய்வூதியம் பெறுபவர்களுக்குத் தரப்
பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள்.

ஆனால் மாண்புமிகு முதல்வரவர்கள் ஐந்தாவது ஊதியக்
குழுவின் பரிந்துரைகளின்படியான ஊதியத்தை நிர்ணயித்து
அதற்கான நிலுவைத் தொகைகளைத் தருவதற்கு ஏறக்குறைய
400 கோடி ரூபாய்க்கும் மேலே ஆயிற்று என்று
சொன்னார்கள். நானும் பார்க்கிறேன், நாள்தோறும் ஒரு
போராட்டம்; நாள்தோறும் ஒரு உண்ணாவிரதம். இப்பொழுது
கூட ஜேக்டீ இயக்கத்தினர் இங்கே நோட்டீஸ் கொடுத்
திருப்பதாக நான் பார்க்கிறேன். ஜனவரி 12ஆம் தேதிக்குள்
முதல்வரவர்கள் அழைத்துப் பேசவில்லை என்றால் நிச்சயமாகத்
தமிழகம் தழுவிய போராட்டம் நடக்கும் என்று அவர்கள்
அறிவித்திருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** : ஒரு திருத்தம். அது
ஜனவரி 12 ஆக இருக்காது.

**பேராசிரியர் க. பொன்னுசாமி** : மாண்புமிகு பேரவைத்
தலைவரவர்களே, நன்றி. பிப்ரவரி 15ஆம் தேதியிலிருந்து
தமிழகம் தழுவிய போராட்டம் நடக்குமென்று ஆசிரியர்கள், அரசு
அலுவலர்கள் அறிவித்திருக்கிறார்கள். அது ஒரு பதட்ட
நிலையை உருவாக்கும் என்பதால் மாண்புமிகு முதல்வரவர்கள்
400 கோடி ரூபாய்க்குக் கணக்கு இருக்கிறதோ இல்லையோ,
நிச்சயமாக அவர்களுடைய முரண்பாடுகள் தீர வேண்டும், அவர்



களுடைய குறைபாடுகள் தீர வேண்டுமென்ற அளவிலே உடனடி
யாக அவர்களை அழைத்துப் பேசி நடவடிக்கை எடுக்க வேண்டு
மென்பதையும், அதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டு
மென்பதையும் இந்த நேரத்தில்.....

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி**: தலைவரவர்களே, பிப்ரவரி
1ஆம் தேதி முதல் அவர்களை அழைத்துப் பேசுவதாக ஏற்
கெனவே அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதற்குப்
பிறகு இப்படியொரு கண்டிஷன் போட்டு, போராட்டம் நடத்து
வதாக இருந்தால் அதை உறுப்பினர் ஒத்துக்கொள்கிறாரா என்
பது எனக்குத் தெரியவில்லை.

10—50 மணி

**பேராசிரியர் க. பொன்னுசாமி** : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, அனைத்து அரசு கல்லூரி ஆசிரியர்கள்
கழகத்தின் சார்பாக ஒரு இயக்கத்தின் மாநில பொதுச் செய
லாளராக இருந்தவன் என்ற முறையில் சொல்கிறேன். போராட்
டங்களில் எங்களுக்கு உடன்பாடு இல்லை. அநாவசியமாக மாண
வர்கள் பாதிக்கப்படுவதை நாங்கள் விரும்புவது இல்லை.
ஆனால், வேறு வழியில்லாமல் அவர்கள் போராட்டங்களில்
இறங்குகிற அளவிற்கு அரசு நடந்து கொள்வது சரியாக இருக்காது
என்பதை மட்டும் இந்த நேரத்தில் மாண்புமிகு முதலமைச்சர்
அவர்களின் கவனத்திற்கு உங்கள் மூலமாகக் கொண்டு வர விரும்பு
கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி** :
தலைவர் அவர்களே, அவர் முன்னாள் செயலாளராக இருந்த
தாக குறிப்பிட்டார். அப்போது ஜாக்டீ போராடுகிறபோது
அந்த கோரிக்கைக்கு ஆதரவாக ஏதாவது தெரிவித்திருக்கிறாரா
என்று தெரிவிக்க வேண்டுகிறேன்.

**பேராசிரியர் க. பொன்னுசாமி** : தலைவர் அவர்களே,
நான் அந்தக் காலத்தில் செயலாளராக இருந்தபோது மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் போராட்ட களத்
தில் இறங்கி நின்று இருந்தார்கள். இப்போது அவர்கள் அந்தக்
கருத்திலே இருக்கிறார்களா என்பதை இந்த அவைக்கு அவர்கள்
தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி** :
தலைவர் அவர்களே, அவர்கள் வைத்திருக்கிற கோரிக்கையை
இந்த அரசு நிறைவேற்றி இருக்கிறது. அவர்கள் முன்பு மத்திய
அரசாங்க ஊழியர்களுக்கு இணையான ஊதியம் கேட்டார்கள்.
அதைக் கொடுத்திருக்கிறார்கள். பிரச்சினைகளைப் பேசி தீர்த்
துக் கொள்ள வேண்டுமென்று தான் மாண்புமிகு முதலமைச்சர்

[டாக்டர் க. பொன்முடி எங்கிற [1990 சனவரி 25
தெய்வசிகாமணி]

அவர்களும், இந்த அரசும் விரும்புகிறது. அப்போது அவர்கள்
போராடுகிறபோது அந்த நியாயமான காரணத்திற்கு அனுதாபம்
கூட தெரிவிக்காமல், வேண்டுமென்றுகூட தெரிவிக்காமல்,
போராட வேண்டாம், வேண்டுமென்று கூட சொல்லாதவர்கள்,
இப்போது அவர்களுக்கு வக்காலத்து வாங்கிப் பேசுவது ஏன்
என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒரு சிறிய இடையீடு.
நீங்கள் இரண்டுபேரும் போராட்டக் களத்தில் இருந்தவர்கள்
என்பது மட்டுமல்ல. நானும் போராட்டக் களத்திலே இருந்
தவன். 1978 வாக்கிலே மூன்று தடவைகள் சிறைச்சாலையிலே
இருந்திருக்கிறேன்.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே,
பாயின்ட் ஆப் ஆர்டர். வர வர அமைச்சர்கள் பதில் சொல்
கிற அமைச்சர்களாக இல்லாமல் கேள்வி கேட்கிற அமைச்சர்
களாக மாறி வருகிறார்கள். அவர்கள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இலக்கணத்திலே கேள்வி
கேட்பதும் ஒரு விடை என்று இருக்கிறது. (சிரிப்பு).

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : தலைவர் அவர்களே,
அமைச்சர்கள் எல்லோரும், முதலமைச்சர் உள்பட தாய்
உள்ளத்தோடு நடந்துகொள்ள வேண்டும். தாய் புரிந்து கொள்
வாள், தாரம் கேள்வி கேட்பாள்.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது Point of order-
இல் வராது.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே
போராட்டங்கள் நடைபெற வேண்டுமென்று விரும்புகிறவர்கள்
அல்ல நாங்கள். போராட்டங்கள் தவிர்க்கப்பட இயலாத நிலை
யில் நடைபெற்று தமிழகத்திலே பதட்ட நிலை வரக்கூடாது
என்ற கருத்தின் அடிப்படையில் தான் சொல்கிறேன். தலைவர்
அவர்களே, இடையிலே வருகிற குறுக்கீடுகள் என்னுடைய
நேரத்தை எடுத்துக் கொண்டிருக்கின்றன......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுக்கீடுகளுக்கும்
சேர்த்துதான் 10 மணித்துளிகள்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, இது
நியாயமான தீர்ப்பாக இருக்காது என்ற எண்ணம் எனக்கு ஏற்
படுகிறது.



1990 சனவரி 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தீர்ப்புகளை விமர்சிக்க
மாட்டீர்கள் என்றே நம்புகிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே, அவர்
களுடைய கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு இந்த அரசு உட
னடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற என்னுடைய கருத்
தைத் தெரிவித்துக் கொள்கிறேன். அடுத்து, இலவச அரிசி தரு
வது பற்றி நான் ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். பாலித்தீன்
பை வாங்கினோம் என்று 25 இலட்சம் ரூபாயும், 83 இலட்சம்
துணிப்பைகள் வாங்கினோம் என்று ஒரு கோடி ரூபாயும் செல
வழித்து இருக்கிறீர்கள். இப்படிப்பட்ட செலவினங்களை தயவு
செய்து நீங்கள் குறைத்துக் கொண்டு, ஏழை எளிய மக்களுக்கு
வழங்குகிற அரிசியின் விலையைக் குறைக்க முடியுமா என்ற
கருத்தை நீங்கள் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கி
றேன். அடுத்து, குடும்ப அட்டைகள் அச்சிடுவதற்கும், பணி
யாளர்களுக்கு........(மணியடிக்கப்பெற்றது) ஐந்து மணித்
துளிகள் எனக்கு போதும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கண்டிப்பாக ஒரு மணித்
துளி மட்டும் தான் வழங்கப்படும்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : அதற்காக ஏறத்தாழ 61
இலட்சத்து 74 ஆயிரம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது என்று
குறிக்கப்பட்டிருக்கிறது. அந்த அட்டைகள் எந்த வீட்டிற்கும்
சென்று சேரவில்லை. புதியதாக கேட்டாலும் கிடைப்பதில்லை.
இனிமேல் தருவார்களா என்ற நம்பிக்கையும் இல்லாமல் இருக்
கிறார்கள். அதுமட்டுமல்ல வறட்சி நிவாரணத்தைப் பற்றி ஒன்
றைச் சொல்ல விரும்புகிறேன். வறட்சி நிவாரணம் என்று வரு
கிறபோது உண்மையில் எங்கே வறட்சி இருக்கிறது என்று தெளி
வாகக் கண்டறிந்து ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமே தவிர,
ஒரு சில இடங்களில் நடைபெறுவதைப் போல தவறான நட
வடிக்கைகள் இருக்கக்கூடாது. அடுத்து, வெள்ள நிவாரணம்
பற்றிச் சொல்லும்போது, உள்ளபடியே என்னுடைய பகுதியில்
வெள்ள நிவாரணப் பணிகள் ஓரளவிற்கு நடந்தன. அங்கே தான்
வெள்ளம் வந்தது. தேர்தல் முடிந்த அன்றிலிருந்து மழை
பெய்து ஆறுகள், குளங்கள் உடைப்பெடுத்து, நாங்கள் கேட்ட
போது ஒரு தொகை ஒதுக்கப்பட்டது. மிகச் சிறு தொகை.
அது போதாத காரணத்தால் உடைபட்ட ஆறுகள், குளங்கள்
இன்னும் அடைக்கப்படாமல் இருக்கின்றன. ஆகவே, நீர் சேதா
ரம் அடைகிற அளவிற்கு இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்
நிலையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனித்து ஏற்
பாடு செய்ய வேண்டுமென்று தெரிவித்து.................

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வாக்கியத்தை முடிக்கலாம்.
பேராசிரியர் வாக்கியத்தை முடிப்பதில் வல்லவர். (சிரிப்பு)

[1990 சனவரி 25

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே,
வாக்கியம் தொடர் வாக்கியமாக இருக்கிறது. ஒரே ஒரு நிமிடம்
அதிகமாகத் தர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த உறுப்பினரை
அழைத்து விடுவேன், முடித்து விடுங்கள்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : தலைவர் அவர்களே,
கிராம குடிநீர் அபிவிருத்திக்கு அதிகமாக நிதியை ஒதுக்குங்கள்
என்னுடைய தொகுதியிலே சிப்காட் தொழிற்பேட்டை ஒன்றை
ஏற்பாடு செய்து தாருங்கள், ஸ்கூல் பில்டிங்ஸ் ஒன்றுமில்லை,
அதையெல்லாம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக்கொண்டு,
காவல் நிலையங்களில் மேசை, நாற்காலிகள் கூட இல்லையென்று
சொல்கிறார்கள். ஸ்டேஷனரிஸ் வேண்டுமென்றால் நீங்கள் வாங்
கிக் கொண்டு வாருங்கள் என்று சொல்கிறார்கள். அதற்கு ஏற்
பாடு செய்யவேண்டுமென்று கேட்டு முடித்து விடுகிறேன்.

10-55 மணி

திரு. அ. இரகுமான்கான் : பேரவைத் தலைவர் அவர்களே,
1989-90 ஆம் ஆண்டு முதல் துணை மதிப்பீட்டிற்கு 587 கோடியே
87 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. சில
இந்திய அண்ணா தி.மு.க. ஆட்சி நடைபெற்றபோதும், இது
போன்ற துணை மதிப்பீடு வைக்கப்பட்டு இருக்கிறது. காங்கிரஸ்
ஆட்சி நடைபெற்றபோதும் வைக்கப்பட்டு இருக்கிறது.
பொண்ணு ஊருக்குப் புதுசு என்பதைப் போல, உறுப்பினர்
புதிதாக வந்திருக்கிற காரணத்தால், ஏதோ திராவிட முன்னேற்
றக் கழக ஆட்சியில் சரியாக திட்டமிடாத காரணத்தால், துணை
மதிப்பீடு வைத்திருப்பதைப் போல, அவர்கள் பேசினார்கள்.
அவர்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும், அது தவறான கருத்து
என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன்.

குறிப்பாக தலைவர் கலைஞர் அவர்கள் முதல்வரானதற்குப்
பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு உதயமானதற்குப்
பிறகு என்ன செய்யப்பட்டிருக்கிறது என்பதை எதிர்க்கட்சி வரி
சையில் தலைவர்களாக இருக்கக்கூடியவர்கள் சபையிலே வந்து
நின்று கேட்டால், ஒரு உற்சாகமாக, மகழ்ச்சியாக, பூரிப்பாக
பலரும் பதில் சொல்வதற்கு வசதியாக இருக்கும். ஆனால்
சென்னை கடற்கரையிலே நின்றுகொண்டு பதில் சொல்ல
முடியாத ஒரு சூழ்நிலையில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்
அவர்கள் பேசியிருக்கிறார்கள். பத்திரிகையிலே இன்றைக்கு
அவைகள் பிரசுரம் ஆகியிருக்கின்றன. குறிப்பாக என்ன செய்
யப்பட்டிருக்கிறது இந்த ஆட்சியில் என்று கேட்டதற்காக நான
விளக்கம் சொல்ல விரும்புகிறேன். (குறுக்கீடுகள்.)



1990 சனவரி 25]

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வரிக்கு வரி மறுப்பு
வேண்டாம். பொதுவாகப் பேச வேண்டாம். மானியக்
கோரிக்கைகளின் மீது பேசுங்கள்.

திரு. அ. இரகுமான்கான் : என்ன சாதிக்கப்பட்டு இருக்
கிறது என்று கேட்பவர்களுக்கு பதில் சொல்ல விரும்புகிறேன்.
ஓய்வு ஊதியம் பெற்றிருக்கக்கூடியவர்களுக்கெல்லாம் 100 ரூபாய்
பொங்கல் பரிசாக கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் அரசு,
தி.மு.க. அரசு அறிவித்திருக்கிறதே, இது ஒரு காரியமும் செய்யா
ததற்கு அடையாளமா. இதற்காக நிதி ஒதுக்கீடு துணை மானி
யத்திலே ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஏறத்தாழ இவைகளுக்கு
2.07 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது.

அதைப் போலவே என்ன செய்தார்கள் என்று கேட்பவர்
களுக்குச் சொல்கிறேன். ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு ஓய்வூ
ஊதியத்தை உயர்த்தியதினாலே, 250 ரூபாயிலிருந்து 300 ரூபா
யாக ஆக்கியதினாலே, 70 கோடி ரூபாய் இந்த துணை மானிய
மதிப்பீட்டிலே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது.

அதுமட்டுமல்ல, மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையாக
மாநில அரசு ஊழியர்களுடைய சம்பள விகிதம் அதிகப்படுத்தப்
பட்ட காரணத்தாலே, 120 கோடி ரூபாய் கொடுக்கப்பட்டு இருக்
கிறது. அந்தக் காலத்திலே கேட்டார்கள். என்.ஜி.ஓ.-க்களு
டைய மனைவிமார்கள் ஐந்து நட்சத்திர ஓட்டலிலே தங்க
வில்லையா, பட்டுச்சேலை உடுத்தவில்லையா, டெம்பரரி லேபரர்
களாக இருப்பவர்கள், ஏழை எளியவர்களுடைய சம்பளத்தைப்
பார்க்கக்கூடாதா என்று கேட்டார்கள். சிவ இளங்கோ போன்ற
வர்கள் உண்ணாவிரதம் இருந்தால், தற்கொலை முயற்சி செய்வ
தாக வழக்கு போட்டார்கள். போராட்டம் நடத்தினார்கள்.
ஆனால் திராவிட முன்னேற்றக் கழக அரசு உதயமானதற்குப்
பிறகு, மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கு இணையாக மாநில
சர்க்கார் ஊழியர்களுக்கு சம்பளம் வழங்க, இந்தத் துணை
மதிப்பீட்டிலே ஏறத்தாழ 120 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு
இருக்கிறது. இதிலே இன்னும் போதவில்லை என்ற பிரச்
சினை இருக்கலாம். அதைப் பேசித் தீர்ப்பதற்கு எங்களுடைய
முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.
கடற்கரையிலே நின்று பேசுகிறவர்களைக் கேட்கிறேன், இது
சாதனையா இல்லையா ?

அதைப்போலவே இன்னொன்றையும் தெரிவிக்க விரும்பு
கிறேன். இலவசக் காலணித் திட்டம், எம்.ஜி.ஆர். அவர்கள்
கொண்டு வந்த திட்டம். கலைஞர் அவர்கள் முதலமைச்சராக
வந்ததற்குப் பிறகு, திராவிட முன்னேற்றக் கழக அரசு இதைக்
கைவிட்டுவிட்டதாகச் சொன்னார்கள். இங்கேயிருக்கக்கூடிய

துணை மதிப்பீட்டை மாண்புமிகு உறுப்பினர்கள் படித்துப்
பாருங்கள். நான் சப்ஜெக்டிலேயிருந்து, பிரச்சினையிலேயிருந்து
பொதுவாகவோ, அல்லது வேறு எங்கோ சென்று பேசவில்லை.
துணை மதிப்பீட்டிலே இருக்கிறது. எம்.ஜி.ஆர். அவர்கள்
கொண்டுவந்த இலவசக் காலணித் திட்டம் கைவிடப்படவில்லை.
இன்னும் சொல்லப் போனால், அது தொடர்கிறது. ஏறத்தாழ
3.17 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டு இருக்கிறது.
ஆனால் தேர்தலிலே பொய்ப்பிரசாரம் நடைபெறுகிறது.
பொய் சொல்லலாகாது பாப்பா என்று பாரதி சொன்னார்.
ஆனால் சில பாப்பாக்கள் வெளியே பொய் சொல்லிக்கொண்
டிருக்கிறார்கள்.

அதைப்போலவே, இன்னொன்றையும் நான் இங்கே தெரி
விக்க விரும்புகிறேன். மேல்நிலைப் பள்ளிகளுக்காக இந்த
அரசாங்கம் எவ்வளவோ பலகாரியங்களைச் செய்திருக்கிறது.
நான் சொல்வது பொதுவான பிரச்சினை அல்ல, துணை மதிப்
பீட்டிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர்கள், நான்
சப்ஜக்டை விட்டுப் பேசுவதாக கருதக்கூடாது. இந்த 95
மேல்நிலைப்பள்ளிகளுக்கு உயர்நிலைப்பள்ளிகளுக்கு ரூ. 51·65
லட்சம் துணை மதிப்பீட்டிலே ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்
கிறது.

இதிலே ஒரு வேடிக்கை என்னவென்றால் விவரம் தெரியாத
வர்கள் எல்லாம் தலைவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக
நான் வருத்தப்படுகிறேன். காரணம் அரசாங்கம் ஒரு ஜி.ஓ.
வெளியிட்டது. அதிலே மிகத் தெளிவாகச் சொல்லியிருக்கிறது.
மேல்நிலைப்பள்ளியிலே யார் பெயிலானாலும் ஒரு குரூப்பிலோ,
அல்லது ஒரு பாடத்திலோ பெயிலானாலும் அவர்கள் என்ஜினிய
ரிங் காலேஜிலோ, அல்லது மெடிக்கல் காலேஜிலோ சேருவதற்கு
வசதியாக, பழையபடி, அந்த சப்ஜெக்ட்டில் மறுபரீட்சை எழுது
வதற்கு வாய்ப்பை அளிக்கின்ற வகையிலே 35 சதவீதம் வாங்கிய
வர்கள் எல்லாம் பரீட்சை எழுதலாம் என்று அரசாங்கம் ஜி.ஓ.
போட்டிருக்கிறது.

11-00 மணி

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரகுமான்கான்
அவர்கள் சிறு சேமிப்பினுடைய துணைத் தலைவர். இந்தப்
பக்கம் இருக்கும்போது, எதிர்க்கட்சியிலே இருக்கும்போது
எப்படி பேசினார் என்பதை ரொம்ப கூர்ந்து கவனித்துக்கொண்
டிருந்தவன். இன்றைக்கு மிக சிரமப்பட்டு பேசிக்கொண்டிருக்
கிறார்கள் என்று எனக்குத் தெரியும். நானும் அந்த சிரமத்தை
ஏற்றுக்கொண்டிருக்கிறேன். ஆனால் கடற்கரையிலே பேசிய
வருக்கு நான் பதில் சொல்கிறேன் என்பதும் பாப்பாக்கள்





என்று ஆரம்பித்து, இப்போது அரசினுடைய ஆணையைப்
பற்றி பேசிக்கொண்டிருக்கிறார்கள். அதுவும் இந்த துணை
மதிப்பீட்டிலேதான் வருகிறது. ஏனென்றால் ஜி.ஓ. வெளியிடு
வதற்குக் கூட செலவாகும். அந்தச் செலவிலேதான் வருகிறது.
அந்த விதியிலே நான் உங்களுக்கு விளக்குவதற்காகச் சொல்
கிறேன். அரசாங்கம் போட்ட அந்த ஜி.ஓ. அரசாணையிலே,
இருந்த அந்த தவறைத்தான் அன்றைக்கு சுட்டிக்காட்டப்பட்
டதே தவிர, அந்த அரசாணை இல்லை என்று சொன்னால்
அந்தப் பிரச்சினையே இல்லை. பத்திரிகையிலே எல்லாம் வந்
திருக்கிறது. அரசாணையில் ஏற்பட்ட குழப்பம்தான். குழப்
பம் இல்லையென்றால் விட்டுவிடுகிறோம். அதில் ஒன்றும்
பிரச்சினை கிடையாது. வாதத்திற்கு வாதம் வாதிக்க வேண்டு
மென்றால் அதற்குப் பதில் சொல்வதற்கு நிச்சயமாக நாங்களும்
தயாராக இருக்கிறோம்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இப்போது எதிர்க்கட்சித் தலைவராக இங்கே
இருக்க கூடிய சகோதரர் இராதா அவர்களைப்பற்றி, இன்றைய
பொழுது வரைக்கும் எனக்கு நம்பிக்கை ஊட்டுகின்ற விதத்தில்
நம்முடைய இராதா அவர்களைப் பற்றி நான் தவறாகச் சொல்ல
வில்லை. ஆனால் அவர் சொல்கின்ற விதம் வாதம் வரும் என்ப
தற்காகத்தான் சொல்கிறேன். அந்த அம்மா பேசி அந்தப்
பேச்சு பத்திரிகையில்........(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செய்தியை மட்டும்
பேசுங்கள்.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப்பள்ளிகளில் 35
பர்சென்ட் இருந்தாலே பரீட்சை எழுதலாம் என்ற ஜி.ஓ.
அரசாங்கத்தின் சார்பாக வந்ததைப் பார்க்காமல், 55 பர்சென்ட்
இருந்தால்தான் பரீட்சை எழுதமுடியும் என்ற அறிக்கை
விட்டு, அமைச்சர் வீட்டுப் பிள்ளைகளுக்கு, பெரிய இடத்து
பிள்ளைகளுக்கு மட்டுமே செய்யப்பட்டிருக்கக் கூடிய ஒரு
ஏற்பாடு மாதிரி, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு
தந்தை பெரியாரின் வடிவத்திலே வந்து இங்கே சேவை
செய்வது மாதிரி ஒரு அரசாங்க அறிக்கையை, ஒரு அரசாங்க
உத்தரவைப் படிக்காமல் செய்திருக்கிறார். அறிக்கை விட்ட
தேதிக்கு முன்பாகவே ஜி.ஓ. வந்துவிட்டது.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, அதை
நான் மறுக்கிறேன். அரசு அதை வெளியிடுகிற அன்றைக்கேஅரசு
அதிகாரி ஒருவர் ஜி.ஓ.-வை பற்றி எழுதியிருக்கிற கடிதம் இருக்
கிறது. (குருக்கீடு) நான் பொறுப்பேற்றுக்கொள்கிறேன். பொறுப்

பேற்றுக்கொண்டுதான் நான் சொல்கிறேன். அரசு அதிகாரியே தெரிவித்திருக்கிறார். இத்தனை சதவீதம் மார்க்குகள் இருந் தால்தான் பரீட்சை எழுதமுடியுமென்று. மாற்றியிருந்தால் நிச்சயமாக அதை நான் வரவேற்கிறேன், ஏற்றுக்கொள்கிறேன். அதனால் நீங்கள் யாரையோ தாக்கவேண்டுமென்பதற்காக மட்டும் ஏதோ விவரம் சொல்கிறீர்கள். (குறுக்கீடு).

திரு. அ. இரகுமான்கான் : எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடியவர் அந்த ஜி.ஓ.-வை படிக்க முடியாத அளவிற்கு யாரோ எழுதிக் கொடுத்ததைப் பேசி தமிழ்நாட்டு அரசியலில் குழப்பம் உண்டாக்கக் கூடாது. அதைத்தான் நான் சொல்ல வருகிறேன். கல்வியமைச்சர் ஒரு அறிக்கை விட்டிருக்கிறார், உடனடியாக,

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, பாய்ன்ட் ஆப் ஆர்டர். எதிர்க்கட்சித் தலைவர் எழுந்து நின்று பேசுகின்றபோது அவர் பேசிய கருத்துக்குப் பின்னாலே மாண்பு மிகு உறுப்பினர் அவர்கள் பதில் சொல்லலாமே. அவருடைய அந்தஸ்தை அவர் புரிந்திருப்பார் என்று நான் கருதுகிறேன்.

திரு. அ. இரகுமான்கான் : அவர் என்னுடைய பழைய நண்பர். எல்லாவிதத்திலும் அவருடைய அந்தஸ்தைப் பற்றி அந்தக் காலத்திலேயே எனக்குத் தெரியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரகுமான்கான் அவர்களுக்கு 2 மணித் துளிகள்தான் இன்னும் இருக்கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : தலைவர் அவர்களே, துணை மதிப்பீடு போய் இப்போது வாதம் என்னுடைய பிரச்சினையில் ஏற்பட்டிருக்கிறது. (சிரிப்பு) பேரவைத் தலைவர் அவர்களே, தயவு செய்து குறை சொல்ல வேண்டும், தாக்க வேண்டுமென்ற நிலையில் இதை அரசியல் ஆக்கவேண்டாம். கருத்துக்கள் சொல்ல வேண்டிய நேரத்தில் கருத்துக்கள் சொல்வதுதான் நல்லது.

திரு. அ. இரகுமான்கான் : மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொல்லிய பிரச்சினைக்கு இந்த அளவிலே அதை ஒரு வாதப் பொருளாக ஆக்காமல், அடுத்து தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சர் ஆனதற்குப் பிறகு இப்போது கழக அரசு என்ன செய்தார்கள் என்பதற்காகத்தான் இந்த விளக்கம். 'Veterinary and Animal Science University உலகத்திலேயே இதுதான் இரண்டாவது, இந்தியாவிலே இது தான் முதல். இன்னும் சொல்லப்போனால் அதைப் போலவே





அன்பில் தர்மலிங்கம் அவர்கள் பெயரால் வேளாண்மைக் கல்லூரி, இவைகள் எல்லாம் செய்யக் கூடிய காரியங்கள் தப்பானவை களா? வரவேற்கக்கூடாதவைகளா என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

அதுமட்டுமல்லாமல் இன்னொன்றை தெரிவித்து என்னுடைய பேச்சை முடிக்க விரும்புகிறேன். குறிப்பாக காவிரிநீர் பிரச்சினை யில் ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்கிறார்களே. நேற்றுதான் முதலமைச்சர் அவர்கள் எல்லா விளக்கத்தையும் கொடுத்தார்கள்.

11-05 மணி

இது எல்.ஐ.சி. பில்டிங்கையே சோற்றிலே புதைக்கிற வேலை மாதிரி பெரிய பொய் பிரச்சாரம் நடக்கிறது. அதைப்போலவே மாநகராட்சி தேர்தலுக்கு பல காரணங்கள் சொல்லி 13 வருஷங்களாக நீட்டித்துக்கொண்டே வந்தார்கள். போட்டோ ஐடென்ட்டி கார்டு கொடுக்க வேண்டுமென்று, மழை பெய்தது, மகளிருக்கு ஒதுக்கீடு என்று பல காரணங்களைச் சொல்லி நீடித் துக்கொண்டே வந்தார்கள். அதைப்போலவே கூட்டுறவுத் தேர்தலும் நடக்கவில்லை. பல காரணங்களைச் சொன்னார்கள். ஆனால் இப்போது செப்டம்பர் 30-க்குள், 1990-ல் தேர்தல் நடத்தப்படும் என்று டேட் பிக்ஸ் பண்ணி சொல்லியிருக் கிறோம். ஆனாலும் 13 வருஷங்களாக நீங்கள் என்ன பண்ணிக் கொண்டிருந்தீர்கள், ஆகையினால் இன்றைக்கு சாத்தான் வேதம் ஓதுகிறது என்று சொல்வதைப் போல, ஊமைப்பெண், தேன்குழலி என்று தன்னைச் சொல்லிக்கொள்வது போல கையாலாகாத நபர்கள் இன்றைக்கு பொய் பிரச்சாரம் செய் வதற்காக இதுபோன்ற காரியங்களைச் செய்கிறார்கள் என்று சொல்லி, நேரம் இதுவே போதும் என்று கருதி நன்றி தெரிவித்து உரையை நிறைவு செய்கிறேன்.

*திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. நமது முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டிருக்கிற இந்த உபமானியக் கோரிக்கை மீது ஒரு சில கருத்துக்களைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். (குறுக்கீடு) மைக்கைப் போட்டிருக்கிறார்கள். எனக்குத்தான் தொண்டை கட்டிப் போச்சு......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சொக்கர் அவர்கள் கவனிக்க வேண்டும். எல்லா ஏற்பாடுகளும் நாங்கள் செய் திருக்கிறோம். அக்காவுக்குத்தான் தொண்டை கட்டியிருக்கிறது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : உப மானியக் கோரிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல நினைக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்ட

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1990 சனவரி 25

இந்த உப மானியக் கோரிக்கையில் கிட்டத்தட்ட 500 கோடிக்கும்
மேற்பட்ட ரூபாய் ஒதுக்கப்பட்டு இருக்கிறது. 1961லே மாண்பு
மிகு முதலமைச்சர் அவர்கள் இங்கே இருந்தார்கள். மாண்புமிகு
கல்வியமைச்சர் அவர்கள் இருந்தார்கள். அன்றைக்கு திரு. சி.
சுப்பிரமணியம் அவர்கள் ஆளும் கட்சியினுடைய தலைவராக
இருந்தபோது 100 கோடி ரூபாய் கூட வருமானத்தை
எட்டவில்லையே என்று சொன்னார்கள். அந்த 100 கோடி
ரூபாய் போதாது என்ற நிலையில் கூட எங்கெங்கெல்லாம் அணை
கள் கட்ட வேண்டுமோ, எங்கெங்கெல்லாம் தொழிற்சாலைகள்
உண்டாக்க வேண்டுமோ, எங்கெங்கு எல்லாம் வேலை வாய்ப்புக்
கொடுக்க வேண்டுமோ அத்தனை திட்டங்களையும் அன்றைக்கு
அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்தார்கள்.

ஆனால் இன்றைக்கு வளர்ந்திருக்கக்கூடிய சமுதாயத்திலே
நமக்கு எவ்வளவு பணம் இருந்தாலும் கூட எடுக்கக்கூடிய திட்டங்
களுக்குப் பணம் போதாத நிலை இருக்கிற காரணத்தாலேதான்,
இந்த உப மானியக் கோரிக்கையெல்லாம் 500 கோடிக்கும்
மேலே ஒதுக்கீடு செய்து இங்கே வைக்கப்பட்டிருக்கிறது.

இதிலே மாண்புமிகு தலைவர் அவர்கள் நான் எழுந்திருப்ப
தற்கு முன்பே வேறு எந்த விஷயத்தையும் பேசக் கூடாது என்று
சொல்லி விட்டார்கள். பேசுவதற்கு நான் விரும்பவும் இல்லை,
எங்களுடைய கொரடா கூட வேண்டாம் என்று சொல்லி
விட்டார்கள்.

இன்றைக்கு இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் பள்ளிக்கூடத்
திலே மேம்படுத்துவது என்று எடுத்துக் கொண்டால், 8வது
வரைக்கும் இருக்கும் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாகவும்
ஆக்குகிறோம். உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளி
யாக்குகிறோம். அப்படி உயர்த்தும்போது அவர்களுக்கு
(குறுக்கீடு) என்ன சார் இப்படி, நான் ஒன்றுமே சொல்லவில்லை
எதற்காக எழுந்திருக்கிறீர்கள்.

திரு. எம். அப்துல் லத்தீப் : தலைவர் அவர்களே, 1969-வது
ஆண்டு துணை மதிப்பீட்டைக் குறித்து மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் சொல்லுகிறார்கள். 1960லே ரூபாயினுடைய மதிப்பு
100 பைசா, இப்போது 1990-லே ரூபாயினுடைய மதிப்பு 10
பைசாதான்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : தலைவர் அவர்களே,
நான் 1969 ஐப் பற்றிச் சொல்லவில்லை. மாண்புமிகு உறுப்பினர்
அவர்கள் தவறாகப் புரிந்துக் கொண்டிருக்கிறார்கள். 61-வது
ஆண்டு சப்ளிமெண்டரி பட்ஜெட்டைப் பற்றித்தான் சொன்
னேன். அன்றைக்குதான். திரு. சி. சுப்பிரமணியம் அவர்கள்



1990 சனவரி 25] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

இருந்தார்கள். அதனால் ஒரு தலைவர் தெரியாமல் சொல்ல
வேண்டாம். அந்தப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளியாக்கும்
போது அவைகளுக்கு ஆசிரியர்களையும் நியமித்தார்கள்.
(குறுக்கீடு). I am not yielding (குறுக்கீடு).

மாண்புமிகு பேரவைத் தலைவர்: Point of order ஒன்றும் இல்லை.
உட்காருங்கள். திருமதி பொன்னம்மாள், நீங்கள் பேசுங்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : அந்தப் பள்ளிகளை உயர்
நிலைப் பள்ளிகளாக ஆக்கும்போது அவர்களுக்குத் தேவையான
ஆசிரியர்களையும் ஒதுக்கி கொடுப்போமேயானால் சாலச் சிறந்த
தாக இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

பிறகு 1972 என்று நினைக்கிறேன். மாண்புமிகு இன்றைய
முதல்வர் அவர்கள் அன்றைய முதல்வராக இருந்தார். வீடுகளைக்
கட்டுவதற்கு தாட்கோ திட்டத்தின் மூலமாக, 50 ஆயிரம் வீடு
களோ என்னவோ கட்ட வேண்டுமென்று ஒரு நிலையை உரு
வாக்கினார்கள். அரிசன மக்களுக்காக. அந்த நிலையை நான்
வரவேற்கிறேன். அதிலும் கூட 30 ஆயிரம் வீடுகள் தான் கட்ட
பட்டிருப்பதாகச் சொல்லுகிறார்கள். இன்றைக்கு தாட்கோ
திட்டமே இல்லாமல் இருப்பது மிக வேதனை அளிக்கக் கூடிய
ஒன்று. உங்கள் காலத்திலே கொண்டு வந்தது. மீண்டும் உங்கள்
காலத்திலே அந்த தாட்கோ திட்டத்தை மறு பரிசீலனை செய்து
கொண்டு வருவீர்களேயானால் அரிசன மக்களுக்கு வீடுகளைக்
கட்டுவதற்கு சாலச் சிறந்ததாக இருக்கும்.

இப்போது பஞ்சாயத்துக்கள் மூலமாக கட்டிக் கொடுக்கிறார்
கள். நான் ஏற்கெனவே இந்த மன்றத்திலே பேசியிருக்கிறேன்.
பஞ்சாயத்து தலைவர்களே காண்டிராக்டர்களாக இருந்தால்
அந்த வேலை எப்படி நடக்கும். அந்த வேலை ஒழுங்காக நடக்க
வில்லை என்று சரியாக சிமெண்ட் போன்றவைகள் இல்லை
என்று எந்த அதிகாரிகள் சொல்ல முடியும்? இந்த 40 ஆயிரம்
அல்லது 45 ஆயிரம் வீடுகளை கட்டுகிறோம். அவைகளை
பஞ்சாயத்து தலைவர்களால் கட்டப்படுவது சரியாக இல்லை.
நான் ஏற்கெனவே சொல்லியிருக்கிறேன். அதை மீண்டும் மீண்
டும் இந்த அவையிலே சொல்கிறேன். முதல்வர் அவர்களும்
மற்ற சம்பந்தப்பட்ட அமைச்சரும் இதை பரிசீலனை செய்து
தாட்கோ மூலமாகவே அரிசனங்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்க
நடவடிக்கை எடுத்தால் அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று
இந்த நேரத்திலே கூறிக் கொள்கிறேன்.

அதற்கு அடுத்து ரூரல் ஹவுசிங் ஸ்கீம் என்று ஒன்று இருக்
கிறது. அதில் பல ஆயிரக்கணக்கான வீடுகள் கட்டப்படு
கின்றன. அதிலே முதலிலே 2,500 ரூபாய் கொடுத்தார்கள்.

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1990 சனவரி 25

பிறகு 4,000 ரூபாய் கொடுத்தார்கள். அதற்குப் பிறகு 6,000
ரூபாய் கொடுத்தார்கள். நான் ஏற்கெனவே முந்தைய அரசாங்கம்
இருக்கும்போதே இதுபற்றி சட்டமன்றத்திலே சொல்லியிருக்
கிறேன். அதாவது அந்த வீடுகள் முழுவதுமாக கட்டப்படாமல்
பல வீடுகள் பாதியிலேயே நிற்கின்றன. ஏற்கெனவே இருந்த
குடிசை வீடுகளும் போய் புதிதாக கட்டப்படுகிற காரை வீடு
களும் முடிக்கப்படாமல், பாதி கட்டப்பட்ட நிலையில் இருக்
கிறது என்று சொல்லி 72 இலட்சம் ரூபாய் சாங்ஷன் செய்யப்
பட்டது. அந்த சாங்ஷன் செய்யப்பட்டபணம் இதுவரைக்கும் அந்த
இலாக்காவிற்குச் சென்றடையவில்லை. எனவே முதலமைச்சர்
அவர்கள் அதிலே கவனம் செலுத்தி அரைகுறையாகவிருக்கின்ற
கட்டிடங்களை முழுவதுமாக கட்டிக் கொடுப்பதற்கு நடவடிக்கை
எடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைக் கூறிக்
கொள்ள விரும்புகிறேன்.

அதே போன்று நீர்ப்பாசனம். அதற்கும் நாம் பணம்
ஒதுக்கியிருக்கிறோம். இருந்தாலும்கூட நீர்ப்பாசனத்தின்
மூலமாக ஏற்கெனவே கட்டப்பட்ட அந்த அணைகளில்
எல்லாம் வரத்துக் கால்வாய் கட்டப்படாமல் அதாவது
கால்வாய்களில் சப்ளை சானல் கட்டப்படாத காரணத்
தினாலே இன்றைக்கு அந்த மழையிலிருந்து தேங்கக்கூடிய தண்
ணீர், டேமிலே தேங்கக்கூடிய தண்ணீர் எங்கேயோ கீழே போய்
மீண்டும் வைகையிலே விழுகிறது என்று எங்கள் ஜில்லாவிலே
பல குறைபாடுகள் சொல்கிறார்கள். எனவே இதையெல்லாம்
சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தாக்கீது அனுப்பி அவர்கள்
சென்று நேரடியாகப் பார்த்து வரச் செய்து, எங்கேயெல்லாம்
பணம் செலவழித்து அரசு டேம்கள் கட்டியிருக்கிறதோ எந்த
டேம்களில் தண்ணீர் தேங்காமல் ஸ்கேட்டடாக வெளியில் செல்
கிறதோ அங்கெல்லாம் நடவடிக்கை எடுத்தால் சாலச் சிறந்த
தாக இருக்கும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக தொழில் துறை. 11-10 மணி
முதல்வர் அவர்களை நான் ரொம்ப பாராட்டுகிறேன். நம்முடைய மாண்புமிகு
அவர்கள், தொழில் பற்றி கேள்வி கேட்கும்போது காரணம்
கோட்டை தொகுதியை என்னுடைய உள்ளத்திலே நிலக்
யிருக்கிறேன் என்று சொன்னார்கள். 'என்னுடைய உள்ளத்திலே நிறுத்தி
நிறுத்தியிருக்கிறேன். அங்கே நிச்சயமாக ஒரு தொழிற்சாலை
அமைக்கப்படும். என்று சொன்னார்கள். என்னவோ தெரிய
வில்லை. ஹோம் செக்கரட்டரி பார்த்தார்கள். கலெக்டர்
அவர்கள் பார்த்தார்கள். அங்கே ஒரு தொழிற்சாலை இதுவரைக்
கும் அமைப்பதற்கான சாத்தியக் கூறுகளே செய்யவில்லை என்
பதை பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். எனவே அதிலே
சற்று கவனம் செலுத்தி செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். காங்கிரஸ் ஆட்சியின் போது பெல் நிறுவனம், பெரம்பூர்



1990 சனவரி 25] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

கோச் பாக்டரி என்று தொழிற்சாலைகளை ஆரம்பித்த காரணத்தினாலே தான் இலட்சக்கணக்கான மக்கள் அங்கு பிழைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பை கொடுத்திருக்கிறோம். இந்தச் சூழ்நிலையிலே ஒரு வேலை வாய்ப்பை அளிக்கக்கூடிய அளவிலே இந்தத் தொழில்கள் அமைய வேண்டும் என்பதையும், எப்படியாவது நிலக்கோட்டைக்கு ஒன்றை அமைத்துக் கொடுக்க வேண்டும் என்று நான் மக்கள் சார்பிலே மாண்புமிகு முதலமைச்சரைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, நான் திருமதி பொன்னம்மாள் அம்மையார் அவர்களிடத்திலே இதைச் சொல்லியிருக்கிறேன். ஒரு கூட்டத்திலே கூட, ஒரு அரசு விழாவிலே கூட அந்த உறுதியை அளித்திருக்கிறேன். இப்பொழுது என்னையும் கட்டுப்படுத்துகின்ற வகையில் அந்த உறுதியை அளிக்க விரும்புகிறேன் வருகிற வரவு-செலவுதிட்டத்தில் நிலக்கோட்டை தொகுதியில் கண்டிப்பாகத் தொழில் துறை வளர்ச்சிக்கு ஒரு திட்டம் தீட்டப்படும். இப்படி நான் இங்கே சொன்னால் தான் அதை அதிகாரிகளும் எடுத்துக் கொண்டு, நானும் அதிலே கட்டுப்பட்டவன் ஆவேன். நிச்சயமாக அதை எதிர்பார்க்கலாம். (மேசையைத் தட்டும் ஒலி)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்: ரொம்ப நன்றி. மக்கள் சார்பிலே நன்றி. (குறுக்கீடு) தொண்டை சரியில்லை. இந்த ஆட்சியில் குடிநீர்ப் பிரச்சினையை தீர்த்தாக வேண்டும். ஏனென்றால் நானும் ஒரு பெண். அதுவும் ஹரிஜன சமுதாயத்திலே பிறந்தவள். தண்ணீர் இல்லாமல் இந்தப் பெண்கள் அலைகின்ற அலைச்சல் இருக்கிறதே, அதைப் பார்க்க மிகவும் கஷ்டமாக இருக்கிறது. நாம் போர் போடுகின்றோம். 100 அடி, 150 அடி போடுகின்றோம். அங்கே கிரவுண்ட் வாட்டர் இல்லை அந்த கிரவுண்ட் வாட்டர் இல்லாத காரணத்தினாலே கொஞ்சம் தண்ணீர் இருந்தால் கூட சில மாதங்களிலே தண்ணீர் இல்லாமல் வற்றிப் போய்விடுகிறது. எனவே அவர்கள் எங்கும் செல்ல முடியவில்லை. இந்தச் சூழ்நிலையிலே தயவுசெய்து எங்கெங்கெல்லாம் தண்ணீர் ஸோர்ஸஸ் இருக்கிறதோ, அந்த ஸோர்ஸைப் பார்த்து அங்கே பெரிய இராட்சஸ கிணறுகளைப் போட்டு, அந்தக் கிணறுகளின் மூலமாக குழாய்களை அமைத்து, காம்பரஹென்ஸ்வ் ஸ்கீம்—கூட்டுக் குடிநீர் திட்டத்தின் மூலமாகச் செய்வதற்கான நடவடிக்கையை எடுத்தால் தான் இந்தக் குடிநீர்ப் பிரச்சனையை நாம் தீர்க்க முடியும் என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன் .... ..(மணியடிக்கப் பெற்றது.) உட்கார்ந்து கொள்கிறேன். 4 மணித்துளிகள். நீர்ப்பாசனத்திற்காக என்னுடைய தொகுதிக்கு அவர்களை நான் கூப்பிட்டுக் கொண்டேஇருக்கிறேன். நிலக்கோட்டைத் தொகுதி மிகவும் மோசமான தொகுதி. நான்கூட அப்போதுசொன்னேன். வறட்சி நிவாரணத்துக்கு நாம் எவ்வளவோ வேலைகள்

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1990 சனவரி 25

கள் செய்கிறோம். அந்த வறட்சியின் போதும் நாங்கள் மிகவும்
பாதிக்கப் பட்டுவிட்டோம். இப்பொழுது ஊரிலே எல்லாம்
மழை பெய்து, வெள்ளம் போய்க்கொண்டிருக்கிறது. ஆனால்
நிலக்கோட்டை தொகுதியில் வறட்சி தாண்டவமாடுகிறது.
1982–83 என்று நினைக்கிறேன். அப்போது வைகையிலே
மிகப் பெரிய வெள்ளம் வந்தது. அந்த மிகப் பெரிய
வெள்ளத்தினால் என்னுடைய தொகுதியில் ஒரு பகுதி
முழுவதும் அடித்துக்கொண்டு போனது. ஆயிரக்கணக்கான
வீடுகள் அழிக்கப்பட்டு, அந்தக் கூரைகள் எல்லாம் அழிக்கப்
பட்டு மண் சுவரே இல்லாமல் ஆகிவிட்டது. அதையெல்லாம்
ஆர். எல். ஈ. ஜி. பி. திட்டத்தின் மூலமாக,
அவுசிங் ஸ்கீம் மூலமாக வீடு கட்டுவதற்கான ரூரல்
எடுக்க வேண்டும். அதுபோன்று நடவடிக்கை
களுக்கு கிணற்றிலே தண்ணீர் இல்லை. இன்றைக்கு விவசாயி
இல்லாத காரணத்தினாலே—ஒரு ஏக்கர் இரண்டு ஏக்கர் தண்ணீர்
துக்கொண்டிருந்தவர்கள் பருத்தி விவசாயம் வைத்
அந்த பருத்தி விவசாயம் செய்யும்போது அதிலே செய்தார்கள்.
புழுக்கள் பெரிய புழுக்கள் வளர்ந்து அந்த பருத்தி முழுவதுமாக கூட்டுப்
அழிக்கப்பட்டு விட்டது. அவர் கூட நேற்றைக்கு பதில் சொல்லி
யிருப்பார் என்று நினைக்கிறேன். அதிலே அந்த விவசாயி
களுக்கு ஒரு நிவாரணமும் இல்லை என்று தான் பதில்
வந்திருப்பதாக எனக்குத் தெரிகிறது. எனவே மீண்டும் அதை
பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு எங்கெல்லாம் விவசாயிகள்
இந்தப் பூச்சியினால் பாதிக்கப்பட்டார்களோ அவர்களுக்கு
இரண்டாயிரம் ரூபாய் செலவு செய்திருந்தால் ஒரு ஆயிரம்
ரூபாயாவது மானியம் கொடுப்பதற்கான ஒரு வகை செய்து
கொடுத்தால் சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதைச் சுட்டிக்
காட்ட விரும்புகிறேன். பாலங்கள், ரோடுகளுக்காக நம்
முடைய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி அவர்கள் 2,100
கோடி ரூபாய் பிரதமராக இருந்து விலகுவதற்கு ஒரு வாரத்திற்கு
முன்பு கையெழுத்து போட்டார்கள். ஆர்.எல்.ஈ.ஜி.பி., என்.ஆர்.
ஈ.பி. திட்டங்களின் மூலமாக பல கோடிக்கணக்கான ரூபாய்களை
ஒதுக்கிக்கொடுத்த காரணத்தினாலே தான் நாம் ரோடுகளைப்
போட்டோம். பாலங்களை நல்ல முறையிலே கட்டினோம்
டையாபிளேட், அதாவது அந்தப் பாலங்களுக்குக் கீழே
தண்ணீர் போவதைப் பார்த்தால் அது ஆட்டம் கொடுத்துக்
கொண்டிருக்கும். வேறு எங்கெங்கெல்லாம் இப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறதோ —நான் என்னுடைய தொகுதியைப்
பற்றி மட்டும் சொல்லவில்லை— அங்கெல்லாம் என்ஜினியர்
களை வைத்து சர்வே செய்து அவைகளை உடனடியாக
இந்தத் துணை மானியக் கோரிக்கைகளை வைத்து இருக்கி
றீர்களே இதன் மூலமாகவாவது, அந்த வேலைகளைப் பூர்த்தி
செய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தால் சாலச் சிறந்ததாக
இருக்கும் என்பதையும் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.



1990 சனவரி 25] [திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்]

(11–15 மணி)

இன்றைக்கு, மின்சாரத்தை நாம் உற்பத்தியே செய்ய
வில்லை. காங்கிரஸ் ஆட்சியின்போது, மலையைக் குடைந்து
அதிலே நீரைப் பாய்ச்சி மின்சாரம் உற்பத்திச் செய்தோம்.
இன்றைக்கு மின்சார உற்பத்தியே இல்லாத காரணத்தினாலே—
நாம் கம்பிகளை மாத்திரம் நீட்டிக் கொண்டே போகிறோம்.
சுவிட்ச் ஆன் பண்ணவுடனேயே அந்த மின்சார மோட்டார்—
பர்ன் ஆகிவிடுகிறது. 5 ஹார்ஸ் பவர் என்றால் 750
ரூபாய்; 3 ஹார்ஸ் பவர் என்றால் 550 ரூபாய் செலவு
செய்து மறுபடியும் காயில் கட்ட வேண்டிய நிலைமை வந்து
விடுகிறது. ஆகையால், எங்கெல்லாம் துணை மின் நிலையம்
அமைக்க வேண்டுமென்று மக்கள் கேட்கிறார்களோ அங்கெல்
லாம் துணை மின் நிலையம் அமைத்துக் கொடுப்பது
அந்த மக்களுக்கு வாழ்வளிக்க வேண்டுமென்று நான் இந்த
நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

கடைசியாக, டாக்டர் அம்பேத்கார் பற்றி மட்டும் ஒருசில
கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். மாண்புமிகு முதல்வர்
அவர்கள் ஏற்கனவே அம்பேத்கார் அவர்களுக்கு இங்கே ஒரு
மாவட்டமே அமைத்துக் கொடுத்து எங்களுக்கெல்லாம்
பெருமை தேடிக் கொடுத்திருக்கிறார்கள். டாக்டர் அம்பேத்
கார் பிறந்தது, ஏப்ரல் மாதம் 14ஆம் தேதி என்று நினைக்
கிறேன். அதுவும் கவர்ன்மெண்ட் ஹாலிடேதான். ஏனென்
றால் சித்திரை மாதம் வருகிறது. அதை நீங்கள் கவர்ன்
மெண்ட் ஹாலிடே என்று அறிவித்தால் அந்த 14ஆம் தேதியே
வருடப் பிறப்போடு டாக்டர் அம்பேத்கார் பிறந்த தின
விழாவாக ஊரெல்லாம் கொண்டாடுவதற்கு ஒரு வாய்ப்பாக
இருக்கும்.

என்னுடைய மதிப்பிற்குரிய அன்பு தம்பி, சுவாமி சகஜா
னந்தா பற்றி பேசினார்கள். சுவாமி சகஜானந்தா ஒரு
மிகப் பெரிய ஸ்காலர். வடாற்காடு மாவட்டத்திலே,
புதுப்பாக்கம் என்ற ஊரிலே பிறந்தவர். அவர்தான் நந்தனார்
கல்விக் கழகத்தை ஆரம்பித்தார்கள். அந்த நந்தனார் கல்விக்
கழகத்திலேதான் 1941ஆம் ஆண்டிலிருந்து 1948ஆம் ஆண்டு
வரைக்கும் மூன்றாம் கிளாசிலேயிருந்து நான் அங்குதான்
படித்தேன். என்னைப் போன்று நம்முடைய தங்கராசு அவர்
கள் கூட, ஐ.ஏ.எஸ். ஆக இருக்கிறார்கள்; அவர்களும்
அங்குதான் படித்தவர்கள். அண்ணன் ராஜாங்கம் அவர்கள்
அங்கே வார்டனாக இருந்தவர், நான் படிக்கும்போது.
இப்படி ஆயிரக்கணக்கான மக்களுக்கு அவர்கள் கல்வியறிவு
கொடுத்து, ஆன்மீகத் துறையிலும் அவர்கள் வளர்வதற்கான
வழியைச் செய்தார்கள். அந்தத் தந்தைக்கு நூற்றாண்டு

விழா 1890-ஆம் ஆண்டு பிறந்தார்கள். 1990ஆம் ஆண்டு
வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அவர்
களுக்கு நூற்றாண்டு விழா கொண்டாடுவதற்கான வழிவகை
செய்யவேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, சுவாமி சகஜானந்தாவைப்
பற்றி சொன்னார்கள். 1957ஆம் ஆண்டு நானும் அவரும்
இந்தச் சட்டசபையிலே ஒன்றாக இருந்தவர்கள். அதுமாத்திர
மல்ல. நான் அந்த இடத்திற்கு பல நேரங்களில் சென்று
இருக்கிறேன். சகஜாநந்தா அவர்கள் என்னை வரவேற்று
இருக்கிறார்கள். அதைப்பற்றி நம்முடைய அம்மையார்
அவர்கள் சொன்னதைப் போல, இங்கே பரிதி இளம்வழுதி
குறிப்பிட்டதைப் போலவே, நண்பர் இளையபெருமாள்
அவர்களும் எனக்கு அறிவுறுத்தி இருக்கின்றார்கள். நிச்சயமாக
சகஜாநந்தா அவர்களுடைய நூற்றாண்டு விழாவை இந்த
அரசு சிறப்பாகக் கொண்டாடும். (மேசையைத் தட்டும் ஒலி).

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, துணை மானியக் கோரிக்கையில் பேசு
கின்ற வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் நன்றி தெரிவித்துக்
கொள்கிறேன். தமிழக அரசால் அறிவிக்கப்பட்ட திட்டங்களுக்
கெல்லாம் நிதிகளை ஒதுக்கீடு செய்வதன் மூலமாக அந்தத்
திட்டங்கள் நேரடியாக மக்களுக்குப் பயன் தருவதற்குரிய
வகை செய்திருக்கிறது. திட்டங்களுக்குரிய மதிப்பீடுகளை
ஒதுக்கீடு செய்வதன் மூலமாகத்தான் அந்தத் திட்டங்கள் நேரடி
யாக மக்களுக்குச் சென்று அவர்கள் பயன் அடைந்து இந்த
அரசினுடைய பெருமையை உணருவதற்கு வழிவகை செய்ய
பட்டிருக்கின்றது.

குறிப்பாக, முதியோர்கள் ஓய்வூதியத் திட்டம். கடந்த
கால ஆட்சியில் 35 ரூபாயாக இருந்தது. அது அண்மையில்
குறிப்பிட்ட அளவுக்குத்தான் ஒரு பகுதியில் இருக்கின்றவர்
களுக்கு முதியோர்களுக்கும், கைவிடப்பட்ட, ஆதரவற்ற
பெண்களுக்கும், விதவைப் பெண்களுக்கும், ஊனமுற்றவர்
களுக்கும் வழங்கப்பட்டிருந்தது. அந்த நிதியினை உயர்த்தி
50 ரூபாய் என்று வழங்கி இவ்வளவு பேருக்குத்தான் கொடுக்க
வேண்டுமென்று இருந்த அந்த ஒரு குறியீட்டையும் மாற்றி,
60 வயது முதிர்ந்தவர்கள், ஆதரவற்ற பெண்கள், கணவனால்
கைவிடப்பட்ட பெண்கள், ஊனமுற்ற பெண்கள், விதவைகள்
என்ற நிலையில் இருக்கின்ற அனைத்து வயதைச் சேர்ந்தவர்
களுக்கும் இந்தத் திட்டத்தில் பயன் கிடைக்கும் என்று
எற்பாடு செய்து அத்தகைய மக்கள் மத்தியிலே இன்றைக்கு
நம்பிக்கைக்குரியவராக நன்றிக்குரியவராக இருக்கின்ற டாக்டர்





கலைஞர் அவர்கள், அந்த ஓய்வூதியத்திற்காக வழங்கியிருக்
கின்ற நிதினை இந்தத் துணைமானியக் கோரிக்கையில்
சேர்த்திருப்பதில் நான் மகிழ்ச்சியடைகிறேன்.

(11-20 மணி)

அந்த ஓய்வூதியம் இன்னும் பலருக்கு முறைப்படி கிடைக்காமல்
இருக்கிறது. அது கிடைப்பதற்கு வகை செய்யவேண்டுமென்ற
வேண்டுகோளையும் வைக்க விரும்புகிறேன். இந்த ஓய்வூதியம்
தாசில்தார் அலுவலகத்தில் இருந்து தருவதற்குத் தாமதப்
படுகிறது. அதைத் தாமதம் இல்லாமல் வழங்கினால் அரசின்
கருணையை மக்கள் விரைவில் ஏற்றுக்கொள்வதற்கு வாய்ப்பாக
இருக்கும்.

அதைப்போலவே, தமிழக அரசு, குடிசையில் வாழ்கிற மக்க
ளுக்காக அவர்களுக்காக மாடி வீடுகளைக் கட்டிக் கொடுத்து,
அவர்கள் வெய்யிலில் காயாமல் மழையில் நனையாமல் பாது
காப்புப் பெறுவதற்கு உத்தரவாதம் தந்த அரசாக கடந்த
காலத்தில் இருந்தது. அது இப்போதும் இருக்கிறது. குடிசைப்
பகுதிகளின் சீர்கேடுகளைப் போக்குவதற்கும், அங்கே ஏற்
பட்டுள்ள பழுதுகளைப் பராமரிப்பதற்கும் நிதிஒதுக்கப்பட்டிருக்
கிறது. அந்த நிதியின் மூலமாக அங்கேயுள்ள ஒருசில குறைபாடு
களைக் கொண்டிருக்கிற மக்கள் தங்களுடைய வாழ்க்கையில்
வளத்தைப் பெறுவதற்கு உத்தரவாதம் அளித்த எங்கள் தலைவர்
அவர்களுக்கு குடிசைவாழ் மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்
துக்கொள்கிறேன். குடிசைப் பகுதி மாற்று வாரிய குடியிருப்பு
களுக்கு அடிப்படை வசதிகள் தருகிறபோது, கழிவு நீர்ப் பாதை
களையும் சுத்தம் செய்து, சுகாதார வசதிகளையும் அமைத்துத்
தருவதில் துரிதமாக நடவடிக்கை எடுத்துக்கொள்ளவேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வீடுகளில் கழிப்பறைகள்
மிகவும் பழுதடைந்துள்ளன. அவைகளை சுத்தப்படுத்தவேண்டு
மென்ற கோரிக்கை எழுப்பப்பட்டிருக்கிறது. இந்த புதுப்பித்தல்
பணிக்குத் தேவையான நிதியை அதற்கு பயன்படுத்திக்கொள்ள
நடவடிக்கை எடுக்கவேண்டும். அதைப்போலவே, தமிழக
அரசு ஏழை மாணவர்களுக்கு காலணிகள் வழங்குகிற திட்டத்தை
அமல் படுத்துகிற விதத்தில் அதற்குரிய நிதியையும் ஒதுக்கீடு
செய்து, 22 லட்சம் ஜோடி காலணிகள் வழங்குவதற்கு நிதி
வழங்கப்பட்டிருக்கிறது. அறிவிப்பை மட்டும் தந்து நல்ல பெயரை
சம்பாதித்து மக்களை ஏமாற்றுகிற அரசாக இது இல்லாமல்,
செருப்புகளை தந்து திட்டமிட்டபடி அந்த மாணவர்கள் பயன்
பெறக்கூடிய வகையில், அதற்கான ஆணைகளையும் தந்து
இருக்கிறார்கள். அந்தப் பெருமையைத் தக்க வைத்துக் கொண்
டிருக்கிற அரசு என்று இருக்கிற அரசு என்று கழக அரசு மீண்டும்
ஒரு முத்திரை பதித்த மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களை
வணங்குகிறேன்.

[திருமதி எஸ். பி. சற்குணம்] [1990 சனவரி 25

அதைப்போலவே, தொடக்க சுகாதார நிலையங்களில்
மருந்துகள் இல்லை, மருத்துவர்கள் இல்லை என்ற குறைபாடு
கள் இல்லாமல், ஏழைகளுக்கு மருந்துகள் கிடைப்பதற்கும்,
அவர்களுக்கு உடல் ஆரோக்கியம் தருவதற்குமான நிதி ஒதுக்
கீட்டைச் செய்திருக்கிறார்கள். சில இடங்களில் நாம் பார்ப்பது
உண்டு. மாத்திரைகள் கொடுக்கும்போது காகிதத்தில் மடித்துக்
கொடுக்காமல், அப்படியே நோயாளிகள் கையில் கொடுக்கிறார்
கள். அப்படியில்லாமல் நோயாளிகளுக்குத் தரப்படுகிற மாத்
திரைகளைக் காகித உரையில் போட்டுத் தருகிற வகையில் எல்லா
மருத்துவமனைகளிலும் அவைகள் கொடுக்கப்படவேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

வணிக நல வாரியம் அமைக்கப்பட வேண்டுமென்று தமி
ழகத்தில் முன்பு முதலமைச்சராக இருந்த டாக்டர் கலைஞர்
அவர்கள் அன்றையதினம் ஒரு அறிவிப்பைச் செய்திருந்தார்கள்.
அதற்குப் பின்னால் வந்த அரசும் சரி, அதற்கு உரியவர்களாக
இருந்தவர்களும் சரி, அதைப்பற்றி ஏற்றுக்கொள்ளாமல் இருந்து
விட்டார்கள். ஆனால், பல ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும்
முதலமைச்சராகப் பொறுப்பேற்ற டாக்டர் கலைஞர் அவர்கள்
வணிக நல வாரியம் அமையும் என்று தன்னுடைய திட்டத்தை
இப்போது நிறைவேற்றியிருக்கிறார்கள். நிறைவேற்றி
தது மட்டுமல்ல, வணிகர்கள் மத்தியில் 2 கோடி ரூபாய் செய்
செய்ய வேண்டுமென்றும் சொன்னார்கள். ஆனால் வசூல்
களுக்கான வாரிய நிதியை 2 கோடி ரூபாயை அரசே வணிகர்
பங்காகப் போட்டு வணிகர்களுடைய பாராட்டையும் தனது
தினம் பெற்றிருக்கிறது. அதற்காக எனது பாராட்டையும் இன்றைய
தையும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வாழ்த்

83 இலட்சம் மக்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இலவச
அரிசி திட்டத்தை இன்றைக்கு மக்கள் குரலே மகேசன்
குரல் என்று கருதுகிற தமிழக அரசின் முதல்வர் டாக்டர்
கலைஞர் அவர்கள் மக்களுடைய கோரிக்கையை ஏற்றுக்
கொண்டு ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் விரிவு
படுத்தியிருக்கிறார்கள். அந்தத் திட்டம் வெறும் அறிவிப்பாக
இல்லை என்று அடையாளம் காட்டுகிற வகையில் அதற்கான
நிதியினையும் இன்றைக்கு வழங்கி இருக்கிறார்கள். சமீப
காலங்களில் ஏற்படுத்தப்பட்ட குறைபாடுகளை நீக்கி எடுத்து
வைக்கப்பட்ட கோரிக்கைகள் போன்றவற்றை எல்லாம்
இன்றைக்குக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுடைய
அரசு மக்கள் குரலை மதிக்கின்ற அரசாக இருக்கின்ற காரணத்
தால் செயல்படுத்திக்கொண்டிருக்கிறது.

சத்துணவுக் கூடங்கள் இருக்குமா என்ற கேள்வி ஒரு காலத் (11-25 மணி)
தில் கேட்கப்பட்டது. சத்துணவுக் கூடங்கள் இருக்கும் என்பது
மட்டுமல்ல; அதிலே இருக்கிற பணியாளர்களும் நிரந்தரம் செய்



1990 சனவரி 25] [திருமதி எஸ். பி. சற்குணம்]

யப்படுவார்கள் என்ற உறுதியினையும் அளித்திருக்கிறோம். அதுமட்டுமல்லாமல் அங்கே வழங்கப்படுகிற உணவு உண்மையான சத்துணவாக வழங்கப்படும் என்ற அறிவிப்பும் செய்யப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லாம் நடைமுறைப்படுத்துவதை இன்றைய தினம் தமிழகத்தில் இருக்கின்ற ஒவ்வொரு சத்துணவுக்கூடங்களிலும் இருக்கின்ற தாய்மார்களும், மாணவர்களும், அவர்களை அனுப்புகின்ற பெற்றோர்களும் நேரடியாகவே கண்டு வருகிறார்கள். அங்கே சத்துணவு வழங்கப்படுவதற்குரிய முட்டைகள் வழங்கப்படுவதற்குரிய வகையில் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. சொன்னதைச் செய்யக் காணோமே, செய்வதைச் சொன்னோம் என்று சொல்கிறீர்களே, அதிலே பழுது இருக்கிறதே, குற்றம் இருக்கிறதே என்றெல்லாம் சொல்கிறவர்களின் கண்களுக்குத் தெரிவதைப் போலத்தான் அவர்களுக்கு முட்டை இன்றைக்கு வழங்கப்பட்டுக்கொண்டு வருகிறது.

அதுமட்டுமல்ல, பெண்களின் நலத்திற்காகப் பாடுபடுகிற உண்மையான அரசாக தமிழக அரசு இன்றைக்கு வீற்றிருக்கிறது. சரிபாதி சொத்து பெண்களுக்கும் வேண்டும் என்று 1929-ஆம் ஆண்டு சுயமரியாதை மாநாட்டில் செங்கற்பட்டிலே எடுத்து வைத்த தந்தை பெரியார் அவர்களும், பேரறிஞர் அண்ணா அவர்களும் பலமுறை வற்புறுத்தி வந்தார்கள். அந்த மாநாட்டில் பங்கு கொண்ட என்னுடைய தந்தை திரு. பொன்னுசாமி அவர்கள் பல நேரங்களில் என்னிடத்தில் பேசுகிறபோது அந்தத் தீர்மானம் என்றைக்குச் சட்டமாகும் என்று பெருமூச்சு விட்டவர்கள்தான். இப்படி பல பெரியவர்கள் எண்ணி எதிர்பார்த்தது இது. பல தாய்மார்கள், பெண்கள் போராடிக்கொண்டிருந்த நிலைமையில் அதாவது பலவிதமான கொடுமைகளுக்கு ஆளாகிக் கிடந்த நிலைமையில் தீயினால் வெந்து செத்தார்களே, அப்படிப்பட்ட நிலைமையில் இருந்தவர்களின் 60 ஆண்டுக் கனவுகள் எல்லாம் நிறைவேறுகிற வகையில் நம்முடைய தமிழக அரசால் மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்களால் கொண்டுவரப்பட்டது இந்த பெண்களுக்குச் சரிபாதி சொத்து என்ற சட்டம். இந்தச் சட்டத்திற்கு ஆக்கபூர்வமான அனுமதி தந்திருக்கின்ற தேசிய முன்னணி அரசுக்கும், தமிழக மகளிர் சார்பாக பாராட்டுதலையும் நன்றியையும் கோடி கோடி வணக்கங்களையும் நான் தெரிவித்து விடை பெறுகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

*திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் துணை மானியக் கோரிக்கையின் மீது பேசுகிற வாய்ப்பளித்தமைக்காக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியைத் தெரிவித்து சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகம் முழுவதும்

[திரு. சி. கோவிந்தசாமி] [1990 சனவரி 25

இருக்கக்கூடிய கிராமப்புறங்களில் மக்களுடைய பல அத்தியா
வசியப் பணிகள் எல்லாம் நிறைவேற்றப்படாமல் இருக்கின்றன.
சாலை வசதி, சாக்கடை வசதி, கழிப்பிட வசதி போன்ற வசதிகள்
கூட செய்யப்படாமல் மிகவும் மோசமான நிலைமையில் கிராமப்
புறங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதற்குரிய நிதியா
தாரம் இல்லாத நிலைமையில் அந்த உள்ளாட்சித்துறை செயல்
பட்டுக்கொண்டிருக்கிறது. குறிப்பாக கிராமப்புறங்களிலிருந்து
வசூலிக்கக்கூடிய நிலவரியில் குறிப்பிட்ட அளவு பல வருடங்
களாக உரிய முறையில் அவர்களுக்குக் கிடைக்காமல் இருக்கிறது.
தன்னிறைவுத்திட்டம் என்ற பெயரால் மேற்கொள்ளப்படுகிற
திட்டங்களுக்கு கூடுதலாகச் செலவு செய்துவிட்ட காரணத்தால்
அதிலே அதனைக் கழித்துக்கொண்டு கணக்குக் காட்டப்படுகிற
நிலை இன்றைக்கு இருக்கிறது. அதிலே கூட பல தவறுகள்
நடக்கின்ற நிலைமை இருக்கின்ற காரணத்தால் அரசு இதிலே
கவனம் செலுத்தி நிலவரியிலே இருந்து உரிய பங்கை உள்ளாட்சி
துறைக்கு உரிய நேரத்தில் தர ஏற்பாடுகளைச் செய்யவேண்டு
மென்று நான் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அதேபோல இன்றைக்குக் கிராமப்புறங்களையும், நகரப்
புறங்களையும் எடுத்துக்கொண்டால் பள்ளிக்கூடங்கள், ஆரம்பப்
பாடசாலைகள் என்பது மிகவும் மோசமான பழுதடைந்த
நிலைமையில் இருக்கின்றன. அங்கே குழந்தைகள் அமர்ந்து
படிக்கின்ற தரைப்பகுதி கூட இடிந்து மேடுபள்ளமான நிலை
மையில் இருக்கிறது. எந்தவிதமான அடிப்படை வசதிகளும் கூட
இல்லாத நிலைமை இன்றைக்கு மாநிலம் முழுவதும் பெரும்
பகுதியான இடங்களில் இருக்கிறது. ஆகவே தரைகளைச்
செம்மைப்படுத்துகின்ற அந்தப் பணிகளையாவது இந்த அரசு
முன்னுரிமை கொடுத்துச் செய்ய வேண்டுமென்று நான் வலி
யுறுத்துகிறேன்.

தமிழக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டிருக்கக் கூடிய
பள்ளிக்கூடங்களுக்குக் கூட அதாவது உயர்நிலைப் பள்ளி
களாக இருந்து மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்
பட்ட பள்ளிகளுக்குக் கூட அரசினுடைய மானியத் தொகைகள்
கொடுக்கப்படாத நிலைமை தொடர்கிறது. ஆகவே அது உரிய
காலத்திலே கிடைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள
வேண்டும். அதேபோல சுயநிதி பாலிடெக்னிக்குகள் என்ற
நிலையில் தமிழ் நாட்டிலே ஏற்கனவே இருந்த அரசு வழங்கிய
அனுமதியின் பேரில் தமிழகம் முழுவதும் 70-க்கு மேற்பட்ட
பல பாலிடெக்னிக்குகள் இருக்கின்றன. அதிலே பணியாற்று
கின்ற ஆசிரியர்கள், அலுவலர்கள் இன்றைக்கு எந்தவிதமான
உத்தரவாதமும் அற்ற நிலையில் இருந்து கொண்டிருக்கிறார்
கள். அவர்களுக்கு ஊதியம் மிகக் குறைவாக இருக்கிறது.



1990 சனவரி 25] [திரு. சி. கோவிந்தசாமி]

அரசினுடைய கடைநிலை ஊழியர்கள் பெறக்கூடிய ஊதியம்
கூட அவர்களுக்கு இல்லாத நிலை உள்ளது. அவர்கள் வேலைக்
கான உத்தரவாதமும் கிடையாது. அதே போல விடுமுறை
காலத்தின்போது அவர்களை நிறுத்தி விட்டு, பள்ளிக்கூடம்
திறக்கிறபோது புதிதாக அவர்களை வேலைக்கு எடுக்கிறார்கள்.
விடுமுறை காலத்திற்கு சம்பளம் கொடுக்கக் கூடாது என்ற
நோக்கத்தோடு, ஆகவே இதுபோன்ற நிகழ்ச்சிகளிலே அரசு
கவனம் செலுத்தி அவர்களுக்குரிய சட்டப் பாதுகாப்பு கொடுக்க
வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

11-30 மணி

அதேபோல சத்துணவு மையங்கள் இன்றைக்கு தமிழ்நாடு
முழுவதும் இதற்கு போதுமான இடவசதி இல்லாமல்,
மாட்டுக் கொட்டகையிலே, மரத்தடியிலே அல்லது
பள்ளிக் கூடத்தினுடைய ஒரு மூலையிலே, சத்துணவு சமைக்கக்
கூடிய ஒரு அவல நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே
அந்த நிலைக்கு மாற்றம் காண தேவையான சத்துணவுக் கூடங்கள்
ஏற்படுத்த வேண்டும். அதே போல இதிலே நடக்கின்ற தவறு
களை கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள் செல்கின்ற
போது அந்தத் துறையினுடைய சம்பந்தப்பட்ட அதிகாரி
களும் உடனடியாக வருவதற்கு உரிய ஏற்பாடுகளை செய்ய
வேண்டும். அதே போல அந்த சத்துணவுத் துறையிலே பணி
யாற்றக் கூடிய ஊழியர்களுடைய சம்பளம் மிகக் குறைவாக
இருக்கிறது. எனவே அவர்களுக்கு ஊதிய உயர்வு அளிக்கவும்
இந்த அரசு முன்வர வேண்டும் என்று வலியுறுத்த விரும்பு
கிறேன்.

அது போலவே, இன்றைக்கு வறட்சி நிவாரணத்தையொட்டி
மேற்கொள்ளப்படுகிற பல நடவடிக்கைகள் இன்றைக்கு இங்கே
குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதே போல, வெள்ளச் சேதம்,
சமீபத்திலே பெய்த கடுமையான மழையின் காரணமாக, கமுதி
உட்பட, தென் மாவட்டங்களில் ஏற்பட்டிருக்கக் கூடிய அந்த
கடுமையான வெள்ள சேதத்திற்கு நிவாரணம் அளிக்கும்
வகையில் ஏற்கெனவே நம்முடைய முதல்வர் அவர்கள் 50
இலட்சம் ரூபாய் உதவித் தொகை அளிப்பதாக இங்கே அறி
வித்திருக்கிறார்கள். வரவேற்கிறேன். ஆனால் தேவை
அதிகமாக இருக்கிற காரணத்தினாலே அது போது
மானதாக இருக்காது. ஆகவே அதற்கு கூடுதலான நிவாரண
நடவடிக்கைகள் மேற்கொள்வதற்கு அரசு முன்வர வேண்டும்
என்று கேட்டுக் கொள்கிறேன். அதே போல அவையிலே சில
தினங்களுக்கு முன்னாலே, நம்முடைய வருவாய்த்துறை அமைச்சர்
அவர்கள் கேள்வி நேரத்தின்போது, நம் தமிழ்நாட்டிலே 11
மாவட்டங்கள் மழை குறைவாகப் பெய்திருக்கின்ற மாவட்டங்கள்
என்று குறிப்பிட்டு, அதற்கான சில நிவாரண நடவடிக்கைகள்
எடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். தற்போது குடிநீர்

[திரு. சி. கோவிந்தசாமி] [1990 சனவரி 25

பிரச்சினைகள் அதிகரித்து வருகின்ற நிலையில் அந்த
நிவாரணப் பணிகளைத் துரிதப்படுத்த வேண்டும் என்று வலி
யுறுத்துவதோடு, கோவை மாவட்டத்தில் பல தாலுக்காக்கள்
இன்றைக்கு குடிநீர் பிரச்சினையால் மிகவும் பாதித்துக்கொண்
டிருக்கின்றது. ஆகவே இந்த மாவட்டத்தையும் வறட்சி மாவட்
டமாக அறிவித்து அந்தப் பகுதிக்கான வறட்சி நிவாரண
நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டும் என்றும்
வலியுறுத்துகிறேன்.

அதே போல, தமிழ் நாட்டிலே குடிநீர்ப் பிரச்சினைகள்
குறித்து கடந்த முறை கவர்னர் உரையின் போதும் சரி, அதற்குப்
பின்னாலே இந்த மன்றத்திலே குடிநீர் பிரச்சினைக்கு உரிய தீர்வு
காணப்படும் என்று அரசு அறிவித்திருக்கிறது. பல நடவடிக்கை
களை மேற்கொண்டிருந்தாலும் கூட, ஓராண்டுக்குள்ளே
குடி தண்ணீர் பிரச்சினை முழுமையாக தீர்க்கப்படும் என்று
அறிவித்திருந்தாலும், சம்பந்தப்பட்ட அந்த குடிநீர் வடிகால்
வாரியத்துறை இதை செவிடன் காதில் ஊதிய சங்காகத்தான்
அதனுடைய நிர்வாகம் இருந்து கொண்டிருக்கிறது. அந்த குடி
நீர் பிரச்சினையினுடைய அத்தியாவசியத் தேவை உணர்ந்து
அந்த குடிநீர் வடிகால் வாரியம் செயல்படவில்லை என்பதை
நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல திட்டங்கள்
தமிழ் நாட்டிலே தேவையில்லாமல் காலதாமதமாக இன்றைக்கு
நடந்து கொண்டிருக்கின்றன. குறிப்பாக திருப்பூரிலே இரண்
டாவது குடிநீர் திட்டம் 1983 ஆம் ஆண்டிலே அன்றைய முதல
மைச்சரால் தொடங்கப்பட்டு 3 ஆண்டுகளிலேயே முடிக்கப்பட
வேண்டிய அந்தத் திட்டம் இன்றைக்கு 6 ஆண்டுக் காலம்
கடந்த பின்னாலேயும் முடியவில்லை. சமீபத்திலே குடிநீர்
வடிகால் வாரியத் தலைவர் கொடுத்திருக்கின்ற அறிக்கையானது
இன்னும் 4 ஆண்டுக்காலம் ஆகும். 1993-லேதான் அது முடிவடை
யும் என்ற ஆபத்தான அறிக்கையைக் கொடுத்திருக்கிறார்
கள். நம்முடைய அமைச்சர் ஏற்கெனவே உள்ளாட்சித்துறை
பொறுப்பு ஏற்றிருந்த மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள்
சில மாதங்களுக்கு முன்னாலே கோவைக்கு ஒரு பேருந்து நிலையம்
திறப்பு விழா நிகழ்ச்சியிலே கலந்து கொள்கிற போது சொன்
னார்கள். அரசு இந்த திட்டத்திருத்த மதிப்பீட்டுக்கு ஒப்புதல்
வழங்கியிருக்கிறது. ஆகவே இது 1990 ஆம் ஆண்டிலே நிறை
வேறும் என்ற நம்பிக்கையான செய்தியை அங்கே அறிவித்தார்கள்.
ஆனால் இன்றைய குடிநீர் வடிகால் வாரிய அதிகாரிகள் கொடுத்
திருக்கின்ற அறிக்கை அதற்கு மாறுபட்ட நிலையிலே இருக்கின்ற
காரணத்தினாலே நான் இந்தத் துணை மானிய கோரிக்கையின்
மீது நம்முடைய முதல்வர் அவர்கள் பதில் அளிக்கிறபோது,
இப்போது அவருடைய அறையிலே இருந்தாலும் இதை நிச்சயம்
கேட்பார்கள் என்ற நம்பிக்கையோடு நான் அவர்களிடத்திலே
வலியுறுத்திக் கேட்டுக் கொள்ள விரும்புவது இந்த இரண்டாவது
குடிநீர் திட்டம், திருப்பூரிலே மட்டுமல்ல வழி ஓரத்தில் இருக்



1990 சனவரி 25] [திரு. சி. கோவிந்தசாமி]

கின்ற 44 பஞ்சாயத்து உட்பட 5 இலட்சத்திற்கு அதிகமான
மக்கள் பயன் பெறுகின்ற அந்தத் திட்டத்திற்கு தேவையில்லாத
கால தாமதம் காரணமாக வைத்திருந்ததால் இன்றைக்கு அத
னுடைய மதிப்பீடு ரூ. 20.34 கோடியாக உயர்ந்திருப்பது
தெரிகிறது. ஆகவே அந்த திருத்தப்பட்ட மதிப்பீட்டிற்கு ஒப்பு
தல் வழங்கினால்தான் மற்றப் பணிகள் தொடங்கவேண்டிய
நிலையில் உள்ளது. இன்றைக்கு ஒருபகுதி வேலை நடைபெறுகிறது.
ஆனால் மற்றொரு பகுதி வேலை நடைபெறாமல் இருக்கிறது.
இந்த அங்கீகாரத்தை எதிர்நோக்கி இருக்கின்ற காரணத்தால்
இந்தத் திட்டத்திற்கு உடனடியாக இந்தக் கூட்டத் தொடரிலேயே
அங்கீகாரம் அளிக்க ஒரு உத்தரவாதம் அளிக்கப்படுமானால்,
இந்தத் திட்டம் 1991-லே நிறைவுபெறும் என்று அதிகாரிகளும்
தெரிவிக்கின்றார்கள்.

ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், பதில் உரையிலே,
இதற்கான ஒப்புதல் வழங்கி, நம்பிக்கையான செய்தியை தெரி
விக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல,
தற்போது அந்தத் திட்டத்திற்காக இரண்டு டிவிஷன்கள் செயல்
படுகின்றன. மேலும் ஒரு டிவிஷன் ஏற்படுத்தி, ஒரு சூப்பரின்
டெண்டிங் என்ஜினியரை தனியாக அதற்காக நியமித்தால் 1991
இறுதியிலே அந்தத் திட்டம் நிறைவேற்றப்படும் என்று அரசு
அதிகாரிகள் தரப்பிலே சொல்லப்படுகிறது. அதற்கும் உரிய
ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

11-35 மணி

இன்றைக்கு பரம்பிக்குளம் ஆழியாறு நீர்ப்பாசனம் சம்பந்த
மாக ஏற்கெனவே விஸ்தரிக்கப்பட்ட பகுதிகளும் கோவை,
பெரியார் மாவட்டங்களில் பல தாலுக்காக்களும் இருக்கின்றன.
10 ஆண்டுகளுக்கு மேலாக இன்றைக்கு வாய்க்கால்கள் வெட்டப்
பட்டு தண்ணீர் விடாமல் இருக்கிற நிலைமை தொடர்ந்து இருக்
கிறது. ஆகவே, அந்தப் பகுதியை, பி.ஏ.பி. பாசன மண்டலங்
களை 4 பாசன மண்டலங்களாகப் பிரித்து விட்டால் அந்தப்
பகுதி பயன்பெறும் என்று பல கோரிக்கைகள் இருக்கின்றன.
சென்ற 7-7-1989 அன்று பொள்ளாச்சியில் நடைபெற்ற நீர்ப்
பாசனக் கருத்தரங்கில் நம்முடைய மாண்புமிகு பொதுப்பணித்
துறை அமைச்சர் அவர்கள் கலந்து கொண்டு விரைவிலே மாண்பு
மிகு முதல்வர் அவர்களுடன் கலந்து பேசி நம்பிக்கையான நல்ல
செய்தி அறிவிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால் அது
தொடர்ந்து காலதாமதமாக இருக்கிறது என்பதை நான் இந்த
அரசின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அது
பல்லடம், பொங்கலூர், உடுமலைப்பேட்டை, காங்கேயம்,
வெள்ளக்கோயில் வரையிலே பயன்படுகிற நல்ல திட்டம்.
அதிலே கவனம் செலுத்துகிறபோது தற்போது மூன்றாவது
மண்டலத்திலே தொடர்ந்து 1981 ஆம் ஆண்டிலிருந்து 4 முறை

தண்ணீர் விடப்பட்டு எல்லா காலத்திலும் திருப்பூரிலிருக்கிற,
திருப்பூர் கிளை வாய்க்கால்களுக்கு உட்பட்டிருக்கிற
களுக்கு, விவசாயிகளுக்கு தண்ணீர் விடப்பட்டிருக்கிற பகுதி
சமயம் அந்தப் பகுதிக்குச் சென்ற டிசம்பர் 22 ஆம் தேதியிலிருந்து தற்
தண்ணீர் விடப்பட்டு வருகிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு சில
பகுதிகளுக்கு தண்ணீர் குறைவு என்று சொல்லி விடப்படுவதில்லை
என்று அதிகாரிகள் தரப்பில் சொல்கிறார்கள். ஆனால் சென்ற
முறை 50 ஆயிரம் சில்லரை ஏக்கராவுக்கு பாசனத்திற்கு தண்
ணீர் விட்ட போது இந்தப் பகுதியும் பயன்பட்டிருக்கிறது. இந்த
முறை அதை விட கூடுதலாக, அதிகமாக பாசனத்திற்கு தண்ணீர்
6 ஆயிரம் ஏக்கராவுக்கு விடப்படும் நிலையில் ஏற்கெனவே 4 முறை
1981-ல் இருந்து தண்ணீர் விடப்பட்டிருக்கிற அந்தப்
பகுதியிலே தண்ணீர் விடப்படுவதை நிறுத்தி விட்டிருப்பது அந்தப்
பகுதி விவசாயிகள் மத்தியிலே பெரும் பாதிப்பை ஏற்படுத்தி,
அவர்கள் இன்றைய தினம் போராடத் துவங்கும் நிலை உரு
வாகியிருக்கிறது. ஆகவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்
களை.................

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத்
துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்
இங்கே குறிப்பிட்டது திருப்பூர் பிரான்ச் கெனால் பற்றி. அதிலே
நாங்கள் தண்ணீர் விடுவதில் குறை வைக்கவில்லை. பி.ஏ.பி.
யைப் பொறுத்த வரையில் உள்ள நிலைமை இங்கேயுள்ள உறுப்
பினர்களுக்கும் மற்றவர்களுக்கும் தெரியும். ஏற்கெனவே 3
ஜோன். இப்போது நான்காவது ஜோனை சேர்த்தாக வேண்
டுமா வேண்டாமா என்பது பெரிய பிரச்சினை. அது குறித்து
அரசு விரைவில் முடிவெடுத்து அறிவிக்கும். ஆனால், இப்போது
திருப்பூர் பிரான்ச் கெனாலில் தண்ணீர் விட்டிருக்கிறோம். அது
கிட்டத்தட்ட 1,241 ஏக்கர் பாய்வதற்கு விட்டிருக்கிறோம்.
அதிலே உறுப்பினர் குறை சொல்லமாட்டார். அந்த திருப்பூர்
பிரான்ச் கெனாலில் இருந்து தனித்து ஓடுகின்ற மற்றப் பகுதி
களுக்கு, எக்ஸ்டென்ஷன் ஏரியாக்களுக்கு தண்ணீர் வரவில்லையே,
அது ஏன் என்று உறுப்பினர் கேட்கிறார். ஆனால் நான் திருப்பி
அவரைக் கேட்கிறேன். முன்பெல்லாம் விட்டார்களே என்றும்
சொன்னார்கள். தண்ணீர் இருக்கின்றபோது எல்லோருக்கும்
கொடுக்கிறோம். யாரும் வைத்துக் கொண்டு வஞ்சகம் செய்வ
தில்லை. ஆனால் இன்றைக்கு பரம்பிக்குளம் ஆளியாறு திட்டத்
தில் 10.07 டி.எம்.சி. தண்ணீர்தான் இருக்கிறது. கையிருப்பு,
சோலையாறு, பரம்பிக்குளம், தூணைக்கடவு, பெருவாரிபள்ளம்,
எல்லாவற்றையும் சேர்த்து நமக்கு 28 டி.எம்.சி. இருக்க வேண்
டும். ஆனால் இருப்பது 10.07 டி.எம்.சி. தான். இன்னும்
30-6-1990-க்குள் 'இன்பிளோ'' என்று எதிர்
பார்ப்பது 4 டி.எம்.சி. ஆகவே, மொத்தம் 14.07 டி.எம்.சி.
என்று வைத்துக் கொண்டாலும் கூட 30-6-1990-க்குள் நாம்
கேரளத்திற்கு 5 டி.எம்.சி. தண்ணீர் தர வேண்டும். ஆக, மீத





9.07 டி.எம்.சி. ஆனால் 3-வது ஜோனுக்கு நாம் இப்போது
தண்ணீர் கொடுக்க வேண்டும். 22-12-1989-ல் திறந்திருக்கி
றோம். 5-5-1990 வரை நாங்கள் $4\frac{1}{2}$ மாதத்திற்கு தண்ணீர்
தர வேண்டும். 70 ஆயிரம் ஏக்கருக்குத் தண்ணீர் தர வேண்டும்.
அதற்கு எவ்வளவு தண்ணீர் தேவைப்படுகிறது என்றால் 9.06
டி.எம்.சி. தண்ணீர் தேவைப்படுகிறது என்று நாங்கள் கணக்
கிட்டிருக்கிறோம். ஆனால் கையிருப்போ 9.07 டி.எம்.சி. தான்.
ஆனால் தேவையோ 9.06 டி.எம்.சி. இதற்கிடையில் கொஞ்சம்
பற்றாமல் போனால் கூட அவைகளை அட்ஜஸ்ட் செய்து
கொடுத்துக் கொண்டிருக்கிறோம். எனவே, தண்ணீர்
இருக்கிற போது எக்ஸ்டென்ஷன் ஏரியாவுக்கு கொடுத்துக் கொண்
டிருக்கிறோம். இல்லாத நேரத்தில் தான் பர்ஸ்ட் பிரிபரன்ஸ்
கோஸ்டு தேர்ட் ஜோன் என்கிற வகையிலே நாம் அதை வரை
யறுத்திருக்கிறோம். உறுப்பினருக்கே தெரியும், இன்னும்
கொஞ்சம் தண்ணீர் வரத்து ''இன்ப்ளோ'' அதிகரிக்குமானால்
உங்கள் குறையை நிச்சயமாகத் தீர்த்து அந்தப் பகுதிக்கும்
தண்ணீர் தருவதற்கு வேண்டிய நடவடிக்கையை இந்த அரசு
எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

11-40 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திருவாளர்
வீரையன் அவர்களே, ஒரு மணிக்கு ஓட்டு எடுப்பு எடுக்க வேண்டி
யது உங்களுக்குத் தெரியும். (குறுக்கீடு) திரு. கோவிந்தசாமி
பேச வேண்டி இருக்கிறது. இன்னும் 5 உறுப்பினர்கள் பேச
வேண்டி இருக்கிறது. (குறுக்கீடு). அப்படி என்றால் திரு.
கோவிந்தசாமி பேசாமல் இருப்பதற்கு நீங்கள் பொறுப்பு எடுத்
துக்கொள்ள வேண்டும். (குறுக்கீடு). திரு. கோவிந்தசாமி
அவர்களுக்கு ஒரே ஒரு நிமிடம்.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன
விளக்கத்திற்கு நன்றி. ஆனால் அதே நேரத்தில் விவசாயிகளின்
கருத்து என்னவென்றால் 1981-லிருந்து தொடர்ந்து 4 முறை
தண்ணீர் மூன்றாவது மண்டலத்திற்கு விட்ட காலங்கள் எல்
லாம் இப்போது இருப்பதை விடக் குறைவான ஏக்கர் பாசனத்
திற்குத் தண்ணீர் விட்டபோது அந்தப் பகுதிக்குத் தண்ணீர்
கிடைத்தது. இன்றைக்கு 59 ஆயிரம் ஏக்கர் வரையில் பாசனத்
திற்கு தண்ணீர் விடும்போது தங்களுக்குக் கிடைக்கவில்லையே
என்கின்ற ஆதங்கம் அந்த விவசாயிகள் மத்தியில் இருக்கிறது.
தென்னை மரங்கள் கருகுகின்றன: கிணறுகள் காய்ந்து கிடக்
கின்றன. ஆகவே குடிப்பதற்காவது—பாசனத்திற்கு இல்லை
என்றாலும்கூட— குறைந்தபட்சம் மனிதர்களையும் கால்நடை
களையும் பாதுகாப்பதற்காவது அந்தப் பகுதிக்கு ஒரு குறுகிய
காலத் திட்டம்,...............

[1990 சனவரி 25

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, மனிதாபிமான அடிப்படையிலே மட்டும் துணைத்
அல்ல, பயிர்கள் வாடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தின் அடிப்
படையிலேயும் இந்த அரசு அதற்கு வேண்டிய முயற்சிகளை
இயன்ற வரையில் எடுக்கும் என்று நான் தெரிவித்து இருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் ;
மோகன் அவர்கள். (குறுக்கீடு). இல்லை, இல்லை, கால திருவாளர்
புக்கு இடமே இல்லை. தயவு செய்து உட்காருங்கள். நீட்டிப்
திருவாளர் மோகன். அடுத்து

திரு. இரா. மோகன் ; மாண்புமிகு துணைத்
அவர்களே, 1989-90-க்கான இந்த முதல் துணை தலைவர்
மீது திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே மதிப்பீடுகளின்
கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். என்னுடைய
பேற்ற நேரத்தில் தமிழ்நாட்டிலே இந்த ஆட்சி பொறுப்
சீர்குலைந்து போன நிலையில் இருந்தது பொருளாதார நிலை
யும். எடுத்த உடனேயே முதலமைச்சர் அனைவருக்கும் தெரி
ஏற்றவுடனேயே பகிரங்கமாகப் பொது ஆட்சிப் பொறுப்பை
கஜானாவும் காலி, களஞ்சியமும் காலி மக்களுக்கு அறிவித்தது.
இந்த ஆட்சிப் பொறுப்பை ஏற்று என்ற நிலையிலேதான்
பகிரங்கமாக அறிவித்து இன்றைக்கு இருக்கிறோம் என்பதைப்
டுக் காலத்திற்குள்ளாக கன்று இந்த இடைப்பட்ட ஓராண்
திறமையோடு இந்தச் சூழ்நிலையிலேயும் ஊன்றி நடப்பது போல மிகத்
பூர்வமாக தமிழக மக்களுக்கு நல்ல எந்த அளவுக்கு ஆக்கப்
செய்ய முடியுமோ அதற்கான திட்டங்களை, காரியங்களைச்
இன்றைக்குச் செய்யப்படுவது அந்தத் திட்டங்கள் எல்லாம்
கூடிய ஒரு நல்ல காரியமாகும். உண்மையிலேயே பாராட்டக்

இதற்கு முன்னாலே நடைபெற்ற ஆட்சியில் இப்படித் திட்டங்
களே அறிவிக்கப்படவில்லையா என்றால், அறிவிக்கப்பட்டது.
இரண்டு, மூன்று நாட்களுக்கு முன்னால் நடைபெற்ற விவாதங்
களிலே பேசிய ஆளும் கட்சியாக இருந்த கட்சி உறுப்பினர்கள்
பேசும்போதும் சரி, இ. காங்கிரஸ் உறுப்பினர்கள் பேசும்போதும்
சரி, சொன்னதை எல்லாம் இந்த ஆட்சி செய்யவில்லையே, என்ன
செய்தது என்று எல்லாம் கேட்டார்கள். திட்டங்களை மட்டும்
இந்த ஆட்சி அறிவிக்கிறது என்று சொன்னார்கள். எந்தத்
திட்டத்தை அறிவித்து அதற்கான ஒதுக்கீட்டை இந்த ஆட்சி
செய்யவில்லை என்பதைக் குறிப்பிட்டுக் காட்ட வேண்டும். அறி
வித்த திட்டங்களுக்கு எல்லாம் ஒதுக்கீட்டைச் செய்த ஆட்சி
இந்த ஆட்சிதான். ஆனால், அதற்கு மாறாக 10 ஆண்டு
களுக்கு மேலாக நடைபெற்ற அ.தி.மு.க. கட்சியின் ஆட்சியில்
அறிவிக்கப்படவில்லையா என்றால், அறிவிக்கப்பட்டது. தீடீ
ரென்று திட்டங்களை அறிவித்தார்கள். 30 இலட்சம் வீடு
களை ஒரே ஆண்டில் கட்டுவோம் என்று அறிவித்தார்கள்.
30 இலட்சம் வீடுகளை ஒரே ஆண்டிலே கட்டுவதற்கு எத்தனை
கோடி ரூபாய் வேண்டும்? அந்தத் தொகை ஒதுக்கீடு செய்யப்
பட்டதா என்றால், இல்லை.



1990 சனவரி 25] [திரு. இரா. மோகன்]

அதேபோல விவசாயிகளுக்கு 67 கோடி ரூபாய்க்கு கடன்
தள்ளுபடி செய்யப்படும் என்று அறிவித்தார்கள். ஆனால் அந்த
67 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டதா என்றால், ஒதுக்கப்பட
வில்லை. இன்றைக்கு அந்த வீடுகள் கட்டுவதானாலும் சரி,
விவசாயிகளுக்கு 67 கோடி ரூபாய் தள்ளுபடி செய்வதானாலும்
சரி,—அவர்களுக்கு அந்த 67 கோடி ரூபாயை ஒதுக்கியது எந்த
ஆட்சி என்று சொன்னால் இந்தக் கழக ஆட்சிதான்.
திட்டங்களை அறிவித்துவிட்டு, அதற்கான நிதி ஒதுக்கீட்டைச்
செய்யாமல் ஒதுங்கிப் போகின்ற ஆட்சி இந்த ஆட்சி அல்ல.

இன்னும் கடந்த காலத்திலே மற்றொன்றைப் பெரிதாகச்
சொன்னார்கள். யு.ஜி.சி. சம்பள விகிதப்படி கல்லூரி ஆசிரியர்
களுக்கு எல்லாம் ஊதியம் வழங்கப்படும் என்று கூறினார்கள்.
அதற்காக ஒரு பெரிய முழுப் பக்க விளம்பரமே செய்யப்பட்டது.
அ.தி.மு.க. ஆட்சி லட்சக் கணக்கான ரூபாய் செலவழித்து
எல்லாப் பத்திரிகைகளிலும் முழுப் பக்க விளம்பரம் செய்தது.
ஆனால் கல்லூரி ஆசிரியர்களுக்கு அந்த அளவுக்கு யு.ஜி.சி. சம்பள
விகிதாச்சாரப்படி சம்பள உயர்வு அளிக்கப்பட்டதா என்றால்,
இல்லை. இந்த ஆட்சி வந்ததற்குப் பின்னாலேதான் நாங்கள்
தந்த வாக்குறுதிப்படி மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான
அதே சம்பள விகிதத்தை மாநில அரசு ஊழியர்களுக்கு எல்லாம்
வழங்கி இருக்கின்றோம் ; பள்ளி ஆசிரியர்களுக்கு எல்லாம்
வழங்கி இருக்கின்றோம். யு.ஜி.சி. சம்பள விகிதப்படி இன்றைக்கு
கல்லூரி ஆசிரியர்களுக்கும் ஊதியம் தரப்பட்டு இருக்கின்றது.

ஆக, எதை அறிவிக்கிறோமோ அந்த அளவுக்கு நிதி ஒதுக்கீடு
செய்யவேண்டுமென்ற ஒரு பொறுப்புள்ள ஆட்சியாக இன்றைக்கு
தி.மு.க.வினுடைய ஆட்சி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட சத்துணவுத் திட்டத்தின்
கீழ் முட்டையும் சேர்க்கப்படும் என்று இங்கே அறிவித்தார்கள்.
அதற்காக இங்கே இப்போது ரூ. 10 கோடி சேர்க்கப்பட்டு நிதி
ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதேபோல் ஓய்வூதியம் பெறுகிறவர்
களுக்கு நாங்கள் ஆட்சிக்கு வந்தால் தொகையை உயர்த்தித்
தருவோம் என்றோம். அதற்காகவும் நிதி ஒதுக்கீடு செய்யப்
பட்டிருக்கிறது இந்தத் திட்டத்திலே. ஆகவே, எதைச் சொல்லு
கிறோமோ அதைச் செய்ய வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்
படுகிற அரசுதான் இந்த ஆட்சி—அதிலே யாருக்கும் எந்தக்
கருத்துவேறுபாடும் இருக்க முடியாது.

11-45 மணி

இன்னொன்றையும் நான் இங்கே பணிவன்போடு தெரிவித்துக்
கொள்கிறேன். ஆட்சிக்கு வருவதற்கு முன்னாலே இங்கே மூடிக்
கிடக்கிற பஞ்சாலைகளையெல்லாம் திறக்கவேண்டும்—தொழிற்

[திரு. இரா. மோகன்] [1990 சனவரி 25

சாலைகளையெல்லாம் திறக்க வேண்டும் என்று நடவடிக்கை
எடுப்போம் என்று சொல்லி, ஆட்சிக்கு வந்த பின்னாலே அதற்
கான முயற்சிகளையெல்லாம் மேற்கொண்டு அதிலே ஓரளவுக்கு
வெற்றியும் பெற்றிருக்கிறோம்—முழு அளவிற்கு இல்லை என்
றாலும்கூட பலவற்றைத் திறந்திருக்கிறோம். அதிலே ஒன்றுதான்
மூடப்பட்டுக் கிடந்த பஞ்சாலைகளில் 6 பஞ்சாலைகளைத் திறந்து
எடுத்து அவற்றின் அட்மினிஸ்ட்டிரேஷன்—அவற்றின் நிர்வாகத்
தைத் தமிழ்நாடு அரசாங்கம் மேற்கொள்ளும் என்று முடிவுசெய்து,
அதைத் திட்டமாகவே அறிவித்து மத்திய அரசாங்கத்திட
மிருந்து அதற்கு அனுமதி பெற வேண்டி இருந்த காரணத்தால்,
மத்திய அரசாங்கத்திற்கு அனுப்பியிருந்தோம். அப்போது
யார் ஆண்டு கொண்டிருந்தார்கள்? நேற்றைக்கு இங்கே வந்து,
கடற்கரையிலே பேசி, சென்னை நகரம் முழுவதும் பெரிய
பெரிய கட் அவுட்டுகளாக நின்று கொண்டிருந்த முன்னாள்
பிரதமர் திரு. ராஜீவ் காந்தி அவர்கள்தான் அப்போது டெல்லி
யிலே ஆண்டு கொண்டிருந்தார்கள் . . . . .

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணைச் சபாநாயகர்
அவர்களே, நான் குறுக்கிட விரும்பவில்லை. ஒரே ஒரு செய்தியை
மட்டும் சொல்ல ஆசைப்படுகிறேன். ஒவ்வொரு முறையும்
கடற்கரைப் பொதுக்கூட்டம் பற்றியும், திரு. ராஜீவ் காந்தி
அவர்களைப் பற்றியும் இங்கே பேசப்படுகிறது. திரு. ராஜீவ்
காந்தி அவர்களுக்கு எந்தவிதமான பாதுகாப்பு கொடுப்போம்
என்று சொன்னீர்களோ அதுவும் கொடுக்கப்படவில்லை—இங்கே
போக்குவரத்திற்காக—பஸ்களுக்குப் பெர்மிட் கொடுப்போம்
என்று சொன்னீர்கள்—அதுவும் கொடுக்கப்படவில்லை. இதை
நான் இங்கே குறிப்பிட்டு அதிக நேரத்தை எடுத்துக் கொள்ள
விரும்பவில்லை. இவைகளையெல்லாம் குற்றச்சாட்டாகக்கூட
அல்ல—இந்தச் செய்திகளைச் சொல்லிவிட்டு, மேலும் இதைப்
பற்றிய விவரங்களைத் தெளிவாகச் சொல்லுவதற்கு இன்றோ
அல்லது 27-ம் தேதியோ நீங்கள் எனக்கு நேரத்தை ஒதுக்கத்
தயாராக இருந்தால் முழுமையாக நான் சொல்லத் தயாராக
இருக்கிறேன் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இதைப்பற்றி
மன்ற உறுப்பினர்கள் பேசக்கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே . . . . . . . .

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய
துணைத் தலைவர் அவர்கள் பிரதமராக இருந்த திரு. ராஜீவ்



1990 சனவரி 25] [பேராசிரியர் க. அன்பழகன்]

காந்தி அவர்களுக்குக் குறிப்பிடப்பட்ட பாதுகாப்பு தரப்பட
வில்லை என்று சொன்னார்கள். பாதுகாப்பு தருகிற பொறுப்பு
காவல் துறைக்கு உரியது. முறைப்படி தருவதற்கு—அரசாங்
கத்தால்—மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் அறிவிக்கப்
பட்டிருக்கிறது. அந்தப் பொறுப்பை காவல் துறையினர் எப்படிச்
செய்தார்கள் என்பது குறித்து அவர்களைக் கேட்டால்தான்
தெரியும். ஆனால் முறைப்படி பாதுகாப்பு வழங்கப்பட்டிருக்
கிறது என்று காவல் துறை அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள்.
மற்றொன்று பஸ்களைத் தரவில்லை என்றார்கள். அதுபற்றிய
விவரத்தை நேற்றைய தினமே மாண்புமிகு முதலமைச்சர்
அவர்கள் இங்கே விடை தருகிறபோதே தெரிவித்திருக்கிறார்கள்.
(குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பிறகு அதை
ஒரு நாளைக்கு வைத்துக் கொள்ளலாம். இன்றைக்குப் பேச
வேண்டியதில்லை.

திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துணை சபாநாயகர்
அவர்களே, மாண்புமிகு பேராசிரியர் அவர்களை கல்வி
அமைச்சராக மட்டுமல்லாமல் பேராசிரியராகவும் கருதுகிறவன்
நான். அவர்களுக்கு வந்த தகவலை அவர்கள் சொல்லு
றார்கள். பாதுகாப்பு கொடுக்கவில்லை என்பதோடு, நேற்றைய
தினம் அவருடைய கூட்டத்தில் செருப்பு வீசப்பட்டது என்பது
உள்பட அத்தனை விஷயங்களையும் நான் இப்போது சொல்ல
விரும்பவில்லை. 27 ஆம் தேதியாவது அனுமதி கொடுங்கள்.
நான் என் கையிலே இருக்கின்ற விவரங்களைக் கொடுக்கிறேன்.
தவறு இருந்தால் நீங்கள் அதைத் திருத்துங்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு
துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு முக்கியமான பிரச்
சினையில் ஏதாவது குறை இருக்குமானால் முதலமைச்சரிடத்தில்
தொடர்பு கொள்ளக்கூடிய திரு. குமரி அனந்தன் அவர்கள்—
ஒரு கட்சித் தலைவர் என்ற அடிப்படையில்கூட—இப்படியெல்
லாம் நடைபெற்றது என்று நேரடியாகவே தெரிவித்திருக்க
லாம். சட்டமன்றத்தில் விவாதித்துத்தான் இந்தப் பிரச்சினை
களுக்குத் தீர்வு காண வேண்டும் என்ற அவசியமில்லை. கடமை
உணர்ச்சியுள்ள அரசு இந்த அரசு. எனவே நடைபெற்ற
நிகழ்ச்சிகள் குறித்து எந்த வகையிலாவது திரு. குமரி அனந்தன்
அவர்களுக்கு இந்த அரசு நியாயம் வழங்க வேண்டிய கடமையில்
இருக்குமானால் எந்த நேரத்திலும் அவர் தெரிவிக்கலாம்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு துணைத்
தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி
அனந்தன் அவர்கள் சொன்ன குற்றச்சாட்டை மறுக்கக்

கடமைப்பட்டிருக்கிறேன். நேற்றைய தினம் கூட்டம் நடை
பெற்ற கடற்கரை சாலை வழியாக நான் 7½ மணிக்குச் சென்
றேன். மாண்புமிகு திரு. ராஜீவ் காந்தி அவர்கள் பிரதமராக
வந்தபோது எந்த அளவுக்குப் போலீஸ் பாதுகாப்பு போடப்
பட்டிருந்ததோ அந்த அளவுக்கு போலீஸ் பாதுகாப்பு மட்டு
மல்ல போக்குவரத்துப் போலீசாரும் கூட அங்கே போக்கு
வரத்தைக் கட்டுப்படுத்தி நல்லமுறையில் ஏற்பாடு செய்
திருந்தார்கள்.

11-50 மணி

அதுமட்டுமல்ல, யாரோ ஒரு வாலிபர் செருப்பு வீசினார்
என்று சொன்னார். ஏதோ இந்த அரசாங்கம் திட்டமிட்டுச்
செய்வதைப்போன்ற ஒரு களங்கத்தைக் கற்பிக்கிறார்கள்.
உணர்ச்சிவசப்பட்ட ஒரு கேரளாவைச் சேர்ந்த வாலிபன் பத்
தாவது படித்தவன், தனக்கு வேலை கிடைக்கவில்லை என்ற
ஆத்திரத்திலே செய்தேன் என்று அவனே வாக்கு மூலம் கொடுத்து
இருக்கிறான். காவல் துறையினர் கைது செய்திருக்கிறார்கள்.
ஆகவே, உண்மை இப்படியிருக்கும்பொழுது வேண்டுமென்றே
இந்த அரசாங்கத்தின் மீது பழிபோடுவதற்காகவே குற்றச்
சாட்டுகளைச் சொல்வது முறையல்ல. ஏராளமான பஸ்கள்
கடற்கரை ஓரத்திலே காங்கிரஸ் கொடி கட்டிவிடப்பட்ட அந்தக்
காட்சியையும் நான் பார்த்தேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மீண்டும் மீண்டும்
இதைப்பற்றிப் பேசினால் நேரம் வீணாகும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு தலைவரவர்களே, இது
பிரச்சினையாக வேண்டாம், விவாதிக்க வேண்டாம் என்ற அள
விற்குத்தான் விடப்பட்டது. ஆனால், திருப்பித் திருப்பி கடற்கரை
கடற்கரை என்று பேச ஆரம்பித்து, அதற்கு விளக்கம் சொல்கிற
நிலைமை நல்லது அல்ல. துணை மதிப்பீட்டில் பேசுகிற
நேரத்தில் எனக்குக்கூட நீங்கள் பேசுவதற்கு அனுமதி தரவில்லை.
ஆனால் நான் ஒன்று சொல்கிறேன். மாண்புமிகு அமைச்ச
ரவர்கள் இதை வார்த்தைக்கு வார்த்தை மறுத்துக் கொண்
டிருப்பது என்பது அவ்வளவு நல்லது அல்ல. ஒரு கருத்தை—எங்
களுக்குத் தெரிந்த தகவலைச் சொல்கிறோம். அந்தத் தகவல்
பதிவாகிறது என்பது உண்மை. ஆனால் அதற்காக உடனே
மறுத்து ஆக வேண்டும் என்பது அல்ல. அவர் தகவல் என்ற
அளவிற்குத்தான் சொல்கிறார். இன்றைக்கு நான் உங்களைப்
பணிவோடு கேட்டுக்கொள்கிறேன், துணை மதிப்பீடு என்ற
அளவில் இந்த விவாதம் கடற்கரைக்குப் போகாமல்—கடற்
கரையில் நடைபெற்றதைத் தனியாகப் பேச வேண்டுமானால்
27ஆம் தேதி ஒதுக்கினால் தனியாகப் பேசிக் கொள்ளலாம்.





மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மோகன்
அவர்களே, பீச் காற்று வாங்கப் போக வேண்டாம் (சிரிப்பு).

திரு. இரா. மோகன் : பேரவைத் துணைத் தலைவரவர்களே,
நான் என்ன சொன்னேன் என்பதைக்கூடப் புரிந்து கொள்ளாமல்
இடைமறித்தால் நான் என்ன செய்வது ? ராஜீவ் காந்தி பிரதம
ராக இருந்தவர், மூடிய பஞ்சாலைகளைத் திறப்பதற்காகத்
தமிழக அரசு எழுதிய கடிதத்தைக் கவனிக்கவில்லையே என்ற
ஆதங்கத்தை வெளியிட்டால், கடற்கரையிலே பேசினார் என்றா
ராம். கடற்கரையிலே நடந்த கூட்டத்தைப்பற்றிச் சொன்
னேனா ? அவர் பேசிய பேச்சைப்பற்றி ஏதாவது சொன்னேனா ?
கவர்னர் மாளிகையிலே போய்த் தங்கிக் கொண்டிருக்கிறார்கள்
இராஜீவ் காந்தி, என்ன குறை ? இதற்கு முன்னாலே யாராவது
எதிர்க்கட்சிக்காரர்களுக்குக் கவர்னர் மாளிகையிலே கொடுத்
தார்களா ? (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : தொடர்புடைய
பொருளாகப் பேச வேண்டும். (குறுக்கீடு) நான் சொல்லி
விடுகிறேன். நானே அவர்களிடத்திலே கேட்டுக்கொள்கிறேன்,
நீங்கள் உட்காருங்கள். உங்கள் கடமையை நான் செய்கிறேன்.
I have to save time.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே,
இதுதான் நான் விவாதத்திற்கு வேண்டாமென்று சொன்னேன்.
நேற்று கவர்னர் மாளிகையிலே தங்குவதற்குக்கூட, அரசியல்
வாதிகள் யாரும் வந்து அவரைப் பார்க்கக்கூடாது என்று தடை
விதிக்கப்பட்டு, அதனால் இராஜீவ் காந்தி அவர்கள் வேறு வீட்டில்
தங்கவேண்டுமென்ற ஏற்பாடு மாலையிலே மூன்று மணிக்குத்
துவங்கி நான்கு மணிக்குள் ஒரு வீடு தயார் செய்யவேண்டிய
அளவிற்குக் காங்கிரஸ் கட்சித் தலைவர் வாழப்பாடி இராம
மூர்த்தி எவ்வளவு சிரமப்பட்டார் என்பது எனக்குத் தெரியும்.
கவர்னர் மாளிகையிலேயும் அநீதி இழைக்கப்பட்டது. விவாதம்
வேண்டாம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : திரு. மோகன்
அவர்களே, துணை நிதிநிலை அறிக்கையை ஒட்டிப் பேசும்படிக்
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. இரா. மோகன் : நான் பேசும்பொழுது அவர்கள்
குறுக்கிடும்பொழுது அதற்குப் பதில் சொல்லாமல் இருக்க
முடியாது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

கவர்னர் மாளிகையிலேதான் இராஜீவ் காந்தி தங்கினார் என்று எல்லாப் பேப்பரிலும் இருக்கிறது. வாழப்பாடி இராம மூர்த்தி எங்கேயோ சென்று வீடு பார்த்தாராம். அதை நம்பச் சொல்கிறீர்களா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேச்சை முடிக்கலாம். ஒரு மணித் துளி.

திரு. இரா. மோகன் : தலைவரவர்களே, எனக்குக் கொடுக்கப்பட்ட பத்து நிமிஷத்தை முழுவதுமாக முன் வரிசை யிலே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள் எடுத்துக் கொண் டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் ஏற்கெனவே சொல்லியி ருக்கிறேன். குறுக்கீடுகளுக்கும் சேர்த்து பத்து மணித் துளிகள். உங்களுக்கும் அந்த விதி பொருந்தும். ஒரு மணித் துளி.

திரு. இரா. மோகன் : குறுக்கீடுகளை அனுமதித்தது தவறே தவிர . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவரவர்களே, இன்றைய தினம் இந்த விவாதம் நம்முடைய நிதித் துறையின் சார்பாக நம்முடைய திரு. கணேசன் அவர்கள் பதில் அளிக்க வேண்டிய பேச்சு 12¼ மணிக்குத் தொடங்க வேண் டும், ஒரு மணிக்கு வாக்கெடுக்க வேண்டும். ஆகவே, அந்த வாக்கெடுப்பு இருக்கிற காரணத்தினால் இன்றைய தினம் உள்ள கட்டுப்பாட்டை எந்த வகையிலேயும் மீற முடியாத நிலைமை இருப்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. மோகன் ஒரு மணித் துளிதான்.

திரு. இரா. மோகன் : முடித்து விடுகிறேன். தலைவரவர் களே, அந்தப் பஞ்சாலைகள் திறப்பது இன்னும் காலதாமதம் ஆகாமல் முடிக்க, விரைவாக அந்தப் பஞ்சாலைகளைத் திறப் பதற்கான நடவடிக்கைகளில் நம்முடைய அரசு மத்திய அரசை அணுக வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

இறுதியாக ஒன்று. அங்கே பல்வேறு இடங்களிலே, பத்து வருஷம், 15 வருஷங்களுக்கு முன்னால் நகரங்களில் இந்த மனைப் பிரிவுகளைப் பிரித்து விற்றவர்கள் சரியான



லேஅவுட் அப்ருவல் இல்லாமல் விற்றிருக்கிற காரணத்தினால் 15 வருஷங்களுக்குப் பின்னாலும் இன்னும் அங்கே சரியான சாக்கடை வசதிகளோ, குடிநீர் வசதியோ, சாலை வசதியோ செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அருள்கூர்ந்து என்னுடைய சிங்காநல்லூர் தொகுதியானாலும் சரி, அதைப்போலவே தமிழ் நாட்டிலே இருக்கின்ற எல்லா நகரங்களிலும் சரி, அந்த பேசிக் அமெனிட்டீசைச் செய்து தருவதற்கான முழு முயற்சியை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப் பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நேரம் ஆகிவிட்டது, முடியுங்கள்.

திரு. இரா. மோகன் : இறுதியாக ஒரேயொரு தகவல். முக்கியமான ஒரு தகவலை மட்டும் சொல்லிவிட்டு நான் விடை பெறுகின்றேன். காரணம், என்னுடைய பத்து நிமிஷத்தை வேறு யாரோ அபகரித்துக் கொண்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : விரைவாக முடியுங்கள்.

திரு. இரா. மோகன் : தலைவரவர்களே, நம்முடைய தமிழ் நாட்டிலே சர்வோதயா சங்கங்கள் காந்தியார் காலத் திலே ஆரம்பிக்கப்பட்டன. 65 ஆண்டுக் காலமாக 55 சர்வோதயா சங்கங்கள் இயங்கி வருகின்றன.

அதிலே ஒரு சங்கம் 40 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயை மோசடி செய்து, 4, 5 மாதங்களுக்கு முன்னால் அது பிளாக் லிஸ்ட்டில் போடப்பட்டு, கவர்ன்மெண்ட் அதற்காக சர்க் குலரே போட்டிருக்கிறார்கள். ஆனால் இன்னும் அந்தச் சங்கத்திற்கு ரிபேட் தருவதை நிறுத்தவில்லை. இன்னும் அந்தச் சங்கத்திற்கு சேல்ஸ் டாக்ஸ் எக்சம்ப்ஷன் கொடுப் பதை நிறுத்தவில்லை. ஆனால் பிளாக் லிஸ்ட்டில் சேர்த்த தற்குப் பின்னாலும், அவர்களுக்கு எந்தவிதமான தண்டனை யும் இல்லையென்று சொன்னால், அதைப்போல இந்த சர்க் குலர் எல்லா சங்கங்களுக்கும் அனுப்பப்படவில்லை என்று சொன்னால், பிளாக் லிஸ்ட்டில் சேர்த்து, 40 லட்சத்து 70 ஆயிரம் ரூபாயை மோசடி செய்த அந்தச் சங்கத்திற்கு என்ன நிலைமை என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று கேட்டு, இந்த நிதிநிலை அறிக்கையை மனதார பாராட்டி, எல்லா வகையிலும் சொன்ன திட்டங்களைச் செயல்படுத்து வதற்கு நிதியை ஒதுக்கி, தன் மனதிலே இடம் கொடுத்திருக் கிற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைப் பாராட்டி விடை பெறுகிறேன்.

[1990 சனவரி 25

11-55 மணி

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு
தலைவர் அவர்களே, துணை நிதிநிலை பேரவைத்
னுடைய கருத்துக்களைச் சொல்வதற்கு அறிக்கையிலே என்
தற்கு மகிழ்ச்சி அடைகிறேன். இங்கே வாய்ப்பு கொடுத்த
மதிப்பீடு அதிகரிக்கப்பட்ட காரணத்தால் பல்வேறு துறைகளுக்கு
சார்பாக முதலமைச்சர் அவர்கள் நிதியொதுக்க அரசாங்கத்தின்
கொண்டு வந்து இங்கே மானியக் கோரிக்கையை மசோதாவை
இருக்கிறார்கள். சுமார் 582 கோடி ரூபாய் இந்த சமர்ப்பித்து
கேட்டிருக்கிறார்கள். 'கண்டின்ஜன்ட் பண்ட்' நிதிநிலையில்
செலவிற்காக ஒதுக்கப்பட்ட அந்த நிதியிலிருந்து எதிர்பாராத
ரூபாயை மாநில அரசு ஊழியர்களுக்கு மத்திய 120 கோடி
களின் ஊதியத்திற்கு சமமான ஊதியத்தை அரசு ஊழியர்
உத்தரவு பிறப்பித்த காரணத்தால் வழங்குவதற்கு
எதிர்பாராத செலவு—"Contingent Fund is to meet the unforeseen
expenditure" திட்டத்திலே விடப்பட்டு, பட்ஜெட்டிலே விடப்பட்டு
அதற்கு பிறகு ஏதாவது ஒரு செலவு, எதிர்பாராத செலவு
வருமேயானால் அதைத்தான் நாம் கண்டின்ஜென்ட் பண்டி
லிருந்து எடுப்பது வழக்கம். இங்கே பல்வேறு துறைகளில் நிதி
குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி ஒவ்வொரு துறைக்கும் நிதியைக்
கேட்டிருக்கிறார்கள். பொங்கல் பரிசை எல்லோருக்கும்
வழங்கியதாகவும்—எல்லோரும் பெற்றிருக்கிறார்கள். வழங்கிய
தாக இங்கே குறிப்பிட்டிருக்கிறார்கள். பொங்கல் பரிசு வழங்
கும்போது ஒரு குறிப்பிட்ட சம்பளத்தை பெறக்கூடியவர்
களுக்கு அதாவது 1,000 ரூபாய் அல்லது 1,500 ரூபாய் வரையில்
அரசாங்க சம்பளத்தைப் பெறக்கூடியவர்களுக்கு வழங்கு
வீர்களானால் உண்மையிலேயே நிதியை கொஞ்சம் சேமிக்க
லாம். மற்றொன்று, அவர்களைத் தான் நாம் கஷ்டப்படு
கிறவர்களாக எடுத்துக்கொள்ள முடியும். தலைமைச் செய
லாளரிலிருந்து இந்தப் பணம் வழங்கப்பட தேவையில்லை
யென்பதுதான் என்னுடைய கருத்தாகும். மேலே இருக்
கிற செகரட்டரிகளுக்கு எல்லாம் இதைக் கொடுத்திருக்கிறார்
கள். அவர்களுக்கும் பொங்கல் உண்டு. ஆனால், நாம்
கொஞ்சம் வறுமைக்கோட்டிற்கு கீழே இருந்து பணியாற்றக்
கூடியவர்களை எண்ணிப் பார்த்து செயல்பட வேண்டும்
என்பதற்காக சொன்னேன்.

அடுத்து, 6.9 கோடி ரூபாய் எதிர்பாராத செலவாக
கோழி முட்டை வழங்குவதற்கு தேவைப்படுவதாக இங்கே
கேட்டிருக்கிறார்கள். நல்ல திட்டம் தான். எல்லோருக்கும
போய்ச் சேர வேண்டியதும் தான். ஆனால் இதை கண்காணிப்
பதற்கு நல்ல தனிப்பட்ட நிறுவனங்களையும் அரசாங்கம்





அரவணைத்து, அதாவது ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப்
போன்ற கிளப்புகளை எல்லாம் சேர்த்துக் கொண்டு
இதனை விநியோகிப்போமானால் குறைபாடு இல்லாமல் இருக்
கும் என்பது தான் என்னுடைய கருத்தாகும். நான் என்னுடைய
தொகுதியிலே பொட்டல் என்ற கிராமத்திற்குச் சென்றிருந்
தேன். அங்கே சொன்னார்கள். எங்களுக்கு முழுமையாக
கோழி முட்டை கிடைப்பதில்லை. கால் முட்டை, அரைக்கால்
முட்டை என்று தான் கொடுப்பதாகச் சொன்னார்கள்
குழந்தைகளுக்கு அதுபோன்ற ஏக்கம் வராமல் பார்த்துக்
கொள்ளவேண்டும். நம்முடைய வீட்டிலே கூட ஒரு குழந்
தைக்கு பெரிய முட்டை கொடுத்து விட்டு, இன்னொரு குழந்
தைக்கு சிறிய முட்டையை கொடுத்தால் அது கோபித்துக்
கொள்ளும். அப்படி கோபிக்கக்கூடிய அளவிற்கு சமுதாயத்
தில் நலிந்த மக்களுக்கு எண்ணம் வந்துவிடக் கூடாது என்
பதற்காகத்தான் நான் சொன்னேன்.

மற்றொன்று, நேற்றையதினம் முதலமைச்சர் அவர்கள்
பதில் உரையைச் சொல்லும்போது, மதுவிலக்குக் குற்றங்
களுக்காக........ .............

12-00 மணி

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** முட்டையில் சிறிய
முட்டை, பெரிய முட்டை என்று சொன்னதால், முட்டைக்குத்
தொடர்புடைய அமைச்சர் அவர்கள் அதை மறுக்கிறார்கள்.

**மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் :** மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, முட்டையினுடைய எடை
எவ்வளவு இருக்கவேண்டும் என்று அரசு குறித்தே, ஒப்பந்தக்
காரர்களுக்கு விதியை அளித்திருக்கிறது. எனவே சிறிய
முட்டை, பெரிய முட்டை என்ற பிரச்சினை அங்கே வராது.
கால் முட்டை, அரை முட்டை என்கிற பிரச்சினை வருவதற்
குக் காரணம், ஒரு மையத்திலே 50 குழந்தைகள் தொடர்ந்து
பயன்பெறுகிறார்கள் என்றால் அந்த மையத்திற்கு 50 முட்டை
கள்தான் வழங்கவேண்டும் என்று அரசு உத்தரவிட்டு இருக்
கிறது. ஆனால் முட்டைகள் வழங்குகிற அன்றைக்கு 50
குழந்தைகளுக்குப் பதிலாக, 60 குழந்தைகள், அல்லது 65
குழந்தைகள் என்று உள்ளூரிலே உள்ள அந்த மையத்திலே
தொடர்ந்து பயன் பெறாத குழந்தைகளைக் கூட தாய்
மார்கள் அழைத்துவந்து அந்த நேரத்திலே அங்கே அமர்ந்து
கொண்டு, என்னுடைய குழந்தைக்கும் முட்டை தா என்று
கேட்கிற நேரத்திலே அங்கேயிருக்கக்கூடிய அமைப்பாளர்
களால், அவர்களை அப்புறப்படுத்த முடியவில்லை. எனவே
இருப்பதைப் பகிர்ந்து கொடுத்து, அவர்களையும் திருப்திப்
படுத்தவேண்டிய கட்டாயம் ஏற்படுகிற காரணத்தாலே,

இந்தச் சிக்கல் ஏற்படுகிறது. எனவே, அரசு வழங்குவது முழு முட்டைதான் என்பதை நான் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன்: நேற்றைய தினம் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது, மதுவிலக்குக் குற்றத் திற்காக 7 கோடி ரூபாய் அபராதத் தொகையாக வசூலிக்கப் பட்டதாக,—நீதிமன்றத்தின் மூலமாக—என்று சொன்னார்கள். (குறுக்கீடு) 13 கோடி ரூபாய். இந்த 13 கோடி ரூபாயும், சாதாரண மக்கள் நீதிமன்றத்திற்குப் போய்—குடித்து விட்டு அவர்கள் கட்டிய தொகைதான். இதுவும் ஒருவிதமான வரிதான். இதை நாம் அபராதமாகப் போடாமல் வரியாகப் போடுவோமானால், இதைப்பற்றி வேறுவிதமாகப் பேசு வார்கள். நீதிமன்றம் இதை அபராதமாகப் போடுகின்ற காரணத்தால், யாரும் ஒன்றும் பேசுவதில்லை. காரணம் நீதிமன்றம், நீதிமன்றம் போடுவதால், அது அபராதம் நாம் விதித்தால், வரி, இரண்டுக்கும் வித்தியாசம் இவ்வளவு தான். ஆனால் அரசாங்கத்திற்கு வரவேண்டிய பணம் வந்து விடுகிறது. நாம் இதை வரியாகப் போடுவோமானால், இந்த 13 கோடி ரூபாய்க்கு எதிர்ப்பு கிளம்பும். ஆனால் அபராத மாகப் போடும்போது, அதற்கு எதிர்ப்பு கிளம்பாமல், வந்து விடுகிறது. இந்த 13 கோடி ரூபாயும், மக்களுக்கு மீண்டும் போய்ச்சேரவேண்டும். அபராதமாக செலுத்தக் கூடியவர் களுக்கு இந்த 13 கோடி ரூபாயில், ஓரளவிற்கு அவர்களுக்கு உதவிடவேண்டும். அவர்கள் செய்யக்கூடிய குற்றத் திலே, சில சலுகைகளைக் கொடுக்க வேண்டும். அல்லது விலையையாவது குறைக்கவேண்டும் என்பதைத்தான் என்னுடைய கருத்தாக நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய ரூபாயினுடைய மதிப்பு 10 காசு, 90 காசு குறைவதற்கு யார் காரணம். 1947-லேயிருந்து கணக்கு எடுத்துப் பார்க்கும்போது, இந்த 90 காசு குறைவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார் யார். 90 காசு குறை வதற்கு ஏழைஎளியவர்கள் எந்தத்தவறையும் செய்யவில்லை. அந்த மக்களுக்கே தெரியாது, ஏன் இந்த விலைவாசி என்று. ஏன் இப்படி ரூபாயின் மதிப்பு குறைந்தது என்று அவர்களுக்குத் தெரியாது. (குறுக்கீடு). முதலமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். மக்களுக்கு ரூபாயின் மதிப்பு குறைந்ததே தெரியாது என்று. ஒத்துக்கொள்கிறேன். அப்படிப் பட்ட பாமர மக்கள் வாழக்கூடிய இந்தக் காலகட்டத்தில் 90 பைசாவை அனுபவிக்கக்கூடிய இந்தச் சமுதாய விரோதிகள் என்று சொல்லக்கூடாது—சமுதாயத்தினுடைய நியதியை மீறக்கூடியவர்களிடமிருந்து அதிகமாக நிதியை வாங்குவோ மானால் இதைப்போன்ற துணை மானியக் கோரிக்கையை



நாம் சமர்ப்பிக்கக்கூடிய கட்டாயம் உருவாகாது என்பது தான் என்னுடைய கருத்தாகும். இந்த 90 காசு சாதாரண சாமானிய மக்களுக்குப் போய்ச் சேருவதில்லை அதில் அவர் களுக்கு பங்கு இருக்கிறது. அயல்நாட்டுக் கடன்கூட அவர்களுடைய தலையிலேதான் விழுகிறது. நம்முடைய இந்திய நாட்டுக் கடன்கூட அவர்களுடைய தலையிலே விழுகிறது.

இங்கே மாநகராட்சி மன்றத் தேர்தலைப் பற்றி எல்லாம் சொன்னார்கள். சம்பளம் போடுவதற்குக்கூட வழியில்லாத ஒரு மாநகராட்சி மன்றத்திற்கு தேர்தல் எதற்கு? 4 கோடி ரூபாய் சென்ற மாதம் கமர்சியல் வங்கியில் கடன் வாங்கித்தான் அந்தக் கார்ப்பரேஷனில் பணியாற்றக் கூடிய சிப்பந்திகளுக்கு சம் பளத்தை வழங்கியிருக்கிறோம். பணம் இல்லாத இடத்திற்கு, மக்களுக்குத் தேவை இல்லாத இடம் என்றுதான் சொல்ல முடி யும். காரணம் அதைப் பராமரிக்கவே முடியவில்லை. தேர்தலிலே நின்று வரக் கூடியவர்களுக்கு வேண்டுமானால், ஒரு பணியைக் கொடுத்ததுபோலாகும். கவுன்சிலர்களுக்கு—என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலிலே நம்முடைய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர் கள் என்னுடைய சார்பிலே ஒரு வார்த்தையைச் சொன்னார் கள். மணிமுத்தாறு அணையைத் திறந்து விடுவதைப் பற்றி இங்கே எல்லாம் பேசக் கூடாது என்று சொன்னார்கள். அதைக் கேட்டுவிட்டு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர் கள், என்னுடைய நண்பர் துரைமுருகன்.... (குறுக்கீடு).

மாண்புமிகு திரு. துரைமுருகன்: பேரவைத் தலைவர் அவர் களே, நீங்கள் இதைப் பேசுவீர்கள் என்று நானும் தயாராக இருக்கிறேன். மணிமுத்தாறிலிருந்து தண்ணீரைத் திறந்துவிட வேண்டும் என்று கேட்கிறார்கள். மணிமுத்தாறு, நான்கு ஜோன் களாக, தண்ணீர் விடுவதற்காக பிரிக்கப்பட்டிருக்கிறது. மாண்பு மிகு உறுப்பினர் பாண்டியன் அவர்களுடைய பகுதி முதல் ஜோனிலே வருகிறது.

முதல் ஜோனும், இரண்டாவது ஜோனும் சென்ற ஆண்டு தண் ணீர் பெற்ற காரணத்தினால், இந்த ஆண்டு பெறுவதற்கு அதற்கு விதியிலே வகையில்லை. ஏனென்றால் அதற்கு ரொடேஷன் சிஸ்டத்திலே தண்ணீர் தருகிறோம். இந்த ஆண்டு, 3, 4-வது ஜோனுக்கு தண்ணீர் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். இருந் தாலும் மாண்புமிகு உறுப்பினர் பாண்டியன் அவர்கள் கேட்டதற் கிணங்கவும், அங்கேயிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் கேட் டதற்கு இணங்கவும், நல்ல காலமாக தண்ணீரும் இருக்கின்ற காரணத்தினால், 3, 4-வது ஜோனுக்கு வழக்கமாக தண்ணீர் விடு வதோடு, முதல் ஜோனிலே நம்முடைய உறுப்பினர் பாண்டியன் அவர்களுடைய தொகுதியிலே 15 குளங்களுக்கு தண்ணீர் விடு

வதற்கு காலையிலே உத்தரவைப் பிறப்பித்திருக்கிறேன். கிட்
டத்தட்ட 570 ஏக்கர்களுக்கு அது பாயும். உங்களுக்கு மட்டு
மல்ல. இரண்டாவது ஜோனுக்கு தண்ணீர் 8 குளங்களுக்கு
விட்டிருக்கிறோம். ஆக முதல், மற்றும் இரண்டாவது ஜோனுக்கு
மட்டும் 23 குளங்களுக்கு தண்ணீர் விட்டிருக்கிறோம். 1,260
ஏக்கர்கள் அதனாலே பயன் பெறும். நிச்சயமாக நன்றி சொல்
வார் என்று கருதுகிறேன்.

12-05 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நன்றியுடன் முடிக்குமாறு
கேட்டுக்கொள்கிறேன்.

திரு. பி. எச். பாண்டியன் : என்னுடைய நண்பருக்கு நன்றி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைத் தலைவருக்கும்
நன்றி தெரிவிக்கலாம்.

திரு. பி. எச். பாண்டியன் : வீரவநல்லூர் என்ற நகர பஞ்சா
யத்தில், ஒரு மேல் நிலைப் பள்ளியை, இந்த 95 பள்ளிகளில் தர
வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரை, கல்வி
யமைச்சர் அவர்களை நான் கேட்டுக் கொள்கிறேன். அது பெரிய
நகரப் பஞ்சாயத்து. 20,000 மக்கள் வாழக் கூடிய ஒரு நகரப்
பஞ்சாயத்து. புரட்சித் தலைவர், எம்.ஜி.ஆர். அவர்கள் அந்
தப் பள்ளிக் கட்டிடத்தைக் கட்டுவதற்கு கிட்டத்தட்ட ரூ. 6
இலட்சம் வழங்கியிருந்தார்கள். இன்றைக்கு அங்கே விஞ்ஞானக்
கூடம் கட்டியாகி விட்டது. ஆகவே அதை வழங்கும்படி
கேட்டுக் கொண்டு நன்றி சொல்லி அமைகின்றேன். நன்றி,
வணக்கம்.

*திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் சமர்ப்பிக்கப்
பட்டிருக்கின்ற துணை மானியக் கோரிக்கையின் மீது இந்திய
கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் ஒரு சில கருத்துக்களைச் சொல்ல
முன்வருகின்றேன்.

இந்த ஆண்டு எழுத்தறிவின்மையைப் போக்கக்கூடிய ஆண்
டாக, சர்வதேச ஆண்டாக இந்த ஆண்டு சொல்லப்படு
கிறது. ஆகவே அதையொட்டி இந்த மானியக் கோரிக்கையில்
கல்வி சம்பந்தமாக சில விவரங்கள் கொடுத்திருக்கிறார்கள்.
காலணி வழங்குவதற்கு அதிகமான நிதியை குழந்தைகளுக்கு
வழங்கவேண்டுமென்று கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் சொல்
லிக் கொள்ள விரும்புவது. இது ஏற்கெனவே தினமணி பத்திரிகை
யிலேகூட ஒரு தலையங்கமாக, சில நாட்களுக்கு முன்னாலே எழு





தப்பட்டிருந்தது. நம்முடைய தமிழகத்திலே படிப்பறிவின்மை
யின் காரணமாக அடித்தளத்திலே சாதாரண மக்கள்தான் மிக
வும் கஷ்டப்படுகிறார்கள். அதற்குக் காரணம் ஆரம்பக் கல்வி
எல்லா இடங்களிலும், சிறு குழந்தைகள் சென்று படிக்கக் கூடிய
முறையிலே, பள்ளிக் கூடங்கள் இருக்க வேண்டியது மிக மிக
அவசியம். ஆகவே இப்போது பல்வேறு கிராமங்களிலே சில
குடியிருப்புகளிலே ஆரம்பக் கல்விக் கூடங்கள் இல்லை. ஆகவே
குறிப்பாக என்னுடைய தொகுதியைப் பொறுத்தமட்டிலே, இன்
றைக்கு ஸ்ரீரங்கராஜபுரம், குருவிக் குளம் ஊராட்சி ஒன்றியத்தைச்
சார்ந்தது. அடுத்து காத்தப்பட்டி, கோவில்பட்டி ஊராட்சி ஒன்
றியத்தைச் சேர்ந்த கிராமம் ஆகும். மூன்றாவது குமரிகுளம்.
அத்தனைபேரும் அரிசன மக்கள் வாழக் கூடிய ஒரு சின்ன கிரா
மம். அங்கே ஏறக்குறைய 50, 60 குழந்தைகள் பள்ளிக்குச் செல்
லக் கூடிய தகுதி உள்ளவர்களாக இருக்கிறார்கள். அதே
மாதிரி வடக்கு செமப்புதூர். இந்த நான்கு கிராமங்களிலும் ஆரம்
பப் பள்ளிக்கூடம் வேண்டுமென்று தொடர்ந்து கேட்டாலும்
கூட, மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்கள் இன்றைக்கு நேரடி
யாக அவரிடத்திலே கேட்டாகி விட்டது. அவர்கள் சொல்கிறார்
கள். தமிழகத்திலே பள்ளிகள் இல்லாத கிராமங்களே இல்லை
என்று ஒரு சர்வே முடிந்து விட்ட காரணத்தால் இன்றைக்கு
புதியதாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாகவோ, அல்லது எந்த
முறையிலோ பள்ளிக் கூடங்கள் தொடங்குவதற்கு அனுமதி
வழங்கப்பட மாட்டாது என்று சொல்கிறார்கள். ஆனால் அது
எந்த காரணத்தினாலும் சரியல்ல. ஆரம்பப் பள்ளிக் கூடங்களைப்
பொறுத்தமட்டில் கட்டாயமாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்
கள் அதைக் கொஞ்சம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

ஆரம்பப் பள்ளிக் கூடங்கள் இல்லாத கிராமங்களில் அந்தப்
பள்ளிக் கூடங்களைத் தொடங்குவதற்கு ஊராட்சி ஒன்றியங்
களுக்கு அனுமதி வழங்கப்பட வேண்டும். ஏனென்றால் இன்
றைக்கு நம்முடைய தமிழகத்திலே கல்விக்காக ஆயிரக்கணக்
கான கோடி ரூபாய் செலவழித்தாலும் கூட, 100-க்கு 40 பேர்
படிப்பறிவு இல்லாமல் ரேகை வைக்கக் கூடியவர்களாகத்தான்
இருக்கிறார்கள். இது ஏற்கெனவே அரசியல் சட்டத்திலே 10
ஆண்டுகளுக்குள்ளாக அத்தனை பேருக்கும் கல்வி அறிவு வழங்கப்
பட வேண்டுமென்று சொன்ன விதிகளுக்கு இன்று கூட அதற்கு
விடை காணப்படவில்லை. இந்தியாவிலே கேரள மாநிலம்
ஒன்றிலேதான் அதிகமான மக்கள் படித்திருக்கிறார்கள் அடுத்து
வேண்டுமானால் தமிழகத்தை ஓரளவிற்குச் சொல்லலாம். இருந்
தாலும் கூட அடித்தளத்திலே உள்ள மக்கள் கல்வி பெறமுடியாத
நிலைமை இருப்பதன் காரணமாக, இந்த ஆரம்பப் பள்ளிக்
கூடங்களைத் தொடங்குவதற்கு அனுமதி வழங்கக் கூடிய ஒரு
ஏற்பாட்டைச் செய்வதற்கு அதிகமான நிதியை ஒதுக்க வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன். 1H3790

[திரு. சோ. அழகர்சாமி] [1990 சனவரி 25

12.10 மணி

அடுத்து பல பள்ளிக்கூடங்களிலே இன்றைக்கு தொலைக்
காட்சி வாங்குவதற்கு நிதி கேட்கிறார்கள். காலணி இல்லாத
குழந்தைகளுக்கு காலணி தைப்பதற்கு நிதி கேட்கிறார்கள்.
ஆனால் பள்ளிக்கூடங்கள் பல ரிப்பேர் இல்லாமல் பல ஆண்டு
களாக இருக்கின்றன. குறிப்பாக எங்களுடைய ஊராட்சி
ஒன்றியத்தைச் சார்ந்த பீக்கிலிப்பட்டி, கெச்சலாபுரம்
வரசனூர் போன்ற கிராமங்களில் பள்ளிகள் ரிப்பேர் ஆகாமல்
இருக்கின்றன. சென்ற தடவை நான் சட்டமன்ற உறுப்பின
ராக இருந்த போதே இதை சொல்லியிருக்கிறேன். இன்று வரை
யில் ரிப்பேர் செய்யப்படவில்லை. அதற்கு காரணம் கேட்
டால் ஊராட்சி ஒன்றியத்திலே நிதி இல்லை என்று சொல்லு
கிறார்கள். ஆகவே அதற்கான ஏற்பாட்டைச் செய்து ஆரம்ப
பள்ளிக்கூடங்களுக்கு, அரசு பள்ளிக்கூடங்களுக்கு, ஊராட்சி
ஒன்றியத்தைச் சேர்ந்த பள்ளிக்கூடங்களுக்கு, அதிகமான நிதி
ஒதுக்கீடு செய்து கட்டிடங்களைப் பழுதுபார்க்க நிதி ஒதுக்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, குடிநீர் வழங்குவது சம்பந்தமாக இன்றைக்கு
பல இடங்களிலே குடிநீர் வழங்குவதற்குரிய ஏற்பாட்டைச்
செய்தாலும் கூட அந்த குடிநீருக்குத் தேவையான போரோ,
ஓவர்ஹெட் டாங்கோ கட்டி விட்ட பிறகு, அதில் ரிப்பேர்
என்றால் ரிப்பேர் செய்ய வழி வகை செய்யப்படவில்லை.
பல இடங்களில் அப்படி ரிப்பேர் செய்யப்பட முடியாத
நிலை இருப்பதன் காரணமாக ஆண்டுக் கணக்கில் குடிநீர்
வழங்க முடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது. அதையும் செய்ய
வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து விவசாயம் சம்பந்தப்பட்டது. கால்நடை சம்
பந்தப்பட்ட விஷயம். இன்றைக்கு பல்வேறு இடங்களிலே
கால்நடை மருத்துவமனைகள் இருக்கின்றன. அந்த மருத்
துவ மனைகளில் கால்நடை உதவியாளர்கள் இல்லை. அதற்குக
காரணம் என்னவென்று சொன்னால், கால்நடை உதவி
யாளர்களை பயிற்றுவிக்கக்கூடிய அந்த பயிற்சிப் பள்ளி கிடை
யாது. ஆரம்ப காலத்திலே 'லைவ் ஸ்டாக் அசிஸ்டென்ட்டு
கள்' இருந்தார்கள். இன்றைக்கு அந்தக் கால்நடை உதவி
யாளர்கள் போதுமான அளவு இல்லாததன் காரணமாக
பல்வேறு இடங்களிலே மருத்துவமனைகள் மட்டும் இருக்
கின்றன. கால்நடை உதவியாளர்கள் இல்லாமல் இருக்கின்
றனர். ஆகவே ஆங்காங்குள்ள சப்-சென்டர்களிலே கால்நடை
உதவியாளர்களை நியமிக்கக்கூடிய முறையிலே, கால்நடை
உதவியாளர்களின் பயிற்சிப் பள்ளியை ஏற்படுத்தவேண்டும்
அல்லது கால்நடை மருத்துவர்களையாவது, ஒவ்வொரு
கால்நடை மருத்துவமனையிலும் நியமிப்பதற்கு ஏற்பாடு
செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



[திரு. சோ. அழகர்சாமி] [1990 சனவரி 25

அதற்கு அடுத்தபடியாக நம்முடைய நிதி ஒதுக்கீடு
சம்பந்தப்பட்ட விஷயத்திலே பல்வேறு விஷயங்கள் சொல்
லப்பட்டிருக்கின்றன.

''ஆகாறு அளவிட்டி தாயினும் கேடில்லை
போகாறு அகலாக் கடை''

என்பது போல நாமெல்லாம் கவனித்துக் கொள்ளவேண்டும்.
இன்றைக்கு பல்வேறு வழிகளிலே நிதி ஆதாரத்தை நாம்
தேட வேண்டும்.

இன்றைக்கு தமிழகத்திலே போக்குவரத்து வசதி இல்லை.
அதுவும் பல இடங்களில் சாலை வசதிகள் மிக மிக மோச
மாக இருக்கிறது. அவர்களிடத்திலே கேட்டால் சொல்லு
கிறார்கள்...... — ................... (மணியடிக்கப்
பெற்றது.) 10 நிமிடத்திலே முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து கவனிக்க
வேண்டும். இன்றைக்கு என்னோடு ஒத்துழைக்கத் தவறி
னால் நான் யாருக்கும் வாய்ப்பு அளிக்க முடியாமல் போய்
விடும். இன்னும் 3 மணித்துளிகள்.

திரு. சோ. அழகர்சாமி : 10 நிமிடங்கள் தான் முதலிலே
சொன்னீர்கள். அந்த பத்து நிமிடத்தில் முடித்து விடு
கிறேன். அடுத்து முக்கியமானது பாசன வசதி. இன்றைக்கு
தமிழகத்திலே பல்வேறு இடங்களிலே புதிதாக எங்கெங்
கே இடமிருக்கிறதோ அங்கெல்லாம் பாசன வசதிகள் கொடுக்
கக்கூடிய குளங்கள், கண்மாய்கள், கால்வாய்கள் அமைக்க
வேண்டும். ஆனால் அதற்கு முன்னதாக, இருக்கிற குளங்கள்
கால்வாய்களை பழுது பார்ப்பதற்கு வேண்டிய நிதி ஆதாரம்
இல்லை. அதற்கு மத்தியிலே இருக்கிற 9-வது நிதிக் கமி
ஷனிடத்திலே கேட்டு அதிகமான நிதியை நாம் பெறவேண்டும்.
அதற்கு வேண்டிய முயற்சியை செய்ய வேண்டும். இப்போது
சாதகமான அரசு மத்தியிலே அமைந்து இருப்பதன் காரண
மாக அதற்கு வேண்டிய வாய்ப்பு வசதிகள் இருக்கின்றன.
அத்தோடு இங்கும் இருக்கிற நிதி ஆதாரத்தை அதிகப்படுத்த
வேண்டிய பணிகளைச் செய்ய வேண்டும்.

நான் அதிகமாகப் பேச விரும்பவில்லை. முதலாவதாக
சொன்னேன். கல்வி. அத்தனை பேருக்கும் கல்வி கிடைக்கக்
கூடிய முறையில் ஆரம்பக் கல்வியை சீர்திருத்தம் செய்ய
வேண்டும் என்று மாண்புமிகு கல்வி அமைச்சரிடத்திலே
வேண்டிக் கேட்டுக் கோள்கிறேன். ஆரம்ப பள்ளிக் கூடம்
இல்லாத கிராமங்களை எல்லாம் சர்வே நடத்தி,

ஆரம்ப பள்ளிக்கூடம் இல்லாத ஊர் இல்லை என்று
வேண்டும். எங்காவது தடை செய்யப்பட்டிருந்தால் அந்தத்
தடையைநீக்க வேண்டும். இது ஒன்று இரண்டாவது பாசன
வசதி. பாசன வசதிக்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

மூன்றாவது சாலைப் போக்குவரத்துகள்,
மாவட்டத்தை எடுத்துக் கொண்டாலும், இருக்கிற சாலைகள், அந்த
போதுமான நிதி ஒதுக்கீடு இல்லாததன் காரணமாக 5
ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுது பார்க்க வேண்டிய சாலைகள்
15 ஆண்டுகளுக்கு ஒரு முறை பழுது பார்ப்பதன் காரணமாக
போட்ட பணமும் பிரயோஜனம் இல்லை. சாலைகளும்
போக்குவரத்திற்கு வசதி இல்லாமல் இருக்கின்றன. ஆகவே
சாலைகளை பராமரிப்பதற்காக அதிகமான நிதியை ஒதுக்க
வேண்டும்.

நான்காவதாக இன்றைக்கு பொது விநியோகத்தில் நம்
முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆயிரம் ரூபாய்
வருமானம் பெறக்கூடியவர்களுக்கு கூட இலவசமாக
அரிசி என்று சொல்லியிருக்கிறார்கள். நான் அப்படி இலவச
மாக அரிசி போடுவதை தடுக்கிறேன் என்றோ வேண்டாம்
என்றோ சொல்லவில்லை. ஆனால் இலவசமாக ஆயிரம்
ரூபாய் வருமானம் வாங்குகிறவர்களுக்கு கொடுக்க வேண்டி
யது அவசியம்தானா என்பதைப் பற்றி, சரிதானா என்பதை
பற்றி யோசிக்க வேண்டும் என்பதோடு யார் யார் கஷ்டப்
படுகிறார்களோ யார் யார் ஏழைகளோ யாருக்கு இப்போ
துள்ள விலை வாசியில் அரிசி வாங்கி சாப்பிட முடியாமல்
இருக்கிறார்களோ அவர்களுக்கு, சரியாக கணக்கிட்டு,
சர்வகட்சி கண்காணிப்பிலே கணக்கு எடுத்து, இலவசமாக
கொடுக்க வேண்டாம், குறைந்த விலையில் ஒரு கிலோ ஒரு
ரூபாய் என்ற முறையிலே வருடம் பூராவும் கொடுக்கக் கூடிய
ஒரு நிலையை ஏற்பாடு செய்தால் பயன் உள்ளதாக இருக்கும்
என்ற ஆலோசனையைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் ஆயிரம் ரூபாய் வருமானம் என்ற கணக்
கெடுப்பிலே ஏகப்பட்ட கோளாறு. ஏற்கெனவே சென்ற
சட்டமன்றக் கூட்டத் தொடரிலே கூடச் சொல்லியிருக்கி
கிறேன். ஆகவேதான் இப்படிப்பட்ட காரியங்களைச் செய்ய
வேண்டுமென்று கேட்டுக் கொள்வதோடு இன்றைக்கு அரசு
தரப்பிலே இருக்கும் பொது நிறுவனங்களிலே கொஞ்சம்
சிக்கனப்படுத்தவேண்டும். பல்வேறு நிறுவனங்களிலே
ஆர்ட் பேப்பர்களிலே பெரும்பாலான புத்தகங்களை அச்சிடு
கிறார்கள். இங்கே கொடுத்திருக்கக்கூடிய புத்தகங்கள் எல்
லாம் ஆர்ட் பேப்பரிலே அச்சடித்துக் கொடுத்திருக்
கிறார்கள். அதையெல்லாம் கொஞ்சம் சிக்கனப்படுத்த
**வேண்டும். இவையெல்லாம் பொது நிறுவனங்கள், கொஞ்சம்**



லாபகரமாக நடத்த முயற்சி செய்ய வேண்டும். எங்களுக்கு
வருகிற எல்லாப் புத்தகங்களும் அப்படி இருக்கின்றன. விவ
ரங்கள் வேண்டும். அதற்காக அதிகமாக செலவிடுவது சரி
யல்ல என்ற யோசனையை தெரிவித்துக் கொள்வதோடு
பொது விநியோகத்தில் 500 கார்டுகளுக்கு ஒரு கடை என்று
சட்டாயம் அமைக்கப்படவேண்டும்.

12-15 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; தயவு செய்து **ஒன்றைக்**
கவனிக்க வேண்டும். இன்னும் இரண்டு பேச்சாளர்கள் **பேச**
**வேண்டும்.** அதற்குப் பிறகு பதிலுரை இருக்கிறது. **நான்**
இவ்வளவு சொல்லியும் இரண்டு மணித் துளிகள் நீடித்துக்
கொண்டு போனால் நான் எப்படி அவையை நடத்துவது
என்று நீங்கள் தான் எனக்கு வழி சொல்ல வேண்டும்.

திரு. சோ. **அழகர்சாமி** : தலைவர் அவர்களே, 10 நிமிடம்
கொடுக்கவில்லை. ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான் உங்களுக்கு
ஏற்கெனவே 9 மணித் துளிகள் கொடுத்து இப்போது 10 ஆவதில்
தான் சொல்லியிருக்கிறேன். கொடுக்கவில்லை என்று
சொன்னால் எப்படி ? இது ஒரு குற்றச்சாட்டா ?

திரு. சோ. **அழகர்சாமி** : தலைவர் அவர்களே, பொது
விநியோக முறையிலே 500 கார்டுகளுக்கு ஒரு கடை அமைத்து
ஒரு சர்வ கட்சி கண்காணிப்புக் குழுவோடு சீராக பொது
விநியோக முறையிலே எல்லா பொருள்களையும் வழங்க
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடைசியாக எங்களுடைய தாலுக்காவினுடைய நீண்ட
நாள் கோரிக்கை. எட்டையபுரத்தில் ஒரு தாலுக்கா
அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை. கோவில்பட்டிக்குப்
பக்கத்தில் உள்ள கிராமங்களை கோவில்பட்டி தாலுக்காவோடு
இணைத்து கோவில்பட்டி தாலுக்காவிலேயும், விளாத்தி
குளம் தாலுக்காவிலேயும் சில கிராமங்களைச் சேர்த்து
எட்டையபுரம் தாலுக்கா அமைக்க வேண்டும் என்ற நீண்ட
நாள் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்திக் அவர்
களுக்கு 5 மணித் துளிகள் மட்டும். **வேறு வழியில்லை.**

[1990 சனவரி 25

*திரு. எம். முகமது சித்திக்: மரியாதைக்குரிய பேரவைத் துணை தலைவர் அவர்களே, இந்த துணை நிதிநிலை அறிக்கையின் மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு எனது நன்றியைத் தெரிவித் துக்கொள்கிறேன். எல்லோருக்கும் 10 நிமிடம் கொடுத்திருக்கிறீர் கள். தயவு செய்து எனக்கும் அப்படி கொடுக்குமாறு கேட்டுக் கொண்டு, இந்த துணை நிதிநிலை அறிக்கையில் நாடு போற்றும் நலப் பணித் திட்டங்களுக்கு செலவு செய்யப்படவிருப்பதை வரும் நிதியாண்டில் அரசு மேற்கொள்ள இருக்கின்ற சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்திற்கு செலவு செய்யப் படுவதாக இருக்கிறது என்பது மேலும் நம்பிக்கையூட்டு வதாகவும், மன நிறைவு அளிப்பதாகவும் அமைந்திருக்கிறது என்பதை மனதாரப் பாராட்டி நான் வரவேற்கிறேன்.

மண்டல் கமிஷன், கடந்த சட்டமன்றத் தேர்தலில் மண்டல் கமிஷன் பரிந்துரைகளை ஏற்க வேண்டுமென்று மத்திய அரசைக் கேட்டுக் கொண்டு தீர்மானம் நிறை வேற்றினோம். ஆனால் அது குறித்து முன்பு இருந்த ராஜீவ் அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. ஆனால் புதிய தேசீய முன்னணி அரசு மண்டல் குழு பரிந்துரைகளை ஆய்வு செய்ய அமைச்சர்கள் கொண்ட குழு அமைக்கவிருப்பதை நான் பெரிதும் பாராட்டி வரவேற்கிறேன். இந்தக் குழு பரிந்துரைகளை, நடைமுறை சாத்தியக் கூறுகளை ஆய்வு செய்து, மண்டல் கமிஷன் பரிந்துரைகளை விரைவில் முறைப்படுத்த மத்திய அரசை நம்முடைய அரசு நடை கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான பூம்புகார் தொகுதியிலே டாக்டர் கலைஞர் அவர்கள் பூம்புகார் என்றாலே இன்றைக்கு உலகம் முழுவதும் தெரிகின்ற வகையிலே, அவருடைய ஆட்சிக் காலத்திலே அங்கே கலைக்கூடத்தையும், சிலப்பதிகார கலையையும் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். இன்றைக்கு மிகவும் பாராட்டத்தக்க வகையிலே பூம்புகார் பெருமை அடைகிறது டாக்டர் கலைஞர் அவர்களால், டாக்டர் கலைஞர் அவர்கள், இப்போது அவர்கள் ஏற்றுக் கொண்ட ஆட்சியிலே அங்கு வாழ்கின்ற மக்களுடைய முன்னேற்றத்தைக் கருதி, அந்த மக்களுடைய நலன்களைக் கருதி, அப்பகுதி முன்னேற்றம் அடைய வேண்டும் என்ற உயரிய நோக்கத் தோடு, அங்கே சிப்காட் நிறுவனத்தின் மூலமாக தொழிற் பேட்டை அமைத்துக் கொடுத்திருப்பதை நான் என் தொகுதி மக்கள் சார்பாகவும், என் சார்பாகவும் கலைஞர் அவர்களுக்கு பாராட்டுதலையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயிகளுக்கு அளிக்க வேண்டிய சலுகைகளைப் பற்றி கூற விரும்புகிறேன். டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே இன்னும் நிறையச் சலுகைகளை அவர்களுக்கு



1990 சனவரி 25] [திரு. எம். முகமது சித்திக்]

அளிக்க வேண்டும். இன்றைக்கு அரிசிப் பிரச்சனையை வைத்துத்தான் அரசியல் நடந்துகொண்டிருக்கிறது. அப்படிப் பட்ட அரிசியை உற்பத்தி செய்கிறவர்கள் விவசாயிகள். அரசினுடைய தலை எழுத்தையே இன்றைக்கு விவசாயிகள் தான் நிர்ணயம் செய்யக்கூடிய சூழ்நிலை உருவாகிக் கொண்டிருக் கிறது. அப்படிப்பட்ட அரிசியை உற்பத்தி செய்யக்கூடிய விவசாயிகளுக்கு அவர்கள் இன்னும் அதிகமாக நெல் உற்பத்தி பண்ணுவதற்கு அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இன்றைய தினம் விவசாயிகளுக்கு மானியம் என்ற வகையிலே பூச்சி மருந்து, உரம், விதை, விவசாயக் கருவிகள் வழங்கப்படுகின்றன. அதற்காக கோடிக்கணக்கான ரூபாய் மானியங்கள் வழங்கப்படுகின்றன. அப்படி வழங்கப் படுகின்ற மானியங்கள் எல்லாம் முறையாக விவசாயிகளுக்கு சென்றடைவதில்லை. இப்படி அவர்களுக்கு மானியம் என்று கொடுத்து அதை விவசாயிகள் அடையாமல், அதிகாரிகளும், பெரிய நிலச்சுவான்தார்களும் அதை பங்கிட்டுக் கொள்கின்றார் கள். விவசாயிகளுக்கு கொடுக்கப்படுகின்ற பூச்சி மருந்து எல்லாம் தனியாருடைய பூச்சி மருந்துக் கடைக்கே மீண்டும் விற்பனைக்குச் செல்கிறது. இவைகளையெல்லாம் மானிய மாக, விதையாகவோ, உரமாகவோ வழங்குவதால் விவசாயி கள் கஷ்டம் அடைகிறார்கள். நெல்லுக்கு, குவிண்டாலுக்கு 35 ரூபாய் இன்றைக்கு மானியமாகக் கொடுத்து இருப்பதை டாக்டர் கலைஞர் அவர்கள் இன்னும் அதிகமாக அவர்களுக்கு வழங்கி, பூச்சி மருந்து, உரம், விவசாயக் கருவிகள் போன்ற வற்றுக்குக் கொடுக்கின்ற மானியத்தையெல்லாம் நிறுத்தி விட்டு உற்பத்தி செய்கின்ற நெல்லுக்கு ஆறுதல் விலையாக அதிகமாக வழங்கினால், விவசாயிகள் அதை அதிகமாக வரவேற்பார்கள் என்ற கருத்தினையும் இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

12.20 மணி

பாரதப் பிரதமர் வி.பி. சிங் அவர்கள் தேர்தல் அறிக்கையில் விவசாயக் கடன்கள் ரூ. 10 ஆயிரத்திற்கு உட்பட்டதை தள்ளுபடி செய்வோம் என்று கூறினார்கள். அதை சில மாநிலங்களில் தள்ளுபடி செய்திருப்பதாக நான் அறிகின்றேன். டாக்டர் கலைஞர் அவர்களும் தமிழகத்திலே ரூ. 10 ஆயிரத்திற்கு உட் பட்ட விவசாயக் கடன்களைத் தள்ளுபடி செய்வதற்கு மத்திய அரசை கேட்டுக்கொள்ளவேண்டுமென்று நான் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

போலீஸ் துறைக்கு அதிநவீனமான துப்பாக்கிகள் வழங்கப் பட வேண்டும். தர்மபுரிக்கு அருகிலே, சத்தியமங்கலம் காடு களில். . . . (மணியடிக்கப் பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : சீக்கிரம் முடித்து விடுங்கள்.

திரு. எம். முகமது சித்திக் : அதுமட்டுமல்லாமல், எனது
தொகுதி ஆறுகள், வாய்க்கால்கள் நிறைந்த தொகுதியாகும்.
நிறைய இடங்களிலே பாலங்கள் கட்டவேண்டிய சூழ்நிலை இருக்
கிறது. அந்த பகுதிகளுக்கெல்லாம் பாலங்கள் கட்டி, இணைப்
புச் சாலைகளை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். இன்றைக்கு
அந்த விவசாயிகளுக்கு தண்ணீர் பாய்வதற்கு மழைக்காலங்களில்
தண்ணீர் வடிவதற்கு வாய்க்கால்கள் தூர் எடுக்கப்படாத
நிலையில் இருக்கின்றன. காட்டாமணிகள் அடர்ந்து
மழைக்காலங்களில் தண்ணீர் வடிவதில்லை. பாசனத்திற்கும்
தண்ணீர் பாய்வதில்லை. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் விவ
சாயிகள் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அங்குள்ள அனைத்துக்
கால்வாய்களையும் சீரமைப்பதற்கு அரசு முன்வரவேண்டுமென்று
நான் கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவத்தைப் பொறுத்தவரையில், மருத்துவத் துறை
யிலே, இன்றைக்கு டாக்டர்கள் இரவு நேரங்களில் மருத்துவ
மனைகளில் இருப்பதில்லை. அவர்கள், ஆப்பரேஷன மற்றும்
சில நோய்களுக்கு மருத்துவம் பார்ப்பதற்கு இன்றைக்கு அதிக
மாக பணம் வாங்குவதாகச் சொல்லப்படுகிறது. மருத்துவத்
துறைக்கு என்று சட்டமன்ற உறுப்பினர் குழு ஒன்றை அமைத்து
மருத்துவத் துறையை இன்னும் செம்மைப்படுத்த வேண்டும்.
மருத்துவ மனையில் உள்ள ஜெனரேட்டர்கள் பழுதடைந்த நிலை
யில் இருக்கின்றன. மருந்துகளைக் காப்பதற்கான குளிர்சாத
னப் பெட்டிகள் அங்கே பழுதடைந்திருக்கின்றன. எனது பகுதி
யிலே தலைமை அரசு மருத்துவமனை இருக்கிறது. அங்கே
எந்தவிதமான நவீன மருத்துவக் கருவிகளும் இல்லை. ஆகவே
அங்கேயிருக்கின்ற மக்கள் பலன் அடைகின்ற வகையிலே அந்த
மருத்துவமனைக்குத் தேவையான நவீன கருவிகளையெல்லாம்
ஏற்படுத்திக் கொடுத்து, மேலும் ஒரு மருத்துவமனையை ஏற்
படுத்தித் தரவேண்டுமென்று டாக்டர் கலைஞர் அவர்களையும்
இந்த அரசையும் உள்ளன்போடு, தயவோடு கேட்டுக் கொண்டு,
வாய்ப்புக்கு நன்றி கூறி, உரையை முடித்துக் கொள்கிறேன்.
வணக்கம்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு சட்டமன்றப் பேர
வைத் தலைவர் அவர்களே, பொதுவாக, விரைந்து செயல்படு
கின்ற சேமநல அரசு ஒரு துணை மதிப்பீடு செய்யாமல் இருக்க
முடியாது. வெறுமனே ஒரு வேலையும் செய்யாமல் இருந்தால்
துணை மதிப்பீட்டிற்கே அவசியம் இல்லை. எல்லா காரியங்
களும் விரைவிலே செய்ய வேண்டும். நல்ல காரியங்கள் விரைந்து
செயல்பட வேண்டும். நல்ல திட்டங்கள் நிறைவேற்றப்பட
வேண்டும் என்கின்ற ஒரு சேமநல அரசாங்கத்திற்கு வெல்பேர்
ஸ்டேட், இது மாதிரி துணை மதிப்பீடு வருவது இயற்கை
அது தவிர்க்க முடியாத ஒன்று. நான் அதிகமாக அதிலே
போகாமல், குறிப்பாக, இந்த கன்டின்ஜண்ட் பண்டிலே இருந்து





எடுத்து இதிலே செலவு செய்வது, அப்புறமாக சரிக்கட்டுவது
என்ற நிலையைக் கொஞ்சம் மாற்ற வேண்டும். கன்டின்ஜண்ட்
ஃபண்ட் எதற்காக ஏற்பட்டதோ அதிலேதான் அது இருக்க
வேண்டுமே தவிர, செலவினங்கள் வருகின்றபோது, தலைப்பிலே
மாற்றுகின்ற முறையை, முன்னாலே இருந்த அரசு செய்ததை
அவ்வாறு செய்வதை கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்த வேண்டும்
அதை எந்தெந்த இனங்களிலே எடுத்து இருக்கின்றார்கள் என்
பதைச் சொல்வதற்கு நேரம் இல்லாத காரணத்தாலே அதை
அப்படியே விட்டு விடுகிறேன்.

பொதுவாக, இன்றைய தினம் கரும்புக்கு விலையை நம்
முடைய அரசு, மத்திய அரசு நிர்ணயித்த விலையை விட 20
ரூபாய் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று சொல்லி இருக்
கின்றார்கள். மத்திய அரசாங்கம் சென்ற ஆண்டை விட இந்த
ஆண்டு அதிகமாக உயர்த்தியிருக்கிறார்கள். அதையும் சேர்த்து
கரும்பு உற்பத்தியாளர்களுக்கு கிடைக்கும்படியாக அரசாங்கம்
செய்திருக்கிறது. 275 ரூபாய் வரும் என்று நான் கருதுகிறேன்.
அதோடு, கரும்பு செஸ்ஸிலே, இதுவரையிலே தனியார் ஆலைக்
காரர்களை வற்புறுத்த வேண்டும். அப்படிச் செய்தால், வழக்கு
மன்றத்திற்குப் போயிருக்கின்றார்கள். நம்முடைய முதல்வர்
அவர்கள் அவர்களையெல்லாம் அழைத்துப் பேசவேண்டுமென்று
சொல்லி, முன்னாலே இருந்த மாண்புமிகு விவசாயத்துறை
அமைச்சர் அவர்கள், அவர்களை அழைத்துப் பேசி, அதற்கு
அவர்கள் ஏதோ சில கருத்துக்களைச் சொல்லியிருக்கின்றார்கள்.
அவர்கள் சில காரணங்களை எடுத்துக் காட்டியிருக்கிறார்கள்.
என்ன காரணங்கள் என்று சொன்னால், விரைந்து அதிலுள்ள
தடைகளை நீக்கி அந்தச் சாலையைப் போட்டு விவசாயிகளுக்கு
அந்தப் பலன்களை ஏற்படுத்த மாண்புமிகு முதலமைச்சரவர்கள்
நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

12-25 மணி

சத்துணவுத் திட்டத்திற்காக பைகளில் அரிசியை அடைத்து
அனுப்புவதற்கு ஒன்றரைக் கோடி ரூபாய் செலவு செய்யப்பட்
டிருக்கின்றது. அதிலே 5 கிலோ 8 கிலோ என்று எடை குறை
வதாகச் சில இடங்களில் சொல்கிறார்கள். அதைத் தவிர்க்க
அந்தப் பையில் மொத்தமாக அரிசியை அடைத்து எத்தனை
கார்டுகள் எந்த ஏரியாவில் இருக்கிறதோ, அவ்வளவு தேவைப்
படும் அரிசியை மொத்தமாக ஒரே இடத்தில் போட்டு வினி
யோகம் செய்ய ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக் கொள்
கிறேன். அதோடு சத்துணவுக் கூடங்களில் முட்டை வழங்கு
கிற நாட்களில் மட்டும் அதிகமான குழந்தைகள் வருகிறார்கள்
என்று சொல்கிறார்கள். அதில் ஒரு பிரச்சினை, மார்க்கெட்டில்
முட்டை வாங்கினால் 50 பைசா 60 பைசா தான் ஆகிறது.

[திரு. கோ. பூவராகன்] [1990 சனவரி 25

ஆனால் டெண்டர் போட்டு விடுவதால், ஒரு முட்டையின் விலை ரூ. 1 என்று ஆகிவிடுகிறது என்று தெரிகிறது. அதை நீங்கள் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கரும்பு உற்பத்தி செஸ்ஸிலிருந்து பணம் அதிகமாக வராததால், அங்கே மில்லுக்குப் போகிற சாலைகள் சரியாக பராமரிக்கப்படவில்லை. அந்தச் சாலை களை பழுது பார்க்கவும், புதிய சாலைகள், புதிய பாலங்கள் கட்டவும், நிரம்பவும் நிதி தேவைப்படுகிறது, அதற்கான நிதியை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையில் கூட்டுறவுத் துறை யின் சார்பாக, தென்னாற்காடு மாவட்டத்தில் ஒருங்கிணைந்த கூட்டுறவு மையங்கள் ஏற்படுத்தப்படும் என்று கூறப்பட்டிருந் தது. அதன் தொடர்பாக, அந்த மையத்தை எனது தொகுதி யான விருத்தாசலத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கு எழுதியிருந்தேன். அவர்களும் உறுதியளித்தார்கள். இப்போது அது காமராஜர் மாவட்டத் திற்குப் போய்விட்டது. விருத்தாசலத்திற்கு வரவில்லை என்ற குறை எனக்கு இருக்கிறது (மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : இப்போது காமராஜ் மாவட்டத்திற்குப் போய் இருப்பது கடந்த ஆண்டு ஒப்புதல் தரப்பட்டது. அடுத்த ஆண்டுக்கு வர இருப்பது தென் னாற்காடு மாவட்டத்தினுடைய ஒருங்கிணைந்த திட்டத்தைத் தான் மாண்புமிகு உறுப்பினர் கடிதம் மூலம் எழுதிக் கொடுத் திருக்கிறார்கள். அதுபற்றி அடுத்த நிதியாண்டில்தான் அரசு முடிவெடுக்கும்.

திரு. கோ. பூவராகன் : என்னுடைய தொகுதியில் மேல் நிலைப்பள்ளி ஒன்று இருக்கிறது. 300 மாணவர்கள் இருக் கிறார்கள். பல ஆசிரியர்கள் பணியாற்றுகிறார்கள். அதை இரண்டாகப் பிரிப்பதற்கு வசதி இருக்கிறது. உயர்நிலைப் பள்ளியாகவும், மேல்நிலைப் பள்ளியாகவும் அதைப் பிரிப்பதற்கு வசதி இருக்கிறது. அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வட ஆற்காடு மாவட் டத்தை இரண்டாகப் பிரித்து திருவண்ணாமலை-சம்புவராயர் மாவட்டம், வேலூர்-அம்பேத்கார் மாவட்டம் என்றும் பிரித்து இருக்கிறார்கள். நான் நேற்றையதினம் சொல்கிறபோது, திருவண்ணாமலை மாவட்டத்தை வன்னிய சம்புவராயர் மாவட்டம் என்று பெயர் மாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொண்டேன். ஏற்கெனவே பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம் என்று இருக்கிறது. ஆகவே அரசாங்கத்திற்கு பிரச்சினையிருக்காது. இதையும் வன்னிய சம்புவராயர் மாவட்டம் என்று மாற்றினால் புரிந்துகொள்ள முடியும்.



1990 சனவரி 25]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தேவர் திருமகன் என்று மாற்றியதற்குக் காரணம், ஏற்கெனவே, இருந்த பெயர், அங்கே சூட்டப்பட்டபோது, ஒரு தனிப்பட்ட வருடைய பெயரால் சூட்டப்பட்டது. இப்போது அந்தத் தனிப்பட்டவருடைய பெயரைக் குறிக்கிற வகையில் பசும்பொன் தேவர் திருமகனார் மாவட்டம் என்று தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சம்புவராயர் என்பது பலரையும் குறிக்கிற ஒன்றாகவே இருக்கிறது. ஆகவே, சம்புவராயர் வன்னியர் என்று கூறுவது பொருத்தமாக இருக்காது. எனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தக் கருத்தை வலியுறுத்த மாட்டார்கள் என்று நம்புகிறேன்.

திரு. கோ. பூவராகன் : வற்புறுத்துவதாகக் கருத வேண்டாம். (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானும் திரும்பவும் மணி அடிப்பதாகக் கருத வேண்டாம். (சிரிப்பு.)

திரு. கோ. பூவராகன் : எம்.ஜி.ஆர். அவர்களை பாரத ரத்னா என்று குறிப்பிடப்படுகிறது. அதைப்போல பாரத ரத்னா காமராஜர் மாவட்டம் என்று ஏன் அழைக்கக்கூடாது. நேரம் இல்லாத காரணத்தால் என் தொகுதியைப் பற்றி ஒன்றைச் சொல்லி முடித்துக் கொள்கிறேன். விருத்தாசலத் திற்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் வந்து பீங்கான் தொழிற் சாலையைத் திறந்து வைத்தார்கள். அதில் பெரும்பகுதி இன்ன மும் திறக்கப்படாமல் இருக்கிறது. அதனால் தொழிலாளர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். விரைவில் அவைகளைத் திறந்து தொழிலாளர்களுக்கு வேலை செய்யும் வாய்ப்பை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-30 மணி

அதோடு நிறைய மரங்களை வளர்க்கக்கூடிய தென்னாற்காடு மாவட்டத்தில் — இப்போது கால்நடை மருத்துவத் துறையில் பல்கலைக் கழகத்தை ஆரம்பித்துவிட்டீர்கள். அதுபோல்—காடுக ளைப் பொறுத்தவரையில் அதாவது காட்டிலாக்காவினைப் பொறுத்தவரையில் ஒரு பல்கலைக் கழகம் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என்னுடைய வார்த்தைகளை நான் முடித்துக்கொள்கிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பெருந்தலைவர் காமராஜர் அவர்களை பாரத ரத்னா என்று சொன்னது கண்டு நான் மகிழ்ச்சி யடைகிறேன். காமராஜர் இரயில்வே நிலையம் என்று வைத்த பெயரை மாற்றாமல்........

[1990 சனவரி 25

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தயவு செய்து இப்போது
அந்தப் பிரச்சினையை எழுப்ப வேண்டாம் என்று கேட்டுக்
கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : பேரவைத் தலைவர்
அவர்களே, ஏதாவது ஒன்றைச் சொல்லிவிட்டு அவர்கள் போய்
விடுகிறார்கள். பிறகு பத்திரிகையிலே அதைப் பெரிதாகப்
போட்டு விடுகிறார்கள். காமராஜர் இரயில்வே நிலையத்தின்
பெயரை மாற்றிவிட்டதாகச் சொல்கிறார்கள். இல்லை.
காமராஜர் இரயில்வே ஸ்டேஷன் என்ற பெயர் வைக்கப்படவே
இல்லை. நான் திட்டவட்டமாகச் சொல்கிறேன். சொல்லி
யாக வேண்டும். பத்திரிகையிலே போராட்டமெல்லாம் நடத்
தப்போவதாகச் சொல்லியிருக்கிறார்கள். எம்.எம்.டி.ஏ. என்ற
ஒரு நிறுவனம் அமைக்கப்பட்டபோது திராவிட முன்னேற்றக்
கழக ஆட்சி முன்பு நடைபெற்ற அந்தக் கால கட்டத்தில் அந்தப்
பகுதிக்கு மறைமலை நகர் என்ற பெயர் சூட்டப்பட்டது. அந்த
மறைமலை நகரில் 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம்—காங்கிரஸ்
கட்சியினுடைய மாநாடு நடைபெற்றது ; அங்கே ராஜீவ் காந்தி
அவர்கள் அறிவித்தார்கள். அங்கே ஒரு தற்காலிக இரயில்வே
ஸ்டேஷன் அப்போது வைக்கப்பட்டது. அதற்கு காமராஜர்
இரயில்வே நிலையம் என்ற பெயர் சூட்டப்படுவதாக அவர்
அறிவித்தார். இது 1988 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில்,
அதாவது நான்காவது மாதத்தில். அதற்குப் பிறகு கவர்னர்
ஆட்சி 1989 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரையில் நடந்திருக்
கிறது. அப்போது கவர்னர் ஆட்சியில் 11-வது மாதம், அதா
வது நவம்பர் மாதத்தில் இரயில்வே அதிகாரி கடிதம் எழுதிக்
கேட்கிறார். கவர்னர் ஆட்சியில் உள்ள அதிகாரிகளுக்குக்
கடிதம் எழுதிக் கேட்கிறார். இப்படி மறைமலை நகரில்
இருக்கும் இரயிலடிக்கு என்ன பெயர் வைப்பது என்று கேட்கிறார்.
நான் கேட்கிறேன். 7 மாத காலம் என்ன செய்தார்கள் ? திரு.
ராஜீவ் காந்தி அறிவித்ததாகச் சொன்னார்கள். அந்த ஆண்டு
முழுவதும் அந்தப் பெயர் வைப்பதற்கான எந்த முயற்சியும்
மேற்கொள்ளப்படவில்லை. அதிகாரபூர்வமாக எதுவும்
செய்யவில்லை. இரயில்வே அதிகாரி பிறகு கடிதம் எழுதிக்
கேட்கிறார். கவர்னர் ஆட்சியில் அதற்கு எந்தப் பதிலும்
அனுப்பப்படவில்லை. பிறகு இந்த ஆட்சி வந்ததற்குப் பிறகு
அந்தக் கடிதம் வந்தது. அந்தக் கடிதத்தைப் பார்த்து அந்தப்
பகுதி மக்கள் எழுதிக் கேட்டார்கள். மறைமலைநகர் என்ற
புதிய நகரை உருவாக்குகிறோம். காமராஜருக்குத் தமிழ்
நாட்டிலே எத்தனையோ இடங்களில் பெயர் வைக்க முடியும் ;
வைத்து இருக்கிறோம் — நம்முடைய அருமை நண்பர் திரு.
எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது
காமராஜருடைய பெயர் மதுரையில் ஒரு பல்கலைக் கழகத்
திற்கு சூட்டப்பட்டிருக்கிறது. நான் முதலமைச்சராக இருந்த
போது காமராஜருக்கு நினைவாலயம் கட்டப்பட்டிருக்கிறது.



1990 சனவரி 25] [டாக்டர். மு. கருணாநிதி]

அதிலே இருந்த ராட்டையைக் கூட எடுத்து விட்டார்கள். அது
யார் என்பது நண்பர் குமரி அனந்தனுக்கு நன்றாகத் தெரியும்.
காமராஜருக்கு இந்திரா காங்கிரஸில் என்ன மதிப்பு இருந்தது
என்பதை உங்களுக்குச் சொல்கிறேன்.

கன்னியாகுமரியில் நடைபெற்ற இரயில்வே நிலையத்
தொடக்க விழாவின்போது அவருக்கு அழைப்புக் கொடுக்கப்பட
வில்லை. மேடைக்குக்கூட அவர் அழைக்கப்படவில்லை. அன்
றைக்குப் பிரதமராக இருந்தவர் இந்திரா காந்தி அவர்கள்.
நான்தான் கீழே இறங்கிச் சென்று காமராஜர் அவர்களை
அழைத்துப் போய் மேடையிலே உட்கார வைத்தேன்.
காமராஜர் அப்போது அந்தத் தொகுதியினுடைய எம்.பி.
அவரைப் பேசுவதற்குக் கூட அன்றைக்கு மத்திய அரசு அனு
மதிக்கவில்லை. இதெல்லாம் நடைபெற்றது அன்றைக்கு
இந்திரா காங்கிரஸ் ஆட்சியிலேதான். திடீரென்று காமராஜர்
மீது இன்றைக்குப் பற்றும், பாசமும் வந்துவிட்டதாகச் சொல்வது
எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. காமராஜர் மறைந்தபோது
அவருக்கு என்னென்ன கடமைகள் செய்யப்பட்டன என்பதைப்
பற்றி மேலவையில் இருந்த திரு. ராஜாராம் நாயுடு— எதிர்க்
கட்சித் தலைவர்—சொன்னார்கள். காமராஜருடைய உடன்
பிறந்த சகோதரன் கூட இவ்வளவு காரியங்களைச் செய்ய
இயலாது. அந்த அளவுக்கு முதலமைச்சர் கருணாநிதி காரியங்
களைச் செய்து இருக்கிறார் என்று சொன்னார்.

காமராஜருடைய மறைவுக்குப் பிறகு கடற்கரைச் சாலைக்கு
காமராஜர் சாலை என்ற பெயர் சூட்டப்பட்டது. பிறகு நண்பர்
எம்.ஜி.ஆர். அவர்களுடைய காலத்திலே காமராஜர் மாவட்டம்
என்று பெயர் வைக்கப்பட்டு இருக்கிறது. இன்றைக்குக் காலை
யில் கூட ஒரு கேள்விக்கு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்
பதில் சொன்னபோது காமராஜர் நீர்த்தேக்கம் என்று பெயர்
சூட்டப்பட்டது குறித்துச் சுட்டிக்காட்டப்பட்டது. ஆனால்
மறைமலை அடிகளுக்குத் தமிழ்நாட்டில் உள்ள எல்லா இடங்
களிலும் பெயர் வைக்க இயலாது. மறைமலைநகர் மறைமலை
அடிகள் பிறந்து வாழ்ந்த இடம். அவருடைய புகழ்க்கொடி
பறந்த இடம். மறைமலையடிகள் தமிழில் கரை கண்டவர்.
பெரியார், பேரறிஞர் அண்ணா, திரு. வி.க. போன்றவர்கள்
எல்லாம் மறைமலையடிகள் என்ற தமிழ்க்கடலைப் பற்றிப்
புகழ்ந்து இருக்கிறார்கள். நம்முடைய திரு. குமரி அனந்தன்
அவர்களுக்கும் மறைமலையடிகளைப் பற்றி நான் அறிமுகப்படுத்த
வேண்டிய அவசியம் இல்லை. அந்தப் பெயரால் அங்கே ஒரு
புகைவண்டி நிலையம் இருப்பதை மாற்றி காமராஜருடைய
பெயரை வைக்க வேண்டுமென்றால், காமராஜரே இப்போது
உயிரோடு இருந்தால் அதைத் தடுப்பார். அந்தப் பெருந்
தன்மை காமராஜருக்கு உண்டு. அந்த அளவுக்குப் போற்றுத
லும், புகழ்கின்ற நிலையும் மறைமலையடிகளுக்கும் உண்டு.

[டாக்டர். மு. கருணாநிதி] [1990 சனவரி 25

எனவே அந்த 11 மாத காலத்தில் — 1988-ல் ராஜீவ் காந்தி
அறிவித்த பிறகு — ராஜீவ் காந்தியும் தொடர் முயற்சியில் ஈடு
படவில்லை, மத்திய அரசும் ஈடுபடவில்லை. அந்த இரயில்வே
இலாக்காவும் ஈடுபடவில்லை. இப்போது மறைமலை நகரே
அங்கே இருக்கட்டும் என்று அறிவித்த பிறகு வேண்டுமென்றே
நாங்கள் போராடப்போகிறோம் என்றெல்லாம் இன்றைக்கு அறி
விக்கிறார்கள். ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். திருச்சியிலே
திராவிட முன்னேற்றக் கழக மாநாடு நடைபெற இருக்கிறது.
மாநாடு நடைபெறுகின்ற இடத்திற்குப் பெயர் மன்னார்புரம்.
அதை அண்ணா நகர் என்று இப்போது நாங்கள் மாநாடு நடை
பெறுகின்ற இடத்திற்கு வைத்து பத்திரிகையிலே வெளியிட்டிருக்
கிறோம். மாநாடு நடந்த பிறகு, அது அண்ணா நகர் என்று
இருக்கமுடியாது. தற்காலிகமாகத்தான் அந்த பெயர். அதைப்
போல நீங்கள் மாநாடு நடத்திய இடத்திற்கு காமராஜர் நகர்
என்று இருந்திருக்கலாம். அதை யாரும் ஆட்சேபிக்க முடியாது.
அது எப்படி, அண்ணா நகர் என்பது இன்றைக்கு மன்னார்
புரத்திற்கு திருச்சியிலே தற்காலிகப் பெயரோ அதைப் போலத்
தான் காமராஜர் நகர் என்பதும்—மறைமலை நகர்—
மாநாட்டிற்காகத் தற்காலிக பெயர். எனவே இந்த விளக்கத்
தைப் புரிந்துகொண்ட பிறகாவது இதைப் பிரச்சினையாக்க
மாட்டார்கள் என்று நான் நம்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு சபாநாயகர் 12-35 மணி
களே, மறைமலையடிகள் பெருமையும் காப்பாற்றப்பட வேண்டும், அவர்
பெருந்தலைவர் காமராஜர் பெயரையும் காப்பாற்றுகின்ற
முயற்சியிலே தாங்கள் ஈடுபடவேண்டும் என்று கேட்டுக்கொள்
கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, திராவிட இயக்கங்கள் குறிப்பாக
திராவிட முன்னேற்றக் கழக அரசோ, அண்ணா திராவிட
முன்னேற்றக் கழக அரசோ, மாற்றுக் கட்சிக்காரர்களை
மதித்த அளவிற்கு, சொந்தக் கட்சிக்காரர்களை மதிக்காமல்
இருக்கலாம். என்னுடைய பெயர்கள் பல இடங்களிலே மாற்றப்
பட்டிருக்கலாம். ஆனால் இந்த அரசோ அல்லது நண்பர் எம்.ஜி.ஆர்.
அவர்களுடைய அரசோ காங்கிரஸ் தலைவர்களுக்கு அளித்த
விளம்பரத்தை காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலோ ராஜீவ் காந்தி
ஆட்சிக் காலத்திலோ மற்றவர்களுக்கு அளிக்கப்பட்டிருக்கிறதா
என்பதைத் தயவு செய்து எண்ணிப்பார்க்க வேண்டும்.

காமராசர் அவர்களுடைய பெயருக்கு ஊனம் வரவேண்டும்
என்றோ, அதை கேவலப்படுத்த வேண்டுமென்றோ, அதை
மாற்ற வேண்டுமென்ற எண்ணமோ எங்களுக்குக் கிடையாது.



1990 சனவரி 25] [டாக்டர். மு. கருணாநிதி]

அந்த சின்ன ரெயில்வே ஸ்டேஷனுக்கு பாவம், மறைமலையடி
களுடைய பெயர் இருந்துவிட்டுப் போகட்டும். ஒரு பெரிய
ரெயில்வே ஸ்டேஷனுக்கு காமராசருடைய பெயரை வைக்கலாம்.
கூடுமானால் விருதுநகர் ரெயிலடிக்குக்கூட காமராசர் பெயரைச்
சூட்டலாம்.

* திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சி மன்றச்
செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, துணை
நிதிநிலை அறிக்கையின் மீதும் மானியக் கோரிக்கையின் மீதும்
பல்வேறு உறுப்பினர்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களை
எல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். இடையில் மாண்புமிகு
முதல்வர் அவர்களும்கூட விளக்கங்களைத் தந்திருக்கிறார்கள்.
கருத்துக்களை எடுத்து வைத்த உறுப்பினர்களுக்கு நான் நன்றி
தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

அதைப்போலவே இந்த விவாதத்திற்கு பதில் அளிக்கின்ற
வாய்ப்பினை நல்கிய தமிழினத் தலைவர், தமிழக முதல்வர்
அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.
விவாதத்தைத் தொடங்கி வைத்த மாண்புமிகு உறுப்பினர்
திரு. பொன்னுசாமி அவர்கள் திட்டம் சரியாக தீட்டாத
காரணத்தினால்தான் இப்படிப்பட்ட துணை மானியக் கோரிக்
கைகள் எழுகின்றன. என்ற கருத்தைச் சொன்னார்கள். அது
அல்ல. உண்மை என்னவென்றால் இப்படிப்பட்ட துணை நிதி
நிலை அறிக்கை வைக்கவேண்டுவது தவிர்க்கமுடியாத நிலை
யாகும். அவர்களே சொன்னார்கள், வெள்ள நிவாரணப் பணி
மிகச்சிறப்பாக நடைபெறுகிறது என்று. அதற்கு மாண்புமிகு
முதல்வர் அவர்கள் 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்வதாக
இதே மாமன்றத்தில் அறிவித்தார்கள். வெள்ளம் வரும் என்று
யாரும் முன்னரே சொல்லமுடியாது. இப்படி இயற்கையின்
சீற்றம் தானே ஏற்படுவது என்பது மட்டுமல்ல, திட்டங்களை
நிறைவேற்றுகிறபோதே கூட புதிய திட்டங்கள் உடன் சேர்க்கப்
படுகிறபோது, திட்டத்தில் நிதி போதுமானதாக இல்லாமல்
இருப்பதும், துணை மானியக் கோரிக்கை வைப்பதும் இயற்கை.

அதை எல்லா மாநிலங்களும் கடைப்பிடிக்கின்றன. அவை
களைப் பற்றி நீண்டநேரம் புள்ளிவிவரங்களை சொல்லிக்
கொண்டிருக்கத் தேவையில்லை. இரண்டே இரண்டு சொல்
கிறேன். பீகாரிலே 'கார்ப்பஸ் ஆப் கன்டின்ஜன்சி பண்ட்' என்று
350 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது, அதைப்
போலவே, உத்தரபிரதேசத்தில் 200 கோடி ரூபாய் ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது. நம்முடைய மாநிலத்திலேகூட ஆண்டு
தோறும் துணை மானியக் கோரிக்கை எதிர்பாராத செலவினங்கள்
குறித்து நாம் நிதி ஒதுக்கியிருக்கிறோம்.

[திரு. எல். கணேசன்] [1990 சனவரி 25

During the period from 4-7-1983 to 31-3-1984 the Corpus of the
Contingency Fund was raised to Rs. 150 crores and from 1-4-1984
to 1-7-1985 it was Rs. 50 crores. From 2-7-1985 to 31-3-1986 the
Corpus of the Contingency Fund was again raised to Rs. 100
crores.

ஆகவே இது புதியது அல்ல. இங்கே துணை மானியக் கோரிக்கை
மிக முக்கியமாகத் தேவைப்படுவதற்கான காரணம் மத்திய
அரசு அலுவலர்களுடைய, அதிகாரிகளுடைய ஊதிய விகிதத்
திற்கு இணையாக தமிழ்நாடுஅரசு அலுவலர்கள், அரசு அதிகாரி
களுடைய ஊதியம் ஐந்தாவது ஊதியக் குழுவினுடைய பரிந்
துரையை ஏற்று உயர்த்தியது தான் முக்கியமானது என்பதை
அப்போது அந்தத துறையிலிருந்து போராடிய அல்லது
போராட்டத்திற்குத் துணை நின்ற சட்டப் பேரவை உறுப்பின
ராக இப்போதுள்ள நண்பர்கள் அறிவார்கள்.

நான் ஒன்றை இந்த நேரத்தில் சொல்லாமல் 12-40 மணி
முடியாது. மத்திய அரசு, மாநில அரசுகள் என்பவவை ஏறத்தாழ இருக்க
1935-வது சட்டத்தின் (Act of 1935) அடிப்படையில் உரு
வாக்கப்பட்டு, உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து மாநில அரசு
அலுவலர்கள், மத்திய அரசு அலுவலர்கள் என்று இருந்து,
மத்திய அரசு அலுவலர்களுடைய ஊதிய விகிதங்கள் மாநில
அரசு ஊழியர்களுடைய ஊதிய விகிதங்களை விட சற்று கூடுத
லாகவே இருந்து வந்திருக்கிறது. இங்கே ஆங்கிலேய ஆட்சி
யிலும், அதைத் தொடர்ந்து நீதி கட்சி ஆட்சியிலும், அதற்குப்
பின்னால் காங்கிரஸ் ஆட்சியிலும், அதற்குப் பின்னால் தி.மு.க.
ஆட்சியிலும், அதற்குப் பின்னால் அ.தி.மு.க. ஆட்சியிலும்
அதற்குப் பின்னால் இன்றைய வரையில், 1989 வரையில்
மத்திய அரசு அலுவலர்களுடைய ஊதிய விகிதம் மாநில அரசு
அலுவலர்களுடைய ஊதிய விகிதத்தைவிட சற்று கூடுதலாகவே
இருந்து வந்திருக்கிறது. மத்திய அரசுக்கு நிதி வருவாய் வாயில்
கள் மிகுதியானவை. அதுமட்டுமல்லாமல் அது நீட்சித் தன்மை
யுடையவை.

The source of the Central Government is tremendous
not only tremendous but they are highly clashtics
ஆனால் மாநில அரசுக்கு அப்படி அல்ல. ஆகவே, சம்பள
விகிதங்களிலே குறைவாக இருப்பதிலே கூட சில காரணங்கள்
இருக்கலாம். ஆனால் மத்திய அரசு அலுவலர்களுடைய ஊதிய
விகிதத்திற்கு இணையாக மாநில அரசு ஊழியர்களுக்கும் ஊதிய
விகிதங்களை உயர்த்த வேண்டுமென்ற கோரிக்கை பல நாட்
களாக இருந்தது, பல ஆண்டுகளாக இருந்தது, பல ஆட்சிக்
காலங்களில் இருந்தது. ஆனால் முதல்முறையாக மத்திய அரசு
ஊழியர்களுக்கு இணையாக சம்பள விகிதங்களை மாநில அரசு
ஊழியர்களுக்கு வழங்கிய பெருமை கலைஞர் அரசுக்கே, மாண்பு
மிகு கலைஞர் அவர்களுக்கே உண்டு என்பதை நாம் ஒப்புக்
கொண்டாக வேண்டும்.



1990 சனவரி 25] [திரு. எல். கணேசன்]

This is not an ordinary phenomenon; for the first time in the
history of Tamil Nadu, the scale of Pay of State Govt. employees
is made equal to the scale of pay of the Central Govt. employees
என்பதை யாரும் மறுக்க முடியாது. அதுமாத்திரமல்ல, உயர்த்
தினாரே, உயர்த்தியபோது சில குறைபாடுகள் நேரக்கூடும்.
அது தவிர்க்க முடியாமல் கூட இருக்கலாம். இந்த குறைபாடு
களைச் சுட்டிக்காட்டுகிறபோது, அதை எப்படி ஏற்றுக்கொண்டு
இந்த அரசு நடந்துகொள்கிறது என்பதுதான் முக்கியம். The King
can do no wrong அரசன் மன்னன், மரபு வழி வருகிறவன், நான்
தவறு இழைக்க மாட்டேன் என்று சொல்கிற மதோன்மத்த
மனப்பான்மை இந்த மக்கள் ஆட்சிக்கு, இந்த அரசை ஆட்சி
புரிபவர்களுக்கு அதிலும் தெளிவும், ஞானமும், முதிர்ச்சியும்
ஒருங்கே பெற்றுள்ள மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர்
அவர்கட்கு எப்போதும் இருந்தது இல்லை. கொடுக்கப்படுகிற
குற்றச்சாட்டுகள் அல்லது குறைபாடுகளை ஏற்றுக்கொண்டு
திருத்திக்கொள்ள வேண்டுமென்ற மிகுந்த உயர்ந்த அந்தப்
பண்பை அவர்கள் இதிலே கடைப்பிடித்திருக்கிறார்கள். அரசு
அலுவலர்களுடைய கூட்டங்களுக்கு அவர்களே நேரில் சென்றி
ருக்கிறார்கள். அதிலே பங்கேற்றபோது, அவர்கள் தங்களு
டைய கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். மாண்புமிகு
முதல்வரை அரசு அலுவர்களுடைய சங்கங்கள், பல்வேறு சங்கப்
பிரதிநிதிகள் பல்வேறு அமைப்புகள் சந்தித்திருக்கின்றன. கோரிக்
கைகளைக் கொடுத்திருக்கிறார்கள். அவைகளை எல்லாம்
ஏற்றுக்கொண்டு 113 பிரிவினருக்கு ஏற்பட்ட குறைபாடுகளைக்
களைந்து உரிய உத்தரவை பிறப்பித்திருக்கிறார்கள். அது
மாத்திரமல்லாமல், அதைத் தொடர்ந்து இப்போதுகூட இந்த
மாமன்றத்திலே சொன்னார்கள் 'ஜாக்டீ' குழுவினர் அவர்கள்
தங்களுடைய குறைகளைச் சொல்ல வேண்டுமென்று சொன்ன
போது அவர்களுக்கு நேரத்தை ஒதுக்கி, நான் சந்திக்கிறேன்
நீங்கள் வந்து உங்களுடைய கோரிக்கைகளைச் சொல்லுங்கள்
என்று நேரத்தை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். நான் சொல்லிக்
கொள்ள விரும்புவது ஊதிய விகிதத்தை உயர்த்தியது மாத்திர
மல்லாமல் உயர்த்தியபோது ஏற்படுகிற குறைபாடுகளைத்
தவிர்க்க வேண்டும், போக்க வேண்டும் என்று இருக்கிற அந்த
உணர்வு, மாண்புமிகு முதல்வருக்கு இருக்கிற அந்த உணர்வு,
மக்கள் ஆட்சியின் பண்பை உணர்ந்த ஒரு தலைவராக இருந்து
எப்படி செயல்படுகிறார் என்பதை நீங்கள் எல்லாம் எண்ணிப்
பார்க்க வேண்டும்

இன்னொன்றையும் நான் சொல்லிக்கொள்வேன். சில இடங்
களில், சில இனங்களில், சில பிரிவினருக்கு மத்திய அரசு அலு
வலர்களை விட நம்முடைய மாநில அரசு அலுவலர்களுக்கு
ஊதிய விகிதம் உயர்த்தி கொடுக்கப்பட்டிருக்கிறது. குறிப்பாக
உதாரணமாக, இளநிலை உதவியாளர்கள், ஓட்டுநர்கள்,
தலைமைக் காவலர்கள், உதவி ஆய்வாளர்கள், முதுநிலை பட்ட
தாரி ஆசிரியர்கள் இவர்களுக்கெல்லாம், மாநில அரசு அலுவல

[திரு. எல். கணேசன்] [1990 சனவரி 25

களாக இருக்கிற இவர்களுக்கெல்லாம் மத்திய அரசு அலுவலர்
களை விட அதிகமாக சம்பளம் கொடுக்கப்பட்டிருக்கிறது.
இதுவரையில் இந்த சம்பள விகிதத்தை உயர்த்தும் வரையில்,
இந்தியத் திருநாட்டில் மாநில அரசு அலுவலர்களுடைய
சம்பளத்தை உயர்த்துங்கள்; மத்திய அரசு அலுவலர்களுக்கு
இணையாக உயர்த்துங்கள் என்று :ால கோரிக்கை வைக்கப்
பட்டது இனிமேல், ஒருவேளை கலைஞர் அவர்களால் உரு
வாக்கப்பட்டு இருக்கிற அந்த நிலை, மத்திய அரசு அலுவலர்
களுடைய சம்பளத்தை மாநில அரசு அதுவும் தமிழ்நாடு மாநில
அரசு அலுவலர்களுடைய சம்பளத்திற்கு இணையாக உயர்த்துங்
கள் என்று கோரிக்கை வைக்கக்கூடிய காலம் வரும். அப்படிப்
பட்ட காலத்தை இங்கே உருவாக்கி இருக்கிறோம்;

12-45 மணி

இதிலே நான் இன்னொன்றைச் சொல்லிக்கொள்ள விரும்பு
கின்றேன். பொதுவாக இதிலே சொல்லப்படுகிற குற்றச்சாட்டு
களில், அல்லது குறைபாடுகளில் ஒன்று, பல இனங்கள்' விடு
பட்டுப் போய்விட்டன அல்லது பல பிரிவினர்கள் விடுபட்டுப்
போய்விட்டார்கள் என்று சொல்கிறார்கள் அது உண்மை
யில்லை. தமிழக அரசில் பணியாற்றக்கூடிய அரசு அலுவலர்
களின் மொத்த எண்ணிக்கை 11.13 லட்சம் ஆகும். இதில்
ஊதிய விகிதங்களில் (பே ஸ்கேல்ஸ்) பணியாற்றக்கூடியவர்கள்
8.13 லட்சம் பேர். இதுவன்னியில் தொகுப்பூதியம், மதிப்
பூதியம் போன்ற பிரிவுகளைச் சார்ந்தவர்கள் சுமார் 3 லட்சம்
பேர். ஊதிய விகிதங்களில் பணியாற்றக்கூடிய அலுவலர்கள்
எண்ணிக்கையைப் பிரித்துப் பார்ப்போம் என்றால் இதற்குத்
தெளிவாக விளக்கம் கிடைக்கும். இவர்களில் பெரும்பாலான
பிரிவினர்கள் கீழ்க்கண்டவாறு இருக்கிறார்கள். (1) அலுவலக
உதவியாளர்களின் எண்ணிக்கை 1,41,577; அவர்களுக்கு மத்திய
அரசு ஊதியமான ரூ. 750—940 என்று உயர்த்தப்பட்டுள்ளது.
அதைப்போலவே (2) பதிவு அறை எழுத்தர்களின் மொத்த
எண்ணிக்கை 9,096. அவர்களுக்கு மத்திய அரசினுடைய
சம்பள விகிதம் ரூ. 775 முதல் ரூ. 1,025. நாமும் அவர்களுக்கு
ரூ. 775 முதல் 1,300 என்று உயர்த்திக் கொடுத்து இருக்கிறோம்.
இப்படிப் பட்டியலை நான் படித்துக் கொண்டே இருந்தால்
நேரம் அதிகமாகும். ஆக பல இனங்களில் 5,09,741 எண்
ணிக்கை உள்ள பல்வேறு பிரிவினர்களுக்கு நாம் ஊதிய விகிதங்
களை உயர்த்தி இருக்கிறோம். இதிலே ஏதாவது குறைபாடுகள்
அல்லது இன்னும் சரி செய்யப்படவேண்டிய குறைபாடுகள்
இருக்குமேயானால் அவைகளை ஏற்றுச் சரி செய்வதற்கு தமிழ
கத்தினுடைய முதலமைச்சர் என்றைக்கும் தயாராக இருப்பவர்
என்பதை நான் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்ளக்
கடமைப்பட்டு இருக்கின்றேன்.



1990 சனவரி 25] [திரு. எல் கணேசன்]

இன்னும் ஒன்று அதைப்போல, செலவினங்கள் அதிகமான
தற்கும், இந்த முதல் துணை நிதி நிலை அறிக்கை வைக்க
வேண்டியதற்கும் காரணமாக அமைந்தது என்னவென்றால்,
ஓய்வூதியங்களை உயர்த்தியது. அதை நீங்கள் எண்ணிப் பார்க்க
வேண்டும். நிதி நிலை அறிக்கையில் முதியவர்கள், ஆதரவற்ற
பெண்கள், விதவைகள், ஊனமுற்றவர்கள், விவசாயக் கூலிகள்
ஆகியவர்களுக்கு வழங்கக் கூடிய ஓய்வூதியங்களை அதிகப்
படுத்தி இருக்கிறோம். இதுவரையில் 35 ரூபாய் என்று அது
வழங்கப்பட்டது. இப்போது மாதம் ஒன்றுக்கு 50 ரூபாய் வழங்
கப்படுகிறது. மேலும் அதற்கு நடைமுறையில் இருந்த உச்ச
வரம்பு தளர்த்தப்பட்டு, உச்சவரம்பு இல்லாமலே வழங்கப்
பட்டுக் கொண்டிருக்கிறது. உச்சவரம்பு என்றால் உங்களுக்குத்
தெரியும். வயது முதிர்ந்தவர்கள் 100 பேர் அல்லது 1,000 பேர்
இருக்கிறார்கள் என்றால், 100 ஓய்வூதியங்களுக்கு 1,000 பேர்
விண்ணப்பித்து இருந்தால் அந்த 100 பேருக்கு மேல் கொடுக்கக்
கூடாது என்று வரையறை இருந்தது. 100 பேர் வாங்கிக்
கொண்டிருக்கிறவர்களிலே 5 பேரோ அல்லது 10 பேரோ இறந்
தால்தான் அந்த 5 அல்லது 10 பேருக்கு ஓய்வூதியம் கொடுக்கக்
கூடிய நிலை ஏற்படும். ஆக முதியோர் ஓய்வூதியம் பெற
வேண்டுமென்றால் யாராவது சாக வேண்டும் என்று வேண்டிக்
கொண்டிருந்த காலம் முன்பு உண்டு. அப்போது தான் அவர்
களுக்கும் ஓய்வூதியம் கிடைக்கும். ஆனால் இப்போது அதுவல்ல
நிலை. எவ்வளவு பேர் ஆனாலும், தகுதியானவர்களாக இருப்
பார்களேயானால் அவர்கள் அத்தனை பேருக்கும் ஓய்வூதியம்
கிடைப்பதற்கு அரசு ஆணை பிறப்பித்து இருக்கிறது. அதனாலே
தான் அந்த எண்ணிக்கையும் அதிகமாக இருக்கிறது. செலவுத்
தொகையும் அதிகமாக இருக்கிறது. தற்போது பல்வேறு ஓய்
வூதியத் திட்டங்களின்கீழ் பயன் பெறுவோர் எண்ணிக்கை கணிச
மாக உயர்ந்துள்ளதைக் கீழ்க்கண்டவாறு அட்டவணையிலிருந்து
தெரிந்து கொள்ளலாம்.—

1. முதியோர் ஓய்வூதியம் பெறுவோர் 30-3-1989 அன்று
இருந்த எண்ணிக்கை 1,69,386. ஆனால் இன்றைக்கு அது 1,97,443
ஆக உயர்ந்திருக்கிறது. அதைப் போலவே, ஆதரவற்ற விதவை
கள் ஓய்வூதியம் பெற்றவர்கள் 31-3-1989 வரையில் 1,22,193.
ஆனால், இப்பொழுது நாம் வழங்குகிறவர்களுடைய எண்ணிக்கை
1,50,700. உடல் ஊனமுற்றோர் ஓய்வூதியம் இதற்கு முன்
னாலே கொடுக்கப்பட்டது 20,698 பேர்களுக்கு. ஆனால், இன்
றைக்கு வழங்கப்படுகிறவர்களுடைய எண்ணிக்கை 23,609.
ஆதரவற்ற விவசாயத் தொழிலாளர்கள் 37,665 பேர்களுக்கு
வழங்கப்பட்டது ஓய்வூதியம். ஆனால், இன்றைக்கு அவர்க
களுடைய எண்ணிக்கை 57,831 ஆக உயர்ந்துள்ளது. கைவிடப்
பட்ட மற்றும் ஆதரவற்ற மகளிர் எத்தனை பேர்கள் இதற்கு
முன்னர் ஓய்வூதியம் பெற்றார்கள் என்றால், 12,747 பேர்கள்.
ஆனால், இன்றைக்கு அது 16,990 ஆக உயர்ந்திருக்கிறது. ஆக,

[திரு. எல். கணேசன்] [1990 சனவரி 25

31-3-1989 வரையில் ஓய்வூதியங்களின் எண்ணிக்கை 3.62
இலட்சமாக இருந்தது தற்பொழுது 4.46 இலட்சமாக எண்
ணிக்கை உயர்ந்திருக்கிறது. எண்ணிக்கை உயர்ந்த அளவுக்கு
நிச்சயமாகத் தொகையும் உயர்ந்திருக்கிறது என்பதை நீங்கள்
அறிவீர்கள்.

12-50 மணி

இன்னொன்று, இந்தச் சத்துணவைப் பற்றி எல்லோரும்
சொல்கிறார்கள். அந்தச் சத்துணவைச் சத்தான உணவாக
அளிக்க வேண்டுமென்று அறிவித்து, முட்டை வழங்கப்படுவதை
நீங்கள் அறிவீர்கள். மாமன்றத்திற்கு உள்ளும் வெளியேயும்,
இதைப்பற்றி அரசியல்வாதிகள், அரசியல் கட்சித் தலைவர்கள்
என்ன பேசுகிறார்கள் என்பதைப் பார்க்கும்போது எனக்கு
வேதனை தருகிறது. ஒட்டு மொத்தமாகச் சொல்கிறார்கள்,
கலைஞர், எம்.ஜி.ஆர். போட்ட திட்டத்தை அப்படியே நிறை
வேற்றிக் கொண்டிருக்கிறார், 'காப்பி' அடித்துக் கொண்டிருக்
கிறார் என்றும் அவருக்கு வேறு தெரியாதா என்ற வகையில்
சொல்கிறார்கள் என்பதை நான் மிகுந்த வேதனையோடு குறிப்
பிட்டுக் கொள்கிறேன். பல திட்டங்களை அகில இந்தியாவிற்கே
முதல் முறையாக நிறைவேற்றிக் காட்டி பல்வேறு மாநிலங்
களிலிருந்து முதல் அமைச்சர்கள் உட்பட வந்து பார்த்து, அந்தத்
திட்டங்களைத் தங்களுடைய மாநிலத்தில் எப்படி நிறைவேற்று
வது என்பதைக் கற்றுச் சென்றார்கள் என்ற வரலாற்றைப்
படைத்தவர் கலைஞர். குடிசை மாற்று வாரியமானாலும்,
குடிநீர் வடிகால் வாரியமானாலும் வேறு பல திட்டங்களா
னாலும் அவற்றை நீங்கள் அறிவீர்கள். ஒரு அரசு கொண்டு
வருகிற திட்டம் நல்ல திட்டமாக இருக்குமானால், அதைத்
தொடர்ந்து வருகிற அரசு கொள்கை ரீதியாக மாறுபட்ட அரசாக
இருந்தாலும், அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவது என்பது
தான் அரசியல் நாகரீகமாகும். தந்தை பெரியாருக்குக் காங்கிரஸ்
இயக்கத்தை விட்டுவெளியேற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்
பட்டதே. ஏன்? வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைக் காங்கிரஸ்
இயக்கம் கொள்கையாகக் கூட ஒப்புக் கொள்ள மறுத்தது.
அதனாலே அவர் காங்கிரசை விட்டு வெளியேறினார். அந்த
வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தை நடைமுறைப்படுத்தியது
நீதிக் கட்சி ஆட்சி. நீதிக் கட்சி ஆட்சி முடிவுற்ற பிறகு, ஆட்சிக்கு
வருகிறது காங்கிரஸ். காங்கிரஸ் கட்சி கொள்கையாகக் கூட
வகுப்பு வாரிப் பிரதிநிதித்துவத்தை ஒப்புக் கொள்ளாத கட்சி—
அந்தத் திட்டத்தைக் கொண்டு வந்ததே நீதிக் கட்சி—அதைத்
தொடர்ந்து ஆட்சிக்கு வந்த காங்கிரஸ் அதை நிறைவேற்றாது
இருக்கவில்லை. நன்றி உணர்ச்சியுடன் சொல்வேன். பெரும்
தலைவர் காமராஜர் அவர்கள், பின் தங்கியவர்கள், தாழ்த்தப்
பட்டவர்கள், முன்னேற வேண்டுமென்பதற்காக இதய பூர்வ
மாகப் பாடுபட்டு, அந்தத் திட்டத்தைத் தொடர்ந்து தான் நிறை



1990 சனவரி 25] [திரு. எல். கணேசன்]

வேற்றினார். இப்படி எத்தனையோ சொல்லலாம். இப்
பொழுது கூட சொல்கிறேன், அரசியலில் மாற்றுக் கட்சி,
காங்கிரஸ் ஆட்சியிலே தான் எஸ்.எஸ்.எல்.சி. வரையிலும் இல
வசக் கல்வித் திட்டம்—காமராஜர் ஆட்சியிலேதான் கொண்டு
வந்தார்கள். அதனால், படித்த பட்டதாரிகள் பல இலட்சம்
பேர்கள். அதை மறுக்கவும் தேவை இல்லை. ஆனால், அரசியல்
ரீதியாக மாறுபாடு கொண்டு கடைசி வரையிலே காங்கிரசுடன்
களத்திலே நின்ற கழகம் ஆட்சிக்கு வருகிறது 1967-ல். காம
ராசர் கொண்டு வந்த திட்டம்—அவர் கொள்கை ரீதியாக
வேறுபட்டவர் என்று சொல்லி, சம்பளம் கட்டிப் படியுங்கள்
என்று உத்தரவிடவில்லை அறிஞர் அண்ணா அவர்கள்; பி.யு.சி.
வரையிலே, அதை விரிவுபடுத்தினார்கள். அதுதான் மரபு.
அதற்குப் பின்னால், இன்றைக்குப் பல்வேறு இனத்தவர்களுக்கு
பி.ஏ. வரையிலே இலவசக் கல்வி என்று கொண்டு வந்த பெருமை
கலைஞரையே சாரும். அது போலத் தான் எம்.ஜி.ஆர். கொண்டு
வந்த திட்டங்களை, நல்ல திட்டமாக இருக்குமானால், அதை
ஏற்றுக் கொண்டு செயல்படுத்துவது என்பது அரசியல் நாகரீகம்
மட்டும் அல்ல, தேர்ந்த கல்வியும் தெளிந்த ஞானமும் உள்ள
வர்கள் செய்கின்ற பணி. அப்படித்தான் இந்தச் சத்துணவுத்
திட்டம். அதையே கூட எண்ணிப் பார்த்தால், வரலாற்றைப்
பார்த்தால் அது நீதிக் கட்சிக் காலத்தில், சென்னை மாநகரத்தில்
உருவாக்கப்பட்டது. அதற்குப் பின்னாலே பெருந் தலைவர்
காமராசரால் விரிவாக்கப்பட்டது. அதையே எம்.ஜி.ஆர். இன்
னும் விரிவுபடுத்தினார். அதே திட்டத்தை கலைஞர் அவர்கள்
மேலும் செம்மைப்படுத்தினார்கள்.

12-55 மணி

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, நேரம்
இல்லை என்றாலும் ஒரு கருத்தை மட்டும் சொல்ல விரும்பு
கிறேன். இப்படி மாற்றக் கூடாது என்பதிலே நீங்கள் ரொம்ப
அக்கறை காட்டிக் கொண்டிருக்கிறீர்கள். அரசு ஊழியர்கள்
பிரச்சினையிலே மத்திய சர்க்கார் ஊழியர்களுக்கும் மாநில
சர்க்கார் ஊழியர்களுக்கும் ஒரே ஊதியம் ஆக்க வேண்டும்;
சம்பளம் மட்டுமல்ல; எல்லா நிலைகளிலும் சமமாக ஆக்கப்
படும் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் மாண்புமிகு
முதலமைச்சரின் பேரவைச் செயலரிடம் கேட்டுக்கொள்ள
விரும்புவது நேரத்தை மட்டும் மாற்றிவிட்டீர்கள். முன்போலவே
5 நாட்கள் வேலை என்ற நிலைக்கு நீங்கள் சரியாக வரு
வீர்களா? பழைய அரசு அதை நடைமுறைப்படுத்தியது
அதை நீங்கள் மாற்றிவிட்டீர்கள். அது மனவேதனையாக
இருக்கிறது. அதை மாற்ற முயற்சி செய்யுங்கள்.

[1990 சனவரி 25

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச்
செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
இதுகுறித்து மத்திய அரசு ஆய்ந்துகொண்டிருக்கிறது. அதோடு
நிலைமைகளை கணக்கிலே எடுத்துக் கொள்கிற நிலையிலே
மாநில முதலமைச்சரும் இருக்கிறார்கள். ஆகவே, இது
குறித்து முதலமைச்சர் அவர்கள் ஆய்ந்துகொண்டிருக்கிறார்கள்.
உரிய முறையில் அதற்கு உரிய தீர்வினைக் காண்பார்கள்
என்பதை பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதைப்போலவே, அரசு வறட்சி நிவாரணப் பணிகளுக்
காக 48.96 கோடி ரூபாய் செலவு செய்து முடித்திருக்கிறது.
இந்த வறட்சி நிவாரணப் பணிகளைப் பொருத்தவரையில்
நான் பெருமையோடு தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்,
குற்றச்சாட்டுக்கு இடம் இல்லாமல் போர்க்கால அடிப்படை
யில் இயன்றவரையில் மனத் தூய்மையோடு அதிகாரிகளை
முடுக்கிவிட்டு, வேலையாற்றி, இயன்ற வரையில் அந்தப் பணி
களைச் செய்திருக்கிறோம் என்பதை நீங்களும் அறிவீர்கள்;
இங்கே பலரும் பாராட்டினார்கள். குறிப்பாகவும் சிறப்பாகவும்
ஒன்றைச் சொன்னார்கள்.

ஓய்வூதியம் பெறுவதில் காலதாமதம் ஆகிறது என்று
மாண்புமிகு உறுப்பினர் சகோதரி சற்குணம் அவர்கள்
சொன்னார்கள். அந்தக் காலதாமதத்தைப் போக்க வேண்டு
மென்ற கருத்தையும் சொன்னார்கள். உண்மை. ஒன்றை
நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்; அதிலே பெருமைப்
படுகிறேன்; முன்னாலே இருந்த நிலைமை எப்படி?
Non-functioning and Non-performing Government செயல்
படாத, இயங்காத அரசாக இருந்த நிலை. கோப்புகள்
மலைபோல் குவிந்த நிலை. அந்த நிலையில் இந்த ஆட்சி
பொறுப்புக்கு வருகிறது. இந்த இடைக்காலத்தில் முடமாகி,
முடங்கிக் கிடக்கிறது நிர்வாக இயந்திரம். அதை விரைந்து
செயல்பட வைப்பது என்பது ஆட்சிக்கலை புரிந்தவர்களுக்கு.
Intricacies of administration-ஐ அறிந்தவர்கள் அறிவார்கள்
எவ்வளவு கடினம் என்று. இந்த ஆட்சிக் கலையில் நுட்பமும்
தேர்ச்சியும் பெற்ற முதலமைச்சர்தான் இப்போது முதலமைச்ச
ராக இருக்கிறார். அவரே திணறுகிறார் என்பதை நாடு நன்கு
அறியும். அவ்வளவு விரைந்து செயல்பட வைக்க வேண்டிய
நிலை இருக்கிறது.

உறுதியாகச் சொன்னால் நேற்றைக்கு கூட இந்த மன்
றத்திலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததை
நீங்கள் அறிவீர்கள். எனவேதான் ஏற்படுகிற கால
தாமதம் திடீரென்று ஏற்பட்டதும் அல்ல. எவ்வளவோ
காலமாகத் தேங்கிவிட்ட ஒரு நிலையில் இருந்து இந்த
அரசு நிர்வாக இயந்திரத்தை முடுக்கி, விரைந்து பணியாற்றத்



1990 சனவரி 25] [திரு. எல். கணேசன்]

தூண்டி, காரியங்களைச் செய்து கொண்டிருக்கிறது.
ஆகவே, இந்தத் துணை மானியக் கோரிக்கை, துணை
நிதிநிலை அறிக்கைமீது கருத்துக்கள் தெரிவித்த அனைத்து
நண்பர்களுக்கும் நன்றி தெரிவித்து.............. (குறுக்கீடு)
அதைப்போலவே இந்த துணை நிதிநிலை அறிக்கை விவாதத்
திற்கு அடிப்படையான இன்னொரு காரணம், இங்கே கூட
மாண்புமிகு எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில் கொண்டுவரப்
பட்ட அந்தத்திட்டம் பள்ளிச் சிறுவர்களுக்கும், ஏழைப்
பெண்களுக்கும் காலணிகள் வழங்கும் திட்டம், அந்தத் திட்
டத்தையும் இந்த அரசு தொடர்ந்து நிறைவேற்றி வரு
கிறது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இன்றைக்கு மொழிக்காக உயிர் நீத்தவர்களு
டைய, தியாகிகளுடைய நாளை நாம் கொண்டாடிக்கொண்
டிருக்கிறோம். இந்தி எதிர்ப்புப் போரின் தொடக்க நாள்
என்று அல்ல; இன்றைக்குக் கொண்டாடிக்கொண்டிருக்கி
றோம். அந்த வகையில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலே
மாணவர் தலைவராக இருந்த இராஜேந்திரன் செத்த
தினம் இன்று. ஆகவே, இன்றைக்கு இந்த அரசு மொழி காத்த
வர்களுக்காக, அந்தத் தியாகிகளுக்காக அஞ்சலி செலுத்து
கின்ற வகையில் அல்லது அவர்களுக்கு உதவி செய்கின்ற
வகையில் ஏதேனும் ஒரு நடவடிக்கை எடுப்பதற்கு முன்வர
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : நேற்று நீங்கள்
வரவுமில்லை. நேற்று நான் என்ன பேசினேன் என்பதைப்
பத்திரிகையில் படிக்கவும் இல்லை. நான் என்ன செய்வது?

திரு. எஸ். ஆர். இராதா : தலைவரவர்களே, நேற்
றைக்கு வராத நிலைமை ஏற்பட்டதற்கு நானும் வருத்தப்
பட்டுக்கொண்டிருக்கிறேன். இருந்தாலும் ஏதேனும் ஒரு காரி
யத்தை—இன்னும் ஒரே ஒரு நிமிடம் இருக்கிறது, ஆகையால்
சொல்கிறேன்—அவர்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளில்
ஏதேனும் ஒன்றை இன்றைக்கு அறிவித்தால் அது இந்த
நாட்டுக்கு நலமாக இருக்கும்.

13-00 மணி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்போது பிற்பகல்
1-00 மணி. விவாதம் முடிவுற்றது. வாக்கெடுப்பு.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச்
செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1989-90 ஆம் ஆண்டிற்குக் கூடுதல் செலவிற்கான
மானியக் கோரிக்கைகள் அடங்கிய 23-1-1990 தேதியிட்ட
பெற்ற அறிவிப்பில் குறிப்பிடப்பெற்றுள்ள துணை மானியக்
கோரிக்கைகள் ஒவ்வொன்றிற்கும் எதிரே குறிப்பிடப்பெற்
றுள்ள தொகைகளுக்கு மேற்படாத தொகை 1989-90 ஆம்
ஆண்டிற்கான கூடுதல் செலவிற்காக அரசுக்கு வழங்கப்
பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்
பெற்றது.

*நிறைவேற்றப்பெற்ற 1989-90 ஆம் ஆண்டு கூடுதல்
செலவுக்கான மானியக் கோரிக்கைகள்.

## A. வருவாய் கணக்கில் செலவு

| | | |
|---|---|---|
| 2 | மாநில ஆயத் தீர்வைத் துறை | |
| 4 | பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும் தீர்வைகளும்—நிருவாகம் .. .. | 25,2[illegible] |
| 6 | பத்திரப் பதிவு | 2,[illegible]0,[illegible] |
| 8 | தேர்தல் | 5,16 |
| 9 | மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 3,40,07 |
| 11 | மாவட்ட நிருவாகம் | 15,98 |
| 14 | சிறைச் சாலைகள் | 1,34,02 |
| 15 | காவல் துறை | 20,58 |
| 16 | தீயணைப்புப் பணிகள் | 7,37 |
| 17 | கல்வி | 3[illegible],19 |
| 18 | மருத்துவம் | 4,32,69 |
| 19 | பொதுச் சுகாதாரம் | 92,20 |
| 20 | வேளாண்மை | 1,18,90 |
| 22 | கால்நடை வளர்ப்பு | 20,62,09 |
| 23 | கூட்டுறவு | 26,07 |
| 24 | தொழில்கள் | 21,45 |
| 26 | கைத்தறியும் துணித் தொழிலும் | 2,50,00 |
| 28 | சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிருவாகமும் | 11,37,57 |
| | | 7,74,13 |



 A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி

| | | |
|---|---|---|
| | | 13,18,04 |
| 30 | சமூக நலன் | 2,69 |
| 32 | பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் முதலியோர் நலம் | 1,42,51 |
| 33 | வீட்டு வசதி | 24,15,39 |
| 35 | நுகர் பொருள் வழங்கல் | 2,55,00 |
| 36 | பாசனம் | 7,50 |
| 37 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் | 2,6[illegible],49 |
| 39 | சாலைகளும பாலங்களும் | 8,59,82 |
| 41 | இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் [illegible]ணிப்பு | |
| 42 | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 72,35,46 |
| | | 1,[illegible],[illegible]1 |
| 43 | பல்வகை | 1,[illegible],00 |
| 45 | காட்டுவளத் துறை | |
| 47 | செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல் | 42,64 |
| | | 26,98 |
| 48 | ஊரகத் தொழில்கள் | 30,38,30 |
| 49 | குடிநீர் வழங்கல் | |
| | மொத்தம்—A. வருவாய்க் கணக்கு .. | 2,15,86,55 |

## B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு

| | | |
|---|---|---|
| | | 18,25,00 |
| 51 | தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | [illegible],00 |
| 52 | பாசனம் குறித்த மூலதனச் செலவு | |
| 53 | பொதுப் பணிகள்—கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு | 3,31,66 |
| 55 | சாலைப் போக்குவரத்துப் பணிகள், கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 8,50 |
| | | 25,00 |
| 57 | ஊரகத் தொழில் குறித்த மூலதனச் செலவு | 6,15,53 |
| 58 | பல்வகை மூலதனச் செலவு | |
| | மொத்தம்—B. வருவாய்க் கணக்கில் கீழ் வராத மூலதனச் செலவு | 28,15,69 |

## C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிச் செலுத்தலும்.

| | | |
|---|---|---|
| 59 | மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் | 4,22,24 |
| | பெரு மொத்தம் | 2,48,24,48 |

5. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம்)—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன்: (முதலமைச்சரின் ஆட்சியன்புச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்டமுன் வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப்பெற்றது.

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

6. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க சட்டச் முன்வடிவு, 1990 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் தமது இசைவைத் தெரிவித் துள்ளார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

8. மொழிப்போர் தியாகிகளைப் போற்றி நினைவு கூர்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இன்று மொழிப் போர் தியாகிகள் தினம் என்பதையொட்டி ஒரு செய்தி:

மொழிக்காகத் தங்களைத் தந்து தியாக
முத்திரை குத்தியோர் பல்லோர்
வழித்தோன்றல் வாழ்வாங்குவாழ தங்கள்
வாழ்வையே ஈந்தவர் நல்லோர்
எழிலான தமிழ்மொழி சிறக்க நாம்
எல்லோரும் பணியாற்ற வேண்டும்
மொழிக்காக இன்னுயிர் ஈந்தோர் தம்மை
முறையாக நாம் போற்ற வேண்டும்.





பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று, நாளை மறுநாள் (27—1—1990) காலை 9-00 மணிக் குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 13-03 மணிக்கு ஒத்திவைக் கப்பெற்றது.

9. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

70. தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனத்தின் 1988–89 ஆம் ஆண்டிற்கான பதினெட்டாவது ஆண்டறிக்கை [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக் கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

71. தமிழ்நாடு ஆதி திராவிடர் மற்றும் வளர்ச்சிக் கழகத்தின் 1984–85ஆம் ஆண்டிற்கான பதினோராவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

72. தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தின் 1983–84ஆம் ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை [1956ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

73. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1985-86ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்கு கள் (தமிழ்நாடு 1959ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்).

74. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் 1986–87ஆம் ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் கணக்குகள் [தமிழ்நாடு 1956ஆம் ஆண்டு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 18/1959) 29 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

[1990 சனவரி 25

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள், ஏனைய தாள்கள்.

41. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி மூன்றாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

42. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தி நான்காவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

43. பொதுக் கணக்குக் குழுவின் இருபத்தைந்தாவது (ஒன்பதாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989–90.

143790

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited, Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamamn Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
6 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

©

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.

வெளியீடு 13-9-1990 Issued 13-9-1990

20-4-1990
689

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, ஜனவரி 27, 1990–தொகுதி 20–எண் 2
Saturday, the 27th January 1990–Volume 20–No. 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.
Legislative Assembly Secretariat, Fort St. George
Madras-600 009

விலை ரூ. 3.00] [Price Rs. 3.00

D
V211,31'N90
N90.20.1-2
143790

# உள்ளடக்கம்.

27—1—1990.


| | | பக்கங்கள். |
|---|---|---|
| 1. இரங்கல் குறிப்பு | | |
| முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து | .. | 129 |
| 2. வினாக்கள் - விடைகள்— | | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | .. | 130—178 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் | .. | 178—199 |
| 3. தகவல் கோரல்— | | |
| (அ) மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பம்ப் ஆப்பரேட்டர்களுக்கு அரசு அறிவித்துள்ள பொங்கல் பரிசுத் தொகை வழங்கப்படாதது குறித்து | .. | 200—201 |
| (ஆ) இராமநாதபுரம் மாவட்டம் கடலோரக் கிராமங்களில் புயலாலும், வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள உயிர் சேதம் மற்றும் ஏனைய சேதங்களை யொட்டி மேற்கொள்ள வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து | ... | 201—202 |
| (இ) திருமங்கலம் தொகுதியில் அண்மையில் பெரு வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது குறித்து. | .. | 202—203 |
| (ஈ) உறுப்பினர் ஒருவர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கான அறிவிக்கை குறித்து. | .. | 203—204 |
| (உ) போக்குவரத்துக் கழக ஊழியர் ஒருவர் உறுப்பினரிடம் நடந்து கொண்ட முறை குறித்து. | .. | 204 |
| (ஊ) முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சென்னை ராஜ்பவனில் தங்கியிருந்த போது தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசியதாகக் கூறப்படுவது குறித்து | ... | 204—206 |
| (எ) காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக முதல்வர் தெரிவித்துள்ள கருத்து. | .. | 206—211 |

| | பக்கங்கள். |
|---|---|
| (ஏ) சாத்தான்குளம் தொகுதியிலுள்ள குளங்களுக்கு மணிமுத்தாறு நீர் விடப் பெற வேண்டியது குறித்து. .. | 213—215 |
| (ஐ) சேலத்தில் நடைபெற்றுள்ள ஒரு கொலைச் சம்பவம் குறித்து .. | 215—221 |
| (ஒ) கோட்டூர் ஒன்றியம், நல்லூரில் ஒரு சத்துணவு அமைப்பாளர் கற்பழிக்கப் பட்டுகொலைசெய்யப்பட்டுள்ளதாகக் கூறப்பெறுவது குறித்து. .. | 222—224 |
| (ஓ) பின்னி நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டுமெனக் கோரும் மனுகுறித்து | 232—233 |
| 4. உரிமைப் பிரச்சினை— | |
| சென்னை தொலைக்காட்சி நிலையத்தார் மீது— | |
| தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது பற்றி அவையில் பேசியதை ஒளிபரப்பியபோது உறுப்பினருடைய பெயர் குறிப்பிடப் பெறாதது குறித்து. .. | 212 |
| 5. கவன ஈர்ப்பு— | |
| (அ) பேராவூரணித் தொகுதியில் தெரு விளக்கு இரும்புக் கம்பங்கள் பல துருப் பிடித்துள்ளதால் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக் கூடிய நிலைமை இருப்பது குறித்து. .. | 224—226 |
| (ஆ) சென்னை புளியந்தோப்பிலுள்ள இறைச்சிக் கூடம் சரிவரப் பராமரிக்கப் படாததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து. .. | 227—232 |
| 6. அறிக்கைகள் அளித்தல்— | |
| (அ) மதிப்பீட்டுக் குழு .. .. | 232 |
| (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு .. | 232 |




689


| | பக்கங்கள் |
|---|---|
| 7. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— | |
| (அ) நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு, 1990 .. | 233—234 |
| (ஆ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 .. | 234—259 |
| (இ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 .. | 259—268 |
| (ஈ) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சி யமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளை கள்(மேலாண்மையைமேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990 .. | 268—281 |
| (உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு, 1990 .. | 281—292 |
| (ஊ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங் கள் சார்ந்த (திருத்த) சட்ட முன் வடிவு, 1990 .. | 292—299 |
| (எ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங் கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1990. | 299—311 |
| 8. அறிவிப்பு— | |
| சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன் வடிவு, 1990 | 259—268 |
| 9. அரசினர் தனித் தீர்மானம்— | |
| 1988-ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (மையச் சட்டம் 53/1988) 1974 ஆம் ஆண்டு சட்டத்தில் (மையச் சட்டம் 6/1974) செய்யப்பட்ட திருத்தங்களை ஏற்றுக் கொள்ளுதல் .. | 311—317 |
| 10. அரசினர் தீர்மானம்— | |
| பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைத்தல் .. | 317 |
| 11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் .. | 317—319 |

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

தை 14, சுக்ல — திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990, சனவரி 27, சனிக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9.00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:**

'' உறின்நட்டு அறின்ஒருஉம் ஒப்பிலார் கேண்மை
பெறினும் இழப்பினும் என்.''

தமக்குப் பயன் உள்ளபோது நட்புக்கொண்டு பயன் இல்லை என்று தெரிந்ததும் நீங்கிவிடும் தகுதியில்லாதவரின் நட்பைப் பெற்றால் என்ன? இழந்தால் என்ன?

## 1. இரங்கல் குறிப்பு.

### முன்னாள் உறுப்பினர் மறைவு குறித்து

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்** : தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் முன்னாள் உறுப்பினரான திரு. க. கோ. கிருஷ்ணசாமி அவர்கள் 22-1-1990ஆம் நாளன்று மறைந்ததை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. க. கோ. கிருஷ்ணசாமி அவர்கள் 1980ஆம் ஆண்டிலிருந்து 1984ஆம் ஆண்டுவரை பெரியார் மாவட்டம் காங்கேயம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவரை இழந்து விட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலை இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை எய்தியவருக்கு அஞ்சலி தெரிவிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நிற்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் ஒரு மணித்துளி மௌனமாக எழுந்து நின்றனர்.)

## 2. வினாக்கள்— விடைகள்.

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

### கூட்டுறவு சர்க்கரை ஆலை.

*18. **திரு. பெ. சு. திருவேங்கடம்** .
**திரு. கே. பிச்சாண்டி:**

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர், கலசபாக்கம் பகுதியில் கூட்டுறவுத்துறையில் சர்க்கரை ஆலை ஆரம்பிக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே,

(அ) ஆம்.

(ஆ) வட ஆற்காடு இப்பொழுது திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டத்தல் நாளொன்றுக்கு 1,750 டன் பிழிதிறன் கொண்ட ஒரு புதிய கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசு முடிவெடுத்துள்ளது. அதற்கான விண்ணப்பங்கள் சர்க்கரைத் துறை ஆணையரிடமிருந்து பெறப்பட்டு 18-11-1989-ல் மைய அரசிற்குப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

**திரு. பெ. சு.. திருவேங்கடம் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசு மைய அரசுக்கு அந்த விண்ணப்பத்தைச் செய்திருக்கிறது என்று முதலமைச்சரவர்கள் அறிவிக்கிறார்கள். முதலமைச்சரவர்கள் மத்திய அரசோடு தொடர்பு கொண்டு விரைவுபடுத்தி இந்த ஆண்டிலே அந்த ஆலையைத் துவக்கஅரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** தலைவரவர்களே, 11-வது மாதம்தான் இந்த அங்கீகாரம் கோரி பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இந்த முயற்சி விரைவுபடுத்தப்பட எல்லாவிதமான வகையிலும் மத்திய அரசோடு தொடர்பு கொள்ளப்படும்.

**திரு. பெ. சு. திருவேங்கடம்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்படியும் இந்த ஆண்டு ஆலையைத் துவக்குகின்ற ஒரு நிலை இருக்கின்ற காரணத்தினாலே அதற்கான இடம் தேர்வு செய்ய முன்னாலேயே தமிழக அரசு நடவடிக்கை எடுக்குமா என்று நான் அறிய விரும்புகின்றேன்.





**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** எல்லா நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும்.

**திரு. கே. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ள போளூர் சர்க்கரை ஆலை மத்திய அரசின் உணவுத் துறை ஸ்கிரீனிங் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளதா என்ற விவரம் அரசுக்கு வந்துள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டு நல்ல முடிவு வர வேண்டுமென்பதற்காகத்தான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது.

**திரு. அ. இராசேந்திரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மத்திய அரசின் அனுமதி கேட்டதில் போளூர் சர்க்கரை ஆலை அமைய இருக்கும் இடம் குறிப்பிட்டு அனுமதி கேட்கப்பட்டுள்ளதா அல்லது போளூர் வட்டம் என்று கேட்கப்பட்டுள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி:** திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் வட்டம் என்று கேட்கப்பட்டிருக்கிறது. போளூரில் நட்ட நடுவில் நகரத்திற்குள்ளே சர்க்கரை ஆலை வைக்க முடியுமா என்பதை மாண்புமிகு உறுப்பினர் சொல்வாரேயானால் அதுபற்றியும் யோசிக்கப்படும்.

**திரு. கே. பிச்சாண்டி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் தொழில் துறையில் மிகவும் பின் தங்கிய மாவட்டமாக, விவசாயத்தையே முக்கியத் தொழிலாகக் கொண்டுள்ள மாவட்டம். அதலால் விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக வழிவகை செய்யும் வகையில் அந்தச் சர்க்கரை ஆலையை விரைவில் அரசு கொண்டு வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(9-05 மணி)

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இவ்வளவு சேள்விகள் கேட்கப்படுவதைப் பார்த்தால் சர்க்கரை ஆலையே வேண்டாம் என்று சொல்வதைப் போல இருக்கிறது.

**திரு. வ. முல்லைவேந்தன் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சர்க்கரை ஆலை ஆரம்பிக்கிற இடத்தில் நிலத்தைத் தருகிற விவசாயிகளுக்கு அந்த ஆலையில் வேலை வாய்ப்பில் முன்னுரிமை தரப்படுமா என்று அறிய விரும்புகின்றேன்.

[1990, சனவரி 27

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்தமுறை இருந்து வருகிறது.

திரு. எஸ். எஸ். ராமசுப்பு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் உற்பத்தியாகும் சர்க்கரையின் அளவு எவ்வளவு? இது வேறு மாநிலங்களுக்கு நம்முடைய மாநிலத்திலிருந்து விற்கப்படுகிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போட்டால் இந்த விவரங்களை எல்லாம் தர இயலும்.

முன்னாள் பாரதப் பிரதமர் மற்றும் அமைச்சர்கள்
தமிழ்நாட்டில் சுற்றுப் பயணம் செய்ததற்கான செலவு:

*303 திரு. உ.ரா. வரதராசன் ;
திரு. மா. மணிமாறன் ;
திரு. வீ, தமிழ் மணி ;
திரு. என். பழனிவேல் ;
திரு. எம். முத்தையா :
திரு. வ. அன்பழகன் ;

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

1988 சனவரி இறுதியில் தமிழ்நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சி பிறப்பிக்கப்பட்ட பின்னர் பாரதப் பிரதமர் மற்றும் மைய அரசின் அமைச்சர்கள் தமிழ்நாட்டில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பாக மாநில அரசுக்கும், அரசுத்துறை நிறுவனங்களுக்கும் நேரிட்ட மொத்த செலவுத் தொகை எவ்வளவு?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு தலைவர் அவர்களே,

1988 சனவரி திங்கள் முதல் 1989 சனவரி திங்கள் வரை பாரதப் பிரதமர் மற்றும் மைய அரசின் அமைச்சர்கள் தமிழ்நாட்டில் மேற்கொண்ட சுற்றுப் பயணங்கள் தொடர்பாக ஏற்பட்ட செலவு என்ற வகையில் பிரதமருக்காக ஆன செலவு விவரங்கள் 4 கோடியே 47 லட்சத்து 17 ஆயிரத்து 457 ரூபாய் ஆகும். மற்ற அமைச்சர்களுக்காக ஆன செலவுகள் 5 லட்சத்து 60 ஆயிரத்து 318 ரூபாய் ஆகும்.

திரு. உ. ரா. வரதராசன் : தலைவர் அவர்களே, மூலக் கேள்வியில் அரசுக்கான செலவுகள் எவ்வளவு? அரசுத் துறை நிறுவனங்களுக்கு ஏற்பட்ட செலவுகள் எவ்வளவு என்று நான்



1990, சனவரி 27]

கேட்டிருக்கிறேன். காரணம், அரசு செய்த பாதுகாப்புச் செலவுகள் மட்டுமல்லாமல், முன்னாள் பாரதப் பிரதமர் அவர்களும், அமைச்சர்களும் இங்கே பயணம் செய்தபோது ஏராளமான ஆடம்பரமான விளம்பரங்கள் செலவுகளுக்கு எல்லாம் கூட அரசுத் துறை நிறுவனங்கள் பயன்பட்டதாக பத்திரிகை செய்தியாக வந்திருக்கிறது. ஆகவே அந்த நிலையில், அந்த வகையிலான செலவுகள் எவ்வளவு என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, பொதுவாக பிரதமர் வருகை குறித்து மத்திய, மாநில அரசுகளிடம் ஒரு குறிப்பு இருக்கிறது. பிரதமர் வருகை தந்தால் அலுவல் காரணமாகவோ அல்லது அலுவல் அல்லாத காரணமாகவோ வருகை தருவது என்று ஒரு பட்டியல்; தேர்தலுக்காக வருவது என்பது ஒரு பட்டியல். பொதுக் கூட்டங்களில் பேசும் போது அந்த பொதுக் கூட்ட மேடைகளுக்காக ஆகும் செலவுகளை மாநில அரசுகளே ஏற்றுக் கொள்ள வேண்டும். அதற்குப் பிறகு அதிலே 25 சதவீதம் அல்லது 2,500 ரூபாய் இதில் எது குறைவோ அதனை அந்த, தொடர்புடைய அரசியல் கட்சியிடமிருந்து பெற வேண்டும் என்று இருக்கிறது. இவ்வளவு விவரங்கள்தான் என்னிடம் இருக்கின்றன.

திரு. மா. மணிமாறன் : துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வந்த மொத்தப் பயணங்களில் எத்தனை தடவைகள் அரசினுடைய திட்டங்களை அறிவிப்பதற்காக, அரசு அலுவல்களுக்காக வந்திருக்கிறார்கள்? அரசு அல்லாத அலுவல்களுக்காக வந்ததற்கான மொத்தச் செலவு எவ்வளவு? அரசு அல்லாத அலுவல்களுக்கு வந்த செலவில் எவ்வளவு பணம் அவர் சார்ந்துள்ள அந்தக் கட்சியிடமிருந்து வசூலிக்கப்பட வேண்டியிருக்கிறது? அப்படி வசூலிக்க வேண்டிய பணத்திற்கு அரசு ஏதாவது நோட்டீஸ் கொடுத்து, அந்தக் கட்சியினர் ஒப்புக் கொண்டிருக்கிறார்களா? அல்லது மறுத்து இருக்கிறார்களா? (மணியடிக்கப் பெற்றது.)

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, பிரதமருக்கான செலவு 4 கோடியே 47 லட்சத்து 17 ஆயிரத்து 457 ரூபாய் என்று குறிப்பிட்டேன். அதிலே ஓராண்டு காலத்தில் அவர்கள் 11 தடவைகள் வந்திருக்கிறார்கள். அவர்கள் வந்த நாட்கள் மொத்தம் 30 நாட்கள். அதற்கான செலவு விவரம் தான் இப்போது குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதிலே அரசு காரியமாக வந்தது, அரசு அல்லாத காரியமாக வந்தது என்று பிரித்து எடுக்க முடியாத அளவிற்கு இரண்டும் பின்னிப் பின்னி இருப்பதால் அவைகளைச் சொல்ல இயலாது. பிரதமருடைய வருகையை ஒட்டி காங்கிரஸ் கட்சியிடமிருந்து

வரவேண்டிய தொகை இதுவரையில் 7 லட்சத்து 30 ஆயிரத்து 766 ரூபாய். அதற்கான கடிதமும், நினைவூட்டுக் கடிதங்களும் அந்தக் கட்சிக்கு அரசின் சார்பாக தொடர்ந்து அனுப்பப்பட்டு வருகின்றன.

( 9-10 மணி)

திரு. வீ. தமிழ்மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் பாரதப் பிரதமர் அவர்கள் தமிழ் நாட்டிற்கு வருகை தந்திருந்ததற்காக ஆகியிருக்கின்ற செலவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். இது போன்று வேறு எந்த நாட்டிலாவது இப்படிப்பட்ட . . . . (மணியடிக்கப்பெற்றது.)

முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவு.

*7036. திரு. செங்கை சிவம் :

திரு. வீ. தமிழ்மணி :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) முன்னாள் முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்களின் சிறு நீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செலவிட்டதொகை எவ்வளவு?

(ஆ) செலவிடப்பட்ட தொகை திருப்பி அரசுக்கு செலுத் தப்பட்டு விட்டதா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) முன்னாள் முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந் திரன் அவர்களின் சிறுநீரக அறுவை சிகிச்சைக்காக அரசு செல விட்ட தொகை ரூ. 1,63,25,560.42.

(ஆ) இதில், ரூ. 1,02,89,897.05-ஐ அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் அரசிற்குத் திரும்பி செலுத்தி விட்டது. திருப்பிச் செலுத்தப்படாத தொகை சுமார் ரூ. 61 இலட்சம். அது செலுத்தப்படவேண்டியதில்லை என 8-11-1984-ல் கூடிய அமைச்சரவைக் கூட்டத்தில் அந்தச் செலவை அரசே ஏற்கவேண்டுமென்று முடிவு எடுக்கப்பட்டது.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் எம். ஜி. ஆர். அவர்கள் எத்தனை முறை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றார் ? எந்தெந்த நாடுகளுக்குச் சென்றார் ? அப்படி முதல் முறையாக அவர் சென்றபோது யார் யார் அவருடன் சென்றார்கள் என்ற விவரத்தை தங்கள் மூலமாக அறிய விரும்பு கிறேன்.



மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் மாண்புமிகு எம். ஜி. ஆர். அவர்கள் 4 முறை மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடுசென்றார். முதல் தடவை அவரோடு சென்றவர்கள் 29 பேர்; இரண்டாவது முறை உடன் சென்றவர்கள் 12 பேர்; மூன்றாவது முறை 8 பேர் ; நான்காவது முறை 12 பேர்.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முன்னாள் முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருக்கிறார்களா ? அவர்களுடன் சென்றவர்கள் யார் ? யார் ? அந்தச் செலவை அவர்களுடைய கட்சி திருப்பிச்செலுத்தி விட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கள் சென்றபோது ரூ. 1,33,522 செலவாயிற்று. அதை திராவிட முன்னேற்றக் கழகம் திருப்பிச் செலுத்திவிட்டது. ஆனால் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர் களுக்கு ஏற்பட்ட உடல்நிலை வேறுவிதமானது. அது அபாயகர மானது என்ற காரணத்தினால் அவர் நான்கு முறை வெளிநாடு செல்ல வேண்டியிருந்தது.

மேய்ச்சல் தரிசில் வீடு கட்டியவர்களுக்கு பட்டா வழங்குதல்.

*94 திரு. மீ. அ. வைத்தியலிங்கம் :

திரு. எஸ். டி. உகம்சந்த் :

திரு. க. சுந்தரம் :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினா வுக்கு விடையளிப்பாரா :

மேய்ச்சல் தரிசில் வீடு கட்டியுள்ளவர்களுக்கு பட்டா இல்லை என்ற ஆணையை மாற்றி பட்டா வழங்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, இதுபோன்ற மேய்ச்சல் தரிசு, ஏரி, குளம், குட்டை தரிசுகளில் பெரும்பாலோர் குடியேறியுள்ள இடங்களில் உள்ளாட்சி துறை மூலமாக சாலை வசது, விளக்கு வசதி, ஏனைய வசதிகள் செய்து தரப்பட்டு, வரி விதிக்கப்பட் டிருக்கின்ற காரணத்தினால் அவர்களுக்கு சலுகை விலையிலாவது பட்டா அளிக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 8-7-1986-ல் அனைத்து மேய்ச்சல் புறம்போக்குகளிலும் வீட்டுமனை பட்டாக்களை வழங்க தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. ஆடுகளின் தீவனத் திற்காக பயன்படுத்துவதற்கு உள்ள நிலத்தைக் கொடுப்பது தவறாகும் என்றும், நஞ்சை நிலத்தை எப்படி கருதுகிறோமோ அது போன்று இந்த நிலங்களை பாதுகாக்க வேண்டுமென்று அரசு கருதி, மேற்படி ஆணையைப் பிறப்பித்துள்ளது. மேய்ச் சல் தரை-புறம்போக்கு நிலங்களை ஒப்படை செய்வது சம்பந்த மாக செயற் குறிப்புகளை அரசுக்கு அனுப்ப வேண்டாம் என்றும் கீழுள்ள அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது.

திரு. மீ. அ. வைத்தியலிங்கம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தத் தடை வருவதற்கு முன்பா கவே குடியேறிவிட்ட மக்களுக்காவது குறைந்தபட்சம் 10 ஆண்டு களுக்கு முன்பு குடியேறியவர்களுக்காவது பட்டா வழங்கும் திட் டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, 10 ஆண்டுகளுக்கு முன்னாலே ஆக்கிர மிப்பு செய்து வீடுகட்டி, குடிசைகளைப் போட்டு வாழ்ந்துகொண் டிருப்பவர்களைத் தொல்லைப்படுத்த வேண்டுமென்ற நோக்கு அரசுக்கு இல்லையென்றாலும், மேற்படி இப்படிப்பட்ட ஆக்கிர மிப்புத் தொழிலை விட்டுவிடுவது நல்லது என்று நான் சம்பந்தப் பட்ட அனைவரையும் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன்.

(9-15 மணி)

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மேய்ச்சல் நிலங்களிலே வீடுகளைக் கட்டிக்கொண்டு இருப்பவர்களை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுத்திருப்பது உண்மையிலேயே பாராட்டுவதற் குரியது, வரவேற்கக் கூடியது. காரணம் எங்கெங்கெல்லாம் கண்மாய்கள் இருக்கிறதோ, மேய்ச்சல் நிலங்கள் இருக்கிறதோ அவை அத்தனையிலும் சென்று குடிசைகளைப் போட்டுக்கொண்டு ஊருக்கு மிகவும் தொந்திரவு கொடுக்கக்கூடிய நிலைமை இருந்து வருகிறது. ஆகையினால் பொது நலனுக்குத் தேவைப்படுகிற





நிலங்களையெல்லாம், கண்மாய்கள், நடைபாதைகள், சுடுகாடு இந்த மாதிரியான நிலங்களையெல்லாம் ஆக்கிரமிப்பு செய்துள்ள வர்களை அப்புறப்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்ல கருத்தை தெரிவித்ததற்காக உறுப்பினர் அவர்களுக்கு நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. சா. [illegible] : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியில் கரூர் என்ற பகுதியிலே ரத்தின சபாபதி என்ற வீதியில் சிலருக்கு மட்டும் பட்டா வழங்கப்பட் டிருக்கிறது. இன்னும் சிலருக்கு வழங்கப்படவில்லை. அதை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : அது பற்றிய தகவல் என்னிடம் இல்லை. கிடைத்தால் அதற்குரிய நடவடிக் கையை மேற்கொள்ளுவதற்கு நான் முயற்சிக்க முயலக்கூடும்.

திரு. வே. [illegible] : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேய்ச்சல் நிலங்களில் வீடுகளைக் கட்டு வதிலே அரசு புது ஆணையை ஏற்படுத்தியிருக்கிறது என்றாலும் கூட, நடைமுறை சித்தாந்தத்தை கருதி அரசு இதை மறுபரி சீலனை செய்ய வேண்டும். காரணம் ஒரு ஏக்கர், அரை ஏக்கர் என்றிருப்பதெல்லாம் தவறாக மேய்ச்சல் நிலம் என்று புத்தகங் களிலே போடப்பட்டிருக்கிறது என்றால் அப்படிப்பட்ட நிலங் களைக் குறித்து அரசுக்கு முறையீடு வருகிறபோது, அதற்கு விதி விலக்கு கொடுப்பதற்கு இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, பல சந்தர்ப்பங்களில் சித்தாந்தங் கள் சிதறுகின்றன. புதிய சித்தாந்தங்கள் உருவெடுக்கின்றன. அதற்கேற்ற முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

திரு. என். பழனிவேல் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி மேய்ச்சல் தரிசு நத்தம் புறம்போக்கு களில் குடிசை கட்டி குடியேறியிருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள் அல்லது வீடே இல்லாத எந்தவிதமான சொத்து பத்து இல்லாத ஏழைகள். அவர்கள் எங்காவது ஒரு இடத்திலே குடிசை போட்டு இருக்க வேண்டிய நிலைமையில் இருக்கிறார்கள். அவர்களை வெளியேற்றினால் எங்கே போய் இருப்பார்கள்? அவர்களுக்கு மாற்று இடம் ஏற்பாடு செய்து கொடுத்துவிட்டு அதற்குப் பிறகு இம்மாதிரி உள்ளவர்களை அரசு வெளியேற்றுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990, சனவரி 27

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கேள்வி ஆதிதிராவிட மக்கள் அவர்கள் குடிசை போட்டு இருக்கின்ற இடத்திலிருந்து அகற்றப்படுவதற்கு முன்பு மாற்று இடம் தேடி தரபபடுமா என்று கேட்கிறார்கள் நியாயமான கேள்வி. அரசு அதை பரிசீலிக்கும் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. யூ. கே. வெள்ளிங்கிரி: மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலேயும் 25 ஆண்டுக்காலமாக மேய்ச்சல் நிலம் அது போன்று பல்லவாரி போன்ற இடங்களில் எல்லாம் குடியிருக்கிறார்கள். அவர்கள் பட்டா கேட்டு எங்களை தொந்தரவு செய்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே இது சம்பந்தமாக அரசு மறுபரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே குடியேறிவிட்டு உடனடியாக பட்டாக்களைக் கேட்பது இப்போது ஒரு வாடிக்கையாக மாறி கொண்டிருக்கிறது என்பதை கனம் உறுப்பினர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறேன். இனிமேல் யாரும் ஆக்கிரமிப்பு செய்து குடிசைகளைப் போட்டால் நிச்சயம் அனுமதிக்கப்போவதில்லை என்பதை மட்டும் அரசின் சார்பில் தெரிவித்துக் கொள்கிறேன்.

கமுதி தாலூகாவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்தல்.

*3830, திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கமுதி தாலூகாவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம், எனில், எப்பொழுது சேர்த்துக்கொள்ளப்படும்?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, :

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்துடன் சேர்த்துக் கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.



1990, சனவரி 27]

(9-20 மணி.)

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தலைவர் தேவர் திருமகன் அவர்கள் பிறந்த ஊர் பசும்பொன் கமுதி வட்டத்திலே இருக்கிறது. அதை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது மக்களுடைய கருத்தாக இருக்கின்ற காரணத்தினாலே இதை அரசு பரிசீலனை செய்து பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே கமுதி வட்டத்தைச் சேர்த்துக்கொள்ளும் அறிவிப்பை அரசு அறிவிக்குமா?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டம் கமுதி தாலுக்காவை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்த்துக்கொள்ளும் திட்டம் அரசின் ஆய்வில் இல்லை என்று முன்னரே குறிப்பிட்டேன். காரணத்தை தெரிவிக்க விரும்புகிறேன். இராமநாதபுரம் மாவட்டத்தில் அமைந்துள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்ப்பதைப் பற்றிய செயற்குறிப்பு எதுவும் பரிசீலனையில் இல்லை. அரசால் நியமிக்கப்பட்ட வல்லுநர் குழு நன்கு ஆய்வு செய்து பரிந்துரை செய்யப்பட்டதன் அடிப்படையிலேயே இராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டம், காமராஜர் மாவட்டம் என்று மூன்று மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டது. எனவே தற்போது பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள கமுதி வட்டத்தை பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்தில் சேர்ப்பது பற்றி பரிசீலனை செய்ய வேண்டியதில்லை என்று நான் கருதுகிறேன்.

திரு. காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்த மூன்று மாவட்டங்களையும் பிரிக்கின்ற நேரத்தில் அவசர அவசரமாக பிரிக்கப்பட்டதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். நம்முடைய மாநிலத்தில் அகில இந்திய அளவிலே மிகப் பெரிய செல்வாக்கு பெற்ற தந்தை பெரியார் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்கள் பெருந் தலைவர் காமராஜர் போன்றவர்களுக்கு எல்லாம் அவர்கள் பிறந்த ஊரிலே அவர்கள் பிறந்த ஊர் சேர்ந்திருக்கின்ற மாவட்டத்திலே அமைக்கப்பட்டிருக்கிறது. தலைவர் தேவர் திருமகன் அவர்களுக்கு மட்டும் அவருடைய ஊர் வேறொரு மாவட்டத்திலும் அவருடைய பெயர் வேறொரு மாவட்டத்திற்கும் வைக்கப்பட்டிருப்பதாக பொதுமக்கள் கருதுகிறார்கள். இதை தயவுசெய்து அரசு மறு பரிசீலனை செய்து அந்த பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலே அவர் பிறந்த ஊராக இருக்கின்ற பசும்பொன் சார்ந்திருக்கின்ற கமுதி வட்டத்தைச் சேர்க்கக்கூடிய பரிசீலனையை அரசு மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990, சனவரி 27

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு அவசர அவசரமாக எந்தக் காரியத்திலும் ஈடுபடுவதில்லை. மாறாக செய்ய வேண்டிய காரியங்களைத் துரிதமாகச் செய்வதற்கு ஏற்ற நடவடிக்கை களை எடுக்கும். உறுப்பினர் கேட்ட கேள்விக்கு நான் ஏற் கெனவே பதில் சொல்லிவிட்டேன். அதுதான் விடை, அதற்கு மேல் விடையில்லை.

திரு. பி. என். வல்லரசு : துணைத் தலைவர் அவர்களே, தேசிய தலைவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்கள் ந்த ஊரும், வளர்ந்த ஊரும், அடக்கம் செய்யப்பட்ட ஊரும் பசும்பொன் கிராமம் ஆகும். அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, அப்படிப்பட்ட அடக்கம் செய்யப் பட்டிருக்கின்ற பசும்பொன் நகர் என்பது ஒரு இடத்திலும் தேவர் திருமகன் என்ற பெயர் வேறொரு இடத்திலும் இருக் கின்ற காரணத்தினால் மீண்டும் கமுதி தாலுக்காவை, பசும் பொன் கிராமம் உள்ளிட்ட கமுதி தாலுக்காவை தேவர் திருமகனுடன் சேர்க்க வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட காலமாக இருக்கிறது. இப்படி பசும்பொன் கிராமம் ஒரு இடத்திலும், தேவர் திருமகன் என்ற பெயர் வேறொரு இடத்திலும் இருப்பதால் நீர் இல்லாத ஆறாக, தெய்வம் இல்லாத ஆலயமாக காட்சியளிப்பதாக பொதுமக்கள், தேவர் திருமகனுடைய லட்சோப லட்ச மக்கள் கருதுகின்ற காரணத் தினால், மீண்டும் மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர் கள் சொன்னதைப்போல் அவசர அவசரமாக முடியாவிட்டாலும் கூட ஆர அமர சிந்தித்து அந்த பசும்பொன் கிராமத்தைச் சேர்க்க வேண்டுமா, வேண்டாமா என்பதை உணர்ந்து அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே, கேள்விக்குப் பதிலாக சிறப்புச் சொற் பொழிவு நிகழ்த்திய உறுப்பினருக்கு எனது பாராட்டைத் தெரி வித்துக்கொள்கிறேன். ஆர அமர அரசு ஆராயும்.

திரு. எஸ். எஸ். தென்னரசு : துணைத் தலைவர் அவர் களே, பசும்பொன் தேவர் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டம் இரண்டும் அண்மையில் பிரிக்கப்பட்டது. முதலமைச்சர் கலைஞர் அவர்கள் எதிர்க்கட்சியில் இருந்தபோது மாவட்டம் பிரிவினையின் போது மண் வளம், மன வளம் இரண்டும் ஒரே மனத்துடையதாக இருப்பதால் இரண்டுக்கும் ந[illegible] ஒரு தலைநகரத்தை அமைக்க லாம் என்ற கருத்தை ஏற்கெனவே சொல்லியிருந்தார்கள். ஆனால் அதற்குப் பிறகு மாவட்டம் இரண்டாகப் பிரிக்கப்பட்டுவிட்டது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் [illegible] அவர்கள் சொன்னதைப் போல இளையான்குடி தாலுக்கா, திருவாடானை



1990, சனவரி 27]

தாலுக்கா இரண்டும் மக்களுடைய எண்ணங்களுக்கு மாறாக சிதைக்கப்பட்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் இதை மறுபரிசீலனை செய்வதற்கு முயற்சி எடுத்துக்கொள்வார்களா என்பதை அறிய விரும்பு கிறேன்.

(9-25 மணி)

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர் திரு. தென்னரசு அவர்கள் பேசும்போது மக்களின் உணர்வுகளை இந்த அரசு சிதைத்து விட்டதைப் போன்ற கருத்துப்படப் பேசினார்கள். அந்த எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. மேலும் ஆராய்கின்ற வாய்ப்பு உருவாகுமானால், அரசு ஆராயத் தவறாது என்பதை அவருக்குத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

**ஒரகடம் கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட நிலம்.**

*4238 திரு. எஸ். எஸ். தென்னரசு :

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) செங்கை அண்ணா மாவட்டம், அம்பத்தூர் நகரியத்தைச் சேர்ந்த ஒரகடம் கிராமத்தில் நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக்கொண்ட நிலத்தின் பரப்பளவு எவ்வளவு?

(ஆ) மேற்கண்ட கிராமத்தில் சர்வே எண். 610-1பி, 2பி, 3-பி ஆகிய நிலங்கள் சட்ட விரோதமாக ஒரு தனி யாருக்கு வழங்கப்பட்டுள்ளது உண்மையா?

(இ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : துணைத் தலைவர் அவர்களே,

(அ) செங்கை—அண்ணா மாவட்டம், அம்பத்தூர் நகரி யத்தைச் சேர்ந்த ஒரகடம் கிராமத்தில் நில உச்ச வரம்புச் சட்டத்தின் கீழ் அரசு எடுத்துக்கொண்ட நிலத்தின் பரப்பளவு 12,076 ச.மீ. ஆகும்.

(ஆ) மற்றும் (இ) : அம்பத்தூர் கிராமத்தில் சர்வே எண். 610-1பி, 2பி, 3பி ஆகியவற்றில் முறையே 4850 ச.மீ., 2304 ச.மீ. மற்றும் 2046 ச.மீ. உள்ள நிலங்கள் பஃருளி பசும்பொன் அருள் ஆசினி கல்வி அறக்கட்டளை என்ற நிறுவனத்திற்கு நடைமுறையி லுள்ள விதிகளின் அடிப்படையில் ஒதுக்கீடு செய்து ஆணையிடப்பட்டுள்ளது.

திரு. எஸ். எஸ். தென்னரசு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்பத்தூரில் இப்போது நிலத் தின் விலை மதிப்பு மிக அதிகமானது. அந்த விலை மதிப்பு சரியாகக் கணக்கிடப்படாமல், அங்கே மருத்துவமனை வசதி இல்லாத ஒரு ஊரில், பள்ளிக்கூட வசதி அதிகம் இல்லாத ஒரு ஊரில், ஒரு தனியாருக்குக் குறைந்த விலையில், இடையிலே ஒரு அரசாங்கம் வழங்கியிருக்கின்றது. அதை மறுபரிசீலனை செய்து திரும்பப் பெற வேண்டும் என்று ஏற்கெனவே நான் அமைச்சரிடத்திலே மனுக் கொடுத்திருக்கின்றேன். மாவட்ட ஆட்சித் தலைவருக்கும், அப்படி வழங்கியது சட்ட விரோதம் என்று கடிதம் எழுதியிருக்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் தனிக்கவனம் செலுத்தி, அதற்குரிய நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு உறுப்பினர்கள் அமைச்சரிடம் மனுக்களை வழங்குவதும், தருவதும், அமைச்சர்கள் அந்த மனுக்களை வாங்கி ஆராய் வதும் நடைமுறை நிலைகளில் ஒன்று. இங்கே தென்னரசு அவர்கள் கேட்ட கேள்வி, யாரோ ஒரு தனியாருக்காக அதுகொடுக் கப்பட்டு விட்டதைப் போன்ற உணர்வு தோன்றப் பேசினார்கள். அந்த நிலங்களை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்று கேட்டு பஃருளி பசும்பொன் அருள் ஆசினி அறக்கட்டளை என்ற நிறுவனம் மனுச் செய்து கொண்டிருந்தது. 14—10—1987 அன்று நடைபெற்ற ஒதுக்கீட்டுக் குழுக் கூட்டத்தில் அந்த மனுதாரர் தவிர வேறு வேண்டுகோள் எதுவும் வராததால், அந்த நிறுவனத்திற்கு மேற்படி நிலங்களை, நிலக் கிரயத்தை வசூல் செய்து கொண்டு (ஆன் கலெக்ஷன் ஆஃப் லேண்ட் காஸ்ட்) ஒதுக்கீடு செய்யலாம் என்று பரிந்துரை செய்யப்பட்டது. அரசாணை எண். 505, வருவாய்த்துறை, நாள் 21—3—1984-ல் கண்டபடி, இது எட்டாவது முன்னுரிமையைப் பெறுகிறது.

திரு. ரெ. பிச்சைமுத்து : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலுள்ள நில உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் அரசு எடுத்த நிலங்கள் எவ்வளவு? தமிழ்நாட்டிலுள்ள எத்தனை நபர்கள் இதனால் பயனடைந்து இருக்கிறார்கள் என் பதை அறிய விரும்புகிறேன்.





மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : இதுவரை பொருளாதார நிலையில் நலிவுற்ற பிரிவினரின் மேம்பாட்டை முதன்மையாகக் கொண்டு, பொது மக்களுக்கு வீட்டு வசதி அளிக் கும் வகையில் வீடில்லாதவர்களுக்கு நகர்ப்புறங்களிலும், கிராமப் புறங்களிலும் வீட்டுமனைப்பட்டா வழங்கப்பட்டிருக்கின்றது. புள்ளி விவரத்தோடு தெரிவிக்க விரும்புகிறேன் தமிழகத்தில் 1977-78 முதல் 1988-89 வரை பட்டாக்கள் வழங்கப்பட்ட விவரத்தை நான் தர விரும்புகிறேன்.

1977-78-இல் ஆதிதிராவிடருக்கு 18,565; பழங்குடியின ருக்கு 5,490; மற்றையவருக்கு 29,168; மொத்தம் 55,223;

1978-79-இல் ஆதி திராவிடருக்கு 5,218; பழங்குடியின ருக்கு 1,745: மற்றவர்களுக்கு 12,688; ஆக மொத்தம் 19,651;

1980-81 ஆம் ஆண்டில் ஆதிதிராவிடர்க்ள் 13,091, பேர், பழங்குடியினர் 489 பேர், மற்றவர்கள் 46,166 பேர் ஆக மொத்தம் 59,746 பேர். 1981-82 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 30,182 பேர், பழங்குடியினர் 1,454 பேர், மற்றவர்கள் 62,624 பேர் ஆக மொத்தம் 94,260 பேர், 1982-83 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 55,760 பேர், பழங்குடியினர் 1,933 பேர், மற்றவர்கள் 92,049 பேர், ஆக மொத்தம் 1,49,742 பேர். 1983-84 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 1,36,008 பேர், பழங்குடியினர் 4,217 பேர், மற்றவர்கள் 1,81,023 பேர் ஆக மொத்தம் 2,16,348 பேர், 1984-85 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்க்ள் 94,151 பேர், பழங்குடியினர் 4,818 பேர், மற்றவர்கள் 1,13,971 பேர் ஆக மொத்தம் 2,12,940 பேர், 1985-86 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 83,414 பேர், பழங்குடியினர் 4,032 பேர் மற்றவர்கள் 91,954 பேர் ஆக மொத்தம் 1,79,400 பேர், 1986-87 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 89,341 பேர், பழங்குடியினர் 1,770 பேர் மற்றவர்கள் 1,43,228 பேர் ஆக மொத்தம் 2,34,339 பேர். 1987-88 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 81,281 பேர், பழங்குடியினர் 2,087 பேர் மற்றவர்கள் 1,33,744 பேர் ஆக மொத்தம் 2,17;412 பேர்.

9-30 மணி

திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் : Point of order Sir.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி நேரத் தில் " Point of order " எழாது. உட்காருங்கள்

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1988-89 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்கள் 94,596 பேர், பழங்குடியினர்

4,224 பேர், மற்றவர்கள் 1,77,306 பேர் ஆக மொத்தம் 2,76,126 பேர். 1989-90 ஆம் ஆண்டில் வீடு அற்ற ஏழை மக்களுக்கு 3 லட்சம் வீட்டு மனைப பட்டாக்கள் வழங்க் குறியீடு நிர்ணயம் செய்யப்பட்டிருக்கிறது.

திரு. மா. மணிமாறன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, உச்ச வரம்பு நிலத்தை எடுத்து வினி யோகம் செய்கின்றபோது முன்னாள் இருந்த கழக அரசு என்ன கொள்கை வகுத்து இருந்ததோ அதை இன்றைக்கு பின்பற்ற முடியாத அளவுக்கு 1975-76 ஆம் ஆண்டில் கவர்னர் ஆட்சி நடந்து கொண்டிருக்கும் போது உச்ச நீதிமன்றத்தால் கொடுக்கப் பட்ட உள் குத்தகை செல்லுபடியாகும் என்ற தீர்ப்பின் காரண மாக உச்ச வரம்பு எடுப்பதிலே போர்சரிகள் உருவாக்கப்பட்டு நியாயமாக அன்றைக்கு கழக அரசு யார் யாருக்கு கொடுக்க வேண்டும் என்று நிர்ணயம் செய்தார்களோ அவர்களுக்கு கிடைக்க முடியாத அளவுக்கு பினாமிகள் உருவாக்கப்பட்டு உச்ச வரம்பில் கிடைக்கின்ற மிச்ச நிலங்களை எடுத்துச் செல்கிறார்கள். எனவே அப்போது கழக அரசு ஏற்படுத்திய அந்தக் கொள்கை முறையில் கிடைப்பதற்கு அரசு ஒரு சட்ட திருத்தமோ, அல்லது அரசு ஆணையோ பிறப்பித்தால் தான் அந்த கொள்கை வெற்றி பெற முடியும். எனவே அவற்றை அரசு பரிசீலிக்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இது பற்றி அரசு பரிசீலிக்கும்.

தலைவர் அவர்களே, மன்னிக்கவேண்டும், ஒரு தகவலைத் தருவதற்கு நான் மறந்துவிட்டேன். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் நமது முதல்வர் அவர்கள் ஏப்ரலிலே இருந்து மார்ச்சு முடிய 3 இலட்சம் இலவச வீட்டுமனைப் பட் டாக்கள் வழங்கப்படும் என்று அறிவித்தார்கள். இதுவரை எனக்குக் கிடைத்த தகவலின்படி 2,55,982 வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டுள்ளன. மார்ச் திங்களுக்குள் 3 இலட்சத்தை அதுதாண்டும் என்ற உறுதியை உங்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். [மேசையைத் தட்டும் ஒலி].

**வீட்டு வசதி வாரிய கிரயப் பத்திரம்**

*1757 **திரு. சா. கணேசன் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) சென்னையில் வீட்டு வசதி வாரிய திட்டத்தில் அண்ணாநகர், கே. கே. நகர், தென் சென்னை முதலிய இடங்களில் இதுவரை ஒதுக்கப்பட்டுள்ள மனைகளுக்கு கிரயப் பத்திரம் எத்தனை நாட்களில் வழங்கப் படுகிறது?



(ஆ) தவணைக்காலம் முடிந்த நிலையில் உள்ளவை எத்தனை?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் நடைமுறையி லுள்ள ஒதுக்கீடு விதிமுறைகளுக்கு ஏற்ப மனு சமர்ப் பித்த ஒரு வார காலத்திற்குள் வாரியத்தின் விதிப்படி கிரயப்பத்திரம் வழங்கப்படும்.

(ஆ) நிலுவையிலுள்ளவை 4,968 (நான்காயிரத்து தொள்ளா யிரத்து அறுபத்தி எட்டு மட்டும்).

9-35 மணி

**திரு. சா. கணேசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் கருணாநிதி நகரில் சிலருக்கு மனை ஒதுக்கப்பட்டு பல ஆண்டுகளாகியும் இன்னும் கிரயப் பத்திரம் வழங்கப்படவில்லை என்பது அரசுக்குத் தெரியுமா?

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு மனை அல்லது வீடு ஒதுக்கப்பட்டவர்கள், அதற்குண்டான முழுத் தொகை, வட்டி, தண்ட வட்டி, ஆகியவைகளை, முழுமையாக, காலக்கெடு தவறாமல் கட்டியிருக்க வேண்டும். அத்தோடு, ஒப்புதலுக் குண்டான வரைபடம், மனை ஒதுக்கீடுதாரர்களுக்கு ஒதுக்கீடு செய்த பின்னர் அந்த மனையில் விதிமுறைகளின்படி வீடுகள் கட்டியிருக்க வேண்டும். மாநகராட்சியில் வீட்டு வரிக்காக கட்டப் பட்ட ரசீதுகள் ஒப்படைக்கப்பட வேண்டும். இப்படிப்பட்ட நிபந்தனைகளையெல்லாம் பூர்த்தி செய்வார்களேயானால மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட பகுதியிலேயும அத்தகைய உரிமங்கள் வழங்கபபடாமல் இருந்தால, அவை வழங்குவதற்கு நடவடிக்கை எதிர்காலத்தில் மேற்கொள்ளப படும்.

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை, கலைஞர் கருணாநிதி நகரில் வீட்டு வசதி வாரியத்தினுடைய மனைகள் பொது விநியோகத்திற்காக, பப்ளிக் பர்ப்பசுக்கு என்று ஒதுக்கப்பட் டவை கடந்த கால ஆட்சியில் தனியாருக்கு விற்கப்பட்டன. அவை சமூகக் கூடங்கள், பார்க்குகள் போன்றவைகள் கட்டு வதற்காக ஒதுக்கப்பட்ட இடங்கள், ஆகவே, அவற்றையெல் லாம் ரத்து செய்து மீண்டும் பொது உபயோகத்திற்காக, சமூகக் கூடங்கள் அல்லது பார்க்குகள் போன்றவைகளை அமைப்பதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்பு கிறேன்.

[1990, சனவரி 27

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் கருணாநிதி நகரிலே மட்டுமல்லாமல், சென்னை மாநகரத்தினுடைய பல்வேறு பகுதிகளில் இப்படி நடைபெற்ற முறைகேடுகள் பற்றிய விளக்க மான ஒரு பதிலை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர் கள் இங்கே அறிவித்ததற்குப் பிறகு, அறிவிப்புக்கு ஏற்ப தொடர் நடவடிக்கை வீட்டு வசதி வாரியத்தினால் எடுக்கப்பட்டு, யார் யாருக்கு முறைகேடாக இப்படிப்பட்ட வீட்டுமனைகள் வழங்கப்பட்டதோ அவர்களின்மீது உரிய நடவடிக்கைகளை வீட்டு வசதி வாரியம் தற்போது எடுத்துக்கொண்டிருக்கிறது.

**திரு. சி. கோவிந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டுவசதி வாரியத்தின் மூலமாக கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற வீடுகளுக்கு அரசு ஏற்கெனவே தீர்மானித்து இருக்கிற அந்தத் தொகையிலேயிருந்து, பின்னால் அதனுடைய மதிப்பீடு குறைக்கப்பட்டு, 5 ஆயிரம், 6 ஆயிரம் என்று குறைவாக மதிப்பீடு செய்து அரசு தெரிவித்த பின்னால் அந்தப் பணத்தை, மொத்தமாக கட்டியவர்களும் அல்லது கட்டிமுடிக்கப்பட்டதற்குப் பின்னாலும்கூட, அந்தத் தொகை திருப்பித் தரப்படாமல், தொடர்ந்து பல வருடங்களாக இருப்பதாக பல புகார்கள் இருக்கின்றன. குறிப்பாக, திருப்பூரிலேகூட அப்படி இருக்கிறது. ஆகவே, இதுபோன்று காலதாமதம் ஆவதைத் தடுத்து, அந்தப் பணம் திருப்பித் தரப்பட உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குறிப்பான புகார்களை மிகுமாண்பு உறுப்பினர் அவர்கள் தெரிவிப்பார்களேயானால், நிச்சயமாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலை வர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்தின் மூலம் சென்னை நகரிலே புதிதாக குடியிருப்புகள் கட்டுகின்ற திட்டம் அரசின் பரிசீலனையில் இருக்கிறதா? ஆம் எனில், அதன் விவரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வீட்டு வசதி வாரியத்திற்குத் தேவையான இடங்கள் கையகப்படுத்தக்கூடிய நடவடிக்கை களுக்குத் தடையாக நீதி மன்றத்திலே வழக்குகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருந்தாலும், ஏற்கெனவே வீட்டு வசதி வாரியத்தினுடைய பொறுப்பிலே இருக்கக்கூடிய நிலங் களில் எதிர்காலத்தில் கட்டுவதற்கு பல்வேறு திட்டங்கள் இருக்கின்றன. அவைகளைப் பற்றிய முழு விவரமும், தனிக் கேள்வி போட்டால் தரலாம்.



[1990, சனவரி 27]

9-40 மணி.

**திரு. என். கணபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.உ.ரா.வரதராசன் அவர்களின் கேள்விக்குப் பதில் சொன்ன அமைச்சர் அவர்கள், பொது விநியோகத்திற்கான மனை ஒதுக்கீடுகளை ரத்து செய்திருப்பதாகச் சொன்னார்கள். அப்படித் தவறான முறையில் மனைகளை ஒதுக்கீடு செய்த அதிகாரிகள் மீதும் வாரியங்கள் மீதும் அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா? அதன் விபரம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** முதல் கட்டமாக தவ றான ஒதுக்கீடுகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதனுடைய தொடர் நடவடிக்கைகளும் தொடர்ந்து இருக்கும்.

**திரு. அ. மலர்மன்னன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை வீட்டு வசதி வாரியத்தின் திட்டத்தின் கீழ் கடந்த காலத்தில் பினாமியாகவும் தவறாகவும் பல்வேறு செயல்களில் ஒருவரே வீட்டுவசதி வாரியத்தின் வீடுகளை வாங்கியதாக இந்த மன்றத்திலேயே பேசப்பட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென்று கடந்த காலத்தில் நாம் பேசியிருக்கிறோம். அப்படிப்பட்ட குற்றச் சாட்டுகள் ஏதாவது இந்த அரசுக்கு இப்போது வந்திருக்கிறதா? அப்படி அனுப்பப்படுமானால் அதன் மேல் நடவடிக்கை எடுக்கப் படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அத்தகைய குற்றச்சாட்டுகள் அனைத் தையும் அரசாங்கமே பரிசீலித்து, கண்டுபிடித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கமாக இதே சபையில் பேசியிருக்கி றார்கள். அந்தப் பேச்சின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை களை இப்போது வீட்டு வசதி வாரியம் மேற்கொண்டு, யார் யாருக்கு தவறான முறையிலும் ஒழுங்கீனமான முறையிலும் மனை கள், வீடுகள் ஒதுக்கப்பட்டனவோ, அவைகளை ரத்து செய்து சம்பந்தப்பட்டவர்களுக்கு அரசு உத்தரவு அனுப்பப்பட்டுள்ளது.

## திருப்பத்தூர் மலையாண்டியூர் பேருந்து

* 1837—**திரு. ப. சுந்தரம் :**

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

> வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், ஜவ்வாது மலையிலுள்ள மலையாண்டியூர் என்ற கிராமத்திற்கு திருப்பத்தூரிலிருந்து புதூர் நாடு நெல்லிவாசல் நாடு வழியாக ஒரு புதிய பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இல்லை.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்களே, இந்தக் கேள்வி, ஜவ்வாது மலைப் பகுதிகளில் பேருந்து விடுவது பற்றியது. திருப்பத்தூரிலிருந்து புதூர்நாடு, நெல்லிவாசல்நாடு வழியாக மலையாண்டியூர் செல்லவேண்டு மானால் 30 கிலோ மீட்டர் தூரம் போகவேண்டும். யாராவது அவசரமாக மருத்துவமனைக்குச் செல்ல வேண்டுமானால் கூட, திருப்பத்தூர் தாலுக்கா மருத்துவமனைக்கு அந்த 30 கிலோ மீட்டர் தாண்டித்தான் வரவேண்டும். அவர்கள் 30 கி.மீ. நடந்துதான் வரவேண்டும். ஆகவே, உடனடியாக அந்தப் பகுதிக்குப் பேருந்து விட அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூரிலிருந்து மலையாண்டியூருக்கு, புதூர் நாடு, நெல்லிவாசல் நாடு வழியாகச் செல்ல பாதையின் மொத்த தூரம் 49.5 கிலோ மீட்டர். அந்தப் பாதையில் ஏற்கெனவே புதூர் நாடு வரையுள்ள 30 கிலோ மீட்டருக்கு பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் பேருந்துகளை விட்டிருக்கிறது. மீதி இருக்கக்கூடிய 19.5 கிலோ மீட்டர் நீளம் உள்ள சாலை மலைச்சாலையாகவும் மண் சாலையாகவும் உள்ளது. பஸ் போக்குவரத்துக்கு அந்தப் பாதை ஏற்றதாக இல்லை. அதோடு அந்தப் பாதையில் நான்கு குறுகிய வளைவுகள் இருப்பதால் பஸ்களை திருப்ப இயலாது. ஆகவே மீதியுள்ள தூரத்திற்கு பேருந்துகளை விட இயலவில்லை. அந்தப் பாதை அபிவிருத்தி செய்யப்பட்டு போக்குவரத்துக்கேற்ற வகையில் மாற்றப்பட்டால் நிச்சயமாக அந்தக் கிராமங்களை இணைக்க பஸ் வசதி செய்யப்படும்.

திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு பேரவைத்துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே அந்தப் பகுதியில் தனியார் பேருந்து விடப்பட்டிருக்கிறது. ஆனால் அது வாரத்திற்கு ஒருமுறைதான் அந்த வழியில் போகிறது. வனத்துறை அமைச்சர் அவர்கள் அங்கே வந்தபோது, உடனடியாக சாலை அமைத்துத் தருவதாகக் குறிப்பிட்டிருந்தார்கள். ஆகவே அந்தப் பகுதி மக்களுடைய கஷ்டங்களைப் போக்க அந்தப் பகுதியில் பணியாற்றுபவர்களின் கஷ்டத்தைப் போக்க பேருந்துகளை விடவேண்டும். பள்ளி ஆசிரியர்கள் கூட பேருந்து வசதியில்லாததால், மாதம் ஒருமுறைதான் பள்ளிக்கே வருகிறார்கள். இவையெல்லாம் மாற்றியமைக்கும் வகையில் வனம் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும், போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுத்து, பேருந்துகளை விட நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.





9-45 மணி

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்து சமய அறக்கட்டளைத்துறை அமைச்சர் அவர்கள் அருள் பாலிப்பாரேயானால் பேருந்து விடுவதற்கு போக்குவரத்துத்துறை தயாராக இருக்கிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பர்கூர் மலையிலிருந்து அந்தியூர் வழியாக பவானி தாலூக்காவிற்குச் செல்ல வேண்டும் என்றால் குறைந்த பட்சம் 80 கிலோ மீட்டர் தூரம் செல்ல வேண்டி இருக்கிறது. காலை 9-30 மணிக்குத்தான் அங்கே இருந்து பேருந்து வசதி இருக்கிறது. காலை நேரத்தில் ஏறத்தாழ 6 மணி அளவில் பர்கூரிலிருந்து அந்தியூருக்குப் பேருந்து வசதி வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு பல தடவை விண்ணப்பம் அனுப்பி இருக்கிறோம். அவை இது காறும் கவனிக்கப்படாமல் இருக்கிறது. அங்கே செல்ல வேண்டிய மக்கள் விரைவாகச் செல்வதற்கும், குறிப்பிட்ட காலத்தில் தாலுக்கா அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியவர்கள் சென்று பணிகளை கவனிப்பதற்கும் ஏதுவாக உடனடியாக பேருந்து வசதி செய்து கொடுப்பார்களா என்று நான் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பர்கூர் மலைப்பகுதிக்கு பேருந்து வசதி செய்யவேண்டியதுபற்றிக் கேட்டிருக்கிறார்கள். அதுபற்றிய விவரங்கள் தற்போது என்னிடத்தில் இல்லை. இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அப்துல் லத்தீப் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, திருப்பத்தூர், சிங்காரப்பட்டி, மலையாண்டிப்பட்டி வழியாக புதூர் நாட்டுக்கு தற்போது பஸ் ஓடுவதாக அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். மேற்கொண்டு அந்த வழிதடத்தை நீட்டித்தால் வசந்தபுரம் காவனூர் வழியாக இரண்டு ஊராட்சி ஒன்றியங்களின் தலைநகருக்கு வண்டிகள் செல்ல ஏதுவாகும். ஜம்னாமத்தூர், ஆலங்காயம், ஆகிய இரண்டும் சம தூரத்தில் உள்ளன. மாவட்டத் தலைநகரங்களான திருப்பத்தூர் போன்ற பகுதிகளை இணைக்கக்கூடிய வாய்ப்புகள் எல்லாம் இருக்கின்றன. அங்கே வியாபாரம் பெருகவும் வாய்ப்புகள் ஏற்படும். இது மிகவும் இன்றியமையாதது. எனவே அதை மறு பரிசீலனை செய்து அந்த வழித் தடத்தை நீட்டிப்பதற்கு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் ;** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வழித்தடத்தை நீட்டிப்பதில் எந்தப் பிரச்சினையும் இல்லை. ஆனால் போக்குவரத்திற்குரிய குறிப் பாக பஸ் போக்குவரத்துக்குரிய பாதை வசதி சரியாக இல்லாத காரணத்தால் நீடிக்க முடியாத நிலைமை இருக்கிறது. இருந்தாலும் உறுப்பினர் அவர்களுடைய கருத்துக்களை ஏற்று அந்தப் பாதையைச் செப்பனிடுவதற்கும், எதிர்காலத்தில் பேருந்து வசதியை ஏற்படுத்துவதற்கும் சம்பந்தப்பட்ட துறையோடு தொடர்பு கொண்டு நடவடிக்கை மேற்கொள்ளப் படும்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வினா எண். 107-க்கு பதில் சொல்வதற்கு முன்பாக திருப்பத்தூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. சுந்தரம் அவர்கள் எழுப்பிய வினாவுக்கு நம்முடைய போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது நானும் அதற்கான பதிலைச் சொல்லவேண்டுமென்று இங்கே அறிவித்தார்கள். நான் அந்தப் பகுதிக்குச் சென்றி ருக்கிறேன். ஜவ்வாது மலைப்பகுதிக்குச் சென்று இருக்கிறேன். பு தூர் நாட்டுக்கு நம்முடைய சுந்தரம் அவர்களோடு நான் சென்று இருக்கிறேன். அவர்கள் சாலை வசதி பற்றிச் சொன்னார்கள். வனத்துறையின் மூலமாக அந்தச் சாலையை அங்கே போடுவதற்கு அனுமதி வேண்டுமானால் அதை உடனடி யாகப் பெற்றுத்தர முடியும் என்று நான் சொல்லியிருக்கிறேன். நிச்சயமாக அது பெற்றுத் தரப்படும். இது தவிர மேற்குத் தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழே சில இடங்களில் வனத்துறையே சாலைகள் போடுகின்றன. அப்படிப் பட்ட சாலைகளாக இருந்தால் அதை நிச்சயமாக வனத்துறை செய்து தரும், என்று இந்த நேரத்தில் நான் சொல்லிக்கொள்கி றேன். இப்போது அடுத்த கேள்விக்கு வருகிறேன்.

## குமரி மாவட்டத்தில் சுற்றுலா மையங்கள்.

*414—**திரு. செ. நூர்முகமது :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) குமரி மாவட்டத்தில் சுற்றுலா மையங்கள் எத்தனை?

(ஆ) திற்பரப்பு நீர்வீழ்ச்சிப் பகுதியை விரிவுபடுத்தி சுற்றுலாப் பயணிகளைப் கவரும் வண்ணம் மேம் படுத்தும் திட்டம் ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?





**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்நாட்டுப் பயணிகள் மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் கன்னியாகுமரி சிறந்த சுற்றுலா மையமாக அமைந் துள்ளது. இது தவிர கன்னியாகுமரி மாவட்டத்தில் பேச்சிப் பாறை அணைப் பூங்காவும், திற்பரப்பு அருவிப் பகுதியும் மாவட்ட உலாத்தலங்களாக அறிவிக்கப்பட்டுள்ளன.

(ஆ) திற்பரப்பு அருவிப் பகுதியை மாவட்ட உலாத் தலமாக மேம்பாடு செய்வதற்கு ரூபாய் இரண்டு இலட்சம் மாநில அரசு அளித்துள்ளது. மேற்படி பகுதியில் உடை மாற்றும் அறை, ஒரு உணவகம் முதலிய அடிப்படை வசதிகளைச் செய்வதற்காக நாகர்கோவில் பொதுப்பணித் துறையிடம்இந்தப் பணி மாவட்ட ஆட்சித் தலைவர் மூலமாக ஒப்படைக்கப்பட் டுள்ளது.

9-50 மணி

**திரு. செ. நூர்முகமது :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது கன்னியாகுமரி மாவட்டம் சுற்றுலா மையமாக இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி முக்கடல் சங்கமிக்கின்ற ஒரு இடம். அங்கே உதய சூரிய னுடைய காட்சியையும், சூரியன் மறைகின்ற காட்சியையும் பார்ப்பதற்கு மக்கள் வருகிறார்கள். காலையில் சூரியன் உதிக்கின்ற நேரத்தில் தங்க நிற மேனியுடனும் மாலையில் சூரியன் மறைகின்றபோது தங்க நிற மேனியுடனும் கவர்ச்சி யோடு காட்சியளிக்கின்ற சூரியனைக் காணுவதற்கு பல்லாயிரக் கணக்கான பயணிகள் வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்கள் தங்குவதற்கு, உணவு உண்பதற்கு, அவர்கள் காட்சிகளைப் பார்ப்பதற்கான வசதிகளை செய்வதற்கு அங்கே உயர்தர, நடுத்தர உணவகங்கள், தங்கும் இடங்கள் மற்றும் வியூபாயிண்ட் போன்றவைகள் அமைப்பதற்கு அரசிடம் ஏதேனும் திட்டம் இருக்கிறதா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, ஏற்கெனவே தமிழ்நாடு சுற்றுலாக் கழகத்தின் மூலமாக அங்கே ஒரு ஓட்டல் தமிழ்நாடு என்ற விடுதி நடைபெற்று வருகிறது. இது தவிர சமீபத்திலே முதலமைச்சர் அவர்கள் அங்கே ஒரு அரசு விழாவிற்காக வந்தபோது மேலும் 8 குடில்கள் கொண்ட விடுதியை, ஏறத்தாழ 14 லட்சம் ரூபாய் செலவிலே அமைக்கப்பட்ட விடுதியைத் தொடங்கி வைத்தார் கள். அது இப்போதும் இயங்கத் தொடங்கி இருக்கிறது. அது தவிர உணவகம் அமைப்பதற்கு 6 லட்சம் ரூபாய்க்கு அனுமதிதரப் பட்டிருக்கிறது. அதுபோல அங்கே கடற்கரை சுற்றுலாப் பயணிகளுக்கு படித்துறை அமைப்பதற்கு ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய்க்கு சுற்றுலாத் துறை அனுமதி தந்திருக்கிறது.

[1990 சனவரி 27

**திரு. செ. நூர்முகமது:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மாவட்ட சுற்றுலா மையங்களில் ஒன்றாகக் குறிப்பிட்ட பேச்சிப்பாறையில் படகுப் போக்குவரத்து அமைப்பதற்கும், அங்கே தீவு போன்ற பகுதிகளிலே சுற்றுலா பயணிகள் அமர்ந்து இளைப்பாறுவதற்கும் வாய்ப்புகள் இருக்கின்றன. அந்த வாய்ப்புக்களைப் பயன் படுத்துகின்ற வகையில் அரசு திட்டம் ஏதும் வைத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன். அது போல, என்னுடைய பத்மநாபபுரத்தில் ஒரு பழங்கால கோட்டை, பிரசித்தி பெற்ற அரண்மனை இருக்கிறது. அந்தப் பகுதியிலே வருகின்ற சுற்றுலா பயணிகளைக் கவர்கின்ற வகையிலே அவர்கள் இளைப் பாறுகின்ற வகையிலே அங்கே வசதிகள் செய்து தரப்படுவதற் கான திட்டம் ஏதேனும் இருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேச்சிப்பாறை அணை, அந்த பூங்கா பொதுப்பணித் துறையினுடைய ஆளுகையில்இருந்து கொண்டிருக்கின்றது. அங்கே பொதுப்பணித் துறை மூலமாக மேலும் சில வசதிகளை செய்து தர நாங்கள் அந்த துறையைக் கேட்டிருக்கிறோம். படகு விடுகின்ற திட்டம் இப்போது இல்லை. அதுபோல பத்மநாபபுரம் அரண்மனை பற்றிச் சொன்னார்கள். அது சென்ட்ரல் ஆர்கியாலாஜிகல் டிப்பார்ட் மெண்ட் ஆளுகையிலே இருந்துகொண்டிருக்கிறது. இப்போதும் அங்கே சுற்றுலா பயணிகள், வெளிநாட்டுப் பயணிகள், உள் நாட்டுப் பயணிகள் சென்று பார்த்து வருகிறார்கள். அது பக்கத்திலே ஒரு வே. சைட் அமெனிட்டீஸ்' என்ற அந்தத் திட்டத் தின் கீழே ஒரு கட்டடம் கட்டலாம் என்று ஒரு எண்ணம் இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, அதன்கோட்டு ஆசானிலிருந்து அவ்வையார் வரை பிறந்த அந்த மாவட்டத்தில் வெளிநாட்டுப் பயணிகளை கவர்கின்ற வகையிலே இந்த சுற்றுலா பயண மையங்கள் அமைக்கப்பட்டி ருக்கின்றன என்று நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். போர்த்துக்கீசிய நாட்டிலிருந்து திருவிதாங்கூர் சமஸ்தானத்தின் மீது படையெடுத்து வந்த டிலானாய் என்று சொல்கின்ற தளபதியை குளச்சல் கப்பல் படை சண்டை யில் அனந்தபத்மநாபன் அவர்கள் தலைமையிலே போன நம் படை வெற்றி கண்டது. அந்த டிலானாய் கைது செய்யப் பட்டதோடல்லாமல், அவருடைய திறமைக்காக, பீரங்கி திறமைக்காக அவரை திருவிதாங்கூர் சமஸ்தானத்தில் தளபதி யாகவே ஆக்கினார். அவர் மறைந்து புதைக்கப்பட்டிருக்கிற இடம் புலியூர்குறிச்சியில் 'டிலானாய்க் கோட்டை' என்று இருக் கிறது. போர்த்துக்கீசிய நாட்டுப் பயணிகள் இங்கே வருகின்ற



1990 சனவரி, 27]

அளவுக்குக்கூட அது விளம்பரம் செய்யப்படலாம், ஏனென்றால் அது மிகவும் கவர்ச்சிகரமான ஒரு இடமாகவும், ஒரு வரலாற்று பின்னணியாகவும் இருக்கிறது. அந்த டிலானாய் கோட்டை யும் இந்த சுற்றுலா மையத்தில் சேர்க்கப்படுமா?

9-55 மணி

**மாண்புமிகு திரு. கே . பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இங்கே நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் திரு. அனந்தன் அவர்கள் குறிப்பிட்டது போல பல் வேறு இடங்கள் இருக்கின்றன. சுசீந்திரம், திருவட்டாறு, வட்டக்கோட்டை, பெருஞ்சாணி, பத்மநாபபுரம் அணை, உதயகிரி கோட்டை, அப்பர் கோதையாறு, உலக்கை அருவி, முட்டம் கடற்கரை தீரம், தேங்காப்பட்டினம் இன்னும இது போன்ற பல்வேறு சுற்றுலாப் பயணிகளைக் கவரக்கூடியஇடங்கள் இருக்கின்றன. இங்கே உறுப்பினர் குறிப்பிட்ட இடத்தையும் நாங்கள் ஆய்வு செய்து அதை மேம்படுத்த முயற்சி செய் வோம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவாகளே, கன்னியாகுமரிக்குப் பக்கத்திலே இருக்கிற வட்டக் கோட்டையை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர் கள் சென்று பார்த்துவிட்டு அதனுடைய மகத்துவத்தைப் புகழ்ந்து சொல்லியிருக்கிறார்கள். அதனையடுத்து, மாண்புமிகு இந்து சமய அறநிலைய மற்றும் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களும் இங்கே சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். வட்டக்கோட்டை யினுடைய மகத்துவம் என்ன? அந்த அடிப்படையில் வட்டக் கோட்டையை சுற்றுலா மையமாக ஏற்படுத்த அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி :** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கடற்கரைப் பகுதியில் இருக்கிற அந்த வட்டக்கோட்டை பகுதியை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் சென்று பார்வையிட்டிருக்கிறார்கள். நானும் ஏனைய 4 அமைச்சர்களும்கூட ஒரு முறை அங்கே சென்று பார்த்தோம். அந்த இடத்தினுடைய மகிமை என்னவென்றால் அந்தப் பகுதி கடற்கரை மிகவும் அமைதியாக இருக்கிறது. பயணிகள் நன்றாக கடலில் குளித்து மகிழ்வதற்கு ஏற்ற இடமாக அது இருக்கிறது. இன்னும் அங்கே நல்ல தென்னை மரச்சோலை இருக்கிறது. 100 ஏக்கர் பரப்பிலே அங்கே குடில்களை திருவனந்தபுரத்தில் அமைக்கப்பட்டிருப்பதுபோல அமைத்தால் வெளிநாடுகளிலிருந்து வருகிற சுற்றுலாப் பயணிகள் அங்கே தங்கி செல்ல வாய்ப்பாக இருக்கும. இது சம்பந்தமாக ஜப்பான் நாட்டிலுள்ள அரசு துறையினுடைய நிறுவனம் ஒன்று அங்கே 100 ஏக்கர் பரப்பிலே அப்படிப்பட்ட குடில்களை அமைக்கின்ற திட்டம் ஒன்றை மத்திய அரசு மூலமாக தந்திருக்கிறார்கள். இது சம்பந்தமாக அவர்களோடு தொடர்பு கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1990 சனவரி, 27]

## தேசிய பூங்கா அல்லது புலிகள் சரணாலயம் அமைத்தல்

*830 திரு. ஆச்சியூர் எம். மணி:

திரு. கே. ரவி அருணன் :

திரு. சு. குருநாதன் :

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுககு விடையளிப்பாரா :

மேற்குத் தொடர்ச்சி மலையில் களக்காடு, முண்டந்துறை சரணாலயங்களை இணைத்து தேசீய பூங்கா அல்லது புலிகள் சரணாலயம் அமைக்க திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம். நெல்லை-கட்டபொம்மன் மாவட்டத்தில் களக்காடு— முண்டந்துறை சரணாலயங்களை இணைத்து, ப்ராஜெக்ட் டைகர், புலிகள் காப்பகம் அமைக்கப்பட்டுள்ளது.

**திரு. ஆச்சியூர் எம். மணி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆமெனில் இதனால் பச்சையாறு திட்டம் பாதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சரணாலயத்திற்கு ஏறக் குறைய 10 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவுள்ள வனத் துறை பகுதி இருக்கிறது. பச்சையாறு திட்டத்திற்காக ஏறத்தாழ 100 ஏக்கர் நிலங்கள் தான் வனத்துறையிலிருந்து தர வேண்டி யிருக்கும். அது தண்ணீர் தேங்கியிருக்கக்கூடிய இடம். இதைத் தருவதினால் அந்தப் புலிகள் காப்பகம் எந்தவிதத்திலும் பாதிக்கப் படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே. ரவி அருணன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தேசிய பூங்கா திட்டம் செயல்படுத்தப் படுவதன் மூலம் மாஞ்சோலை மலைப்பகுதியிலுள்ள 5 ஆயிரத் திற்கு மேற்பட்ட தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களும், காரையாறு, சேர்வலாறு, காலனி குடியிருப்பு போன்ற பகுதிகளில் வசிக்கின்ற ஆயிரக்கணக்கான மக்களும் படிப்படி யாக வெளியேற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தோடு இத் திட்டம் நிறைவேற்றப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் அஞ்சு கிறார்கள். அந்தப் பகுதி மக்களிடம் இருக்கிற பயத்தைப் போக்க இந்த அரசு அவர்களுக்கு என்ன உத்தரவாதம் தர இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.



1990 சனவரி, 27]

10-00 மணி

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவையில் அனுமதியோடு கேள்வி நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி :** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதியிலே மேலும் தனியார் வசம் உள்ள எஸ்டேட்களை ஆர்ஜிதம் செய்வது மத்திய அரசின் திட்டம். அந்த சரணாலயம் மத்திய அரசு திட்டம். அங்குள்ள தனியார் தோட்டங்களை ஆர்ஜிதம் செய்வதற்காக மத்திய அரசு ஏற்கெனவே 80 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறது. ஆனால் மலைவாசி மக்களை, அங்கே குடியிருக்கக்கூடிய மக்களை எந்த வகையிலும் பாதிக்கக்கூடிய அளவிலே இந்த அரசு நடந்து கொள்ளாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. அ. லெ. சுப்பிரமணியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, களக்காடு பகுதியில் புலி ஏற்கெனவே நகருக்கு வந்து மலையடிவாரத்தில் உள்ள கால் நடைகளை எல்லாம் அடித்துக் கொன்று கொண்டிருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட புலி சரணாலயம் சற்று ஓரமான இடத்தில் அமைக்கப்பட வேண்டுமென்று அந்த மக்கள் விரும்புகின்றார் கள். அதை அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்பு கின்றேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குரங்குகளையும் புலிகளை யும் யானைகளையும் அதிக அளவிலே பாதுகாக்க வேண்டும் என்பதுதான் மத்திய அரசினுடைய திட்டம். சில சமயங்களில் புலிகளோ, யானைகளோ, ஊருக்குள் வந்து சில நாசங்களை ஏற்படுத்துகின்றன. இதுதான் நிலை, சட்டத்தில் அல்லது நோக்கத்தில் மாற்றம் ஏற்பட்டாலொழிய இதற்குப் பரிகாரம் காண முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**திருமதி ரமணி நல்லதம்பி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையில் புலிகள் சரணா லயம் அமைப்பதற்கு 10 ஆயிரம் ஹெக்டேர் நிலம் தேவைப் படுவதாகக் கூறி இருக்கிறார்கள். அங்கே வர இருக்கின்ற பச்சையாறு அணைத் திட்டத்தின் மூலமாக வாழ்வு இழந்து வேலை இழந்து கருகிய நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கிற விவசாயப் பெருங்குடி மக்கள் 40 ஆண்டுக் காலமாக தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த 100 ஹெக்டேர் நிலத்திற்கு மத்திய அரசிடமிருந்து 'கிளியரன்ஸ்' பெற்று ஆணை கொண்டு வர அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 சனவரி, 27

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் திருமதி ரமணி நல்லதம்பி அவர்கள் பச்சையாறு திட்டத்தை விட கொடுமுடியாறு திட்டத்திலேதான் மேலும் அக்கறை உள்ளவர்கள் என்பது எனக்குத் தெரியும். அந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே மத்திய அரசு அனுமதியைப்பெற்று விட்டோம். ஆகவே விரைவிலே அதை பொதுப் பணித் துறை நிறைவேற்றுவதற்கான பணியை ஏற்றுக்கொள்ளும் என்று கருதுகிறேன். அதேபோல பச்சையாறு திட்டத்திற்கும் மத்திய அரசை அணுகி அனுமதியைப் பெறுவோம் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

**கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை.**

***4196 திரு. எம். முத்தையன் :**

மாண்புமிகு இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

*கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

**மாண்புமிகு திரு. கே.பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

*கல்ராயன் மலையில் சந்தன தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் இல்லை.*

**திரு. எம். முத்தையன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'ஃபர்ஸ்ட்' 'செகன்ட்', 'தேர்டு' என்று சொல்வது போல பெரிய விவசாயி, சின்ன விவசாயி, குறு விவசாயி, மிகக் குறு விவசாயி என்று சொல்கின்ற அளவுக்கு மலையில் இருக்கின்றவர்கள் மிகமிகச் சின்ன விவசாயிகளாக அந்தப் பகுதி மக்கள் இருக்கின்றார்கள். அவர்கள் மிகமிக எளிமையானவர்கள். அவர்கள் நீர்வளம், நிலவளம் இல்லாதவர்கள், ஒரு கவிஞர் சொன்னார், காலுக்கு செருப்பு இல்லை, கால் வயிறு கஞ்சி இல்லை, குடிக்க கஞ்சி இல்லை, குடியிருக்க வீடு இல்லை, அந்தமாதிரி 41 வருடங்கள் ஆகிவிட்ட பின்னரும் இன்னும் அந்தமாதிரியான பக்குவத்தில் தான் அவர்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே அந்த மக்களுக்கு சந்தன மரங்களைப் பயன்படுத்தி ஒரு தொழிற்சாலை உருவாக்க ஏற்பாடு செய்ய வேண்டும். நம்முடைய கருணையான அரசு யார் யாருக்கோ அள்ளி அள்ளிக் கொடுக்கிறது. நம் முடைய தலைவர் என்னுடைய கேள்விக்குக் கொஞ்சம் கருணை காட்டுவாரா என்று அறிய விரும்புகிறேன்.



1990 சனவரி, 27]

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே வட ஆற்காடு மாவட்டத்தில் — இப்போது அம்பேத்கார் மாவட்டம் என்று நினைக்கிறேன்— அந்தப் பகுதியிலே தெற்குப்பட்டு என்ற ஊரிலே ஒரு சந்தனமர ஆலை முந்தைய அரசால் நிறுவப்பட்டு இன்னும் அது ஓடாத நிலையில் இருக்கின்றது. சந்தன மரங்களை ஜவ்வாது மலையில் அடிக்கடி வெட்டிக் கடத்திச் செல்கிறார்கள் என்று எல்லாம் தகவல் வந்து கொண்டிருக்கின்றது. அதைத் தடுத்து நிறுத்துவதற்கு வேண்டிய ஏற்பாடு செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் வனத் துறை இன்னும் அங்கு முறைப்படி சந்தன மரங்களை வெட்டி எடுப்பதற்கான திட்டம் வகுக்கவில்லை. அதை உடனடியாகச் செய்து, அங்கே கிடைக்கக் கூடிய சந்தன மரங்களை வெட்டி எடுத்து அதை ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யவும், அதற்குப் பிறகு இருக்கின்ற ஆலையை ஓட்டியபிறகு இன்னொரு ஆலைபற்றி யோசிக்கலாம்.

மணி 10-05

**திரு. கோ. பூவராகன் :** மாண்புமிகு சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கிற காடுகளில் சந்தன மரங்கள் பரவலாகக் கள்ளக் கடத்தல் செய்யப்பட்டு, வெளி மாநிலங்களுக்கு அனுப்பப்படுகிறது. மேலும் காடுகளில் காவல் இருக்கிற ஃபாரஸ்ட் அதிகாரிகள்—காவலர்கள் ஆகியோர்களில் பெரும்பான்மையானவர்கள் கள்ளக்கடத்தலில் ஈடுபடுகிறவர்களால் தாக்கப்படுகிறார்கள்—சில நேரங்களில் அவர்கள் கொலை செய்யப்படுகிற நிலையும் இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் தற்போது சரியான பாதுகாப்பு இல்லை, எனவே, அவர்களுக்கு ஒயர்லெஸ் கருவிகள் வழங்கப்பட்டு, நல்ல சக்தியுள்ள துப்பாக்கிகள் வழங்கப்பட்டு கள்ளக் கடத்தலைத் தடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஜனதா தளத்தைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் எழுப்பிய பிரச்சினை மிகவும் அவசரமும் அவசியமும் வாய்ந்த பிரச்சினை. 10 ஆண்டுகளாக அந்தக் கள்ளக் கடத்தல் கும்பல் காட்டுப்பகுதிகளிலே மிக அதிகமான அளவிலே கொள்ளை அடித்துக்கொண்டிருந்தது. யானைகளைக் கொன்று தந்தத்தை எடுத்துச் செல்வது, சந்தன மரங்களை வெட்டிச் செல்வது போன்றவைகளில் ஈடுபட்டு வந்தது. கடந்த 2 ஆண்டுகளாக வனத்துறையினருக்கும் அந்தக் கும்பலுக்குமிடையில் சில நேரங்களில் நேருக்குநேராக சண்டை நடந்து, வனத்துறையைச் சார்ந்த சிலரும் உயிரிழந்திருக்கிறார்கள். ஆனால், சமீப காலத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, போலீஸ் துறையையும் இதிலே இணைத்து, தீவிரமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இப்போது கள்ளக் கடத்தல் வெகுவாக்க் குறைந்துவிட்டது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[1990 சனவரி, 27

திரு. சி. கோவிந்தராஜன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, கல்ராயன் மலைவாழ் மக்கள், நீண்ட நெடுங்கால மாக ஜாகீர்தார்கள் காலத்திலிருந்து அங்கே வசித்துக்கொண்டு பயிர் செய்து வருகிறார்கள். ஜாகீர்தார்களை அகற்றிவிட்ட பிறகு, அங்கே அரசு சந்தன மரங்களைப்போன்ற பல்வேறு மரங்களைப் பயிரிடுவதற்கான வகையில் கன்றுகளை நடுவதற்கு ஏற்பாடு செய்து, அந்த விவசாயிகள் பூராவும் வெளியேற்றப் படுகிறார்கள். எனவே, இந்த நிலையைத் தடுத்து தொன்று தொட்டு அங்கே பயிர் செய்து வரும் அந்த விவசாயிகளுக்கு அந்த நிலங்களை அளிக்க முன்வருமா—வனத்துறையின் மூலம் இதைச் செய்ய முடியாது என்றாலும் நம் மாநில அரசு மத்திய அரசின் அனுமதியைப் பெற்றாவது அவர்கள் பயிரிட்டு வரும் நிலங்களைப் பட்டா செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. பி. கந்தசாமி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப் பிட்டது ஒரு முக்கியமான பிரச்சினை. நீண்ட நெடுங்கால மாக இருந்து கொண்டு வருகிறார்கள் அந்த மலை வாழ் மக்கள். ஜாகீர்தார்களின் நிலங்களை வனத்துறை எடுத்துக்கொண்ட பிறகு, குடியிருப்பவர்களின் சொந்த நிலம் எது என்பது திட்டவட்டமாகச் சொல்ல முடியாத நிலை இருக்கிறது. ஏனென்றால், ''ஷிப்டிங் கல்டிவேஷன்''—அதாவது மூன்று ஆண்டுகள் ஒரு இடத்தில் விவசாயம் செய்கிறார்கள். அங்கே உள்ள மண்ணின் வளம் குறைந்த பிறகு, அவர்கள் இன்னொரு இடத் திற்குச் சென்று விவசாயம் செய்கிற முறை அவர்களுக்கு இருக் கிறது. இருந்தாலும்கூட, தென்னாற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் மூலமாக இப்போது ஆங்காங்கே இருப்பவர் களைப்பற்றி கணக்கெடுத்து, அதன் மூலமாக அவர்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டும் என்ற எண்ணம் இந்த அரசுக்கு இருக்கிறது.

**விவசாய பம்பு செட்டுகளுக்கு பகலில் மின்சாரம் வழங்குதல்.**

*410 **திரு. கே. ஏ. மணி :**

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

விவசாய பம்பு செட்டுகளுக்கு இரவில் மின்சாரம் வழங்கு வதை மாற்றி பகலில் மட்டுமே மின்சாரம் வழங்கும் திட்டம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.



1990 சனவரி, 27]

திரு. கே. ஏ. மணி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, விவசாயத் தொழிலுக்கு மின் வெட்டு இருக்கும் காலங்களிலே இரவு நேரத்தில் மட்டும் மின்சாரம் வழங்கப் படுவதால், வயல் வெளிகளில் உள்ள கிணறுகளிலுள்ள மோட்டார் களை இயக்கித் தண்ணீர் பாய்ச்சச் செல்லுகிற காலங்களில் நிறைய விவசாயத் தொழிலாளர்கள் பாம்புக் கடியினால்இறந்து போகிற நிலைமை ஏற்படுகிறது. இதை அரசு கவனத்தில் எடுத்துக் கொண்டு எந்த அளவுக்கு மின்வெட்டு வந்தாலும் விவசாயத்திற்கு எத்தனை மணி நேரத்திற்கு மின்சாரம்கொடுத் தாலும் அதைப் பகலிலேயே கொடுக்க அரசு பரிசீலிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**10.10 மணி**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத்தலை வர் அவர்களே, சூன் மாதம் 16 ஆம் தேதியிலிருந்து கட்டாயக் கொள்முதல் எங்கெங்கே இருக்கிறதோ அங்கேயெல்லாம் விவசா யிகளுக்கு ஒரு நாளைக்கு இருபது மணி நேரம் மின்சாரம் வழங்கப் படுகிறது. அந்தப் பகுதிகளிலே பகலிலே 12 மணி நேரமும் இரவிலே 8 மணி நேரமும் தரப்படுகிறது. கட்டாயக் கொள் முதல் இல்லாத இடங்களில் பகலிலே 6 மணி நேரமும் இரவிலே 8 மணி நேரமும் ஆக 14 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படு கிறது. பொதுவாக எல்லா விவசாயிகளுக்கும் பகலிலே மின்சாரம் வழங்குவது என்று சொன்னால், இன்னொரு 350 மெகாவாட் மின்சாரம் நமக்குத் தேவைப்படுகிறது. ஆகவே, இன்றையதினம் உள்ள சூழ்நிலையிலே கொடுக்க முடியாத காரணத்தினால் இந்தக் கோரிக்கையை ஏற்க முடியவில்லை.

திரு. கே. ஏ. மணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மற்றத் தொழில்களுக்கெல்லாம் இரவு நேரத்திலே மின்சாரம் வழங்குவதைத் தவிர்த்து, பகலிலே முழு மையாக வழங்கப்படுகிறது. விவசாயத் தொழிலிலே மட்டும் பகலிலே மின்சாரம் வழங்காமல் மின்வெட்டுக் காலங்களில் இரவிலே வழங்குவதை மற்றத் தொழில்களிலே இருக்கின்ற சிரமங்களைவிட இதிலே பல்வேறு சிரமங்கள் இருக்கின்றன. குறிப் பாக, இரவு நேரத்திலே பாம்பு கடியால் ஒருவர் மிகப் பிற் பட்ட பகுதியிலே ஒரு வயல் வெளியிலே இறந்து விட்டால்கூட அவரை அரசு மருத்துவமனைக்கு எடுத்துச் செல்வதிலே இருக்கின்ற சிரமத்தையெல்லாம் மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சரவர்கள் எண்ணிப் பார்த்து, இந்த 12 மணி நேரம் கொடுத்தாலும் அதைப் பகல் முழுவதிலும் அந்த 12 மணி நேரத்திலே கொடுத்து, இரவிலே இதைத் தவிர்க்க முன் வருவார்களா என்று கேட்கின்றேன்.

[1990 சனவரி, 27

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :
தலைவரவர்களே, இன்று நமக்குத் தேவை 4,000 துணைத்
மின்சாரம். ஆனால் உற்பத்தியாவதோ 2,800 மெகாவாட்
தான். இதை ஏதோ விவசாயிகளுக்கு மட்டும் தான் இரவு மெகாவாட்
நேரத்திலே மின்சாரம கொடுக்கிறோம என்பது உண்மை அல்ல.
தொழிற்சாலைகளுக்கும் கொடுத்துக் கொண்டு இருக்கிறோம்.
இன்னும் சொல்லப்போனால் பத்து தினங்களுக்கு முன்னாலே
தொழில் அதிபர்களையும் தொழிற்சங்கத் தலைவர்களையும்
தொழில் முனைவோர்களையும் கூப்பிட்டு, இரவு நேரங்களிலே
மேலும் அதிக ஷிப்டுகளில் வேலை செய்வதற்கான ஏற்பாடு
களைச் செய்ய வேண்டும் என்றும் அவர்களையும் கேட்டுக்
கொண்டிருக்கிறோம். இன்றுள்ள சூழ்நிலையிலே கட்டாயக்
கொள்முதல் இருக்க வேண்டிய பகுதியில் பகல் முழுவதும் 12
மணி நேரம் கொடுப்பதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. கட்
டாயக் கொள்முதல் இல்லாத இடங்களிலேதான் 6 மணி நேரம்
தந்து கொண்டிருக்கிறோம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு பேரவைத்
துணைத்தலைவர் அவர்களே, விவசாயப் பம்பு செட்டுகளுக்குத்
தண்ணீர் இறைப்பதற்கு மட்டுமல்லாமல், தானியங்களை
த்ராஷிங் செய்யும் மெஷின்களுக்கு கம்பு, சோளம், மக்காச்சோளம்
போன்ற தானியங்கள் அடிப்பதற்குக் கதிர் அடிக்கின்ற மெசின்
களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மின் இலாக்காவினாலே,
அதற்கு அனுமதி பெற வேண்டும். முன்பெல்லாம் அனுமதி
பெறாமல் கதிர் அடிப்பவர்களுக்கு ஒரு குதிரை சக்திக்கு 50
ரூபாய் அபராதம் விதித்துக் கொண்டிருந்தார்கள். இப்பொழுது
திடீரென்று அதை 500 ரூபாயாக்கி விட்டிருக்கிறார்கள். 5
ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருந்தால், 2,500 ருபாய் பணம்
கட்ட வேண்டும்; பத்து ஹார்ஸ் பவர் மோட்டார் வைத்திருப்ப
வர்கள் 5,000 ரூபாய் அபராதமாகச் செலுத்த வேண்டும்.
இந்த 5,000 ரூபாய் விவசாயிகளுக்கு மிச்சம் ஆகுமா என்பது
கவலையாக இருக்கின்ற நேரத்தில் இந்தத் தொகை நியாயமற்ற
தொகை. எனவே, இந்த அபராதம் விதிக்கும் முறை ஒழித்துக்
கட்டப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : தலைவரவர்
களே, விவசாயிகள் பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு வழங்கும்
பொழுது விவசாயத்திற்கு மட்டும்தான் அதைப் பயன்படுத்த
வேண்டும். ஏனென்றால் விவசாயத்திற்கு நாம் குறைந்த கட்ட
ணம் வசூல் செய்து கொண்டிருக்கிறோம். பத்தரை பைசா
தான். ஒரு ஹார்ஸ் பவருக்கு 50 ரூபாய் என்பது
யூனிட்டுக்கு பத்தரை பைசாத்தான் வருகிறது. ஒரு
மின்சாரத்திற்குப் பம்பு செட்டு வைத்துக்கொண்டு ஆனால்
எல்லா வேலைகளையும் செய்து கொள்வது என்று அதிலேயே
மின்சார இலாக்காவுக்கு மேலும் இழப்பு ஏற்படும். சொன்னால்
அனுமதி



1990 சனவரி, 27]

பெற்று மின்சார வாரியத்திலே அதைப் பயன் படுத்துவார்களே
யானால் அதற்கு ஒரு கட்டணம் விதிக்கப்படுகிறது. அதை
விட்டுவிட்டு இலாக்காவுக்கே தெரியாமல் அவர்கள் எதற்கு
வேண்டுமானாலும் மின்சாரத்தைப் பயன்படுத்துவதை இந்த
அரசாங்கம் ஊக்குவிக்காது.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு துணைத் தலை
வர் அவர்களே, இந்த இருபது மணி நேரம் மின்சாரம் வழங்கி
னாலும் தொடர்ந்து தொடர்ச்சியாகத் தரப்படுகிறதா? விட்டு
விட்டுத் தரப்படுகிறதா என்பதையும், மின்சாரப் பம்புசெட்டு
களுக்கு மின்சாரம் கோரி 84 முதல 87 வரை கேட்டுக்கக்கூடிய
விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்கப்படுமா என்பதையும் அறிய
விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலை
வர் அவர்களே, கட்டாயக் கொள்முதல் இருககக்கூடிய பகுதி
களில் மாலை 6 மணி முதல் இரவு 10 மணி நீங்கலாக—அந்த
4 மணி நேரம் நீங்கலாக, பகல் முழுவதும் 12 மணி நேரம், இரவு
10 மணியிலிருந்து விடியற்காலை 6 மணி நேரம் வரை,
20 மணி நேரம் மின்சாரம் வழங்கப்படுகிறது. மாண்புமிகு அம்மை
யார் அவர்கள் சொன்னதைப் போல, 84-லே இருந்து 87 வரை
யிலே மின்சாரப் பம்பு செட்டுகளுக்கு இணைப்பு கோரியவர்
களுக்கு உடனடியாக நாம் கொடுக்க முடியாதவர்களாக இருக்கின்
றோம். இதுவரையிலே 4,50,000 பம்பு செட்டுகளுக்கு மின்
இணைப்பு வேண்டுமென்று விண்ணப்பங்கள் வந்திருக்கின்றன.
ஆனால் நாம் ஒரு ஆண்டுக்கு 40,000 பேருக்குத்தான் மின்
இணைப்பு கொடுப்பது என்று முடிவு செய்திருக்கின்றோம்.

10.15 மணி

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, இந்தக் கேள்வியானது விவசாய பம்பு செட்டுகளுக்கு
பகலில் மட்டும் மின்சாரம் கொடுக்க வேண்டுமென்று கேட்கக்
கூடிய கேள்வியாகும். இரவு நேரங்களில் விவசாயத்தில் குறிப்
பாக சிறுசிறு பாத்திகளைக் கட்டி விவசாயம் செய்யக்கூடிய
பருத்தி, மிளகாய் வற்றல் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாது.
நெல் வயல்களுக்கு வேண்டுமானால் இரவு நேரங்களில் மோட்டார்
களை ஓட்டி தண்ணீர் பாய்ச்சலாம். இப்போது மின்சாரம்
கொடுக்கிற 6 மணி நேரம் என்பது சில இடங்களில் சரியாக
இருக்கலாம். பல இடங்களில் அது போதுமானதாக இல்லை.
இரவு நேரங்களில் மின்சாரம் கொடுப்பதை யாருமே பயன்
படுத்துவதில்லை என்று கருதுகிறேன். நெல் வயல்கள் இருக்
கிற இடங்களைத்தவிர மற்ற இடங்களில் இரவு நேரத்தில் மின்
சாரத்தைப் பயன்படுத்துவது இல்லை. ஆகவே பகல் நேரங்
களில் கூடுதலாக இரண்டு மணி நேரம் அளிக்கலாம். 8 மணி

நேரம் மின்சாரம் பகல் நேரங்களில் கொடுத்தால்தான் பல இடங்களில கிணற்றுப் பாசனத்தைச் செய்ய முடியும். எனவே, அமைச்சர் அவர்கள் கொஞ்சம கருணை வைத்து பகல் நேரத்தல் மட்டும் விவசாயத்திற்கு 8 மணி நேரத்துறகு குறையாமல் மின்சாரம் கொடுக்கப்படும் என்று அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலை வர் அவர்களே, மாணபுமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த பருத்தி போன்ற பயிர்களுக்கு பகல் நேரத்தில் நாம் கொடுக்கிற 6 மணி நேரம் மின்சாரத்திலே நிச்சயமாகத் தண்ணீரைப் பயன் படுத்திக் கொள்ள முடியும். இருந்தாலும் இப்போது ஓரளவிற்கு மின்வெட்டு தளர்த்தப்பட்டிருக்கிற காரணத்தால், மின்சார வெட்டு தளர்த்தப்பட்டுள்ள காலங்களில் இன்னும் இரண்டு மணி நேரம் விவசாயத்திற்குக் கூடுதலாக மின்சாரம் கொடுக்க முடியுமா என்பதைப் பற்றி இந்த அரசு பரிசீலிக்கும்.

திருமதி ரமணி நல்லதம்பி: துணைத் தலைவர் அவர்களே..

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்னும் 10 வினாக்களுக்கு மேல் இருக்கின்றன. அடுத்த வினாவில் கேட்க அனுமதிக்கிறேன். உட்காருங்கள்.

சப்-ஸ்டேசன் கட்டுதல்.

*2342—திரு செ. பெருமாள்:

மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஏற்காடு தொகுதியைச் சேர்ந்த கல்ராயன் மலையில் தும்பல் இடையப்பட்டி கிராமத்தை மையமாகக் கொண்டு சப்-ஸ்டேசன் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

ஆம்.

திருமதி ரமணி நல்லதம்பி ; பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் மின்சாரம் வழங்குகிற முறை களை, இரவிலா, பகலிலா என்பதைப்பற்றிச் சொன்னார்கள். இரவில் விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதைக்கூட மன்னித்து விடலாம். ஆனால் கரண்ட் ஒரு யூனிட் கூட உபயோகிக்காத





வர்களுக்கு எல்லாம் கட்டணம் வசூலிக்கிறார்கள். அப்படி ஓடாத மோட்டார்களுக்கு கட்டணம் வசூலிக்கிற முறை இருந்து வருகிறது. அந்த நிலையில் ஏன் அந்த இணைப்புகளை வரிசைப் படுத்தி, கட்டுப்படுத்திச் செய்ய வேண்டும்? எல்லோருக்கும் கொடுத்துவிட்டு, மோட்டார் ஓடினாலும் ஓடாவிட்டாலும் கட்ட ணம் என்று வைத்துவிடலாம் அல்லவா?

மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மின்சார இணைப்பு கொடுக்கிற நேரத் திலே ஒரு ஹார்ஸ் பவருக்கு இவ்வளவு என்று நிர்ணயித்து இருக்கிறார்கள். அந்த மின்சார பம்பு செட்டுகளை ஓட்டு கிறார்களா, இல்லையா என்பது இல்லை. அப்படி அவர்களுக்கு மின்சார பம்ப் செட்டுகளை ஓட்ட வேண்டிய அவசியம் இல்லை யென்று தெரிந்தால், மின்சார இலாக்காவிற்கு எழுதிக் கொடுத்து விட்டால், அந்தக் காலத்திற்கு வேண்டுமானால் அரசு மின்சாரக் கட்டணத்தை வசூல் செய்யாமல் பார்த்துக் கொள்ளலாம். ஆனால் எந்த விவசாயிகளும் அப்படி எழுதிக் கொடுக்க மாட் டார்கள். 6 மாதம் தண்ணீர் இல்லையென்றாலும், மறுபடி யும் 6 மாத காலத்திற்குப் பிறகு தண்ணீர் வந்தால் பயன்படுத் திக்கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். எனவே, இப்படிப் பட்ட சூழ்நிலையில் ஒவ்வொருவருக்கும் ஒரு தனி விதிவிலக்கு கொடுக்க முடியாது.

திரு. இளம்வழுதி : துணைத் தலைவர் அவர்களே, 111-ம் எண்ணுள்ள கேள்வியில் ஏற்காடு தொகுதியைச் சேர்ந்த கல்ராயன் மலை என்று இருக்கிறது. எனக்குத் தெரிந்த வரையில் அது சேர்வராயன்மலை என்று இருக்கவேண்டும் என்று கருதுகிறேன். அது சரியா என்று அமைச்சர் அவர்கள் விளக்கம் அளிக்கக் கோரு கிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர் களே, சின்னக்கல்ராயன்மலை என்று ஒன்று இருக்கிறது. அதற் குப் பக்கத்தில் கும்பல் வெள்ளாளப்பட்டி, இடையப்பட்டி ஆகிய கிராமங்களுக்கு வாழப்பாடி அருகில் சிங்கபுரம் 110/22 கே. வி. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் சின்னக்கல்ராயன் மின்னோட்டி மூலமாக வழங்கப்பட்டு வருகிறது. இப்போது அங்கே தனியாக ஒரு துணை மின்நிலையம் அமைக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. வெள்ளாளப்பட்டியில் எட்டாவது ஐந்தாண்டுத்திட்டக் காலத்தில் 182 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் ஒரு துணை மின் நிலையம் அமைக்கப்படும். 1994-95-ம் ஆண்டில் அது செயல்படும்.

திரு. எம். முகமது சித்திக் : துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பை ஏற்ற பிறகு விவசாயிகளுக்கு குதிரை சக்திக்கு 75 ரூபாய் என்று இருந்ததை 50 ரூபாயாகக் குறைத்துள்ளார்கள். இது 5 குதிரை சக்திகள் வரையிலும்தான் வழங்கப்படுகிறது. 5 குதிரை சக்திக்கு அதிகமாக உள்ள மின் மோட்டார்களுக்கும் விவசாயிகளுக்கும் இந்தக் குறைந்த கட்டணம் வசூல் செய்யப் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

[1990 சனவரி, 27

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: துணைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு விவசாயிகளுக்குக் கொடுத்துக் கொண்டிருக்கிற மின் கட்டணச் சலுகையால், குறைந்த கட்டணம் வசூலிக்கிற காரணத்தால், ஆண்டு ஒன்றுக்கு 360 கோடி ரூபாய் அரசுக்கு இழப்பு ஏற்படுகிறது.

10-20 மணி

இதைச் சரிக்கட்டுவதற்கே நமது முதலமைச்சர் அவர்கள் பெரிதும் சிரமப்படுகிறார்கள். அந்தச் சூழ்நிலையிலே மேலும் 5 ஹார்ஸ் பவருக்கு மேலே வைத்திருக்கக்கூடியவர்களுக்கு மின் கட்டணத்தைக் குறைக்கக்கூடிய செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. பெருமாள் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் சப்-ஸ்டேஷன் கட்டுவதற்கு அரசு முன்வந்ததற்கு நன்றி சொல்லி, இது மிக விரைவில் செயல்பட அரசு ஏற்பாடு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : துணைத் தலைவர் அவர்களே, இதை ஏற்றுக்கொண்டுதான் 188 லட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவிலே மதிப்பீடு செய்யப்பட்டு வேலைகள் தொடங்குவதற்கான எல்லா முயற்சிகளும் நடைபெற்றுக்கொண்டு இருக்கின்றன. எந்த அளவிற்கு வேகமாகச் செய்ய முடியுமோ, அந்த அளவிற்கு வேகமாகச் செய்து முடிக்கப்படும்.

மோர்தனா அணைக் கட்டும் திட்டம்.

*1374—திரு. கே. ஆர். சுந்தரம் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் தொகுதியில், மோர்தனா அணை கட்டும் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

வட ஆற்காடு அம்பேத்கார் மாவட்டம், குடியாத்தம் அருகில் மோர்தனா கிராமத்தருகில் கௌண்டியா நதியின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைப்பதற்கான திட்ட அறிக்கை அரசின் ஆய்வில் உள்ளது.



1990 சனவரி, 27]

திரு. கே. ஆர். சுந்தரம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மோர்தனா அணையைக் கட்டுவது அரசின் ஆய்வில் உள்ளதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இந்த அணையைக் கட்டுவதற்கு மாண்புமிகு டாக்டர் கலைஞர் அவர்கள் 1974—75-ஆம் ஆண்டிலே கல்நாட்டுவிழா செய்தார்கள். இடையிலே அரசு கலைக்கப்பட்டதாலே, தொடர்ந்து அந்த வேலைகள் நடைபெறவில்லை. இந்த அணையைக் கட்டி முடிக்கவேண்டும் என்று புதிய மாவட்டம் துவங்கிய நேரத்தில், மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களை வேலூர் பொதுக்கூட்டத்திலே கேட்டுக் கொண்டேன். முதலமைச்சர் அவர்களும் கட்டாயமாகக் கட்டி முடிக்கப்படும் என்று சொன்னார்கள். அந்த அடிப்படையிலே இந்த ஆய்வை முடித்து, வரும் 1990—91-ஆம் ஆண்டிலே வேலையைத் துவக்குவதற்கு அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததைப் போல. 30—3—75 அன்று நம்முடைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு முதல்வராக இருந்தபோது, இந்த அணையைக் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டினார்கள். அப்போது இதனுடைய மதிப்பீடு 330 லட்சம் தான். ஆனால் இன்றைக்கு அணையினுடைய அமைப்பும் மாறுபடுகிறது. மதிப்பீடும் உயருகிறது. எனவே இது குறித்து அரசு அந்த ஆய்வைச் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறது. முதல்வர் அவர்கள் அறிவித்ததை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்தார்கள். ஆய்வு அறிக்கை கிடைத்தவுடன் அதை அடுத்த ஆண்டு எடுத்துக்கொள்வதா, அதற்கு அடுத்த ஆண்டு எடுத்துக் கொள்வதா என்பதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலிக்கும். ஆனால் ஒன்று மட்டும் உறுதி, நிச்சயமாக மோர்தனா அணை கட்டப்படும்.

திரு. கே. ஆர். சுந்தரம் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணை கட்டி முடிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்த அணையைத் துரிதமாகக் கட்டி முடித்தால் அந்த மாவட்டத்திலே உள்ள விவசாயிகள் நீர்ப்பாசனவசதி பெற முடியும், மேலும் குடியாத்தம் வட்டத்தில் இருக்கின்ற நூற்றுக்கணக்கான கிராமங்களுக்கு இதன் மூலம் குடிநீர் வசதி கிடைக்கும். ஆகவே இதைத் துரிதமாகக் கட்டி முடிக்க அரசு மீண்டும் முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, அரசு துரிதமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. வி. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு துணைக் தலைவர் அவர்களே, வட ஆற்காடு அம்பேத்கார் மாவட் டத்தில் மோர்தனா அணையைக் கட்டும் திட்டம் தொடங் கினால், அங்கே உள்ள நிலச் சொந்தக்காரர்களுக்கு வேறி டத்தில் விவசாயம் செய்ய அரசால் நிலம் வழங்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, பட்டா நிலமாக நமக்குத் தேவைப்படுவது 94.54 ஏக்கர்தான். வனத்துறையிலேயிருந்து நாம் பெற வேண்டியது 92.12 ஏக்கர். புறம்போக்கிலேயிருந்து நாம் எடுப்பது 96 ஏக்கர். எனவே இந்தப் பட்டா நிலத்திற்கு மட்டும்தான் ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். அந்த மாற்று ஏற்பாட்டை அரசு செய்யும்.

10-40 மணி

அமிர்தி அணை கட்டுதல்.

*4209 திரு. அ. இராசேந்திரன் :

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், போளூர் தொகுதியில் நாக நதியின் குறுக்கே அமிர்தி அணை கட்ட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அணை எப்போது கட்டப்படும்?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் குறித்த முதனிலை ஆய்வறிக்கையை (Preliminary Estimate) தலைமைப் பொறியாளர் (ஆய்வு), அரசுக்கு அனுப்பி, இத் திட்டத்தை விரிவாக ஆய்வு செய்ய அரசின் ஒப் புதலைக் கோரியுள்ளார். இத்திட்டம் விரிவாக ஆய்வு செய்தபின் பரிசீலித்து இவ்வணையைக் கட்டுவது குறித்து முடிவு செய்[illegible]





திரு. அ. இராசேந்திரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமிர்தி அணையைக் கட்டு வதால், அங்கே பயன் அடையும் ஏக்கர் எவ்வளவு ? அத னுடைய திட்ட மதிப்பீடு போன்றவைகள் எல்லாம் ஆரா யப்பட்டுள்ளனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அணை கட்டினால், சுமார் 19 கிராமங்கள் பயன் அடையும். அந்த ஏரிகளுக்கு நீர் போகும். 3,309 ஏக்கர் பாசன வசதி பெறும். 570 ஏக்கர் பாசனப் பற்றாக்குறையிலிருந்து மீட்கப்படும். 4,176 டன் உணவு அதிகமாகக் கிடைக்கும்.

திரு. அ. இராசேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கலைஞர் அவர்களுடைய அரசு எதிலும் ஒரு காலக்கெடுவை வைப்பதைப் போல, இந்தத் திட்டத்திற்கும் ஒரு காலக்கெடுவை வைத்து, அந்தக் காலக்கெடுவிற்குள் இந்த அணை கட்டி முடிக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர் களே, காலக்கெடுவில்லை. விரைந்து செயல்படும்.

திரு. ஏ. கணேசமூர்த்தி: துணைத் தலைவர் அவர்களே, புதிது புதிதாக அணைகளைக் கட்டுகிற இந்த அரசு நீண்ட காலமாக வெட்டப்பட்டு, இதுவரையில் பாசனத்திற்கு விடப் படாமல் இருக்கிற பரம்பிக்குளம் ஆளியாறு கால்வாய்களுக்கு 3 ஜோன்களாக உள்ளதை, 4 ஜோன்களாக மாற்றி, தண்ணீர் விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு திரு. துரைமுருகன்: துணைத் தலைவர் அவர்களே, அமிர்தியிலிருந்து பரம்பிக்குளம் ஆளியாறு திட் டத்திற்கு கேள்வியைத் தொடுத்திருக்கிறார் மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசமூர்த்தி அவர்கள். இருந்தாலும் நான் அவருக்கு விடையளிக்கக் கடமைப்பட்டு இருக்கிறேன். 3 ஜோன் களாக இருப்பதை, 4 ஜோன்களாக மாற்றவேண்டும், புதிய ஆயக்கட்டுகளுக்கு, அதாவது எக்ஸ்டென்சன் ஏரியாக்களுக்கு தண்ணீர் தரவேண்டும் என்பது அந்தப் பகுதியினுடைய நீண்டகாலக் கோரிக்கை. அதை இந்த அரசு உணர்ந்திருக் கிறது. இதைக் குறித்து அரசு ஒரு இறுதி முடிவை எடுப் பதற்காக, கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களி டத்திலும் கருத்து கேட்கப்பட்டது. பெரியார் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்தும் கருத்து கேட்கப் பட்டது. இரண்டு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், [illegible]

அறிக்கையை அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள். இந்த அரசு 'கமிஷனர் பார் லேண்ட் அட்மினிஸ்ட்ரேசன்' அவர்களுக்கு அனுப்பி, அவருடைய கருத்தையும் கேட்டு இருக்கிறது. அது கிடைத்த பிறகு, அது குறித்து அரசு நடவடிக்கையை மேற்கொள்ளும்.

## கோயில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை.

* 2607 திரு. பி. வி. இராஜேந்திரன் :

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வேதாரண்யம் தொகுதியில் கோயில்பத்து கிராமத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புகுமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிப்பதற்காக கூட்டப்பட்டு இருக்கின்ற இந்தக் கூட்டத் தொடரின் கடைசி நாளான இன்றைக்கு நான் சொல்ல விரும்புவது, மேதகு ஆளுநர் அவர்கள் தஞ்சை மாவட்டத்திற்கு வந்தபோது "10 லட்சம் விவசாயத் தொழிலாளர்களும் விவசாயிகளும், இன்றைக்கு வாடுவதைப் பார்க்கிறேன், அதிலும் குறிப்பாக, ஒரு போக சாகுபடி, குறுவை சாகுபடிக்கு 350 கோடி ரூபாய் அளவிற்கு இழப்பு ஏற்பட்டு இருப்பதை நான் உணர்கிறேன், தொடர்ந்து விவசாயத்தை நம்பியிருக்க முடியாது இந்த மாவட்டம்" என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக ஊரகத் தொழில் துறை வேறு ஏதேனும் திட்டங்களை கைவசம் வைத்திருக்கிறதா என்பதை உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்ட கேள்விக்கு அரசின் பரிசீலனையில் இல்லை என்றுதான் சொன்னேனே ஒழிய, மாண்புமிகு உறுப்பினர் முன்வந்தால், அந்தப் பகுதியிலே தொழில்பேட்டை தொடங்



குவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தலாம். தமிழ்நாட்டில் தொழில் முனைவோருடைய தேவைக்கு ஏற்ப, தொழிற்பேட்டைகள் அமைக்கப்படுகின்றன. ஒரு இடத்தில் குறைந்தபட்சம் 20 பேர்கள் தொழில் முனைவோர்கள் இருந்தால், அந்த இடத்தில் தொழிற்பேட்டை அமைப்பது குறித்து பரிசீலனை செய்யப்படும். தொழில்பேட்டை அமைப்பதற்கான வசதிகளான, நில வசதி, போக்குவரத்து இணைப்பு, தண்ணீர் வசதி, மின்சார வசதி ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, 20 பேர்கள் முன்வந்தால், அவர்களுக்குத் தேவைப்படுகிற இடத்தில், அந்தத் தொழில்பேட்டைகளைக் கட்டித் தருவதற்கு தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் முன்வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. பி. வி. இராஜேந்திரன் : பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இன்றைக்கு 20 பேர்கள் அல்ல, 40 பேர்கள் தயாராக இருந்தாலும், மாவட்டத் தொழில் வளர்ச்சி மையத்தில், அதாவது டிஸ்ட்ரிக்ட் இண்டஸ்ட்ரிஸ் சென்டர்களை அணுகுகின்றபோது, அவர்கள் சரிவர விவரங்களையும், ஒத்துழைப்பையும் கொடுக்காததால், அவர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள். அதிலும் ஆந்திர மாநிலத்தில் பருத்தி சாகுபடியாளர்கள் பலர் கடந்த ஆண்டு தற்கொலை செய்து கொண்டதைப் போல, தஞ்சை மாவட்டத்தில் உள்ள விவசாயிகளும் கடந்த ஆண்டு அங்கே 100-க்கு 70 சதவீதம் கடன் தொல்லையால் தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்து இந்த அரசு செயல்பட வேண்டும் என்று சொல்லி, இங்கே ஒரு குரோத் சென்டரைத் தந்ததற்கு மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு இந்த நேரத்தில் நன்றி சொன்னால் ஏற்றுக் கொள்வார்களா என்பதையும் உங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

(விடை இல்லை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அவையிலே ஏற்கெனவே நன்றி சொல்லக்கூடாது என்று முதல் அமைச்சர் அவர்கள் தெரிவித்து இருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : துணைத் தலைவர் அவர்களே, நன்றியே சொல்லக்கூடாது என்று சொல்லவில்லை. கேள்வி நேரத்திலே இப்படிச் சொல்ல வேண்டாம் என்று சொன்னார். பொதுப்படையாக சில நேரங்களில் நாங்கள் செய்கிற காரியத்திற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி சொல்வது வழக்கம். ஆகையினாலே, ஒட்டுமொத்தமாக அதை எடுத்துக்கொள்ளக்கூடாது.

(சிரிப்பு) 10-30 மணி

[1990 சனவரி, 27

## மாம்பாடி ஆதி திராவிடர்களின் சுடுகாடு கோரிக்கை

* 4256 திரு. எம். அண்ணாமலை :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) அரூர் வட்டம், மாம்பாடி ஆதி திராவிடர்கள் சுடுகாடு கோரி வருவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

10-30 மணி

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): தர்மபுரி மாவட்டம், அரூர் வட்டம் மாம்பாடி கிராமத்திலே ஆதி திராவிடர்களுக்கு சுடுகாடு கோரி மனுக்கள் ஏதும் வரவில்லை. எனினும் தற்போது சட்டமன்றப் பேரவையில் வினா எழுப்பப்பட்டதன் காரணமாக மாம்பாடி கிராமத்திலிருக்கும் ஆதி திராவிட மக்களுக்கு இடுகாடு அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த மாம்பாடி கிராமத் தினுடைய சுடுகாட்டுப் பிரச்சினை என்பது கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே, அங்கிருந்த சுடுகாடு நிலம், புறம்போக்கு நிலம், சிலர் ஆக்கிரமிப்பின் காரணமாக இடம் தெரியாமல் பட்டா நிலத்தில் பிரேதத்தை வைத்துவிட்டு, அது ஒரு மிகப் பெரிய கலகமாக மூண்டு, அதை கலெக்டர், டி. எஸ். பி. போன்ற பல முக்கியஸ்தர்கள் எல்லாம் சேர்ந்து மிகப் பெரிய பதட்டமான நிலையில் அந்தப் பிரேதத்தை எடுத்து வேறு இடத்திலே புதைக்க வேண்டிய ஒரு அவலநிலை ஏற் பட்டது. ஆகவே இத்தகைய நிலைமைகளையெல்லாம் கருதி, அவசரமாக அரசு அந்த சுடுகாட்டுப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு முன்முயற்சி எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன்: துணைத் தலைவர் அவர்களே. ஆதி திராவிட மக்களுக்கு குடியிருப்புப் பாதை, மயானப் பாதை இவை பற்றி முன்பே அமலில் உள்ளது. இத்திட்டத்தின்கீழ் வீட்டு மனைக்கு புறம்போக்கு



1990 சனவரி, 27]

நிலங்கள் கிடைக்காத போதும், பட்டா நிலங்களை கையகப் படுத்தி வீட்டு மனைக்கு பட்டாக்கள் கொடுக்கவும், அதே போன்று மயானப் பாதைகளுக்குக் கொடுக்கவும் அரசு தக்க நடவடிக்கை எடுத்து, அவை செய்து கொடுக்கப்படும் என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். அண்ணாமலை : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, முதலில் இதற்கான நிலத்தை ஆர்ஜிதப்படுத்த அரசு முற்படும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அது இருக்கட்டும். இங்கே நான் கவனிக்க வேண்டுவது இருந்த சுடுகாடுகளே ஆக்கிரமிப்பில் உள்ளதால் அந்த ஆக்கிரமிப்புகளை அப்புறப்படுத்தவேண்டும். இந்த சுடுகாட்டுப் பிரச்சினை கூடவே இன்றைக்கு நடைபாதை என் பதும் முழுவதுமாக ஆக்கிரமிப்பிலே இருக்கிறது. ஆகவே இன் றைக்கும் பல கிராமங்களில் இது போன்ற ஒரு துன்பகரமான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இது ஒரு சாதாரண விஷயம் தான். ஒரு கிராமம் இருந்தால் அதற்கு ஒரு சுடுகாடு உண்டு. நடைபாதை உண்டு. இவையனைத்தும் ஆக்கிரமிப் மிப்பில் உள்ளதால் இந்த ஆக்கிரமிப்பை அரசு நிர்வாகம் அப்புறப்படுத்தத் தவறியதன் காரணமாக பிரேத அடக்கத்தின் நேரங்களில் அது கலகமாக மூள்கிறது. ஆகவே இந்த அரசு வினயப்பூர்வமாக இந்தப் பிரச் சினையைப் பார்த்து தீர்ப்பதற்கு முன் முயற்சிகளை எடுக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி அரசு தக்க நடவடிக்கையை கூடிய விரைவிலே எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள் கிறேன்.

## ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை, கடனுதவி,

* 5191 திரு. ச. அழகுவேலு :

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கல்லூரிகளிலும் மேல்நிலைப் பள்ளிகளிலும் கல்வி பயிலும் ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாண வர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகை யும், கடனுதவியும் உரிய காலத்தில் மாணவர் களுக்குக் கிடைப்பதில்லை என்பதை அரசு அறியுமா ?

(ஆ) உரிய காலத்தில் கிடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): கல்லூரிகளிலும் மேல் நிலைப்பள்ளிகளிலும் கல்வி பயிலும் ஆதி திராவிட, பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு அளிக்கப்படும் கல்வி உதவித் தொகை உரிய நேரத்தில் காலதாமதமின்றி வழங்கப்படுகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ச. அழகுவேலு : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'காலத்தினாற் செய்த உதவி சிறிதெனினும் ஞாலத்தின் மாணப்பெரிது' என்று இந்த அரசு உணர்ந்திருந்தாலும் அந்தத் துறையைச் சேர்ந்த அதிகாரிகள் அதை உணரவில்லை. எனவே அதை இந்த அரசு உணர்த்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் எ. இராமகிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதுபற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விவரம் கொடுத்தால், உரிய நேரத்தில் உதவித் தொகையை கொடுக்கவும் கடன் வசதிகளைக் கொடுக்கவும் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### திருப்பூர் நகரில் டையிங்-பிளீச்சிங் கம்பெனிகள் வெளியேற்றும் கழிவு நீர்.

*962. திரு. சி. கோவிந்தசாமி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருப்பூர் நகரில் டையிங்-பிளீச்சிங் கம்பெனிகளிலிருந்து வெளியேறும் கழிவு நீரால் குடிநீர் மற்றும் பாசனக் கிணற்று நீர் பாதிக்கப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், அதனைத் தடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,



(அ) ஆம்.

(ஆ) 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டப்படி கழிவுநீரை வெளியேற்ற தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியத்தின் அனுமதி பெற விண்ணப்பிக்காத 24 சாயத் தொழிற்சாலைகள்மீது வழக்கு தொடரப்பட்டுள்ளது. அனுமதி வழங்கப்பட்டுள்ள, தொழிற்சாலைகளுக்கு கழிவுநீர்ச் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்க வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் அவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் விதிமுறைகளை மீறி இருக்கக்கூடிய நிர்வாகத்தின்மீது வழக்கு தொடர்ந்திருப்பதாக சொல்கிறார்கள். ஆனால் அந்த வழக்கைப் பற்றி எல்லாம் அங்கே இருப்பவர்கள் கவலைப்படுவதில்லை. அதற்குரிய கட்டணம் என்பது அவர்கள் வருவாயோடு ஒப்பிடும்போது அது மிகக் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் அதைக் கட்டிவிட்டு, எல்லா விதிமுறைகளையும் மீறி தொடர்ந்து அங்கே இதுபோன்று கழிவுநீரை சுத்தப்படுத்தாமல் வெளியேற்றுகிற நிகழ்ச்சி தொடருகிறது. திருப்பூர் பகுதி மட்டுமல்லாமல், பல்லடம், அவிநாசி, பொங்கலூர் போன்ற பல பகுதிகளுக்கு அது பரவிக் கொண்டிருக்கிறது. அரசின் சார்பிலே இதுபற்றி அமைக்கப்பட்ட, டாக்டர் சாந்தப்பா அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட ஒரு குழுகூட இந்த நிலை தொடருமேயானால், இன்னும் 10 ஆண்டுக் காலத்தில் திருப்பூர் பகுதி என்பது ஒரு கடுமையான தோல் வியாதிக்கு ஆளாகி, அந்தப் பகுதி குடியிருப்பதற்குத் தகுதியற்ற ஒரு பகுதியாக மாறுகிற அபாயம் இருக்கிறது என்று கூடக் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே அரசு இதை அறிந்திருக்கிறதா? இவ்வளவு ஆபத்தான நிலையை உணர்ந்து அதற்குரிய வேகத்தோடு நடவடிக்கை எடுக்க இந்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

10-35 மணி

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அனுமதி வழங்கப்பட்டிருக்கிற அந்தத் தொழிற்சாலைகளில் 26 இடங்களில் இது போன்ற சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. மற்ற வழக்கு தொடரப்பட்டிருக்கிற இடங்களிலே அந்த வழக்குகளைத் துரிதப்படுத்துவதற்காக, தீர்ப்புகளை துரிதமாகப் பெறுவதற்காக இந்த அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1990 சனவரி, 27

திரு. சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்தக் கருவிகள் பொருத்தப்பட்டிருக்கிற பேக்டரிகளில்கூட அது இயங்கவில்லை என்பதுதான் நடைமுறை யில் இருக்கிற உண்மை. நான் நேரிலேயே அங்கே பார்த்துக் கொண்டிருக்கிறேன். ஆகவே வாய்ப்பு இருக்குமானால்அமைச்சர் அவர்கள் நேரிலே வந்தால் அவர்களுக்கும் காட்டுவதற்குத் தயா ராக இருக்கிறோம். அத்தோடு அங்கே சின்ன தொழிற்சாலை களாக 200-க்கும் மேற்பட்டவைகள் இருக்கின்றன. சிறிய தொழிற்சாலைகளாக இருக்கிற காரணத்தால் மூலதனமின்மை காரணமாக அவை பொருத்தப்படாமல் இருக்கின்ற தொழிற் சாலைகளுக்கு, தொழில் வளர்ச்சியையும் கணக்கிலேகொண்டு அரசு நிதி உதவி செய்து, அந்த சுத்திகரிப்பு நிலையங்களை அரசே ஏற்படுத்தி, அதற்குரிய கட்டணங்களை அந்த சிறு உற்பத்தி யாளர்களிடமிருந்து வசூலிக்கக்கூடிய முறையை அரசு கொண்டு வருமானால், நிச்சயமாக தொழிற்சாலைகளையும் பாதுகாக்க முடியும். அந்தப் பகுதி மக்களுடைய நிலத்தடி நீரையும் பாது காக்கக்கூடிய ஒரு வாய்ப்பு ஏற்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு அதைச் செய்ய அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நிலைமை மிகவும் இக்கட்டான சூழ்நிலையில் இருக்கிறது. ஏனென்றால் மாசு கட்டுப்பாடு வாரியம் உடனடி யாக இவைகளுக்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொன் னால் தொழிற்சாலைகளை மூட வேண்டிய ஒரு இக்கட்டான நிலைமை ஏற்படுகின்றது. அப்படி மூடப்படுமேயானால் மாண்புமிகு உறுப்பினர் அவர்களே இங்கே வந்து அவைகளை உடனடியாகத் திறப்பதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைப்பார்கள். ஆகவே இதிலே இக்கட்டான சூழ்நிலையில்தான் அரசே அவர்களோடு அந்த எந்த அளவுக்குக் கண்டிப்பாக வலியுறுத்த முடியுமோ பேசி அளவுக்கு வலியுறுத்தி நடவடிக்கை எடுத்து வருகிறது. அந்த அளவுக்கு முடியுமோ அந்த அளவுக்கு செல்லுகிற இடங்களிலே எந்த எல்லாம் நேரிலேயே சென்று பார்த்து நடவடிக்கை எடுக்கிறோம். திருச்சியிலே ஒரு இடத்திற்குச் சென்றபோதுகூட ஒரு தொழிற் சாலைக்குச் சென்று அதை ஏற்படுத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்திருக்கிறோம். இதேபோன்று குறிப்பிட்ட ஆலைகளின் மீது மாண்புமிகு உறுப்பினர்கள் குறைபாடுகளைச் சொன்னார்கள் என்று சொன்னால் நிச்சயமாக இந்தத் துறை நேரிடையாக நடவடிக்கை எடுத்து அவைகளை செயல்படுத்துவதற்கு ஏற்பாடுகளைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள் கிறேன்.



1990 சனவரி, 27]

சிதம்பரம் நகர மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ.குவார்ட்டர்ஸ் கட்டுதல்.

*3103 டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தென்ஆற்காடு மாவட்டம், சிதம்பரம் நகரிலுள்ள மருத்துவமனையில் ஆர்.எம்.ஓ. தங்குவதற்கு மருத்துவமனை வளாகத்திற்குள் குவார்ட்டர்ஸ் கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

இல்லை.

டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் உள்ள மருத்துவ மனைகளில் எல்லாம் இப்போது விரிவாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது. உதாரணமாக 15 வருஷங்களுக்கு முன்பு 2, 3 டாக்டர்களே இருந்த இடங்களில் எல்லாம் இப்போது 13 அல்லது 15 பேர்கள் இருக்கிறார்கள். அதற்குரிய விரிவாக்கம் செய்யப்பட்டிருக்கிறது. ஆயினும் அந்த மருத்துவமனைகளினுடைய வளாகத்தை சுகாதார முறையிலே பராமரிப்பதற்கு, தண்ணீர் சப்ளை போன்ற பணி களைக் கவனிப்பதற்கு யாரையும் பொறுப்பாக நியமிக்காததன் காரணமாக, சுகாதாரமற்று இருக்கிறது. மருத்துவமனை அதிகாரிகள் காலையிலே வந்து ஒரு மணிக்கெல்லாம் போய்விடு கிறார்கள். டியூட்டியிலே உள்ளவர்கள்கூட மாலையில் இருப்பது சிரமமாக இருக்கிறது. இந்த நிலையிலே கவனிப்பாரற்று மிகவும் மோசமான நிலையிலே ஒவ்வொரு மருத்துவமனையும் பஸ் ஸ்டேண்ட் போலவும் ரயில்வே ஸ்டேஷன் போலவும் காட்சியளிக்கிறது. அவைகளை சீர்படுத்தி ஒவ்வொரு தாலுக்கா மருத்துவ நிலையங்களிலும் ஆர். எம். ஓ என்கிற சூப்பிரண்டெண்ட மெடிகல் ஆபிசர்களைப் போட்டு அவர்களுடைய பொறுப்பிலே அந்த வளாகத்தினுடைய சுகாதாரம் மற்ற வசதிகளைக் கவனிக்கச் செய்து நடத்துவதற்கு அரசு ஆராய்ந்து செயல் படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, இப்போது எந்த வட்டார மருத்துவ மனையிலும் ஆர்.எம்.ஓ., குடியிருப்புகள் கட்டப்படவில்லை. ஆரம்ப சுகாதார நிலையங் களுக்குக் கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற குடியிருப்புகளிலேகூட பெரும்பாலான மருத்துவர்கள் தங்குவதில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் மருத்துவராக இருக்கிற காரணத்தால் அவர்கள் நன்றாக உணர்ந்திருப்பார்கள். இந்த அரசு ஆட்சிப் பொறுப்பு ஏற்றதற்குப் பிறகு ஆரம்ப சுகாதார நிலையங் களில் கட்டப்பட்டிருக்கிற குடியிருப்புகளில், முதலிலே அங்கே யிருக்கிற மருத்துவர்கள் அங்கேயே தங்கவேண்டுமென்று இந்த அரசு நிர்ணயித்து இருக்கிறது. அதற்குப் பிறகு படிப்படியாக வட்டார மருத்துவமனையிலேயும் ஆர்.எம.ஓ. குடியிருப்புகளைக் கட்டுவதற்கு நிதி நிலைமையைப் பொறுத்து இந்தஅரசு ஏற்பாடு களைச் செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**டாக்டர் து. கிருஷ்ணமூர்த்தி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள், ஆரம்ப சுகாதார நிலையம் என்பதும் தாலுக்கா மருத்துவமனை என்பதும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானது. தாலுக்கா மருத்துவமனையில் நோயாளி களுக்கு Curative aspects என்ற வகையிலே, நோயாளிகளுக்கு நோய் குணமாக்குகின்ற நோக்கத்தின் அடிப்படையில் பணி செய்யப் படுகின்றன. ஆரம்ப சுகாதார நிலையங்களிலே mostly preventive aspects, அதாவது நோய்களைத் தடுக்கின்ற முறையிலே என்னென்ன பணிகள் அடிப்படையாகச் செய்ய வேண்டுமோ அவைகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகையினால் பிரைமரி ஹெல்த் சென்டர் என்கிற ஆரம்ப சுகாதார நிலையங் களிலே மருத்துவர்கள் இரவில் தங்குவதில்லை. அது வெகுவாக பாதிக்கப்படுவதில்லை. ஆனால் தாலுக்கா தலைநகர் மருத்துவ மனைகளிலே 100, 200, 300 நோயாளிகள் என்ற அளவிலே இருக்கின்ற இடங்களில் அது கவனிப்பாரற்று இருப்பதினால் பஸ் ஸ்டாண்டு போலவும், இரயில்வே நிலையமாகவும் காட்சியளிப்பதினாலே 24 மணி நேரமும் அங்கே ஒருவரோ அல்லது இருவரோ அல்லது ரொட்டேஷனிலோ ஒருவர் பொறுப் பாக இருந்து கவனிப்பதற்கு அரசு ஆராய்ந்து செயல்படுமா என அறிய விரும்புகிறேன்.

*10-40 மணி*

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி :** துணைத் தலைவர் அவர்களே, குடியிருப்புகள் கட்டிக் கொடுப்பதினுடைய நோக்கமே அங்கே மருத்துவர்கள் தங்க வேண்டும் என்பதுதான். அது ஆரம்ப சுகாதார நிலையமாக இருந்தாலும், தாலுக்கா மருத்துவமனையாக இருந்தாலும்





கட்டிக் கொடுக்கின்ற குடியிருப்புகளில் தங்கினால்தான் அங்கே இருக்கின்ற மக்களுக்கு வைத்திய வசதி கிடைக்கும். அதைத் தான் நான் சுட்டிக் காட்டினேனே தவிர இரண்டுக்கும் உள்ள வேறுபாடுகள் தெரியும். அரசினுடைய நிதிநிலையைக் குறித்து இதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதை முன்பே தெரிவித்திருக்கிறேன்.

### மகளிருக்கான தொழிற்பயிற்சிக்கூட கட்டடம்.

**குறுகிய கால வினா எண். *7970 திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :**

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச் சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சைதை தொகுதியில் மகளிருக்கான தொழிற் பயிற்சிக்கூட கட்டிடம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டப்படும் ?

**மாண்புமிகு திரு. கே. என். நேரு :** துணைத் தலைவர் அவர்களே,

(அ) கிண்டியில் இயங்கி வரும் மகளிர் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்திற்கு ரூ.42.00 இலட்சம் மதிப்பீட்டில் நிரந்தரக்கட்டடம் கட்டுவதற்கு அனுமதிக்கப்பட் டுள்ளது.

(ஆ) கட்டட வேலை விரைவில் தொடங்கவிருக்கிறது

**திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் :** மாண்புமிகு சட்டப் பேரவையி னுடைய துணைத் தலைவர் அவர்களே, சென்னை நகரில் மகளிருக்கான தொழிற்பயிற்சிக்கூடம் ஒன்றே ஒன்று தான் உள்ளது. ஆனால் ஆண்டு தோறும் அதிகமான அளவு விண்ணப் பங்கள் வரவேற்கப்படுகின்றன. ஆனால் மிகக் குறைந்த அளவு எண்ணிக்கைதான் இடம் அளிக்கப்படுகிறது. எனவே இந்த ஆண்டு கூடுதலான இடம் அளிப்பதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்று நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, வருடத்திற்கு 250 பெணகள் என்று ஒவ்வொரு வருடமும் சேர்க்கபபடுகிறார்கள். அதிகப்படியான பெண்களை சேர்ப்பதற்கு நிரந்தர கட்டிட வசதியும், அதனுடைய பரிசோதனைக் கூடங்களும் இருந்தால் தான் அதிகப்படியான பெண் களைச் சேர்க்க முடியும. இருந்தும் உறுப்பினருடைய கருத்தை ஏற்று வரும் ஆண்டுக காலத்திலே அதற்கான நடவடிக்கையில் அரசு ஈடுபடும்.

திரு. ஆர். எஸ். ஸ்ரீதர் : துணைத் தலைவர் அவர்களே, தற்போது பயிற்றுவிக்கப்படும்போது கட்டிங் அண்டு டெய்லரிங், ரேடியோ அண்டு டி.வி. மெக்கானிஸம், ஸ்டெனோகிராஃபி போன்ற தொழில்கள் கற்றுத்தரப்படுகின்றன, மற்றும் கம்ப்யூட்டர் கோர்ஸ். கெமிக்கல் கோர்ஸ் போன்றவைகளை ஆரம்பிக்கின்ற திட்டம் நம்முடைய அரசிடம் உள்ளதா என்பதைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. என். நேரு : துணைத் தலைவர் அவர்களே, தற்போது அரசின் முடிவு அப்படி அல்ல. இருந்தாலும் ஏற்கெனவே சொன்னது போல் இப்போது மத்திய அரசின் உதவியோடு தமிழகத்தில் 5 இடங்களில் புதிய ஐ.டி.ஐ. கட்டவிருக்கிறோம். வரும் ஆண்டு காலத்தில், சென்னையிலும அதே போல் அமைவதற்கு ஆவன செய்யும்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

சின்னவுடைப்பேரி குளத்தில் உடைப்பை அடைக்கும் பணி

வினா எண். 583—திரு. ஆர். ஈஸ்வரன் : மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சிவகிரியிலுள்ள சின்னவுடைப்பேரி குளத்தில் உடைப்பு எற்பட்டுள்ளதை அடைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

சிவகிரி வட்டம், சிவகிரி கிராமத்தில் உள்ள சின்னவுடைப்பேரி குளத்தில் 26, அக்டோபர் 1987 அன்று ஏற்பட்ட உடைப்பை நிரந்தரமாக அடைக்கும் பணி செப்டம்பர் 1989-க்குள் முடிக்கப்பட்டுவிட்டன.



அம்மாப்பேட்டை ஒன்றியத்தில் சாலைகள் சீர் செய்தல்.

வினா எண். 937, — திரு. வெ. பெரியசாமி— மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா ?

அந்தியூர் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட ஊராட்சி ஒன்றியசாலைகளும், ஊராட்சி சாலைகளும் பழுதுபட்டுள்ளதை சீர் செய்ய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

விடை—

தற்போதுள்ள நிதி ஆதாரங்களைக்கொண்டு இப்பணிகளை எடுத்துச் செய்ய இயலாதுள்ளதென அம்மாப்பேட்டை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

வறட்சி துயர் துடைப்பு நிவாரணப் பணி.

வினா எண். 1098—திரு. மெ. ஆண்டி அம்பலம் ; மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) 1986-87 மற்றும் 1987-88 வறட்சி துயர் துடைப்பு நிவாரணப் பணிகளுக்காக திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

(ஆ) இதில் நத்தம் தொகுதிக்கு ஒதுக்கப்பட்ட தொகை எவ்வளவு?

விடை—

(அ) வறட்சி நிவார்ணப் பணிகளுக்காக திண்டுக்கல் காயிதே மில்லத் மாவட்டத்துக்கு 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 104.68 இலட்சமும் மற்றும் 1987-88ம் ஆண்டில் ரூ. 163.54 இலட்சமும் ஒதுக்கப்பட்டன.

(ஆ) 1986-87 ஆம் ஆண்டில் ரூ. 45,000-மும், 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 5,54,539-மும் நத்தம் ஒன்றியத்துக்கு ஒதுக்கப்பட்டன.

திருக்குவளை ஆதி திராவிடர் தெருவை சாலையுடன் இணைக்கும் பாலம்.

வினா எண். 1185—திரு. மா. மணிமாறன்:—மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டம், திருக்குவளை ஆதி திராவிடர் தெருவைச் சாலையுடன் இணைக்கும் பாலம் பழுதுபட்டுள்ளது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை என்ன?

விடை—

(அ) திருக்குவளை ஆதி-திராவிடர் தெருவை மெயின் சாலையுடன் இணைக்கும் பாலம் நல்ல நிலையில் உபயோகத்தில் உள்ளது.

(ஆ) இக்கேள்வி எழ இடமில்லை.

**பாலாற்றில் தரைப்பாலம் கட்டுதல்.**

வினா எண். 1600—திரு. வீ. தமிழ்மணி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கரும்பு சாலை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் செங்கை அண்ணா மாவட்டத்திற்கு அருகில் உதயம்-பாக்கம்-படாளம் சாலை அபிவிருத்தி வேலைக்காக பாலாற்றில் கட்டப்படும் தரைப்பால வேலை எந்த நிலையில் உள்ளது?

(ஆ) அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) பாலாற்றின் குறுக்கே தரைப்பாலம் கட்ட ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு மதிப்பீடு தயார் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**ஜோலார்பேட்டை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கட்டிடம கட்டுதல்.**

வினா எண். 1850—திரு. ப. சுந்தரம்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) வட ஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், ஜோலார்பேட்டையில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குச் சொந்தமாக கட்டடம் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?



(ஆ) ஆம் எனில், உடன் கட்டி முடிப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) அரசின் தற்போதைய கொள்கைப்படி, பொது மக்களிடமிருந்து 5 ஏக்கர் நிலமும் ரூ.10,000-ம் நன்கொடையாக கிடைக்கப் பெற்றால் சொந்தக் கட்டடம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்குக் கட்ட நடவடிக்கை எடுக்கப்படும். இவை இரண்டும் இன்னும் பெறப்படாததால் ஜோலார்பேட்டையில் ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடம் கட்டும் செயற்குறிப்பு தற்பொழுது அரசின் பரிசீலனையில் இல்லை.

**காரைக்குடியில் துணை மண்டலப் போக்குவரத்து அலுவலகம் அமைத்தல்.**

வினா எண். 2187—திரு. ராம. நாராயணன்: மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பசும்பொன் தேவர் திருமகன் மாவட்டத்திலுள்ள காரைக்குடியில் துணை மண்டல போக்குவரத்து அலுவலகம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை.

**20,000 மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மருத்துவமனை உருவாக்குதல்.**

வினா எண். 2376—திரு. ஆர். அண்ணாநம்பி: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

20,000 மக்கள் தொகை கொண்ட நகரங்களுக்கு மருத்துவமனை உருவாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

விடை—

20,000 மக்கள் தொகை கொண்ட நகரங்களில் மருத்துவமனை அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் தற்பொழுது அரசின் ஆய்வில் இல்லை.

## செம்மறி ஆடுகள் வளர்க்க உலக வங்கியிடம் நிதி உதவி.

வினா எண். 2877— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் செம்மறி ஆடுகள் வளர்க்க உலக வங்கியிடம் நிதி உதவி பெறப்பட்டுள்ளதா?

(ஆ) இந்த நிதி உதவி எந்தெந்த ஆடு வளர்ப்போர் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கப்பட்டு உள்ளது?

விடை—

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவுக்கு இடமில்லை.

## சென்னையில் படித்த இளைஞர்களுக்குச் சுயவேலை வாய்ப்பு அளிக்க செயல்படும் கூட்டுறவுச் சங்கங்கள்

வினா எண். 2897— திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சென்னையில் படித்த இளைஞர்களுக்கு சுயவேலை வாய்ப்பு அளிக்க ( Self Employment Co-operative Society ) செயல்படுகின்றதா?

(ஆ) ஆம் எனில், அதன் மூலம் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எத்தனை பேர் ?

விடை—

(அ) சென்னையில் படித்த இளைஞர்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளிக்க செயல்படும் கூட்டுறவு சங்கங்கள் இரண்டு. அவை—

1. நேசே கூட்டுறவு சிக்கன கடன் சங்கம்.
2. சென்னை நவீனப் பொறியாளர் கட்டுமானக் கூட்டுறவு சங்கம் ஆகும்.



(ஆ) நேசேனல் ( National Association of Self Employed youth) கூட்டுறவு சிக்கன கடன் சங்கம் மூலம் 160 பேர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். சென்னை நவீனப் பொறியாளர் கட்டுமான கூட்டுறவுச் சங்கம் மூலம் 29 பேர் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

## வாட்டாத்திக்கோட்டைக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டுதல்.

வினா எண். 3567— திரு. ஆர். சிங்காரம்; மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம் வாட்டாத்திக்கோட்டை காவல் நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், வாட்டாத்திக்கோட்டைக் காவல் நிலையத்திற்குப் புதிய கட்டிடம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## பேராவூரணி காவல் நிலையத்தைப் பழுது பார்த்தல்.

வினா எண். 3570— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தஞ்சை மாவட்டம், பேராவூரணி காவல் நிலையம் பழுதடைந்துள்ளதை பழுதுபார்க்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

தஞ்சை மாவட்டம், பேராவூரணி காவல் நிலையம் பழுதடைந்துள்ளதை பழுதுபார்க்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

## 3. இராமநாதபுரம் மாவட்டத்தில் கல்லூரிகள்.

வினா எண். 3642—டாக்டர் எஸ். சுந்தரராஜ், மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளி...

(அ) இராமநாதபுரம் மாவட்டத்தில் அரசு ஆண்கள் கல்லூரிகள், அரசு பெண்கள் கல்லூரிகள் எத்தனை?

(ஆ) மேலும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

விடை—

(அ) இம்மாவட்டத்தில் ஆண்களுக்கென சேதுபதி அரசு கலைக்கல்லூரி என்ற பெயர் கொண்ட கல்லூரி ஒன்று உள்ளது, பெண்களுக்கென அரசு கல்லூரி ஏதும் இல்லை.

(ஆ) இல்லை.

### முதுகுளத்தூர் கண்மாயை மராமத்து செய்தல்

வினா எண். 3847—திரு. எஸ். காதர்பாட்சா என்கிற வெள்ளைச்சாமி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் கண்மாயை பொதுப்பணித் துறை மூலம் மராமத்து செய்ய மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வேலை தொடங்கப்படும்?

விடை—

(அ) ஆம்.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் முதுகுளத்தூர் கண்மாயின் மடை மற்றும் கலிங்கு மராமத்து செய்ய ரூ. 65,000-க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு 1989-90 ஆம் ஆண்டுக்கான திருத்திய வரவு செலவு திட்ட அறிக்கையில் நிதி கோரப்பட்டுள்ளது. போதிய நிதி ஒதுக்கீடு கிடைக்கப்பெற்றதும் வேலை செயலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

### பரமக்குடி ஒன்றியத்தில் ஊரணிகள் ஆழப்படுத்துதல்.

வினா எண். 3945—டாக்டர் எஸ்.சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :



பரமக்குடி ஒன்றியம் விநோபா நகர் புதுக்குடி, வழிமறிச்சான், பிரண்டக்குளம் ஊரணிகள் ஆழப்படுத்தப்படுமா?

விடை—

மேற்கண்ட பணிகள் யாவும் 1989-90 ஆம் ஆண்டு ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

### பார்த்திபனூரில் ஆரம்பப்பள்ளிக்கு புதியதாக கட்டடம் கட்டுதல்.

வினா எண். 3981—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பரமக்குடி ஒன்றியம், பார்த்திபனூரில் ஆரம்பப் பள்ளிக்குப் புதியதாக கட்டிடம் கட்டும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி ஊராட்சிகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்பட வேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்து அந்தந்த ஊராட்சிகளுக்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### பீர்க்கன்குறிச்சி கண்மாய் மடைகளைப் புதுப்பித்தல்.

வினா எண். 3992—டாக்டர் எஸ். சுந்தரராஜ்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பரமக்குடி ஒன்றியத்தில் பீர்க்கன்குறிச்சி கண்மாய் மடைகளை புதுப்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) எப்போது புதுப்பிக்கப்படும் ?

விடை—

(அ) மற்று (ஆ) : பரமக்குடி ஒன்றியத்திலுள்ள பீர்க்கன்குறிச்சி கண்மாய் 81.89 ஏக்கர் பாசனப்பரப்பு கொண்ட பஞ்சாயத்து யூனியன் கண்மாய்

[1990, சனவரி 27

இக்கண்மாயின் மடைகள் 1983-84ஆம் ஆண்டில் ஊரக நிலமற்றோர் வேலைவாய்ப்பு உறுதித் திட்டத்தின் கீழ் புதுப்பிக்கப்பட்டு தற்போது கலிங்கு மடைகள், கரைகள் நல்ல நிலையில் உள்ளதால் மடைகள் புதுப்பிக்கும் திட்டம் தற்போது இல்லை.

### ரயில்வே மேம்பாலம் கட்டுதல்.

**வினா எண். 4326— திரு. என். பழனிவேல், திரு. வி. இராமசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திண்டுக்கல்—பழனிக்கு இடையே உள்ள நான்கு ரயில்வே கேட்டுகளுக்கு மேம்பாலம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

விடை—

இல்லை.

### வண்ணக் களஞ்சியப் புலவர் பிறந்த ஊரில் நினைவுச் சின்னம்.

**வினா எண். 4498— திரு. காதர் பாட்சா என்கிற வெள்ளைச்சாமி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், முதுகுளத்தூர் வட்டம் மீமிசல் கிராமத்தில் வண்ணக் களஞ்சியப் புலவர் பிறந்த ஊரில் நினைவுச் சின்னம் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும் ?

விடை—

(அ) இல்லை.



1990, சனவரி 27]

### கோவையில் காவலருக்கு புதிய குடியிருப்பு கட்டுதல்.

**வினா எண். 4531—திரு. மு. இராமநாதன்:** மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா:

கோவை மாநகரில் வெறைட்டி ஹால் ரோடு பகுதியிலும், அவிநாசி ரோடு பகுதியிலும் காவலர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டும் பணி எந்த நிலையில் உள்ளது?

விடை—

கோவை மாநகரில் வெறைட்டி ஹால் ரோடு பகுதியிலும் அவிநாசி ரோடு பகுதியிலும் காவலர்களுக்கு புதிய குடியிருப்பு கட்டும் பணி ஏதும் அரசிடம் நிலுவையில் இல்லை.

### அடைக்கத்தேவன் அணைக்கட்டிலிருந்து பாசன வசதி.

**வினா எண். 4594ஏ—திரு. ஆர். சிங்காரம்:** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

பேராவூரணி தொகுதி, அடைக்கத்தேவன் அனணக்கட்டிலிருந்து நீரேற்று முறையில் பெத்தனாச்சி வயல், கொண்ணக்காடு, ராவுத்தன் வயல், வில்லுணிவயல் கிராமங்களுக்குப் பாசன வசதி செய்து தரப்படுமா?

விடை—

பேராவூரணி தொகுதி, அடைக்கத்தேவன் அணைக்கட்டிலிருந்து நீரேற்று முறையில் ராவுத்தன் வயல், பெத்தனாச்சி வயல், கொண்ணக்காடு, வில்லுணி வயல், மரக்காவலசை கிராமங்களுக்கு பாசனமளிக்க முன்னோடி ஆய்வுகள் துவக்கப்பட்டுள்ளன. இதற்கான பாசனப் பரப்பு மற்றும் போதுமான நீர்வரத்து போன்ற விவரங்கள் சேகரிக்கப்பட்டு வருகின்றன. எனவே, இத்திட்டம் பற்றிய ஆய்வு முடிந்து, எடுத்துக்கொள்ளவேண்டிய சாத்தியக்கூறுகள் இருப்பின் இத்திட்டம் எடுத்துக்கொள்ளப்படும்.

### மல்லிப்பட்டினம் துறைமுகத்தில் மணல் அகற்றுதல்.

**வினா எண். 4677— திரு. ஆர். சிங்காரம்,** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு ...ரா :

தஞ்சை மாவட்டத்தில் மீன்பிடி விசைப்படகுகளை நிறுத்தி வைக்க ஏதுவாக கட்டப்பட்ட மல்லிப் பட்டினம் துறைமுகத்தில் மணலை அகற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

இக்கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**ஊராட்சிகளுக்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

வினா எண். 4682— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் சொந்தக் கட்டடம் இல்லாத ஊராட்சிகளுக்கு அரசு செலவில் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

ஜவஹர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மைய அரசால் வெளியிடப்பட்டுள்ள வழிமுறைகளின்படி ஊராட்சிகளில் மேற்படி திட்டத்தின் கீழ் எடுத்துச் செய்யப்படவேண்டிய பணிகளைத் தேர்ந்தெடுப்பது குறித்து அந்தந்த ஊராட்சிகளுக்கு அதிகாரம் வழங்கப் பட்டுள்ளது. எனவே இப்பொருள் குறித்து அரசிடம் திட்டம் எதுவுமில்லை.

**அம்மணிசத்திரம் மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்டுதல்.**

வினா எண். 4716— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, அம்மணிசத்திரம் மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்டிக்கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை —

பேராவூரணி தொகுதி அம்மணி சத்திரம் மீனவர்கள் வீடுகள் கட்ட நிலம் அளிக்க முன்வந்தால், நிதி நிலைமைக்கேற்ப கோரிக்கை பரிசீலிக்கப்படும்.





**அடைக்கத்தேவன் மீனவர்களுக்கு காலனி கட்டுதல்.**

வினா எண். 4717— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பேராவூரணி தொகுதி அடைக்கத்தேவன் மீனவர்களுக்கு காலனி கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

பேராவூரணி தொகுதி, அடைக்கத்தேவன் மீனவர்களிடமிருந்து வீடுகள் கட்ட நிலத்துடன் கோரிக்கை பெறப்பட்டால், நிதி நிலைமைக்கேற்ப பரிவுடன் பரிசீலிக்கப்படும்.

**புதுப்பட்டினம் மீனவர்களுக்கு மீனவர் காலனி கட்டுதல்.**

வினா எண். 4718— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி புதுப்பட்டினம் மீனவர்களுக்கு மீனவர்கள் காலனி கட்டிக்கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை —

பேராவூரணி தொகுதி புதுப்பட்டினம் மீனவர்களிடமிருந்து வீடுகள் கட்ட நிலத்துடன் கோரிக்கை பெறப்பட்டால் நிதி நிலைமைக்கேற்ப பரிவுடன் பரிசீலிக்கப்படும்.

**ஒட்டங்காடு பெரிய ஏரிக்கு புதுப்பட்டினம் வாய்க்காலில்லிருந்து பைப் போடுதல்.**

வினா எண். 4734— திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

பேராவூரணி தொகுதி, ஒட்டங்காடு பெரிய ஏரிக்கு புதுப் பட்டினம் வாய்க்காலிலிருந்து பைப் போடும் செய்ற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

பேராவூரணி தொகுதி ஒட்டங்காடு பெரிய ஏரிக்கு புதுப் பட்டினம் வாய்க்காலிலிருந்து பைப் போடும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

தனால் இதை மாற்றி புதிய ஜீப் வாங்க மேற்படி ஒன்றியத்திலிருந்து கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

விடை—

(அ) ஆம்.

(ஆ) சேதுபாவாசத்திரம் ஊராட்சி ஒன்றியம் தனது பழுதுபட்ட ஜீப் டி.எம்.டபிள்யூ 5076-க்குப் பதிலாக புதிய ஜீப்பினை ஊரக வளர்ச்சி இயக்குநரின் முன் அனுமதியுடன் வாங்கிக் கொள்ள அரசாணை (நிலை) எண். 640, ஊரக வளர்ச்சி, நாள் 4, நவம்பர் 1989 அன்று உத்தரவு பிறபிக்கப்பட்டுள்ளது.

**கொள்ளுக்காடு ஊராட்சி புதுநகர் ஆதிதிராவிடர் தெருவிற்கு மின் இணைப்பு.**

**வினா எண். 4786**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவோணம் ஒன்றியம், கொள்ளக்காடு ஊராட்சி புதுநகர் ஆதி திராவிடர் தெருவிற்கு மின் இணைப்பு கொடுக்க அரசு முன்வருமா ?

விடை—

திருவோணம் ஒன்றியம், கொள்ளுக்காடு ஊராட்சி புது நகர் ஆதி திராவிடர் காலனியில் 3 தெரு விளக்குகள் ஏற்கெனவே பொருத்தப்பட்டு நல்ல முறையில் எரிந்துகொண்டிருக்கின்றன. இங்கு 30 குடிசைகள் உள்ளன. இந்த குடிசைகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின்கீழ் மின் இணைப்பு கோரி இதுவரை மின்வாரியத்திற்கு விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. விண்ணப்பங்கள் வந்தபின் வரிசைப்படி குடிசைகளுக்கு மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப் படும்.

**அம்மணிசத்திரம் கிராமத்திலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போடுதல்.**

**வினா எண். 4853**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மின் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா :



**பாசன வாய்க்கால்களில் சாத்துக்கல்லு கட்டுதல்.**

**வினா எண். 4747**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

பேராவூரணி தொகுதி, அடைக்கன்தேவன் அணைக் கட்டிலிருந்து பூசமடம், பெருமடத்தான் ஏரிக்கு வரும் பாசன வாய்க்காலில் சாத்துக்கல்லு கட்டி பராமரிக்க அரசு ஆவன செய்யுமா

விடை—

கல்லணைக் கால்வாய்ப்பகுதியில் உள்ள ஏரிகளை உலக வங்கி உதவியுடன் நவீனப்படுத்தும் திட்டம் ஆய்வில் உள்ளது. மேற்படி திட்டம், செயலுக்கு எடுத்துக் கொள்ளும்போது பேராவூரணித் தொகுதி அடைக்கத் தேவன் அணைக்கட்டிலிருந்து பூசமடம், பெருமடத் தான் ஏரிக்கு வரும் பாசன வாய்க்கால்களைச் சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**சோலைக்காடு கிராமத்திற்கு மின் விநியோகம்.**

**வினா எண். 4762**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப் பாரா:

பேராவூரணி தொகுதி, சோலைக்காடு கிராமத்திற்கு கூத்தாடி வயல் டிரான்ஸ்பார்மரிலிருந்து மின்சார சப்ளை செய்ய அரசு ஆவன செய்யுமா ?

விடை -

சோலைக்காடு பகுதியிலேயே விநியோக மின்மாற்றி அமைப்பதற்கான பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக் கின்றன. இவை முடிந்தவுடன் சோலைக்காடு கிராமத்திற்கு இப்புதிய மின்மாற்றி மூலமாக மின் விநியோகம் கிடைக்கும்.

**சேதுபாவாசத்திரம் ஒன்றியத்திற்கு புதிய ஜீப் வாங்குதல்.**

**வினா எண். 4777**—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை . அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) பேராவூரணித் தொகுதி, சேதுபாவா சத்திரம் ஒன்றி யத்தில் ஜீப் டி.எ டபிள்யு. 5076 பழுதுபட்ட

சேதுபாவா சத்திரம் ஒன்றியம்; அம்மணி சத்திரம் கிராமத்திலுள்ள குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

சேதுபாவா சத்திரம் ஒன்றியம், அம்மணி சத்திரம் கிராமத்திலுள்ள 54 குடிசைகளுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு திட்டத்தின் கீழ் மின் இணைப்பு கோரி மின்வாரியத்திற்கு இதுவரை விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. விண்ணப்பங்கள் வரப்பெற்றபின் வரிசைப்படி மின் இணைப்பு வழங்க ஆவன செய்யப்படும். மேலும் இப்பகுதியில் உள்ள 16 தெரு விளக்குகள் நல்ல நிலையில் எரிந்து கொண்டிருக்கின்றன.

### அடைக்கத்தேவன் ஊராட்சி குடிசைகளுக்கு ஒற்றை விளக்கு போடுதல்.

வினா எண். 4856—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சேதுபாவா சத்திரம் ஒன்றியம், அடைக்கத் தேவன் ஊராட்சி குடிசைகளுக்கு ஒற்றை விளக்குப் போட அரசிடம் திட்டம் உள்ளதா?

விடை—

சேதுபாவா சத்திரம் ஒன்றியம் அடைக்கத்தேவன் ஊராட்சியிலுள்ள 60 குடிசைகளுக்கு, ஒரு குடிசைக்கு ஒரு விளக்குத் திட்டத்தின் கீழ் மின் இணைப்புக் கோரி இதுவரை மின்வாரியத்திற்கு விண்ணப்பங்கள் ஏதும் வரவில்லை. மின் இணைப்புக் கோரி விண்ணப்பங்கள் வரப் பெற்றால் வரிசைப்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். மேலும் இப்பகுதியில் 14 தெரு விளக்குகளுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டு நல்ல நிலையில் இயங்கி வருகின்றன.

### இடையாத்தி மேற்கு கோனார் தெருவிலுள்ள தொடக்கப்பள்ளிக் கட்டடம்.

வினா எண். 4857—திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :





பேராவூரணி ஒன்றியம், இடையாத்தி, மேற்கு கோனார் தெருவிலுள்ள தொடக்கப் பள்ளிக் கட்டிடம் கட்டும் வேலை எப்போது துவங்கப்படும்?

விடை—

ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் ஒவ்வொரு நிதியாண்டிலும் அரசால் ஒதுக்கப்படும் நிதியிலிருந்து, பணியின் தன்மை, கிராம மக்கள் பெறும் நன்மைகள் என்று முக்கிய குறிக்கோள்களின் அடிப்படையில், பேராவூரணி ஊராட்சி ஒன்றியமே எடுத்து நிறைவேற்றும்.

### திருக்காட்டுப்பள்ளி நகரப் பேருந்து நிலையம் அமைத்தல்.

வினா எண். 4897—திரு. துரைசந்திரசேகரன்; மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

திருவையாறு தொகுதி, திருக்காட்டுப்பள்ளி நகரில் புதிதாக நவீன வசதிகளுடன் பேருந்து நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

விடை—

திருக்காட்டுப்பள்ளி பேரூராட்சியில் பேருந்து நிலையம் கட்ட போதுமான இடவசதி இருந்து, திட்டமும் பயன்தரத்தக்கதாக இருந்து, மாவட்ட ஆட்சித் தலைவரின் பரிந்துரையுடன் கருத்துரு பெறப்பட்டால் நகர ஊரமைப்பு இயக்குநருக்கு கடனுதவி வழங்க பரிந்துரை செய்யப்படும். நகர் ஊரமைப்புத் திட்டக்குழுவின் ஒப்புதல் பெறப்பட்டால் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

### சாத்தனூர் அணையில் உல்லாச மோட்டார் படகுகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்துதல்.

வினா எண். 5108—திரு. கே. பிச்சாண்டி: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

சாத்தனூர் அணையில் பிரயாணிகளை கவரும் வண்ணம் உல்லாச மோட்டார் படகுகளின் எண்ணிக்கையை அதிகரிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.

[1990 சனவரி, 27

**திருவண்ணாமலை நகரில் மகளிர் உயர்நிலைப்பள்ளி அமைத்தல்.**

**வினா எண். 5149—திரு. கே. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

*திருவண்ணாமலை நகரில் மகளிர் உயர்நிலைப் பள்ளி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?*

விடை—

*திருவண்ணாமலை நகராட்சியில் ராசராசன் தெரு, நகராட்சி நடுநிலைப்பள்ளி, நகராட்சி பெண்கள் உயர்நிலைப்பள்ளியாக 1989-90-ல் உயர்த்தப்பட்டுள்ளது,*

**வேட்டவலத்தில் மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைத்தல்.**

**வினா எண். 5168—திரு. கே. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

*திருவண்ணாமலை தொகுதி, வேட்டவலத்தில் மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைக்கப்படுமா?*

விடை—

*1989-90-ஆம் கல்வியாண்டில் வேட்டவலத்தில் மகளிர் மேல்நிலைப்பள்ளி அமைக்கக் கோரி கருத்துருக்கள் பெறப்படவில்லை.*

**திருவண்ணாமலை அரசு கலைக்கல்லூரி**

**வினா எண். 5173—திரு. கே. பிச்சாண்டி:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

*திருவண்ணாமலை அரசு கலைக்கல்லூரியில் முதுகலை வரலாறு பட்டப்படிப்பு, முதுகலை தாவரவியல், முதுகலை வணிகவியல், இளம் அறிவியல், கனிப்பொறியியல் இவைகளைப் புதியதாகத் துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?*

விடை—

**இல்லை.**



1990 சனவரி, 27]

**கால்நடை கிளை நிலையங்கள்.**

**வினா எண். 5306—திரு. பெ. வெங்கடாசலம் :** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

*கால்நடை கிளை நிலையங்களை முழு நேரமும் திறந்து வைக்க அரசு ஆணை பிறப்பிக்குமா?*

விடை—

*கால்நடை கிளை நிலையக் கால்நடை ஆய்வாளர்கள் காலை நேரங்களில் கால்நடை கிளை நிலையப் பணிகளையும் மாலை நேரங்களில் கிராமம் கிராமமாகச் சென்று அங்குள்ள கால்நடைகளுக்கு 1. சிகிச்சை செய்தல், 2. தடுப்பூசி போடுதல், 3. சினை ஊசி போடுதல், 4. காயடித்தல், 5. குடற்புழு நீக்கம், 6. சினைப் பரிசோதனை போன்ற வெளிப் பணிகளைக் கவனிப்பதால் கால்நடை கிளை நிலையங்களை முழு நேரமும் திறந்து வைப்பதற்கான சூழ்நிலை இல்லை.*

**உமரிக்காடு, வாழவல்லான் கிராமங்களிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக மாற்றுதல்.**

**வினா எண். 5375—திரு. எஸ். டேனியல்ராஜ் :** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

*ஸ்ரீவைகுண்டம் தாலுகா உமரிக்காடு, வாழவல்லான் கிராமங்களிலுள்ள அரசு உயர்நிலைப்பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?*

விடை—

*ஸ்ரீவைகுண்டம் தாலுக்கா உமரிக்காடு மற்றும் வாழவல்லான் ஆகிய ஊர்களில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப்பள்ளிகளாக உயர்த்துவதற்கு கருத்துருக்கள் பெறப்பட்டு உயர்மட்டக் குழுவின் பரிசீலனைக்கு வைக்கப்பட்டன. ஆனால் அப்பள்ளிகள் அக்குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளை நிறைவு செய்யாத காரணத்தால் தேர்ந்தெடுக்கப்படவில்லை.*

**தஞ்சை மாவட்டத்தில் சமூக வனக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின் கீழ் நடப்பட்ட மரக்கன்றுகள்.**

**வினா எண். 5402—திரு. இரெ. இராசமாணிக்கம்:** மாண்புமிகு இந்துசமய அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1988-89-ல் சமூக வனக்காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் நடப்பட்ட மரக்கன்றுகள் எத்தனை?

(ஆ) செலவான தொகை எவ்வளவு?

(இ) தற்போது உயிரோடு உள்ள கன்றுகள் எத்தனை?

விடை—

(அ) தஞ்சை மாவட்டத்தில் 1988-89-ல் (சமூகக் காடுகள் திட்டத்தில்) நடப்பட்ட மரக்கன்றுகள் 9,64,515.

(ஆ) செலவான தொகை ரூ. 19,48,286.00.

(இ) தற்போது உயிரோடு உள்ள மரக்கன்றுகள் 7,68,080.

**திருப்பத்தூரில் பெண்கள் கல்லூரி ஆரம்பித்தல்.**

**வினா எண். 5528—திரு. ப. சுந்தரம்:** மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வடஆற்காடு டாக்டர் அம்பேத்கார் மாவட்டம், திருப்பத்தூரில் ஒரு பெண்கள் கல்லூரி ஆரம்பிக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

விடை—

இல்லை.





**நூக்கம்பாடி கிராமத்தில் வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம்.**

**வினா எண். 5570—திரு. பெ. சு. திருவேங்கடம் :** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், திருவண்ணாமலை வட்டம், நூக்கம்பாடி கிராமத்தில் தனியாக வேளாண்மைக் கூட்டுறவுச் சங்கம் நிறுவும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை.

**கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வீடுகள்.**

**வினா எண். 5583—திரு. கே. ஆர். ஜி. [illegible]:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) கால்நடை மருத்துவமனையில் கால்நடை உதவி மருத்துவர்களுக்கு வீடு கட்டித்தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) தற்பொழுது ஏதுமில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**பரமக்குடியில் சப்கோர்ட் அமைத்தல்.**

**வினா எண். 5625—டாக்டர் எஸ். சுந்தரராஜ்:** மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியி சப்-கோர்ட் திறக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், உயர்நீதிமன்றத்திற்கு சிபாரிசு செய்யப் படுமா?

விடை—

(அ) மற்றும் (ஆ) பிரிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் புதிய நீதிமன்றங்கள் அமைக்கும்போது பரமக்குடியில் சார்பு நீதிமன்றம் ஒன்றை அமைக்க உயர்நீதிமன்றம் கருத்துரு ஒன்றை அனுப்பியுள்ளது. இது அரசின் பரிசீலனையிலுள்ளது.

**காங்கேயம் வட்டத்தில் சப்கோர்ட் அமைத்தல்.**

வினா எண். 5643—திரு. பி. மாரப்பன் : மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

காங்கேயம் வட்டத்தில் சப்கோர்ட் அமைக்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

விடை—

இல்லை.

**நூல் நிலையங்களில் வீடியோ மூலம் கல்வி நிகழ்ச்சிகள் காட்டுதல்.**

வினா எண். 6194—திரு. எஸ். டி. உகம்சந்த்: மாண்புமிகு கல்வி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தமிழ்நாட்டில் உள்ள நூல் நிலையங்களில் வீடியோ மூலம் கல்வி நிகழ்ச்சிகள் காட்ட ஏற்பாடு செய்யப் படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) மாநில மைய நூலகமான சென்னை கன்னிமாரா பொது நூலகம், சென்னை மாவட்ட மைய நூலகம், திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்ட மைய நூலகம் மற்றும் பசும்பொன் தேவர் திருமகன் மாவட்ட மைய நூலகம் ஆகிய நூலகங்களில் வீடியோ மூலம் கல்வி நிகழ்ச்சிகள் காட்ட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. இதனை மேலும் அனைத்து மாவட்ட மைய நூலகங்களுக்கும் 1989-90-ஆம் ஆண்டு முடிவுக்குள் விரிவுபடுத்தும் திட்டமுள்ளது.



**மேலூரில் தொழிற்பேட்டை அமைத்தல்.**

வினா எண். 6539—திரு. கு. வெ. வீ. இராசமாணிக்கம்: மாண்புமிகு சமூக நலம் மற்றும் ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் தொழிற் பேட்டை அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) மற்றும் (ஆ) மேலூர் சட்டமன்றத் தொகுதி, மேலூரில் தொழிற்பேட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.—

**மறைமலை நகரில் அரங்கு அமைத்தல்.**

வினா எண். 7216—திரு. ப. சுந்தரம் : மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர்நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா:

(அ) மறைமலை நகரில் சென்னையில் உள்ள கலைவாணர் அரங்கு போல் ஓர் அரங்கை அமைக்கும் செயற் குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

விடை—

(அ) இல்லை.

(ஆ) கேள்வி எழாது.

(குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் * உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்)

(அ) மேல்நிலைத் நீர்த் தேக்கத் தொட்டி, பம்ப் ஆப்ப ரேட்டர்களுக்கு அரசு அறிவித்துள்ள பொங்கல் பரிசுத் தொகை வழங்கப்படாதது குறித்து.

* திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : துணைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு பொங்கல் பரிசாக அரசு ஊழியர்களுக்கும், ஊராட்சிகளிலே பணியாற்றுகின்ற ஊழியர்களுக்கும், அரசு உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களிலே பணியாற்றுகின்றவர்களுக்கும், நிரந்தரம் ஆக்கப்பட்டவர்களுக்கும், நிரந்தரம் ஆக்கப்படாதவர்களுக்கும் ரூ. 400 தரப்பட வேண்டும் என்று அரசு ஆணை தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அதுபோல் நிரந்தரம் ஆக்கப்படாதவர்களாக இருந்தாலும் கூட, தினக்கூலி பெறுகின்றவர்களாக இருந்தாலும் கூட 240 நாட்களுக்கு மேலாகப் பணியாற்றியிருந்தால் அந்தப் பரிசுத் தொகையைக் கொடுக்க வேண்டும், கருணைத் தொகையைக் கொடுக்க வேண்டும் என்று அரசு ஆணையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஊரக வளர்ச்சி ஆணையாளர், குடிநீர்த் தொட்டிக்குத் தண்ணீர் விடுகின்ற மோட்டார் இயக்குபவர்களுக்கு இந்தப் பரிசுத் தொகை கிடைக்காது, அவர்களுக்குத் தரக்கூடாது என்று அவர்கள் விளக்கம் அளித்திருக்கிறார்கள். இதனால் பல்வேறு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பம்ப் இயக்குபவர்களுக்கு இந்த ஆண்டு அந்த 400 ரூபாய் பரிசுத் தொகை கிடைக்கவில்லை. பல் வேறு பஞ்சாயத்து யூனியன்களிலேயும், ஊராட்சிகளிலேயும் கிடைக்கவில்லை. சென்ற ஆண்டும் சரி, அதற்கு முன்பு 2 ஆண்டுகளும் சரி, கடந்த 3 ஆண்டுகளாக அவர்களுக்குப் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வந்திருக்கிறது. எனவே இந்த ஆண்டும் அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி தண்ணீர் பம்ப்பை இயக்குபவர்களுக்குப் பரிசுத் தொகை கிடைக்க அரசு ஆணை பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

10.45 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடந்த இரண்டு, மூன்று நாட்களாகவே நண்பர் திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இது குறித்து என்னிடத்திலே பேசி வந்த காரணத்தினாலே இப்போது கேட்கக்கூடும் என்று எதிர்பார்த்து சில புள்ளி விவரங்களோடு வந்திருக்கிறேன்.

தலைவர் அவர்களே, இந்த ஆண்டு மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி பம்ப் ஆப்பரேட்டர்களுக்குப் பொங்கல் பரிசு வழங்குவது பற்றி பம்ப் ஆப்பரேட்டர்கள் சங்கத்தின் வேண்டுகோள் மனு பரிசீலிக்கப்பட்டது. மேற்படி பம்ப் ஆப்பரேட்டர்கள் அரசு சிப்பந்திகள் அல்ல. ஊராட்சி



ஒன்றியப் பணியாளர்களும் அல்ல. ஊராட்சிகளின் முழுநேரப் பணியாளர்களும் அல்ல நிர்ணயம் செய்யப்பட்ட ஊதிய விகிதப் பணியாளர்களும் அல்ல, ஆனால் ஊராட்சிகளில் பணிக்கூலி பெறுபவர்களாக, ஊராட்சித் தலைவர்களால் நியமிக்கப்பட்டு, ஊராட்சி நிதியிலிருந்து பணிக் கூலி அளிக்கப்படுகின்றவர்கள். இவர்கள் ஊதியம் பெறும் நிர்வாகப் பணியாளர்கள் அல்லவே அல்ல. இந்தப் பணக்கூலியும் ஒரே சீராக இல்லாமல், ஊராட்சிக்கு ஊராட்சி மாறுபட்ட விதத்தில், ரூபாய் 30 முதல் ரூபாய் 150 வரை அவர்களுக்கு அளிக்கப்படுகிறது. இந்தப் பம்ப் பணியாளர்களின் பணி, மின்விசை ஸ்விட்ச்சுகளை ஏற்றுவதும், அவற்றை அணைப்பதும்தான். இவற்றைக் கருத்தில் கொண்டு, கடந்த இரண்டு ஆண்டுகளிலும் பொங்கல் பரிசு வழங்கவேண்டாம் என மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டது. இதுவரை எந்த ஆண்டிலும் பொங்கல் பரிசு அவர்களுக்கு வழங்க அனுமதி அளிக்கப்படவில்லை. மேலும் பொங்கல் பரிசு மேற்படி பணியாளர்களுக்கு வழங்குவது என்றால், ரூபாய் 400 வீதம் 19,000க்கு மேற்பட்ட பணியாளர்களுக்கு 76 இலட்சம் ரூபாய் செலவாகும். இச்செலவினம் ஊராட்சிகளால் மேற்கொள்ளப்படவேண்டும். சில ஊராட்சிகளில் 4 மேல்நிலைத் தொட்டி பம்ப் ஆப்பரேட்டர்கள் உள்ளதால், அந்த ஊராட்சிகளுக்கு 1600 ரூபாய் வரை செலவினம் மேற்கொள்ள நேரிடும். இவற்றை எல்லாம் எண்ணிப்பார்த்துதான் அவர்களுக்கு வழங்கப்படவில்லை.

(ஆ) இராமநாதபுரம் மாவட்டம் கடலோரக் கிராமங்களில் புயலாலும் வெள்ளத்தாலும் ஏற்பட்டுள்ள உயிர்சேதம் மற்றும் ஏனைய சேதங்களையொட்டி மேற்கொள்ள வேண்டிய நிவாரண நடவடிக்கைகள் குறித்து

திரு. கே. ஆர். இராமசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எனது மாவட்டமான இராமநாதபுரம் மாவட்டம் கடுமையான வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கிறது. இந்த நேரத்தில் 7—1—90 அன்று கடுமையான புயலின் காரணமாக, கடலோரக் கிராமங்களாகிய நம்புதாழை, உள்ளிமலை, காரங்காடு ஆகிய கிராமங்கள் கடுமையாகப்பாதிக்கப் பட்டிருக்கின்றன. நம்புதாழையிலிருந்து இரண்டு படகுகளிலே சென்றவர்கள் மொத்தம் 13 நபர்கள் அப்போது புயலில் சிக்கி இறந்திருக்கிறார்கள். அங்கே அரசு ஆரம்ப - நிலையிலே புயல் அறிவிப்பை வானொலி மூலமாகவோ மற்ற எந்தச் செய்திகளின் மூலமாகவோ அறிவிக்கவில்லை. அவ்வாறு அறிவித்திருந்தால் அந்த 13 பேர்களுடைய உயிர்களைக் காப்பாற்றி இருக்கலாம். அந்தக் கிராமங்களிலே பல படகுகள் சேதம் அடைந்திருக்கின்றன. முழுமையாக ஆயிரக்கணக்கான வலைகள் தொலைந்து போய்

இருக்கின்றன. பல வீடுகள் புயலினால் சேதம் அடைந்திருக்கின்றன. இவைகளுக்கு, அங்கே இறந்த மீனவர்களுக்கு 6 பேர்களுக்கு மட்டுமே அரசு நிதியுதவி செய்து இருப்பதாக அறிகிறேன். மற்றும் அந்த நிதியுதவியை இன்னும் அதிகமாகச் செய்யவேண்டும் என்றும், வலைகளை இழந்த மீனவர்களுக்கு அந்த வலைகளை வாங்குவதற்கும் அரசு உதவி செய்ய வேண்டும்; வீடுகளை இழந்தவர்களுக்கு வீடு கட்டுவதற்கு....................

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; சீக்கிரம் முடியுங்கள்.

திரு. கே. ஆர். இராமசாமி : உதவி செய்யவேண்டும். உயிரையும், உடைமையையும் இழந்து பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு, மீனவர்களுக்கு இந்த அரசு நிச்சயமாக உதவிகளை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அங்கு உயிரிழந்த மீனவர்களுடைய குடும்பங்களுக்கு ஏற்கெனவே உதவி அளிக்கப்பட்டிருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினரே இங்கே ஏற்றுக் கொண்டு கூறியிருக்கின்றார்கள். இன்னும் தொடர்ந்து உதவிகள் செய்யப்படவேண்டுமேயானால், அவை குறித்துக் கவனித்து நடவடிக்கை எடுக்க மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுவார்கள்.

**(இ) திருமங்கலம் தொகுதியில் அண்மையில் பெருவெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள வேண்டியது குறித்து**

திரு. ஆர். சாமிநாதன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தென் மாவட்டங்களில் அண்மையில் 6—1—1990 முதல் 9—1—1990 முடிய பெய்த பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் வெள்ள நிவாரண நிதியாக அளித்த மாண்புமிகு தமிழினத் தலைவர் டாக்டர் முதல்வர் அவர்களுக்கும், வருவாய்த் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றி சொல்வதோடு, மதுரை மாவட்டத்தில் என்னுடைய திருமங்கலம் தொகுதியில் 6000 வீடுகளும் பொதுப்பணித் துறையைச் சார்ந்த கண்மாய்களும், நெடுஞ்சாலைத் துறையைச் சேர்ந்த சாலைகளும் சுமார் 1 கோடி ரூபாய்க்கு மேல் வெள்ளச் சேதம் ஏற்பட்டிருக்கின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடமையை நிறைவேற்றினாலும்கூட, நம்முடைய தமிழக அரசு வருவாய்த்துறை அதிகாரிகளே, வெள்ள நிவாரண



வேலைகளை மதிப்பீடு செய்வதற்கு, திருமங்கலம் தொகுதிக்கும் பாதிக்கப்பட்ட மற்ற மதுரை பகுதிகளுக்கும் அனுப்ப முன் வருமா என்பதை பணிவாகக் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

10-50 மணி

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. சாமிநாதன் அவர்கள் இப்போது கேட்ட கேள்விக்கு 4 நாட்களுக்கு முன்பு விரிவாக, விளக்கமாக நான் பதில் சொல்லியிருக்கிறேன். அது மட்டும் அல்ல, என்ன என்ன நிவாரணப் பணிகள் எடுக்கப்பட்டன என்பது குறித்தும், எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது பற்றியும் நான் தெரிவித்து இருக்கிறேன். கடந்த 4 நாட்களாக மாண்புமிகு உறுப்பினர் தம்பி திரு. சாமிநாதன் அவர்கள் என்னிடம் வந்து திருமங்கலம் தொகுதியைச் சேர்ந்த நான் ஏதாவது ஒரு கேள்வியை உங்களிடம் கேட்டு ஆக வேண்டும். அதற்கு நீங்கள் தருகின்ற பதில் பத்திரிகையில் வந்து ஆக வேண்டும். அப்போது தான் எனது தொகுதியில் எனக்குத் தனி மரியாதை கிடைக்கும் என்று தொடர்ந்து கேட்டுக் கொண்டே இருந்தார்கள். தொடர்ந்து சபாநாயகர் அவர்களும் இதற்கு விடை தந்து ஆயிற்று என்று சொல்லிக் கொண்டே இருந்தார்கள். கடைசியில் அனுதாபம் பொறுக்க முடியாமல், தாள முடியாமல், கருணையோடு தம்பி கடைசி நாள் கேள் நான் பதில் சொல்லுகிறேன் என்று சொன்னேன். தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும் திருமங்கலம் தொகுதிக்கு, உனது தொகுதிக்கு என்று நான் ஆசையோடு தெரிவித்துக் கொள்கிறேன். மகிழ்ச்சியோடு நீ ஊர் திரும்பு என்று சொல்லி வழி அனுப்பி வைக்கிறேன். (சிரிப்பு).

**(ஈ) உறுப்பினர் ஒருவர் கொடுத்துள்ள உரிமைப் பிரச்சினைக்கான அறிவிக்கை குறித்து**

திருமதி ரமணி நல்லதம்பி : **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து இருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள். அப்படி ஏதாவது நோட்டீஸ் கொடுக்கப்பட்டு இருக்கிறதா? அப்படியானால் எனக்கு அதைப்பற்றி அவைத் தலைவர் எந்தத் தகவலும் தரவில்லையே, என்ன காரணம்?

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது ஆய்வில் இருக்கிறது. ஆகவே இதை அனுமதிக்க முடியாது. அம்மையார் பேசிய பேச்சை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திர விடுகிறேன்.

(ஈ) போக்குவரத்து கழக ஊழியர் ஒருவர் உறுப்பினரிடம் நடந்து கொண்ட முறை குறித்து.

திருமதி ரமணி நல்லதம்பி : எல்லாம் ஆய்வில் இருந்தால் நான் எதைப்பற்றிப் பேசுவது. விதி 55-ன் கீழ் கொடுக்கப் பட்டதும் ஆய்வில் இருக்கிறது; அல்லது நிராகரிக்கப்படுகிறது. சட்ட மன்ற உறுப்பினராகிய என்னை இந்த அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்தில் பயணம் செய்கின்ற நேரத்தில் அந்தப் பேருந்தின் ஏஜெண்டு, என்னை அவமானப் படுத்தியவரை வேறு இடத்திற்கு மாற்றம் செய்ய........

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது குறித்து நீங்கள் மாண்புமிகு பேரவைத் தலைவருக்கு மனு கொடுத்திருக்கிறீர்கள். அந்த மனு உரிய அமைச்சர் அவர்களிடம் அனுப்பப் பட்டிருக்கிறது. மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் சம்பந்தப்பட்டவர்கள் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். அது பற்றி நீங்கள் இப்போது பேச வேண்டாம்.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி சென்னை ராஜ் பவனில் தங்கியிருந்தபோது தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசியதாகக் கூறப்படுவது குறித்து.

10.55 மணி

திரு. கோ. பூவராகன்: மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பாரதப் பிரதமர் திரு. வி.பி. சிங் அவர்கள், முன்னாள் பாரதப் பிரதமருக்கு அவர் எந்த மாநிலத்துக்குச் சென்றாலும் அங்கே தங்குவதற்கு ராஜ் பவனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சொல்லி எப்போதும்போல அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று நம்முடைய மாநில முதலமைச்சர் அவர்களுக்கு எழுதி இருந்து முன்னாள் பாரதப்பிரதமர் அவர்கள் ராஜ் பவனில் தங்கி இருந்தார்கள். தங்கியிருக்கின்றபோது பாண்டிச்சேரிக்கும் நம்முடைய அரசியல் விஷயமாக, அலையன்ஸ், ** கூட்டு. கட்சியிலே தொகுதி பங்கீடு விஷயமாகப் ** பேசப்

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பட்டிருக்கிறது. வெளியிலே பார்த்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கொடுக்கவில்லை, தனியாக எல்லோரையும் அவர்கள் கலந்து பேசுவதற்கு இடம் அளிக்காமல் ஏதோ தனி பங்களா தேடிக் கொண்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பேசப் பட்டது. பொதுவாக ஒரு மரபு, ராஜ்பவனத்தை இது மாதிரி அரசியல் காரணங்களுக்குப் பயன்படுத்தக் கூடாது. கட்சியிலே தொகுதி உடன்பாடுபற்றிப் பேசிப் பகிர்ந்துக்கொள்வதற்கு, ஒப்பந்தம் போடுவதற்கு இதைப் பயன்படுத்துவது முறையாக இருக்காது. இதுபற்றி நம்முடைய முதலமைச்சர் அவர்கள் என்ன நினைக்கிறார்கள். மற்ற கட்சிகளுக்கும் இது போன்று வருகின்றபோது ஏதாவது ஒருஇடத்தை ராஜ்பவனத்திலே ஒதுக்கித்தரமுடியுமா என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. குமரி அனந்தன் : மாண்புமிகு பேரவைத் துணைச் சபாநாயகர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பூவராகன் அவர்கள் கேட்டதிலே எதையும் நான் குறுக்கிட விரும்பவில்லை, அலையன்ஸ் பேசுகிறோம் ** ** ** ராஜ் பவனத்திலே தங்குவதற்குரிய எல்லா தகுதியும் எல்லா உரிமையும் முன்னாள் பிரதமருக்கு உண்டு. கேபினட் அந்தஸ்த்திலே இருக்கின்றவர். அவர் அங்கே இருக்கின்ற நேரத்திலே, அவரை, அரசியல் தலைவர்கள் சந்திப்பதிலே தவறு இல்லை. ஆனால் கவர்னருடைய செயலாளர் தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவரைத் தொடர்பு கொண்டு, அப்படி தலைவர்கள் அவரை போய் சந்திப்பது கவர்னருக்கு எம்பராசிங்-காக இருக்கும், தர்மசங்கடமாக இருக்கும் என்று சொன்ன காரணத்தை வைத்தே அந்தத் தகவல் வெளியே வந்ததே தவிர, நாங்கள் வேண்டுமென்றே எதையும் சொல்லவில்லை. அவர் அங்கே தலைவர் என்ற வகையிலே தங்கியிருக்கின்றபோது எல்லோரும் சென்று அவரைப் பார்ப்பதற்கு உரிமை உண்டு என்றுதான் நான் கருதுகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் துணைத்தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் நண்பர் திரு. பூவராகன் அவர்கள் விளக்கம் கேட்டபோது, 'அலையன்ஸ்' என்பதைப்பற்றி குறித்த அந்த வார்த்தை, அது தொகுதி உடன்பாடு குறித்து பேசினார்கள் என்ற வார்த்தைகள் அவைக் குறிப்பிலே இருக்கலாம். ஆனால், காங்கிரஸ் கட்சியினுடைய துணைத் தலைவர் குறிப்பிட்டுக் காட்டியதைப்போல 'அலையன்ஸ்' என்ற தொடர்பான அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலே இருந்து எடுத்துவிட தாங்கள் ஆணையிடுவீர்கள் என்று நான் நம்புகிறேன். அவர்கள் கேட்ட விளக்கத்திற்கு நம்முடைய காங்கிரஸ் கட்சித் துணைத் தலைவர் அவர்களும் ஒரு விளக்கத்தை வழங்கியிருக்கிறார்கள். இந்திய நாட்டினுடைய

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்கள். ராஜ்பவனத்திலே தங்கியதைப்பற்றி எந்தப் பிரச்சினையும் நிச்சயமாக இல்லை. அவர்களுடைய பாதுகாப்பு குறித்து டெல்லியிலிருந்து மாநில அரசுக்கு வந்த தாக்கீதை யொட்டி. புல்லட் புரூப் கார் உட்பட எல்லாவிதமான பாதுகாப்பும் முன்னாள் பிரதமர் திரு. ராஜீவ்காந்தி அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. நான் அதைப்பற்றி மீண்டும் விளக்க விரும்பவில்லை. அரசியல் கட்சியினுடைய தலைவர்கள். இந்திய நாட்டினுடைய எதிர்க் கட்சித் தலைவரைச் சந்திக்க அங்கே சென்றதிலும் எந்தத்தவறும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. ஆனால், அவர்கள் அங்கே தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசியதாகப் பத்திரிகைகளிலே செய்தி வந்திருக்கிறது. அரசியல் கட்சித் தலைவர்கள் அங்கே திரு. ராஜீவ்காந்தி அவர்களை சந்திக்க வரும்பொழுது என்ன பேச வருகிறார்கள் என்று நிபந்தனை போட்டுக்கொண்டு, அதற்குப்பிறகு கவர்னருடைய மாளிகையிலே அவர்களை யாரும் அனுமதிப்பது என்பது இயலாத காரியம். அவர்கள் சந்தித்த பிறகு தேர்தல் உடன்பாடு குறித்துப் பேசி இருப்பார்களானால் அதற்கு மேதகு ஆளுநர் அவர்கள் பொறுப்பாளி அல்ல என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மாண்புமிகு மன்ற உறுப்பினரால் 'அலையன்ஸ்' பற்றிப் பேசப்பட்ட பகுதிகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். 'அலையன்ஸ்' என்பதைத் தொடர்ந்து பேசப்பட்டதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடுகிறேன். (குறுக்கீடு).

**(ஏ) காவிரி நீர்ப் பிரச்சினை குறித்து கர்நாடக முதல்வர் தெரிவித்துள்ள கருத்து.**

**திரு. இளம்வழுதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காவிரி நீர் பிரச்சினை சம்பந்தமாக கர்நாடக முதல்வரோடு நான் தொடர்பு கொண்டு பேசியிருக்கிறேன் என்று நம்முடைய முதல்வர் அவர்கள் இந்த அவையிலே அறிவித்தார்கள். ஆனால், நம்முடைய முதல்வர் அவர்கள் அப்படி என்னோடு பேசவில்லை என்று கர்நாடக மாநில முதலமைச்சர் அறிவித்து, அது பத்திரிக்கையில் வந்திருக்கிறது. அதுகுறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் என்ன சொல்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

11.00 மணி

**திரு. எம். அப்துல் லத்தீப் :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினை என்பது நம்முடைய ஜீவாதார பிரச்சினை. அதில் அரசியலுக்கு இடமில்லை. ஆனால் இந்தப்





பிரச்சினையைக்கூட அரசியல் ஆக்குகிற ஒரு முயற்சி நடந்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் பேசவில்லை என்று சொன்னதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர் சொல்லியிருந்தாலும். அதற்கு நேரடியாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் தரக் கூடும் ஆனால் இன்றைக்குப் பத்திரிகையில் வந்திருக்கிற செய்தி, இது இரண்டு மாநிலங்களுக்கும் அதிகாரபூர்வமாக தொடர்பற்ற, தொடர்பில்லாத ஒரு தலைவர், தமிழக காங்கிரஸ் கட்சியின் தலைவர் மரியாதைக்குரிய வாழப்பாடி ராமமூர்த்தி அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அவர், திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டதாகவும், நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எந்த வகையிலும் கர்நாடக அரசை அணுகவில்லை என்றும், அந்த மாநில முதலமைச்சரோடு பேசவில்லை என்றும், தண்ணீர் கேட்டிருந்தால் மனிதாபிமான அடிப்படையில் தண்ணீர் வழங்கி இருப்பார்கள் என்றும், அவர்கள் ஒரு ஆதங்கத்தை வெளியிட்டு இருக்கிறார்கள். இன்றைய பத்திரிகையில் மிகத் தெளிவாக வந்திருக்கிறது.

"Mr. Ramamurthy said according to his information the Tamil Nadu Chief Minister, Mr. M. Karunanidhi, had never contacted his Karnataka Counterpart and was not furnishing certain information sought by that Government to justify the release of water in the Cauvery. 'I am not able to understand why Mr. Karunanidhi is misleading the people when he has failed to take the initiative. Unless he acts at once, without standing on prestige and formality, it may be too late to save the crops. I suggest that as was done last year, the Centre can also take an interest in this and ask Karnataka to release some water at once."

என்று அவர்கள் சொல்லி, எப்போதுமே அவர்களோடு எந்த வகையிலும் அதிகாரிகளுடைய மட்டத்திலும் மற்ற வகையிலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எந்தவிதமான தொடர்பையும் ஏற்படுத்திக் கொண்டு இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கும், காய்ந்துகொண்டிருக்கின்ற தஞ்சை மாவட்டத்தின் பயிர்களைக் காப்பாற்றுவதற்கும் எந்த வகையிலும் எப்போதும் தொடர்பு கொள்ளவில்லை என்று எனக்குத் தகவல் கிடைத்து இருக்கிறது என்று சொன்னதோடு, நான் இப்போதுதான் கர்நாடக முதல்வரோடு தொலைபேசியில் பேசினேன் என்று சொல்லி, அதற்குப் பிறகு இந்தப் பேச்சும் வருகிற காரணத்தால், ஒரு வேலை கர்நாடக மாநில முதலமைச்சரே அவருக்குச் செய்திகளைத் தந்து, இந்தத் தகவல்களை பத்திரிகைகளுக்குக் கொடுத்து இருப்பாரோ என்ற எண்ணம் மக்களிடம் ஏற்பட்டு இருக்கிறது. அதுமட்டுமல்லாமல், மக்களைத் திசை திருப்புகிறார் மாநில முதலமைச்சர் திரு. கருணாநிதி என்று அவர்கள் சொல்வது எங்களுக்கெல்லாம் கலக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

(திரு. எம். அப்துல் லத்தீப்) (1990 சனவரி, 27

மக்கள் கவலை கொண்டிருக்கிறார்கள். எனவே இதுகுறித்து, அரசினுடைய விளக்கம் என்ன என்பதை அறியும் உரிமையும் கடமையும். . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, இந்த ஒரே விஷயம் குறித்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்களும், இந்திய யூனியன் முஸ்லீம் லீகனுடைய தமிழ்மாநிலப் பொதுச் செயலாளர்—சட்ட மன்ற உறுப்பினர் திரு. லத்தீப் அவர்களும், என்னிடத்திலே விளக்கம் கோரியிருக்கிறார்கள். அவர்கள் இங்கே எடுத்துவைத்த அந்தப் பத்திரிகை வாசகங்களை நானும்கூட நேற்று மாலையிலே சில ஏடுகளிலும், இன்று காலையில எல்லா ஏடுகளிலும் படித்துப் பார்த்தேன். கர்நாடக மாநில முதலமைச்சரோடு இந்த அரசு தொடர்பு கொள்ளவில்லை, அல்லது நான் தொடர்பு கொள்ளவில்லை என்று கூறியிருப்பது உண்மைக்கு முற்றிலும் மாறான தகவல் என்பதை நான் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நான் அன்றைக்கே சொன்னதைப் போல, எனக்கும் கர்நாடக மாநில முதலமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்களுக்கும், நீண்ட நெடுங்காலமாக நட்பு உண்டு. இன்னும் சொல்லப்போனால், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நான் பொதுப்பணித்துறை அமைச்சர். திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் கர்நாடக மாநில முதலமைச்சர் மாத்திரமல்ல, பொதுப்பணித்துறையையும் அவர் நிர்வகித்தவர். அந்த அடிப்படையில 1968-ஆம் ஆண்டு இது குறித்து டெல்லியிலே மத்திய அமைச்சருடைய முன்னிலையிலேயே நானும் அவரும் பேச்சு வார்த்தையிலே ஈடுபட்டு அதற்குப் பிறகு இன்னும் அது முடிவடையாமல் மீண்டும் நாங்கள் இரண்டுபேரும் முதலமைச்சராக வந்து அந்தக் காவிரிப் பிரச்சினை பற்றி வாதம் செய்கிற ஒரு நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. அவர் சென்னையிலே என்னுடைய இல்லத் திருமணத்திற்கு வந்தபோது கூட நான் அவரிடத்திலே சொன்னேன். 1968-ஆம் ஆண்டு நாம் தான் இந்த வாதத்தை ஆரம்பித்தோம். இப்போது நாங்கள் இருவரும் இரு மாநிலங்களிலும் முதலமைச்சர்களாக ஆகி இருக்கிறோம்.

11-05 மணி

நடுவர் தீர்ப்புக்கு இடம் இல்லாமல் பேசி முடிப்பதில் எனக்கு எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை. ஆனால் இத்தனை ஆண்டு காலமாக இது பேசி முடிக்கப்படாத ஒரு காரணத்தினால் அதாவது கழக ஆட்சிக் காலத்தில் ஒரு 7 ஆண்டுக்காலம், அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கிட்டத்தட்ட 10 ஆண்டுக்காலம் ஆகியும் பேசி முடிக்கப்படாத சூழ்நிலை இருப்பதால் ட்ரிபுனல் வருவதுபடி வரட்டும், நாமும் பேசலாம் என்றுதான் சொல்லி இருக்கிறேன். ஆகவே பேசுவதையே நாம் புறக்கணிக்கிறோம் என்று சொல்லப்படுகிற வாதம் தவறானது. நான் அதற்கெல்லாம் அரசியல் காரணங்களைத் தெரிவிக்க விரும்ப



1990 சனவரி, 27] [டாக்டர் மு. கருணாநிதி]

வில்லை. இதை அரசியல் அடிப்படையில் யாராவது அணுகினால் அது தமிழ்நாட்டினுடைய ஒரு ஜீவாதாரப் பிரச்சினையில் நம்மை நாமே அறியாமல் நாம் தவறு செய்கிறோம் என்ற குற்றத்திற்கு ஆளாகிவிடுவோம் என்பதால் அதை நான் கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

கடந்த சில வாரங்களுக்கு முன்பு நம்முடைய பொதுப் பணித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்களை பெங்களூருக்கு இதுகுறித்துப் பேச அனுப்பி வைத்தோம். அப்போது கர்நாடக மாநிலத்தில் சுற்றுப் பயணத்தில் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் இருந்தார்கள். பெங்களூரிலே அவரைக் காணலாம் என்று காத்திருந்த பொதுப்பணித் துறை அமைச்சருக்குக் கிடைத்த தகவல் அவர் சுற்றுப்பயணத்திலிருந்து நேராக ஹைதராபாத் சென்று அங்கே இருந்து டெல்லி போய்விட்டார் என்பதாகும். அவர் டெல்லி போனாலும் நாம் விடவில்லை. அங்கே இருக்கக்கூடிய மத்திய அமைச்சர் திரு. முரசொலி மாறனுக்கு டெலிபோன் செய்து அவரை அங்கே தொடர்பு கொள்ளச் சொன்னேன். அவர் அங்கே தொடர்பு கொண்டபின் மத்திய அமைச்சர் எனக்குத் தொலைபேசி மூலமாகத் தெரிவித்த தகவல், அவர் நாளை மீண்டும் டெல்லியிலிருந்து பெங்களூர் செல்கிறார், பொதுப்பணித்துறை அமைச்சரை மறுபடியும் அனுப்பி வைத்தால் பார்ப்பதாகச் சொல்கிறார் என்பதாகும். திரும்பி வந்த பொதுப்பணித்துறை அமைச்சரை மறுபடியும் பெங்களூருக்கு நான் அனுப்பி வைத்தேன். காலையிலிருந்து மாலை வரையில் காத்திருந்த பொதுப்பணித்துறை அமைச்சர் பிற்பகல் எனக்குத் தொலைபேசி மூலம் தெரிவித்த தகவல், அவர் டெல்லியிலிருந்து பெங்களூர் வருவதாகச் சொல்லிவிட்டு பாம்பே சென்றுவிட்டாராம் என்பதுதான். இருந்தாலும் காத்திருந்து பார்த்துவிட்டு வருமாறு நான் கேட்டுக் கொண்டேன். மறுநாள் வந்த முதலமைச்சர் திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள். முதலிலே அந்த மாநிலப் பொதுப்பணித் துறை அமைச்சரோடு நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரை விவாதிக்கச் சொல்லிவிட்டு, அதிகாரிகளோடு விவாதிக்கச் சொல்லிவிட்டு மாலை நம்முடைய பொதுப்பணித்துறை அமைச்சரை அழைத்து நல்ல முறையில் அளவளாவி, நீங்கள் உங்கள் முதலமைச்சரிடம் போய் சொல்லுங்கள்; நம்பிக்கையோடு இருக்கலாம்; எங்களுடைய நிலைமையைச் சரி செய்துகொண்டு கூடுமான வரையில் எவ்வளவு தண்ணீர் தர இயலுமோ அது தரப்படும் என்று சொல்லி அனுப்பினார். நானும் மகிழ்ச்சி அடைந்தேன்.

அதற்குப் பிறகு அவர் சொன்னவாறு தண்ணீர் தராத காரணத்தினால், நமக்கும் மனிதர்கள் காட்டவேண்டிய அன்பையும், மனித நேயத்தையும் மழையே காட்டத் தொடங்கிய காரணத்தால் இடையிலே அந்தத் தண்ணீர் தேவையினுடைய அளவு சிறிது குறைந்து ஒரு 15 டி.எம்.சி. அளவுக்குத் தண்ணீர்

இருந்தால் கூட சமாளித்து விடலாம் என்பதற்காக 15 டி.எம்.சி.
தண்ணீர் தேவை என்று கடிதம் எழுதப்பட்டது. கடிதம எழுதி
யதைத் தொடர்ந்து நான் அவரோடு தொலைபேசி மூலமாகத்
தொடர்பு கொள்ள முயன்றேன். தொலைபேசியிலே தொடர்பு
கொள்ள முயன்றது தொலைபேசி மூலமாகத் தண்ணீர் கேட்பதற்
காக அல்ல. பெங்களூர் சென்று அவரைச் சந்திப்பதற்காக
வும் கூட. ஆனால 22-ஆம தேதி மாலை அவரிடத்திலே
தொலைபேசியிலே நான் தொடர்பு கொள்ள முயற்சித்தேன்,
அவர் இல்லை. இப்போது அவர் பேசுவதற்கு இயலாது;
எனவே மறுபடியும போன் செய்யுங்கள் என்று சொல்லப்பட்டது.
22-ஆம் தேதி மாலையில் எனக்குத் தொடர்பு கிடைக்காத
காரணத்தால் 23-ஆம் தேதி காலையில் சட்டமன்றத்திற்கு
வருவறகு முன்பு 7½ அலலது 8 மணியளவில் மீண்டும்
தொடர்பு கொள்ளப்பட்டது. 9 மணிக்கு மேல் தொடர்பு
கொள்ளுங்கள் என்று சொன்னார்கள், நான் சட்டமன்றத்திற்கு
வந்துவிட்ட காரணத்தால் 23-ஆம் தேதி 12¾ மணிக்குத்
தொடர்புகொண்டேன். சட்டமன்றத்திலிருந்து இதற்காகவே
சென்று தொடர்பு கொண்டேன்.
அவர் சபையிலே இருக்கிறார்; வேறு அப்போது
இருக்கிறார்; பிறகு வந்து பேசுவார் என்று வேலையாக
நம்முடைய நம்பரைக் குறித்துக்கொண்டார்கள். சொன்னார்கள்.
பேசச் சொல்கிறோம் என்று சொல்லி எண்ணையும் வந்தால்
கொண்டார்கள். பதில் வரவில்லை. குறித்துக்

11-10 மணி

மறுபடியும் அதே நாள் 3 மணி அளவிலே ஒரு
முறை தொடர்பு கொண்டு அங்கேயுள்ள செயலாளர்
அவர்களிடத்திலே பேசப்பட்டது. ஒவ்வொரு முறையும்
உதவியாளர்கள் அல்லது டெலிபோன் ஆப்பரேட்டர்கள்தான்
பேசினார்கள். போன் நம்பரைக் குறித்து வைத்துக்கொண்
டார்கள். இன்னார் பேசினார் என்று சொல்லுங்கள் என்று
குறிப்பிடப்பட்டது. தொடர்ந்து 22, 23 ஆகிய இந்த
இரண்டு நாட்களும் தொடர்ந்து தொடர்பு கொள்ள நான்
முயற்சித்தும்கூட அவர்கள் கிடைக்கவில்லை. அவர்களை
மாத்திரம் அல்ல, நம்முடைய ஆந்திர முதலமைச்சர் அவர்களைக்
கூட, திரு. சென்னாரெட்டி அவர்களைக் கூட இந்த தெலுங்கு
கங்கை திட்டத்தின் அடுத்த கட்ட வளர்ச்சிகளைப் பற்றிப்
பேசவேண்டுமென்பதற்காக நான் தொடர்ந்து முயற்சித்துக்
கொண்டிருக்கிறேன். நம்முடைய செயலாளர் அவர்களை விட்டு
அவருடைய செயலாளர் அவர்களிடத்திலே பேசச்
சொல்லியிருக்கிறேன். முதலமைச்சர் அவர்களிடமிருந்து தேதி
கிடைத்ததும் அவரும் அதைச் சொல்வதாக சொல்லி
யிருக்கிறார். நானும்கூட சொன்னேன். 5-ஆம் தேதி



அன்று டெல்லிக்குச் சென்று திட்டக்குழுவோடு பேச வேண்டி
யிருக்கிறது. 4-ஆம் தேதி காலையிலே ஹைதராபாத் வந்து
விட்டால், அன்று முழுவதும் தெலுங்கு கங்கைத் திட்டத்தைப்
பற்றிப் பேசிவிட்டு அன்று இரவு புறப்பட்டு நான் டெல்லிக்குச்
செல்ல ஏதுவாக இருக்கும். வசதிப்படுமா என்று கேளுங்கள்
என்று சொல்லியிருக்கிறேன். எனவே காங்கிரஸ் முதலமைச்
சர்கள் என்ற காரணத்திற்காக, அவர்களைப் பார்க்கக்கூடாது
என்கிற மிக மலிவான அரசியல் காழ்ப்புணர்ச்சி எனக்கு
என்றைக்கும் இருந்ததில்லை. அவர்கள் காங்கிரஸ் முதலமைச்
சர்கள் என்பதைவிட, இரண்டுபேரும் எனக்கு மிகுந்த நெருங்கிய
நண்பர்கள். 1980 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற
இடைத்தேர்தலில் நானும் திரு. சென்னா ரெட்டி அவர்களும்
ஒருங்கிணைந்து இந்திரா காந்தி அம்மையார் அவர்களை ஆதரித்
தோம். அது மாத்திரமல்ல. டெல்லி சென்ட்ரல் ஹாலில்
இந்திரா காந்தி அம்மையார் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட
போது தொலைவிலே உட்கார்ந்து இருந்த எங்கள் இருவரையும்
அவர்களே பக்கத்திலே அழைத்துவரச் சொல்லி, மேடையிலே
அமர வைத்து எங்கள் இருவருக்கும் இந்திரா காந்தி அம்மையார்
அவர்கள், 'மீண்டும் பிரதமராக வந்ததற்கு நாங்கள் இரண்டு
பேர்களுந்தான் காரணம்' என்று கூறி, நன்றி தெரிவித்தார்கள்.
அந்த அளவுக்கு எனக்கும் திரு. சென்னா ரெட்டி அவர்களுக்கும்
நட்பு உண்டு. இருந்தபோதும் 4-ஆம் தேதி சந்திக்க வேண்டும்
என்று கேட்டு 4 நாட்கள் ஆகிறது. இன்னும் பதில் இல்லை.

அதுபோலவே, திரு.வீரேந்திர பாட்டீல் அவர்களிடம் தொடர்பு
கொண்டதை எல்லாம் நான் இங்கே குறித்திருக்கிறேன். வெளி
யிலே பத்திரிகையிலே 'தொடர்பு கொள்ளவே இல்லை' என்று
வீரேந்திர பாட்டீல் அவர்கள் சொன்னார்கள் என்று தமிழ்நாடு
காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சொல்லியிருப்பது ஒரு வேளை
என்னை இழிவு படுத்தவா அல்லது திரு. வீரேந்திர பாட்டீல்
அவர்களை இழிவு படுத்தவா என்பது எனக்குப் புரியவில்லை.
திரு. வீரேந்திர பாட்டீல் அவர்கள் இப்படிச் சொல்லி இருப்பார்
என்று நான் நினைக்க இயலவில்லை.

சிக்மகளூர் தேர்தல் நேரத்திலெல்லாம் எனக்கும் அவருக்கும்
நெருங்கிய பழக்கம், சிக்மகளூர் தேர்தல் என்றால் எப்படி
நடைபெற்றது என்பது எல்லாம் எல்லோருக்கும் தெரியும்.
அந்த அளவுக்கு நெருங்கிய பழக்கம் உள்ள ஒருவர், தண்ணீர்
தந்தாலும் தராவிட்டாலும் என்னோடு பேசுவதைக்கூட புறக்
கணிக்கிறேன் என்று கூறியிருக்கமாட்டார். அரசியல் காரணங்
கள் இருந்தால் அன்னியில். எனவே, பேச முயன்றதே இல்லை
என்று வெளியிலே செய்யப்படுகின்ற பிரச்சாரம் தவறானது
உண்மைக்கு மாறானது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 4. உரிமைப் பிரச்சினை.

**சென்னை தொலைக்காட்சி நிலையத்தார் மீது— தென் மாவட்டங்களில் வெள்ள நிவாரண நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது பற்றி அவையில் பேசியதை ஒளிப்பரப்பியபோது உறுப்பினருடைய பெயர் குறிப்பிடப்பெறாதது குறித்து.**

**திரு வே. தங்கபாண்டியன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெயரால் கடந்த 22 ஆம் தேதி சென்னை தொலைக்காட்சித் துறை மீது ஒரு உரிமை மீறல் பிரச்சினை கொடுத்திருக்கிறேன். இதுவரை எந்தவிதமான பதிலும் இல்லாத காரணத்தினால் அதுகுறித்து உங்களுடைய அனுமதியோடு இந்த குறிப்பை சொல்ல விரும்பு கிறேன். 20 ஆம் தேதி இதே பேரவையில் தென் மாவட்டங் களில் ஏற்பட்ட மழையின் காரணமாக பலத்த சேதத்தை அரசின் கவனத்திற்கு கொண்டுவரவேண்டுமென்ற நோக்கத் தோடு நான் முயன்று, நான் அனுமதிக்கப்பட்டு, நான் தான் முதன் முதலாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் தர வேண்டும் என்றும், வெள்ளத்தால் மக்கள் எப்படியெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள் என்ற கவனத்தைப் பேரவைக்கு கொண்டு வந்தேன். ஆனால், அந்த சென்னை தொலைக்காட்சியில் 20 ஆம் தேதி மாலையிலே 7-30 மணிக்கும் 8-40 மணிக்கும் சொன்ன செய்தியில் யார் அந்த பிரச்சினையை அரசினுடைய கவனத்திற் திற்கு கொண்டு வந்தார்களோ, கொண்டுவந்த என்னுடைய பெயரை நீக்கிவிட்டு, என்னுடைய பெயரை புறக்கணித்துவிட்டு செய்தியை வெளியிட்டு இருக்கின்றார்கள். மழை விட்டும் தூவானம் விடவில்லை என்ற போக்கு சென்னை தொலைக் காட்சியில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. இந்த சட்டமன்றத்தினுடைய நடவடிக்கைகளை முழுமையாக ஒன்று இருட்டடிப்பு செய்யவேண்டும். ஆனால் தனிப்பட்ட ஒரு உறுப்பினருடைய உரிமையை மீறத்தக்க இந்த பிரச்சினையை உரிமை குழுவிற்கு விட வேண்டும் என்று மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே உங்கள் மூலமாக இந்த அவைக்குத் தெரிவித் துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** தொலைக் காட்சித் துறையினர் தங்கள் பெயர் சொல்லப்படாமல் விடு பட்டது குறித்து வருத்தத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். இருந் தாலும் எதிர்காலத்தில் இதுபோன்று பெயர்கள் விடுபடாமல் பார்த்துக்கொள்வதாகவும் உறுதியும் அளித்திருக்கிறார்கள். எனவே இந்த பிரச்சினையை இத்துடன் நிறுத்திவிடலாம்.





**(ஏ) சாத்தான்குளம் தொகுதியிலுள்ள குளங்களுக்கு மணி முத்தாறு நீர் விடப்பெற வேண்டியது குறித்து.**

**திரு. குமரி அனந்தன் :** மாண்புமிகு சபாநாயகர் அவர் களே, தண்ணீர் பிரச்சினைக்காக நான் எழுந்து நிற்கிறேன். வேறு ஒன்றும் இல்லை, அதுவும் தமிழ்நாட்டிலே இருக்கின்ற தண்ணீர் பிரச்சினை. இன்று காலையிலேயிருந்து கொடுமுடி ஆற்றுக்கு அனுமதி வந்துவிட்டது என்றும் எனவே கட்டவேண்டு மென்றும், பச்சை ஆற்றுக்கு அனுமதி வரப்போகிறது என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னார்கள்.

11-15 மணி

அதைப்போலவே நம்பியாறு புத்தன் தெருவு வரை நீட்டிக்கப் பட வேண்டும் என்பது எல்லாம் நம்முடைய வேண்டுகோள். அதோடு முக்கியமாக மணிமுத்தாறு அணையிலே இப்போது 95 அடிக்கு மேலே தண்ணீர் இருப்பதாக தகவல் வந்திருக்கிறது. 10 நாட்களுக்கு முன்பு என்னுடைய பகுதியிலே நான் சுற்றுப் பயணம் செய்தபோது மூன்றாவது ரீச், நான்காவது ரீச் என்று சொல்லுகின்ற அந்த இரண்டிலும் தண்ணீர்விட வெகு நாட்களாக மக்கள் கேட்டுக்கொண்டிருப்பதோடு, இந்தத் தடவை அதைப் பெற உரிமைப்படைத்த ஒரு முறை, சிப்ட் சிஸ்டம் என்று வருகின்ற வகையிலே இதுதான் முறை. அதாவது மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்கு. நான் அங்கு போயிருந்தபோது பேய்க்குளம் பகுதியிலே, சாத்தான் குளத்துக்கு உட்பட்ட பகுதியிலே தண்ணீர் போனாலும், சாத்தான்குளம் பகுதியிலே தண்ணீர் வரவில்லை. சாத்தான்குளம் பகுதியிலே எல்லாம் ஒரு குடம் தண்ணீர் ஒரு ரூபாய்க்கு விற்கிறது. தயவுசெய்து அமைச்சர் அவர்களை நான் பணிவோடு வேண்டிக்கொள்கிறேன். 15 அடிக்கு மேல் தண்ணீர் இருக்கிற காரணத்தால் பேய்குளம் பகுதியிலே தண்ணீர் விடப்பட்டும், விடுபட்டுப்போன பகுதிகளுக் கும், லெப்ட் அவுட் டேங்குகளுக்கும், சாத்தான் குளத் திலே இருக்கின்ற குளங்களுக்கும் தண்ணீர் உடனடியாக விட்டு அந்தப் பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு குடிதண்ணீர் கிடைக் கின்ற அளவுக்காவது ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதுபோல அந்த மணிமுத்தாறு அணை வருவதற்கு பெரிதும் பாடுபட்ட திரு. கோசல்ராம் அவர்களுடைய நினைவுநாள் இன்று. அந்த அணையை நம்பி வாழ்ந்துகொண்டிருக்கின்ற அந்தப் பகுதி மக்களுக்கும், கன்று காலிகளுக்கும், பயிர்களுக்கும் குடிதண்ணீருக் கும் வேண்டிய நீரை நீங்கள் 'மனம் உவந்து' நீர் இருக்கின்ற பொழுது என்ன கவலை என்று எண்ணுகின்ற வகையில் தயவு செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு கால்வாய் பாசன பகுதியை 4 ரீச்சுகளாகப் பிரித்திருக்கிறார்கள். தண்ணீர் மணிமுத்தாறில் நிறைய இருக்கும்பொழுது அந்தக் கால்வாயினுடைய பாசன பகுதி அத்தனைக்கும் தண்ணீர் தருகிறோம். அதிலே ஏதாவது தட்டுபாடு ஏற்படுமேயானால் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களோடு கலந்துப்பேசி, ரீச் ரொட்டேசன் சிஸ்டத்தின் படி தருகிறோம். அதன் அடிப்படையில் பர்ஸ்ட் அண்ட் செக்கண்ட் ரீச்சுக்கு தண்ணீர் கொடுத்தோம். இந்த ஆண்டு மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்குதான் தண்ணீர் தர உரிமை உண்டு. அதன் அடிப்படையில், இங்கே மாண்புமிகு உறுப்பினர் 95 அடி தண்ணீர் இப்போது அங்கே இருக்கிறது என்று சொன்னதைப் போல, தண்ணீர் நிறைய இருக்கிற காரணத்தால் மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்கு தண்ணீர் முழுக்கத்தர நாங்கள் உத்தரவிட்டிருக்கிறோம்.

நேற்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. எச். பாண்டியனும் மற்றவர்களும் சொல்லும்போது பர்ஸ்ட் அண்ட் செக்கண்ட் ரீச்சிலே கூட சில இடங்களில் காய்ந்து போகிற நிலை இருக்கிறது என்று சொல்லும்போது, அதை நினைக்கிறபோது, தண்ணீர் இருக்கும்பொழுது மனிதாபிமான அடிப்படையில் கொஞ்சம் அவர்களுக்கும் தருகிறோம். பர்ஸ்ட் அண்ட் செக்கண்ட்டுக்கு தருகிறபோது மூன்றாவது மற்றும் நான்கா வது ரீச்சுக்கும் அப்படிக் கொடுத்திருக்கிறோம். இருந்தாலும் மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மூன்றாவது மற்றும் நான்காவது ரீச்சுக்குதான் இந்த முறை முழுக்க தண்ணீர் விடுவதற்கு சட்டப் படி அனுமதி உண்டு. நீங்கள் விரும்புகிறபடி தண்ணீர் விட ஏற்கெனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறோம். அவர்கள் இங்கே 10 நாட்களுக்கு முன்புள்ள செய்தியை சொன்னார்கள். ஆகவே, நீர் இப்போது அங்கு போயிருக்கும். நேற்றே இதை நான் அவையிலே அறிவித்தேன். நேற்றே உத்தரவும் பிறப்பித் திருக்கிறேன். தர்ட் அண்ட் போர்த் ரீச்சுக்கு தண்ணீர் போகும்.

திரு. பி.எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மணிமுத்தாறு அணையிலிருந்து முதல் ரீச், இரண்டாவது ரீச், மூன்றாவது ரீச், மற்றும் நான்காவது ரீச்சுக்கு எப்படி தண்ணீர் வழங்குவது என்பது பற்றி இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அவர்கள் சொல்லும்போது 'சட்டப்படி' என்ற வார்த்தையைச் சொன்னார்கள். அப்படி சட்டம் எதுவும் கிடையாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.



மாண்புமிகு திரு. துரைமுருகன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அணையிலுள்ள நீரை எப்படி பகிர்ந்து அளிக்க வேண்டுமென்று ஏற்கெனவே 'ரூல்ஸ் அண்ட் ரெகுலேசன்ஸ்' உள்ளது என்று தெரிவித்துக்கொள்கிறேன், அதன் அடிப்படையில்தான் நாங்கள் செய்கிறோமே தவிர வேறல்ல.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமரி அனந்தன் அவர்களுடைய பிரச்சினையும் எங்களுடைய பிரச்சினையும் தீர்வதற்கு ஒரே வழி 80 அடி கால்வாய் வழியாக இன்றைக்கு தண்ணீர் வந்துகொண்டிருக்கிறதை அங்குள்ளவர்கள் 40 அடிக்கு கீழே கால்வாய் வழியாக விட வேண்டுமென்று பல ஆண்டுகளாக சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். காரணம் அப்போதுதான் அணையில் குறைவாக இருக்கும் போதும் எல்லா ஊர்களுக்கும் தண்ணீர் போகும். இன்னொன்று, தண்ணீர் உபரியாக இருக்கும்போது பாபனாசம் அணைக்கும் சில நேரங்களில் திறந்து விடுகிறார்கள். அப்படி திறக்கக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். ஆண்டாண்டுக் காலமாக 80 அடியிலிருந்து 40 அடிக்கு தண்ணீர் வரக் காரணமே பாபநாசம் அணைக்காக தண்ணீர் திறந்து விடுவதுதான்.

11-20 மணி

மணிமுத்தாறு, தாமிரபரணியினுடைய ஒரு கிளை நதி, அந்த மணிமுத்தாறு அணை கட்டியபோது அதனுடைய முதல் உரிமை, மணிமுத்தாறில் வறுகிற தண்ணீர் தாமிரபரணிக்குத் தான் போய்ச் சேர வேண்டும் என்பது. எனவேதான் 80 அடி உயரத்தில் அதற்கு மதகு அமைக்கப்பட்டு, தனிக் கால்வாய் வெட்டப்பட்டு, அது மணிமுத்தாறாகப் பாய்கிறது. அதற்குக்கீழே அடிமட்டத்தில் பூமி மட்டத்திற்கு ஒரு கால்வாய்வெட்டபட்டு இருக்கிறது. 80 அடி வரையில் வருகிற தண்ணீர் தாமிர பரணியிலே போய்க் கொண்டிருக்கும்; 80 அடிக்கு மேலே வந்தால்தான் மணிமுத்தாறிலே தண்ணீரைத் திறக்க முடியும். 80 அடி இருந்தால்கூட திறக்க முடியாது, 90 அடிக்கு போனால் தான் மணிமுத்தாறு கால்வாய் வழியாக தண்ணீர் வரும். இல்லா விட்டால் ஸ்ரீவைகுண்டம் அணையிலே சர்ப்ளஸ் வாட்டர் இருந்தால்தான் இதைத் திறக்க முடியும். என்வே மாண்புமிகு உறுப்பினர் திரு. பாண்டியன் அவர்கள் தெரிவித்த கருத்து அந்தப் பகுதி மக்களாலேயே ஏற்கப்படாத கருத்து.

(ஐ) சேலத்தில் நடைபெற்றுள்ள ஒரு கொலை சம்பவம் குறித்து.

திரு. கே. அர்ஜுனன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, 5-1-1990 இரவு அரசியல் காரணத்திற்காக அ.தி.மு.க.வுடைய சேலம் நகரத்தினுடைய துணைச் செயலாளர்

திரு. சுந்தரம் கொலை செய்யப்பட்டு இருக்கிறார். அவர் 35 வயது வாலிபர்; சிறுபான்மை சமூகத்தைச சேர்ந்தவர்; 2 மனைவிகளும், 3 சிறிய குழந்தைகளும் உடையவர் ; மக்கள் மத்தியிலே செல்வாககு மிக்கவர் ; எந்தத் தகராறு வந்தாலும் போகாதவர். அவர் கொலை செய்யப்பட்டு, இன்றைக்குக் காவல் துறை சரியான நடவடிக்கை எடுக்காமல் கைகட்டி, வாய் பொத்தி நிற்கிறது. இதிலே ஒரு 'அக்யூஸ்டு' ஏற்கெனவே கடத்தல், கொலைக் குற்றம்— இவைகளில் சம்பந்தபபட்டவர். இன்னொரு 'அக்யூஸ்டு' தி.மு.க.-வினுடைய கவுன்சிலர். இவர்கள் அரசியல் செல்வாக்கு உடையவர்களிடத்திலே செல்வாக்கு மிக்கவர்கள். மேலும் இவர்கள் சீட்டு ஆட்டக் கிளப்பு ஒன்று நடத்துகிறார்கள். அது தொடர்பாக அ.தி.மு.க. தொண்டர்கள் மிகவும் பதட்டம் அடைந்து இருக்கிறார்கள். பொது மக்களும் பீதி அடைந்து இருக்கிறார்கள். சம்பவம் காவல் நிலையத்திற்கு அருகிலேயே நடைபெற்று, இது வரைக்கும் யாரும் கைது செய்யப்படவில்லை. இதை அங்கே இருக்கிற காவல்துறை செயல்படாத காரணத்தினால், இதிலே கிரைம் பிரான்ச் சி.ஐ.டி.யினுடைய விசாரணை மேற்கொண்டு விஞ்ஞான ரீதியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். **(மணி அடிக்கப்பெற்றது.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** இதை ஒரு செய்தியாகத் தான் சொல்ல வேண்டுமேயொழிய (குறுக்கீடு) ஏற்கெனவே தொடர்ச்சியாக . . . . .

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, ** இது எல்லாம் நல்லது இல்லை. தயவு செய்து அதை அவைக் குறிப்பிலிருந்து எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** * * என்ற வார்த்தையை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்திரவிடுகின்றேன். (குறுக்கீடு) நீங்கள் ஏற்கெனவே பேசிவிட்டீர்கள். அமருங்கள். முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்கிறார்கள்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, சேலத்தில் நடைபெற்ற இந்தச் சம்பவம் குறித்து எனக்கு அனுப்பப்பட்டுள்ள தகவலை இந்த அவைக்கு வைக்க விரும்புகின்றேன். இந்த மாதம் 24-ஆம் தேதி அன்று அதிகாலையில் சேலம் அம்மாப்பேட்டை 30-வது வட்ட நகரத்திற்கு பிரதிநிதியும், பேராசிரியர் அன்பழகன் நற்பணி மன்றச் செயலாளருமான உதயகுமார் என்பவரை ரவி, சம்பு, ரகு, சக்தி, அண்ணாதுரை, தணிகாசலம், சந்திரன், வேலு மற்றும்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



3 பேர்கள் சேர்ந்து தாக்கி இருக்கின்றார்கள். இதில் அவருக்கு தலையில் பலமான அடிபட்டு இருக்கிறது. இரண்டு கைகள இரண்டு கால்கள் எல்லாம் தாககபபட்டுளளன. பல இடங்களிலே உடம்பிலே கத்துக் குத்து ஏறபட்டு மருத்துவமனையில் அவர் உயிருக்கு ஆபத்தான நிலையில அனுமதககபபட்டுள்ளார். இதற்கு முககியமான காரணம் ஆட்டோக்கள் நிறுத்தும் இடத்தில் புதிய ஆட்டோக்களை நிறுத்துவது பற்றித் தகராறு ஏறபட்டு இருக்கிறது. ஒவ்வொரு ஆட்டோ நிலையததிலும் சில குறிப்பிட்ட நபர்கள் தங்களுடைய ஆட்டோக்களை நிறுத்திக் கொள்வார்களா. வேறு ஆட்டோ நிலையங்களைச் சேர்ந்தவர்களோ அல்லது புதிதாகவோ அங்கு யாராவது கொணடு வந்து அவர்களுடைய ஆட்டோக்களை நிறுத்தும்போது முதலிலே அநத இடத்தை ஆக்கிரமித்துக் கொணடு இருப்பவர்கள புதியவர்களை எதிர்ப்பது அங்கு வாடிக்கையாக நடநது வரும் செயல் ஆகும். அந்த வகையிலே இந்த இரண்டு தரப்பினருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. பேராசிரியர் அன்பழகன் மன்றச் செயலாளர் உதயகுமார் தாக்கப்பட்டது குறித்து அஸதம்பட்டிகாவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டது. குற்ற எண் 36/90 செக்ஷன் 148, 149, 448, 307. இந்த வழக்கில் இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை. அந்த அன்பழகன் மன்றச் செயலாளர் தாக்கப்பட்டது குறித்த வழக்கிலும் யாரும் கைது செய்யப்படவில்லை.

இதைத் தொடர்ந்து 25-1-1990 அன்று இரவில் சுமார் 9 மணிக்கு குணா, செல்வம், செட்டியார் சேகர் என்கின்ற கிளப் சேகர், ஆட்டோ ஓட்டுநர் முத்து மற்றும் 5 பேர்கள் இரண்டு ஆட்டோக்களிலே சக்தி காஃபி பாருக்கு சென்று சுந்தரம் என்கின்ற அ.தி.மு.க.வின் செயலாளரைக் கடத்திக்கொண்டு போய்த் தாக்கி இருக்கின்றார்கள். அவருக்கு ஏற்பட்ட காயங்களின் விளைவாக, சுந்தரம் மரணம் அடைய, அவருடைய சடலம் நஞ்சம்பட்டி குடியிருப்புச் சாலை சந்திப்பில் அம்மாப்பேட்டை காவல் நிலைய எல்லையிலே கண்டுபிடிக்கப்பட்டது.

11.25 மணி

இந்த சுந்தரம், பட்டக்கோயில் ஆட்டோ நிறுத்துமிடத்திற்கு எதிரிலே காப்பி கடை நடத்துகிறவர். இவருக்கும், ஆட்டோ நிறுத்துகிற இடத்தில் தகராறில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் முன்பே சம்பந்தமிருப்பதாகத் தகவல். இவரும், வேறு சில அ.தி.மு.க. வினரும் சேர்ந்து கடந்த சில நாட்களுக்கு முன் ஆட்டோ நிறுத்துபவர்களோடு வாய்ச்சண்டை போட்டிருக்கிறார்கள். இந்தத் தகராறு நடைபெற்றது போலீசாரின் கவனத்திற்குக் கொண்டு வரப்படவில்லை. இறந்துபோன சுந்தரத்தின் மனைவி மாது அவர்கள் அளித்த புகாரின் பேரில் இரவு 1-30 மணிக்கு அம்மாபேட்டை காவல் நிலையக் குற்ற எண் 57/90ல் வழக்கு பதிவு செய்யப்பட்டது.

சடலம் பிரேதப் பரிசோதனைக்குப் பின் இறுதி ஊர்வலம்
நடைபெற்றிருக்கிறது. அதற்கான விரிவான காவல் பாதுகாப்பு
அனைத்து முக்கிய இடங்களிலும் தரப்பட்டது. எதிரிகள் தலை
மறைவாக உள்ளனர். இந்தக் கொலை தொடர்பாக எம்.ஒய்.
ஆர். 6250 என்ற பதிவெண் கொண்ட ஆட்டோ ஒன்று ரத்தக்
கறையோடு கைப்பற்றப் பெற்றிருக்கிறது. ஆட்டோ முத்து
என்பவரும் கைது செய்யப்பட்டிருக்கிறார். புலன் விசாரணை
தொடர்ந்து நடைபெறுகிறது.

யாராக இருந்தாலும், கட்சி சார்பில்லாத முறையில் காவல்
துறையின் மூலமாக நடவடிக்கை எடுக்கப்படும் என்ற உறுதியை
நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவருக்கு வந்
திருக்கிற தகவல்களை இங்கே கொடுத்திருக்கிறார்கள். என்றா
லும், இன்றைக்கு சேலம் மாவட்டத்தில் ஏற்பட்டிருக்கிற ஒரு
பதட்ட நிலை—ஒரு கட்சித் தொண்டன் கொலை செய்யப்பட்
டிருக்கிறார்—என்ற சூழ்நிலையில் இதற்கு அரசியல் பின்னணி
இருக்கிறது என்ற காரணத்திற்காகவும—இது தடுக்கப்படவில்லை
என்று சொன்னால் தொடர்ந்து இது தமிழகம் முழுவதும் பரவு
கிற அளவுக்கு ஒரு நிலைமை உருவாகி, இது தமிழ்நாட்டிலே
இருக்கிற சட்டம் ஒழுங்கு நிலைமையே பாதிக்கிற அளவுக்குப்
போகும் என்ற காரணத்தாலே, மாண்புமிகு உறுப்பினர்
திரு. அர்ஜுனன் அவர்கள் இதிலே அதிக வேகம் காட்டுகிறார்
காரணத்துக்காக, இங்கே நான் அவரிடத்திலே கூறியிருக்கிறேன்.
மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக்
கொண்டு வாருங்கள், அவர் தருகிற விளக்கத்தை ஏற்று, எப்படி
நடவடிக்கை இருக்கிறது என்று பார்த்ததற்குப் பின்னால
தான் நாம் எதையும் முடிவெடுக்க வேண்டும்—நாமே
இதை அரசியல் பிரச்சினையாக்கி—உணர்ச்சி பூர்வமான
பிரச்சினையாக்க வேண்டாம் என்று சொன்னேன்.
ஆனால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விளக்கத்
தைத் தந்தார்கள். அவருடைய விளக்கத்தை—அவருக்கே
கூட உடனே முழுமையாக அந்த விளக்கம் வந்திருக்க
முடியும் என்று நான் நம்பவில்லை. என்றாலும் எனக்கு இருக்கிற
ஓரே ஒரு சந்தேகம் என்னவென்றால், தாக்கப்பட்டு இன்றைக்கு
செத்திருக்கிற அந்தக் குடும்பம் இருக்கிற நிலையையும்
அங்கே இருக்கிற கழகத் தோழர்கள் பாதிக்கப்பட்டிருக்கிற
நிலைமைகளையும் நீங்கள் உணர்வு பூர்வமாக உணர வேண்டும்.
ஆனால் அவர்மீது நான் வைத்திருக்கிற அந்த நம்பிக்கையினால்
தான் இது கவனத்திற்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்ற
அளவில்தான் நிறுத்தியிருந்தேன். ஆனால், தேவையில்லாமல்
வேறு ஒரு சம்பவத்தை இதிலே சுட்டிக்காட்டி, இதற்கும் அதற்
கும் சம்பந்தம் இருக்கிற நிலையை உருவாக்குவது என்பது அர
சியல் ரீதியாக நல்லதல்ல. நான் மாண்புமிகு முதல்வர் அவர்க



ளிடத்திலே கேட்டுக் கொள்வேன்—நீங்கள் ஒரு பக்கம் அன்ப
ழைப்பு விடுகிறீர்கள். அண்ணா தி.மு.க. தொண்டர்களே
வாருங்கள் என்று. ஒரு பக்கம் கொலை நடைபெறுகிற நிகழ்ச்சி
நடைபெறுவது என்பது அரசியலுக்கு நல்லதல்ல. இந்த அரசியல்
தொடர்ந்து நடைபெறுமானால் —நான் நிச்சயமாகச்
சொல்லுகிறேன். இதைச் சந்திக்கிற சூழ்நிலைக்கு நாங்கள்
தேவையில்லாமல் தள்ளப்படுகிற நிலைமையை உருவாக்க
வேண்டாம். எனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்
இதை அரசியலாக்காமல்—இதில் அரசியல் வாதிகள் பின்னணி
யில் இருப்பவர்களை தடுக்கவில்லை என்று சொன்னால்—
இதெல்லாம் ஏதோ எங்களுக்கு வந்திருக்கிற ஆபத்து என்று
நீங்கள் கருத வேண்டாம்....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : ஒரு செய்தியைச் சொல்லும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து தக்க நடவடிக்கையை உரிய நேரத்தில் எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்ள உங்களுக்கு உரிமை இருக்கிறது. அதுவல்லாமல் ஒவ்வொரு தடவையும் பேசுகிறபோது, சட்டம் ஒழுங்கு கெட்டுவிடுவதைப் போலவும் அதைத் தாங்கள் சந்திக்கத் தயாராக இருப்பதைப் போலவும் ஒரு சவாலாக ஒரு கருத்தைச் சொல்லக்கூடாது. கவனத்திற்குக் கொண்டுவருவது என்பது உங்களுடைய கடமையாக இருக்கிறது. பொதுவாகவே எந்த ஒரு செய்தியையும் ஒன்றுமில்லாத செய்தியைக்கூட—'' இது உணர்ச்சிப் பூர்வமான செய்தி, இது உணர்ச்சிப் பூர்வமான செய்தி '' என்று சொல்லி, நீங்கள்தான் உணர்ச்சி வசப்படுகிறீர்கள். மேற்கொண்டு பேசலாம்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, *ஏனென்றால் ....

**Honbld Thiru Durai Murugan**: Sir, He School not question the chair.

திரு. எஸ். ஆர். இராதா : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, யாராவது ஆளுங்கட்சி உறுப்பினர்கள் பேசியிருந்தால் கூட ஏற்றுக் கொள்வேன் **

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, ஓர் உறுப்பினர் பேசுகிற நேரத்தில் விதி முறைகளுக்கு அது உட்பட்டிருக்கிறதா என்று பார்த்து சொல்லக்

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

கூடிய அந்த உரிமையும் தகுதியும் தாங்கள் அமர்ந்திருக்கிற
இடத்திற்கு நிச்சயமாக உண்டு. அந்த விதிகளின்படி தாங்கள்
கூறிய கருத்துக்களை, எதிர்க்கட்சித்தலைவர் நண்பர் திரு. இராதா
அவர்கள்** என்று தங்களுடைய தீர்ப்பையே — இங்கே கேள்விக்
குறியாக ஆக்குவது முறையல்ல. எனவே அவர்கள் சொன்ன
அந்த வாசகத்தை அவைக் குறிப்பிலிருந்து எடுத்து விடுவது, இந்த
அவையினுடைய மரபு காப்பாற்றப்படுவதற்கு வழிவகுக்கும்.

11-30 மணி

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அந்த
வாக்கியத்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்க உத்தரவிடு
கின்றேன். ஒரு செய்தியைச் சொல்லுகின்றபொழுது அது எந்த
விதத்தில் அமையும் என்பதைத்தான் நான் சொன்னேன். அதை
நீங்கள் புரிந்து கொண்டால் போதும்.

திரு. எஸ். ஆர். இராதா : துணைத் தலைவரவர்களே,
தயவு செய்து தெரிவித்துக் கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர
அவர்கள் இதில் குறிப்பிட்டுக் கூறுகிறார். நீங்கள் அளித்த
தீர்ப்பு என்று. நீங்கள் இதில் தீர்ப்பு அளிக்கவில்லை. தீர்ப்புக்கு
உங்களிடத்திலே வரவில்லை. என்னுடைய பேச்சுக்குப்
பதில் சொல்லுகிற நிலையில் நீங்கள் வரக்கூடாது என்பதுதான்
என்னுடைய கருத்தே தவிர இது ஒரு பிரச்சினையாக உங்களிடத்
திலே தீர்ப்புக்கு வரப்பட்டு நீங்கள் . . . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைத்
தலைவருடைய இந்த நாற்காலியில் அமர்ந்து கொண்டு பேசுகின்ற
ஒவ்வொரு வார்த்தையும் தீர்ப்பு என்று கொள்ளப்படும்.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவரவர்களுக்கே சொல்கிறேன், நீங்கள் உட்கார்ந்திருக்கிற. . .

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அமைதி.

திரு. எஸ். ஆர். இராதா: மாண்புமிகு துணைத் தலைவரவர்களே.
நீங்கள் . . . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு
பேரவைத் துணைத் தலைவரவர்களே, தமிழிலே சில சொற்கள்
வழக்குக்கு வந்து, நிலை பெற்று, நடைமுறையிலேதான் வேற்று
மையே காணமுடியும். தீர்ப்பு என்ற சொல், பொதுவாகத்
தலைவருடைய கருத்துக்கும் நாம் வழங்குகிற பேச்சு வழக்கிலே



இடம் பெறுகிறது. தலைவர் கருத்தே கூடப் பெரும்பாலும்
சட்டப்படி, நியாயப்படி வழங்கும்பொழுது அது கேள்விக்குரிய
தாக, திருப்பி மறுக்கப்படுவது கூடாது.

திரு. எஸ். ஆர். இராதா : மாண்புமிகு துணைத் தலைவ
ரவர்களே, மாண்புமிகு முன்னவரவர்கள் விளக்கம் சொன்னார்
கள். நான் அந்த விளக்கத்திற்குப் போகவில்லை. ஆனால்
நீங்கள் இது பிரச்சினையாகி, தீர்ப்பு வழங்கி விட்டீர்கள் என்ற
நிலைமைக்கு வந்தால், உங்கள் தீர்ப்பை நாங்கள் எப்படி எதிர்ப்
பதா அல்லது வேறு வகையிலே நடவடிக்கை எடுப்பதா என்பது
எங்களுடைய முடிவு. எங்களுக்கும் அந்த உரிமை இருக்கிறது.
அந்த உரிமையை நீங்கள் எங்களுக்குத் தந்தாக வேண்டும், வேறு
வழி கிடையாது.

ஆனால், இதிலே தெரிவித்த ஒரேயொரு கருத்து என்ன
வென்றால், இதை அரசியலாக்க வேண்டாம். நீங்கள் அரசிய
லோடு தொடர்புபடுத்திப் பேச வேண்டாம். நான் உணர்ச்சி
வசப்பட்டுப் பேசுகின்றேன் என்றால், எனக்குத்தான் உணர்ச்சி
இருக்கிறது என்று கருதி, அந்த அளவிற்கு நீங்கள் என்னைக்
கேலி பேசுவது நல்லது அல்ல.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உங்களுடைய
உணர்வுகளை மதிக்கின்ற இடத்தில்தான் நான் இருக்கின்றேன்.

திரு. எஸ். ஆர். இராதா : தயவு செய்து மதித்தால் நான்
நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்த உணர்ச்சியை மதிக்க
வேண்டும் என்பதாலேதான் தெரிவிக்கிறேன். இதை அரசியல்
ஆக்காமல் மாண்புமிகு முதலமைச்சரவர்கள், யார் இதில் தவறு
செய்திருந்தாலும் தவறு செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கி
கிற அளவிற்கு அவர்கள் உரிய நடவடிக்கையை வேகமாக எடுத்
தால்தான், இந்த அரசியல் கொலைகள் தடுக்கப்படும். இல்லை
என்றால், அரசியல் கொலைகள் வளர ஆரம்பிக்கும் என்பதை
மட்டும் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதற்கு மாண்பு
மிகு முதல்வரவர்களுடைய விளக்கம் வேண்டுமென்று நான்
விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே,
நான் விளக்கம் அளிக்கும்பொழுதே, அதனுடைய இறுதி வாசக
மாக, கட்சி சார்பற்ற முறையில் அதற்கு நியாயம் வழங்க எல்லா
நடவடிக்கையையும் இந்த அரசு எடுக்கும் என்று குறிப்பிட்டிருக்
கிறேன். மீண்டும் ஒரு முறை அதை உறுதிப்படுத்த வேண்டு
மென்று எதிர்க்கட்சித் தலைவர் நண்பர் திரு. இராதா அவர்கள்
கேட்டிருக்கிறார்கள். மீண்டும் உறுதிப்படுத்துகிறேன்.
இப்பொழுதே கூட ஆட்டோ டிரைவர் முத்து என்பவர் கைது
செய்யப்பட்டிருக்கிறார் என்று எனக்குத் தகவல் வந்திருக்கிறது.

[1990 சனவரி, 27

(ஒ) கோட்டூர் ஒன்றியம் நல்லூரில் ஒரு சத்துணவு அமைப்பாளர் கற்பழிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளதாகக்கூறப் பெறுவது குறித்து.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் கவன ஈர்ப்புத் திர்மானம் ஐந்து தினங்களுக்கு முன்னாலே கொடுக்கப்பட்டிருக்கிறது. தங்களுடைய கவனத்திற்கு இது முக்கியமான விஷயம். நானும்சேர்ந்து கொடுத்திருக்கிறேன். முக்கியமான விஷயம் மட்டும் அல்ல. அந்தப் பகுதியிலே மிகப் பெரிய பதட்டத்தை ஏற்படுத்தியிருக்கின்ற விஷயம். ஒரு சத்துணவு அமைப்பாளர் கற்பழிக்கப்பட்டு, கொலை செய்யப்பட்டிருக்கிறார் சரியான நடவடிக்கை காவல் துறையில் எடுக்கப்படவில்லை. மேலும் அங்கே ஒரு பதட்டமான நிலை ஏற்பட்டிருக்கின்ற காரணமாக மாண்புமிகு முதலமைச்சரவர்களிடத்திலே ஒரு மாதத்திற்கு முன்னாலேயே தகவல் எழுத்து மூலமாக அனுப்பியிருக்கிறார். சம்பவம் நடந்தது 40 தினங்களுக்கு முன்னால், இன்றைக்கு இந்த அவையினுடைய இந்தக் கூட்டத்தொடரினுடைய கடைசி நாள். ஆகவே, அவையிலே இதற்கு உண்டான விளக்கம் பெறுவதற்கு வேறு வாய்ப்பு இல்லை. ஆகவேதான் கடைசியாக அவர் அந்தப் பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சரவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறார். கொஞ்சம் அனுமதிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர
வர்களே, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டு,
அவைகள் எடுக்கப்படமுடியாத சூழ்நிலையில் அவைத்
தலைவருடைய அறைக்குச் சென்று, தொடர்புடைய உறுப்பினர்
கள், இது கவன ஈர்ப்புத் தீர்மானமாக எடுக்கப்படவில்லை,
அவையிலே எழுப்புவதற்கு ஒரு வாய்ப்பு தர வேண்டுமென்று
கேட்டுக்கொள்வது, உசிதம் போல், அவைத் தலைவரவர்கள்
அதற்கு உரிய ரூலிங்—ரூலிங் என்றுதான் ஆங்கிலத்தில் இருக்
கிறது, தீர்ப்பு என்றுதான் இப்பொழுது தற்காலிகமாக தமிழ்ச்
சொல் இருக்கிறது—அத்தகைய உசிதமான தீர்ப்பை வழங்குவதும்
நடைமுறையிலே இருந்து வருவது. அப்படி அவர் தங்களிடத்திலே
அறையிலே வந்து கேட்டிருந்தால், அதுபற்றிய தகவலைத்தெரிந்து
கொள்கின்ற வாய்ப்பை எனக்கு அளிக்க வேண்டும்.

11-35 மணி

அவர் கேட்டாரா என்பது தெரியவில்லை. எனக்கு
வாய்ப்பு இங்கே வழங்குகிற வகையில் விவரங்களைச் சேக
ரித்துக்கொண்டு வாருங்கள் என்ற யோசனை எனக்கு சொல்
லப்படவில்லை. இருந்தாலும், அந்தப் பிரச்சினையை எழுப்ப





வேண்டுமென்று திருத்துறைப்பூண்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் விரும்புகிறார் என்ற காரணத்தால் அவரை அனுமதிக்கலாம். அதை நான் தெரிந்து கொண்டு விரைவாக அது குறித்து நடவடிக்கைகள் அரசின் சார்பிலே மேற்கொள்ளப்படும்.

திரு. ஜி. பழனிச்சாமி: துணைத் தலைவர் அவர்களே,
கடந்த 19-12-1989 அன்று சத்துணவு அமைப்பாளர்
சாவித்திரி, என்னுடைய தொகுதியில் கோட்டூர் ஒன்றியத்
தைச் சார்ந்தவர். நல்லூர் ஊராட்சியில் பணியாற்றி வந்தவர்.
மாலை 4-30 மணிக்கு தன்னுடைய பணிகளை முடித்து
விட்டு வீடு செல்கிறபோது நான்குபேர்கள் சேர்ந்து அவரை
கற்பழித்து கொலை செய்துவிட்டு, அந்த அமைப்பாளரை
நெய்வேலி காட்டாமணக்கு செடிகளுக்கு அருகில், ஆற்று
ஓரத்தில் முடியை இழுத்து கட்டிவைத்து விட்டு, நான்கு
தினங்களாக அவர் கிடைக்கவில்லை. அவருடைய கணவர்
பல இடங்களில் தேடிப் பார்த்து கிடைக்காமல் போலீஸ்
துறையில் புகார் கொடுத்து இருக்கிறார். போலீஸ் துறை
யில் நாய் வரவழைக்கப்பட்டு அந்த அம்மையாரின் உடல்
கண்டெடுக்கப்பட்டது. அதன்பிறகு குற்றவாளிகளைக் கண்டு
பிடிக்க முடியவில்லை. அதற்கு பிறகு நல்லூர் கிராமத்தில்
இருக்கிற ஒருவரை கண்டுபிடித்து, அந்த அம்மையார் அணிந்
திருந்த நகைகளை சீஸ் பண்ணி எடுத்தார்கள். அந்தக்
குற்றவாளி தான் மட்டும் செய்யவில்லை, நான்கு பேர்கள்
சேர்ந்து செய்திருக்கிறோம் என்று பொதுமக்களிடமும்
போலீஸ் இன்ஸ்பெக்டரிடமும் அறிவித்து இருக்கிறார். அந்த
இடத்திலேயே இன்ஸ்பெக்டர் ஊரைக் கூட்டி அந்த நான்கு
பேர்களை கண்டுபிடித்துக் கொடுப்பது அந்த ஊரின்
பொறுப்பு என்றும் இல்லையென்றால் யாரையும் விட மாட்
டேன் என்றும் அறிவித்தார்கள். அதன்பிறகு சப்-இன்ஸ்
பெக்டர் அந்தக் குற்றவாளியை விசாரித்து, எந்தக் குற்றவாளி
முன்பு கைது செய்யப்பட்டாரோ அவர் பெயரை மட்டும்
தான் அந்த வழக்கிலே எடுப்பதற்கு முயற்சியை எடுத்துக்
கொண்டிருக்கிறார்கள். பாக்கியிருக்கிற மூன்று பேரை அந்த
வழக்கிலே சம்பந்தப்படுத்தாமல் தட்டிக் கழித்துக் கொண்
டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அரசியல் கட்சிகள்
பேதம் பாராமல், அனைத்துக் கட்சிகளும் சேர்ந்து, ஜாதி
மதம் பாராமல் ஐந்தாயிரத்திற்கு மேற்பட்ட பெண்கள்
ஆர்.டி.ஓ. அலுவலகத்திற்கு முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தி,
கலெக்டரிடம் மனு கொடுக்கப்பட்டிருக்கிறது. இதுவரையில்
எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அவர் சொன்ன
அந்த மூன்று பேர்களும் முன்ஜாமீன் எடுத்துக்கொண்டு
ஊரிலே திரிந்து கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட
நிலைமை இருக்கிறது. அந்த அம்மையாருக்கு நான்கு பெண்
குழந்தைகள் இருக்கின்றன. எனவே, இதில் உரிய நட
வடிக்கையெடுத்து குற்றவாளிகளை கண்டுபிடிக்கிற வகையிலே

நடவடிக்கையெடுக்க வேண்டும். நல்ல திட்டங்களை பெண் களுக்கென்று அறிவித்து, ஆண்களுக்கு சமமான உரிமையென்று கொண்டு வந்திருக்கிற நம்முடைய அரசு பாகுபாடு காட் டாமல், நடவடிக்கை எடுப்பார்கள் என்ற நோக்கத்தில் தான் நம்முடைய முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் என்பதைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** துணைத் தலைவர் அவர்களே, வினாவையும் எழுப்பி, விளக்கத்தையும் அவரே தந்திருக்கிறார். காவல் துறை அங்கே வெறுமனே இருக்க வில்லை என்பதையும் காவல் துறை விரைந்து செயல்பட்டு குற்றவாளிகளைக் கண்டுபிடித்து இருக்கிறது என்பதையும் அந்தக் குற்றவாளி சுட்டிக்காட்டிய இன்னும் 2, 3 பேர்களை கைது செய்யவில்லை என்பதையும் அவர்கள் சொல்லி இருக் கிறார்கள். அவர்கள் முன் ஜாமீன் எடுத்துவிட்ட காரணத்தால் ஒருவேளை கைது செய்யப்படாமல் இருக்கலாம். உறுப்பினர் அவர்கள் இங்கே அளித்த இந்தத் தகவலின் அடிப்படையில் மாவட்ட காவல் துறையோடு நம்முடைய காவல் துறை அதிகாரிகள் தொடர்பு கொண்டு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். நானும் அதற் கான முயற்சிகளை எடுப்பேன்.

## 5. கவன ஈர்ப்பு

(அ) பேராவூரணித் தொகுதியில் தெருவிளக்கு இரும்புக் கம்பங்கள் பல துருப்பிடித்துள்ளதால் பொது மக்களுக்கு ஆபத்து விளைவிக்கக்கூடிய நிலைமை இருப்பது குறித்து.

**திரு. ஆர். சிங்காரம் :** துணைத் தலைவர் அவர்களே, " பேராவூரணி தொகுதி எல்லைக்குள் நூற்றுக்கும் மேற்பட்ட தெரு விளக்குக் கம்பங்கள் துருப்பிடித்துள்ளது குறித்த " அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு மிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :





### அறிக்கை.

பேராவூரணி பகுதியில் தெருவிளக்கிற்காக நடப்பட்டு அவ்வப்போது அடியில் துருப்பிடித்த இரும்புக் கம்பங்கள் அவ்வப்போது மாற்றப்படுகின்றன. அல்லது துருப்பிடித்துள்ள பாகங்களில் இரும்புத் துண்டுகள் வைத்து வெல்டிங் செய்து வலுவூட்டப் படுகின்றன. ஆபத்தான நிலையில் உள்ள கம்பங்களுக்கு அவ்வப்போது மேற்கண்டவாறு நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படுகிறது. மற்றும் 42 மின் கம்பங்களின் நிலையை ஆய்வு செய்து அவைகளை மாற்றுவதற்கு ரூ. 42,000 செலவில் மதிப்பீடு தயார் செய்து ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அவைகளில் மிகவும் பழுதான ஆறு கம்பங்கள் உடனடியாக ஜனவரி முதல் வாரத்தில் மாற்றப்பட்டுவிட்டன. மற்றவை களை 28—2—1990க்குள் மாற்ற நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. தேவையான நடவடிக்கைகள் அவ்வப்போது எடுக்கப்படுவதால் மக்களிடையே பீதியும் அச்சமும் எழும் நிலை இல்லை.

**திரு. ஆர். சிங்காரம் :** துணைத் தலைவா அவர்களே, விவர அறிக்கையை நான் பார்த்தேன். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னால் பேராவூரணி பேரூராட்சி மன் றத்தைச் சார்ந்த மின்துறை ஊழியர் ஒருவர், இதுபோன்று அடியில் துருப்பிடித்த அபாயகரமாக இருந்த ஒரு மரத்தில் ஏறி, லைட் போடுகிறபோது, அந்த மரமே கீழே விழுந்து அவருக்கு கால் ஒடிந்திருக்கிறது. இப்படிப்பட்ட ஆபாயகர மான சூழ்நிலை இருக்கிறது. இதுபோல என்னுடைய தொகுதியில் பேராவூரணி, பட்டுக்கோட்டை பகுதிகளில் எல்லா கிராமங்களிலேயும் நூற்றுக்கணக்கான இரும்பு கம் பங்கள் துருப்பிடித்து அபாயமான நிலையில் இருக்கின்றன. அதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். உரிய நட வடிக்கை எடுத்திருக்கிறார்கள். அதற்கு நன்றியைத் தெரி வித்து, மீண்டும் இங்கே கம்பங்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவாக சொல்லப்பட்டு இருக்கிறது. 126 கம்பங்கள் துருப்பிடித்து இருக்கின்றன. அதை உடனடியாக மாற்றியமைக்க நடவடிக்கை எடுப்பாரா ?

11.40 மணி

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி :** துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்துள்ளபடி 126 கம்பங்கள் அங்கே இருப்பது உண்மை. அதிலும் மிகவும மோசமாக இருந்த 6 கம்பங்கள் உடனடியாக மாற்றப்பட்டு இருக்கின்றன. அதிலேயும் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சிங்காரம் அவர்களுடைய இல்லத்திற்கு எதிரிலேயே இருந்த

கம்பம் மிகவும் மோசமாக இருந்தது. அவருடைய நன்
மையைக் கருதி, அது முதலில் மாற்றப்பட்டது. அவர்கள்
குறிப்பிட்டதைப் போன்று, எல்லாக் கம்பங்களையும் மாற்று
வதற்கு 42 ஆயிரம் ரூபாய் செலவில் மதிப்பீடு செய்யப்பட்டு
பிப்ரவரி 28-ஆம் தேதிக்குள் வேலைகளை முடிக்கவேண்டும்
என்று ஆணைகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன.

திரு. ஆர். சிங்காரம் : பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, விரைவான நடவடிக்கை எடுத்ததற்காக மின்
சாரத்துறை அமைச்சருக்கு நன்றி தெரிவித்து, மாண்புமிகு
முதலவர் அவர்களுக்கு நன்றி சொல்கிற வாய்ப்பினை அளிக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய சட்ட
மன்ற உறுப்பினர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய், அவர்கள்
இறந்து போனால், அவர்களுடைய குடும்பத்திற்கு நிதி உதவி
அளிக்கின்ற சட்டத்தை இன்று கொண்டுவருகிறார்கள்.
இன்று நாம் பதவியேற்று, 27-ஆம் தேதி— ஓர் ஆண்டு
நிறைவுபெற்று, சட்டமன்ற உறுப்பினர்களாக ஆகியுள்ள
நாம், பணியாற்றுகிற இந்த நேரத்தில், இன்று ஒரு மகிழ்ச்சி
யான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக் கொள்ள
ஆசைப்படுகிறேன். நம்முடைய முதல்வர் டாக்டர் கலைஞர்
அவர்கள் நம்முடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, சட்ட
மன்ற உறுப்பினர்கள் இறந்தால், 50 ஆயிரம் ரூபாய் வழங்கு
வதாக இங்கே அறிவித்திருக்கிறார்கள். இது ஒரு அரை
லட்சியமதான். ஆனால் நம்முடைய லட்சியம் லட்சம்.
எனவே இந்த லட்சத்தை வருகின்ற சட்டமன்றக் கூட்டத்
தொடரிலே நம்முடைய கலைஞர் அவர்கள் நிச்சயமாக
லட்சமாகக் கொடுக்க லட்சியம் கொண்டிருக்கிறார்கள். ஏன்
என்றால், இது இந்திய வரலாற்றிலே பொன்னெழுத்துக்
களால் பொறிக்கப்படவேண்டிய விஷயம். முக்கியமான ஒரு
கால கட்டத்தில் எந்த ஒரு அரசும் சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு இப்படிப்பட்ட ஒரு சலுகையைச் செய்யவில்லை,
நம்முடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டு, நம்முடைய
முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். இந்த லட்
சத்தை வருகின்ற சட்டமன்றக் கூட்டத்திலே லட்சியமாக
அறிவிப்பதற்கும், இன்னும் பல கோரிக்கைகைகளை செய்
வதற்கும், நம்முடைய முதல்வர் அவர்கள் காத்திருக்
கிறார்கள். அவர்களுக்கு நான் நன்றி உணர்வோடு, நன்றி
நன்றி என்று தெரிவித்து என்னுடைய உரையை முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : என்னுடைய லட்
சியம், உறுப்பினர் திரு சிங்காரம் அவர்கள் நீண்டகாலம், பல
ஆண்டுகாலம், பல்லாண்டு, பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு
வாழவேண்டும் என்பதுதான் என்னுடைய லட்சியம். (சிரிப்பு).



(ஆ) சென்னை புளியந்தோப்பிலுள்ள இறைச்சிக்கூடம் சரிவரப் பராமரிக்கப்படாததால் ஏற்பட்டுள்ள விளைவுகள் குறித்து.

திரு. செங்கை சிவம் : மாண்புமிகு பேரவைத் துணைத்
தலைவர் அவர்களே, "சென்னை புளியந்தோப்பில் உள்ள
இறைச்சிக்கூடம் சரிவர பராமரிக்கப்படாதது குறித்த"
அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்பு
மிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்களின்
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : துணைத் தலைவர்
அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவை முன் வைக்கப்
பட்டு உள்ளது.

அறிக்கை.

சென்னையில் தற்பொழுது பெரம்பூரில் இயங்கி வரும்
ஆடுகள் மற்றும் மாடுகள் அறுவைக் கூடத்தினை உள்ளடக்கிய
இறைச்சிக் கூடம், 1904-அம் ஆண்டில் தொடங்கப்பட்ட
ஒரு பழமையான இறைச்சிக் கூடமாகும். இவ்விறைச்சிக்
கூடம் முன்னர் சென்னை மாநகராட்சியால் பராமரிக்கப்பட்டு
வந்துள்ளது. அப்பொழுது இதனை நவீனப்படுத்த ஒரு
திட்டம் தீட்டப்பட்டு அதற்கான திட்ட அறிக்கை
ஒன்றும், 1954ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சியால்
தயாரிக்கப்பட்டதாகத் தெரிகிறது. ஆனால் அத்திட்டம்
செயல்படுத்தப்படவில்லை. இவ்விறைச்சிக் கூடத்தினையும்,
மற்றும் சென்னையில் சைதாப்பேட்டை, வில்லிவாக்கம்
பேசின் பாலம் ஆகிய இடங்களில் இயங்கி வரும் இறைச்சிக்
கூடங்களையும் நிர்வகித்து, பராமரிக்கும் பணியினை கீழ்க்
காணும் கருத்துக்களை எய்தும் நோக்கத்தோடும் சென்
னைக்கு 27 கி. மீ. தொலைவில் உள்ள கொடுவேளி என்னு
மிடத்தில் ரூ. 350 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு
வந்த நவீன இறைச்சிக் கூடம் செயல்படத் தொடங்கும்
பொழுது, இவ்விறைச்சிக் கூடங்கள் மூடப்படலாம் என்ற
எதிர்ப்பார்ப்பினாலும், மற்றும் தேசிய அளவில் இறைச்சிக்
கூடங்களை நவீனப்படுத்துவதன் மூலம் இறைச்சி நுகர்
வோருக்கு தரமான, சுகாதாரமான இறைச்சியினை அளிக்கும்
நோக்கத்தோடு தொடங்கப்பட்ட தமிழ்நாடு இறைச்சி நிறு
வனத்திடம் மேற்கண்ட இறைச்சிக் கூடங்களை
நிர்வகிக்கும் பொறுப்பினை சென்னை மாநகராட்சி
1981-ஆம் ஆண்டு அளித்தது. தமிழ்நாடு இறைச்சி நிறு
வனத்தில் தமிழக அரசும், சென்னை மாநகராட்சியும் சம
பங்குதாரர்கள்.

1. பணியமைப்புகள் மேம்படுத்துதல்.

2. தொழிலாளர்களை நவீன இறைச்சிக் கூடத்தில் பணிபுரிவதற்கேற்ப பயிற்சி அளித்தல்.

3. இறைச்சிக் கூடங்களில் இயக்கப் பணிகளில் அனுபவம் பெறுதல்.

4. தொழிலாளர்களுடன் ஒருங்கிணைந்து அவர்களின் பணித்திறமையினை ஆய்வு செய்தல்.

2. இவ்விறைச்சிக் கூடங்களை நிர்வகிக்கும் பொறுப்பினை சென்னை மாநகராட்சியிடமிருந்து தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் ஏற்றது முதல் வழக்கமான பராமரிப்புச் செலவினை செய்ததோடல்லாமல் பெரம்பூர் இறைச்சிக் கூடத்தில் சாலை, குழாய்க் கிணறு, நீர் ஏற்று அறை, தண்ணீர்க் குழாய்கள், ஆடுகள் தங்குமறை, சோடியம் விளக்கு போன்ற முதலீட்டுப் பணிகளை சுமார் ரூ. 8.62 இலட்சம் செலவில் மேற்கொண்டுள்ளது.

3. கொடுவேளியில் கட்டப்பட்டு வந்த நவீன இறைச்சிக் கூடப் பணி சுற்றுப்புறச் சூழல் காரணங்களாலும், பொது மக்களின் எதிர்ப்பினாலும் அரசு தனது ஆணை எண். 1644, வேளாண்மை, (கா. ந. 4) துறை, நாள் 18-8-1986-ன மூலம் இத்திட்டத்தை நிறுத்தக் கோரியும், தகுந்த மாற்றிடத்தினை தேர்வு செய்யக் கோரியும் உத்தரவிட்டது. ஓரளவு கட்டப்பட்ட கட்டடங்கள் வேறு நன்முறையில் உபயோகிக்கும் கருத்தோடு, பாற்பண்ணை குறித்த அறிவியல் கல்லூரி தொடங்குவதற்காக தமிழ் நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தால் கேட்கப்பட்டு தற்போது தேவையில்லை என்று கூறியுள்ளது. ஆனால் நவீன இறைச்சிக் கூடம் அமைக்கத் தகுந்த மாற்றிடம் கிடைக்கப் பெறாமையினாலும், கடந்த காலத்தில் ஏற்பட்ட இடையூறுகளை மனதில் கொண்டும் இவ்விறைச்சிக் கூடம் கடந்த 86 ஆண்டு காலமாக இயங்கி வருவதாலும், இதனைச் சுற்றியுள்ள சுமார் 500லிருந்து 1000 வரையிலான குடும்பங்களுக்கு வருமானம் ஈட்டும் தொழிலாக இருப்பதாலும் பெரம்பூர் இறைச்சிக் கூடத்தினை ரூ. 200 இலட்சம் மதிப்பீட்டில் நவீனமாக்கலாம் என கருதி 1987ஆம் ஆண்டில் திட்டமிடப்பட்டது. இத்திட்டத்தின் செலவில் சரி பாதியினை மத்திய அரசிடமிருந்து உதவியாக பெறும் வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதற்கான பிரேரணை ஒன்று பரிசீலிக்கப்பட்டு, முதற்கட்டமாக ரூ. 60 இலட்சம் செலவில் மாடுகள் அறுவைக் கூடத்தினை நவீனப் படுத்தும் திட்டத்தினை அரசு அங்கீகரித்து, இதற்கான நிதி ஒதுக்கீட்டினையும் 1989-90-ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தில் செய்துள்ளது.





மத்திய அரசிடமிருந்து அதன் பங்குத் தொகையான ரூ. 30 இலட்சம் வழங்குவதற்கான ஆணை எதிர்ப் பார்க்கப்படுகிறது. மேற்கண்ட தொகை மத்திய அரசு வழங்கியவுடன் இதன் முதல் கட்டப் பணி தொடங்கப்படும்.

4. இத்திட்டத்தின் இரண்டாவது கட்டமாக ஆடுகள் அறுவைக் கூடத்தினை திருத்தப்பட்ட மதிப்பீட்டின்படி ரூ. 240 இலட்சம் செலவில் நவீனப்படுத்துவது பற்றிய திட்டம் எட்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் சேர்க்கும் பொருட்டு அனுப்பப்பட்ட பிரேரணை அரசின் பரிசீலனையில் உள்ளது. மேலும் கழிவுப் பொருட்களை பக்குவப்படுத்தி அனுப்புவதற்கென, ரூ. 45 இலட்சம் மதிப்பீட்டில் சுற்றுப்புறச் சூழல் குழுவினருடன் கலந்தாலோசித்து, ஒரு திட்டம் தீட்டப்பட்டு, இதற்கான திட்ட அறிக்கையினை மத்திய அரசு நிறுவனமான திருவாளர்கள் ரிச்சர்டுசன் மற்றும் குருடாஸ் ( Richardson Crvuddas நிறுவனத்திடமிருந்து பெறப்பட்டுள்ளது. இத்திட்டம் இரண்டாம் பகுதி பணியில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. மேலும் பெருமழையினாலும், வெள்ளத்தாலும் ஏற்படும் மழை நீர் மற்றும் கழிவு நீர் வடிகால் இடையூறினை நீக்குவதற்கென குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய அதிகாரிகளுடன் ஒரு கூட்டு ஆய்வினை தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் மேற்க் கொண்டது. இதன் மூலம் பெரம்பூர் இறைச்சிக்கூடத்திலிருந்து புரசைவாக்கம் கழிவு நீர் ஏற்று நிலையம் வரை ரூ. 10 இலட்சம் மதிப்பீட்டில் தனியானதொரு கழிவு நீர் குழாயினை அமைத்தால் கழிவு நீர் வெளியேறுவது சீரடையும் என்பது குடி நீர் மற்றும் கழிவு நீர் அகற்று வாரிய அதிகாரிகளின் கருத்தாகும்.

6. தற்பொழுது பெரம்பூரில் இயங்கி வரும் இறைச்சிக், கூடம் அருகே உள்ள சாலையினை விட 4 அடி தாழ்வாக உளளது. சென்னையில் பெருமழை பெய்யும் பொழுது பொதுவாக புளியந்தோப்பு பகுதிகளிலும், குறிப்பாக புளியந்தோப்பு நெடுஞ்சாலை, பின்னி (பி. அன்ட். சி.) மில் பகுதி டிகாஸ்டர் சாலை போன்ற இதர இடங்களிலும் வெள்ள நீர் சூழ்ந்திருக்கும். இவை அனைத்தும் ஓட்டேரி நல்லா கால்வாய் வழியே தான் வெளியேற வேண்டியுள்ளது. எனவே இக்கூடத்தினை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள நீர் சூழ்ந்திருக்கும் பொழுது, இறைச்சிக் கூடம் தாழ்வாக இருப்பதால் 3 அடி முதல் 4 அடி வரை உள்ள வெள்ள நீரால் பாதிக்கப்படுகிறது. இதனால் மழை நீரும், கழிவு நீரும் வெளியேற்று முறை பாதிக்கப்படுகிறது. தற்பொழுது மழை நீர் செல்லும் கால்வாய் பராமரிப்பு சென்னை மாநகராட்சியாலும் கழிவு நீர் செல்லும் பாதைகள் குடிநீர் மற்றும்

கழிவு நீர் அகற்று வாரியத்தாலும் பராமரிக்கப்பட்டு வரு
கிறது. எனவே மழையினால் ஏற்படும் வெள்ளக்கால
ங்களில் ஆடு வெட்டுவோர் வேறு வழியின்றி சாலையின்
ஓரத்தில் நீரினால் சூழ்ந்துள்ள நடைபாதையில் கால்நடை
களை வெட்டுகின்றனர். இறைச்சிக் கூடத்தினை சுற்றியுள்ள
பகுதிகளில் சூழ்ந்திருக்கும் மழை நீர் வெளியேறுவதற்கு
தேவையான அளவு வடிகால் அமைப்புகள் இல்லாமையே
இதற்குக் காரணமாக கருதப்படுகிறது. இதனால் மழை
ஒய்ந்த பிறகும் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு
இறைச்சிக்கூடத்தினை சுற்றியுள்ள பகுதிகளில் வெள்ள நீர் தேங்
யுள்ளதால் இறைச்சிக் கூட்டத்தினுள் இருக்கும் வெள்ள
நீரினை நீரிறைக்கும் இயந்திரம் இருந்தும் அதன் மூலம்
வெளியேற்ற இயலவில்லை. எனவே, மேற்கூறிய காரணங்
களினால் மட்டுமே இறைச்சிக் கூடம் நீரால் சூழப்பட்டு
மழை நீரும் கழிவு நீரும் வெளியேற இயலாமலிருக்கின்ற
தேயன்றி, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டதனைப் போல
இறைச்சிக் கூடம் சரி வர பராமரிக்கப்படாமையினால் அல்ல
என்பது தெரிவிக்கப்படுகிறது. மேலும் மழை பெய்யாத
காலங்களில் கழிவு நீர் அதற்குரிய கால்வாய்களின் வழியே
முறையாக வெளியேற்றப்படுகிறது. மழைக் காலங்களில்
தற்போது இருக்கும் நிலையினை கருத்தில் கொண்டு இறைச்
சிக்கூட வளாகத்தினை தேவையான அளவு உயர்த்தி கால்
நடைகள் வெட்டும் இடத்தினை முதல் தளத்தில் அமைத்து
போக்குவரத்து வசதிகளை கீழே அமைப்பதென நவீனப்
படுத்தும் திட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. மாசு கட்டுப்
பாடு வாரிய கருத்தின் படி, கழிவுப் பொருட்களை சுத்தப்
படுத்தி வெளியேற்றுவதும், கழிவு நீர் வெளியேறுவதற்
கென இறைச்சிக் கூடத்திலிருந்து அருகாமையில் உள்ள
கழிவு நீரகற்று நிலையம் வரை தனியொரு இணைப்பினை
அமைப்பதுமான பணிகள் திட்டத்தின் இரண்டா[illegible]து கட்
டத்தில் செயற்படுத்தப்படும்.

7. மேலும் இறைச்சிக் கூடத்துக்குள் வரும் மழை நீரை
யும், கழிவு நீரினையும் சென்னை மாநகராட்சி, மற்றும்
குடிநீர் மற்றும் கழிவு நீரகற்று வாரியங்களின் ஒத்துழைப்
போடு முடிந்த அளவு வெளியேற்றுவதற்கான தீவிர நட
வடிக்கைகளை தமிழ்நாடு இறைச்சி நிறுவனம் மேற்கொண்டு
வருகிறது.

**திரு. செங்கை சிவம் :** பேரவைத் துணைத் தலைவர்
அவர்களே, அவையில் வைக்கப்பட்டுள்ள விவர அறிக்கையில்,
மழைக்காலங்களில் இறைச்சிக்கூடத்திலே தண்ணீர் தேங்கி
விடுவதால், டாக்டர் அம்பேத்கார் கலைக் கல்லூரிச் சாலையில்
அந்த ஆடு மாடுகளை வெட்டுகிற பணி நடைபெறுவதாக
குறிப்பிடப்பட்டு இருக்கிறது. ஆகவே எந்தவித வசதியும்



இல்லாத இந்த நிலைமையில் இந்தப் பணி அங்கே நடை பெறுவதால், போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்படுகிறது. அதுமட்டுமல்ல, அங்கே இதனால் உண்ணுகிற இறைச்சியும் பாதுக்கப்படுகிறது என்பதை இங்கே தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, மாநில அரசு ஒரு தொகையை ஒதுக்கி உடனடியாக அந்த பராமரிப்புப் பணியைத் தொடங்குமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை புளியந்தோப்பில் பெரம்பூர் இறைச்சிக் கூடம், சாலைக்கு அப்பால், சாலையை விட 4 அடி தாழ்வாக இருக்கிறது. இதன்காரணமாக மழைக் காலங்களில் இந்த இறைச்சிக் கூடத்துலே தண்ணீர் பெருகிவிடுகிற நிலைமை ஏற்படுகிறது. அப்படி பெருகுகின்ற தண்ணீர், வடிகால் வசதி இல்லாத காரணத்தால், அதை உடனடியாக அந்த இடத்திலிருந்து அகற்றுகின்ற வாய்ப்பு மிகவும் குறைவாக இருக்கிறது. இதையெல்லாம் அடிப்படையாகக் கொண்டுதான், இதுபோன்ற நிகழ்ச்சிகளைத் தவிர்க்கின்ற வகையில், நவீனமயமாக்குகின்ற திட்டத்தை இந்த அரசு செயல்படுத்துவதற்கு ஆய்வு செய்து, எட்டாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில், அதை நிறைவேற்றுவதற்கு அரசிடம் ஒரு செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது. இப்போது மழை நின்றுவிட்டது. அப்படிப்பட்ட நிலைமையில் உடனடியாக நிதி ஒதுக்கீடு செய்யவேண்டிய அவசியம் இல்லை என்றே நான் உணர்கிறேன். அடுத்து வருகின்ற எட்டாவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில், இந்த நவீன இறைச்சிக் கூடம் செயல்படுவதற்கு, அனைத்து முயற்சிகளையும் அரசு மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

*11.45 மணி*

**திரு. செங்கை சிவம் :** தலைவர் அவர்களே 86 ஆண்டுக் கால வயதை உடைய அந்த இறைச்சிக் கூடம் முன்பு மாநகராட்சியால் மிகச் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டது. ஆனால் சமீபத்திலே அது தனியாக ஒரு வாரியம் கண்டு, அதன் மூலமாக ஒப்படைத்த சூழ்நிலையில் எந்தவித பராமரிப்பும் நடைபெற வில்லை. ஆகவே மாநகராட்சியிடமே மீண்டும் அதை ஒப்படைத்து, அதை நல்ல முறையில் பராமரிக்கின்ற ஒரு சூழ்நிலையை உருவாக்குமா என்பதை அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பெரம்பூர் இறைச்சிக் கூடம், தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் மூலமாக பராமரிக்கப்பட்டு வருகின்றது. தமிழ்நாடு இறைச்சி நிறுவனம், சென்னை மாநகராட்சியும் தமிழ்நாடு அரசாங்கமும் சமபங்குதாரர்களாக உள்ள ஒரு நிறுவனம். ஏற்கெனவே இது மாநகராட்சியால் நிர்வகிக்கப்பட்ட ஒன்று. தற்சமயம் மீண்டும் அதை மாநகராட்சிக்கு ஒப்படைக்கின்ற ஒரு செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில இல்லை என்பதை தெரி வித்துக் கொள்கிறேன்.

### 6. அறிக்கைகள் அளித்தல்.

#### (அ) மதிப்பீட்டுக் குழு.

திரு. மு. இராமநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதிப்பீட்டுக் குழுவினுடைய கீழ்க்காணும் அறிக் கைகளை பேரவைக்கு அளிக்கிறேன்:

(1) மாவட்டத் தொழில் மையங்கள் மற்றும் தொழிற் பேட்டைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு 1984-85-ஆம் ஆண்டு அளித்த பரிந்துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கை குறித்த குழுவின் இரண்டாவது அறிக்கை.

(2) கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் பற்றி மதிப்பீட்டுக் குழு 1986-87-ஆம் ஆண்டில் அளித்த பரிந் துரைகள் மீது அரசு மேற்கொண்டுள்ள நடவடிக் கைகள் குறித்த குழுவின் மூன்றாவது அறிக்கை.

#### (ஆ) சட்டவிதிகள் ஆய்வுக் குழு.

மாண்புமிகு திரு. வீ. பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டப் பேரவையின் சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது மற்றும் மூன்றாவது அறிக்கைகளை பேரவைக்கு அளிக்கின்றேன்.

### 3. தகவல் கோரல் — தொடர்ச்சி.

#### (ஓ) பின்னி நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டுமெனக் கோரும் மனு குறித்து

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வரதராசன் அவர்கள் தான் கொடுத்த மனு தொடர்பாக ஒரு தொடர்.



*திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. சென்னை பின்னி நிறுவனத்தை அரசுடைமையாக்க வேண்டும் எனவும், தமிழக அரசு அதன் நிர்வாகப் பொறுப்பை உடனே ஏற்று, தனி அதிகாரி ஒருவரை நியமிக்கவேண்டும் எனவும் அதில் பணியாற்றுகிற 7021 மனுதாரர்கள் அளித்துள்ள முறையீட்டு மனுவை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நான் சமர்ப் பித்துள்ளேன். அதன்மீது உரிய ஆய்வு நடத்தி நடவடிக்கை எடுக்க ஆவன செய்யுமாறு இந்த அவையிலே நான் வலி யுறுத்தி வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மனுக்கள் குழுவிற்கு அனுப்பி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துக் கொள்கிறேன்.

11-50 மணி

### 7. சட்டமுன்வடிவுகள் (ஆய்வு).

#### (அ) நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு* (சட்டமன்றப் பேரவை சட்டமுன் வடிவு எண். 7/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்."

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 மற்றும் இணைப்பு பட்டியல் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 மற்றும் முகப்புரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

*25—1—1990-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

### நெடுந்தலைப்பு

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்): பேரவை முன்னுள்ள கேள்வி :

" நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும். "

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In the enacting formula, for the expression Fortieth year" substitute the expression ' Forty-first year".

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 7/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும். "

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்டமுன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

### (ஆ) எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்ட முன்வடிவு 1990.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு.வே. தங்கபாண்டியன்): அவசர சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானம். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம், பேராசிரியர் க. பொன்னுசாமி ஆகியோரில் ஒருவர் முன்மொழிவார். திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் ;





" 22—12—1989-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (மூன்றாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 14/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது. "

தீர்மானம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

" 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும். "

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு.வே.தங்கபாண்டியன்: இரண்டு தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

11-55மணி

*திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் நிதியமைச்சராகவும் இருக்கிறார். கூர்ந்தமதி படைத்தவர். வியத்தகு நினைவாற்றல் பெற்றவர். அவருக்கு துணையாக ஒரு நிதி இலாகா செயலாளர், ஒரு தனி ஆலோசகர்— முன்பு நிதி இலாகாவினுடைய செயலாளராக இருந்தவர் உலக வங்கியின் ஆலோசகராக இருந்தவர், பட்ஜெட் தயாரிப்பது எப்படி பட்ஜெட்டை சட்டமன்ற உறுப்பினர்கள் அணுகுவது எப்படி என்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பாடம் நடத்தியவர், இப்படிப்பட்டவர்கள் துணையோடு தயாரித்த பட்ஜெட்டில் எதிர்பாராச் செலவு வரலாமா? ஒரே ஆண்டில் எதிர் பாராச் செலவு என்ற பெயரால் 3 முறை நிதி ஒதுக்கலாமா, முறையா ?, அதற்காக அவசரச் சட்டம் கொண்டு வரலாமா என்று நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். It takes away the right of this House ஒவ்வொரு பைசாவிற்கும் முழுவதுமாக செலவழிக்கும் அரசாங்கம் இந்த அவைக்கு பதில் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறது. The Goverment is accountable to this House.

---

* 22—1—1990-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

(திரு எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) [1990 சனவரி, 27

செலவுக்கு அனுமதி வழங்குகிற அதிகாரமும் இந்த அவைக்
குத்தான் இருக்கிறது. மணிபில்லைப் பொறுத்தவரை
யிலும் சட்டமன்ற மேலவைகளுக்கும் ராஜ்ய சபாவிற்கும்
அதிகாரம் வழங்கப்படவில்லை.

11.55. மணி

ஆகையினால் நடைமுறையில் கூட மானிய கோரிக்கை
களை இந்தப் பேரவையில் தான் வைக்க முடியும். மேல
வையில் வைக்க முடியாது. மேலவையில் பாலிசி நோட்
தான் வைக்கப்படுகிறது. டிமாண்ட்ஸ் வைக்கப்படுவதில்லை.
நாம் நினைத்தால் மேலவை இருக்கும். இல்லாவிட்டால்
இருக்காது. அப்படி இருக்கும்போது இந்த அவையைக்
கணக்கில் எடுக்காமல் கேஸ்வல் ட்ரீட்மெண்ட் இருக்கிறது.
அவையில் பெரும்பான்மை இருப்பதை வைத்துக் கொண்டு
ஒரு அவசரச் சட்டத்தைப் பிறப்பிக்கிறார்கள். பிறகு
அதையே அவையிலே வைத்து ஒப்புதல் பெறுகிறார்கள்.
ரேட்டிபிகேஷனில் துணை மானியக் கோரிக்கையில் முழு விவா
தத்திற்கு வாய்ப்பு இல்லை. அமைச்சர்கள் தனித்தனியாக
பதில் சொல்வதில்லை. நிதியமைச்சர் பதில் சொல்வார்.

Right for full discussion in being curtailed, if it is a regular
budget.

விளக்கமாக விவாதிப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. அந்த
வாய்ப்பு இப்பொழுது மறுக்கப்பட்டிருக்கிறது. இது ஜன
நாயகத்திற்கு விரோதமானது. இது நல்ல முறையல்ல.
இது தவிர்க்கப்பட வேண்டும். நிதி நிர்வாகத்திற்கும் நல்ல
பெயர் ஏற்படுத்தாது. தன்னிச்சையான திட்ட அறிவிப்பு
களை தவிர்க்க வேண்டும். மலிவான விளம்பரங்களுக்கான
பாப்புலிஸ்ட் மெஷர்ஸ் திட்டங்களை அறிவித்து நிதி நெருக்
கடி என்ற பொறியில் சிக்கக்கூடாது. எதிர்பாராத செலவு
நிதியம் கன்டின்ஜென்சி ஃபண்ட் ஆஃப் தி ஸ்டேட் என்பது
மணி பில்லில் தான் வருகிறது என்பதை ஆர்ட்டிகிள் 199-ஏ
தெளிவுபடுத்துகிறது. கன்டின்ஜென்சி ஃபண்டையும், கன்
சாலிடேட்டட் ஃபண்டையும் ஒரே உட்பிரிவில் சொல்லப்பட்
டிருக்கிறது. கன்சாலிடேட்டட் ஃபண்ட்டிலிருந்து செலவு
செய்யும் ஒவ்வொரு பைசாவையும் சட்டப் பேரவையின்
அனுமதி இல்லாமல் எடுக்க முடியாது. சட்டப் பேரவை
இல்லாமல் இருந்தால்—காலக்கெடு முடிந்து சட்டப்பேரவை
இல்லாமல் இருந்தாலும் சரி, சபை கலைக்கப்பட்டு இருந்
தாலும் சரி மக்கள் அவை தான் அதை அனுமதிக்க வேண்
டும். கவர்னரோ, ஜனாதிபதியோ அவர்களாகவே அனுமதிக்க
முடியாது. 1967-ஆம் ஆண்டிற்கு முன்பு பாராளுமன்ற,
நாடாளுமன்ற தேர்தல் நடைபெற்றதற்குப் பின்னாலே ஒரு
'லேம்டக் செஷன், ஒன்று நடைபெறும், ஏனென்று



1990 சனவரி, 27] (திரு. எஸ். ஆர். பாலசுபரமணியம்)

சொன்னால் புதிய மக்களவை கூடி அதை விவாதிப்பதற்கு காலம்
இருக்காது என்கிற காரணத்தினாலே பழைய மக்களவையே
கூடி அவர்கள் வோட் ஆன் அக்கவுண்ட் எடுப்பார்கள். அண்
டர் ஆர்ட்டிகிள் 160. இப்பொழுது 1967-க்குப் பிறகு
அது கூடவில்லை. காரணம் 1967-ஆம் ஆண்டு அதிக எண்
ணிக்கையில் எதிர்க் கட்சிகள் வந்தபோது அதை எதிர்த்
தார்கள். எனவே இப்போது அது கூடவில்லை. என்
றாலும் கூட வோட் ஆன் அக்கவுண்ட் எடுக்காமல் நிச்சய
மாக பணத்தை அதிலிருந்து எடுக்க முடியாது. ஆக மத்திய
அரசானாலும் மாநில அரசானாலும் அரசு பொது நிதி
யிலிருந்து செலவுக்கு எடுக்கும் ஒவ்வொரு பைசாவிற்கும்
மக்களவையின் அனுமதியும், சட்டப் பேரவையின் அனுமதி
யும் இருக்க வேண்டும் என்பது விதி. அவசரச் சட்டத்தின்
மூலம் கன்டின்ஜென்சி ஃபண்டை அதிகரித்துக்கொள்ள முடி
யும் என்றால், பட்ஜெட்டையும் அவசரச் சட்டமாக பிறப்
பிக்க முடியுமா என்று நான் அறிந்து கொள்ள விரும்பு
கிறேன். அவசரச் சட்டம் பிறப்பிக்கும் உரிமையைப் பற்றி
213-வது ஆர்ட்டிகிள் தெளிவாகவே குறிப்பிட்டிருக்கிறது.
கௌல் அண்டு ஷக்தரில் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.
அவசரச் சட்டம் பிறப்பிக்க முடியுமா என்பதை தெளிவாகவே
அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"An ordinance for the appropriation of any money out of the conso-
lidated fund is invalid if the relative demands for grants have not
been placed before considered and assented to by Loksabha,for the
apropriation oi money for a state.The admin strat on of which has been
taken over by the President under a proclamation issued by him
the budget for that state aecording to the existing practice, is not
certified by ordinance, the underlying principle being that no money
can be spent out of the consolidated fund without the sanction of
parliament. Hence, if a contingencey arises for passing an approp-
riation bill regarding such a state and Rajya sabha is not in session
that house is specially summoned for this purpose."
என்று மிகத் தெளிவாகவே அதிலே சொல்லியிருக்கிறார்கள்.
ஆக எதுவாக இருந்தாலும் அவையினுடைய அனுமதி இல்
லாமல் செய்ய முடியாது என்பது மிகத் தெளிவாகக் குறிப்
பிடப்பட்டிருக்கிறது.

"Promulgation of this ordinance is against the spirit of the constitu-
tion, is against the letter of the constitution, promulgation of this
ordinance is unconstitutional."

வறட்சி நிவாரணத்திற்காகச் செலவு என்ற பெயரிலே
சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே வறட்சி நிவாரணம்?
குடிநீர் வழங்க ஆழ்க்குழாய் கிணறுகள் போடப்பட்டிருக்

இன்றனவா போதிய அளவிற்கு என்று அறிந்து கொள்ள விரும்புகிறேன். அதுபோல எதுவாக இருந்தாலும் ஒவ்வொன்றும் முன்பே தெளிவாக அறிந்த ஒன்றைத்தான் மீண்டும் மீண்டும் சொல்லியிருக்கிறீர்கள். சி. சுப்பிரமணியம் அவர்கள் 1954-ஆம் ஆண்டு இந்த அவையிலே கன்டின்ஜென்சி பண்ட் பில்லைக் கொண்டு வந்து இங்கே பேசியிருக்கிறார்கள். அதிலே கூட அவசரச் சட்டம் பிறப்பிக்க முடியும். பிறப்பிப்பதற்கு இடம் இருக்கிறது என்று எந்தச் சட்டத்திலேயும் அவர் குறிப்பிடவில்லை. அதை மட்டும் நான் இங்கே படித்துக் காட்ட விரும்புகிறேன்.

This is a formal Bill. As the hon. members are aware the Government cannot draw money from the consolidated fund except under the authority of the Legislature. It is only for that purpose after we vote the various grants, we Pass what is known as a propriation bill giving authority to the Government to draw money from the consolidated fund of the state.

12.00. மணி

But apart from the budget proposals for which sanction is granted by the legislature, the Government may have to undertake new schemes which have not been contemplated at the time of making the budget proposals and those cases have to come up before this house again by way of supplementary demands, before we get the authority from the legislature it is necessary to incur some expenditure for that purpose we constiture, what is known as contingency fund, from that even the Governer is authorised to advance money to the Government for being utilised to new services.....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. தங்கபாண்டியன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் ஏறக்குறைய 5, 6 பேர் பேச இருக்கிற காரணத்தால் உங்களுடைய நேரத்தைக் சுருக்கிக் கொள்ளவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்:** அநாவசியமாக ஒரு வார்த்தைக் கூடப் பேசவில்லை. I have given a notice of disapproval இந்த அவசரச் சட்டம் என்பது ஆளுநரால் பிறப்பிக்கப்பட முடியாது என்ற வாதத்தை நான் சொல்கிறேன். ஆளுநருடைய அவசரச் சட்டத்திற்குள்ளாகவோ அல்லது எதிர்பாரா நிதி பற்றிய இந்தச் சட்ட முன்வடிவுக்குள்ளாகவோ



செல்லவில்லை. நான் சொல்வது, இதில் ஆளுநருக்கு அவசரச் சட்டம் பிறப்பிக்கின்ற அதிகாரத்தை நிச்சயமாக இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் வழங்கவில்லை. you can not enhance the corpus அதைத்தான் நான் சொல்ல விரும்புகிறேன். சி. எஸ் அவர்களும் அதைச் சொல்லியிருக்கிறார்கள்.

"....Later on when the Legislature sanctions the expenditure and votes the grant. This money is put back into the Contingency Fund so that the Contingency Fund at the end of the year will remain as the same figure."

கன்டின்ஜன்சி ஃபண்ட் முன்பு இருந்தது என்று சொல்கிறார்கள. ஆனால் அவர் சொன்னதிலேகூட, எதற்காக இந்தச் சட்டம் வருகிறது? உங்களுக்கு ஒரு நிதி தேவை. திடீரென்று எதிர்பாராச் செலவினம் என்றால் அதை எடுத்துச் செலவிடுவதற்கு நிதி தேவை. அதை நான் ஒப்புக் கொள்கிறேன். அந்த நிதி சிறிய நிதியாகத்தான்—முன்பு 50 இலட்சம் ரூபாயாக இருந்தது. 75 இலட்சம் ரூபாய் ஆயிற்று. அது பின்பு 1 கோடி ரூபாய் ஆயிற்று; பின்பு 2 கோடி ரூபாய் ஆயிற்று. இப்போது நீங்கள் பட்ஜெட்டிலே 75 கோடி என்று ஒதுக்கினீர்கள். நான் ஒப்புக் கொள்கிறேன். பிறகு அதையே 200 கோடியாக அவசரச் சட்டம் மூலமாகப் பிறப்பித்தீர்கள். அதையே நாங்கள் எதிர்த்து இருக்கிறோம். இப்போது மீண்டும் 300 கோடி என்று சொல்லி அவசரச் சட்டம் வந்திருக்கிறதே. அவசரச் சட்டம் இதற்காகப் பிறப்பிக்க வேண்டிய அதிகாரம் கவர்னருக்கு இருக்கிறதா என்பதை நாம் ஆராயத்தான் வேண்டும். இல்லாவிட்டால், யாராவது கோர்ட்டுக்கு—போகவில்லை—போனால், நிச்சயமாக நான் சொல்கிறேன். இது அடிபட்டு விடும், நிற்காது; ஏனென்றால் கான்ஸ்டிடியுஷனிலே ஒரு வார்த்தை கூட—it is a money bill 199-சியிலே இரண்டும் வருகிறது. நம்முடைய கன்சாலிடேட்டட் ஃபண்டும் 199-சியிலே வருகிறது. நம்முடைய கன்டின்ஜன்சி ஃபண்டும் 199-சியிலே வருகிறது. ஆக, அவை அதை அனுமதிக்கவேண்டும். 300 கோடி ரூபாய் எதிர்பாரத செலவு நிதிக்காக இந்த அரசாங்கம் பெற்றுக் கொள்ளலாம் என்று அவை அனுமதித்தால்.

Then the Governor becomes the cutodian of the corpus. The Governor cannot promulgate on ordinance on hencing the corpus.

அதுதான் இங்கே நான் சொல்ல விரும்புகிற வாதம். பல விஷயங்கள் இருந்தும்கூட, பட்ஜெட் சமர்ப்பிக்க இன்னும் ஒரு மாதம் தான் இருக்கிறது. ஏற்கெனவே நீங்கள் பட்ஜெட்டை சமர்ப்பித்து இருக்கிறீர்கள். நேற்றைய முன் தினம்................

மாண்புமிகு திரு. துரைமுருகன்: Humble submission to the chair மாண்புமிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிர மணியம் அவர்கள் டிஸ்-அப்ரூவல் நோட்டீஸ் கொடுத்திருக் கிறார். Am I correct! How I disapprove என்று ஒரு நோட்டீஸ் கொடுப்பதிலேகூட, அதிலே முக்கியமாக எடுத்த எடுப்பிலே அவர் சட்ட நுணுக்கத்தோடு இருக்கிற இரண்டு, மூன்று விவகாரங்களைச் சொல்லி, so, this House disapproves the bill என்றுதான் அவருடைய வாதங்கள் அமையவேண்டுமே தவிர, இதிலே ஒரு நீண்ட பெரிய வாதத்தை இந்த அவை அனுமதிப்பதில்லை. ஏனென்று கேட்டால், பலமுறை இப்படி டிஸ்-அப்ரூவல் நோட்டீஸ் களைக் கொடுத்தவன் நான், அதன் மீது பேசியவன் நான் என்ற முறையிலே சொல்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. தங்கபாண்டியன்: மாண்புமிகு உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் 7-லிருந்து 10 நிமிடங்கள் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. அருள் கூர்ந்து மாண்புமிகு உறுப்பினர்கள் அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: எனவே, பட் ஜெட்டை சமர்ப்பிப்பதற்கு ஒரே மாதம் இருக்கின்ற இந்த நிலையில் ஆளுநரால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிற இந்த அவசரச் சட்டத்தை இந்த அவை நிராகரிக்கவேண்டும் என்கிற தீர்மானத்தை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

Promulgation of an ordinance to enhance the corpus of the contin-gent fund is unconstitutional and hence it is not acceptable. Therefore I move that this house disapproves the promulgation of this ordinance.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. தங்கபாண்டியன்: அடுத்து, திரு. சி. கோவிந்தராஜன்.

Prof. K. PONNUSAMY: I have given a notice of disapproval

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. தங்கபாண்டியன்: உறுப்பினருடைய கட்சித் தலைவருடைய அனு மதியோடு அடுத்த தீர்மானத்தில் பேசுவதற்கு உங்களுடைய பெயர் இடம் பெற்றிருக்கிறது. இப்போது. திரு. சி. கோவிந்த ராஜன்,





12-05 மணி

* திரு. சி. கோவிந்தராஜன்: மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எதிர்பாராத செலவு நிதி திருத்த சட்டமுன்வடிவு குறித்து இங்கே விவாதம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதை நாம் அறிவோம். எதிர்பாராத செலவு என்று கூறும போது உண்மையிலேயே அரசும் யாருமே எதிர்பார்க்க முடியாத செலவுதான். அப்படிப்பட்ட செலவுகள் என்ன என்பது பற்றி ஏற்கனவே விளக்கப்பட்டிருக்கிறது. திடீரென்று வெள்ளம் வருகிறது; புயல் வருகிறது இப்படி பல்வேறு விதமான இயற்கை சேதங்கள் வருகின்றன. இவைகள் எல்லாம் நாம் எதிர்பாராமல் வருபவை சட்டப்படி வருவது அல்ல. எனவே சட்டப்படி வரக்கூடிய நிலைமை இல்லாமல் இப்படிப்பட்ட இயற்கை சேதங்கள் வரும்போது இவை எந்த சட்டத்தின் கீழ் வருகிறது? நம்மை கேட்டுக்கொண்டா வருகிறது? அதனால்தான் இப்படிப் பட்ட செலவுகளை எல்லாம் ஈடுகட்டுவதற்காகத்தான் எதிர் பாராத செலவுகள் என்ற முறையில் இதை அரசு இங்கே வைத் திருக்கிறது, என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்த சட்டமுன்வடிவை நான் ஆதரித்துப் பேசும்போது வேறு சில விவரங்களையும் இந்த சபையில் வைக்கலாம் என்று கருது கிறேன்.

அரசு மூலமாக நடத்தக்கூடிய நியாய விலைக் கடைகளில் மக்களுக்கு மாதம் 15கிலோ அரிசி கொடுக்கப்படும் என்று உத்தரவு இடப்பட்டிருக்கிறது. ஆனால் பல்வேறு கடைகளில் மாதம் 12 கிலோ அரிசி கூட கிடைக்கவில்லை; அதில் நடக்கும் பல்வேறு முறைகேடுகள் குறித்து ஏற்கனவே இங்கே விவாதம் நடந்து இருக்கிறது, அது குறித்து நான் விவரமாகப் போக விரும்பவில்லை. எடை குறைவு, நானே பல கடைகளுக்குச் சென்று பார்த்து இருக்கிறேன். வரக்கூடிய பொருள்களில் பாதி மட்டும் மக்க ளுக்கு கொடுக்கப்பட்டு மீதி வெளியே செல்கிறது. இவைகளை எல்லாம் கண்காணிக்க அரசு அதிகாரிகள் நடவடிக்கை போதாது. எனவே, இதற்கு ஒரு கண்காணிப்புக் குழு போடவேண்டும். இது எல்லா தரப்பிலிருந்தும் வலியுறுத்தப்பட்டு இருக்கிறது. கடந்த காலத்தில் போட்டது போல் ஆளும் கட்சியைச் சேர்ந்த வர்கள் அல்லது அவர்களுக்கு ஆதரவாளர்கள் என்ற அந்த அடிப் படையில் இல்லாமல் அனைத்துக் கட்சியைச் சேர்ந்தவர்களை கொண்ட ஒரு கண்காணிப்புக் குழுவைப் போடவேண்டும் என்று நான் இந்த சமயத்தில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன்.

அது மட்டும் அல்லாமல், பல்வேறு இடங்களில் குடும்ப கார்டு கள் கிடையவே கிடையாது. அவர்கள் அங்கே போய் அத்தியா வசியப் பொருட்களை வாங்குவார்கள் என்பது கேள்வியாக இருக்கக்கூடிய காரணத்தால் அதற்கான நடவடிக்கையை உடனே எடுத்து ஆக வேண்டும்.

குடிநீர் பிரச்சினையைப் பற்றி இங்கே கூறப்பட்டிருக்கிறது. 1990 ஆம் ஆண்டு மே மாதத்துற்குள் எல்லா குடியிருபபுகளுககும் குடிநீர் வசதி செய்து கொடுக்கபபடும் என்று கூறபபட்டிருக்கிறது. இநதத் திட்டம் பற்றி இங்கே துரிதமாக சொல்லப்பட்டாலும், வேகமாக சொல்லப்பட்டாலும் அங்கே நடப்பது ஆமை வேகத்தில் தான். ஆழ் துளை கிணறுகள் போடுவதற்கு உரிய இயந்திரங்கள் வரவைப்பது மிகவும் கஷ்டமாக இருக்கிறது, காலம் கடத்தப்படு கிறது. மின்சார மோட்டார்கள் வரவைபபதிலும் கால தாமதப் படுத்தப்படுகிறது. எனவே 1990 ஆம் ஆண்டு மே மாத இறுதிக்குள் இது எல்லாம் நடைபெறுமா என்று நினைக்கக் கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தால் இதையெல்லாம் கணக்கில் எடுத்துக கொண்டு துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொளகிறேன்.

தொழில் வளர்ச்சிக்கு பல திட்டங்கள் போடப்பட்டு வரு கின்றன. தொழில்கள் வளர்கின்றன. அதையொட்டி தொழி லாளர்கள் பிரச்சினைகளும் அதிகரிக்கின்றன. அதை சமாளிக்கக் கூடிய அளவுக்கு தொழிலாளர் நல இலாக்காவில் இருக்கக்கூடிய பணியாளர்கள், அதிகாரிகள் எண்ணிக்கை போதாது. அதை அதிகப்படுத்த வேண்டும். இருக்கக்கூடிய அதிகாரிகளும் எந்த அளவுக்கு பணி செய்கிறார்கள் என்று நினைக்கும்போது வேதனை யாக இருக்கிறது. தொழிலாளர் நல இலாக்கா செயல்பட வேண் டிய விதம் குறித்து ஏற்கெனவே கொள்கைக் குறிப்பில் கூறப்பட் டிருக்கிறது. சமுதாயத்தில் நலிந்த பிரிவினர்களுக்காக இந்த இலாக்கா செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டு இருக்கிறது. ஆனால் தொழிலாளர் நல இலாக்காவில் இருக்கக் கூடிய ஒரு சில அதிகாரிகள் தொழிலாளர்களுக்கு உதவி செய்வ தற்குப் பதிலாக அவர்கள் முதலாளிகளுக்கு ஆதரவாக இருக்கக் கூடிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. அவர்களுக்கு ஒரு ஓரியன் டேஷன்' வேண்டும். அதற்கான நடவடிக்கையை இந்த அரசு எடுக்க வேண்டும். அப்படிப்பட்டவர்கள் திருந்தவில்லை என்று சொன்னால் அப்படிப்பட்ட ஒரு சில அதிகாரிகளை இந்த இலாக் காவிலிருந்து வேறு இலாக்காவிற்கு மாற்றவேண்டும். கொள்கைக் குறிப்பில் கூறப்பட்டு இருப்பது என்ன? ஏழைகளாலும், சமுதா யத்தில் நலிந்தவர்களாலும் அமைக்கப்பட்ட அரசு இது என்று சொல்லிவிட்டு அவர்களுக்காக செயல்பட வேண்டிய இந்த அரசு அவர்களுக்கு இல்லாமல் வேறு இடத்திற்குப் போகிறது. ஒரு சில தொழிலாளர் நல ஆணையர்கள், டெபுடி லேபர் கமிஷனர் கள்தான் வந்து இந்த கன்சிலியேசனை நடத்த வேண்டும் என்று முதலாளிகளே கேட்கிறார்கள்.

12-10 மணி

அப்படியானால் என்ன அர்த்தம்? அங்கேயுள்ள சில தொழி லாளர் நல அதிகாரிகளே முதலாளிகளை கிளையன்ட்ஸ்-ஆகக் கொண்டு தொழிலாளர்களுக்கு எதிராக செயல்படுகிறார்கள் என்றுதான் அதற்கு அர்த்தம். எனவே அப்படிப்பட்ட நிலைமைகள்





மாற்றப்பட வேண்டும். இன்னொன்று, தொழில் வழக்குகள், துரிதமாகப் பைசல் செய்யப்பட வேண்டுமென்று கூறப்பட்டாலும் அவ்வாறு பைசல் செய்யப்படவில்லை. மூன்று மாதத்திற்குள் பைசல் செய்யப்பட வேண்டுமென்று ஐ.டி.-ஆக்டிலே இருக்கிறது. ஆனால் இப்படிப்பட்ட வழக்குகளைப் பைசல் செய்வதற்கான நீதி மன்றங்கள் மிகவும் குறைவாக இருக்கின்றன. குறிப்பாக எடுத்துக் கொண்டால், சென்னை, செங்கை, வடாற்காடு, தென் னாற்காடு, தஞ்சை மாவட்டங்களுக்கு என்று சென்னையில் 4 தொழிற் கோர்ட்டுகள்தான் இருக்கின்றன. ஆனால், மதுரை, திருச்சி, திருநெல்வேலி. இராமநாதபுரம், கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு —நான் புதிய மாவட்டங்களைச் சேர்க்க வில்லை— இரண்டே தொழிற் கோர்ட்டுகள்தான் இருக்கின்றன. அதைவிட மோசமான நிலைமை என்னவென்று சொன்னால், கோவை, நீலகிரி, பெரியார், சேலம், தர்மபுரி போன்ற மாவட்டங் களுக்கு கோவையில் ஒரே ஒரு நீதிமன்றம் தான். தொழில் வளர்ச் சியில் கொஞ்சம் முன்னேறியிருக்கக் கூடிய கோவை மாவட்டம், நீலகிரியில் 2 இலட்சம் தோட்டத் தொழிலாளிகள் இருக்கிறார் கள். இப்படிப்பட்ட மாவட்டங்களுக்கு ஒரே ஒரு தொழில் நீதிமன்றம்தான் கோவையில் இருக்கிறது. இங்கே கடந்த' 1989 ஆம் ஆண்டு மட்டும் 600 வழக்குகள் வந்தன. அவைகள் பைசல் செய்யப்படாமல் இருக்கின்றன. சென்னையிலே, 4 நீதிமன்றங் கள் இருக்கக்கூடிய இடத்திலே 1,200 வழக்குகள் வந்தன. எனவே வழக்குகள் உடனுக்குடன் பைசல் செய்யப்பட வேண்டுமென்று சொன்னால், குறிப்பாக, மதுரையிலே, ஒன்றிரண்டு தொழில் நீதிமன்றங்கள் அதிகமாக்கப் படவேண்டும். அதேமாதிரி, கோவையில் மேலும் இரண்டு நீதிமன்றங்களையாவது அதிகமாக ஆக்கப்பட்டாலொழிய இதில் எவ்வித முன்னேற்றமும் காண முடியாது என்பதை இந்த நேரத்திலே நான் கூற விரும்புகிறேன்.

கடைசியாக ஒன்றை மட்டும் கூற விரும்புகிறேன். தற்போது மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியம் மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. ஆனால் அதிலே சில அனாமலி இருப்பதன் காரணமாக அங்கே அதிருப்தி நிலவுகிறது. எனவே அவர்களுடைய சங்கங்களை அழைத்துப் பேசி, உடனடி யாக தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டு மென்று நான் கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).

**திரு. கோ. பூவராகன்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இன்றைய தினம் இம்மாமன்றத்திலே வைத்திருக்கிற இந்த கன்டிங்ஜன்சி பண்ட் மீது என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். பொதுவாக, இந்த கன்டின் ஜன்சி பண்டிலே 300 கோடி ரூபாய்க்கு மேலே இன்றைய தினம் ஒதுக்கி இருக்கிறார்கள். அந்தப் பணத்தைப் பெறுவதற்கு நம்முடைய ஆளுநர் அவர்களுடைய அனுமதி வேண்டும். இப் போது இருக்கிற சூழ்நிலையிலே ஆளுநர் அவர்களிடம் இவ்வளவு பெரிய, 300 கோடி ரூபாய்க்கு அனுமதி வாங்க வேண்டுமென்றால்,

கொஞ்சம் சிரமப்பட வேண்டியிருக்கும் என்று நான் கருது கிறேன். குறிப்பாக, தவிர்க்க முடியாத காரணங்களாலே இந்தப் பணத்தை நாம் அதிகமாகக் கேட்டிருக்கின்றோம். என்னென்ன காரணங்கள் என்று பார்க்கின்றபோது சில, ஒத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கின்றன. சில விஷயங்கள் முன்கூட் டியே நிதிநிலை அறிக்கையிலே சேர்க்க வேண்டிய நிலை உள்ளது. வருகிற காலத்திலே இதையெல்லாம் தவிர்த்துநல்ல முறையிலே ஒரு மதிப்பீடு செய்ய வேண்டுமென்று நான் இந்தச் சமயத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, இன்றையதினம், வைத்திய கல்லூரியிலே, மாண்புமிகு நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்களுடைய கவனத் திற்கு ஒரு முக்கிய விவரத்தை, அவருடைய கருத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். கோவை மாநகரத்திலே தற்போது இயங்கி வருகிற டி.ஐ.பி. வைத்திய கல்லூரியிலே 450-க்கு மேற்பட்ட மாணவ மாணவிகள் படிக்கின்றார்கள். . . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டம் கன்டின்ஜன்சி பண்டை அனுமதிப்பதற்காக மட்டும்தான் வந்திருக்கிறதே தவிர கன்டின்ஜன்சி பற்றிய தகவல்களையெல்லாம் பேசி முடிவு எடுப்ப தற்காக அல்ல பிரச்சினைகள் நியாயமாக இருக்கலாம். அந்தப் பிரச்சினையை இந்த நேரத்தில் பேசி அதற்கு மற்ற அமைச்சர்கள் யாரும் விவாதத்திலே பதில் சொல்லக்கூடிய நிலைமை இன்றைக்கு இல்லை. எனவே, இந்தப் பொது நோக் கத்திற்கு ஆதரவு தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : பொதுவாக ஆதரவு அளிக்கிறேன். நான் அதற்கு எதிர்த்து போக விரும்பவில்லை. இந்த கன்டின் ஜன்சி பண்டிலேயிருந்து சில காரியங்களுக்கு, வைத்திய கல்லூரிக்கு, பள்ளிக்கூடங்களுக்கு, பள்ளிக்கூட கட்டிடங்களுக்கு, ஆசிரியர் களுக்கு, இவைகளுக்கெல்லாம் பணம் ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்குகின்றபோது, இந்தமாதிரி நிலைமை இருப்பதை சுட்டிக்காட்டுவதற்கு உறுப்பினர்களுக்கு உரிமை இருக்கிறது என்பதினாலே நான் கருத்து சொல்ல விரும்புகிறேன். பொதுவாக இன்றையதினம் அந்த நகரத்திலே ஒரு பீதியை ஏற்படுத்தியிருக் கிறது. அந்த மாணவர்கள் மத்தியிலே இதுவரையிலும், அந்த ஆல் இண்டியா மெடிக்கல் இன்ஸ்டிடியூட்டிலே இருந்து அவர் களுக்கு அனுமதி வராததினால் மேற்கொண்டு படிப்பை தொடருவ தற்கு கஷ்டங்கள் இருக்கின்றன. ஆண்டு ஒன்றுக்கு 650 ரூபாய் ஆரம்பத்திலே வாங்கினார்கள். ஆனால் இன்றையதினம் பார்க் கும்போது ரூபாய் 10 ஆயிரம் வாங்குகிறார்கள். ஆஸ்டல் ஃபீஸ் 50 ரூபாயிலிருந்து 300 ரூபாய் வாங்குகிறார்கள். ஆண்டு முழுவதுக்கும் இந்தக் கட்டணத்தைப் பெற்றுவிட்டு, பிறகு மாணவர்களையெல்லாம் வெளியே அனுப்பி விடுகிறார்கள்



உள்ளே படிப்பதற்கு அனுமதிப்பதில்லை. அங்கே அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். உண்ணாவிரதம் இருக்கின்றார்கள். அரசாங்கம் இதிலே தலையிட்டு, உரிய முறையில் கட்டிடங்கள் கட்டித்தர நடவடிக்கை எடுக்க வேண்டும். அங்கே ஆசிரியர்கள் குறித்த அளவில் இல்லாத காரணத்தால் இந்தியன் மெடிக்கல் இன்ஸ்டிடியூட்டிலிருந்து அதற்கு அனுமதி மறுக்கப்பட்டிருக்கிறது. அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கவனிக்க வேண்டும். உரிய முறையில் மாணவர்களுக்கு உதவி, அவர்கள் மேற்கொண்டு படிப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

12-15 மணி

அதேபோல, தென்னாற்காடு மாவட்டத்தில் அமைந்திருக்கிற சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆண்டு விழாவின்போது அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அங்கே பட்டப்படிப்பு தொடங்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டு மென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் அவர்களை அழைத்துப் பேசி அந்தப்பல்கலைக் கழகத்தில், மகிழ்ச்சிகரமாக, நல்ல ஒளி மாணவர்களுக்கு ஏற்படுத்தக் கூடிய வகையில், பட்டப்படிப்பை அங்கே தொடங்க யோசனை சொல்லவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியில், நாங்கள் பல ஆண்டுக் காலமாகக் கேட்டுவரும் பெண்கள் கல்லூரியை விரைவில் தொடங்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான இடமும் பார்த் திருக்கிறோம். பணமும் கட்டத் தயாராக இருக்கிறோம். வரு கிற நிதிநிலை அறிக்கையில் அதற்கு தகுந்த நிதி ஒதுக்கி, வருகிற கல்வியாண்டில் கல்லூரியைத் துவக்க ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த எதிர்பாராச் செலவு நிதிய சட்ட முன்வடிவின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல அனுமதித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எதிர்பாராச் செலவு நிதி என்று 75 கோடி ரூபாயிலிருந்து 200 கோடி ரூபாயாக ஆக்கும்போது இந்த மன்றத்தில் எதிர்ப்புத் தெரிவித்திருக்கிறேன். இப்போது 300 கோடி ரூபாயாக கேட் கிறீர்கள். ஆகவே அந்த எதிர்ப்பை இன்னும் சற்று அதிகமாகக் காட்டவேண்டிய சூழ்நிலையில் இருக்கிறேன். தவறான நிதி நிர்வாகம் காரணமாகத்தான் எதிர்பாராச் செலவு நிதியம் ஒவ் வொரு முறையும் அதிகரிக்கப்படுகிறது என்ற கருத்தில் யாருக்கும் மாறுபாடு இருக்க முடியாது. திட்டமிடுதல் சரியாக இருந்தால் எதிர்பாராச் செலவுகளை நிச்சயமாகக்குறைக்கமுடியும் என்பதில் இங்குள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் ஒருமித்த கருத்து இருக்கும் என்று நம்புகிறேன். இந்த அவையில் சொல்லப் படுகிற விமரிசனங்களையும் அவை உறுப்பினர்களுடைய உணர்வு

களையும் பொருட்படுத்துகின்ற வகையில் எதிர்காலத்தில் உங்க
ளுடைய நடவடிக்கைகளை அமைத்துக் கொள்ள வேண்டும்.
இந்த எதிர்பாராச் செலவு நிதியத்தை பாக்கெட் மணியைப்
போல, ஒரு அட்சய பாத்திரத்தைப் போல, அமுதசுரபியைப்
போல நிரப்பிக் கொண்டு, இலவசத் திட்டங்களுக்கும்,
கவர்ச்சித் திட்டங்களுக்கும் வாரி இறைக்கலாம் என்ற மற்ற
நோக்கத்தோடு இது செய்யப்படுகிறதோ என்ற கருத்து உள்
ளுக்கு வந்துவிடக் கூடாது என்பதை நினைவு படுத்த விரும்பு
கிறேன். பெரும்பான்மை பலம் இருக்கிறது என்ற ஒரே காரணத்
திற்காக காரியங்களை செய்து முடித்துவிட்டு, அதன்பிறகு இன்
றைக்கு அவையில் வைத்து ஒப்புதல் பெற்றுக் கொள்ளலாம்
என்று தொடர்ந்து கருதினால், அது நல்ல ஜனநாயக முறையாக
அமையாது என்பதையும், இந்த அவையின் ஒப்புதல் இல்லாமல்
காரியம் நடத்திவிட்டு, ஒப்புதல் பெற முயற்சிப்பதை தயவு
செய்து குறைத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக்
கொள்கிறேன்.

இந்த எதிர்பாராத செலவு நிதியம் அதிகப்பட அதிகப்பட
திடீர் திடீர் என்று கவர்ச்சித் திட்டங்கள் ,விளம்பரங்கள் அதிக
மாகப் போய்க் கொண்டே இருக்கிறது என்ற கருத்தும் பொது
வாகநிலவுகிறது. அது மட்டுமல்ல, ஐந்தாவது ஊதியக் குழுவின்
பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்காக என்று ஒரு கருத்தை
இதிலே சொல்லியிருக்கிறீர்கள். அதற்காகத்தான் இது உயர்த்
தப்படுகிறது என்றும் சொல்லியிருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே இந்த
அரசு ஒன்றை ஒப்புக் கொண்டிருக்கிறது. ஐந்தாவது ஊதியக்
குழுவின் பரிந்துரைகளை இன்னும் முழுமையாக நடைமுறைப்
படுத்தவில்லை என்பதையும் அரசு ஒப்புக் கொண்டிருக்கிறது.
என்றுதான் கருதுகிறேன். இல்லையென்றால் அதற்காகப் பணம்
வேண்டுமென்று நீங்கள் கேட்டிருக்க மாட்டீர்கள். அதற்காக
அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட ஊதியம் குறைவு என்று சொல்
கிறார்ள் மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆட்சி மன்றச்
செயலர் அவர்கள் நேற்றைய தினம் பேசும்போது, இனிமேல்
மத்திய அரசு ஊழியர்கள், மாநில அரசின் ஊழியர்களைப் போல
சம்பளத்தை உயர்த்திக் கேட்கப் போகிறார்கள் என்று பெருமை
யாகச் சொன்னார்கள். நான் ஒன்றைக் கேட்க விரும்புகிறேன்.
அடிப்படை சம்பளத்தை உயர்த்தவில்லை. மேக்சிமம் பே,
உயர்ந்த பட்ச சம்பளம் 10 ஆண்டுகளுக்குப் பிறகு உயர்த்தப்பட,
இருக்கின்ற சம்பளத்தில் 100 ரூபாய் கூடுதலாகக் கிடைக்கும்
என்ற கவர்ச்சியான கிட்டத்தை அறிவித்து, ஒரு திறமையான
வசனத்தைச் சொல்லி, அரசு அலுவலர்களைத் திசை திருப்பு
கிறார்களோ என்றுகூட நான் எண்ண வேண்டியிருக்கிறது. அது
மட்டுமல்ல, மத்திய அரசு அலுவலர்களுக்கு இணையான ஊதியம்
கொடுக்கப்பட்டு விட்டது, 400 கோடி ரூபாய் செலவு செய்யப்



பட்டது என்று விளம்பரம் செய்யப்பட்டது. ஆனால் அவர்கள் பணம் வரவில்லை என்று சொல்கிறார்கள். இடையில என்ன கோளாறு இருக்கிறது என்பதை நீங்கள் தெளிவு படுத்தக் கடமைபபட்டிருக்கிறீர்கள்.

நாளும் ஒரு போராட்டம் நடக்கிறது என்று சொன்னேன். அந்த உணர்வோடு இருக்கிறார்கள் என்று சொன்னேன். இன்றைக்குக்கூட செஸ்ட்டஸ்வரி கலலூரியில யு.ஜி.சி. சம்பளம் வரவிலலை என்ற குறைபாடு அவர்களுக்கு இருக்கிறது. அதையும் நீங்கள் கவனிக்க வேணடும். விவசாயக கடன் தள்ளுபடி என்று மத்திய அரசு அறிவித்து இருக்கிறது. மற்ற மாநில முதலவர்கள அதற்கு ஒப்புதல் தநதிருபபதாக நாங்கள நாளிதழ்களில் பார்க்கிறோம. இந்த அரசு என்ன செய்கிறது என்பது தெரிய வில்லை. அங்கும, இங்கும் நடைபெறுகிற எங்கள் அரசு என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே மாண்புமிகு புரட்சித் தலைவர் அவாகளுடைய தபால் தலை வெளியீட்டு விழாவில் பேசியதாக நான்பத்திரிகையில் பார்த்தேன். எனவே அங்கே இருக்கிற உங்கள் அரசும், இங்கே நடைபெறுகிற உங்கள் அரசும் இதற்கு என்ன நடவடிக்கை எடுக்கிறது என்னபதைத் தயவு செய்து நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

12-20 மணி

பொதுவாகவே ஒன்று சொல்வார்கள். நல்லபடியாகத் திட்டமிட்டு, ஆலோசித்து சட்டமன்றத்தின் ஒப்புதல் பெற்று எந்தச் செயலும் நடைபெற்றால் அதிலே குறைபாடுகள் வருவதற்கு வாய்ப்புகள் இல்லை என்பதை மனதில கொண்டு முன்னெச்சரிக்கையோடும், முன்னேற்பாட்டோடும் நிதிநிலை அறிக்கையைத் தயாரிக்க வேணடும் என்பது என்னுடைய கோரிக்கை. மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல் என்று சொல்வார்கள். வரும் பொருள் என்பதை எந்தப் பொருளில் எடுத்துக் கொள்வார்கள் என்பது தெரியவில்லை. ஆனால் எதிர்காலத்தில் பிரச்சினைகள் என்ன இருக்கும் என்பதை ஆராய்ந்து அதற்குத் தக்கவாறு நீங்கள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த நிதியை உயர்த்துவது ஒன்று மட்டுமே இந்தச் சட்டமன்றத்தின் நோக்கமாக இருக்ககூடாது என்பதைத் தெரிவித்துக்கொண்டு அப்படி உயர்த்துவது எங்கோ போய் முடியும் என்பதைத் தெரிவித்து இதற்கு எதிர்ப்பு தெரிவித்து அமர்கிறேன்

திரு. பி. என். வல்லரசு : மாற்றுத் தலைவர் அவர்களே, எதிர்பாராச் செலவு நிதிய திருத்தச் சட்டமுன்வடிவின் மீது எனது கட்சியின் சார்பில் கருத்துக்களைச் சொல்வதற்காக நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இன்று இருக்கிற டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு செயல்படுகிற ஒரு அரசு. செயல்படுகிற

அரசாக மட்டுமல்லாமல் மக்கள் நலனில் அக்கறை கொண்ட அரசாக இருப்பதால் எதிர்பாராத பல்வேறு திட்டங்களையும் ஏற்றுக்கொண்டு செயல்படுகிறது. மக்களுடைய திட்டங்களை மக்களுடைய நல்வாழ்வுத் திட்டங்களை நிறைவேற்றுகிற அரசாக இருக்கின்ற காரணத்தால்தான் எதிர்பாராச் செலவுகளை இந்த அரசு ஏற்றுக் கொணடிருக்கிறது. சொன்னதைச் செய்த அரசாக மட்டுமல்லாமல் சொல்லாததையும் செய்கிற அரசாக இருக்கின்ற காரணத்தால் இந்த அரசு எதிர்பாராத செலவுகளை மேறகொள்ள வேண்டி இருக்கிறது.

இலவச அரிசி என்பது இந்த அரசு சொன்ன திட்டமாகும். ஆனால் ஆயிரம் ரூபாய் வருமானம் உள்ளவர்களுக்கும் இலவச அரிசி என்பது தேர்தல் வாக்குறுதியிலே சொல்லப்படாத ஒன்றாகும். அதையும் அரசு செய்திருக்கிறது. முட்டையுடன் சத்துணவு என்பது முன்கூட்டியே சொன்ன ஒன்றாகும. ஆனால் வைட்டமின் மாத்திரைகளைச் சேர்த்து வழங்குவது என்பது முன்பு சொல்லாததாகும். இப்படி இந்த அரசு பல்வேறு திட்டங்களை எல்லாம் முன்கூட்டிச் சொல்லாத நிறைவேற்றுகிற டாக்டர் கலைஞர் அவர்களுடைய அரசு இருக்கின்ற அரசாக எதிர்பாராச் செலவுகள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை காரணத்தால் நான் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். என்பதை

இதுபோன்ற பல்வேறு நல்ல திட்டங்களை இங்கே நிறைவேற்றிக்கொண்டிருக்கிற தமிழக அரசைப் பார்த்து எங்களுடைய தொகுதி குறித்த ஒன்றைக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் தொகுதியில 58 கிராமங்களுக்கு நீர்ப்பாசன வசதி தருகிற திட்டம் நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகிற திட்டமாகும். எனவே இந்த ஆண்டு உலக வங்கிக் கடன் திட்டத்தில் அந்தத் திட்டத்தைச் சேர்க்க வேண்டுமென்று நான் வலியுறுத்திக் கேட்டுக் கொளகிறேன்.

இன்று சட்டமன்றத்தில் காவிரி நீர்ப்பிரச்சினை பற்றிப் பெரிதாகப் பேசிக்கொணடிருக்கிற அதே நேரத்தில் தென் மாவட்டங்களில் இருக்கிற மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிற பெரியார் அணை நீர் மட்டம் பற்றியது. கேரள அரசுக்கும் தமிழக அரசுக்கும் இடையே எற்பட்ட ஒப்பந்தத்தின்படி முதல் இரண்டு கட்ட வேலைப்பாடுகள் முடிந்தவுடன் அந்த நீர் மட்டத்தை 145 அடியாக உயர்த்த வேண்டுமென்ற உடன்பாடு இருக்கிறது. ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக்கழக ஆட்சியின்போது பெரியார் அணையின் நீர் மட்டம் 152 அடியாகும். அதற்குப் பிறகு வந்த திரு. எம்.ஜி.ஆர். அவர்கள் ஆட்சிக் காலத்தில அது 136 அடியாகக் குறைக்கப் பட்டிருக்கிறது. எனவே இரண்டு அரசுக்கும் இடையிலே ஏற்பட்ட ஒப்பந்தப்படி இரண்டு கட்ட வேலைப்பாடுகள் முடிந்திருக்கின்ற காரணத்தால் முதலில் இந்த ஆண்டு 145 அடியாக பெரியார்



அணையின் நீர் மட்டத்தை உயர்த்த வேண்டுமென்றும் அடுத்த ஆண்டு அதாவது மூன்றாவது கட்ட வேலைகள் முடிகிற நிலைமையில் இருப்பதால மீண்டும் 152 அடியாக உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து என்னுடைய உசிலம்பட்டி தொகுதி தொழில் ரீதியாக மிகவும பின்தங்கிய தொகுதியாக இருக்கின்ற காரணத்தால் ஏற்கெனவே இருந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிக் காலத்தில் கூட்டுறவு நூற்பாலை ஒன்றைப் புத்தூர் மலைக்குப் பக்கத்தில் ஏற்படுத்தும் திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. இந்த அரசு விலகியதற்குப்பின் அந்தத் திட்டம் தள்ளி வைக்கப்பட்டிருக்கிறது. அது கிடப்பில போடப்பட்டிருக்கிறது. மீண்டும டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சி வந்திருக்கின்ற காரணத்தால் தொழில் ரீதியாக மிகவும் பின்தங்கி இருக்கின்ற அந்தப் பகுதியில் நூற்பாலை ஏற்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

உசிலம்பட்டியில் பசும்பொன் முத்துராமலிங்கம் அவர்களின் பெயரால் டாக்டர் கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பசும்பொன் தேவர் கல்லூரி நிறுவப்பட்டது. அனைந்து நதிய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி காலத்தில அதை அரசு எடுத்துக்கொண்டு விட்டது. எனவே நமது முதலவர் அவர்களுடைய ஆசியுடன் மீண்டும் அந்த பசும்பொன் தேவர் கல்லூரியை கள்ளர் கல்விக் கழகத்திற்கு வழங்கவேண்டுமென்று கேட்டு முடிக்கிறேன். நன்றி வணக்கம.

[12-25) மணி]

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, எதிர்பாராத செலவு குறித்து கொண்டுவரப்பட்ட இந்த மசோதா மீது என்னுடைய கருத்துக்களை வெளியிடுவதற்கு வாய்ப்பளித்ததற்கு மகிழ்ச்சி அடைகிறேன். எதிர்பாராத செலவுகளுக்கு செலவாகிப்போய் அதற்கு மேல் தேவைப்படுகின்ற செலவழிக்கப்பட்ட செலவுகளை ஈடுகட்டுவதற்காகத்தான் இந்த மசோதாவை தமிழக அரசாங்கம் இங்கே கொண்டு வந்திருக்கிறது என்று எண்ணுகிறேன். எதிர்பார்த்த திட்டங்களுக்கு மேல் தாங்களே எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்காக, திட்டங்களுக்காக செலவழிக்கப்பட்ட தொகைக்காக இங்கே அங்கீகாரம் கோரிவந்து இருக்கிறார்கள். அரசாங்கம் நிதி அறிக்கையைத் தாக்கல் செய்யும்போது ஆண்டுதோறும் ஆண்டு முழுவதும் என்னென்ன செலவுகள், என்னென்ன இனங்களுக்கடியில செலவழிக்கப்படவேண்டுமென்பதை சுட்டிக்காட்டத்தான் திட்டங்களை வகுப்பதுண்டு. ஆனால் சில எதிர்பாராத தானங்கள், சில எதிர்பாராத செலவுகள் இவைகளை இன்றைக்கு இந்த அரசாங்கம் இங்கே கொண்டுவந்து சேர்த்திருக்கிறது. நான் நேற்றையதினம்

[திரு. பி. எச். பாண்டியன்] [1990, சனவரி 27

பத்திரிகையில் பார்த்தேன். முதலமைச்சர் அவர்கள் 30
சினிமாவிற்கு 61 லட்சம் ரூபாய் மானியமாக வழங்குவதாக
அவர்கள் சொன்னதைப் பார்த்தேன். யாரோ படம் எடுக்கிறார்
கள், யாரோ சம்பாதிக்கிறார்கள், மக்கள் என்னதான் டிக்கட்
விலை உயர்ந்தாலும் வருகிறார்கள், பார்க்கிறார்கள். அதற்கு
என்ன காரணம் என்பதுதான் என்னுடைய கேள்வியாகும்.
ஏனென்றால் சினிமாவுக்குப் பஞ்சம் கிடையாது. ஆனால் சினிமா
படம் எடுப்பவர்களுக்கு இன்றைக்கு ஊக்கம் அளிக்கவேண்டும்
என்ற கட்டாயம் கிடையாது. அதுவும் நாம் அதிகமாக அதிகப்
படுத்தி மானியம் கொடுக்கவேண்டும் என்ற கட்டாயம் கிடையாது
61 லட்சம் ரூபாய் சாதாரண சாமான்ய மக்களுக்கு,
ஏழையெளிய மக்களுக்கு, விவசாய மக்களுக்கு வழங்குவோமா
னால உண்மையிலேயே நாடு நன்மை பெறும, நாடும் பாராட்டும்.

**மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :** மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு.
பி. எச். பாண்டியன் அவர்கள் சினிமாவிற்கு மானியம் வழங்குவது
குறித்து இங்கே பேசினார்கள். ஒன்றை மாற்று தலைவர் அவர்
கள் மூலமாக தெரிவிக்க விரும்புவது, ஏதோ தனி நபர் படம்
எடுக்கிறார், அவர்களுக்காக பணம் கொடுக்கப்படுகிறது
என்பதைவிட அந்தத் தொழிலுக்காக, அந்தத் தொழிலிலே ஈடு
பட்டிருக்கக்கூடிய பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் இதன்
மூலம, இந்தத்தொழில் அபிவிருத்தி அடைவதன் மூலமாக பயன்
பெற முடிகிறது என்ற அடிப்படையிலேதான் தொழிலாளர்களை
மையமாக வைத்துத்தான் இந்த மானியம் வழங்கப்படுகிறது.
இந்தத் தொழிலுக்கு நசிவு ஏற்பட்டால் பல்லாயிரக்கணக்கான
தொழிலாளர்கள் வேலை இழக்கக்கூடிய அபாயம் ஏற்படும் என்ற
காரணத்தினாலே, இவைகளை எல்லாம் மனதிலே வைத்துக்
கொண்டு இந்த மானியம் வழங்கப்படுகிறது என்பதைத் தெரிவித்
துக்கொள்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த மானியம் பட முதலாளிகளுக்குத்தான் போய்
சேர்கிறது. படத்தை எடுக்கக்கூடியவர்கள் அங்கே போய்
படம் பிடிக்கக் கற்றுக்கொண்டு வருவது கிடையாது.
அது எல்லோரும் எடுத்த தொழில் ஆகும். அந்தத் தொழிலை ப
பற்றி தெரியாதவர்கள் கூட, அந்தத் தொழிலுக்குள் வந்தி நக்
கிறார்கள். அது தெரிந்தவெளித் தொழிலாகத்தான் இன்றை க்கு
தமிழகத்தில் இருக்கின்றது. அந்த காரணத்தினால்தான் இதற்கு
மானியம் என்னைப் பொறுத்தவரையில் கொடுக்க வேத்
தேவையில்லை. கொடுக்கவே தேவை கிடையாது. இந்த
நாட்டிற்குச் சினிமா தேவையா? கிடையாது என்பதுதான்
என்னுடைய கருத்து. காரணம் நம் இளைஞர்களை, 18 வயது
20 வயது ஆகின்ற அந்த இளைஞர்களுக்கு இன்றைக்கு அவர்க
ளுடைய வேகத்தை குறைத்துவிடுகிறது. ஒவ்வொருவரும் ஒவ்



1990, சனவரி 27]

வொரு மன்றத்திலே போய் சேர்ந்து கேளிக்கையில் ஈடுபட்டுக்
கொண்டிருக்கின்றார்கள். அது சமுதாய புரட்சி கிடையாது.
அது பொருளாதார புரட்சி கிடையாது. அது அவர்களை சோம்
பேறிகள் ஆக்கிவிடும். இளைஞர்களுடைய வேகத்தைக் குறைத்து
விடும். அவர்கள் எல்லாம் மன்றங்களில் சேர்ந்துகொள்கிறார்
கள்.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்):** மாண்பு
மிகு உறுப்பினர் அவர்கள் சினிமாவே வேண்டாம் என்று சொல்
கின்றார்களா ?

**திரு. பி. எச். பாண்டியன் :** இன்றைக்கு இருக்கக்கூடிய
சோம்பேறித்தனத்தை
இந்தச் சமுதாயத்திற்கு தேவை கிடையாது.
உருவாக்குவதற்கு இந்தச் சினிமாத் தொழில் தேவை கிடையாது.
எந்தக் கொட்டகையில் காலையில் பார்த்தாலும் ஒரு தொழிற்
சாலையில் நிற்பதுபோல, கியூவிலே நின்றுகொண்டிருக்கின்றார்
கள்.

**திரு. இரா. மோகன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாண்புமிகு புரட்
சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைத் தலைவராகக் கொண்டு
நீண்ட நெடுங்காலத்திலிருந்து அந்தக் கட்சியிலேயே இருந்து இந்த
அவையிலே சபாநாயகராக இருந்து இருக்கிறார்கள். திரு. பி. எச்.
பாண்டியன் அவர்கள், சினிமாவைப்பற்றி இப்படி பேசுகிறாரே
இது நியாயம்தானா என்று கேட்க விரும்புகிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** அதாவது நான் ஒரு கருத்தைச்
சொல்லிக்கொள்கிறேன். புரட்சித் தலைவர் அவர்களுடைய
கருத்தைப் பற்றி நான் சொல்லியாக வேண்டும். அவர் யாரையும்
சோம்பேறியாக்கவில்லை. இந்த நாட்டை வளர்ச்சிப் பாதையில்
எந்த அளவுக்கு அழைத்துச் சென்றார் என்பதை நாம் எல்லோரும்
நன்றாக உணர்வோம். அவர் அரசியலில் வந்த
காரணத்தினால், எல்லோரும் அரசியலில் வரவேண்டும் என்று
ஆசைப்படுகிறார்கள்.

[12-30) மணி]

இன்றைக்கு நம்முடைய மக்களைச் சோம்பேறிகளாக ஆக்கு
கின்ற, இளைஞர் சமுதாயத்தைச் சோம்பேறிகளாக ஆக்குகின்ற,
அவர்களுடைய வேகத்தைக் குறைத்து விடுகின்ற ஒரு நிலைமை
இந்தச் சினிமாவால் ஏற்பட்டிருக்கிறது. 18 வயதுக்கு மேல் 20
வயதிற்குள் இருக்கின்ற இளைஞர்களைப் பாருங்கள், அவர்கள்
ஏதாவது மன்றத்தில் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். இது
கேவலம் இல்லையா ? இலங்கைத் தமிழர்களுக்கு இருக்கிற
அளவுக்காவது தமிழ்நாட்டு இளைஞர்களிடம் வேகம் இருக்க

வேண்டாமா? தமிழ்நாட்டு இளைஞர்கள் துப்பாக்கித் தூக்க
வேண்டாமா? அவர்களுக்கு இருக்க வேண்டிய வேகத்தைக்
குறைத்து விட்டார்கள். இன்றைக்கு சினிமாவில் அவர்கள் ஈடு
பட்டிருப்பதால்தான் இளைஞர்களுக்கு இந்த நிலைமை. இதனால்,
இளைஞர்களுக்கு சமுதாயத்தினருககு எதற்கு சுதந்திரம் வேண்டும்
எதற்கு நாடு வேண்டும், எதற்கு அரசாங்கம் வேண்டும் என்பது
பற்றி தெரியாமலும் அரசாங்கத்தில் இருக்கிற குறைகளைத்
தெரிந்துகொள்கிற வாய்ப்பு இல்லாமலும் போய்விட்டது. இது
போன்ற நிலைமை கூடவே கூடாது. மாண்புமிகு உறுப்பினர்கள்
இங்கே சொன்னதுபோல இதுபோன்ற மானியங்களைக் கூட
விவாதித்து விட்டுதான் அனுமதி வழங்க வேண்டும். (குறுக்கீடு.)

மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, அதுபோல கிரிக்
கெட் விளையாடுகின்ற ஒருவருக்கு ஒரு வீடு கொடுத்திருக்கிறீர்கள்
இதற்கும் தேவை கிடையாது. விளையாடுபவர்கள்
விளையாடவில்லை. லட்சக்கணக்கில் பணம் வாங்கிக் கொண்டு சும்மா
தான் விளையாடுகிறார்கள். வரிகளை அளிப்பவர்கள் நம்முடைய
நாட்டு விவசாய மக்கள். மத்திய அரசாங்கம் சொன்னதுபோல
நீங்களும் 10 ஆயிரம் ரூபாய் விவசாயக் கடனை ரத்து செய்ய
வேண்டும். அந்த எண்ணங்கள் இன்றைக்கு பல மாநிலங்களில்
இருக்கின்றன. சில மாநிலங்களில் 15 ஆயிரம் ரூபாய் கடனைக்
கூட தள்ளுபடி செய்வதாக சொல்லியிருக்கிறார்கள்.
களுக்காக நீங்கள் அவர்களுடைய கடன் தொகை முழுவதையும் விவசாயி
ரத்து செய்யுங்கள் என்று கேட்டுக்கொள்கிறேன். விவசாயத்
தொழில் ஒரு வளம் பெறுகின்ற தொழில். இன்றைக்கு விவசா
விவசாயத் துறையை நாம் வைத்திருக்கிறோம். அந்தத் துறை
யால் இன்னும் விவசாயத் தொழில் வளரவில்லை. இன்றைக்கு
எந்த உரம் போட வேண்டும். எப்படி போட வேண்டும், எப்போது
போட வேண்டும் என்று விவசாயிகளுக்கு நன்றாகத் தெரியும்.
(மணியடிக்கப்பெற்றது.)

மற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்): இப்
போது மாண்புமிகு முதல்வரின் ஆட்சி மன்றச் செயலாளர் அவர்
கள் பதில் அளிப்பார்கள்.

*திரு. எல். கணேசன் (முதல் அமைச்சரின் ஆட்சி மன்றச்
செயலர்): மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே. இங்கே
திருத்தமிழ் நம்முடைய உறுப்பினர்கள் பலரும் கருத்துக்களைச்
சொல்லியிருக்கிறார்கள். இதற்கு முன்பு 23 ஆம் தேதி கூட
துணை நிதி நிலை அறிக்கையின் மீதும், துணை மானியக் கோரிக்
கையின்மீதும் கருத்துக்கள் விரிவாக ஆராயப்பட்டன. மாண்பு
மிகு உறுப்பினர் திரு. பாலசுப்பிரமணியம் இங்கே ஒரு கருத்தைச்
சொன்னார்.



is submiss on to the Assembly was that this is uncons'itutional
My submission to this Ho ses ha this s completely constitutional.
The Governor derives his authority or power what ever may be the
term used by the hon. member from the constitution to promulgate
an ordinance. Once an Ordinance is promulgated under Art. 213,
that Ordinance will have be placed before the Assembly or the
Parliament as the case may be and the Assembly is empowered
to ratify it. Therefore it is constitutional.

அந்த அடிப்படையில் இதற்கு அவசியம் ஏற்பட்டதற்குக்
காரணமே இது எதிர்பாராத செலவு என்பதுதான். எதிர்பாராச்
செலவு என்பதே எதிர்பார்க்கிற செலவு இல்லை. நிதிநிலை
அறிக்கை அளிப்பது என்பது இன்னின்ன துறைகளுக்கு நாம்
இவ்வளவு இவ்வளவு செலவிட வேண்டும் என்கிற அடிப்படையில்
எதிர்பார்க்கக் கூடியவை. ஒவ்வொரு துறைக்கும் தனித் தனியாக
அதற்குரிய மானியக் கோரிக்கை, அதற்காக விவாதம், அதற்காக
சட்டமன்றம் இருக்கிறது. சட்டமன்றம் அதைக் கொடுக்கிறது.
ஆனால் எவ்வளவுதான் இருந்தாலும் எதிர்பாராத செலவினமும்
வந்துவிடுகிறது என்பதை இங்கே இப்போது இருக்கிற சட்ட
மன்றத்தில் மட்டுமல்லாமல் இதற்கு முன்பாக ஏற்பட்டதை
உணர்ந்துதான் இப்படிப்பட்ட சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது.
இச்சட்டத்திற்கு உட்பட்டுதான் தொகை ஒதுக்கப்பட்டிருக்கிறது.
இப்போது அந்தத் தொகை சற்று அதிகமாக தேவைப்படுகிறது.
அதனால்தான் இப்போது இந்தப் பிரச்சினை எழுந்திருக்கிறது.
எனவே, எதிர்பாராச் செலவு என்பது எதிர்பாராததுதான்.
அன்றைக்குக் கூட இதனை நான் சுட்டிக்காட்டினேன். மாண்பு
மிகு மாற்றுத் தலைவர் அவர்கள் கூட இங்கே இதுபற்றி சொன்
னார்கள். இதுவரையிலே அவர்களுடைய வாழ்க்கையிலே
காணாத அளவுக்குப் பெரும் வெள்ளம் வரும் என்று யாராவது
எண்ணினார்களா. அவர்களுக்குத் தெரியுமா என்று சொன்னார்
கள். இப்படி வரும் என்று யாருக்கும் தெரியாது.

Already there is Contingent Fund. We all know. At times we require
more funds. we should also understand this

அப்படி ஒரு நிலை வருகிறது. திடீரென்று மாண்புமிகு
முதலமைச்சர் அவர்கள் 50 லட்சம் ரூபாய் அறிவித்தார்கள்.
அது போதாது என்று மீண்டும் கோரிக்கை கொடுத்து இருக்கி
றார்கள். இன்னும் எவ்வளவு கொடுப்பார்கள் என்று நமக்குத்
தெரியாது. வந்ததற்குப் பின் இன்னும் அதிகமாகும். இப்போது
இருக்கிற நிலைபோல் பல சந்தர்ப்பங்களில் அந்த நிலை
வந்திருக்கிறது. நான் அன்றைக்கே சொன்னேன். இப்படிப்
பட்ட நிலை இந்த மாநிலத்தில் மட்டும் இல்லை. எல்லா
மாநிலத்திலும் இருக்கிறது. புள்ளி விவரத்தை அன்றைக்கே
நான் சொன்னேன். அதைப் போலவே தான், இந்த மாநிலத்தில்

கூட எப்படி எல்லாம் உயர்த்தப்பட்டு இருக்கிறது என்று சொன்னேன். ஆகவே தவிர்க்க முடியாத சூழ்நிலையில் தற்காலிகமாக மட்டுமே இது வருகிறது என்பதை நான் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர் பாராச் செலவு நிதியச் சட்டத்தில் நன்றாக உற்றுப் பார்க்க வேண்டும். 1954 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியச் சட்டத்தில் தமிழ்நாடு சட்டம் 11. 1954 இரண்டாம் பிரிவில் 1 ஆம் உட்பிரிவின்படி தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதியம் 75 கோடி ரூபாய் அடங்கியது ஆகும்.

[12-35] மணி

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாற்றுத் தலைவர் அவர்களே, அது 75 லட்சம் ரூபாய்.

திரு. எல். கணேசன். (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) மன்னிக்கவேண்டுகிறேன். 75 லட்சம் ரூபாய் அடங்கியது ஆகும். அது 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய இரண்டாம் திருத்தச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 32/89 1989 ஆம் ஆண்டு ஜூலைத் திங்கள் 26 ஆம் நாள் தொடங்கி 1989-ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31 ஆம் நாளுடன் முடிவடைகின்ற ஒரு தற்காலிக கால அளவுக்கு 200 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டது. வறட்சி நிவாரணப் பணி நடவடிக்கைகளுக்காகவும் ஐந்தாம் ஊதியக் குழுவின் பரிந் துரைகளைச் செயல்படுத்துவதற்காகவும் மற்றும் எதிர்பாராத பிற செலவினங்களுக்காக செலவுகளை மேற்கொள்ள வேண்டி இருந்ததால் 1989 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 22 ஆம் நாள் தொடங்கி 1990 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 31 ஆம் நாளுடன் முடிவடைகின்ற கால அளவுக்கு எதிர்பாராத செலவு நிதியத்தின் உள்ளடக்கத் தொகையை தற்காலிகமாக 300 கோடி ரூபாய் உயர்த்துவது தேவை என்று கருதப்படுகிறது. மேற்காணும் நோக்கத்தை எய்துவதற்கு 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய மூன்றாம் திருத்த அவசரச் சட்டம் ஆளுநரால் பிறப்பிக்கப்பட்டது. அதற்கிணங்க அவசரச் சட்டம் 14/1989. இச்சட்ட முன்வடிவு மேற்சொன்ன தமிழ்நாடு அவசரச் சட்டத்திற்குப் பதிலாக அமைகிறது.

The Ord nance tself i: no an Act. I should be ratified or passed by the parli ment or by the Leg slat re. Th is wha we require now. இதுவரை எதிர்பாராத செலவு நிதியிலிருந்து ரூ. 209.83 கோடி வழங்கப்பட்டுள்ளது. ஐந்தாவது ஊதியக் குழு வின் பரிந்துரையைச் செயல்படுத்த எதிர்பாராத நிதியிலிருந்து வழங்கப்பட்ட ரூ. 120 கோடியையும், வறட்சி நிவாரணப் பணிகளுக்காக வழங்கப்பட்ட ரூ. 33.91 கோடியையும் கழித் தோமேயானால் பிற காரியங்களுக்கு எதிர்பாரா நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகை ரூ. 55.92 கோடி ஆகும். இது முன்



காலங்களில் எதிர்பாராத நிதியிலிருந்து வழங்கப்பட்ட தொகை யுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது இதே மாநிலத்தில் இதற் முன்னால வழங்கப்பட்ட தொகையோடு ஒப்பிட்டுப் பார்க்கு போது அதிகம் என்று ஆகிவிடாது. சமீப காலத்து எதிர்பாராத நிதியின் அளவு பின் வருமாறு:—

1—8—1982 முதல் 31—3—1983 வரை ரூ. 100 கோடி

1—4—1983 முதல் 19—5—1983 வரை ரூ. 50 கோடி

20—5—1983 முதல் 3—7—1983 வரை ரூ. 100 கோடி

1983 ஆம் ஆண்டே எவ்வளவு ரூபாய் வருகிறது என்று எண்ணி பார்க்க வேண்டும்.

20—5—1983 முதல் 3—7—1983 வரை ரூ. 100 கோடி

4—7—1983 முதல் 31—3—1984 வரை ரூ. 150 கோடி

1—4—1984 முதல் 1—7—1985 வரை ரூ. 50 கோடி

2—7—1985 முதல் 31—3—1986 வரை ரூ. 100 கோடி

1—4—1986 முதல் 22—9—1986 வரை ரூ. 50 கோடி

23—9—1986 முதல் 31—1—1987 வரை ரூ. 100 கோடி

1—2—1987 முதல் 20—9—1987 வரை ரூ. 50 கோடி

21—9—1987 முதல் 31—3—1988 வரை ரூ. 100 கோடி.

1—4—1988 முதல் 6—10—1988 வரை ரூ. 50 கோடி.

7—10—1988 முதல் 31—3—1989 வரை ரூ. 150 கோடி.

ஆகவே இது எப்போதும் அப்படித்தான்.

ஐந்தாவது ஊதியக்குழு அமைக்கப்பட்டிருந்தும், அத பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படும் என்று அறிந்தும், நிதிநி அறிக்கையில் ஏன் நிதி ஒதுக்கம் செய்யப்படவில்லை என் கேள்வி எழக்கூடும். இது நியாயமான கேள்வி. கோரிக் எண் 43—பல்வகையில் இதற்கு என ஓரளவுக்கு நிதிநி அறிக்கையிலேயே வகை செய்யப்பட்டிருந்தது. மாண்பு உறுப்பினர் பேராசிரியர் பொன்னுசாமி போன்றவ

12.40 மணி

திரு. எல், கணேசன்]

ளெல்லாம் சொல்லுகிறார்களல்லவா ? ரூ. 100 கோடி
செலவாகும் என்று எதிர்பார்த்து நாம் நிதிநிலை அறிக்கை
யிலே அதற்கு ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால் கூடிப் பேசு
கிறபோது ரூ. 100 கோடியோடு விட்டுவிடுகிறீர்களா ?
கருணையுள்ள முதலமைச்சர் என்ற காரணத்தால் ரூ. 100
கோடியை ரூ. 200 கோடியாக ஆக்கவைக்கிறீர்கள். ரூ. 200
கோடியை ரூ. 300 கோடியாக ஆக்க வைக்கிறீர்கள். அப்
படிப்பட்ட நிலைமைகள் வருவதை மாண்புமிகு உறுப்பினர்
திரு. பொன்னுசாமி போன்றவர்கள் கட்டாயமாக மறுக்க
மாட்டார்கள். கோரிக்கை எண். 43 - பல்வகையில் இதற்குரிய
நிதிநிலை அறிக்கையில் வகை செய்யப்பட்டிருந்தது. வரை
யறுத்துள்ள நிதியை நடைமுறையில் நிறைவு செய்யும்
பொருட்டு, எதிர்பாராத செலவு நிதியிலிருந்து நிதி வழங்கு
வதும, இச்செலவை மேலும் ஒரு திட்டவட்டமான கணக்குத்
தலைப்பின்கீழ் வகைப்பாடு செய்வதும் அவசியமாயிற்று.
முந்தைய ஊதியக் குழுக்களின் பரிந்துரைகளை செயல்
படுத்தியபோதும் இவ்வாறே " புதுப்பணி " " நியூ சர்வீஸ் "
என்று அமைக்கப்பட்டு, எதிர்பாரா நிதியிலிருந்து வழங்கப்
பட்டது. எனவே அருள்கூர்ந்து இதற்கு மேலும் இதில்
விளக்கம் தேவையில்லை என்று கருதுகிறேன்.

It is Constitutional. Cent percent Constitutional, and the Governor derives his authority from the Constitution and he has promulgated the Ordinance which we are going to enact.

திரு. பி. எச். பாண்டியன் : மாண்புமிகு தலைவர் அவர்
களே, மணி பில்லைப் பொறுத்தவரையில் இது கான்ஸ்டி
டியூஷனலோ அன்கான்ஸ்டிடியூஷனலோ—இதை எதிர்த்து
கோர்ட்டுக்குப் போக முடியாது. வேண்டுமானால் கவர்னரை
எதிர்த்துப் போகலாம்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்
டியன்) : மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பால
சுப்பிரமணியம் அவர்கள் தம்முடைய தீர்மானத்தை வலி
யுறுத்துகிறாரா இல்லையா என்பதை அறிய விரும்பு
கிறேன்.

Thiru S.R. BALASUBRAMANIAM: Mr. Speaker Sir, the Hon. Parliamentary Secretary to the Chief Minister said, that the Governor can promulgate any Ordinance so he has promulgated an Ordinance and he is getting the approval of this house. Supposing to-morrow can the Governor promulgate an Ordinance and say that the Budget estimates had been passed and the Budget had been approved. Can he promulgate an Ordinance and say that the Appropriation bill has been passed into law and this Government is empowered to draw from the Consolidated Fund is it possible (interruption) where does the money come from?



Thiru L. GANESAN Parliamentary Secretary to the Hon'ble Chief Minister: Mr. Speaker Sir, Hon'ble member is raising hypothetical questions. Let him as any question. As far as this is concerned, the Parliament or the Assembly is the Competent Authority to pass any money Bill. Everybody knows that. This is a democratic country (interruption) my submission is that even in 1954 the Act was passed.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இத்தனை ஆண்டுகளும் இந்த முறையிலேதான் நிறைவேறி இருக்கிறது. இது ஒன்றும் புதிதாக வரவில்லை என்பது ஒன்று. ஆளுநர் செயலபடுவது அமைச்சரவையின் ஆலோசனையின்படிதான். அமைச்சரவையை இந்தப் பேரவை ஏற்றுக் கொண்டிருக்கிற காரணத்தால் அந்தப் பொறுப்பில்தான் இந்த அமைச்சரவை செய்கிற காரியங்களை இந்தப் பேரவை ஏற்றுக் கொள்கிறது. அந்த அடிப்படையில்தான் இந்த ஆர்டினன்ஸ்-ஐ இந்தச் சட்டமன்றத்தின் மூலமாகச் சட்டமாக ஆக்கப்பட இருக்கிறது. எல்லாவற்றையும் விட இந்தச் சட்டமன்றத்திற்குத்தான் முழு அதிகாரம். எனவே இந்தச் சட்டமன்றம் இப்போது இதை ஏற்றுக் கொள்ளப்போகிறது. எனவே மாண்புமிகு திரு. பாலசுப்பிரமணியம் அவர்கள் இதனை எதிர்க்க இவ்வளவு பாடுபடத் தேவையில்லை.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன்) : மாண்புமிகு பேரவையின் முன்னவர் அவர்களுடைய விளக்கத்தை ஏற்று, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்கள் தமது தீர்மானத்தை வலியுறுத்துகிறாரா இல்லையா என்பதை அறிய விரும்புகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : நான் என்னுடைய தீர்மானத்தை வலியுறுத்துகிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, தோல்வியுற்றது.

12.45 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே. தங்கபாண்டியன் : பேரவை முன்னுள்ள கேள்வி :

1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதி (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 3/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் ".

(பேரவை மாற்றுத் தலைவர்)

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 மற்றும் 3 ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 மற்றும் முகப்புரை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

நெடுந்தலைப்பு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் திரு. வே. தங்கபாண்டியன்: பேரவை முன்னுள்ள கேள்வி :

"நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்"

திரு. எல். கணேசன் : (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர் : மாண்புமிகு பேரவை மாற்றுத்தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In the enacting formula, *for* the expression 'Fortieth year' *substitute* the expression 'Forty-first year.,"

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு, திருத்தப்பெற்றபடி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றபெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்) : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு எதிர்பாராச் செலவு நிதிய (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப்பேரவை சட்டமுன்வடிவு எண். 3/1990) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப்பெற வேண்டும்".



தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெற்றது.

8. அறிவிப்பு.

சம்பளங்கள் வழங்கல் (திருத்த சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வே தங்கபாண்டியன்) : பேரவைக்கு ஓர் அறிவிப்பு 1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 1/1990)-ஐப் பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ள ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

7. சட்ட முன்வடிவுகள் (ஆய்வு) —தொடர்ச்சி.

(இ) சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு, 1990.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்."

திரு. மா. சுந்தரதாஸ் : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, என் பெயரால் கொடுக்கப்பட்டிருக்கின்ற திருத்தத்தை நான் படிக்கிறேன்.

In Clause 2, for the proposed new
sub-section (2 AA), substitue the following :
Upon swering in as members of the assembly, the Governm-
(2-AA) the legislature secretariat as the case may be secnre that the life
ent or the legislature secretariat as the case may be secnre that the life
of each member so sworn, be insured for an amount not more than
2 lakhs of rupees with the life Insurance Corporation of India and the
premium shall be paid on behalf of the member by the Government or
the Legi lature Secretariat and the lump-sum payable shall be paid to the
family of the member in case of the death of that member.
Further the L.I.C. may also be directed to pay the medical experses'
of the member.

---

* 19—1—1990-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிட்ப் பெற்றுள்ளது.

(திரு. மா. சுந்தரதாஸ்)

இந்தச் சட்டத்தை நாங்கள் மனப்பூர்வமாக வரவேற்
கிறோம். இந்த அரசுக்கு நாங்கள் நன்றி சொல்லக் கடமைப்
பட்டிருக்கிறோம். ஆனால் நான் கொடுத்த திருத்தம்,
50,000 ரூபாய் என்று சொல்லி அதிகப்படுத்தச் சொல்ல
வில்லை. ஆனால், இதை ஒரு இன்ஷ்யூரன்ஸ் மூலமாகக்
கொடுத்தால், உறுப்பினர்களுக்கு மிகவும் வசதியாக இருக்கும்.
அரசாங்கத்திற்கும் பணம் அதிகம் செலவு ஆகாது. ஏனென்று
சொன்னால், என்னுடைய திருத்தம்,

Upon swearing in as members of the Assembly, the Government or
the Legislature Secretariat as the case may be, secure that the life of ea-
ch member so sworn, be insured for an amount not more than 2 lakhs
of rupees with the Life Insurance Corporation of India and the premium
shall be paid on behalf of the member by the Government or the Legisl-
ature Secretariat and the lump-sum payable shall be paid to the family
of the member in case of the death of that member Further the L.I.C. may
also be directed to pay the medical expenses of the member.
என்பதாகும். ஏன் இதைச் சொல்கிறேன் என்று சொன்னால்
இன்றைக்கு உறுப்பினர்களுக்குக் கொடுக்கிற மருத்துவ
வசதிகூட செகண்ட் கிளாஸ் கொடுத்துக் கொண்டிருக்கிறார்
கள். இப்பொழுது ஃபர்ஸ்ட் கிளாஸ் ஆக்குவது என்று சொன்
னார்கள். ஒரு சாதாரண என்.ஜி.ஓ.-வுக்குக் கொடுக்கின்ற
சலுகை கூட, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு
மருத்துவ வசதியில் கிடையாது. சாதாரண என்.ஜி.ஓ.
மருந்து வாங்கி, ரீ—இம்பர்ஸ்மெண்ட் வாங்கிக் கொள்ள
வேண்டும். ஒரு ஆக்சிடன்ட் ஆனால், சாதாரண என்.ஜி.ஓ.
மாதிரி கூட எம்.எல்.ஏ-வுக்கு இல்லை. ஆனால், நாம் ஏதா
வது கேட்டால், எதிர்க்கட்சியும் ஆளுங்கட்சியும் சேர்ந்து
கொண்டு, பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள் என்று
மக்கள் பேசக் கூடும். ஆகவே, இருக்கிற இந்தச் சட்டத்தில்
நல்லதிட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். சட்டமன்ற
உறுப்பினர் ஆனவுடனே, அவர்களை இன்ஷ்ூர் செய்து விட்
டால், கொஞ்சம் பிரிமியம்தான் வரும்—அரசுக்கும் செலவு
அதிகம் ஆகாது. அதே நேரத்தில், ஒரு உறுப்பினர் குடும்
பத்திற்கு ரூ. 2 இலட்சம் கிடைக்கும். ஆக்சிடன்ட் ஆனால்,
அந்தப் பணத்தை இன்ஷ்ூரன்ஸ் கம்பெனி கொடுக்கும்;
அரசுக்குச் செலவும் குறையும். இந்தச் சட்டத்தை நான்
மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டு, எனது திருத்தத்தை ஏற்றுக்
கொள்ளுமாறு நான் கேட்டுக் கொண்டு அமைகிறேன்
நன்றி, வணக்கம்.

12.50 மணி

திரு. வி. இராமசாமி : மாண்புமிகு தலைவர் அவர்களே,
எதிர்பாராத செலவு என்ற அடிப்படையில் நிறைவேற்றக்
கருதியுள்ள இதிலே எங்களுடைய கருத்து என்னவென்றால்
சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதி மக்களுக்கு
நல்லமுறையிலே பணியாற்றுவதற்காகச் சில சலுகைகள்
கொடுக்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிற....



(திரு. வி. இராமசாமி)

குறிப்பாக, எந்தஆட்சி வந்தாலும், சட்டமன்ற உறுப்பினர்
உறுதியாக இருப்பார். ஆகவே, அவர்கள் நல்லமுறையில்
செயல்படுவதற்கு ஒரு கட்டடமும், அந்தக் கட்டடத்திலே
பணிகள் ஆற்றுவதற்காக, தங்கு தடையின்றி மக்களுக்குச்
செய்திகள் அனுப்புவதற்காக ஒரு டைப்பிஸ்ட் அளிக்கப்பட
வேண்டும்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாண்புமிகு
மாற்றுத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்
களுக்கு என்ன, என்ன சலுகைகள் வேண்டுமென்று ஏற்கனவே
மாண்புமிகு உறுப்பினர் இங்கே சொன்னார்களோ அவற்றை
மறுபடியும் நம்முடைய நிதிநிலை அறிக்கையை ஒட்டி நடை
பெறுகிற கூட்டத்தில் ஒரு நாள் விவாதிக்கலாம். இப்
பொழுது யாரும் இறந்து போகக் கூடாது. இறந்து போனால்,
ரூ. 50,000 ஆவது அந்தக் குடும்பத்திற்கு உதவி செய்வது
என்ற ஒரே ஒரு அடிப்படையில் ஏற்கனவே ஏற்றுக் கொள்
ளப்பட்ட ஒரு கருத்து இது. அதற்காகத்தான் அந்தச் சட்டத்
திருத்தம் வருகிறது. அதை மட்டும் இப்பொழுது
ஏற்றுக் கொண்டு மற்ற தேவைகளை அடுத்த நிதிநிலைக்
கூட்டத்தில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. வி. இராமசாமி :** முன்னவர் அவர்கள் சொன்ன
தற்கு ஏற்ப நன்றி சொல்லி, அமர்கிறேன்.

**திரு. வே. பெரியசாமி :** மாண்புமிகு தலைவர் அவர்களே,
1990ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த)
சட்ட முன்வடிவு பற்றி எனக்குப் பேசக்கூடிய வாய்ப்பினை
அளித்த உங்களுக்கு நன்றியினைக் கூறிக் கொள்கிறேன்.
நம்முடைய மரியாதைக்குரிய திருமங்கலம் தொகுதி சட்ட
மன்ற உறுப்பினர் திரு. இ. ஆர். ரெட்டியார், எம்.எல்.ஏ.,
மற்றும் அவர்களுடைய மருமகன் திரு. திருவேங்கடம்,
எம்.எல்.ஏ., ஆகிய இருவரும் இறந்து விட்டார்கள்.
அவர்களை அடக்கம் செய்யக்கூடிய அளவிலே கூட வசதி
வாய்ப்பில்லாமல் அந்தக் குடும்பம் மிகவும் கஷ்டப்பட்டுக்
கொண்டிருந்த நிலையினைப் பத்திரிகையிலே பார்த்தவர்
களுக்கு நன்றாகத் தெரியும். அப்படிப்பட்ட நிலையில்,
இன்றைக்குச் சம்பளங்கள் வழங்கல் சட்டத்தினைத் திருத்தக்
கூடிய வகையில், திருத்தங்களைக் கொண்டு வந்திருக்கக்
கூடிய இந்த நேரத்தில்.....

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** தலைவர் அவர்
களே, அப்படிப்பட்ட பிரச்சினைகளை முதல் அமைச்ச
ருக்குத் தெரிவித்தால் கவனிக்கப்படும். இப்பொழுது வருகிற
சட்டம் ஒரே ஒரு பிரச்சினைக்காக மட்டும்தான். தப்பித்
தவறி இறந்து போனால், இப்போதிருக்கிற சட்டமன்ற

(பேராசிரியர் க. அன்பழகன்)

உறுப்பினர் குடும்பத்திற்கு உதவி செய்வதற்கு என்ற அடிப்படையில் இந்தச் சட்டத்தை நிறைவேற்றுகிற காரணத்தால், உறுப்பினர் அவர்களுடைய எண்ணங்கள் எல்லாம் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்று பொருள் அல்ல. உரிய முறையிலே அது பரிசீலிக்கப்படும். எனவே, அவற்றையெல்லாம் இந்த நேரத்திலே வலியுறுத்தி, இந்தச் சட்டத்திலே இடம் பெற வேண்டுமென்று கருதிப் பேசுவது அவ்வளவு பயன் உடையதாக இருக்காது.

திரு. பெ. சீனிவாசன் : மரணம் என்பது தற்செயலாக ஏற்படுவது. தற்கொலை கூட அதிலே அடங்குமா என்று அறிய விரும்புகிறேன். (சிரிப்பு).

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்களே, அப்படிச் செய்து கொள்வதை நாம் தடுக்க முடியாது. (சிரிப்பு).

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்பது, தற்கொலை செய்து கொண்டாலும் அந்தப் பணம் அவர்களுக்குக் கிடைக்குமா என்பது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, ஒருவேளை தற்கொலை செய்து கொண்டார் என்பது விவாதப் பொருளாகி விட்டால் நிதி உதவிக்கு ஆபத்து வரவும் செய்யும்.

12-55 மணி

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, ஒரு சட்டமன்ற உறுப்பினர் எதிர்பாராத சூழ்நிலையில் இறந்துவிட்டால் அவருடைய குடும்பத்திற்கு நஷ்டயீடாக 50,000 ரூபாய் வழங்குகிறார்கள். இன்னும் ஒருபடி மேலே போய் சொல்வதாக இருந்தால் 'மோஸ்ட் பாக்வெர்டு, மோஸ்ட் பாக்வெர்டு' என்று சொல்லுகிறார்கள். அவர்கள் இறந்துவிட்டால் 75,000 ரூபாயும், அதைப்போன்று தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் இறந்துவிட்டால் 1.5 இலட்சம் ரூபாயும் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாற்றுத் தலைவரவர்களே, இறப்பிலாவது ஜாதி வேற்றுமை இல்லாமல், வாழுகின்றபோது எத்தனை ஜாதிகள் இருந்தாலும், சாகின்றபோதாவது 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்' என்று சொல்லிவிட்டுச் சாவதுதான் நல்லது (சிரிப்பு).



திரு. வே. பெரியசாமி : மாற்றுத் தலைவரவர்களே, பொருளாதாரத்தில் மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளவர்கள் பற்றியும், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் பற்றியும் மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும். அந்த நிலையிலேதான் நான் ஒரு தாழ்த்தப்பட்ட சட்டமன்ற உறுப்பினர் என்று காரணத்தினாலே. நானும் என்னைப் போன்ற பல சட்டமன்ற உறுப்பினர்களும் வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற நிலைமை ஏற்பட்டிருப்பதால், இப்படிப்பட்டவர்களுக்கு எதிர்பாராத சூழ்நிலையில் விபத்து ஏற்பட்டால், அந்தக் குடும்பத்திற்கு ஏறத்தாழ ஒரு இலட்சம் ரூபாய் கொடுப்பதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப் போன்று அந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் இரவு நேரங்களிலே பொதுக் கூட்டங்கள் மற்றும் பல்வேறு அரசு விழாக்களுக்குச் செல்லுகிறார்கள். அப்படிப்பட்ட நிலையில், இன்றைக்கு ஓடுகின்ற கார்கள், பேருந்துகள் சரியான நிலையில் இல்லாததால் அடிக்கடி ''ஆக்சிடென்ட்ஸ்' ஏற்படுகின்றன. அப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்படாமல் இருப்பதற்கு இந்தச் சட்டத் திருத்தத்தின் மூலமாக நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஒவ்வொருவருக்கும் ஒரு கார் இலவசமாக வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாற்றுத்தலைவவர்களே, காரையும் கொடுத்துவிட்டு, விபத்துக்கு முன் பணமும் தரவேண்டுமென்ற (பலத்த சிரிப்பு) நிலைமை ஏற்படும். எந்தக் காராக இருந்தாலும் விபத்து ஏற்படுவதை யாரும் எதிர்பார்க்கமுடியாது. இந்தச் சட்ட முன்வடிவு ஒரு குறிப்பிட்ட காரியத்திற்கு மட்டும்தான். மற்ற பிரச்சினைகளை வேறு நேரங்களிலே விவாதிப்பதுதான் நல்லது.

திரு. வே. பெரியசாமி : தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை ஆதரித்து, விடைபெறுகிறேன். நன்றி. வணக்கம்.

திரு. என். கணபதி : தலைவரவர்களே, இந்தச் சட்ட முன்வடிவை வரவேற்கின்ற அதே நேரத்தில் இந்த மாதிரி இழப்புகள் அடிக்கடி ஏற்படுகின்றன. நாம் மிகவும் அக்கறையோடு, நல்லெண்ணத்தோடு இருந்தாலும் சாலை விபத்துக்கள் ஏற்படுகிறபோது, கொடுக்கப்படும் நஷ்டஈடுகளிலிருந்து அவர்கள் வேறு எந்த எந்த வகைகளில் எல்லாம் பணம் கொடுக்க வேண்டுமோ அதை எல்லாம் கழித்துவிட்டு மீதியைத்தான் கொடுக்கிறார்கள். ஆகவே, இந்தச் சட்ட முன்வடிவை நிறைவேற்றுகின்ற நேரத்தில் சாலை விபத்துக்கள் சம்பந்தமாகக் கொடுக்கப்படுகிற நஷ்டயீடு மாதிரி, அதே முறையில் எந்தக்

கடனும் இந்த நஷ்டயீட்டுத் தொகையில் சேராது என்ற முறை
யில் அரசாங்கம் ஒரு திருத்தத்தைக் கொண்டுவர வேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. பி. எச். பாண்டியன் :** மாற்றுத் தலைவரவர்களே,
ஒரு சின்ன ஆலோசனை, ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்ச
பட்டமும் சொன்னேன். அதாவது, சட்டமன்றம் இதைப்போன்ற
நிறுவனங்கள் சார்பாக 'மாஸ்டர் பாலிசி' என்று ஒரு
இருக்கிறது; சபாநாயகர் பெயரால் அதில் ஒரு பாலிசி
எடுத்துக்கொண்டால் பிரிமியம் அதிகம் செலுத்த வேண்டியிராது;
2 ரூபாய் அல்லது 3 ரூபாய்தான் செலுத்த வேண்டியிருக்கும்.
அதனால் அரசாங்கம் அதிகப் பணம் கூட செலுத்த வேண்டிய
சூழ்நிலை வராது. மாஸ்டர் பாலிசி என்பது 'குரூப் இன்சூரன்ஸ்'
மாதிரி. இப்போது இறந்துவிட்டவர்களுடைய குடும்பங்களுக்கு
இந்தச் சட்டத்தை நிறைவேற்றி கொடுங்கள்.
கொடுப்பதற்கு, சபாநாயகர் பெயரால் மாஸ்டர் பாலிசி இனிமேல்
கொள்ளலாம். அதற்கு எல்.ஐ.சி. பணம் கொடுக்கும். எடுத்துக்
ரூபாய்தான் பிரிமியம் வரும். அதற்கு ஏற்பாடு 2, 3
வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். செய்ய

**திரு. என். கணபதி :** தலைவரவர்களே, எல்.ஐ.சி. பாலிசி
எடுப்பதிலே என்ன கஷ்டம்இருக்கிறது என்றால், தற்கொலைக்குப்
பணம் கிடையாது (சிரிப்பு).

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச்
செயலர் :** மாண்புமிகு மாற்றுத் தலைவரவர்களே, இந்தச்
சட்ட முன்வடிவைப் பொறுத்தவரையில் கட்சி வேறுபாடு
இல்லாமல் எல்லோரும் ஆர்வத்தோடு ஏற்றிருக்கிறார்கள் என்
பது மட்டுமல்ல. தொகையை அதிகமாக்கிக் கொடுக்க
வேண்டுமென்ற எண்ணத்தையும் பிரதிபலித்திருக்கிறார்கள்;
கருத்துச் சொல்லியிருக்கிறார்கள். கருத்துக்களைச் சொல்லு
கிறபோது நண்பர் சுந்தரதாஸ் அவர்கள் கூடச்சொன்னார்கள்.
சாதாரண அரசு அலுவலர்களுக்குக் கிடைக்கிற சலுகை கூட
கிடைக்கவில்லை என்று.
மாறுபாடு, அவர்கள் தவறாகக் கருதிக்கொள்ளக்கூடாது. அதிலே ஒரு
அலுவலர்கள் என்பவர்கள் — அவர்கள் பல ஆண்டுகளாகத் அரசு
தொடர்ந்து பணியாற்றுகிறவர்கள்.
1967-ல் உறுப்பினராக வந்திருக்கிறேன். இப்போது மூன்றா நான்
வது முறையாக வந்திருக்கிறேன். எல்லோரும் அப்படி வருகி
றார்கள் என்று சொல்ல முடியாது. சாதாரணமாக 5 ஆண்டு
கள்தான். ஆகவே, அரசு அலுவலர்களை நாம் ஒப்பிட
வேண்டிய அவசியம் இல்லை. ஆனால் நமக்குள்ள நிலைமை
தனை நீங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும்.



இங்கே நம்முடைய அருமை நண்பர் திரு. சீனிவாசன் அவா
கள் தற்கொலை செய்துகொண்டால் பணம் உண்டா இல்லையா
என்று கேட்டார்கள். இதற்கு முன்னாலே தற்கொலை
செய்து கொண்டால் உண்டா இல்லையா என்று சட்டங்கள் எல்
லாம் இருக்கின்றன. அவைகளை எல்லாம் இதற்கும்....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பால
சுப்பிரமணியம் :** அந்தச் சட்டங்கள் எல்லாம் இதற்கும்
பொருந்துமா என்று தான் கேட்கிறார்.

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்):**
அவைகள் இதற்கும் பொருந்தப் பார்க்க வேண்டும். அப்படி
ஏதாவது வருமானால் நம்முடைய முன்னவர் அவர்கள் பதில்

13-00 மணி

சொல்லியிருக்கிறார்கள். இங்கே நம்முடைய மாண்புமிகு
கணபதி அவர்கள் சொன்ன கருத்து நிச்சயமாக ஆய்வில
எடுத்துக்கொள்ளப்படும். தேவையென்றால் அதற்குரிய வகை
யில் சட்டம் திருத்தப்படும். நம்முடைய சட்டமன்ற உறுப்
பினர்களுக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். நான்
1967-ஆம் ஆண்டில் முதலில சட்டமன்ற உறுப்பினராக ஆன
போது எல்லாம் சேர்த்து-என்னுடைய நினைவு சரியாக இருக்கு
மானால்-என்னுடைய சம்பளம் 250 ரூபாய்தான். இப்போது
என்ன நிலைமையென்றால் மாதச் சம்பளம் 600 ரூபாய்,
ஈட்டுப்படி 700 ரூபாய், தொலைபேசி படிக்கென 450
ரூபாய் என்று மொத்தம் 1,750 ரூபாய் வருகிறது. விலைவாசி
யும் உயர்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. அது உண்மை
தான். இன்றைக்குப் பல்வேறு யோசனைகளைச் சொல்லி
யிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் நிதிநிலை அறிக்கையின்
போது....

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிர
மணியம் :** உத்தரப்பிரதேசத்தில் சட்டத்தட்ட மக்களவை
உறுப்பினர்களுக்குச் சமமான ஊதியம் வழங்கப்படுகிறது.

**திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர் :**
தலைவர் அவர்களே, இது சட்டமன்றம்.—

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிர
மணியம் :** சட்டமன்றத்தைத் தான் சொல்கிறேன்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: தலைவர் அவர்களே தாங்கள் தலைவராக அமர்ந்திருப்பது இந்த அவையை நடத்துவதற்குப் பெரிதும் உதவுவதற்காக.... (சிரிப்பு) தாங்கள் வாதத்தில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் சொன்னது உத்தரப்பிரதேசம் பற்றியதாகும். உத்தரப்பிரதேசம் தான் இந்தியாவை ஆள்கிறது என்ற பொதுவான கருத்து நீண்ட நாட்களாக இருக்கிறது. ஆகவே அந்த மாநிலத்திற்குப் பொருந்துவது எல்லாம் எல்லா மாநிலங்களிலும் பின்பற்ற முடியுமா என்பது ஒரு கேள்வி. முடிந்த வரையில் முயற்சிக்கலாம்.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சி மன்றச் செயலர்): தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் தெரிவித்த கருத்துக்கள் எல்லாம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். எனவே, இதை நிறைவேற்றித்தர வேண்டுமென்று கோருகிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்): பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990-ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் வழங்கல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பேற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவு—2.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்): பேரவை முன்னுள்ள கேள்வி :

''பிரிவு 2 சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. மா சுந்தரதாஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்.

"In Clase' 2, for the proposel new sub-section 2—AA)' subrtitute the following : (2—AA) Upon swearing in as members of the Assembly the Government or the Legislature Secretariat as the case may be secure that the life of eachmember so sworn, be insured for an amount not mere than 2 lakhs of rupees with the Life InsuranceCorporation of India and the premium shall be paid on





behalf of the member by the Government or the Legislature Secretariat and the lump sum payable shall be paid to the family of the member in case of the ceath of that member.

"Further the L. I. C. may ali be direteed to pay the medical expenses of so the member."

திருத்தம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) : திருத்தத்தை வலியுறுத்துகிறீர்களா? (குறுக்கீடு).

உறுப்பினரின் திருத்தம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக்கொள்ளப்பெற்றது.

பிரிவு 2 பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

பிரிவு 1 மற்றும் முகப்புரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

நெடுந்தலைப்பு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

''நெடுந்தலைப்பு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்): மாண்புமிகு தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன.

"In the enacting formula, for the expression Fortieth year" substitute the expression Forty first year.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு திருத்தப்பெற்றப்படி பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

திரு. எல். கணேசன் (முதலமைச்சரின் ஆட்சிமன்றச் செயலர்) : தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன்;

''1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு சம்பளங்கள் (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 1/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெற வேண்டும்''. வழங்கல்

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன் வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப் பெற்றது.

(ச) பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன் வடிவு, 1990.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிர மணியம்) : அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை பேராசிரியர் க. பொன்னுசாமி கொடுத்துள்ளார். அவர் அத் தீர்மானத்தை மொழிவார்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாற்றுத் தலைவர் அவர் களே, கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''21—12—1989 ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்த அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 13/1989), இப்பேரவை நிராகரிக்கின்றது''.

13.05 மணி

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக்கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு, 1990 * (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 2-1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண் டும்

* 19-1-1990 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.



மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிர மணியம்) : மாண்புமிகு உறுப்பினர் பேராசிரியர் க. பொன்னு சாமி அவர்கள் தீர்மானமும், மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவையின் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாற்றுத் தலைவர் அவர் களே, நன்றி. அறக்கட்டளைகள் சாதாரணமாக நல்ல நோக்கங்களுக்காக ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால் ஒரு சிலவற்றில் முறைகேடுகள் இருக்கின்றன என்பதையும், அவைகள் எல்லாம் களையப்படவேண்டும் என்பதிலே எந்தவிதமான கருத்து வேறுபாடும் இருக்க முடியாது. சில அறக்கட்டளை களிலே இடைத்தரகர்கள் புகுந்துவிடுவதாகச் செய்திகள் வரு கின்றன. வழக்குகள் நடைபெறுகின்றன. நடவடிக்கை எடுக்கப்போகிற நேரத்திலே, நீதிமன்றத்திலே நிழல் தேடிக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட நிலைமைகளைத் தடுப்பதற்கு தமிழகத்தில் சட்டத் திருத்தம் கொண்டுவரமுடியுமா என்பதை ஆராயவேண்டும் என்ற கருத்தை இங்கே தெரிவிக்கக் கடமைப் பட்டு இருக்கிறேன்.

பொதுவாக இந்த டிரஸ்ட் காலேஜஸ் என்று சில இருக்கின் றன. அவைகளிலே முறைகேடுகள் இருப்பதாகச் சொல்லப்படு கின்றது. அதற்காகப் போராட்டங்கள் எல்லாம்கூட நடந்து கொண்டிருக்கின்றன. இவைகளையும் அரசு கருத்திலே கொள்ளவேண்டும். குறிப்பாகச் சொல்லவேண்டும் என்றால், சௌடேஸ்வரி என்று ஒரு காலேஜ் இருக்கிறது. அதிலே முறை கேடுகள் இருப்பதாகச்செய்திகள் வந்துகொண்டு இருக்கின்றன. அவற்றை எல்லாம் மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நீதிமன்றத்திலே வழக்கு இருக் கிற காரணத்தினாலே, இதை நீடிக்கவேண்டிய அவசியம் இருக் கிறது என்பதைத் தெளிவுபட மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் இப்போது என்னிடத்திலே சொன்னார்கள். அந்த வகையிலே இந்தத் தீர்மானம் தேவை என்பதால், நான் கொடுத்திருக்கும் நிராகரிப்புத் தீர்மானத்தைத் திரும்பப் பெற்றுக்கொள்கிறேன்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, கல்வி அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கிற பச்சையப்பன் அறக்கட்டளையை மேற்கொள்ளக் கூடிய, அந்த நிர்வாகத்தை மேற்கொள்ளக் கூடிய இந்தத்திருத்தச் சட்டத்தை நான் வரவேற்கக்கூடிய இந்த நேரத்தில், ஒரு நல்ல நோக்கத்திற்காகக் கொண்டுவரப்பட்ட இந்த அறக்கட்டளை யினுடைய நிறுவனத்தை ஒழுங்குப்படுத்துவதற்காக 11/81 என்கிற சட்டத்தின் மூலமாக இது மேற்கொள்ளப்பட்டு, இப் போது இதிலே சில நல்ல காரியங்கள் எல்லாம் செய்யப்பட்டு

இருப்பதாக—இந்தக் குழுவின் மூலமாக — சொல்லப்பட்டு இருக் கிறது. இந்த மேலாண்மைக் குழுவின் மூலமாக நிர்வாகம் சீர் படுத்தப்பட்டுள்ளது. கட்டிடங்கள் கட்டுமானம் செய்யப் பட்டு உள்ளது. சொத்துக்களின் வாடகை வருமானம் அதி கரித்துள்ளது. நிலுவையில் இருந்த கடன்களைத் தீர்த்துள்ளது என்று சொல்லப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட இந்தக் காரி யங்களை எல்லாம் இந்தச் சட்டத்தை மேற்கொண்ட தன் மூல மாக இந்த அறக்கட்டளையால் நிறைவேற்றப்பட்டு இருக்கிறது என்கிற விவரங்கள் இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. அப்படிச் சொல்கிறபோது, இது நல்ல நடவடிக்கையாக இருந்தாலும், மேலும் இதை நிர்வகிக்கக்கூடிய அந்தக் குழுவைத் தேர்ந்தெடுப் பதற்கு ஒரு ஆண்டுக்காலம் மேலும் தேவை என்று சொல்லப்பட்டு இருக்கிறது. இந்த 1990 ஆம் ஆண்டு டிசம்பர் 21 வரையிலே இதற்குக் கால அவகாசம் அளித்து, அதற்குள் இந்தத் தேர்தலை நடத்தவேண்டும் என்று இதிலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் தொடர்ந்து ஒவ்வொரு ஆண்டும், 9 ஆண்டுகளாக ஆக்கப் பட்ட போதும், இந்தச் சட்டத்திலே அப்படித்தான் சொல்லப் பட்டது. இப்போது 10 ஆண்டுக்காலமாக உயர்த்துகிறோம் என்று சொல்கிறபோதும், அப்படித்தான் சொல்லப்படுகிறது. அடுத்து 11 ஆண்டுக்காலமாக நீட்டிக்கிறோம் என்று சொல்லும் போது, இப்படிச் சொல்லப்படுமோ என்ற அச்சம் எனக்கு இருக்கிறது. அப்படி இல்லாமல், தேர்ந்தெடுக்கப்பட்ட குழு நிர்வகிப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்ய முயற்சி செய்ய வேண் டும். அதே நேரத்தில், அதற்கு முயற்சி செய்வதோடு மட்டு மல்லாமல் இப்படிப்பட்ட தவறுகள் நடந்து சீர்கெட்டு இருக்கக் கூடிய அறக்கட்டளைகளை— ஏன் என்றால், அனைத்து அறக் கட்டளைகளையும் அரசியல் ரீதியாக நாம் எடுக்க முடியாது என்ற நிலை இருந்தாலும்-பாதிப்புக்கு ஆளாகியிருக்கக்கூடிய அறக்கட்டளைகளை, கல்வி நிறுவனங்களையாவது, அரசே முழுமையாக மேற்கொண்டு நடத்துவதற்கு முயற்சி எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அந்த வகையிலே இந்த அறக்கட்டளைகளின் மீது நடவடிக்கை எடுப் பதற்கு அரசு முயற்சி செய்ய வேண்டும்.

அதைப் போலவே நம்முடைய பேராசிரியர் பொன்னுசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள், சேலம் மாவட்டத்திலே, சௌடாம்பிகா என்கிற அந்தக் கல்லூரி என்பது தொடர்ச்சியாக (குறுக்கீடு) சௌடேஸ்வரி என்ற அந்தக் கல்லூரி தொடர்ச்சியாக, அங்கே வேலை செய்யக்கூடிய ஆசிரியர்களைப் பழி வாங்கு கிறது. பிரின்சிபாலின் மீதே நடவடிக்கை எடுத்து, அவர்களை வெளியே அனுப்பக்கூடிய நிலைமை ஏற்பட்டு, அவர்களைப் பழி வாங்கக்கூடிய அடக்குமுறைகள் என்னும் ஆயுதங்களைக் கொண்டு, நடவடிக்கை எடுக்கக்கூடிய அளவிற்கு அந்த நிர்வாகம் செயல்படுகிறது. எனவே

இப்படிப்பட்ட நிலை வரும்போது அதைத்தவிர்ப்பதற்கும் தடுப்பதற்கும் உரிய முறையிலே அரசு சட்டத் திருத்தங்களைக் கொண்டு வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



இன்னும் ஒன்றை மட்டும் தெரிவித்துக் சொல்கிறேன். நம் முடைய கல்வி அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். ஏன் என்றால், நீண்ட அரசியல அனுபவமும், சிறந்த முதிர்ச்சியும் பெற்றிருக்கக் கூடிய ஒருவரை நமது கல்வி அமைச்சராகக் கொண்டிருக்கிறோம். குறிப்பாக இந்த ஆப்பரேஷன் பிளாக் போர்டு என்று சொல்லக்கூடிய கரும்பலகைத் திட்டத்தின்கீழ் புத்தகங்கள் கொள்முதல் செய்யப் படுவதில் நடந்திருக்கக்கூடிய கோரக் கொடுமைகளை நிச்சயமாக நம்முடைய கல்வி அமைச்சர் அனுமதிக்கமாட்டார் என்று நான் நம்புகிறேன்.

13-10 மணி

ஏனென்று சொன்னால் அதிலே விதிமுறைகள் எல்லாம் மீறப் பட்டிருக்கின்றன. காலாலே போட்டு மிதிக்கப்பட்டு, அதுதோடு மட்டுமல்லாமல், அங்கே பல்வேறுவிதமான தவறுகள் நடக்கப் பட்டு, ஒரு புத்தகத்தினுடைய அட்டை மாற்றப்பட்டு, வேறு ஒருவர் பெயராலே அந்த அட்டைகள் கூட ஆக்கப்பட்டு காரியங் கள் அந்தமாதிரி செய்யப்பட்டு, வேண்டப்பட்டவர்களுக்கு, வேண்டப்படாதவர்களுக்கு என்ற முறையிலே அனுமதி வழங்கப் பட்டு புத்தகம் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. இரண்டே இரண்டு புத்தகங்களை மட்டும் நான் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். 'தேன் சிந்தும் சிறு மலர்கள்' என்ற ஒரு புத்தகம். அது சிறு மாணவர்களுக்கு— ஒன்றாம் வகுப்பி லிருந்து எட்டாம் வகுப்பு வரை இருக்கக்கூடிய மாணவர்களுக்குக் கற்றுத் தரக் கூடிய அந்தப் பாடப் புத்தகத்திலே 'தேன் சிந்தும் சிறு மலர்கள்' என்ற அந்தத் தலைப்பில் இருக்கக் கூடிய அந்தப் புத்தகத்தில், கரு கலைப்பது எப்படி என்ற ஒரு கவிதை வருகிறது. அந்தச் சாதாரண பிஞ்சு உள்ளங்களில் அப்படிச் செய்வது நியாயம்தானா, சரிதானா ? அதேமாதிரி 'நெல்லி மரம்' என்ற புத்தகத்தில் உடல் உறவு நீடிப்பது எப்படி என்று ஒரு பாடம் வருகிறது. இதெல்லாம் அந்தப் பிஞ்சு உள்ளங்களிலே நஞ்சைக்கலப்பதற்குச் செய்யக் கூடிய காரியங்களாக அமைந்திருப் பது நியாயம் தானா ? அதுவும் நம்முடைய பேராசிரியர் போன்ற வர்களுடைய தலைமையில் இருக்கக் கூடிய அந்த நிறுவனத்திலே நடப்பது சரிதானா என்பதோடு மட்டுமல்லாமல் அப்படிப்பட்ட கடிதங்களையும் புத்தகங்களையும் நான் இங்கே வைத்திருக் கிறேன். அதை நம்முடைய பேராசிரியர் அவர்களிடம் கொடுக் கிறேன். எனவே அதை யார் யார் செய்தார்கள், எப்படிச் செய்தார்கள் ? அது யாராக இருந்தாலும், அதில் என்ன நடந்தது எப்படிக் கொடுத்தார்கள் என்ற விவகாரத்திற்குள்ளே நான போகவில்லை. ஒரு தலைமுறையையே நாசப்படுத்துவதற்கான அதிகாரத்தைக் கல்வித்துறை அதிகாரிகளுக்கு யார் வழங்கியது என்பதை மட்டும்தான் நான்கேட்க விரும்புகிறேன். அப்படி

ஒரு தலைமுறையை நாசப்படுத்தியிருப்பவர்கள் மீது உரிய
நடவடிக்கை எடுத்து, அந்த உத்தரவுகள், ஆர்டர்கள் முழுவதை
யும் ரத்து செய்ய வேண்டும். அந்தப் புத்தகங்களைத் திரும்பப்
பெற வேண்டும். அதை முழுமையாகப் பரிசிலித்து, அந்த இளம்
பிஞ்சு உள்ளங்களுக்குச் சரியான பயிற்சி அளிக்கக் கூடிய புத்தகங்
களை வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று
கோரி நான் முடிக்கிறேன்.

திரு. கோ. பூவராகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, பச்சையப்பன் அறக் கட்டளைகள் மீது—அதைச்
சார்ந்த குழுக்களின் மீது நம்முடைய அமைச்சரவர்கள் ஒரு
ஆண்டுக்கு அந்த நிலையை நீட்டிக்க வேண்டுமென்று இங்கே
கொண்டு வந்திருக்கிறார்கள். அந்த முழுக்க முழுக்க இந்த
அறக் கட்டளைக்கு எல்லாம் ஒன்றாக இணைக்கின்றபோது ஒரு
நியதியாக இணைத்திருக்கிறார்கள். அந்த அறக்கட்டளைகள்
எல்லாம் சரியான முறையில் நிர்வகிக்கப்படவில்லை. அந்த அறக்
கட்டளையில் குறிப்பிட்டவாறு செயல்படவில்லை என்று அரசாங்
கம் மேற்கொண்டது. அரசாங்கம் மேற்கொண்டு கடந்த 9
ஆண்டுகளாக அதில் என்ன செய்திருக்கிறார்கள் என்று பார்க்
கின்றபோது, ஊரிலே ஒரு கதை சொல்லுவார்கள். ஒரு பிச்சைக்
காரன் வந்து வீட்டிலே பிச்சை கேட்கின்றபோது மாமியாருடைய
குணத்தை அறிந்து மருமகள், இந்த வீட்டிலே பிச்சை போட
மாட்டார்கள், அடுத்த வீடு பாரு என்று சொன்னாள். அந்தப்
பிச்சைக்காரன் போனபோது மாமியார் அவனை அழைத்து வா
என்று சொன்னபோது, இவன் சந்தோஷமாகப் போனான், பிச்சை
கிடைக்குமென்று. அவன் போனபோது, அவளுக்கு என்ன
அதிகாரம் இருக்கிறது, நான் சொல்கிறேன் நீ போய் வா என்று
அனுப்பி வைத்தார்கள். அதேமாதிரி தான் ஏற்கெனவே இருந்த
நிர்வாகம் சரியாக நடைபெறவில்லை என்றுதான் அரசாங்கம்
மேற்கொண்டது. அரசாங்கம் மேற்கொண்டு, அதே தவறுகளை
இவர்களும் செய்துகொண்டிருக்கிறார்கள். கிட்டத்தட்ட ஒரு
அறக் கட்டளையிலிருந்து இன்னொரு அறக்கட்டளைக்குப்
பணத்தை எடுப்பது, நீதிமன்றத்தினுடைய அனுமதி இல்லாமல்
எடுக்கக் கூடாது என்ற ஒரு நியதி இருக்கிறது. கிட்டத்தட்ட
செங்கல்வராய நாயக்கன் டிரஸ்டிலிருந்து ரூ. 70 இலட்சத்திற்கு
மேல் இன்றையதினம் ஒருவித அனுமதியும் இல்லாமல் மற்ற
நிறுவனங்களுக்கு எடுத்துச் செலவிட்டிருக்கிறார்கள். அப்படிச்
செலவாகின்றபோது எப்படிப்பட்ட செலவு? டைப்ரைட்டர்
வாங்கும்போது ஒவ்வொரு நிறுவனத்திற்கும் ரூ. 6,000, ரூ. 6,000
என்று. பிறகு வட்டி கட்டுவதற்குப் பணம். இப்படி முறை
கேடாக அந்த செங்கல்வராய நாயக்கன் டிரஸ்டிலிருந்து ரூ. 70
இலட்சத்திற்கு மேலே பணத்தை எடுத்து மற்ற நிறுவனங்களுக்கு
எடுத்துச் செலவிட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீரசாமி : தலைவர் அவர்
களே, இதற்கு முன்பு அப்படி நடைபெற்றபோது, அதை நீதி
மன்றத்திற்குக் கொண்டு சென்று, செங்கல்வராய நாயக்கன்





இன்ஸ்டிடியூஷனிலிருந்து மற்றக் காரியங்களுக்காகப்பணம் எடுக்கக்
கூடாது என்று நீதிமன்றத்தின் மூலம் உத்தரவு பெறப்பட்டிருக்
கிறது. இப்போது அந்தப் பணம் வேறு எந்தச் செலவிற்கும்
செய்யப்படுவதில்லை.

13-15 மணி

திரு. கோ. பூவராகன் : அதோடு நீதிமன்றத்திலே தடை
விதித்து இருக்கிறார்கள். அந்தத் தடையை நீக்க வேண்டுமென்று
மேல் முறையீடு செய்திருக்கிறது நம்முடைய அரசு . . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாற்றுத் தலை
வர் அவர்களே, அறக்கட்டளைக்கு என்று சில விதிமுறைகள்
இருக்கின்றன. எந்த ஒரு அறக்கட்டளையும் இன்னொரு அறக்
கட்டளை இடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்குமானால் அந்த
அறக்கட்டளைகளின் நிதி மொத்தமாகத்தான் வரவு செலவு
செய்யப்படுகின்ற ஒரு முறை நீண்டகாலமாக இருந்து வந்திருக்
கிறது. இப்போது தனி உரிமை அந்த அறக்கட்டளைக்கு வேண்டு
மென்று நீதிமன்றத்திலே கேட்கப்பட்டு அதற்காக ஒரு உத்தரவு
பிறப்பிக்கப்பட்டு தனித்தனி நிர்வாகமாக இருக்கலாமா கூடாதா
என்பது நீதிமன்றத்திலே மறுபடியும் கேள்விக்குறியாகஇருக்கிறது.
இன்னும் தகுந்த முடிவு வரவில்லை. நீதிமன்றத்தாலே இறுதி
முடிவு அறிவிக்கப்படவில்லை.

திரு. கோ. பூவராகன் : மாற்றுத் தலைவர் அவர்களே,
நீதிமன்றத்திலே இந்தப் பிரச்சினை எடுத்து வைக்கப்பட்டு, நீதி
மன்றத்திலேயே தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். அந்தந்த
அறக்கட்டளை அந்தந்த அறக்கட்டளையின் நியதியின்படி நடக்க
வேண்டும். ஒரு அறக்கட்டளை கோவிலிலே இருக்கின்றவர்
களுக்கு சாப்பாடு போடவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள்.
இன்னொரு அறக் கட்டளை பள்ளிக்கூடம் கட்டவேண்டுமென்று
எழுதியிருக்கிறார்கள். கண் இல்லாதவர்களுக்கு வேண்டிய
உதவிகள் செய்ய வேண்டுமென்று, விதவைகளுக்கு உதவி அளிக்க
வேண்டுமென்றும் எழுதியிருக்கிறது. அந்தந்த அறக்கட்டளை
யில் என்னென்ன சொல்லப்பட்டிருக்கிறதோ அந்தந்த விதிகளின்
படிதான் நடக்க வேண்டும். . . .

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாற்றுத் தலைவர்
அவர்களே, இப்போது அரசு மேற்கொண்டு, அரசு அதிகாரிகள்
பொறுப்பேற்றதற்குப் பின்னர் விதி முறைகள் முழு அளவில்
பின்பற்றப்படுகின்றன. அதற்கு முன்னர் உள்ள நிலைமைகள்
காரணமாக அவர்கள் உரிமைகள் கோரி, தனி உரிமைகள் கோரி,
தனி அமைப்பாக இயங்க வேண்டுமென்று கோரி நீதிமன்றத்திலே
வழக்குப் போடப்பட்டு, அது நீதிமன்றத்தாலே ஏற்றுக் கொள்ளப்
பட்டிருக்கிறது. ஆனால் இந்தப் பிரச்சினையில் நீதிமன்றத்தாலே
தரப்பட்டிருக்கிற அந்த உத்தரவின்படி, ஆணையின்படி

செயல்பட வேண்டுமா அல்லது அரசு கொண்டு வந்திருக்கின்ற சட்டத்தின்படி செயல்பட வேண்டுமா என்பது பற்றி உச்ச நீதி மன்றத்திலே இன்னும் வழக்கு இருக்கிறது. எனவே இதில் பல பிரச்சினைகள் தொக்கி நிற்கின்ற காரணத்தாலே எந்த முடிவிற் கும் வர முடியாத நிலைமையில் அரசு இருக்கிறது.

**திரு. கோ. பூவராகன் :** நான் தெளிவாக அமைச்சரிடத் திலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். உயர் நீதிமன்றத் திலே இவ்வாறு தான் இருக்க வேண்டுமென்று ஒரு தீர்ப்பு வழங்கி விட்டார்கள். அரசாங்கம் எல்லா அறக்கட்டளைகளையும் ஒரே மாதிரியாகத்தான் விதி நடத்த வேண்டும். தனிப்பட்ட முறையிலே ஒரு அற கட்டளைக்கு ஒன்று, இன்னொரு அறக் கட்டளைக்கு ஒன்று என்று வைக்கக் கூடாது. அதிலே அரசாங் கத்திற்கு தனிப்பட்ட என்ன அக்கறை இருக்கிறது. செங்கல்வ ராயன் இன்ஸ்டிடியூஷனிலே இருந்தோ, கோவிந்தப்ப நாயக்கன் அறக்கட்டளையிலிருந்தோ . . .

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாற்றுத் தலை வர் அவர்களே, செங்கல்வராயன் அறக்கட்டளை தனித்து இருக்க வேண்டுமென்ற கருத்தில் எனக்கு பெரிய மாறுபாடு ஒன்றும் கிடையாது. ஆனால் பச்சையப்பன் அறககட்டளையிலே இணைந்தபோது அவரவர்களும் அந்த அறக்கட்டளையோடு சேர்ந்து இயங்குமாறு ஒப்புக் கொண்டு சேர்க்கப்பட்டிருப்பது 19 அறக்கட்டளைகள். 19 அறக்கட்டளைகள் இருக்கிறபோது ஒரு அறக்கட்டளையைப் பிரித்தால் 19-ஐயும் பிரிப்பதா, ஒவ் வொன்றையும் தனித்தனியாக நிர்வகிப்பதா அல்லது எல்லாம் அவர்கள் முன்னரே இசைந்தபடியோ அல்லது நீதிமன்றத்தின் ஆணையின் படியோ ஒன்றாக இணைக்கப்பட்டதைப் பிரிப்பதில் நிதி நிர்வாகத்திலே மட்டும் அந்தப்பாகுபாடு வைத்துக் கொள் வதா என்பதையெல்லாம் உச்ச நீதிமன்றத்திலே வரும் தீர்ப்பைப் பொறுத்துத்தான் முடிவு செய்யக் கூடிய நிலைமையில் கான்ஸ்டி டியூஷனல் பெஞ்சில் அந்த வழக்கு விசாரிககப்படவிருக்கும் கார ணத்தால் அவர்களுடைய தீர்ப்புககாக தமிழக அரசு காத்திருக் கிறது.

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிர மணியம்) :** இன்னும் ஒரு நிமிடத்தில் முடித்து விடுங்கள்.

**திரு. கோ. பூவராகன் :** ஒரு நிமிடத்தில் முடித்து விடுகிறேன். எந்த அறக்கட்டளையிலாவது 70 லட்சம் ரூபாய்க்கு மேற்பட்ட பணம் இந்த பச்சையப்பன் அறக்கட்டளைக்கு கொடுக்கப்பட்டிருக டிருக்கிறதா என்று தெரிந்துக் கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாற்றுத் தலைவா அவர்களே, செங்கல்வராயன் நாயக்கன் அறக்கட்டளை பச்சை யப்பன் அறக்கட்டளையோடு பங்குதாரராக இருக்கிறது. அந்தப் பங்கினைப் பிரிப்பது தனியாக நடத்திக்கொள்வது என்று நீதி



மன்றத்திலே ஏற்கெனவே தரப்பட்ட ஆலோசனையின்படி நடை பெற்ற முறையில் அந்த குறைகளோ அல்லது நான் கருதுகிற குறைகளோ ஏற்பட்டு இருக்கலாம். ஆனால் இப்போது அரசு அதிகாரிகள் மேற்பார்வையிலே நடைபெறுகிற அறக்கட்டளை களில் அந்தந்த அறக்கட்டளைகளுடைய நிதி அந்தந்த அறக் கட்டளைகளுக்குத்தான் இருக்கும்படி இப்போது நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அதையும் மாற்றி அமைக்கிறபோது என்ன விதி ஏற்பது என்பது உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பில், அந்த அறக்கட்டளைகளை எப்படி நிர்வகிக்க வேண்டும் என்பது பற்றிய கருத்து நமக்கு கிடைக்கும் அதன் அடிப்படையில் நாம் செய்யலாம் என்று கருதுகிறேன்.

**திரு. கோ. பூவராகன் :** நான் அதை ஏற்றுக் கொள்கிறேன். குறிப்பாக செங்கல்வராயன் அறக்கட்டளையிலிருந்து கிட்டத் தட்ட 40 லட்சம் ரூபாய் ஆண்டுதோறும் வருகிறது. அந்த டிரஸ்டிலே பல கோரிக்கைகள் குறித்து வைத்திருக்கிறார்கள். அதில் எந்தக் கோரிக்கையாவது நிறைவேற்றுவதற்கு அந்தப் பணத்திலிருந்து சிறிய தொகையாவது செலவிடப்பட்டிருக்கிறதா? அதேபோலத்தான் கோவிந்தப்ப நாயக்கன் டிரஸ்டிலே இருந்து கூட அதிகப் பணம் வருகிறது. அந்தந்த கோரிக்கைகளுக்கு ஏற்ப இந்த இரு டிரஸ்டுகளிலும் நியமிக்கப்பட்டது போன்று செலவிடுகிறார்களா, என்றால் இல்லை. தவிர இந்த கோவிந்தப்ப நாயக்கன் டிரஸ்டிலும். செங்கல்வராய நாயக்கன் டிரஸ்டிலும் இந்த 100 ஆண்டுக் காலத்தில் அதில் குறிப்பிட்டிருக்கும் காரணங் களுக்காக ஏதாவது செலவிட்டிருக்கிறார்களா என்பதை மாண்பு மிகு கல்வியமைச்சர் அவர்கள் பார்த்து ஏற்பாடு செய்ய வேண்டு மென்று கேட்டு, இதை தனியே பிரித்து அந்தக் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு அரசாங்கம் முன் வர வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

13-20 மணி.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாற்றுத் தலைவர் அவர்களே, பச்சையப்பன் அறக்கட்டளை சட்டத்தை பொறுத்தவரையில் இது ஹைகோர்ட்டிலேயும் பெஞ்சால் ஸ்ட்ரக் டவுன் செய்யப் பட்டிருக்கிற ஒரு சட்டம். இது இப்போது சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கிறது. சுப்ரீம் கோர்ட்டிலே இருக்கும்போது இதை நீட்ட வேண்டுமென்று கூட குறிப்பிடப்பட்டிருக்கிறது. எங்களைப் பொறுத்தவரையில் எந்த ஒரு நோக்கத்துடன் இந்த அறக்கட்ட ளை உருவாக்கப்பட்டதோ அந்த நோக்கம் செயல்பட வேண்டும் 1981-லே இது டேக் ஓவர் செய்யப்பட்டது. நம்முடைய மாண்பு மிகு அமைச்சர் அவர்கள் கூட அந்த பில்லை எதிர்த்துப் பேசிய தாக எனக்குத் தெரியும் இந்த அவையிலே. ஆனால் நான் சொல்ல விரும்புவது எங்கள் கட்சி சார்பாகச் சொல்ல விரும்புவது எந்த நோக்கத்திலே உருவாக்கப்பட்டதோ அதை நிறைவேற்ற வேண்டும். அதைத்தான் ஹைகோர்ட்டிலே சொல்லியிருக்கும்

பேர்து நாம் சுப்ரீம் கோர்ட்டிலே வித்டிரா செய்யலாமே. நாம்
நான் அப்பீல் கொடுத்திருக்கிறோம். அரசாங்கம் தான். அப்பீல்
கொடுத்து இருக்கிறது. எந்த நோக்கத்தில் உருவாக்கப்பட்டதோ
அறக்கட்டளை அதை எடுத்து நடத்தலாமே தவிர அதை நீட்ட
வேண்டிய அவசியம் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. அதைப்
போல இதிலே கூட சொல்லப்பட்டிருக்கிறது. "Accordingly the
official committee has filed an application in the High Court, Madras . . . .
யார், எந்த அப்ளிகேஷன் கொடுத்திருக்கிறார்கள் என்ற விவரம்
இல்லை. யார் கொடுத்தார்கள்? எப்போது கொடுத்தார்கள்?
எதற்காக கொடுத்தார்கள் என்று ஒன்றுமே இல்லை. மொட்டை
யாக ஒரு பில்லை கொடுத்திருக்கிறீர்கள், தெளிவான முறையிலே
ஒன்றுமே கொடுக்கப்படவில்லை. ஆகையினால் நாம் எல்லோரும்
எதிர்த்த ஒரு சட்டம் தான். ஆகவே அதை, ஆட்சியில் இருக்கும்
போது நீட்டிக்கொண்டு போவதை விட்டுவிட்டு, ஏற்கெனவே
எந்த எண்ணத்தில் பச்சையப்பன் உருவாக்கினாரோ அதைச்
செய்ய வேண்டியது அரசின் கடமையே தவிர ஏதோ முந்தைய
அரசு செய்திருக்கிறது என்பதற்காக செய்ய வேண்டிய அவசியம்
இல்லை. என்னுடைய கருத்து பச்சையப்பன் டிரஸ்ட் நலம்
நடத்துவதற்காக ஹைகோர்ட் சொன்னபடி சுப்ரீம் கோர்ட் அப்
பீலை வித்டிரா செய்துவிட்டு—ஹைகோர்ட்டிலே கூட ஒரு பிரிவு
இருக்கிறது. அந்த உயர்நீதி மன்றத்தில் கூட இதைக் கொடுத்து
விடலாம் என்று சொல்லிக்கொண்டு இது தேவையில்லை எல்லா
விபரங்களும் இந்த பில்லிலே கொடுக்கப்படவில்லை. ஆகையி
னால் பட்ஜெட் செஷனிலே இந்த பில்லை வைத்துக் கொள்ளலாம்
என்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை முடித்துக்
கொள்கிறேன்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் :** மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த அறக்கட்டளையை அரசு மேற்கொண்ட அந்தக்
கொள்கையைக் கூட நான் அந்த நேரத்திலே ஏற்கவில்லை.
வேறுவழி இல்லாத ஒரு சூழ்நிலையில் அரசு ஏற்றது. அதை ஏற்ற
தற்குப் பின்னர் அறக் கட்டளையின் சார்பாக என்னுடைய
நண்பரே கூட நீதிமன்றத்திற்குச் சென்று வழக்காடினார்.
அந்த வழக்கிலே கிடைத்த தீர்ப்பு உடனடியாக அறக்கட்டளையை
அவர்களிடத்தில் ஒப்படைக்கக் கூடிய நிலைமை அரசுக்கு இல்லாத
காரணத்தினால் அதனை எதிர்த்து வழக்காடுவதற்கு மறு விண்
ணப்பம் செய்தார்கள். அப்பீல் செய்தார்கள். மாண்புமிகு
பூவராகன் அவர்கள் சொன்னதைப் போல செங்கல்வராயன்
நாயக்கர் அறக்கட்டளைக்குரிய செல்வம் முழுவதும் அந்த அறக்
கட்டளை பெயரால் தனித்து தனிப்பங்காக பயன்படுத்தவேண்டும்
என்ற வேண்டுகோளும் அதற்குத் தனியாக சில உறுப்பினர்கள்
நியமிக்கப்பட வேண்டும் என்ற வேண்டுகோளும் வைக்கப்பட்டு
அப்படி 3 உறுப்பினர்கள் நியமிக்கப்படுகின்ற நிலைமையும்,
அப்படி நியமிக்கப்பட்டாலும் பச்சையப்பன் அறக்கட்டளைதான்
அதற்குமேல் அதிகாரம் உள்ளதாக இருக்க வேண்டும் என்ற ஒரு
மறு விண்ணப்பமும்-இவையெல்லாம் உச்ச நீதிமன்றம் வரையிலே



சென்று உச்ச நீதிமன்றத்திலே 2 வழக்குகள் இன்னும் முடிவு
எடுக்கப்படாமல் கான்ஸ்டிட்யூஷனல் பெஞ்சு தான் முடிவு எடுக்க
வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு அந்த நிலையிலே காத்திருக்
கிறது. உயர்நீதி மன்றத்திலேயும் அரசு தொடர்ந்த வழக்கு
முடிவு அறிவிக்கப்படாமல் இருக்கிறது. இந்த நிலையில் அறக்
கட்டளையை உடனடியாக நாங்கள் திரும்ப அமைப்பது என்று
ஏற்றுக்கொண்டால், அரசு அலுவலர்களை விலக்கிக்கொண்டு
அந்த இடத்திலே அமர்வதற்கு எந்தெந்த அமைப்பிலிருந்து
தேர்ந்தெடுக்கப்படுவது என்ற அந்த முறையை வைத்துப்பார்க்
கின்ற போது கூட, பழைய முறையிலே பச்சையப்பன் கல்லூரி.
காஞ்சிபுரம் பச்சையப்பன் கல்லூரி இரண்டு கல்லூரிகளிலே மட்டும்
படித்துப் பட்டம் பெற்று 10 ஆண்டுக் காலம் கடந்தவர்கள்
மட்டும்தான் வாக்களிக்கின்ற உரிமை ஏற்கெனவே இருக்கிறது.
இப்போது கந்தசாமி நாயுடு கல்லூரி, கடலூரிலே ஒரு மகளிர்
கல்லூரி இப்படிப் பல அமைப்புகள் தோன்றிப் பலர் படித்து
பட்டம் பெற்றிருக்கின்ற காரணத்தினால் வாக்களிக்கின்ற
உரிமையை விரிவுப்படுத்த வேண்டிய ஒரு நிலைமை இருக்கிறது.
அப்படியே வாக்களித்தாலும் 'தி கான்ஸ்டிட்யூஷன் ஆஃப் தி டிரஸ்ட்'
எந்த முறையிலே இருக்க வேண்டுமென்று அரசே தீர்மா
னிக்க முடியுமா அல்லது நீதிமன்றத்தினுடைய ஆணையைப் பெற
வேண்டுமா என்பதும் கேள்விக்குரியதாக இருக்கிறது. எனவே
தான் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு கிடைக்குமானால் பல சிக்கல்கள்
தீரக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஏனென்றால் நீதிமன்றத்தில்
ஏற்கெனவே அவர்கள் கொடுத்த டைரக்ஷன் அடிப்படையிலே
தான் அறக்கட்டளையே உருவாகி இருக்கிறது. நீதிமன்றத்தால்
தரப்பட்ட டைரக்ஷன்படி உருவாக்கப்பட்ட அந்த அறக்கட்ட
ளையை சட்டமன்றத்திலே நிறைவேற்றுகின்ற சட்டத்தின் மூல
மாக அதனுடைய வடிவத்தை மாற்றிட நமக்கு உரிமைஇருக்கின்
றதா என்பதும் கேள்விக்குரியதாக இருக்கிறது. எனவே பல
சிக்கல்கள் இருக்கின்ற காரணத்தினால் நம்முடைய இந்த அறக்
கட்டளையிலே பொறுப்பு ஏற்றிருக்கின்ற அதனுடைய தலைவர்,
உறுப்பினர்கள், அரசுஅலுவலர்கள் ஆகியோர்களிடத்திலே கலந்து
பேசியிருக்கிறோம். அதே போல இந்தத் துறையினுடைய செய
லாளர் பல முறை இதைப்பற்றி ஆலோசித்திருக்கிறார். நாம்
எடுக்கிற முடிவு நீதிமன்றத்திலே மறுபடியும் கேள்விக்குரியதாக
ஆகிவிடக் கூடாது.

13-25 மணி.

எனவே, அந்த அடிப்படையில் தகுந்த ஆலோசனையோடு
இந்த அறக்கட்டளையை மறுபடியும் உருவாக்குவதற்கு இந்த
அரசு முயற்சிக்கும். அரசாங்கத்தின் அலுவலர் மூலம் நடத்த
வேண்டும் என்பது என்னுடைய நோக்கம் அல்ல. அறக்கட்டளை
களைத் தனியார் நடத்தினால்தான் நல்லது என்பது என்னுடைய
பொதுவானக் கருத்து. ஆனால் சில இடங்களில் அறக்கட்டளை
கள் அறக்கட்டளைகளாக மாறிவிடுகின்றன. அப்படி மாறி
[illegible] முழுக் கட்டளையை அரசு [illegible] வேண்டி

யிருக்கிறது. அந்த முழுச் சட்டவரையை எதிர்த்து அவர்கள்
நீதிமன்றத்திற்குப் போகிறார்கள். அப்படி நீதிமன்றத்திற்குப்
போன விவகாரம்தான், சௌடாம்பிகை கல்லூரி பற்றி நீடிக்கிறது.
நிர்வாகிகள் நீதிமன்றத்திற்குப் போன காரணத்தால் அரசு
அடுத்து தொடர்ந்து சில கடமைகளை நிறைவேற்றமுடியவில்லை.
ஆசிரியர்கள் உண்ணாவிரதம் இருப்பதாக திரு. பொன்னுசாமி
அவர்கள் இங்கே சொன்னார்கள். அவர்களுடைய பிரதிநிதி
களிடத்திலேகூட நான் பேசுகிறபோது, ' அரசிற்கு நேரடிப்
பொறுப்பு கிடையாது ; நிர்வாகத்தோடு நீங்கள் மாறுபட்டிருக்
கிறீர்கள். அரசு நேரடியாக நிர்வாகத்தோடு நல்ல உறவு வைத்
துக்கொண்டு செயலாற்றக் கூடிய நிலை இல்லை. இருந்தாலும்,
உங்களுடைய பிரச்சினையைப் பற்றிப் பேசுவதற்கு நான்
தயாராக இருக்கிறேன். இந்தத் துறையினுடைய செயலர்
வெளிநாடு சென்றிருக்கிற காரணத்தால், அதைப்பற்றிய அனுப
வம் உள்ளவர் என்ற காரணத்தால். அவர் வந்ததும் பேசலாம்'
என்று நான் அவர்களுக்குத் தெரிவித்திருக்கிறேன்.

எனவே, பிரச்சினையைச் சிக்கல் இல்லாமல் தீர்த்து வைக்க
முயற்சிக்கிற காரணத்தால், நீடிக்கிறது. இந்த ஆறு மாத
காலமாக மூன்று, நான்கு முறை ஆலோசனை நடத்தி, அந்த
ஆலோசனையிலே ஒரு தகுந்த முடிவுக்கு வரமுடியாத காரணத்
தாலும், இரண்டாவதாக, பச்சையப்பன் அறக்கட்டளையி
லேயே செங்கல்வராயன் அறக்கட்டளை சேர்ந்து இருப்பதற்கான
அடிப்படை நியாயம் இருந்தாலும் தனித்து இயங்குவதற்குக்
கோரிக்கை இருப்பதால், இவைகளைப் பற்றி நீதிமன்றம் என்ன
சொல்லும் என்பது எங்களுக்குத் தெரியாமல் இருக்கிறது. தனித்து
இயங்குவதாக இருந்தாலும் தனிப்பட்ட முறையில் எனக்கு மாறு
பாடு கிடையாது. ஆனால், சட்டத்தின் அடிப்படையில் இது
ஏற்றதா என்பதைத் தீர்மானிக்க, காத்திருக்கிற காரணத்தால்
அவசரப்பட்டு ஒரு முடிவ நான் மேற்கொள்ள விரும்பவில்லை.
இந்த அறக்கட்டளை அரசாங்க அதிகாரிகளைக் கொண்டு,
மேலாண்மைப் பொறுப்பை ஏற்று நடத்துகிற அந்தக் காரியம்
நீடிப்பதற்காகத்தான் இடையிலே ஆர்டினன்ஸ் வெளியிட வேண்
டிய நிலைமை ஏற்பட்டது. ஆர்டினன்ஸ் வெளியிட்ட காரணத்
தால் அதைத் தொடர்ந்து ஓராண்டு காலத்திற்கு நீடிப்பதற்கு
இந்தத் திருத்தச் சட்டம் வந்திருக்கிறது. அதை இந்த அவை
ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.
அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் திரு. வீரையன் அவர்கள்
'ஆப்பரேஷன் பிளாக்— போர்டு' பற்றி இதிலே பேசினார்கள்.
இந்தச் சட்டத்தில் அதைப் பேசுவது அவ்வளவு நியாயம் அல்ல.
இருந்தாலும் அவர்களுக்கு இருக்கிற ஆதங்கத்தின் காரணமாகப்
பேசினார்கள். அது ஏற்கெனவே மத்திய அரசு கொண்டு வந்த
ஒரு திட்டத்தின் அடிப்படையில் இன்னின்ன கல்வித்துறை
அதிகாரிகள், மத்திய அரசைச் சார்ந்தவர்களும் இடம்பெற்று,
ஒரு நான்கைந்துபேர் கொண்ட குழு, இந்தப் புத்தகங்களைத்
தேர்ந்து எடுத்துள்ளனர். இவை எல்லாப் பிள்ளைகளும்



கட்டாயமாகப் படிக்கிற பாடமாக அல்ல, நூலகத்திலே வைக்
கிற புத்தகங்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு இருக்கிற காரணத்
தால் எல்லாப் புத்தகங்களும் முழு அளவுக்குப் பக்கம், பக்கமாகப்
பார்த்துவிட்டு தேர்ந்தெடுக்க அந்த அதிகாரிகளுக்கு வாய்ப்பு
கிடையாது. பெரும்பாலான புத்தகங்கள், பிள்ளைகள் படிக்கக்
கூடிய புத்தகமா என்று பார்த்து 150, 200 புத்தகங்கள் தேர்ந்
தெடுத்து, அதைவிட அதிக புத்தகங்களைத் தேர்ந்தெடுத்து
அவற்றை அனுப்பி இருக்கிறார்கள். ஏதேனும் ஒன்றிரண்டு
புத்தகத்தில் நாம் ஒப்புக்கொள்ள முடியாத ஒன்றிரண்டு கருத்து
இருக்குமானால், அந்தக் கருத்து இருக்கிற புத்தகத்தை வேண்டு
மானாலும் திரும்பிப் பெற்று விடலாம். ஆனால், நூலகத்திலே
வைக்கப்படுகிற புத்தகமே தவிர, இது பிள்ளைகள் கட்டாய
மாகப் படிக்க வேண்டிய பாடப் புத்தகம் அல்ல. ஒன்றிரண்டு
குறைகள் இருக்கக்கூடும். ஆனால், இது காரணமாகவே எல்
லாமே குறையாக நடைபெற்றது என்று— நான் பொறுப்பேற்ப
தற்கு முன்னாலே தொடங்கி நடைபெற்றாலும் கூட— அப்படி
நான் அறுதியிட்டு ஒரு குற்றச்சாட்டைச் சொல்ல என்னால
முடியாது.

இரண்டாவது, நீதிமன்றத்திலே சிலர் வழக்கிற்குச் சென்றார்
கள். அந்த வழக்கு முழு அளவிலே விசாரிக்கப்பட்டது. வழக்கை
விசாரித்த நீதிபதி இந்தக் குழு அந்தப் பாடப் புத்தகங்களைத்
தேர்ந்தெடுத்த முறையை ஏற்றுக் கொண்டிருக்கிறார். புத்தகங்
களிலே இப்போதும் இரண்டொரு குறைபாடுகள் இருக்கலாம்.
பாடப் புத்தகங்களாக வருவதிலேயே இரண்டொரு குறைபாடு
வந்துவிடுகிறது. எனவே, நூலகத்திற்குப் புத்தகங்கள் தேர்ந்து
எடுப்பதிலே உள்ள குறைபாடுகள் பற்றி சில பத்திரிகைகள்
பெரிதாக எழுதுகின்றன. ஏனென்றால், அவர்கள் அப்படி
அவ்வளவு நுணுக்கமாகக் கவனித்து எழுதக்கூடிய வாய்ப்பு
கிடைக்குமானால் எழுதாமல் இருக்கமாட்டார்கள். அது அவர்
களுடைய கடமை. ஆனால் இந்த முறையில் நூலகத்திற்குப்
புத்தகங்கள் தேர்ந்து எடுக்கிறபோது, பக்கம், பக்கமாக
எந்தக் குறையும் இல்லாமல் படித்துப் பார்த்துத் தேர்ந்தெடுக்க
பெரும்பாலும் வாய்ப்பு கிடையாது என்பதை இந்த அவையிலே
உள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்கள் என்று நம்பு
கிறேன். அந்தக் குறையும்கூட இல்லாமல் இருக்க அடுத்த முறை
தேர்ந்தெடுக்கிறபோது என்ன செய்வது என்பதையும் பரிசீலிப்
பேன் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, இந்தத் திருத்தச்
சட்டத்தை வேறு வழியில்லாத காரணத்தால் இந்த அவை ஏற்றுக்
கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (குறுக்கீடு)

**திரு. கோ. பூவராகன்** : ஒரு கிளாரிபிகேஷன். இது சம்பந்த
மாக நீதிமன்றத்திலே ஒரு தீர்ப்பு வழங்கிவிட்ட பிறகு, முன்னாலே
இருந்த அரசு உயர்நீதி மன்றத்திற்கு, தடையைக் கோரியிருக்றது.
இப்போது புதிய அரசு, நம்முடைய அரசினுடைய நோக்கம்
வேறுவிதமாக இருக்கிறது. அதனாலே, அந்தத் தடையை நீக்கிக்
கொள்வதற்கு இதுவரையில் ஏதாவது முயற்சி எடுக்கப்பட்டதா ?
மனுக்கள் போடப்பட்டதா ? இனிமேலாவது போடுவதாக
ஏதாவது உத்தேசம் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

13.30 மணி [1990 சனவரி, 27

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாற்றுத்தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத் தீர்ப்பு மட்டும் இருக்குமானால் அந்த தடையை நீக்கிக்கொள்ளகூட அரசு முயற்சிக்கலாம். உச்ச நீதிமன்றத்திலே இதே தொடர்பான வழக்கு பல கட்டத்தில் இருக்கிற காரணத்தாலும் ஒரு வழக்கு பின்னை இருக்கும்போதும் ஒரு கட்டத்திலே மட்டும் இந்த பின்னிப் விட்டா செய்வது பிரச்சினையை முழுவதுமாகத் தீர்க்காது. அரசு பிரச்சினை தீர்வதற்கு என்ன செய்வது என்ற கண்ணோட்டத்தில் இந்த அரசு ஆய்வு செய்கிறது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) : விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானம் பேரவையின் அனுமதியோடு திரும்பப்பெற்றுக் கொள்ளப்பட்டது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) பேரவை முன்னுள்ள கேள்வி :

''1990 ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 2/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேறப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய, பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 மற்றும் முகப்புரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

நெடுந்தலைப்பு.

மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

''நெடுந்தலைப்பு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும்''.



1990 சனவரி 27]

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன். :

"In the enacting formula, *for* the words 'Fortieth Year' substitute the words 'Forty-first year''.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு திருத்தப்பெற்றப்படி, பேரவையின் முடிவிற்கு விடப்பெறறு, நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''1990-ஆம் ஆண்டு பச்சையப்ப அறக்கட்டளை மற்றும் பட்டியல் பொதுப் பொறுப்பாட்சியமைப்புகள் மற்றும் நிலைக் கட்டளைகள் (மேலாண்மையை மேற்கொள்ளுதல்) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 2/1990) திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

**(உ) கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு 1990.**

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு * (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 6/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்''.

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாற்றுத்தலைவர் அவர்களே, நான் இந்தச் சட்ட முன்வடிவை வன்மையாக எதிர்க்கிறேன்.

The Ministry of Co-operation—not the Minister—is ever pregnant but never delivers.

*25-1-1990 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.

என்ற கதையாக இருக்கிறது. அவர்கள் எப்போதும் கர்ப்பமாக
இருக்கிறார்கள் ஆனால் பிரசவம் மட்டும் ஒரு போதும் நடப்பது
இல்லை. (சிரிப்பு).

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : Hon. Speaker,
Sir, Sue was pregnant uuring the Governor's rule— (சிரிப்பு).

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாற்றுத்தலைவர் அவர்
களே, இந்த முறையாவது பிரசவம் நடக்க வேண்டும் என்று
நான் ஆவலோடு எதிர்பார்க்கிறேன். கடந்த முறை இந்த
சட்டமுன்வடிவு கொண்டு வரப்பட்டபோதும் இதேபோல் 10
மாத கால அவகாசம் கேட்டீர்கள். இதுதான் கடைசி முறை
என்று சொன்னீர்கள். ஆனால் In a democratic set-up, bureauratic
rule is a misrule என்பதை இந்த அரசுக்கு நினைவுறுத்த வேண்டிய
கடமையில் நான் இருக்கிறேன். கூட்டுறவுச் சங்கங்கள் இந்த
அரசினுடைய பொருளாதார, தொழில் உற்பத்தியில் மிகப் பெரிய
பங்கை ஏற்றுக்கொண்டு இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய்
வரவு-செலவு செய்யப்படுகின்றன. இந்த சூழ்நிலையில் இந்த
கூட்டுறவுச் சங்கங்களை மீண்டும் மீண்டும் அதிகாரிகள் வர்க்கத்
திடம் நிரந்தரமாக அடகு வைக்க வேண்டுமா என்பதை
எல்லாம் நீங்கள் சிந்திக்க வேண்டும். அதுவும் கைத்தறி
கூட்டுறவுச் சங்கங்கள் ஏறத்தாழ 2 ஆயிரம் சங்கங்கள் இருக்
கின்றன. அதில் 10, 15 சங்கங்களுக்கு ஒரு டெக்ஸ்டைல்
இன்ஸ்பெக்டரை தனி அதிகாரியாக போட்டிருக்கிறார்கள். அன்
றாட நிர்வாகம், வரவு, செலவு, கடன் கொடுப்பது,
கடன் வாங்குவது, நூல் கொள்முதல் செய்வது, நெய்த
துணிகளை விற்பது போன்ற வேலைகளை 15 கூட்டுறவுச்
சங்கங்களுக்கு ஒரு தனி அதிகாரியால் செய்ய முடியுமா என்பதை
நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அதிலே சில You have
created a breeding ground for corruption. ஜரிகை வாங்கு
கிறார்கள்.

13-35 மணி

ஜரிகை ஒரு கிலோ 25 ஆயிரம் ரூபாய் விற்கிறது.
அதேமாதிரி காப்பியடிக்கப்பட்ட ஜரிகை வெறும் 25 ரூபாய்க்கும்
இருக்கிறது. அதைப்போல டை மெட்டீரியல்ஸ், அதாவது
வண்ணக் கலவைகள் ஒரு கிராம் 10 ஆயிரம் ரூபாய்க்கும்
விற்கக்கூடிய வண்ணக் கலவை இருக்கிறது. அதேமாதிரி தோற்றம்
அளிக்கக்கூடிய வண்ணக்கலவை 10 ரூபாய்க்கும் இருக்கிறது.



இதையெல்லாம் வாங்கக்கூடிய அதிகாரத்தை ஒரு தனி அதிகாரியிடம் விட்டு வைத்திருக்கிறீர்கள். அதிலே நடக்கின்ற ஊழல் அழுகி நாற்றம் அடைகின்ற அளவிற்கு நடந்து கொண்டு இருக்றது. அந்தக் கூட்டுறவுத்துறை சங்கங்கள் அழிந்து போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இன்னும் நீங்கள் இந்த கால அவகாசத்தை நீட்டிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறீர்கள். அதற்கு என்ன காரணம் என்று எங்களுக்கு விளங்கவில்லை. ஒருவேளை தற்போது இருக்கின்ற பொலிடிக்கல் கிளைமேட், அதாவது அரசியல் தட்பவெப்பநிலை தங்களுக்கு சாதகமாக இல்லாததால் ஆளுங்கட்சி மீண்டும் இதிலே அதிகார வர்க்கத்தைத் திணிக்க நினைக்கிறதா என்று நாங்கள் தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறோம். இதை நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிலே தனி அதிகாரிகள் எத்தனைக் காலம் பணியாற்ற முடியும் ; அந்தக் கூட்டுறவு அமைப்புகளும், கூட்டுறவு இயக்கங்களும் இறந்து போகக் கூடிய ஒரு சூழ்நிலை வராதா என்பதையும் நீங்கள் தயவு செய்து சிந்திதுப் பார்க்க வேண்டும். நான் அதற்கான ஒரு ஆலோசனையை இந்த அரசுக்குக் கொடுக்க விரும்புகிறேன். நீங்கள் தேர்தல் நடத்த தயாராகும்வரை ஒரு ஆல்பார்ட்டி போர்டு, அதாவது எல்லா அரசியல் கட்சிகள், சமூக இயக்கங்கள், அதிலுள்ள தொழில் வல்லுநர்கள், கூட்டுறவு இயக்காளர்கள் ஆகியோரைக்கொண்ட ஒரு ஆல்பார்ட்டி போர்டை நியமனம் செய்ய முடியுமா? அந்த ஆல் பார்ட்டி போர்டு ஸ்பெஷல் ஆபீசருக்கு ஆலோசனை வழங்கி, அவருடைய நடவடிக்கைகளை கண்காணித்து, அதனாலே ஏதாவது தவறுகள் ஏற்பட்டால் அரசுக்கு சுட்டிக்காட்டக்கூடிய வாய்ப்பை நீங்கள் தயவு செய்து உருவாக்கித் தருவீர்களா என்று நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

கல் உடைப்போர் சங்கம் என்று ஒன்று இருக்கிறது. அந்த கல் உடைப்போர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்கிற தொழிலாளர்கள் மிகவும் கீழ்மட்ட நிலையிலே வாழக்கூடியவர்கள். அந்தக் கல் குவாரிகளை உடைக்கும் போது, அவர்களுக்குத்தான் கொடுக்க வேண்டுமென்பது இயல்பு இப்போது என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று சொன்னால். . . .

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல ஆலோசனையைச் சொல்லுகிறார். இது அவர்களுடைய தனிப்பட்ட யோசனையா அல்லது அவருடைய கட்சியினுடைய யோசனையா? ஏனென்றால் நாளைக்கு. உறுப்பினருடைய கருத்தை அரசாங்கம் ஏற்கிறது என்றால், மறுபடியும் காங்கிரஸ் கட்சியிலே இருந்து குறை கூறக்கூடாது.

[திரு. ஆற்காடு நா. வீராசாமி]

ஏனென்றால், தேர்தல் நடத்துவதற்கு நாங்கள் தேதியை நிர்ண
யித்து விட்டோம். ஆனால் காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர்
தான் அதிலே முறைகேடுகள் நடந்ததாகவும் உறுப்பினர்களை
சேர்ப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றும் சொல்லி
வரையிலே போய் புகார் மனு கொடுத்து தேர்தல் ஆளுநர்
வைக்கவேண்டியிருந்தது. எனவே, தாங்கள் ஒத்தி
கருத்து தங்களுடைய சொந்தக் சொல்கின்ற
யினுடைய கருத்தா? கருத்தா அல்லது கட்சி

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ்:
என்பது எங்கள் இயக்கத்தினுடைய ஆல் பார்ட்டி போர்டு
அதையே காரணமாக வைத்துக்கொண்டு, கருத்துதான். ஆனால்
போட்ட மாதிரி எல்லோரையும் ஆளுங்கட்சி டாஸ்க்போர்சுக்கு
போட்டு நிரப்பி விடக்கூடாது. ஆல் உறுப்பினர்களாகப்
sence, representing all political parties. பார்ட்டி என்பது, in true
அபிப்ராய பேதம் இல்லை. அதிலே ஒன்றும் எனக்கு
போர்டு தேர்தல் நடத்துகின்ற அந்த மாதிரி ஒரு ஆல் பார்ட்டி
நான் கேட்டுக் கொள்கிறேன். வரையில், போடவேண்டுமென்று

கல் உடைப்பு கூட்டுறவுச் சங்கங்களைப் பற்றி,
முதலமைச்சர் அவர்கள் எதிர்க்கட்சித் தலைவராக நமது
போதுகூட இந்த அவையிலே பேசியிருக்கிறார்கள். இருந்த
நான் குறிப்பாக சொல்லவேண்டுமென்று அதிலே
திரிசூலத்திலே கல் குவாரி இருக்கிறது. சொன்னால்,
பகலாக இல்லீகல் குவாரிங்ஸ் நடந்துகொண்டிருக்கின்றன. அங்கே இரவு
கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. அங்கே
தொழிற் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது. அன்னை இந்திரா
ரால் அங்கே ஒரு கூட்டுறவுச் சங்கம் ஆதிதிராவிடர் பெய
கூட்டுறவுச் சங்கங்களுக்கு அந்த வாய்ப்பினைக் இருக்கிறது. அந்தக்
சென்னைக்கு அருகிலே இருக்கின்ற திரிசூலத்திலே கொடுக்காமல்,
500 லாரி கற்கள் அன் ஆத்தரைஸ்டு குவாரி தினசரி இரவு
ளுக்குத் தகவல் கொடுத்திருக்கிறார்கள். நடப்பதாக எங்க
மைச்சர் அவர்கள் இங்கே எதிர்க் கட்சித் நம்முடைய முதல
போது அப்போதிருந்து ஆளுங்கட்சியைக் தலைவராக இருந்த
பேசியிருக்கிறார்கள். அவர்கள் செய்ததாக குற்றம் சாட்டிப்
அதே தவறை இப்போது இவர்கள் சொல்லப்பட்ட
கேட்பதற்கு நாங்கள் ஆசைப்படுகிறோம். செய்கிறார்களா என்று
மீட்டு, கூட்டுறவுச் சங்கங்களுக்கே கொடுக்க வேண்டும். அதையெல்லாம்
கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக உண்மையான அந்தக்
உணர்வு வளருவதற்கு நீங்கள் ஆதரவு ஒரு கூட்டுறவு
கொண்டு அடுத்த முறையாவது, தரவேண்டுமென்று கேட்டுக்
வேண்டுமென்று மாண்புமிகு இந்தத் தேர்தலை நடத்த
கொண்டு அமர்கிறேன். அமைச்சர் அவர்களைக் கேட்டுக்



திரு. வி. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களுக்கு தனி அதிகாரிகள் நியமன
சட்ட முன் வடிவு சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைக் கூற
வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.
கூட்டுறவுத் தேர்தலை எவ்வளவு விரைவாக நடத்த வேண்டுமோ
அவ்வளவு விரைவாக நடத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே
நான் கேட்டுக் கொள்கிறேன். அதைப்போல, கூட்டுறவு
சங்கத் தேர்தல்கள் நடைபெறுகின்றபோது தொகுதிவாரியான
தலைவரை அந்தத் தொகுதியிலே அங்கத்தினராகப்
போட்டு தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். கூட்டுறவுச்
சங்கத்திலே உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் பெண்
களுக்கோ அல்லது தாழ்த்தப்பட்டவர்களுக்கோ ஒரு தனிப்
பிரிவு ஒதுக்கப்படுவதில்லை. மொத்தமாக, அனைத்துத் தொகுதி
களிலும் அவர்கள் நின்று வெற்றி பெறவேண்டிய சூழ்நிலை இருக்
கிற காரணத்தை மாற்றவேண்டுமென்று கேட்டுக்கொள்வதோடு,
கூட்டுறவுச் சங்கத்தலைவரை பொது வாக்காளர்கள், சங்க உறுப்
பினர்கள் தேர்ந்தெடுக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க
வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். கடன் பாக்கி
இருக்கக்கூடிய அங்கத்தினர்களுக்கு வாக்களிக்கும் உரிமை
வழங்கப்படாமல் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல விவசாயிகளுக்கு கடன் வழங்குகின்ற காலத்தை
நீட்டிக்காமல், உடனடியாக விவசாயிகளுக்குக் கடன் வழங்க
ஏற்பாடு செய்ய வேண்டும். இன்று விவசாய முறையிலே
மாறுதல் ஏற்பட்டிருக்கிறது.

*13.40 மணி*

இப்போது நேரடி விதைப்பு முறை அறிமுகமாகியிருக்கிறது.
காவிரி நீர் வராத இந்த நிலையில், தண்ணீருக்கு நெருக்கடி
ஏற்பட்டிருக்கிறது. மழையை நம்பி உரமிட்டு விடுகிறார்கள்.
கடன் வழங்குவதற்கும், சாகுபடி செய்யும் காலத்திற்கும், உரம்
இடும் காலத்திற்கும் சம்பந்தமே இல்லாமல், விவசாயிகள் கஷ்டப்
படுகின்ற நிலைமையை அரசாங்கம் முன்வந்து மாற்ற வேண்
டும். அது மட்டுமல்ல, கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கும் இடங்
களில் தூரம் குறைக்கப்படவேண்டும். ஏறத்தாழ கூட்டுறவுச்
சங்கத்திற்கும், அங்கத்தினர்கள் குடியிருப்பிற்கும் கிட்டத்தட்ட
10 கிலோ மீட்டர் தூரம் இருக்கிறது. இந்த தூரத்தைக்
குறைத்து சங்கங்களை அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன். உரம், பூச்சி மருந்து, விதைகள் எல்லாம்
ஒரே இடத்தில் கிடைக்கும் வகையில் இருந்தால் நல்லது.
அதைப்போல, கூட்டுறவுச் சங்க கட்டிடங்கள், அலுவலகம்
எல்லாம் ஒரே இடத்தில் இருக்க வேண்டும். அப்படி முழு
மையாக இருந்தால் எல்லா அலுவலர்களும் ஒன்றாக சேர்ந்திருந்
தால் அங்கே பணியாற்றுகிற அலுவலர்களுக்கும் நலமாக
இருக்கும். விவசாயிகளுக்கும் பலன் ஏற்படும். ஒரே இடத்தில்

கோடவுனும். அலுவலகமும் இருப்பதால் அங்கே பணியாற்று
கிற ஊழியர்களுக்கு பல்வேறு அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.
உடல்நல பாதிப்பும் ஏற்படுகிறது. எனவே, அதே இடத்தில
பொருள் சேமிப்புக் கிடங்கு தனியாகவும் அலுவலகம் தனி
யாகவும் பிரித்து அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு
வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமைகிறேன்.

திரு. எம். தங்கவேல் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த கூட்டுறவு தனி அதிகாரிகள் நீடிப்புக்கு
வகை செய்கிற இந்த மசோதாவில் எனக்குப் பேச வாய்ப்பு
அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு,
கூட்டுறவு தனி அதிகாரிகளை பதவி நீடித்துக்கொண்டு போகிற
இந்த முறை ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிற
உங்கள் அரசு செய்கிற காரியம் இல்லை. காரணம், கூட்டு
றவுத் தேர்தல்களை பல முறை நீங்கள் அறிவித்தும், இதுவரை
தேர்தல் நடத்தாமல் இருப்பது மட்டுமல்லாமல், பால்வளச்
சங்கங்களுக்கு ஆலோசனைக் குழு உறுப்பினர்கள் என்று இரண்டு
பேரைப் போட்டு, அவர்கள் மூலமாக திராவிட முன்னேற்றக்
கழகத்தைச் சேர்ந்தவர்களை புதிய பால் வள சங்கங்களுக்கு
உறுப்பினர்களாகச் சேர்த்துத் தேர்தல் நடத்தலாம் என்று
இருந்தீர்கள். ஆனால் அதுவும் நடைபெறவில்லை. இது
மாதிரி நடத்தாமல், நீடித்துக்கொண்டு போவதால், கூட்டுறவுச்
சங்கங்கள் மூலமாக காய்கறி கொடுக்கிற திட்டம் இன்றைக்கு
முறைப்படி செயல்படாமல் தமிழகத்தில் எல்லா காய்கறி சங்கங்
களும் மூடிக் கிடக்கின்றன. இதை மாற்றுவதற்கு ஜனநாயக
முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட உங்கள் அரசு ஜனநாயக முறை
யில் கூட்டுறவுச் சங்கத் தேர்தலை நடத்தாமல் அதிகாரிகளின்
பதவிக் காலத்தை நீடித்துக் கொண்டு போகாமல், தேர்தலை
நடத்த வேண்டுமென்று கேட்டு, இந்த தனி அலுவலர்கள்
சட்டத்தை எதிர்த்து அமைகிறேன்.

திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களைப் பொறுத்தவரை
யில், ஏறத்தாழ 14 ஆண்டு காலமாக மாநில கூட்டுறவுச்
சங்கமாக இருந்தாலும், மாவட்ட கூட்டுறவுச் சங்கமாக இருந்
தாலும், அதே மாதிரி, மாநில கூட்டுறவு வங்கியாக இருந்
தாலும், மார்க்கெட்டிங் சொசைட்டியாக இருந்தாலும்,
மாநில நில வள வங்கியாக இருந்தாலும், இவைகள் எல்லாம்
தனி அதிகாரிகளுடைய நிர்வாகத்தில் தொடர்ந்து இருந்து
வருகிறது. எனவேதான் எவ்வளவுதான் சிறப்பான தனி
அதிகாரியாக இருந்தாலும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு நிர்
வாக சபை அதைவிட எவ்வளவோ மேலானது என்று அனேகமாக
எல்லோரும் ஒத்துக்கொள்வார்கள் என்று நினைக்கிறேன். அந்த
முறையில் திரும்பத் திரும்ப தேர்தல் நடத்துவோம் என்று
சொல்லி அதிகாரிகளைப் போடுவது எத்தனையோ தடவை
யாக நீடித்துக்கொண்டு வந்து இதுவரை 14 ஆண்டு 11 மாதம்



வரை நீடித்துக்கொண்டு இருக்கிறோம். ஏறத்தாழ டிசம்பர்
மாதம் வரையிலும் கால நீடிப்புக்கு இந்த மசோதா வகை
செய்கிறது. இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
கொண்டு வந்திருக்கிற தீர்மானத்தையொட்டி, காங்கிரஸ்
கட்சியினுடைய உறுப்பினர் பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள்
ஒரு கருத்தைச் சொன்னார், சர்வ கட்சி கமிட்டியைப்
போடலாமா என்று. இப்போது இருக்கிற தனி அலுவலர்
களை விட அது மோசமாகப் போய்விடும் என்று அச்சப்படு
கிறேன். ஆகவே இந்த யோசனை சரியான யோசனை அல்ல
என்பது என்னுடைய கருத்து. இப்போதுகூட, பல கூட்டுறவுச்
சங்கங்களுக்கு ஆலோசனைக் குழு அமைத்தோம். குறிப்பாக
பால் வள கூட்டுறவுச் சங்கங்களுக்கு, அதைப்போல கைத்தறிச்
சங்கத்திற்கு எல்லாம் ஆலோசனைக் குழு போடப்பட்டிருக்கிறது.
இந்த ஆலோசனைக் குழுக்களையெல்லாம் அறவே நீக்கிவிட
வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். ஆலோசனைக்
குழு தேவையில்லை. தேர்தலை குறிப்பிட்ட காலத்திற்குள்,
டிசம்பர் மாதத்திற்குள் நடத்துங்கள். ஏனென்றால், இந்த
கூட்டுறவுச் சங்கங்கள் மிகப் பெரிய சேவையை நாட்டுமக்களுக்கு
செய்து கொண்டிருக்கின்றன. ஸ்தலத்தில் உள்ள சமூக
சேவையில் ஆர்வம் காட்டுகிறவர்கள் கொண்ட அமைப்பாகத்தான்
பல இடங்களில் அமைகின்றன. அவர்களால்தான் இது நடத்தப்
படுகிறது. அதில் தவறுகள் இருந்தால் பணம் சம்பந்தப்பட்ட
கையாடல்கள் இருந்தால் சட்டத்திற்குப் புறம்பாக காரியங்கள்
நடந்தால் யாராக இருந்தாலும் கடுமையான நடவடிக்கை
எடுக்கலாம்; எடுக்கவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்

13.45 மணி

ஆனால் அதே நேரத்தில் இதை ஒரு அரசியலாக ஆக்க
வேண்டிய அவசியம் இல்லை. கூட்டுறவுச் சங்கங்களைப்
பொறுத்தவரையில் பல்வேறு தனி அலுவலர்கள் வந்ததன்
காரணத்தால் நன்றாக இருந்த பல சங்கங்கள் நஷ்டத்திற்குச்
சென்று, பிறகு மிக மோசமான நிலைமைக்கு வந்திருக்கின்றன.
எனவே நான் ஒரு ஆலோசனை கூற விரும்புகிறேன். கைத்தறிச்
சங்கமாக இருந்தாலும் சரி, பால் வழங்கும் சங்கமாக இருந்
தாலும் சரி ஆலோசனைக் குழுக்களை எல்லாம் அகற்றிவிட்டு
தேர்தலை நடத்த வேண்டும்.

அடுத்து, அதிலே சம்பந்தப்பட்டவர்களைத்தான் உறுப்பினர்
களாகச் சேர்க்க வேண்டும். இப்போது பல்வேறு புகார்கள்
வருகின்றன. கைத்தறி நெசவாளர் சங்கத்திலே தறியே
இல்லாதவர்களும், தறி நெய்யத் தெரியாதவர்களும் எல்லாம்
உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அதேமாதிரி பால்
வழங்கும் சங்கங்களைப் பொறுத்தவரையில் பல இடங்களில்
எந்தவிதமான சம்பந்தமும் இல்லாதவர்களும் உறுப்பினர்களாக
இருக்கிறார்கள். மாடும் இல்லை, பாலும் இல்லை, கறப்பதும்

இல்லை, வாங்குவதும் இல்லை. ஆயிரக்கணக்கானவர்கள் உறுப்பினர்களாக இப்படிப்பட்டவர்கள்
நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. சேர்க்கப்படக்கூடிய
சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆளுநர் ஆட்சிக்காலத்திலகூட
காலத்தில் அந்தச் சங்கங்கள் எல்லாம்
அதாவது 1976 ஆம் ஆண்டில் அவர்கள்
பெரிய அளவில் இருக்கின்ற மாநிலச் சங்கங்கள் கலைக்கப்பட்டன.
உள்ள கூட்டுறவு மத்திய வங்கிகள், நிலவள வங்கிகள், மாவட்டத்தில்
வற்றில் எல்லாம் தேர்ந்தெடுக்கப்பட்ட போர்டு முன்னர் போன்ற
ஆனால் ஆரம்பச் சுகாதார நிலையங்களைப் இல்லை.
அவை இருந்தன. பிரைமரி சொசைட்டி என்று பொறுத்தவரையில்
கின்ற கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய கூட்டுறவுச் சொல்லப்படு
பால வழங்கும் சங்கங்கள். சங்கங்கள்,
போன்றவற்றைப் பொறுத்தவரையில் நெசவுத் துறைச் சங்கங்கள்
ளைக் கவனித்து நடத்த வேண்டிய அன்றாடம் நிர்வாகத்
போர்டு இருந்தது. அதையும் இப்போது அதிலே நிர்வாக
மொத்தத்தில் எல்லாமே தனி அதிகாரிகளின் கலைத்து விட்டார்கள்.
வந்திருக்கின்றன. அந்தத் தேர்தல்களை நிர்வாகத்தின் கீழ்
தில அந்தத் தொழிலுக்குச் சம்பந்தப்பட்ட நடத்தக்கூடிய நேரத்
அந்த சம்பந்தப்பட்ட தொழிலில் ஈடுபட்டவர்கள்தான் அதாவது
பினர்களாக இருக்கவேண்டும். சம்பந்தம் இல்லாதவர்கள்தான் உறுப்
எல்லாம் நீக்கவேண்டும். தனி அலுவலர்கள் இல்லாதவர்களை
வரையில் அதாவது தேர்தல் வருகின்ற குறிப்பிட்ட காலம்
'ஆல் பார்ட்டி கமிட்டி' என்பது வகையில் இருக்கலாம்.
தேவையே இல்லை.

அடுத்து ரிசர்வேஷன் சம்பந்தமாக ஒன்றை நான்
விரும்புகிறேன். அது ரொம்ப வரவேற்கவேண்டிய சொல்ல
பெண்கள், தாழ்த்தப்பட்டவர்கள் ஆகியோருக்கு விஷயம்,
வீதத்தில் ரிசர்வேஷன் கொடுக்கவேண்டும் உரிய சத
அவசியம். அதைப் பொறுத்த வரையில் என்பது மிக மிக
நான் சொல்ல விரும்புகிறேன். ஒரு ஆலோசனையை
சட்டத்தை நீட்டிக்காமல் திருத்தங்களை இதற்கு மேலும்
வந்து, இதில் குறிப்பிட்டிருக்கிற சீக்கிரமாகக் இந்தச்
நடத்தி நிர்வாகக் குழுவினிடத்திலே காலத்திற்கு முன்பே கொண்டு
டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அவற்றை ஒப்படைக்க தேர்தலை
உறுப்பினர்கள் அனைவரையும் புதிதாகச் சேர்க்கப்பட்ட வேண்
கைப்பற்ற வேண்டும் என்பதற்காகச் அதாவது அந்த ஸ்தாபனங்களைக்
பினர்கள் யாராக இருந்தாலும் சேர்க்கப்பட்ட
வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அவர்கள் அனைவரையும் உறுப்
எல்லாம் செய்து அது ஒரு சிறந்த கூட்டுறவு நீக்க
செயல்படுவதற்கு உரிய ஏற்பாடுகளைச் ஸ்தாபனமாகச் இவற்றை
பணிவன்போடு நான் கேட்டுக் கொண்டு செய்யவேண்டுமென்று
முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் :
மாற்றுத் தலைவா அவர்களே, இன்றையதினம் மாண்புமிகு
மசோதாவைக் கொண்டு வருகிற நேரத்தில் இந்த
அல்லது அரசியல் உள்நோக்கத்தோடோ மகிழ்ச்சிகரமாகவோ
கொண்டு வரவில்லை.





சட்ட நிர்பந்தம் காரணமாகவும், சூழ்நிலையின் கட்டாயத்
தின் காரணமாகவும்தான் இந்தத் திருத்தச் சட்டத்தை இந்த
அவைக்கு முன்னாலே வைத்து இருக்கிறோமே அல்லாமல்
தொடர்ந்து இந்தக் காலாகாலத்திறகும் நீட்டிக்க வேண்டும்
என்ற அடிப்படையில் இந்த மசோதா கொண்டு வரப்படவில்லை
என்பதை முதலிலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.
இந்த மசோதா இப்போது மூன்று தனி அதிகாரிகளின் நியமனச்
சட்டத்தில் திருத்தங்களைக் கொண்டு வருவதற்காக கொண்டு
வரப்பட்டு இருக்கிறது. ஒவ்வொரு திருத்தச் சட்டத்திலும்
10 மாத கால அவகாசம் கொடுத்து இந்தச் சட்டம் கொண்டு
வரப்பட்டு இருக்கிறது. இந்த 10 மாத கால அவகாசத்திற்கு
முன்னால் தேர்தல்கள் எல்லாம் முடிக்கப்படும் என்று தெளி
வாகவே தெரிவிக்கப்பட்டு இருக்கிறது.

வருகிற ஆகஸ்ட் மாதத்தில் தேர்தல் தொடங்க இருக்கிறது,
நவம்பர் மாதத்தில் பிரைமரி கூட்டுறவுச் சங்கங்கள் அதாவது
பிரதம கூட்டுறவுச் சங்கங்களுக்கெல்லாம் தேர்தல்கள் முடிக்கப்பட
இருக்கின்றன. என்னுடைய அருமை நண்பர் மாண்புமிகு
உறுப்பினர் திரு. ஆல்போன்ஸ் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில்
எதற்காக நீங்கள் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து தனி
அதிகாரிகளின் காலக்கெடுவை நீட்டித்து இருக்கிறீர்கள் என்று
கேட்டார்கள். அவர்களுக்கு மட்டும் விளக்கம் சொல்வதை
என்னுடைய கடமையாகக் கருதுகிறேன். 3, சூலை 1989 ஆம்
தேதியன்று ஆளுநரால் கொண்டு வரப்பட்ட அவசரச்சட்டம்
2 நவம்பர் 1989 ஆம் தேதியன்று சட்டமாக்கப்படுகிறது.
அந்தச் சட்ட ஷரத்துக்களின்படி 30 சதவீதம் பெண்களுக்கும்
18 சதவீதம் தாழ்த்தப்பட்டோர் மற்றும் மலைவாழ் மக்க
ளுக்கும் இடங்கள் ஒதுக்கப்படுகிற சூழ்நிலை அந்தச்
சட்டத்தின்மூலம் உருவாக்கப்படுகிறது.

13.50 மணி

ஆனால் இந்தத் தேர்தலை நடத்துவதற்கு சட்டங்களும் விதிகளும்
பரிசீலிக்கப்படுகின்ற நேரத்தில் இந்த 30 சதவிகித ஒதுக்கீடு,
தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களை மையமாக வைத்து
எடுப்பதா அல்லது ஒட்டுமொத்தமாகவே போர்ட் ஆப் டைரக்
டர்கள் என்கின்ற அந்த எண்ணிக்கையிலே இருந்து 30 சதவிகிதம்,
18 சதவிகிதம் என்பதை தேர்ந்தெடுப்பதா என்பது ஒரு கேள்விக்
குறியாக இருக்கிறது. அதற்கு விளக்கம் தருகின்ற அளவில்
சட்ட விதிகளோ, சட்டத்திலோ இடம் இல்லாத காரணத்தி
னாலே, அதையும் தீர்க்கமாக ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டிய
சட்டத் திருத்தங்கள் கொண்டு வரவேண்டிய அவசியம் ஏற்படு
கிறது.

அதே போன்று 30 சதவிகிதம் பெண்களுக்கும், 18 சதவிகிதம்
தாழ்த்தப்பட்ட மலை ஜாதி வகுப்பினரோ இல்லா சூழ்நிலை
இருக்கிறது. அப்படிப்பட்ட சூழ்நிலைகளுக்கு இந்த ஒதுக்கீடு
இப்போதுள்ள சட்ட விதிகளின்படி இருக்குமானால், அவர்கள்
இல்லை என்றால் அந்த இடங்கள் எல்லாம் காலியாக இருக்கக்
கூடிய சூழ்நிலை இருக்கிறது. காலியாக அந்த இடங்கள்
இருக்குமானால், அது உள்ளபடியே ஜனநாயக அடிப்படையிலே
தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு குழுவாக அமையாது என்கிறகாரணத்
தினாலேதான் இந்தச் சங்கடங்களைப் போக்குவதற்காகவும்,
நிலைமைகளை மாற்றி அமைப்பதற்காகவும் சட்டத்திலே
விதிகளிலே திருத்தங்களைக் கொண்டு வருவது கட்டாயமாக
இருக்கின்ற காரணத்தினாலே சட்டத் திருத்தம் கொண்டுவர
அவகாசம் எடுத்து இந்தத் திருத்த மசோதாவை இங்கே கொண்டு
வந்திருக்கிறோம்.

அடுத்து, செலவினங்களை குறைத்திடவேண்டும். செல
வினங்களை குறைக்கவேண்டுமென்பது ஒரு முக்கியமான அம்ச
மாகும். ஆளுநர் காலத்திலே 1988 ஆம் ஆண்டு இரண்டு
முறை தேர்தல் அறிவிக்கப்பட்டு ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.
அப்போது எவ்வளவு செலவாகி இருக்கிறது என்றால் லட்சக்
கணக்கான ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. அது
தவிர்க்கப்படவேண்டும். இந்த தேவையில்லாத செலவினங்கள்
கட்டுப்படுத்தப்பட வேண்டும். இது மக்களுக்காக, ஏழை
யெளிய மக்களுக்காக, வறுமைக் கோட்டிற்கு கீழே இருக்கின்ற
மக்களுக்காக, விவசாய மக்களுக்காக பயன்படுத்தக்கூடிய சங்கம்
என்கிற காரணத்தினாலேயே, தேர்தல் என்ற பெயரில் லட்சக்
கணக்கான ரூபாய்கள் செலவிடப்படுவதை தவிர்க்கவேண்டும்
என்ற நோக்கத்தின் அடிப்படையிலே இன்னொரு மாறுதலையும்
விதிகளிலே செய்ய வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.
எனவே இந்தச் சட்டம் திருத்தங்களை செய்வதற்கு கால
அவகாசம் தேவைப்படுகின்ற காரணத்தினாலே இன்றைய தினம்
தெளிவாகவே சொல்லியிருக்கிறோம். கால வரையறை இல்லாமல்
நாங்கள் ஒத்தி வைக்கவில்லை. காலத்தைச் சொல்லித்
தான் இன்றையதினம் இந்த தனி அதிகாரிகளுடைய காலம்
நீடிக்கப்படுகிறது. ஆகஸ்ட் மாதத்திலே தேர்தல் தொடங்க
இருக்கிறது. நவம்பர் மாதத்திலே பிரதம கூட்டுறவு வங்கி
யினுடைய தேர்தல்கள் எல்லாம் முடிவுபெறும். அதற்கு அடுத்து
மத்திய மாநில கூட்டுறவு அமைப்புகளுக்கான தேர்வுகள்
எல்லாம் தொடர்ந்து படிப்படியாக நடைபெறும் என்று தீர்க்க
மாகவே இங்கே தெளிவாக்கியிருக்கிறோம். எனவே உறுப்
பினர்கள் எந்தவிதமான ஐயப்பாடும் கொள்ளத் தேவையில்லை.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. அழகர்சாமி அவர்கள்
தெரிவித்ததைப் போல, இதிலே ஐயப்பாட்டிற்கு கிஞ்சித்தும்
இடம் இல்லை. தெளிவாக சொல்கிறேன். தேர்தல் ஆகஸ்ட்
மாதத்திலே ஆரம்பிக்கப்படும் என்பதையும் நான் இங்கே



தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அடுத்து நம்முடைய
நண்பர் பேசுகின்ற நேரத்தில், திரு. தங்கவேலு அவர்கள்
பேசுகின்ற நேரத்தில், இந்த தேர்தல் பற்றி இங்கே சில
கருத்துக்களைக் குறிப்பிட்டார்கள். இதிலே எந்த கட்சியும்
இப்போது தனி அலுவலர்களுடைய கால நீட்டிப்புக்கு சம்பந்தம்
இல்லை என்று சொல்ல முடியாது. காரணம் அ.தி.மு.க.
ஆட்சியிலே இருந்த நேரத்திலேதான் 1979 ஆம் ஆண்டு ஒரு
மசோதாவை தாக்கல் செய்து கூட்டுறவுச் சட்டங்களை நாங்கள்
புதிய முறையில் அமைக்கப் போகிறோம் என்று சொன்னார்கள்.
அதற்குப் பின்னாலே அதுகாலாவதி ஆகிவிட்டதால் 1981 ஆம்
ஆண்டு மீண்டும் அந்த மசோதா தாக்கல் செய்யப்பட்டு 1983 ஆம்
ஆண்டுதான் அது சட்டமாக்கப்பட்டது. சட்டமாக்கப்பட்ட
பின்னாலே 5 ஆண்டுகள் கழித்து 1988 ஆம் ஆண்டுதான், அதுவும்
கூட. ஆளுநர் ஆட்சியிலே இருக்கின்றபோதுதான், விதிகள்
தயார் செய்து அறிவிக்கப்பட்டது. ஆகவே நீங்களே ஏறத்தாழ
8 ஆண்டு 10 ஆண்டு காலம் இந்தச்சட்டத்தை, சட்ட விதிகளை
உருவாக்க எடுத்துக்கொண்டிருக்கிறீர்கள். அத்தோடு ஆளுநர்
ஆட்சி பற்றி நம்முடைய அருமை நண்பர் திரு. ஆல்போன்ஸ்
அவர்களுக்கு நன்றாகத் தெரியும். மத்தியிலே காங்கிரஸ் கட்சி
ஆட்சி இருந்த காரணத்தினாலே, தாராளமாக அதை காங்கிரஸ்
ஆட்சி என்று கூட குறிப்பிடலாம். எனவே அவருடைய கால
கட்டத்திலே இரண்டு முறை அறிவிக்கப்பட்டிருக்கிறது. இரண்டு
முறைகள் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இதை சொல்கின்ற
காரணத்தினாலேயே நாம் அந்த எண்ணத்திலே சொல்கிறோமோ
என்ற அச்சம் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு ஏற்படத் தேவை
யில்லை. நிச்சயமாக நம்பலாம். உறுதியாகத் தேர்தல் நடக்கும்
என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே, இந்த காரண காரிய
விளக்கத்தோடு உங்களுக்கு எல்லாம் தெரிவித்து நீங்கள்
அனைவரும் ஏகமனதாக இந்த மசோதாவை நிறைவேற்றித்தர
வேண்டும் என்று கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

13-55 மணி

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுனன்) :
விவாதம் முடிவுற்றது, இப்போது வாக்கெடுப்பு பேரவை
முன்னுள்ள கேள்வி.

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி
அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட
முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/1990)
ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை
வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு
எடுத்துக் கொள்ளப் பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 மற்றும் முகப்புரை, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

## நெடுந்தலைப்பு.

**மாண்புமிகு மாற்றுத்தலைவர் (திரு. கே. அர்ஜுனன்) :** பேரவை முன்னுள்ள கேள்வி :

''நெடுந்தலைப்பு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப்பெற வேண்டும்''.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம்:** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

"In the enacting formula, for the w rds "Fortieth year" subst tute the words Forty-first year"

திருத்தம், பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.

**மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/1990) திருத்தப்பெற்றப்படி நிறைவேற்றப்பெற வேண்டும்''.

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பெற்றது.

**(ஊ) வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த சட்டமுன் வடிவு, 1990**



**மாண்புமிகு மாற்றுத் தலைவர் : (திரு. கே. அர்ஜுனன்):** அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை பேராசிரியர் க. பொன்னுசாமி மொழிவார்.

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''ஆளுநர் அவர்களால் 6-12-1989 ஆம் தேதியன்று பிறப்பிக்கப்பெற்ற தமிழ்நாடு 1989 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 12/1989) இப்பேரவை நிராகரிக்கிறது.''

தீர்மானம், முறைப்படி வழிமொழியப்பெற்றது.

**மாண்புமிகு திரு. வீ பாண்டி சே. ஆறுமுகம் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''தமிழ்நாடு 1990 ஆம் ஆண்டு வேளாண் விளைபொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்ட முன்வடிவு *(சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 5/1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்.''

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுனன்) :** பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானமும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்படுகின்றன.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் விவசாயிகளுக்கு அதிகமான லாபம் கிடைக்கச் செய்ய வேண்டும். இடைத்தரகர்களை அகற்ற வேண்டும் என்கிற நோக்கத்தில் தனி அலுவலர்களை தமிழ்நாடு அக்ரிகல்சரல் புரடியூசர்ஸ் மார்க்கெட்டிங் சொசைட்டிகளில் நியமனம் செய்ய இச் சட்ட முன்வடிவில் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. இப்படி தனி அலுவலர்கள் நியமிக்கப்பட்டும்கூட இன்னமும் இடைத்தரகர்களை அகற்றிவிட முடியவில்லை என்பதை நான் மிகவும் வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல, விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற பொருள்களுக்கு சரியாக விலை கொடுப்

---

*23-1-1990 ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

பதில்லை. அதுமட்டுமல்லாமல், இந்த அதிகாரிகள் வேண்டிய
வர்கள் வேண்டாதவர்கள் என்று பாகுபாடு காட்டி விவசாயி
களுக்கு சரியாக மானியங்களைக்கூட கொடுப்பதில்லை. முந்தைய
அரசும் இச்சட்டத்தை நீட்டித்துக்கொண்டே போனபோது,
போன சட்டமன்ற கூட்டத்தொடரின்போதும், இதே மசோதா
நிறைவேற்றப்படுவதற்காக அவைமுன் வைக்கப்பட்டபோது நான்
ஒன்றை சொன்னேன், அதாவது இவ்வாறு இதனை திருப்பித்
திருப்பி நீட்டித்துக்கொண்டே போவதனால் பாதிக்கப்படுகிற
வர்கள் விவசாயிகளே தவிர வேறு யாரும் இல்லை என்று
சொன்னேன். எனக்கு முன்பு இங்கே மாண்புமிகு உறுப்பினர்
திரு. பீட்டர் ஆல்போன்ஸ் அவர்கள் பேசியபோது குறிப்பிட்டதை
போல அனைத்துக் கட்சிகளையும் சார்ந்த அட்வைசரி கமிட்டி
ஒன்றை அமைத்து இந்நிறுவனங்கள் சீரும் சிறப்புமாக நடைபெற
அரசு ஆவன செய்ய வேண்டும். இன்றைக்கு மார்க்கெட்டிங்
சொசைட்டி என்று சொன்னால் அதிலே லட்சக்கணக்கான
ரூபாய்க்கு பொருள்களை வாங்குகிறார்கள், விவசாயிகள் கொடுக்
கிறார்கள். இதுபற்றிகூட சரிவர விவசாயிகளுக்குத் தெரிவ
தில்லை. மற்றவர்கள் சொல்வதைக் கேட்டுத்தான் இவர்கள்
தெரிந்துகொள்கிறார்கள். அல்லது நம்ப வேண்டியிருக்கிறது.
இன்றைக்கு தக்காளி இருக்கிறது. அது அழுகும் பொருள்.

14-00 மணி

**திரு. பி. எச். பாண்டியன் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சுந்தரதாஸ் பேசும்
போது அதிகாரி, அதிகாரி என்று சொல்லிக்கொண்டு இருக்
கிறார். நம்முடைய நாட்டில் அதிகாரி என்று சொல்வது
உகந்ததா? அதிகாரி என்றால் சர்வாதிகாரி இருக்கவேண்டும்.
அலுவலர் என்று தான் சொல்லவேண்டும்.

**திரு. மா. சுந்தரதாஸ் :** மாற்றுத் தலைவர் அவர்களே,
தனி அதிகாரி என்று தான் போடப்பட்டுள்ளது. அதனால்
தான் அதிகாரி என்று சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்
பாண்டியன் அவர்களிடமிருந்து எனக்கு மாறுபட்ட கருத்து
இல்லை. ஆனால் நம் நாட்டில் நடக்கும் நிலைமை
பற்றி சொல்கிறேன். இந்த அதிகாரிகள், குறிப்பாக கோவாப
ரேடிவ் சொசைட்டி அதிகாரிகளைப் பொறுத்தவரையில்
அவர்கள் இன்று தனி அதிகாரிகளாக மாறிவிட்டார்கள்.
அதற்கு இந்த 'ஆக்ட்' காரணம் என்று சொல்லமுடியாது.
அவர்கள் சொல்வதுதான் சட்டமாக இருக்கிறதே தவிர
நமக்கு உதவியாக இருப்பதாகச் சொல்லமுடியாது. கேட்டால்
அவர்கள் சொல்கிறார்கள், இந்த மடம் இல்லாவிட்டால்
அந்த மடம் எங்களுக்கு இருக்கிறது என்று சொல்கிறார்கள்.
வேண்டுமென்றால் மந்திரியோ, எம்.எல்.ஏ.வோ நினைத்
தால் மாற்றிவிடுவார்கள் என்கிறார்கள். அந்த அளவுக்கு
தனி அதிகாரிகள் இன்று அதிகாரம் படைத்துவிட்டார்கள்



என்பதை நான் சொல்லக் கடமைப்பட்டு இருக்கிறேன்.
நம்மிடமே அவர்கள் அப்படிப் பேசினால் பாவப்பட்ட
விவசாயிகளிடம் இந்த அதிகாரிகள் எந்த அளவுக்குப் பேசு
வார்கள்? ஆகவே எனக்கு முன்னால பீட்டர் ஆல்போன்ஸ்
பேசியது போல இதற்கு ஒரு சர்வ கட்சிக் கூட்டத்தை
அல்லது ஒரு அமைப்பை வைத்தால் குறைந்தபட்சம் அவர்கள்
மக்களைச் சந்திக்க வேண்டுமென்ற எண்ணமாவது இருக்கும்.
அதிகாரிகளைப் பொறுத்தவரையில நிச்சயமாக அவர்களுக்கு
மனம் இருக்காது. அவர்களுக்குச் சம்பளம் தான் வேண்டுமே
தவிர வேறு ஒன்றும் அவர்களுக்கு இல்லை. கிடைக்கும்
வரையில் மிச்சம் என்கின்ற நிலையில் இருக்கிறது. ஆகவே
இந்த மசோதாவைப் பொறுத்தவரையில் ஒரு சர்வ கட்சி
குழு அல்லது சர்வ கட்சி ஆலோசனைக் குழுவாக அரசு
கூட்ட வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இன்மேல் இதை
நீட்டிக்காமல் இதோடு இந்த மசோதா நீட்டிப்பை நிறுத்திக்
கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு எனது உரையை
முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. என். பழனிவேல் :** மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, வேளாண்மை விளைபொருள் சந்தைகள் தனி
அலுவலர்களுடைய அதிகாரத்தை மேலும் ஓராண்டுக்கு
நீட்டிக்கக்கூடிய இந்த மசோதாவின் மீது ஒருசில கருத்துக்
களை நான் சொல்ல விரும்புகின்றேன். இந்த வேளாண்மை
விளைபொருள் சந்தை என்பது விவசாயிகளுக்கு தங்களுடைய
உற்பத்திப் பொருள்களை நல்ல விலைக்கு விற்றுக் கொடுப்பதற்
காக ஏற்படுத்தப்பட்டது ஆகும். இந்த சந்தைகளினுடைய
அதிகாரத்தைக்கடந்த 12 ஆண்டுகளுக்கு மேலாக இந்த
அலுவலர்கள் தான் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். மேலும்
மேலும் இதை நீட்டித்துக்கொண்டே போவது விவசாயி
களுக்கும், அரசுக்கும் இடையே இருக்கக் கூடிய தொடர்பை
அறுத்துவிடும்போல் இருக்கிறது. ஆகவே இந்த தனி
அலுவலர்களுடைய கால நீட்டிப்புக்கு ஒரு முடிவு கட்டி
உடனடியாக இதற்கு தேர்தல் வைத்து, தேர்ந்தெடுக்கப்பட்ட
அமைப்புகள் மூலம் அதை நடத்தினால் அது சாதகமாக
இருக்கும் என்று நான் கருதுகிறேன்.

அதுபோல இன்றைக்கு விவசாயிகள் அந்தச் சந்தைக்குக்
கொண்டுவரக்கூடிய பொருள்களை ஏலம் விடும்போது அங்கே
வந்து இருக்கக்கூடிய வியாபாரிகள் ஒருவருக்கு ஒருவர் கூட்டுச்
சேர்ந்து கொண்டு விலை போகாமல அதை ஒரு கட்டுக்குள்
நிறுத்திவிடுவதாக எங்களுக்குத் தகவல் வருகின்றது
அதற்கு அதிகாரிகளும் உடந்தையாக இருப்பதாகச் சொல்லப்
படுகிறது. ஆகவே அம்முறையை மாற்றி, அவர்களுடைய
பொருள்களுக்கு விலை போகாவிட்டால் அரசே அந்தப்
பொருள்களைக் கொள்முதல் செய்து, ஸ்டாக் வைத்துக்
கொண்டு, விலை வரக்கூடிய காலங்களிலே அதை விற்
பனைக்கு விடலாம். அதுவரை விவசாயிகளுக்கு உரிய முன்
பணம் கொடுக்கவேண்டும்.

அதுபோல நெல், கடலை போன்ற பொருள்களுக்கு
இன்றைக்கு போனஸ் கொடுப்பதாகச் சொல்லப்படுகிறது.
அந்த போனஸை ஒரு குவிண்டாலுக்கு 50 ரூபாயாக
உயர்த்திக் கொடுத்தால் விவசாயிகளுக்கு உதவியாக இருக்கும்.
அதற்கான முயற்சியில் நம்முடைய அரசு ஈடுபட வேண்டு
மென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு விற்பனை நிலையங்கள் போதிய அளவுக்கு
இல்லை என்று சொல்லப்படுகிறது. அந்த விற்பனை நிலை
யங்களை மிகப் பெரிய அளவில் விவசாயிகளுக்கு
ஆங்காங்கே போய் தங்களுடைய பொருள்களை விற்பனை
செய்யும் அளவுக்கு அந்த விற்பனை நிலையங்களை
அதிகரித்துக் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயிகள் கொண்டுவரக்கூடிய பொருள்களுக்கு சாலை
வசதிகள் இன்றைக்கு இல்லை. இன்றைக்கு கரும்பு கொண்டு
வரும் விவசாயிகளுக்கு சாலை வசதி செய்து கொடுக்
கிறார்கள். அதுபோல் இவர்களுக்கும் அந்த துறையின் மூல
மாக சாலை வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று
நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொண்டு, விலை போகாமல்
இருக்கும் பொருட்களை அரசு கொள்முதல் செய்ய
வேண்டிய நிதியையும் அந்தத் துறைக்கு அரசு கொடுக்க
வேண்டுமென்று சொல்லி எனது உரையை முடித்துக்கொள்
கிறேன்.

14-05. மணி

*திரு. கொ. மாதப்பன் : மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவர் அவர்களே, வேளாண்மை விளைபொருள் சந்தை
களின் தனி அதிகாரிகளின் பதவிக் காலத்தை ஓராண்டுக்கு
நீடிப்பது என்பது சரியாக இருக்காது என்ற கருத்தை நான்
இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தனி அலுவலர்களின் பதவிக் காலத்தை நீட்டிக்கின்றபோது,
விவசாயப் பெருமக்கள் கஷ்டத்திற்கு உள்ளாக்கப்படுகிறார்கள்.
தனி அதிகாரிகள் அங்கே நியமிக்கப்பட்டிருக்கிற கார
ணத்தால், அவர்கள் ஆளும் கட்சிக்கு உடந்தையாக இருக்கிற
சூழ்நிலை ஏற்படுகிற அந்த நிலையை மாற்றுவதற்காக
விரைவிலேயே அவைகளுக்குத் தேர்தல் நடத்த வேண்டும்
என்று நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே
நேரத்தில் விவசாயிகளிடத்தில் வாங்கப்படும் பொருள்களுக்கு
—சிறு விவசாயிகள் விளைவிக்கின்ற தக்காளி, வேர்க்கடலை
போன்ற விவசாய விளைபொருள்களுக்கு இன்னும் கூடுதலான
விலை கொடுத்து அரசே அவற்றை வாங்க முன்வர வேண்டு
மென்றும் இந்த நேரத்தில் நான் கேட்டுக் கொள்கிறேன்.
மேலும் தேர்தல் நடத்துவதற்காக ஆளும் கட்சியினர்





தலையிட்டு உறுப்பினர்களைச் சேர்த்திருக்கிறார்கள். எனவே
பழைய உறுப்பினர்களை வைத்தே தேர்தல் முறையை
நடத்த வேணடும் என்று இந்த நேரத்தில் கேட்டுக் கொண்டு,
அதே நேரத்தில் அங்கே பணியாற்றும் தினக்கூலி பணியாளர்
களையெல்லாம் நிரந்தரம் செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்
கொண்டு என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு
பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில்
14 விற்பனை கூடங்கள் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன.
இந்தச் சட்டத் திருத்தம், தனி அதிகாரிகளுடைய நியமனம்
5-12-1989 வரைதான் இருந்தது. அதை மேலும் ஓராண்டுக்
காலம் நீடித்து, ஆளுநர் அவர்கள் 6-12-1989 அன்று
ஒரு அவசரச் சட்டத்தைப் பிரகடனப்படுத்தினார்கள்.
அதனைச் சட்டமாக்கித் தர வேண்டும் என்பதற்காகத்தான்
இந்தத் திருத்தச் சட்டம் கொண்டு வரப்பட்டிருக்கிறது.

1987-ல் புதிய சட்டம் ஒன்றால் இந்த விற்பனைக்
குழுக்கள் கொண்டு வரப்பட்டன. ஆனால் அதற்கான விதி
முறைகள் இயற்றப்படவில்லை. இதற்கிடையே முந்தைய
ஆட்சியில் இதற்கெல்லாம் தேர்தல் நடத்தினால் அதிக
செலவு எற்படும் என்ற ஒரு கருத்தும் பரிசீலிக்கப்பட்டு 1981
ஆம் ஆண்டில் அது அரசாங்கத்தின் கொள்கையாக
அப்போதிருந்த அரசால் ஏற்கப்பட்டு; தனி அதிகாரிகளை நிய
மிக்கலாம் என்று முடிவெடுத்திருந்தார்கள். இருப்பினும்
இந்த அரசைப் பொறுத்த வரையில் இப்போது தனி அலு
வலர்களுடைய பதவிக் காலத்தை மேலும் ஓராண்டுக் காலம்
நீடிக்கப்பட்டுள்ள இந்த நிலையில் இந்த விற்பனைக் குழுக்கள்
சிறப்பாகச் செயல்பட கருதப்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சி
யினுடைய பேரவை உறுப்பினர் திரு. சுந்தரதாஸ் அவர்கள்
ஒரு கருத்தைச் சொன்னார்கள். ஓராண்டுக் காலத்திற்குள்
மேலும் இந்த விற்பனைக் குழுக்கள் சிறப்பாகச் செயல்பட
அனைத்துக் கட்சிகளையும் கொண்ட ஆலோசனைக் குழு
ஒன்றையும் நியமித்துச் செயல்படச் செய்யலாம் என்று
சொன்னார்கள். அதைப் போலவே மாண்புமிகு உறுப்பினர்
திரு. பழனிவேல் அவர்களும் ஒரு கருத்தைச் சொன்னார்கள்.
இந்தச் சங்கங்கள் அனைத்தும் இன்னும் சிறப்பாகச் செயல்
படவும் விவசாயிகளுக்கு உறுதுணையாக இருக்கவும் நட
வடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்ற கருத்தை அவர்கள்
இங்கே எடுத்து வைத்திருக்கிறார்கள். அரசாங்கம் அந்தக்
கருத்துக்களையெல்லாம் பரிசீலிக்கும்—அலட்சியப்படுத்தாது
என்பதையும் எடுத்துச் சொல்லி, இதற்குத் திருத்தம் தேவை
யில்லை என்று கூறி, மாண்புமிகு உறுப்பினர்கள் யாரும்
திருத்தங்களை வலியுறுத்த வேண்டாம்—இதனை
ஒருமனதாக நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு அமை
கிறேன்.

பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களின் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பட்டது. திருத்தம், பெறறுக் கொளளப்

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுனன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங் கள் சார்நத (திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 5/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும ".

தீர்மானம், பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

14-10 மணி

பிரிவுகள் 2 முதல் 4 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேறறப்பெற்றன.

பிரிவு 1 மற்றும் முகப்புரை ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

நெடுந்தலைப்பு.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுனன்) : பேரவை முன்னுள்ள கேள்வி :

" நெடுந்தலைப்பு சட்ட முன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெற வேண்டும் ".

மாணபுமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

,'In the enaeting formula, for the expression 'Forty year', substitute expression 'Forty-first year.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறை வேற்றப்பெற்றது.

நெடுந்தலைப்பு திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடி விற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றது.





மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

,,90-ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் விளை பொருள் சந்தைகள் (தனி அலுவலர்கள் நியமனம்) சட்டங்கள் சார்ந்த (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 5/1990) திருத்தப்பெற்றபடி நிறை வேற்றப் பெறவேண்டும். ,,

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி, நிறைவேற்றப்பட்டது.

(எ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு 1990.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுனன்): அவசரச் சட்டத்தை நிராகரிக்கும் தீர்மானத்தை பேரா சிரியர் க, பொன்னுசாமி கொடுத்துள்ளார். அவர் தீர் மானத்தை மொழிவார்.

பேராசிரியர் க. பொன்னுசாமி : மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழி கிறேன் :

" 27—12—1989-ஆம் நாளன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள 1989-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 15/1989) இப்பேரவை நிராகரிக்கின்றது. "

தீர்மாணம் முறைப்படி வழிமொழியப் பெற்றது.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுனன் : சட்டமுன்வடிவை ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளக் கோரும் தீர்மானத்தை மாண்புமிகு மக்கள் நலவாழ்வுத் துறை அமைச்சர் மொழிவார்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்பு மிகு மாற்றுத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்.

" 1990-ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த)* சட்டமுன்

*22—1—1990-ஆம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அர சிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

[டாக்டர். பொண்முடி என்கிற தெய்வசிகாமணி.] [1990 சனவரி, 27

வடிவு சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண்.
4(1990) ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும். ''

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. கே. அர்ஜுன்):** பேராசிரியர்
க. பொன்னுசாமி அவர்களின் தீர்மானமும், மாண்புமிகு
மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மான
மும் பேரவை முன் விவாதத்துக்கு வைக்கப்படுகின்றன.

**பேராசிரியர் க. பொன்னுசாமி :** மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, நன்றி, சென்னைப் பெருநகர் குடிநீர்
வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் சட்டத் திருத்
தத்தின் மீது பேசுகின்ற வாய்ப்பை அளித்தமைக்காக
இந்த மன்றத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சட்டத்திலே இருக்கின்ற பிரிவு 4, குடிநீர் வடி
கால் வாரியத்தின் குடிநீர் வழங்கல் பிரிவின் பொறுப்பு ஏற்
றிருக்கின்ற அரசுச் செயலருக்குத் தலைவர் ஆகின்ற
வாய்ப்பைத் தருகிறது. 4 (ஏ) அப்படி அரசுத் தரப்பிலிருந்து
அரசுச் சார்பற்ற ஒருவர் அல்லது அலுவல் சார்பற்ற ஒருவர்
வாரியத் தலைவராக நியமனம் செய்யப்படும்பொழுது அரசுச்
செயலாளர் அவர்கள் அந்த வாரியத்தின் இயக்குநர்களில்
ஒருவராக ஆகிறார் என்று தெளிவாகக் குறிப்பிடுகிறது.
ஆகவே, இதற்குப் பின்னாலே, இது போதாது என்று கூறி,
இதற்கும் மேலே போய், அரசுச் செயலாளரின் பணி நிலைக்
கும் குறையாத மாநில அரசின் ஓர் அலுவலரையோ வாரி
யத்தின் தலைவராக நியமனம் செய்ய என்ற திருத்தம்
கொண்டு வரப்பட்டிருக்கிறது.

எனக்கு வருகின்ற எண்ணமெல்லாம் எதற்காக இந்தச்
செருகல் என்பதுதான். யாரோ தனி நபருக்காக இந்தத்
திருத்தம் கொண்டு வரப் படுகிறதா என்ற ஐயம் எழுவதற்கு
இது வாய்ப்பு தருகிறது. அந்தத் துறையில் செயலாளரே
இருக்கும்பொழுது வெளியிலிருந்து இறக்குமதி செய்யும்
முயற்சி எதற்காக என்ற கேள்வி இங்கே எழுகிறது அல்லது
இப்பொழுது இருக்கிற செயலாளரைத் தவிர்ப்பதற்கான
முயற்சியோ இது என்ற எண்ணம்கூட ஏற்படுகிறது.

இந்தத் திருத்தம் உள்நோக்கம் கொண்டது என்பதையும்,
குடிநீர் வழங்கல் வாரியத்தை அரசு தனது பிடிக்குள்
கொண்டு வருவதற்கு எண்ணுகிறது என்பதையும்,
தனிப்பட்ட சலுகை தர எண்ணியே இந்தத் திருத்தம் வரு
கிறது என்பதையும் எடுத்துச் சொல்லி, இதை முழுமையாக
எதிர்க்கிறேன் என்பதையும் தெரிவித்து அமர்கிறேன். நன்றி,
வணக்கம்.



1990 சனவரி, 27]

**திரு. உ. ரா. வரதராசன் :** மாண்புமிகு பேரவை மாற்றுத்
தலைவரவர்களே, இந்தச் சட்டமுன்வடிவின் மீது இந்த
வாரியத்தினுடைய செயல்பாடு பற்றிய சில கருத்துக்களை
நான் தெரிவிக்க விரும்புகிறேன். கடந்த இரண்டு மாதங்
களுக்கு முன்னாலே மாண்புமிகு அமைச்சரவர்கள் நகரச்
சட்டமன்ற உறுப்பினர்களையெல்லாம் கூப்பிட்டு நடத்திய
ஒரு விவாதத்தின்போது குடிநீர்த் தொட்டிகள் இரண்டு
முறை ஒவ்வொரு நாளும் நிரப்பப்படும் என்று அறிவித்
தார்கள். அது இப்போது நடைமுறையில் மீறப்படுகிறது
தண்ணீர் போதுமான அளவிற்கு கிடைக்கவில்லை என்ற
குறைபாடு சென்னை புறநகர்ப் பகுதிகளில் தொடர்ந்து
நீடிக்கிறது. அது களையப்பட வேண்டும். அதைப்போல
குடிதண்ணீர் விநியோகிப்பதற்காக புதிய பப்ளிக் பவுண்டன்ஸ்,
பொதுக் குழாய்கள் போடுவதில்லையென்று தடை இருப்ப
தாக அதிகாரிகள் சொல்கிறார்கள். இந்தத் தடையை நீக்கி
புதிய பப்ளிக் பவுண்டன்ஸ் போடுவதற்கான ஏற்பாட்டை
பெருநகர் வாரியத்திற்கு உட்பட்ட இடங்களில் அமலாக்க
வேண்டும். பெரு நகர் வாரியத்தின் நடவடிக்கைகளுக்காக
ஏற்கனவே ஒரு சட்டம் இங்கே இயற்றப்பட்டு சென்னை
நகரத்திற்கு 60 கி.மீ. சுற்றியுள்ள பகுதிகளில் அதற்கான
கூடுதல் விற்பனை வரி கூட வசூலிக்கப்படுகிறது. ஆனால்
அந்தப் புறநகர் பகுதிகளில் மெட்ரோ வாட்டர் சர்வீசஸ்
நீடிக்க வேண்டுமென்று வருகிறபோது அது நீட்டிக்கப்
படுவது இல்லை. உதாரணமாக அம்பத்தூர் நகராட்சி நக
ரியத்திற்கு உட்பட்ட மேற்கு அண்ணா நகர் விரிவாக்கப்
பகுதிகளுக்கு குடிதண்ணீர் வழங்கல், கழிவுநீர் அகற்றும்
பணியை மெட்ரோ வாட்டர் மேற்கொள்ள வேண்டும்
என்ற ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அது பரிசிலனைக்கு
எடுத்துக்கொள்ளப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதற்கான
அறிவிப்பு, நோட்டிபிகேஷன் விரைவில் அறிவிக்கப்படும்
என்று தெரிவித்த நேரத்தில், நிதித் துறையைச் சார்ந்தவர்கள்
ஏன் லோக்கல் பாடியே, உள்ளாட்சி அமைப்பே அதை
செயல்படுத்தக் கூடாது என்ற கேள்வியை எழுப்பி, மீண்டும்
அது கிடப்பிலே போடப்பட்டிருக்கிறது. அதை மாற்றி,
அம்பத்தூர் நகராட்சி நகரியத்தில் அண்ணா நகர் மேற்கு
விரிவாக்கப் பகுதிகளை மெட்ரோ வாட்டரின் பொறுப்பிலே
விரைவிலே ஏற்றுக்கொள்வதற்கான ஏற்பாட்டைச் செய்ய
வேண்டும்.

14.15. மணி

சென்னை நகரில் பல இடங்களில் அடுக்கு மாடிக் கட்ட
டங்கள் இருக்கின்றன. இவை ஹவுசிங் போர்டின் சார்பிலும்
தனியார் சார்பிலும் கட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன.
அங்கேயெல்லாம் ஒரு வீட்டிற்கு எவ்வளவு வசூலிக்கப்படு

கிறதோ அதே கணக்கில் பிளாட் ஒன்றுக்கு என்று சேர்த்து,
24 பிளாட், 48 பிளாட் இருந்தால் அவர்களுக்கும் கூடு
தலாக வரி வசூலிக்கப்படுகிறது. அவர்களுக்கு கூடுதலாக
தண்ணீர் சப்ளை செய்யப்படுகிறதா என்றால் கிடையாது.
சில இடங்களில் பப்ளிக் பவுண்டன்ஸ் மூலமாக அடித்துதான்
தண்ணீர் எடுத்துக் கொண்டு போக வெண்டுமென்ற நிலைமை
இருக்கிறது. 12-வது மாடியில் அல்லது 24-வது மாடியில்
இருக்கக்கூடியவர்கள் கூட அப்படி எடுக்க வேண்டிய நிலைமை
ஏற்பட்டிருக்கிறது. அரை இன்ச் பைப்பை போட்டு
அதன்மூலமாக அவர்களுக்கு தண்ணீர் வழங்கப்படுகின்றது.
இதுசம்பந்தமாக வழக்கு ஒன்று நீதிமன்றத்தில் இருந்து,
அந்த வழக்கிலே தடையுத்தரவும் வாபஸ் பெறப்பட்டுள்ள
நிலைமையில் இதனை மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

அதைப்போல தண்ணீர் வழங்கல் மற்றும் கழிவுநீர்
அகற்றல் வரி 1978-79-ஆம் ஆண்டிலிருந்து சொத்து வரியிலே
7 சதவீதம் வசூலிக்கப்படுகிறது. எந்தத் திட்டமும் குடி
தண்ணீர் வழங்கல் அல்லது கழிவு நீர் அகற்றல் பணிகள்
வாரியத்தால் மேற்கொள்ளப்படாத பகுதிகளில்
அந்த வரி வசூலிக்கப்படுகிறது. அது முறையல்ல. எல்லாம்
லித்தாலும் கூட பரவாயில்லை. அந்தப் பகுதிகளுக்கு வரி வசூ
வாக வாரியத்தினுடைய பணிகள் நடக்க வேண்டும். விரை
பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். என்

இறுதியாக ஒன்று, கழிவுநீர் அகற்றுவது என்பதில் போது
மான டாங்குகள் இல்லையென்பதால்
எடுக்க மறுக்கிறார்கள். 1978—79-லிருந்து 10 ஆண்டுகாலத் அதை
திற்கு அந்த தண்ணீர், கழிவுநீர் வரி கட்டப்படவில்லை
என்பதற்காக அதை எடுக்க மாட்டேன்
வாட்டர் அதிகாரிகள் சொல்கிற நிலை என்று மெட்ரோ
கேடு விளைவிக்கும். செப்டிக் டாங்குகளிலிருந்து சுகாதாரத்திற்கே
எடுக்கப்படவில்லை என்றால் அந்த வீட்டுக்காரரை தண்ணீர்
பாதிக்கும் பிரச்சினை அல்ல அது. அந்தப் பகுதியில் மட்டும்
பவர்களுடைய சுகாதாரப் பிரச்சினையாகி விடுகிறது. இருப்
வரியை வேண்டுமானால் தவணை முறையில் வசூலிப்பதற்கு அந்த
ஏற்பாட்டை செய்துவிட்டு, பணம் கட்டுபவர்களுக்கு
கழிவுநீரை அகற்றுவதற்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். அந்த
இந்த வாரியத்தினுடைய செயல்களை முறைப்படுத்த வேண்டு
மென்று கேட்டு அளித்த வாய்ப்பிற்கு நன்றி கூறி அமர்
கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : மாற்றுத் தலைவர் அவர்களே,
நான் தான் பேசுகிறேனா என்று அமைச்சர் ஆற்காடு
அவர்கள் கூட கேட்கிறார்கள். இதிலே ஒரு திருத்தத்தைக்
கொடுத்திருக்கிறேன். இது சட்டப் பிரச்சினை. அதாவது
செக்ஷன் 3 secretary as will as Chairman என்று சொன்னால்,



நான் சொல்வது உங்களுடைய நோக்கத்தை வரவேற்கிறேன்.
பொலிட்டிக்கல் மேன் போட வேண்டாம், அதிகாரிகளைப்
போடுவோம் என்பதை நான் வரவேற்கிறேன். அதே செக
ரட்டரி தான்—by virtue of secretary he is coming as chairman என்று
சொன்னால, அந்த நிறுவனத்தில் ஒரு ஆணையை பிறப்பித்
தால், அதற்கு எங்கே அப்பீல் செய்வது ? கோர்ட்டிற்குத்
தான் போக வேண்டும். இந்தியாவில் வங்கிகளுடைய செக
ரட்டரி எந்த வங்கியிலும சேர்மனாக வருவது இல்லை.
மெட்ரோ வாட்டர் என்று எடுத்தால் ஒரு எம்.டி/சேர்மன்
போடலாம். ஆனால் சேர்மனாக ஒரு இலாக்காவினுடைய
செகரட்டரி வந்தால், அந்த போர்டிலே ஒரு தீர்மானத்தை
எடுத்தால், அந்தத் தீர்மானத்தை எங்கே அப்பீல் பண்ணுவது
சொல்கிறேன். ஆகவே எம்.டி/சேர்மன்
சட்டத்தைச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டு,
என்று வைத்துவிட்டு, இழுக்காதீர்கள். இல்லையென்றால்,
செகரட்டரியை other Department என்று
by virtue of secretary பி. டபிள்யூ.டி. செகரட்டரியைக் கொண்டு
போட்டிருக்கலாம். டிபார்ட்மெண்ட் செகரட்டரியைக் கொண்டு
வரலாம். அதே மக்கள் பாதிக்கப்படுவார்கள். இதே.
வந்தால் நிச்சயமாக மெட்ரோ வாட்டர் ஒரு
செகரட்டரி சேர்ந்து இருந்து ஏதாவது குறை வந்தால்
ஆர்டரைப் போட்டால், அதில் பண்ணுவது ? அமைச்சர்
நாம் எங்கே சென்று அப்பீல் செகரட்டரிக்கு
களைச் சொல்ல முடியாது. அமைச்சர்கள் எக்ஸ்அபிஸியோ செக
பதிலாக சொல்ல முடியுமே தவிர, கொள்ளக்கூடியதல்ல
ரட்டரி என்று சொல்வது ஏற்றுக் கொண்டு வந்தேன்.
ஆகையினாலேதான் நான் திருத்தத்தைக் பிரச்சினைக்காகத்
மிக முக்கியமானது. சட்டத்திலே உள்ள வேறு அல்ல.
தான் நான் இதைச் சொல்கிறேனே தவிர என்று
நிச்சயமாக அமைச்சர் அவர்கள் யோசிப்பார்கள் போடுங்கள்.
நினைக்கிறேன். நீங்கள் வேறு செகரட்டரியைப் போட்டால்
அதே இலாக்காவில் உள்ள செகரட்டரியைப் முடியாது.
மக்களுக்கு இருக்கின்ற குறைகளைச் சொல்வதற்கு இதை
ஆகவே சட்டத்திலே சிக்கல் இருக்கிற காரணத்தால் கொள்
நான் கூறுகிறேனே தவிர வேறல்ல. நீங்கள் திருத்திக்
வீர்கள் என்று நம்புகிறேன்.

மணி 11.20.

அடுத்தபடியாக மெட்ரோ வாட்டரைப் பொறுத்த
வரையில் போன வாரம் பத்திரிகையிலே பார்த்தேன். ஆப்ப
ரேசன் தியேட்டர்களிலே தண்ணீர் இல்லாததால், இவைகள்
எல்லாம் மாற்றி வைத்திருப்பதாகப் பத்திரிகையிலே பார்த்
தேன். அதேபோன்று எம்.எல்.ஏக்கள் தங்குகின்ற விடுதி
யிலே கூட தண்ணீர் இல்லை. நாங்கள் 8-30 மணிக்கு
வந்தால் தண்ணீர் இல்லை என்று சொல்கிறார்கள். ஆனால்
இப்போது நாம் மெட்ரோ வாட்டர் பில் மீது பேசுகிறோம்.

பொதுமக்களுக்கு இரண்டு நாளைக்கு ஒரு முறை தண்ணீர்
கொடுப்பதாகச் சொல்கிறீர்கள். எம்.எல்.ஏ. ஆஸ்டலுக்கு
24 மணி நேரமும் தண்ணீர் கொடுக்க ஏற்பாடு செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் கன்னியாகுமரியிலிருந்து பயணம் செய்து இங்கே
காலை 8-30 மணிக்கு அல்லது 10 மணிக்கு வந்தால்,
தண்ணீர் இல்லை என்கிற நிலைமையிருக்கிறது. எம்.எல்.ஏ.
ஹாஸ்டலுக்கு சட்டமன்றம் நடக்கிற நேரத்தில் 24 மணி
நேரமும் தண்ணீர் கொடுக்கிறார்கள். அதைப் எப்போதும்
கொடுக்கவேண்டும். அடுத்து பொதுமக்களுக்கு இரண்டு
நாளைக்கு ஒரு முறை தண்ணீர் கொடுப்பதாகச் சொல்
கிறார்கள். ஆனால் அப்படிக் கொடுப்பதில்லை என்று மக்கள்
சொல்கிறார்கள். தற்போது இருக்கின்ற தண்ணீர் சென்னை
வாழ் மக்களுக்கு நிச்சயமாகப் போதாது. எனவே ஒரு மாஸ்டர்
பிளான் மூலமாக, சென்னையில் உள்ள மக்களுக்கு தண்ணீர்
கொடுக்க, இந்தப் பிரச்சினையைப் போக்க நடவடிக்கை
எடுக்கவேண்டும் என்று சொல்லி, பேச வாய்ப்பளித்தமைக்கு
நன்றி சொல்லி முடிக்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாற்றுத் தலைவர் அவர்களே,,
இந்தத் தீர்மானத்தின் மீது ஒருசில கருத்துக்களைச் சொல்ல
ஆசைப்படுகிறேன். எல்லாவற்றிற்கும் ஜனநாயக ரீதியாக
உள்ள அமைப்புகளுக்கு தேர்தலை வைக்காமல், அனைத்தை
யுமே அதிகாரிகள் மத்தியில் கொடுத்துவிட்டால் ஜனநாயகம்
செத்துப் போய் விடும் என்பதுதான் என்னுடைய கருத்து.
ஜனநாயகத்தின் மீது நம்பிக்கை வைத்திருக்கிற . . . . .

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
மாற்றுத்தலைவர் அவர்களே, அவருடைய கட்சியைச் சேர்ந்த
உறுப்பினர் முதலிலே அதிகாரிகளைப் போட்டதற்கு வரவேற்
கிறேன் என்று சொன்னார். ஆனால் இவர், இப்படிக் கொடுக்கக்
கூடாது என்று சொல்கிறார்கள். இது அவரவர்களுடைய தனிக்
கருத்தா, அல்லது அவர்களுடைய கட்சியினுடைய கருத்தா என்
பதை நீங்கள் தயவு செய்து கேட்டுத் தெரிந்து கொள்ளவேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : தற்காலிகமாக ஏற்பாடு செய்வதை
நான் வரவேற்கிறேன் என்று சொன்னார். நிரந்தரமாக அதிகாரி
கள் கையில் கொடுத்துவிட்டால், இந்த ஆட்சிக்கு என்ன வேலை.?
இதைத்தான் நான் கேட்கிறேன். ஆகவே விரைவில் நான்-அபி
சியல் பாடி ஒன்றை, கழக உடன்பிறப்புக்களே அதிலே சேர்மனாக
இருந்தால் கூட நாங்களே சொந்தக் காரியங்களைச் செய்வதற்கு
வாய்ப்பாக இருக்கும். அதிகாரிகள் இருக்கிறார்கள் என்று
சொன்னால், அவர்கள் அமைச்சர் சொல்வதைத் தான் கேட்பார்கள்



மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : உறுப்பினர்
திராவிட முன்னேற்றக் கழகத்தின் மீது நம்பிக்கை வைத்திருப்ப
தற்காக என்னுடைய பாராட்டுதலை இந்த அரசின்
சார்பிலே சொல்லிக்கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : திராவிட முன்னேற்றக் கழகம் என
பது தமிழகத்திலே இருக்கிற ஒரு கட்சி. நாம் எல்லாம் தமிழர்
கள். ஆகவே தி.மு.க. நண்பர்கள் கழக உடன்பிறப்புக்கள்.
ஆகவே அந்த ரீதியில் ஜனநாயகத்தினுடைய குரல்வளையை
நீங்கள் நெறிக்காமல், நான்-அபிசியல பாடியை நியமனம் செய்ய
வேண்டும்.

அருமை நண்பர் சுந்தரதாஸ் அவர்கள் சொன்னதைப்போல
கீழ்ப்பாக்கம் அரசு மருத்துவமனையில் 30 ஆப்பரேசன்கள் தயா
ராக இருக்கின்றன. ஆனால் திடீரென்று தண்ணீர்ப் பற்றாக்
குறையின் காரணமாக அந்த ஆப்பரேசன்கள் எல்லாம் நிறுத்தப்
படுகின்றன. அப்படி ஆப்பரேசன்களை நிறுத்திவிட்டால, உடல்
மிகவும் மோசமான நிலையில் உள்ள பேசண்டுகளாக இருந்தால,
அவர்கள் எப்படி மறுநாள் உயிர் பிழைப்பார்கள். ஆகவே இப்ப
டிப்பட்ட ஒரு நேரத்தில் ஆப்பரேசன் தியேட்டரில் தண்ணீர்
இல்லை என்றால், ஆப்பரேசனை முழுமையாகச் செய்யமுடியாது.
அப்படிப்பட்ட நிலையில் இந்த விஸ்தரிப்பைச் செய்ய வேண்டுமா
என்று நான் கேட்க ஆசைப்படுகிறேன்.

அது மட்டுல்ல, சென்னையில் உள்ள பொது மருத்துவமனையில்
தண்ணீர் பற்றாக்குறை இருக்கிறது எல்லா மருத்துவ
மனைகளிலும் இருக்கிறது. நகரத்தில் தண்ணீர்ப் பற்றாக்குறை
மிகவும் அதிகமாக இருக்கிறது. நண்பர் சொன்னதைப் போல,
சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிற நாம் இந்த நாட்டை
ஆளுகின்ற பிரதிநிதிகளாக இருக்கிறோம. அவர்களுக்கே தண்ணீர்
கொடுக்கமுடியாத நிலைமை ஏற்பட்டு இருக்கிறது. இந்தச
சட்டமன்றம் ஆரம்பித்தவுடன், 18-ஆம் தேதியிலிருந்து தண்ணீர்
வருகிறதே தவிர, நாலைக்கு தண்ணீர் நின்றுவிடும். அப்படிப்
பட்ட நிலைமை இல்லாமல், தொடர்ந்து சட்டமன்ற விடுதியிலே
தண்ணீர் வரவேண்டும் . அதற்கான வழிவகைகளைச் செய்ய
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து வேதாரண்யம் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்று
ஒன்று இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய
கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். பட்டுக்கோட்டைப் பகுதி
யிலிருந்து பேராவூரணிப் பகுதியிலிருந்து தண்ணீர் எடுத்துக்
கொண்டு வந்து வேதாரண்யத்திற்குக் கொடுக்கிறார்கள். வேதா
ரண்யத்திற்குக் கொடுப்பதற்கான திட்டத்தை வழிவகுத்துக்
கொண்டு இருக்கிறார்கள். வேதாரண்யத்திற்கு தண்ணீர்,
கொடுப்பதில் எனக்கு ஆட்சேபணை இல்லை. அதேநேரத்தில்
பட்டுக்கோட்டை, பேராவூரணி மக்கள் மத்தியிலே மிகப் பெரிய

அச்சமும், வேதனையும் ஏற்பட்டு இருக்கிறது. ஏன் என்றால்,
அங்கே 200 அடிக்கு பம்ப வேலை செய்கின்றபோது, அங்கே
போர்-வெல்லிலே இருக்கிற, கிணற்றிலே இருக்கிற தண்ணீர்
எல்லாம் வற்றி விடுகிறது. ஆகவே அவர்களுகக குடிநீர் பற்றாக
குறை ஏற்படுகிறது. ஆகவே இதை மறுபரிசீலனை செய்து,
காவிரிப் படுகையிலேயிருந்து அலலது பவானி ஆற்றுப்படுகை
யிலிருந்து தண்ணீர் எடுபபதற்கான ஏற்பாட்டை மாண்புமிகு
அமைச்சர் அவர்கள் செய்ய வேண்டும். மாண்புமிகு அமைச்சர்
அவர்கள் பட்டுக்கோட்டைக்கு வந்தார்கள். அவர்களை நாங்கள்
எல்லாம் அப்போது சந்தித்துப் பேசினோம். ஜனநாயக ரீதியாக
அமைச்சர் அவர்கள் எங்களுடைய கோரிக்கைகளைக் கேட்டார்கள்.
அது சம்பந்தப்பட்ட அதிகாரிகளையும், சர்வ கட்சிக் குழுவையும்
அனுப்பினார்கள். பரிசீலனை செய்து ரிப்போர்ட் கொடுத்திருக்
கிறார்கள். விரைவில் அதற்கான ஒரு முடிவை அரசு எடுக்க
வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, கீரமங்கலத்திலே ஒரு ஓவர் ஹெட் டாங்க் 38
லட்ச ரூபாய் . . . . . .(குறுக்கிடு)

14-25மணி

மாண்புமிகு டாக்டர் க. சந்திரசேகரன் : மாண்புமிகு
பேரவைத் தலைவரவர்களே, சென்னைப் பெருநகர் குடிநீர்
வடிகால் வாரியத்தைப் பொறுத்து இந்த மசோதாவில் பேசுகின்ற
போது புதுக்கோட்டைக்கும், வேதாரண்யத்திற்கும் உறுப்பினர்
அவர்கள் செல்கிறார்களே, இதை மீண்டும் நீங்கள் அனுமதிக்
கிறீர்களா என்று நான் கேட்க விழைகின்றேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. சே. ஆர்ஜுனன்) :
தயவு செய்து உறுப்பினர் சப்ஜெக்ட்டோடு நிற்க வேண்டும்.

திரு. ஆர். சிங்காரம் : ஏனென்றால் இந்த வேதாரண்யம்
ஓவர்ஹெட் டாங்கைத் தடுப்பது மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
தான் என்று ஊருக்குள்ளே சொல்கிறார்கள்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு மாற்றுத்
தலைவர் அவர்களே, இப்படி நான் பேசிக் கொள்கிறேன். நீங்கள்
தண்ணீரை எடுத்துக் கொண்டு போங்கள் என்று சொன்னது
சிங்காரம் என்று எனக்குக் கேள்வி.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர்
அவர்களே, இந்த அவைக்குத் தவறான தகவலை மாண்புமிகு
அமைச்சரவர்கள் தருகிறார்கள்.



மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : தலைவர் அவர்
களே, இந்தத் தகவல் எதுவும் இப்போது வேண்டாம். இந்த
மசோதாவைப்பற்றி மட்டும் உறுப்பினர் பேசி முடிக்கக் கேட்டுக்
கொள்கிறேன்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு மாற்றுத் தலைவர் அவர்
களே, இந்த மசோதவை நான் ஆதரிக்கவில்லை, எதிர்க்கிறேன்.
என்றாலும் விரைவிலே ஜனநாயக ரீதியாக நான்-அபிசியல்
பாடி நியமித்து, மக்களுடைய குறைகளைத் தீர்க்க மாண்புமிகு
அமைச்சரவர்கள் முயற்சிப்பார் என்று நான் தெரிவித்துக்
கொண்டு, இந்தத் தண்ணீர் பிரச்சினை என்பது இந்தப்பெரு
நகரில் மட்டுமல்ல, தமிழகத்தில் எல்லா இடங்களிலும் தண்ணீர்
பிரச்சினை இருக்கிறது. அதற்கெல்லாம் விரைவிலே தீர்வு
காணவேண்டுமென்று கேட்டு அமர்கின்றேன், வணக்கம்.

திரு. சோ. அழகர்சாமி : தற்காலிகத் தலைவர் அவர்களே,
ஓரேயொரு விஷயத்தை மட்டும் சொல்லிக் கொள்ள விரும்பு
கிறேன். சென்னையில் குடிநீர் வழங்குவது சம்பந்தமாக,
லாயட்ஸ் காலனியில் 'எல். பி. குவார்ட்டர்ஸ்' இந்த 1 முதல்
20 வரையுள்ள குடியிருப்புகளில் ஏற்கெனவே அங்கே ஒரு மாத
காலமாக தண்ணீர் வரவில்லையென்று சொல்லி, அங்கேயுள்ள
சம்பந்தப்பட்ட இளநிலைப் பொறியாளரிடமும், வாரியத்
தலைவரிடமும் முறையிட்டிருக்கிறார்கள். ஆனால் தண்ணீர்
இதுவரை வழங்கப்படவில்லை. காரணம், அங்கே செல்லக்கூடிய
தண்ணீர்க் குழாய் திருடு போய் விட்டதாம். திருடுபோய் ஒரு
மாத காலமாகியும் இன்னும் புதியதாக குழாய் பொருத்தப்படா
மல் அந்தப் பகுதியிலுள்ள மக்களுக்குத் தண்ணீர் வழங்கப்படாமல்
இருப்பதன் காரணமாக அவர்கள் ஏற்கெனவே ஒரு மனுவை
அனுப்பியிருக்கிறார்கள். என்னிடத்திலே இன்றைக்குச் சொன்
னார்கள். ஆகவே குடிநீர் என்பது சாப்பாட்டைவிட முக்கிய
மானது. நீர் என்பது காற்றுக்கு அடுத்தது. அது இல்லை
யென்றால் ஒரு நாளைக்குக்கூட நாம் ஜீவிக்க முடியாது. அதுவும்
சென்னை நகரத்தைப் பொறுத்த மட்டில் தண்ணீர் என்பது
மிகக் கடுமையான பிரச்சினை. நம்முடைய தெலுங்கு கங்கை
வரும் வரைக்கும் கொஞ்சம் சிரமம்தான். இருந்தாலும்கூட,
கொஞ்சம் அதிகமாகச் செலவானாலும், லாரிகள் மற்ற ஏற்பாடு
களின் மூலமாகத் தண்ணீர் சப்ளையைக் கொஞ்சம் துரிதப்படுத்த
வேண்டும். பல இடங்களில் பார்த்தோம் என்று சொன்னால்
லாரி வந்தவுடனே பெண்கள் எல்லாம் மண்ணெண்ணெய் வாங்கப்
போகிற மாதிரி அல்லது வேறுஆயிலை வாங்கப்போகிற மாதிரி
ஓட்டமாக வாளி எடுத்துக்கொண்டு ஓடுகிறார்கள். காரணம்,
தண்ணீர் அவ்வளவு தேவையாக இன்றைக்கு நகரத்தில் இருக்கிறது.
காரணம் பெரிய பெரிய 10 மாடி, 8 மாடிக் கட்டிடங்கள் கட்டி,
அங்கே அவர்கள் பூராவும் 300, 400 அடிகள் போர் போடுகின்ற
காரியம் செய்வதன் காரணமாக பக்கத்தில் இருக்கிற கிணறு
பம்புகளில் தண்ணீர் வற்றி விடுகிறது. ஏனென்றால் அவ்வளவு

[திரு. சோ. அழகர்சாமி]　　　　[1990 சனவரி, 27

பெரிய கட்டிடங்களுக்கு அதிகமான
400, 500 அடிக்குக் கொண்டுபோய் அளவில் பூமிக்குக் கீழே
தண்ணீரை எடுத்து விடுகிறார்கள். ராட்சத பம்புகள் மூலமாக
ஏழை எளிய மக்கள் தங்கள் ஆகவே சாதாரண சிறிய
கூடிய போர்களிலே தண்ணீர் குடியிருப்புகளில் போட்டிருக்கக்
வரவில்லை. லாரி வந்தாலும் வரவில்லை. கிணற்றிலும் தண்ணீர்
அளவில் வருவதில்லை. கூட அவர்களுக்கு போதுமான
இந்தக குடிநீர் விஷயத்தில் ஆகவே மாண்புமிகு அமைச்சரவர்கள்
கொள்வதோடு, இந்த விசேஷமான அக்கறை எடுத்துக்
ஒரு மாத அதிகாரிகள் எவ்வளவு அஜாக்கிரதையாக—
கிறார்கள். காலமாகிறது, அவர்கள் தலைவரிடம் சொல்லியிருக்
கள். இளநிலைப் பொறியாளரிடம் சொல்லியிருக்கிறார்
என்ன இன்றுவரைக்கும் தண்ணீர் வரவில்லையென்று சொன்னால்
அர்த்தம், நாங்கள் 20 நாட்களாகக் குளிக்கவில்லை,
பாத்ரூம் போகமுடியாத நிலையில் இருக்கிறோம் என்று சொல்கி
றார்கள். இந்த 20 குடியிருப்புகளில் இருக்கக் கூடிய மக்கள்
அவ்வளவு கஷ்டப்படுகிறார்கள். அந்த அதிகாரிகள் என்ன செய்
தார்கள்? ஒரு மாதத்திற்கு முன்னால் குழாய் களவு போனால்
வேறு புதிய குழாய் போடவேண்டியதுதானே? காசு இல்லையா?
20 குடியிருப்புகள் இன்றைக்கும் தண்ணீர் வராமல் அவதிப்படு
கிறார்கள். இன்றைக்குச் சாலையில் என்னிடம் சொன்னார்கள்.
நல்லவேளை இன்றைக்குப் பேச சந்தர்ப்பம் கிடைத்தது. எனவே
உடனடியாக இந்த மாதிரி காரியங்களில் அதிகாரிகள் வேகமாக
நடவடிக்கை எடுக்க அவசியம் ஏற்பாடு செய்து கொடுக்கவேண்டும்.
அதிகாரிகளுக்கு எல்லாம் கொஞ்சம் சொல்லவேண்டும். இந்த
மாதிரி அஜாக்கிரதையாக இருக்கக்கூடாது. இந்தக் காரியத்தை
எல்லாம் வேகமாக இந்தக் குடிநீர் வழங்கும் விஷயத்தில் அதிக
மான அளவில் நிதி செலவழிந்தாலும் பரவாயில்லை. தெலுங்கு
கங்கைத் திட்டம் வருகிறவரைக்கும் லாரிகளின் மூலமாக எல்லா
இடங்களுக்கும் தண்ணீர் வழங்கவேண்டும். குடிசைப்பகுதிகளில்
அதிகமாக தண்ணீர் தேவைப்படுகிறது. பெரிய பங்களாக்களில்
இருக்கிறவர்கள் லாரிகளின் மூலமாக, பணத்தை ரூ. 200,
ரூ. 300 என்று கொடுத்து தண்ணீரை வாங்கிவிடுகிறார்கள்.
ஆகவே இதைக் கொஞ்சம் சீக்கிரம் செய்ய வேண்டுமென்று கேட்டு
முடிக்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:　　14.30 மணி
மாற்றுத் தலைவர் அவர்களே, இங்கே இந்தச் சட்டத் திருத்தத்
தின் அவசியத்தைப் பற்றிய காரணங்களை சொல்ல விரும்பு
கிறேன். அரசுத் துறை செயலாளர் அவர்களே சென்னை குடிநீர்
வடிகால் வாரியத்.தினுடைய தலைவராக பொறுப்பேற்றிருந்த
ஒரு சூழ்நிலை இருந்தது. இப்போது அதற்காக தலைவர் தனியாக
ஒரு அரசைச் சார்ந்த அதிகாரி நியமிக்கப்படுகிறார். இவ்வாறு
நியமிக்கப்படுவதால் இப்போது இங்கே உறுப்பினர்கள் சுட்டிக்
காட்டிய பல்வேறு குறைபாடுகளை தனிக் கவனம் செலுத்தி
அதைக் கவனிக்க முடியும். என்று கருதுவதோடு இந்த அரசு ஒரு
தனி அதிகாரியை நியமித்து இருக்கிறது.



[1990 சனவரி 27
[டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி]

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதுமட்டுமல்ல. இந்த குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செயல
ராக இருக்கிற அரசுத் துறை செயலாளர் அவர்கள் குடிநீர்
வடிகால் வாரியத்திற்கு மட்டுமின்றி உள்ளாட்சித்துறை பொறுப்
பையும் கவனித்துக் கொள்கிற செயலராகவும் இருக்கிறார்கள்.
ஆகவே பல்வேறு பொறுப்புகள் அவரிடம் அதிகமாகியிருக்கிற
காரணத்தினாலேதான், இந்தச் சென்னை மெட்ரோ வாட்டருக்
காக, குடிநீர் வடிகால் வாரியத்திற்காக தனியாக ஒரு தலைவரை
நியமிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்கிறது. ஆகவே எக்ஸ்-
அபிசியோ என்ற முறையை மாற்றி தனியாக ஒரு அதிகாரியாக
இதற்கென்று நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையில்தான் இந்த
அரசு முடிவு எடுத்து அந்த அதிகாரியை நியமித்து இருக்கிறது.
அதைப் போலவே நான்-அபிசியல் என்று சொல்லப்படுகிற
அதிகார பற்றற்றவர்களை நியமிக்கவேண்டுமென்று இங்கே
அன்பிற்குரிய மாண்புமிகு உறுப்பினர் சிங்காரம் அவர்கள் சுட்டிக்
காட்டினார்கள். தமிழினத் தலைவர் கலைஞர் அவர்கள் சென்ற
ஆண்டிலே அறிவிக்கிறபோது செலவுகளைக் குறைக்க வேண்டு
மென்ற காரணத்திற்காகவும் பல்வேறு குற்றச்சாட்டுகள் வரு
கிறதே என்பதைச் சுட்டிக் காட்டி அவைகளை குறைக்க வேண்டு
மென்ற காரணத்திற்காகவும் கொள்கை முடிவுகளை எடுத்து
பல்வேறு துறைகளுக்கு அரசு சார்புள்ள அதிகாரிகளை நியமித்
திருக்கிறார்கள். முதல்வர் அவர்கள், அவருடைய கோரிக்கையை
ஏற்று மறுபரிசீலனை செய்தால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட
பிரதிநிதிகள் கூட இடம்பெறுகின்ற கட்டாயம் ஏற்படலாம்.,
சூழ்நிலை ஏற்படலாம். அது கலைஞருடைய முடிவைப்
பொறுத்து இருக்கிறது. ஆகவே அந்த மெட்ரோ வாட்டருடைய
நிலைமையை கவனிக்க வேண்டியிருக்கிற காரணத்தால் முழு நேரம்
அதில் பொறுப்பேற்றிருக்கிற ஒரு அரசுத் துறையைச் சார்ந்த
செயலாளரை நியமிக்க வேண்டுமென்ற அடிப்படையிலேதான்இந்த
திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது என்பதைச் சுட்டிக்காட்டி,
இதில் எந்தவிதமான தனி நபருக்கும் அனுகூலம் கொடுக்க வேண்டு
மென்ற அவசியம் இல்லை. வேண்டுமானால் நான்-அபிசியலை
நியமிக்க வேண்டிய சூழ்நிலை எற்பட்டிருந்தால் தனி நபருக்கு
சலுகை என்று சொல்லலாம். ஆனால் அதிகாரிகளை நியமிக்கிற
போது யாரோ தனிநபருக்கு சலுகை கொடுக்கிறோம் என்ற
குற்றச்சாட்டுக்கு இடமே இல்லை என்பதை மாண்புமிகு உறுப்
பினர் பொன்னுசாமி அவர்களுக்கு நான் சுட்டிக்காட்ட விரும்பு
கிறேன்.

ஏனென்றால் அரசுத் துறையிலே நியமிக்கப்படுகிற அந்த
அதிகாரி கூட நிரந்தரமானவர் அல்ல. அடுத்த ஆண்டிலே கூட
அவர் மாறுகின்ற சூழ்நிலை எல்லாம் இருக்கிறது; ஆகவே
மாற்றப்படலாம். டிரான்ஸ்பரபிள் போஸ்ட் என்ற அடிப்படை
யில் தான் நியமிக்கப்படுகிறார். யாருக்கும் சலுகை காட்டுவதற்
காக இந்தத் திருத்தம் கொண்டுவரப்படவில்லை. பணிகளை

துரிதமாக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு கொண்டு வரப்பட் டிருக்கிறது என்ற காரணத்தால் உறுப்பினரின் திருத்தத்தை அவர் திரும்பப் பெற்று இதற்கு ஆதரவு அளிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: விவாதம் முடிவுற்றது இப்பொழுதுவாக் கெடுப்பு பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்களுடைய தீர்மா னம் பேரவையின் அனுமதியோடு திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி: '' 1990 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4/1990) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல் 5 முடிய பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப் பெற்றன.

பிரிவு 1, மற்றும் முகப்புரை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று நிறைவேற்றப்பெற்றன.

நெடுந்தலைப்பு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

'' நெடுந்தலைப்பு சட்டமுன்வடிவின் உரிய பகுதியாக ஆக்கப் பெறவேண்டும்.''

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன் :

" In the Enacting Formula, for the expression 'For ieth year' substituiote the expression, Fifty-first year,.

திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்றது.

நெடுந்தலைப்பு திருத்தப்பெற்றபடி, பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றது.



மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

'' 1990 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைத்தல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 4-1990) திருத்தப் பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப்பெற்றது.

9. அரசினர் தனித் தீர்மானம்.

1988 ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு திருத்தச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான் (மையச்சட்டம் (53/1988) 1974ஆம் ஆண்டு சட்டத்தில் (மையச்சட்டம் 6/1974) செய்யப்பட்ட திருத்தங்களை ஏற்றுக் கொள்ளுதல்.

(14-35 மணி.)

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன் :

'' நீரின் மாசுபடிதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல், நீரினால் நற்பலன்கள் விளையுமாறு பேணி வருதல் அல்லது நற்பலன்கள் விளைவிக்கின்ற நிலையில் மீண்டும் அதனை வைத்தல் ஆகியவை பற்றிய விஷயங்கள் அஸ்ஸாம், பீகார், குஜராத், அரியானா, இமாசலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர், கர்நாடகம், கேரளம், மத்தியப் பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா, மேற்கு வங்காளம், ஆகிய மாநிலங்களில் நாடாளுமன்றச் சட்டமொன்றின் மூலமாக முறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்னும்படிக்கு அந்த மாநிலங்களின் அனைத்து சட்டமன்ற அவைகளாலும் அரசமைப்பின் 252ஆம் உறுப்பின் (1)ஆம் கூறின் கீழ் பிறப்பிக்கப்பட்ட தீர்மானங்களையொட்டி நாடாளுமன்றம் 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தினை (மையச் சட்டம் 6/1974) இயற்றியுள்ளது என்பதாலும்,

தமிழ்நாடு சட்டமன்ற ஈரவைகளாலும் அரசமைப்பின் 252-ஆம் உறுப்பின்(1)ஆம் கூறின்கீழ் பிறப்பிக்கப்பட்ட தீர்மானத்தையொட்டி மேற்சொன்ன 1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டமானது (மையச் சட்டம் 6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து, 1981ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31ஆம் நாள் முதற்கொண்டு செல்லாற்றல் பெற்றுவிட்டபடியாலும்,

மேற்சொன்ன மையச் சட்டம் 6/1974 நாடாளுமன்றத்தால் ...ச் சட்டம் 44/1978- னால் திருத்தம் செய்யப்பெற்று,

அத்திருத்தச் சட்டமானது 1984ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள்
7ஆம் நாள் முதற்கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டபடியாலும்,

அரசமைப்பின் 252ஆம் உறுப்பின் (1)ஆம்
(2)ஆம் கூறுடன் சேர்த்துப் படித்துப் பார்த்து கூறானது அதன்
யொட்டி, மேற்சொன்ன மையச சட்டம் 6/1974 அறியப்படுவதை
ஒருசில நோக்கங்களுக்காக நாடாளுமன்றச் அந்தபடிக்கு
மூலமாக திருத்தம் செய்யப்படவேண்டும் சட்டமொன்றின
பிரதேச மற்றும் திரிபுரா மாநிலங்களின் என்பதால் இமாசலப்
களால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றபடியாலும், சட்டமன்றப் பேரவை
நாடாளுமன்றம் மேற்சொன்ன தீர்மானங்களின் காரணமாக
1988ஆம் ஆண்டு நீர் (மாசுதடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்தச்
சட்டத்தை ௦/31988 இயற்றியுள்ளது என்பதாலும்,

1988-ஆம் ஆண்டு நீர் (மாசு மற்றும் கட்டுப்பாடு) திருத்தச்
சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1974ஆம் ஆண்டு நீர்
(மாசு தடுப்பு மற்றும கட்டுப்பாடு) சட்டத்தில செயயப்பட்ட
திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுக்கொள்வது
தேவையெனக் கருதப்படுவதாலும் ; எனவே, அரசமைப்பின்
252ஆம் உறுப்பின் (1)ஆம் கூறானது அதன் (2)ஆம் கூறுடன்
சேர்த்துப் படித்துப் பார்த்து அறியப்படுவதையொட்டி வழங்கப்
பட்டுள்ள அதிகாரங்களைச் செலுத்தி, இச்சட்டமன்றப் பேரவை
1988ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்த
சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (மையச் சட்டம் /
1988) 1974ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு)
சட்டத்தில் (மையச் சட்டம் 6/1974) செய்யப்பட்ட திருத்தங்கள்
தமிழ்நாடு மாநிலத்தில் இப்போது ஏற்றுக் கொள்ளப்பட
வேண்டும் என்று இதன் மூலம் தீர்மானிக்கிறது.''

மாண்புமிகு பேரவைத் தலைவர்:
மிகச் சுருக்கமாக முடிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். விவாதத்தை

திரு. கே. ஆர். சுந்தரம்: பேரவைத் தலைவர் அவர்களே,
இந்தத் தீர்மானத்தை நான் ஆதரிக்கின்ற நேரத்திலேயே இந்தத்
துறையைப் பற்றி சில விஷயங்களைச் சுருக்கமாகச் சொல்ல
விரும்புகிறேன். இன்றைக்கு மாசு கட்டுப்பாடு வாரியம் அமைக்
கப்பட்டு கடந்த 7, 8 ஆண்டுகள் ஆனாலும், அது மக்கள் எதிர்
பார்க்கின்ற அளவிற்கு நல்ல முறையிலே செயல்படவில்லை.
அதனுடைய விளம்பரங்கள் கண்ணுக்கு அழகாக இருக்கிறதே
ஒழிய மக்களுக்கு வாழ்வு அளிக்கின்ற முறையிலே அதனுடைய
பணிகள் இல்லை. எனவே இதனுடைய பணிகளைத் துரிதப்
படுத்த வேண்டும். என்னுடைய வட ஆற்காடு அம்பேத்கார்
மாவட்டத்தில் வாணியம்பாடி, ஆம்பூர், பேரணாம்பட்டு, வேலூர்,
ராணிப்பேட்டை போன்ற இடங்களில் தோல் பதனிடும் தொழிற்
சாலையிலிருந்து வெளியேறும் தண்ணீரால் அந்தப் பகுதி விவசாய





மக்களுடைய நூற்றுக்கணக்கான ஏக்கர் பாழ்படுகிறது. வருங்
காலத்தில் குடி தண்ணீரே பாதிக்கப்படுமோ என்ற அச்சம் ஏற்
படுகிறது. ராணிப்பேட்டை சிப்காட் பகுதியிலே அங்கேயுள்ள
ரசாயனத் தொழிற்சாலையிலிருந்து தண்ணீர் வெளியேறுவத
னாலே அந்தப் பகுதி மிகவும் துர்நாற்றம் அடைகிறது. அந்தத்
தண்ணீரைப் பருகி கால்நடைகள் கூட இறந்துவிட்டதாக பத்திரி
கைகளில் கூட எல்லாம செய்தி வந்திருக்கிறது. ஏற்கனவே
ஒரு கேள்விக்கு பதில் அளித்தபோது திருப்பூர் நகரிலே அதைச்
சுற்றி சாயப் பட்டறைகளிலே இருந்து வெளியேறும் தண்ணீ
ராலே பல ஆயிரக்கணக்கான மக்கள் வாழ்கின்ற பகுதியிலே குடி
நீரே அற்றுப போகுமோ என்ற நிலை இருக்கிறது. அந்தப்
பகுதியே பாழ்பட்டுவிடும் என்று சாந்தப்பா கமிட்டியிலேகூட
சொல்லப்பட்டிருக்கிறது. அந்த அறிக்கையை அரசு பரிசீலித்து
தக்க நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக
கொள்கிறேன். அதே போன்று ஈரோடு பள்ளிப்பாளையம,
சங்ககிரி போன்ற பல்வேறு பகுதிகளில் உள்ள தொழிறசாலை
களில் உள்ள அந்த கழிவு நீரினாலே அந்தப் பகுதி மக்கள மிகவும்
பாதிக்கப்படுகிறார்கள். அவைகளைப் பரிசீலிக்க வேண்டு
மென்று கேட்டுக் கொள்கிறேன். அதே போன்ற திருச்சியை
எடுத்துக் கொண்டால் அங்குள்ள சாராய வடி தொழிற்சாலை
மூலமாக வெளியேறுகின்ற அந்த கழிவு நீரினாலே அந்த மக்கள்
பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் ஏற்கனவே
அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டுவரப்பட்டிருக்கிறது.
அந்தப் பகுதிகள் முழுவதும் பாதுகாக்கப்பட வேண்டும் என்று
கேட்டுக் கொள்கிறேன். காரைக்குடியிலே உள்ள தமிழ்நாடு
கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் வெளியிடுகின்ற அந்த கழிவு நீரால்
அந்தப் பகுதியில் இருக்கின்ற 40க்கு மேற்பட்ட கிராமங்கள்
பாதிக்கப்பட்டிருப்பதாக பொது மக்கள் மத்தியிலிருந்து அரசிற்கு
ஏற்கனவே புகார்கள் வந்திருக்கிறது. அவைகளை போக்க
வேண்டும். அதுமட்டுமல்ல. அந்தத் துறையிலே இருக்கின்ற
ஊழியர்கள் போதுமானவர்களாக இல்லை. நெல்லிக்குப்பம்
பாரி கம்பெனி சம்பந்தப்பட்ட அந்த சர்க்கரை ஆலையிலிருந்து
வருகின்ற கழிவு நீரினால் மக்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
எனவே அந்தத் துறையைப் பலப்படுத்தி ஊழியர்களை அதிக
படுத்த வேண்டும். அதுமட்டுமல்ல அந்தத் துறையில் இன்றைக்கு
வழக்குகள் தொடுக்கப்பட்டிருப்பதாகச் சொல்கிறார்கள. ஏதோ
பல ஆயிரக்கணக்கான ரூபாயை அவர்கள் அபராதமாக செலுத்தி
விட்டாலும் கூட பல ஆயிரக்கணக்கான மக்களுடைய வாழ்க்கை
பாதிக்கப்படுகிறது. விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள்.
எனவே விவசாயிகளை பாதுகாக்கவும், குடிநீரைப் பாதுகாக்கவும்
முறையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்
கொள்கிறேன்.

அதே போன்று சென்னையில் எண்ணூரில் இருக்கின்ற
உரத் தொழிற்சாலையில் கூட அத்தகைய கழிவு நீர்
வெளியேறுகின்றன. எனவே தமிழகம் முழுவதும் இருக்கின்ற

இத்தகையநிலைமைகளை சீர்படுத்தி, இந்தச் சட்டத்தின்
மூலமாக மக்கள் பயன் அடைகின்ற முறையிலே நடவடிக்கை
எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். ஆர். பால
சுப்பிரமணியம், 2 மணித் துளிகள் மட்டும்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் : தலைவர் அவர்களே,
பொதுவாக தமிழகத்திலே மட்டும் அல்ல, நம்முடைய நாட்டிலே
சுற்றுப் புறச் சூழல பெரும் அளவில் மாசு பட்டுக் கொண்டு
வருவது நம் எலலோருக்கும் தெரியும். குறிப்பாக சிமெண்ட்
ஆலைகள் மற்றும் பிற ஆலைகள் வெளியே கககுகின்ற புகையின்
காரணமாக தண்ணீர் மாசு படுகிறது. எங்கள் பகுதியிலே
விவசாயமே செய்ய முடியாத நிலைமை இருக்கிறது. குறிப்பாக
மதுக்கரை பகுதியிலே இருக்கின்ற சிமெண்ட் ஆலையின் காரண
மாக எங்கள் பகுதியிலே மதுக்கரையிலே, பேரூரிலே மற்ற
பகுதிகளில் விவசாயமே செய்ய முடியாமல் இருக்கிறது. அதே
போல இப்போது புதியதாக பாட்டரிகள், கழிந்துபோன பாட்டரி
களை வாங்கி எரித்து அதிலிருந்து ஈயம் எடுககிறார்கள். ஏராள
மான லாபம் சம்பாதிக்க வேண்டும் என்ற காரணத்தினாலே
அந்தத் தொழிலை இன்றைய தினம் மனிதர்கள் வாழ்கின்ற,
பகுதியிலே நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அந்தத் தொழிலின்
காரணமாக விஷப் புகை கக்கப்படுகின்றது. மனிதர்கள் வாழ
முடியவில்லை. விவசாயம் செய்ய முடியவில்லை. குறிப்பாக
பட்டுப்பூச்சி வளர்ப்பவர்கள் பாதிக்கப்படுகிறார்கள்.
பட்டுப்பூச்சி செத்துப் போய்விடுகிறது. பட்டுப் பூச்சிகளை
வளர்க்க முடியவில்லை. அங்கே அந்தத் தொழில நிறைய
நடக்கிறது. அதே போல, ஸ்டோன் கிரஷர், ஊருக்கு மேல்
புறம் வைத்து விட்டால், எங்கள் ஊரிலே வாழ முடியாது,
ஏனென்றால் கோவையிலே வீசுகின்ற காற்று எப்படி இருக்கும்
என்பது இங்கே இருப்பவர்களுக்குத் தெரியாவிட்டாலும் கூட,
கோவை மாவட்டத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்குத் தெரியும்.
இந்த ஊரிலே புயல் வீசினால் எப்படி காற்று அடிக்குமோ
அதுபோன்று எங்கள் ஊரிலே 6 மாதம் காற்று வீசிக் கொண்
டிருக்கும். அது மேற்கே செயல்படுமானால் வீட்டிலே சாப்பிடக்
கூட முடியாது. அதுபோன்ற நிலைமை இருக்கிறது. இது
போன்ற நிலைமை கோவையிலே இரண்டு பகுதிகளிலே ஏற்பட்டி
ருக்கிறது. குறிப்பாக செட்டிப்பாளையத்துப் பகுதியிலும்,
தேஹாணிப் பகுதிக்குமேல் புறத்திலே ஸ்டோன் கிரஷர் இருக்
கிறது. இவற்றிற்கு இந்த அரசாங்கம் அனுமதி மறுத்து
அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதன் மூலமாக
அந்தப் பகுதியில் இருக்கின்ற விவசாயிகளைக் காப்பாற்ற
வேண்டுமென்று கேட்டுக் கொண்டு என்னுடைய உரையை
முடிக்கிறேன். வணக்கம்.



14-40 மணி.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ': கடைசியாக, திரு. என்
கணபதி.

திரு. என். கணபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, இந்தத் தீர்மானத்தை வரவேற்று என்னுடைய
கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். எனக்கு முன்னாலே
பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் தொழிற்சாலைகள்
கக்குகின்ற புகைகளைப் பற்றியும், விடுகின்ற கழிவு நீர்களைப்
பற்றியும் இங்கே சொன்னார்கள். சென்னை நகரைப் பொறுத்த
வரையில் அது மொப்படாக இருந்தாலும், ஸ்கூட்டராக இருந்
தாலும், மோட்டார் சைக்கிளாக இருந்தாலும், மூன்று வீலர்களாக
இருந்தாலும், ஆட்டோ ரிக்ஷாக்களாக இருந்தாலும், டெம்போ
வாக இருந்தாலும், பஸ்களாக இருந்தாலும், எல்லாம் புகை
போக்கிகளாகவே சென்னை நகரிலே போய்க் கொண்டிருக்கின்றன.

மோட்டார் வாகன சட்டத்திலே புகை போக்கிகளைப் போக்
கும் மோட்டார் வாகனங்களைத் தடுத்த நிறுத்து அதிகாரம்
இருந்தும், இங்கே சரியாக அது அமல்படுத்தப்படாத ஒரு சூழ்
நிலை, என்ன காரணத்தினாலோ அதிகாரிகள் மத்தியிலே, இருந்து
கொண்டிருக்கிறது. சென்னை நகரத்தின் சாலைகளிலே நாம்
நடந்தோ, சைக்கிளிலோ, கார்களிலோ செல்ல முடியவில்லை.
எனவே, சென்னை நகர மக்களைக் காப்பாற்றுகின்ற விதத்தில்
இந்தச் சுற்றுப்புறச் சூழல் சட்டத்தைப் பயன்படுத்தி மோட்டார்
வாகனங்களை, பம்பாய் நகரிலே எப்படி சில கருவிகளைப்
பொருத்தி புகைகளைக் குறைத்திருக்கிறார்களோ, அதைப்போல
மோட்டார் வாகனங்கள் விடும் புகைகளைக் குறைக்கவேண்டும்.
டீசலுக்குப் பதிலாக மண்ணெண்ணெய்ஊற்றி ஓட்டும் லாரி
களையும், பஸ்களையும் தடுத்து நிறுத்தவேண்டும். இரு சக்கர
வாகனங்களிலே விடுகின்ற புகைகளைப் பார்த்து, அந்த வாகனங்
களையெல்லாம் கண்டுபிடித்து தண்டிக்க வேண்டும். குறைக்க
வேண்டும் என்று கேட்டு, சுற்றுப்புறச் சூழ்நிலை நன்றாக வளர்க்க
வேண்டும் என்று கேட்டு முடித்துக்கொள்கிறேன், வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி:
பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்கள் சொன்ன இந்தக்
குறைகளை எல்லாம் களையவேண்டும் என்ற நோக்கத்தோடுதான்
அரசு எடுக்கின்ற நடவடிக்கைகளுக்கு சட்டமும் ஆணையாக
இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு தான் இந்தத் தீர்மானமே
இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிறது. நிச்சயமாக அவர்களு
டைய குறைகளைப் போக்குவதற்கு இந்தத் தீர்மானம் வழி
கோலும் என்ற வகையில் இந்தத் தீர்மானத்தை நான் மீண்டும்
வலியுறுத்தி அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள
கேள்வி :

" நீரின் மாசுபடுதலைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல்,
நீரினால் நற்பலன்கள் விளையுமாறு பேணி வருதல் அல்லது
நற்பலன்கள் விளைவிக்கின்ற நிலையில் மீண்டும் அதனை
வைத்தல் ஆகியவை பற்றிய விஷயங்கள் அஸ்ஸாம், பீகார்,
குஜராத், அரியானா ; இமாசலப் பிரதேசம், ஜம்மு-காஷ்மீர்,
கர்நாடகம், கேரளம், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான், திரிபுரா,
மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்களில் நாடாளுமன்றச் சட்ட
மொன்றின் மூலமாக முறைப்படுத்தப்படுதல் வேண்டும் என்னும்
படிக்கு அந்த மாநிலங்களின் அனைத்து சட்டமன்ற அவைகளா
லும் அரசமைப்பின் 252-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறின்கீழ்
பிறப்பிக்கப்பட்ட தீர்மானங்களை யொட்டி நாடாளுமன்றம்
1974-ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு)
சட்டத்தினை (மையச் சட்டம் 6/1974) இயற்றியுள்ளது
என்பதாலும் ;

தமிழ்நாடு சட்டமன்ற ஈரவைகளாலும் அரசமைப்பின்
252-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறின்கீழ் பிறப்பிக்கப்பட்ட தீர்மா
னத்தையொட்டி மேற்சொன்ன 1974-ஆம் ஆண்டு நீர் (மாசு
தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டமானது (மையச் சட்டம்
6/1974) தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்து,
1981-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 31-ஆம் நாள் முதற்கொண்டு
செல்லாற்றல் பெற்றுவிட்டபடியாலும் ;

மேற்சொன்ன மையச் சட்டம் 6/1974 நாடாளுமன்றத்தால்
மையச் சட்டம் 44/1978-னால் திருத்தம் செய்யப்பெற்று
அத்திருத்தச் சட்டமானது 1984 ஆம் ஆண்டு மார்ச் திங்கள்
7-ஆம் நாள் முதற்கொண்டு ஏற்றுக் கொள்ளப்பட்டபடியாலும் ;

அரசமைப்பின் 252-ஆம் உறுப்பின் (1)-ஆம் கூறானது
அதன் (2)-ஆம் கூறுடன் சேர்த்துப் படித்துப் பார்த்து அறியப்
படுவதையொட்டி, மேற்சொன்ன மையச் சட்டம் 6/1974
அந்தபடிக்கு ஒரு சில நோக்கங்களுக்காக நாடாளுமன்றச் சட்ட
மொன்றின் மூலமாக திருத்தம் செய்யப்பட வேண்டும் என்ப
தால் இமாசலப் பிரதேச மற்றும் திரிபுரா மாநிலங்களின் சட்ட
மன்றப் பேரவைகளால் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்
கின்றபடியாலும் ;

நாடாளுமன்றம் மேற்சொன்ன தீர்மானங்களின் காரண
மாக 1988-ஆம் ஆண்டு நீர் (மாசுத் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு)
திருத்தச் சட்டத்தை (மையச் சட்டம் 53/1988) இயற்றியுள்ளது
என்பதாலும் ;



1988-ஆம் ஆண்டு நீர் (மாசு மற்றும் கட்டுப்பாடு) திருத்தச்
சட்டத்தினால் திருத்தப்பட்டவாறு 1974-ஆம் ஆண்டு நீர்
(மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தில் செய்யப்பட்ட
திருத்தங்களை தமிழ்நாடு மாநிலத்தில் ஏற்றுக்கொள்வது தேவை
யெனக் கருதப்படுவதாலும் ; எனவே, அரசமைப்பின் 252-ஆம்
உறுப்பின் (1)-ஆம் கூறானது அதன் (2)-ஆம் கூறுடன் சேர்த்துப்
படித்துப் பார்த்து அறியப்படுவதையொட்டி வழங்கப்பட்டுள்ள
அதிகாரங்களைச் செலுத்தி, இச்சட்டமன்றப் பேரவை, 1988-ம்
ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) திருத்தச் சட்டத்
தினால் திருத்தப்பட்டவாறான (மையச் சட்டம் 53/1988) 1974-
ஆம் ஆண்டு நீர் (மாசு தடுப்பு மற்றும் கட்டுப்பாடு) சட்டத்தில்
(மையச் சட்டம் 6/1974) செய்யப்பட்ட திருத்தங்கள் தமிழ்நாடு
மாநிலத்தில் இப்போது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும் என்று
இதன் மூலம் தீர்மானிக்கிறது."

தனித் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று,
நிறைவேற்றப்பெற்றது.

10. அரசினர் தீர்மானம்.

பேரவையை நாள் குறிப்பிடாமல் ஒத்திவைத்தல்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் : மாண்புமிகு
பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை
மொழிகிறேன் ;

" பேரவை விதி 25 (1)-ன்படி பேரவை மீண்டும் கூடும்
நாள் குறிப்பிடப் பெறாமல் ஒத்திவைக்கப்பெற வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று ஒருமன
தாக நிறைவேற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் அலுவல்கள்
இத்துடன் முடிவுற்று, பேரவை மீண்டும் கூடும் நாள் குறிப்பிடப்
பெறாமல் ஒத்திவைக்கப் பெறுகிறது.

பின்னர், பேரவை 14-42 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

75. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1981-82-ஆம்
ஆண்டிற்கான ஏழாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு
நிறுவனங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 1/1956) 619-ஏ

பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது). (தமிழ்,
ஆங்கிலம்).

76. தமிழ் நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1982-83-
ஆம் ஆண்டிற்கான எட்டாவது ஆண்டறிக்கை. [1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ்,
ஆங்கிலம்).

77. தமிழ்நாடு அரசு பண்ணைகள் கழகத்தின் 1983-84-ஆம்
ஆண்டிற்கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு
நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)

78. தமிழ்நாடு இறைச்சி நிறுவனத்தின் 1988—89-ஆம்
ஆண்டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு
நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கி
லம்).

79. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1986-87-ஆம் ஆண்டிற்
கான ஒன்பதாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு நிறுவனங்
கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின் கீழ்
பேரவை முன் வைக்கப் பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்).

80. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1987—88-ஆம் ஆண்
டிற்கான பத்தாவது ஆண்டறிக்கை. (1956-ஆம் ஆண்டு நிறுவ
னங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்
கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

81. தமிழ்நாடு கனிம நிறுவனத்தின் 1988-89-ஆம் ஆண்டிற்
கான பதினொன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம் ஆண்டு
நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619/ஏ
பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

82. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1987-88-ஆம்
ஆண்டிற்கான தணிக்கை அறிக்கை மற்றும் ஆண்டுக் கணக்குகள்.
[1948-ஆம் ஆண்டு மின்சாரச் (வழங்கல்) சட்டத்தின் (மத்தியச்
சட்டம் 54/1948) 69 (5) (ஏ) பிரிவின் கீழ் பேரவை முன்
வைக்கப் பெற்றது.

83. தமிழ்நாடு பீங்கான் நிறுவனத்தின் 1988-89-
ஆண்டிற்கான பதினைந்தாவது ஆண்டறிக்கை. [1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].



84. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் நிறுவனத்தின் 1987-88-ஆம்
ஆண்டிற்கான முப்பத்து ஒன்றாவது ஆண்டறிக்கை. [1956-ஆம்
ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956)
619-ஏ பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது].

ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

44. உடுக்குறியிடப் பெறாத வினாக்களும் - விடைகளும்
(ஐந்தாவது பட்டியல்) (எண்கள் 1 முதல் 50 வரை).

45. மதிப்பீட்டுக் குழுவின் இரண்டாவது (ஒன்பதாவது
சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989-90.

46. மதிப்பீட்டுக் குழுவின் மூன்றாவது (ஒன்பதாவது சட்ட
மன்றப் பேரவை) அறிக்கை, 1989-90.

47. சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது (ஒன்ப
தாவது சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989—90.

48. சட்டவிதிகள் ஆய்வுக் குழுவின் மூன்றாவது (ஒன்பதாவது
சட்டமன்றப் பேரவை) அறிக்கை, 1989-90.

143790

அரசு கிளை அச்சகம், சென்னை-112

D
V211,31'N90
N90.20.1-2

## LIST OF AGENTS FOR THE SALE OF TAMIL NADU GOVERNMENT PUBLICATIONS

### IN MADRAS CITY

1 Account Test Institute, Egmore, Madras-8.
2 The City Book Company, Madras-4.
3 Higginbothams (Private) Limited, Madras-2.
4 P. Varadachary and Company, Madras-1.
5 C. Subbiah Chetty and Company, Madras-5.
6 The Universal Book House, Moore Market, Madras-3.
7 C. Sitharaman and Company, Madras-14.
8 Mohan Pathippagam and Book Depot, Madras-5.
9 C. Venkatesan Chetty and Company, No. 8-C, Pycrafts Road, Madras-5.
10 The South India Saiva Siddhanta Works Publishing Society (Tirunelveli) Limited, Madras-1.
11 The Sangam Publishers, No. 11, Sunkurama Chetty Street, Madras-1.
12 New Century Book House (Private) Limited Madras-2.
13 Kalaivani Book Centre, No. 1, Ponniamman Koil Street, Egmore, Madras-8.

### IN MOFFASIL OF TAMIL NADU.

1 A. Venkatasubban & Company, Vellore (North Arcot) District.
2 Bharathamatha Book Depot, Thanjavur (Tanjore District).
3 P. V. Nathan & Company, Kumbakonam (Tanjore District).
4 Appar Book Stall, Thanjavur.
5 P. N. Swaminathan and Company, Bazaar Street, Pudukkottai.
5 Palaniappa Brothers, Tiruchirappalli-2.
7 S. R. Subramania Pillai, Tirunelveli Junction.
8 B. Aruldoss, Villupuram (South Arcot District).
9 Vasantham Stores, Booksellers, 9|31, Cross Cut Road, Coimbatore-12.
10 Mercury Book Company, 20, Karuppa Gounder Street, Coimbatore-1.
11 S. M. Jegannatham Book House, 35, Nandhi Koil Street, Tiruchirappalli-1.
12 Ganesh Stores, South Car Street, Sivakasi.
13 Mary Martin, Booksellers, Kotagiri (The Nilgiris).
14 A. K. Chandriah Chettiar & Sons, Salem-1.
15 Parameswari Book Shop, No. 461, Old Market Street, Salem.
16 Meenakshi Pathipagam, Pudukkottai.
17 K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai District.
18 Jayakumari Stores, Nagercoil (Kanyakumari District).
19 Baby Stores, Booksellers, Villupuram (South Arcot District).
20 Dinamani Stores, No. 3|1, Old Post Office Road, Coimbatore-14.
21 Kumaran Book Depot, Booksellers, Erode.
22 Vela Book Company, No. A, Annaji Rao Street, Erode.
23 Radhamani Stores, 6-A, Raja Street, Coimbatore-1.
24 Ajantha Book Centre, Salem-1.
25 Sri Vidya, 63, Tennure High Road, Tiruchirappalli-2.
26 Sri Ramavilas Book Shop, 90, Amman Sannathi, Madurai-1.

### IN OTHER STATES.

1 Jain Book Agency, New Delhi.
2 International Book House, Trivandrum.
3 The Book Syndicate, Hyderabad-1.
4 Labour Law Publications, Hyderabad.
5 Puthaghaleyam, Pondicherry.
6 Prabu Book Service, Gurgaon, Haryana.
7 K. P. Bachi & Company, 286, B. B. Gandhi Street, Calcutta-17.

Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Director of Stationery and Printing Madras.